மாணவருக்கு

காந்தி மலர்

முதற் புத்தகம்



போட்டோ: எ. கே. செட்டியா

மாணவருக்கு

மகாத்மா காந்தி

(எழுதியதும் பேசியதும்)

விற்பனை உரிமையாளர் :

புதுமைப் பதிப்பகம் லிமிட்டெட்

காரைக்குடி. : : சென்னை.

மொழிபெயர்த்தோர் :

வெ. ராமசாமி

அ. லெ. நடராஜன்

மொழிபெயர்த்தோர்:

வெ. ராமசாமி

அ. லெ. நடராஜன்

மொழிபெயர்த்தோர் :

வெ. ராமசாமி

அ. லெ. நடராஜன்

முதற் பதிப்பு : 2—11—43.
இரண்டாம் பதிப்பு : 25—4—47.

விலை ரூபா: ஐந்து

சந்திரோதயம் வெளியீடு

பதிப்புரிமை பெற்றது

முன்னுரை

காந்தியடிகளின் உள்ளக்கிடைகளையும் இலட்சியங்களையும் யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும் பொருட்டு, விஷய வாரியாகத் தனித்தனியே பிரித்து, ஸ்ரீ ஆனந்த். டி. ஹிங்கோரானி பல புத்தகங்கள் ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறார். அவற்றில் 'மாணவருக்கு' என்பது முதற் புத்தகம்.

இத்தகைய புத்தகங்கள் தமிழிலும் வெளிவர வேண்டும் என்ற ஆவல் எங்களுக்கு உதித்தது. எனவே அனுமதி பெற்று, 'மாணவருக்கு' என்ற இந்தப் புத்தகத்தை இப்போது வெளியிட்டிருக்கிறோம்.

மொழிபெயர்ப்பு சம்பந்தமாக ஒரு வார்த்தை. உள்ளக்கிடையும் உணர்ச்சி வேகமும்தான் மொழிபெயர்ப்பில் முக்கியமான அம்சங்கள். கூடுமான வரை அவற்றை அடிப்படையாகக்கொண்டே இந்த நூலை மொழிபெயர்த்திருக்கிறோம். மீண்டும் ஒரு முறை மூலத்தோடு மொழிபெயர்ப்பை ஒப்புநோக்கி, திருத்தி, இந்த இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது.

வெ. ராமசாமி

அ. லெ. நடராஜன்

நன்றியுரை

தமிழில் வெளிவந்த இரண்டொரு மாதங்களில், மாணவருக்கு இந்தப் புத்தகத்தின்மீது விற்கக் கூடா தென்று தடை யுத்திரவு பிறப்பித்து, கைவசம் இருந்த பிரதிகள் யாவற்றையும் சென்னை சர்க்கார் பறிமுதல் செய்துவிட்டார்கள். புத்தகக் கடைகள் தோறும் சென்று, பரிசோதனை செய்ததுடன், கடைகளில் இருந்த பிரதிகளை யெல்லாம் சென்னைப் போலிஸார் கைப்பற்றிச் சென்றார்கள்.

நம் நாட்டின் தனிப்பெரும் தலைவர் காந்தியடிகளின் கருத்தைத் தமிழ் மக்கள் அறியவொட்டாது அடாபிடித் தனமாய்த் தடுக்கும் சர்க்காரின் இந்த நடத்தையைக் கண்டித்து, தேசியப் பத்திரிகைகள் எழுத ஆரம்பித்தன. தினமணி, தினசரி, இந்தியன் எக்ஸ்பிரஸ், கல்கி போன்ற தேசியப் பத்திரிகைகள், தலையங்கங்களும் குறிப்புகளும் எழுதி, சர்க்காரின் இந்த நடத்தையை வன்மையாகக் கண்டித்தன. அதன் காரணமாகத்தான் சர்க்கார் தடை யுத்திரவை ரத்து செய்தார்கள் என்று சொல்ல வேண்டும். உரிய சமயத்தில் தயங்காது சர்க்கார் நடத்தையைக் கண் டித்து எழுதிய ஆசிரியர்களான ஸ்ரீ ஏ. என். சிவராமன் (தினமணி), ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம் (தினசரி), ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் (இந்தியன் எக்ஸ்பிரஸ்), ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) ஆகியோருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியது.

பறிமுதல் ஆனதும் இந்த நூலுக்கு ஏற்பட்ட கிராக்கி கொஞ்சநஞ்சமல்ல; சிலோன் முதலிய இடங்களில் பிரதி யொன்றுக்குப் பதினைந்து ரூபாய்வரை கொடுத்து வாங்கி இருக்கிறார்கள் என்று தெரிய வந்தது. தடை யுத்திரவு நீங்கியதும், அதிகமான பிரதிகள் அச்சிட எண்ணியிருந் தோம். காகிதக் கட்டுப்பாடு உத்திரவு வந்து குறுக்கே பெருந் தடையாய் நின்றது. இப்போதும் போதிய அளவு காகிதம் கிடைக்கவில்லை. இருந்தும் இன்னும் இந்த நூலை அச்சிடாது இருப்பது தவறு என்று கருதி, கையி லிருக்கும் சொற்ப காகித வசதியைக்கொண்டு இந்த இரண்டாம் பதிப்பை வெளியிட்டிருக்கிறோம்.

இந்த நூலைத் தமிழில் வெளியிட அனுமதி தந்த காந்திஜிக்கும் ஸ்ரீ. ஆனந்த் டி. ஹிங்கோரானிக்கும் எங்கள் நன்றி உரியது.

பொருளடக்கம்

எண்		பக்கம்
1.	மாணவரொருவர் கேட்ட நான்கு கேள்விகள் யங் இந்தியா. நவம். 13, 1924	3
	கலை	3
	இயந்திரங்கள்	10
	விவாகம்	14
	நூல் நூற்றல்	16
2.	வடிகட்டின கேடு யங் இந்தியா. ஏப்ரல். 13, 1921	23
3.	ஆங்கிலக் கல்விமுறை யங் இந்தியா. ஏப்ரல். 27, 1921	27
4.	ஹிந்திப் பிரசினை ஹரிஜன். ஜூன். 27, 1936	30
5.	ஆங்கில மொழிக்குரிய ஸ்தானம் யங் இந்தியா. பிப்ரவரி. 2, 1921	37
6.	ஆங்கிலப் படிப்பு யங் இந்தியா. ஜூன். 1, 1921	39
7.	அன்னிய மொழியால் வந்த அவகேடு யங் இந்தியா. ஜூலை 5, 1928	41
8.	அறிவு வளருகிறதா? அல்லது சிதறிப்போகிறதா? ஹரிஜன். மே. 8, 1937	47
9.	மாணவருக்கு அறிவுரை காந்திஜி பேசியதும் எழுதியதும். பக்கம் 311	51
10.	ஹிந்து சர்வகலாசாலைப் பிரசங்கம் காந்திஜி பேசியதும் எழுதியதும். பக்கம் 317	58

11. குருகுலத்தில் 72
காந்திஜி பேசியதும் எழுதியதும். பக்கம் 329

12. கடவுளுக்காக, அரசனுக்காக, தேசத்துக்காக 79
யங் இந்தியா. மார்ச். 23, 1921

13. தேசியச் சர்வகலாசாலைப் பிரசங்கம் 83
காந்திஜி பேசியதும் எழுதியதும். பக்கம் 510

14. மாணவர்களுக்கு உபதேசம் 88
யங் இந்தியா. ஜூன். 17, 1926

15. பீகார் வித்தியாபீடத்தில் 92
யங் இந்தியா. பிப்ரவரி. 10, 1927

16. தேசியக் கல்விக்கும் அன்னியக் கல்விக்கும் உள்ள மாறுபாடு 100
யங் இந்தியா. ஜூன். 21, 1928

17. காசி வித்தியாபீடத்தில் 104
யங் இந்தியா. அக்டோபர். 10, 1929

18. வெறும் கொள்கையா, செயலா? 108
யங் இந்தியா. நவம். 14, 1929

19. கதரும் உள்ளத்தூய்மையும் பற்றிய உபதேசம் 112
யங் இந்தியா. ஜனவரி. 20, 1927

20. கூர்ஜர வித்தியாபீடத்தில் 117
யங் இந்தியா. ஜனவரி. 16, 1930

21. நடைமுறைக்கேற்ற போக்கன்று, உண்மையான சித்தாந்தம் 122
யங் இந்தியா. ஜனவரி. 23, 1930

22. ஒப்பற்ற சேவை 130
யங் இந்தியா. ஏப்ரல். 16, 1931

23. மாணவர்களும் ஒத்துழையாமையும் 134
யங் இந்தியா. ஜூலை 15, 1926

24. தியாகம் 139
யங் இந்தியா. ஜூன். 24, 1926

25. தாய் தந்தையரைவிட ஸ்தாபனங்கள் உயர்வா? 144
யங் இந்தியா. ஜூன். 25, 1925

26. வழிபாடா? குருட்டு வணக்கமா? 148
யங் இந்தியா. ஜூன் 24, 1926.

27. சோதனைக் காலம் 152
யங் இந்தியா. பிப்ரவரி. 16, 1928

28. பகிஷ்காரமும் மாணவர்களும் 155
யங் இந்தியா. மார்ச். 29, 1928

29. எதிர்க்கவேண்டிய கடமை 158
யங் இந்தியா. ஜனவரி. 24, 1929

30. மாணவர்களின் வேலைநிறுத்தம் 163
யங் இந்தியா. ஜனவரி. 31, 1929

31. மாணவர்களும் ஒழுக்கமும் 165
யங் இந்தியா. மார்ச். 6, 1930

32. நம்பிக்கைத் துரோகம் 169
யங் இந்தியா. ஜுலை. 30, 1931

33. மாணவர்களும் வேலைநிறுத்தமும் 174
ஹரிஜன். அக்டோ. 2, 1937

34. இலக்கியத்தில் சாக்கடை 177
ஹரிஜன். அக்டோ. 15, 1938

35. இது அஹிம்சையா? 181
ஹரிஜன். மார்ச். 4, 1939

36. மாணவர்களும் அரசியல் வேலைநிறுத்தங்களும் 186
பத்திரிக்கைகளுக்கு அறிக்கை. நவம். 29, 1940

37. மாணவர்களும் அரசியல் ஆதிக்கமும் 190
பத்திரிக்கைகளுக்கு அறிக்கை- ஜன. 26, 1941

38. மாணவர்கள் செய்த அரிய சத்தியாக்கிரகம் 193
யங் இந்தியா, மார்ச். 1, 1928

39. மாணவர்களின் கடமை 197
யங் இந்தியா. ஜன. 29, 1925

40. மாணவர்கள் செய்யக்கூடியது என்ன ? 204
யங் இந்தியா. செப்டம். 8, 1927

41. மாணவர்களும் கீதையும் 211
யங் இந்தியா. ஆகஸ். 25, 1927

42. ஹிந்து மாணவர்களும் கீதையும் 214
யங் இந்தியா, செப்டம். 22, 1927

43. கீதையே நமது அன்னை 216
யங் இந்தியா. ஆகஸ். 24, 1934

44. பிரார்த்தனையில் நம்பிக்கை இல்லையா ? 222
யங் இந்தியா. செப்டம். 23, 1926

45. சொற்களின் கொடுமை 227
யங் இந்தியா. அக்டோ. 14, 1926

46. வழிபாட்டைப்பற்றிய விளக்கம் 235
யங் இந்தியா. ஜன. 23, 1930

47. வழிபாடு என்றால் என்ன? 241
யங் இந்தியா. ஜூன். 10, 1926

48. சங்கீதத்தின் சக்தி 244
யங் இந்தியா. ஜூன். 10, 1929

49. சமயக் கல்வி 246
யங் இந்தியா- டிசம். 12, 1928

50. கல்வியில் அஹிம்சை 249
யங் இந்தியா. செப். 6, 1928

51. மாணவர்களின் பங்கு 254
யங் இந்தியா. செப். 15, 1927

52. ஆத்திரமானதொரு கண்டனம் 265
யங் இந்தியா. அக்டோ, 6, 1927

53. மாணவர் மகாநாடு 269
யங் இந்தியா. ஜூன். 9, 1927

54. இளைஞர்கட்கு வெட்கக்கேடு 273
யங் இந்தியா. ஜூன். 21, 1928

55. சிந்து நாட்டுச் சாபத்தீடு 275
யங் இந்தியா. டிசம். 27, 1928

56. சிந்து மாணவர்களிடையே 277
யங் இந்தியா. ஏப்ர. 14, 1929

57. உண்மையா யிருங்கள் 283
யங் இந்தியா. மார்ச். 14, 1929

58. ஐக்கிய மாகாண மாணவர்களிடையே 287
யங் இந்தியா. செப். 19, 1929

59. கலியாணச் சந்தை 290
ஹரிஜன். மே. 23, 1936

60. தவிர்க்கக் கூடிய துன்பம் 293
ஹரிஜன். ஜூலை. 25, 1936

61. ஒரு பெண்ணுக்கு வேண்டுவது என்ன? 296
ஹரிஜன். செப். 5, 1936

62. மாணவருக்கு அவமானம் 298
ஹரிஜன். டிசம். 31, 1938

63. நவநாகரிகப் பெண் 305
ஹரிஜன். பிப்ரவரி. 4, 1939

64. இளம் பிள்ளைகளுக்கு 308
ஹரிஜன். மார்ச். 28, 1936

65. இளைஞர் ஒருவரது சங்கடம் 313
ஹரிஜன். ஏப்ரல் 25, 1936

66. காமநூற் கல்வி 316
ஹரிஜன். நவம். 21, 1936

67. காமவெறி 320
ஹரிஜன். அக்டோ. 3, 1936

68. மாணவர் ஒருவரது சங்கடம் 325
ஹரிஜன். ஜனவரி. 9, 1937

69. மாணவருக்காக 328
ஹரிஜன். ஏப்ரல். 17, 1937

70. இலங்கை மாணவருக்கு 334
இலங்கையில் காந்திஜி. பக்கம் 50 : நவம். 15, 1927

71. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு அறிவுரை 339
இலங்கையில் காந்திஜி. பக்கம் 36 : நவம்பர். 15, 1927

72. தூய வாழ்க்கை நடத்த வேண்டுகோள் 341
இலங்கையில் காந்திஜி. பக்கம் 75 : நவம். 18, 1927

73. மாணவர்களும் அறநெறி வாழ்க்கையும் 345
இலங்கையில் காந்திஜி. பக்கம் 88 : நவம். 22, 1927

74. மஹிந்தா கல்லூரியில் 348
இலங்கையில் காந்திஜி. பக்கம் 105 : நவம். 24, 1927

75. யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் 355
இலங்கையில் காந்திஜி. பக்கம் 128 : நவம். 26, 1927

76. யாழ்ப்பாண மாணவர்களுடன் 363
இலங்கையில் காந்திஜி. பக்கம் 141 : நவம். 29, 1927

77. ஏசுநாதருக்குரிய ஸ்தானம் 365
இலங்கையில் காந்திஜி. பக்கம் 143 : நவம். 29, 1927

78. மாணவிகளுக்கு—க 368
இலங்கையில் காந்திஜி. பக்கம் 145 ; நவம். 29. 1927

79. மாணவிகளுக்கு—உ 370
இலங்கையில் காந்திஜி. பக்கம் 146 ; நவம், 29, 1926

80. பர்மிய மாணவருக்கு 375
யங் இந்தியா, ஏப்ரல். 4, 1929

81. ஆங்கில மாணவருக்கு—க 382
யங் இந்தியா. நவம். 12, 1931

82. ஆங்கில மாணவருக்கு—உ 386
யங் இந்தியா. அக்டோ. 29, 1931

83. இங்கிலாந்தில் இந்திய மாணவர்களுடன் 389
யங் இந்தியா. அக்டோ. 15, 1931

84. ராலே கிளப்பில் 391
யங் இந்தியா. நவம். 12, 1931

85. சில ரசமான கேள்விகள் 395
யங் இந்தியா அக்டோ. 15. 1931

86. இன்னும் சில கேள்விகள் 399
யங் இந்தியா. நவம். 12, 1931

87. தீண்டத்தகாதவருடைய விஷயம் 403
யங் இந்தியா. நவம். 12. 1931

88. மாணவரும் விடுமுறையும் 406
ஹரிஜன். ஏப்ரல். 1, 1933

89. மாணவர்களும் ஹரிஜனத் தொண்டும் 410
ஹரிஜன். நவம். 17, 1933

90. விரிவானதொரு உபதேசம் 416
ஹரிஜன். ஜன. 26, 1934

91. நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்பதை நிரூபிக்கவும் 419
ஹரிஜன். டிசம். 29, 1933

92. ஜாதியும் வகுப்புப் பிரசினையும் 421
யங் இந்தியா. ஜூன். 4, 1931

93. சயன்ஸும் தொழில் வளர்ச்சியும் 427
யங் இந்தியா. டிசம். 17, 1925

94. எதைதை இளைஞர் செய்யலாம்? 430
யங் இந்தியா. நவம். 17, 1929

95. வரையறையான சில குறிப்புகள் 433
யங் இந்தியா. டிசம். 26, 1929

96. மாணவர்கள் எவ்வாறு உதவலாம்? 437
ஹரிஜன், அக்டோ. 19. 1935

97. கேள்வியும் பதிலும் 439

(1) விடுமுறையை எப்படிச் செலவிடுவது? 439
ஹரிஜன், ஜூன். 1, 1940

(2) மாணவரும் வரப்போகிற போராட்டமும் 439
ஹரிஜன், பிப்ர. 17, 1940

(3) சங்கடமான கேள்வி 441
ஹரிஜன், மார்ச்சு. 9, 1940

(4) கற்றவர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் 442
ஹரிஜன், மார்ச். 9, 1940

(5) பொது உடைமை 443
யங் இந்தியா, நவம். 15, 1928

(6) சுயராஜ்யத்தில் 444
யங் இந்தியா, நவம். 15, 1928

(7) அன்னியச் சரக்கும் சுதேசியும் 446
யங் இந்தியா, நவம்' 15, 1928

மாணவரொருவர் கேட்ட நான்கு கேள்விகள்

கலை

> "உண்மையான கலை செய்யவேண்டிய காரியமாவது, ஆன்மா தனது அந்தராத்மாவை உணரச்செய்வதே யாகும்...ஆன்மாவுக்கு எங்கெல்லாமோ பறக்க வேண்டு மென்கிற ஆசையுண்டு. இதற்குத் தடையாக இருப்ப தெதுவும் வெறும் மயக்க மாகும்; மாயவலை யாகும்."

'தில்குஷ்' என்னும் இடத்தில் காந்திஜி தவமிருந்து இறைவழிபாடு செய்துகொண் டிருந்தார். அப்போது, அவரைப் பார்ப்பதற்காக, அனேகர் அங்கு வந்து போனார்கள். அவர்களில் சாந்திநிகேதனத்தி லிருந்து வந்த ராமச்சந்திரன் என்னும் இள மாணவரும் ஒருவர். இவர், ஸி. எப். ஆண்ட்ரூஸின் மாணவர். சிறிது காலம் டெல்லியில் தங்கி வர விரும்புவதாக, ராமச்சந்திரன் தம் ஆசிரியரிடத்தில் தெரிவித்துக்கொண்டார். ஆண்ட்ரூஸும் அதற்கு இசைந்தார். டெல்லியை விட்டுப் புறப்பட்ட தினத்தன்று மாலையில், ஆண்ட்ரூஸ், காந்திஜி இருந்த மேல்மாடிக்கு ராமச்சந்திரனை அழைத்துச் சென்றார். "தங்களுக்கு இதுவரை ராமச்சந்திரனை அறிமுகம் செய்துவைக்காமல் இருந்துவிட்டேன். இவ்வளவு நாளும் நம்மோடிருந்து, அவர் நமக்கு உதவி செய்து வந்திருக்கிறார். அவருக்குத் தங்களிடம் சில கேள்விகள் கேட்க விருப்பம். சாந்திநிகேதனத்திற்குத் திரும்புவதற்காக அவர் இங்கிருந்து நாளைப் புறப்படுகிறார். அதற்குள்ளேயே தாங்கள் அவருடன் பேச இசைந்தால் நல்லது" என்று ஆண்ட்ரூஸ் காந்திஜியிடம் சொன்னார். மறு நாள் திங்கட்கிழமை; அதாவது காந்திஜிக்கு மௌன தினம்; ஆகவே, ஒரு நாள் அதிகமாகத் தங்கியிருந்து, செவ்வாய்க்கிழமை காலை ரயிலில் ராமச்சந்திரன் கல்கத்தாவுக்குப் போவதாக இருந்தார். காலை வழிபாடு முடிந்ததும், சரியாக ஐந்தரை மணிக்கு, காந்திஜி ராமச்சந்திரனைக் கூப்பிட்டனுப்பினார். தம் மனத்தை உறுத்திக்கொண் டிருந்த சங்கடங்களையும் சந்தேகங்களை

யும் ராமச்சந்திரன் ஒரு காகிதத்தில் குறித்துக்கொண்டார். ஆயினும், தாம் கேட்க விரும்பிய கேள்விகள் அனைத்தையும் கேட்டுவிட முடியு மென்ற நம்பிக்கை, அவருக்கு முதலில் இல்லை. போதிய அளவு தைரியப்படுத்திக்கொண்டு, காந்திஜியை வந்து பார்த்தார். அவருடைய படிப்பு, சொந்த ஊர் முதலியவற்றைப்பற்றி, காந்திஜி மெல்ல விசாரிக்கத் தொடங்கியதும், அவருக்கிருந்த தயக்கமும் கூச்சமும் ஒரே வினாடியில் நீங்கிவிட்டன. அன்று காலை, ராமச்சந்திரன் காந்திஜியுடன் பேசிக்கொண் டிருந்தவற்றை யெல்லாம் அப்படியே எழுதுவது சாத்திய மல்ல; அவற்றின் சாராம்சத்தை மட்டுமே இங்கு சொல்ல முடியும்.

"தாங்கள் போட்டிருக்கும் தேசியப் புனருத்தாரணத் திட்டத்தில், உணர்ந்தோ உணராமலோ, கலை சம்பந்தமான விஷயங்களைத் தாங்கள் ஒதுக்கிவிட்டதாகப் பலர் கருதுகிறார்கள். இப்படிக் கருதுகிறவர்கள் தங்களைப் பாராட்டுபவர்கள்தான்; அன்றியும், பெரியவர்கள்; அறிவாளிகள். இவர்கள் இங்ஙனம் கருதுவது சரிதானா?" என்று ராமச்சந்திரன் பேச்சை ஆரம்பித்தார்.

"நான் பல விஷயங்களைப்பற்றிப் பேச நேரிடும்போது, ஏதாவது ஒரு விஷயத்தில் நின்று, அதை மட்டும் அழுத்திச் சொல்லுவது வழக்கம். கலை விஷயமாக நான் சொல்லுவதைப் பெரும்பாலோர் தவறாக எண்ணியிருப்பதைக் கண்டு வருந்துகிறேன்" என்று காந்திஜி விடையளித்தார். "எல்லாப் பொருள்களுக்குமே, அகத்தோற்றம் புறத்தோற்றம் என இரு தோற்றங்கள் இருக்கின்றன. அகத்தோற்றத்தை உணர்ந்துகொள்ள உதவி செய்கிற வரைக்குந்தான் புறத்தோற்றத்துக்குப் பொருள் உண்டு. உண்மையான கலைகள் யாவும் உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிட வந்த கருவிகள்தான். மனிதனுடைய அகவுணர்ச்சியை விளங்கச் செய்கிற அளவைப் பொறுத்தே, கலைகளின் புறத்தோற்றங்களுக்கு மதிப்பு ஏற்படுகிறது."

"கலைஞனது உள்ளத்திலே தோன்றுகிற ஆவேசமன எழுச்சிகள், சொற்களாகவும் வருணங்களாகவும் உருவங்களாகவும் வடிவுற்று, கவிதை என்றும், ஓவியம் என்றும், சிற்பம் என்றும் பெயர் பெறுவதாகச் சிறந்த கலைஞர்களே சொல்லி யிருக்கிறார்களே" என்று தயக்கத்

தோடு ராமச்சந்திரன் சொன்னர்.

"ஆம், அப்படிப்பட்ட இயல்பமைந்த கலைகளிடத்தும் எனக்கு ஆர்வம் அதிகம்" என்று காந்திஜி ஒப்புக்கொண்டார். "ஆனல், அனேகருக்குத் தாங்களே பெரிய கலைஞர்கள் என்ற எண்ணம் இருக்கிறது. இந்த எண்ணத்தை அவர்கள் வெளிப்படையாகவும் சொல்லுகிருர்கள். பொது ஜனங்களும் அவர்களைக் கலைஞர்களெனவே மதிக்கிருர்கள். ஆயினும், அவர்கள் ஆக்கியிருக்கிற நூல், சித்திரம் முதலியவற்றில் ஒன்றிற்கூட உள்ளத்தின் ஆவேசம் ஒரு சிறிதும் இல்லை."

"இதற்கு உதாரணமாக யாராவது ஒருவரைத் தாங்கள் சொல்ல முடியுமா?"

"ஆஸ்கார் ஒயில்டு என்ற ஆசிரியரை அப்படிச் சொல்லலாம். நான் இங்கிலாந்தில் இருந்தபோது, அவரைப்பற்றிய பேச்சு அதிகமாக இருந்தது. ஆகவே, நான் அவரைப்பற்றிப் பேச முடியும்" என்ருர் காந்திஜி.

"இக் காலத்துச் சிறந்த இலக்கிய ஆசிரியர்களில், ஆஸ்கார் ஒயில்டும் ஒருவர் என நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று ராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

"இது எனக்கு உடன்பாடல்ல. உயர்ந்த கலையை, ஆஸ்கார் ஒயில்டு, புறவடிவில் மட்டுமே கண்டிருக்கிருர். இதனலேயே, ஒழுங்கீனத்தைக்கூட அழகுபடுத்திக் காட்டி, அதிலே அவர் வெற்றியும் பெற்றுவிட்டார். உண்மையான கலை செய்ய வேண்டிய காரியமாவது, ஆன்மா தனது அந்தராத்மாவைஉணரச்செய்வதே யாகும். என்னைப் பொறுத்தவரையில், ஆன்மநிலையை உணர்வதற்குப் புறத்தோற்றங்கள் அவசியம் இல்லை என்றே கருதுகிறேன். கலைத்திறன் அமைந்தவை என்று நீங்கள் கருதுகிற பொருள்களை என்னைச் சுற்றிக் காண முடியாது. ஆயினும், போதிய கலைப்பண்பு என்னிடம் இருப்பதாக நான் உறுதிகூற முடியும். நான் வசிக்கிற அறையின் சுவர்கள் அழகின்றி வெறிச்சென்றிருக்கலாம்; முகட்டில் கூரைகூட இல்லாதிருக்கலாம். இவற்ருல் எனது வாழ்க்கையின் கலைப்பண்பு குறைந்துபோய் விடாது. கூரையில்லாத வீட்டிலிருந்தால், பார்க்கப் பார்க்க முடிவில்லாமல் எங்குமே பரந்து மீன்பூத்திருக்கும் வானத்தின் அழ

கைப் பார்த்து நான் அனுபவிக்க முடிகிறது. மேலேயுள்ள வானத்தையும் அதிலே ஒளிவிடும் எண்ணற்ற நட்சத்திரங்களையும் நோக்கும்போது, என் கண் முன்னே எத்தனையோ காட்சிகள் மாறி மாறித் தோன்றுகின்றன. எந்தக் கலைஞனுக்காவது இவற்றைச் சிருஷ்டிக்கும் ஆற்றல் உண்டா? இப்படி நான் சொல்லுவதனால், கலைப்பண்பமைந்த பொருள்களின் அருமையை நான் அங்கீகரிக்கவில்லை என்று எண்ணிவிடக் கூடாது. இயற்கையில் சாசுவதமாக அமைந்துள்ள அழகைப் பார்த்துப் பார்த்து அனுபவித்துக்கொண்டே இருக்கலாம். மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட எந்தக் கலையும் இதற்கு ஒப்பில்லை என்று நான் கருதுகிறேன். ஆன்மா, தன்னை உணருவதற்கு மனிதன் சிருஷ்டித்த கலை உதவி செய்கிற அளவைப் பொறுத்தே நாம் அதை மதிக்க வேண்டும்.''

''கலைஞர்கள், புறத்தே தோன்றும் அழகைக் கொண்டே, உண்மையைக் காண்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த வழியில் உண்மையைக் காண்பது சாத்தியமா?'' என்று ராமச்சந்திரன் கேட்டார்.

''இந்த முறையை நான் மாற்றிச் சொல்லுவேன். உண்மைக்குள்ளே அழகைக் காண்கிறேன். உண்மை மூலமாகவும் அழகைக் காண்கிறேன்'' என்று காந்திஜி சொன்னார். ''உண்மையான கருத்துக்களில் மிகுந்த அழகு இருக்கிறது. அப்படியே உண்மை உணர்ச்சி நிறைந்த முகம், பாட்டு, ஓவியம் ஆகியவற்றிலும் மிகுந்த அழகு இருக்கிறது. சாதாரணமாக, மக்கள் உண்மை வெளியீட்டில் அழகைக் கண்டு அனுபவிக்கிறதில்லை. கண் இருந்தும் குருடர்களாகத்தான் அவர்கள் விளங்குகிறார்கள். மக்கள் உண்மை வெளியீட்டில் அழகைக் காணும்போதுதான் உண்மையான கலை பிறக்கிறதெனலாம்.''

''அப்படியானால், உண்மையைவிட்டு அழகும், அழகை விட்டு உண்மையும், தனித்தனியாக இருக்க முடியாதா?'' என்றார் ராமச்சந்திரன்.

''அழகு என்றால் என்னவென்பதை நாம் முதலில் திட்டமாய்த் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்றார் காந்திஜி. ''சாமானிய ஜனங்கள் இந்தச் சொல்லுக்கு என்ன பொருளைக்கொண்டிருக்கிறார்களோ, அதே

பொருளை நாமும் கொள்வோமாயின், அழகும் உண்மையும் வெவ்வேறானவை என்றுதான் ஏற்படும். பார்வைக்கு மட்டும் அழகாய் இருக்கிற ஒரு பெண்ணை அழகுடையவள் என்று சொல்ல முடியுமா?"

சிந்தித்துப் பார்க்காமலே, "ஆம், முடியும்" என்றார் ராமச்சந்திரன்.

"ஒழுக்கந் தவறியவளாக இருந்தாலும், அதைக் கவனியாது, புறத்தோற்றத்தை மட்டும் கொண்டு, ஒரு பெண்ணை நீங்கள் அழகுடையவள் என்று சொல்லுவீர்களா?"

ராமச்சந்திரன் சற்றுத் தயங்கி, பிறகு சொன்னார்: "அப்படி இருப்பவளுடைய முகம் அழகா யிராது. அகத்தின் அழகையே முகம் எடுத்துக்காட்டுகிறது. உண்மைக் கலைஞர்கள், தங்கள் நுண்ணறிவினாலே அகத்தின் அழகைக் கண்டுபிடித்து, அதைத் தக்கபடி வெளியிடவும் செய்வார்கள்."

"இப்போது நீங்கள் சொன்னதையேதான் நானும் இவ்வளவு நேரமாகச் சொல்லிக்கொண் டிருக்கிறேன். புறத்தோற்றத்தினால் மட்டும் எந்தப் பொருளும் அழகாய் இருப்ப தில்லை என்பதை, இப்போது நீங்கள் ஒப்புக்கொள் கிறீர்கள் அல்லவா? புறத்தோற்றம் எவ்வண்ண மிருந்த போதிலும், உள்ளத்தில் உண்மைஒளி வீசுகிற முகமே அழகுடன் இருப்பதாக உண்மைக் கலைஞனுக்குத் தென் படும். எனவே, உண்மை யில்லாமல் அழகு என்பது இல்லை. அது மட்டு மல்ல; வெளிப்பார்வைக்குச் சிறிதும் அழகாயிராத உருவங்களிலும் உண்மைத் தத்துவம் காட்சி அளிக்கக் கூடும். சாக்ரடீஸ் என்னும் பெரியாரை நாம் அறிவோம். அவர் காலத்திலே, கிரேக்க நாட்டில் அவரை விடக் குரூபி வேறு எவருமே கிடையாதாம். ஆயினும், அவருடைய வாழ்க்கை உண்மையையே நாடிக்கொண் டிருந்ததாகச் சொல்லுகிறார்கள். குரூபியாக இருந்த போதிலும், சாக்ரடீஸ் உண்மையை நாடி வாழ்க்கையை நடத்தியபடியால், அவரை நான் அழகுள்ளவராக்வே கருதுகிறேன். பிடியஸ் என்ற சிற்பி, புறத்தோற்றத்தின் அழகைக் கண்டு அனுபவிக்கும் இயல்புடையவர். ஆனாலும், சாக்ரடீஸிடம் காணப்பட்ட உண்மையின் பொலிவை

அனுபவிப்பதற்கு, அவரது விகாரமான புறத்தோற்றம் பிடியஸிற்குத் தடையாக இருந்ததில்லை.''

''தாங்கள் சொல்லுவது உண்மையானல், அழகற்றுக் கேவலமான வாழ்க்கை நடத்திய மனிதர் சிலர் அரிய கலைப்பண்பமைந்த பொருள்களைச் சிருஷ்டித் திருப் பதைக் காண்கிறோமே, இது எவ்வாறு சாத்திய மாகும்?' என்று கேட்டார் ராமச்சந்திரன்.

''உண்மையும் பொய்யும், நன்மையும் தீமையும், வாழ்க்கையில் கலந்தே இருக்கின்றன என்பதை இது புலப்படுத்துகிறது. கலைஞனுடைய வாழ்க்கையிலும் இது உண்மையே. கலைஞனுக்கு உண்மையான திருஷ்டி ஏற் படுகிறபோது, சிறந்த அழகுபெற்ற கலைகள் பிறக்கும். இப்படி வருகிற உணர்ச்சி கலைஞனுடைய வாழ்க்கையில் அடிக்கடி ஏற்படுவ தில்லை; குறைவாகவே தோன்றும். அதனலேதான் உயர்ந்த கலைகளும் குறைவாக இருக் கின்றன.''

இதை ராமச்சந்திரன் புரிந்துகொள்ளாது கஷ்டப் பட் டார். ''எதில் உண்மைத்தத்துவம் அமைந்திருக்கிறதோ, அல்லது எது நன்மையுடையதா யிருக்கிறதோ, அது மட் டுமே அழகா யிருக்குமானல், ஒழுக்கத்திற்கு அப்பாற் பட்ட பொருள்கள் அழகா யிருக்க நியாய மில்லையே?'' என்று ராமச்சந்திரன் தனக்குள்ளேயே சிறிது இரைந்து சொல்லிக்கொண்டார். பிறகு, ''ஒழுக்கம், ஒழுங்கீனம் இரண்டிற்குமே புறம்பான பொருள்கள் பல அழகா யிருக் கின்றன; உதாரணமாக, சூரியன் மறைவதும் இரவிலே நட்சத்திரங்கள் சூழப் பிறைச் சந்திரன் தோன்றுவதும் அழகாய் இருப்பதைக் காண்கிறோம். இவற்றில் உண்மைத் தத்துவம் அமைந்திருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஆம். இவற்றின் அழகிலே உண்மைத் தத்துவம் இருக்கிற தென்றே சொல்ல வேண்டும். இறைவன் ஒரு வன் இருக்கிறன் என்ற உண்மையை இவற்றின் மூல மாக நாம் அறிய முடிகிறதல்லவா? படைப்புக் கெல்லாம் அடிப்படையாக விளங்கும் இந்த உண்மை, இவற்றில் அமைந்திருக்கிறபடியினலேதான் இவை அழகுடன் மிளிர்கின்றன. சூரியாஸ்தமனத்தின் அதிசயத்தையோ, சந்திரனின் அழகையோ கண்டு நான் அடையும் வியப்புக்

கொஞ்சநஞ்சமல்ல. அப்போது, எனது ஆன்மா யாவற்றையும் படைத்த இறைவனை எண்ணித் தலைவணங்குகிறது. இந்தப் படைப்புகள் யாவற்றிலும் இறைவனையும் அவனுடைய கருணையையுமே நான் காண முயலுகிறேன். இறைவனைக் காணச் சூரியாஸ்தமனமும் சூரியோதயமும் துணை செய்யாவிட்டால், அவற்றை நான் வெறுந் தடைகளென்றே கருதுவேன். ஆன்மாவுக்கு எங்கெல்லாமோ பறக்க வேண்டுமென்கிற ஆசையுண்டு. இதற்குத் தடையாக இருப்பதெதுவும் வெறும் மயக்கமாகும்; மாயவலையாகும். ஏன், நமது உடம்புகூட முக்தியடையும் மார்க்கத்துக்குப் பல வழிகளில் தடையா யிருக்கவில்லையா? இது போலத்தான்."

"கலையைப்பற்றித் தங்களது கருத்துக்களைத் தெரிவித்ததற்காக, தங்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவை எனக்கு விளங்குகின்றன. அவற்றை நான் ஏற்றுக்கொள்ளவும் செய்கிறேன். தாங்கள் அவற்றை எழுதி வெளியிட்டால் இளைஞர்கள் சரியான நெறியிலே செல்வதற்கு அவை வழிகாட்டியாக இருக்கும்" என்று ராமச்சந்திரன் சொன்னார்.

காந்திஜி சிரித்துக்கொண்டே சொன்னார்: "அப்படிச் செய்ய எனக்கு ஒருபோதும் எண்ண மில்லை. கலை சம்பந்தமாக நான் ஏதேனும் செய்ய முயல்வது அடாத செயலாகும். மேற்கூறியவைகளே கலையைப்பற்றிய எனது அடிப்படையான அபிப்பிராயமாயினும் கலையை ஆராய்ந்து வருபவன் அல்ல நான். எனக்கு உள்ள ஆற்றல் எவ்வளவு என்பதை நான் அறிவேன். அதனாலேதான், நான் கலையைப்பற்றி எழுதாமலும் பேசாமலும் இருந்து வருகிறேன். எல்லாவற்றையும் நான் அறிந்துவிட வில்லை. இந்த உணர்ச்சி யொன்றே எனக்கு ஆக்கம் தருவதாயிருக்கிறது. என்னுடைய வாழ்க்கையில் ஏதோ சில காரியங்களை நான் சாதிக்க முடிந்த தென்றால், மற்றெதையும் விட, இந்த உணர்ச்சிதான் எனக்கு முக்கியமான உதவியாக இருந்திருக்கிறது. எனது வேலை கலைஞனுடைய வேலை அல்ல, வேறானது. எனது இலட்சியத்தை விட்டு விலகி, நான் கலைஞனுடைய வேலையை மேற்கொள்ள ஆசைப்படுவது அவ்வளவு சரியன்று."

II

இயந்திரங்கள்

"இயந்திரங்களின் உதவியால், கோடிக்கணக்கான மக்களை, இன்று ஒருசிலரே ஏவி அதிகாரம் செலுத்திக்கொண் டிருக்கிறார்கள். இயந்திரம் வைத்து நடத்துவதன் நோக்கம், மனிதர் படுகிற சிரமத்தைக் குறைக்க வேண்டும் என்ற பரோபகார சிந்தை யல்ல; பேராசைதான். இந்த அக்கிரமமான அமைப்புமுறை சரியல்ல; இதை ஒழித்து விட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான், நான் என் முழு பலத்தையும் கொண்டு இயந்திரத்தோடு போராடி வருகிறேன்."

அடுத்தபடியாக, ராமச்சந்திரன், "பாபுஜி, தாங்கள் இயந்திரம் என்னும் பெயரால் வழங்கி வருவது எதுவுமே கூடா தென்கிறீர்களா?" என்று கேட்டார்.

ராமச்சந்திரன் கேட்ட இந்தக் கேள்விக்கு, காந்திஜி சொன்ன பதில்: "நமது உடம்பே நுட்பமான ஒரு இயந்திரம்; நாம் சுற்றிக்கொண் டிருக்கும் ராட்டினம்கூட ஒரு இயந்திரம்தான். அப்படி இருக்கும்போது, இயந்திரங்கள் யாவற்றையுமே நான் வெறுக்கிறேன் என்பது எப்படிப் பொருந்தும்? இயந்திரம் என்பதற்காகவே நான் இயந்திரங்களை வெறுக்க வில்லை; அவற்றின்மீது மக்கள் கொண்டுள்ள மோகத்தையே கண்டிக்கிறேன். மக்கள் படுகிற சிரமத்தைக் குறைப்பதாகச் சொல்லுகிறஇயந்திரங்களிலே மக்களுக்கு மோகமிருக்கிறது; இது பைத்தியக்காரத்தனமான மோகம். இயந்திரங்களின் உதவியினால் உடல் உழைப்புக் குறைந்துவிடலாம்; ஆனால், ஆயிரக்கணக்கான பேர் வேலைசெய்து கூலிபெற வழியில்லாமற் போகிறதே! வீடுவாச லின்றி, பசியாலும் பட்டினியாலும் மக்கள் மடிந்துபோகிறார்களே! இயந்திரங்கள் காரணமாக உடல் உழைப்புக் குறைந்து போகிற தென்றும், நேரம் மீதப்பட்டு ஓய்வு ஏற்படுகிற தென்றும் சொல்லுகிறார்கள். இவ் வசதிகளை ஒருசிலர் மட்டும் அனுபவிப்பது போதாது; மனித சமுதாயத்திலுள்ளோர் அனைவருக்குமே இந்த வசதிகள் இருக்க வேண்டாமா? செல்வம் சிலரிடத்து மட்டும் தங்கிவிட்டால் போதாது; எல்லோரிடத்திலும் இருக்க

வேண்டும். இயந்திரங்களின்உதவியால்,கோடிக்கணக்கான மக்களை இன்று ஒருசிலரே ஏவி அதிகாரம் செலுத்திக் கொண் டிருக்கிறார்கள். இயந்திரம் வைத்து நடத்துவதன் நோக்கம், மனிதர் படுகிற சிரமத்தைக் குறைக்க வேண்டும் என்ற பரோபகாரச் சிந்தை யல்ல; பேராசைதான். இந்த அக்கிரமமான அமைப்புமுறை சரியல்ல; இதை ஒழித்து விட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான், நான் என் முழு பலத்தையும் கொண்டு இயந்திரத்தோடு போராடி வருகிறேன், "

" அப்படியானால், பாபுஜி, தாங்கள் எதிர்ப்பது இயந்திரங்களை யல்ல; அவற்றை இன்று தவறாகப் பயன் படுத்துவதையே எதிர்க்கிறீர்கள் என்று கொள்ளலாமா ?" என்று ராமச்சந்திரன் ஆவலோடு கேட்டார்.

" தயங்காமல் இதற்கு நான் 'ஆம்' என்று சொல்லி விடுவேன். இருந்தபோதிலும் இன்னொன்றையும் குறிப் பிட விரும்புகிறேன். சயன்ஸின் உதவிகொண்டு பல உண்மைகளையும் பல சாதனங்களையும் மக்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள். பொருள் சேர்க்க வேண்டு மென் கிற பேராசையைப் பூர்த்திசெய்யவேண்டி, இந்த உண்மை களையும் சாதனங்களையும் கருவிகளாக உபயோகிப்பதை முதலில் நிறுத்திவிட வேண்டும். இதனால் தொழிலாளிகளை அளவுக்கு மேற்பட்டு வேலைவாங்குவது நின்றுபோய் விடும் ; வாழ்க்கைக்கு இயந்திரங்கள் இடையூறாய் இராமல், உதவியா யிருந்துவரும். எனது நோக்கம் இயந்திரங்களை யெல்லாம் ஒழித்துவிடுவது அல்ல; அவற்றைக் கட்டுப் படுத்துவதே யாகும்."

"தாங்கள் சொல்லுவதைத்தர்க்கரீதியாகப்பார்த்தால், இயந்திர சக்தியால் இயங்குகிற பெரிய பெரிய ஆலைகள் யாவும் ஒழிய வேண்டும் என்றுதானே ஏற்படும் ?" என்று கேட்டார் ராமச்சந்திரன்.

" ஆம், அவ்விதம் இயங்குகிற ஆலைகள் ஒழிந்துபோக வேண்டியதுதான் " என்று ஒப்புக்கொண்டார் காந்திஜி. " ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் தெளிவுபடுத்த விரும்பு கிறேன். எதிலும், மனிதனையே பிரதானமாகக் கொள்ள வேண்டும். இயந்திரங்களை உபயோகித்து உபயோகித்து, கால்களும் கைகளும் வலியிழந்து, மனிதன் செயலற்ற

வனுய்ப் போய்விடக் கூடாது. இருந்தாலும், இந்த விதிக்கு முக்கியமான சில விலக்குகளும் இருத்தல் கூடும். உதாரணமாக, ஸிங்கர் என்பவர் கண்டுபிடித்த தையல் இயந்திரத்தைப் பாருங்கள். மனிதன் கண்டுபிடித்த உபயோகமான சில பொருள்களிலே இந்த இயந்திரமும் ஒன்று. இந்த இயந்திரத்தைக் கண்டுபிடித்தது சம்பந்தமாக, நயமான ஒரு கதையும் வழங்குகிறது. தம் மனைவி மிகவும் கஷ்டப்பட்டுக் கையாலே, தைத்துக்கொண்டிருந்ததைக் கண்ட ஸிங்கர், அவள் பட்டுவந்த கஷ்டத்தைப் போக்க எண்ணினார். அவள்மீது வைத்திருந்த அன்பு தூண்டியே அவர் தையல் இயந்திரத்தைக் கண்டுபிடிக்க நேர்ந்தது. இந்தத் தையல் இயந்திரத்தின் மூலமாக, தமது மனைவி பட்ட கஷ்டத்தை மட்டுமன்றி, இயந்திரத்தை வாங்கிக் கொள்ளக் கூடியவர்கள் எல்லோருடைய கஷ்டத்தையுமே அவர் போக்கிவிட்டார் எனலாம்.''

''அப்படியானால், தையல் இயந்திரங்களைச் செய்ய ஒரு தொழிற்சாலை இருந்துதானே ஆக வேண்டும்? இயந்திர சக்தியினால் இயங்குகிற தொழிற்சாலை யின்றி அவற்றை உற்பத்தி செய்வது சாத்திய மில்லைதானே?'' என்று கேட்டார் ராமச்சந்திரன்.

ராமச்சந்திரன் இப்படி எதிர்த்துச் சொல்லியதை காந்திஜி சிரித்தபடியே ஒப்புக்கொண்டார். ''ஆம், ஆனால், இப்படியுள்ள தொழிற்சாலைகள் அரசாங்கத்துக்குச் சொந்தமானவையாகவோ, அல்லது அவர்கள் ஆதிக்கத்தின்கீழோ இருக்க வேண்டும் என்பது என் கட்சி. இந்த அளவுக்கு நான் சமதர்மக் கொள்கையுடையவன்தான். தொழிற்சாலைகள் வைத்து நடத்த அனுமதி கொடுக்கிற போது, வாழ்க்கைக்கு உவந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும். லாபத்தை நோக்கமாகக் கொண்டு நடத்துவதற்குப் பதிலாக, மனித சமுதாயத்தின் நலத்தை நோக்கமாகக்கொண்டே ஆலைகளை நடத்த வேண்டும். இதற்கு அன்பு தூண்டுகோலாய் இருக்க வேண்டுமேயன்றி, பொருளாசை தூண்டுகோலாய் இருத்தல் கூடாது. தொழிலாளர்களுடைய நிலைமையில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும். பணத்தைக் குவிக்க வேண்டும் என்ற பித்து ஒழிய வேண்டும். வாழ்க்கை நடத்துவதற்குப் போதிய

ஊதியம் கிடைக்கச் செய்ய வேண்டும். அதோடு, தினசரி வேலையில் அலுப்பு ஏற்படாதபடி தொழிலாளருக்குச் சௌகரியங்களையும் செய்து கொடுக்க வேண்டும். இதுவே நான் விரும்புகிற மாற்றம். இந்த மாற்றம் ஏற்படுமானால், இயந்திரத்தினாலே, முதலாளிகளுக்கும் அரசாங்கத்துக்கும் எவ்வளவு நன்மை உண்டோ, அவ்வளவு நன்மை தொழிலாளிகளுக்கும் ஏற்படும். இப்போதுள்ள பணப் பைத்தியமும் நின்றுபோகும். வாழ்க்கைக்கு உவந்த சௌகரியமான நிலைமையிலே தொழிலாளிகளும் வேலைபார்த்து வருவார்கள். நான் கருதியுள்ள பல விதிவிலக்குகளில், மேலே சொல்லியதும் ஒன்று. தையல் இயந்திரத்தைக் கண்டுபிடிக்கக் காரணமா யிருந்தது அன்பு. மக்கள் படும் சிரமத்தைப் போக்குவ தொன்றே நோக்கமா யிருக்க வேண்டுமே யன்றி, பொருள் திரட்டலாம் என்ற நோக்கம் அடியோடு கூடாது; பரோபகாரமே நோக்கமாக இருக்க வேண்டும். உதாரணமாக ஒன்று சொல்லுகிறேன்; நூல் நூற்கும்போது, ராட்டினத்திலுள்ள கதிர் வளைந்துவிடுகிறது; அதை நிமிர்ப்பதற்கு ஒரு இயந்திரம் கண்டுபிடிக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை. கொல்லன் கதிர் செய்வது இதனால் நின்று போகாது; அவன் இனிமேலும் கதிர் செய்துகொண்டுதா னிருப்பான். ஆனால், கதிர் வளைந்துபோகிறபோது, அதை நிமிர்க்கக் கூடிய கருவி ஒன்று, நூற்பவர் ஒவ்வொருவரிடத்திலும் இருக்க வேண்டும். ஆகவே, பொருளைக் குவிக்க வேண்டும் என்கிற ஆசை தூண்டுகிறது என்பதில்லாமல், அன்பு தூண்டுகிறது என்று ஏற்பட்டுவிட்டால், எல்லாம் சரியாய்ப் போய் விடும்.''

ராமச்சந்திரனுக்கு இது அவ்வளவாகத் திருப்தியளிக்க வில்லை. காந்திஜி இயந்திரங்கள் யாவற்றையுமே வெறுப்பவ ரென்று அவர் எண்ணினர்; இது ஓரளவுக்கு நியாயந்தா னென்பது அவர் கருத்து. ஆகவே, விஷயத்தை இன்னும் துருவி ஆராய விரும்பினர். ஆனல், நேரமோ அதிகமாய் விட்டது; கேட்க வேண்டிய கேள்விகளோ பல இருந்தன. இதை யறிந்த காந்திஜி, "ரயில் தப்பிவிடுமென்று கவலை வேண்டாம். நான் உங்களுக்குத் திருப்தி உண்டாகும்படி எல்லாவற்றையுமே சொல்லுகிறேன்.

இன்று காலை எத்தனை கேள்விகளை வேண்டுமானாலும் நீங்கள் கேட்கலாம்; எனக்கு அதனால் ஒரு சிரமமும் ஏற்படாது'' என்று சிரித்துக்கொண்டு சொன்னார்.

ராமச்சந்திரன் கேட்க வேண்டிய கேள்விகள் இன்னும் இருந்தன. காலை நேரம் முழுதும் எவ்வளவு வேண்டுமானாலும் கேட்கலாமென்று காந்திஜி தெரிவித்ததும், ராமச்சந்திரனுக்குத் தைரியம் பிறந்தது. அவர் கேட்ட அடுத்த கேள்வி விவாகத்தைப்பற்றியது.

III

விவாகம்

''முக்தி நிலையே மனித வாழ்க்கையின் இலட்சியம்.................. இந்த உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு மண வாழ்க்கை தடையாய் இருக்கிறது. ஏனெனில், மணம் செய்துகொள்வதனால் உடலுக்குள்ள தளைகள் பலப்பட்டு விடுகின்றன.''

''நான் கேட்க விரும்புகிற மூன்றாவது கேள்வி மண வாழ்க்கையைப்பற்றியது. மண வாழ்க்கை அவசியமானதுதான் என்பதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா, அல்லது எதிர்க்கிறீர்களா?'' என்று ராமச்சந்திரன் கேட்டார்.

'' இந்தக் கேள்விக்கு நான் விரிவாகப் பதில் சொல்ல விரும்புகிறேன்'' என்றார் காந்திஜி. ''முக்தி நிலையே மனித வாழ்க்கையின் இலட்சியம். முக்தி என்பது பிறவியறுத்த நிலை; உடலுக்குள்ள பாசத் தளைகளை யறுத்து, இறைவனோடு கலத்தலே முக்தியாகும். ஹிந்து என்ற முறையில் எனது நம்பிக்கையும் இதுவே. இந்த உயர்ந்த இலட்சியத்தை அடைவதற்கு மண வாழ்க்கை தடையாய் இருக்கிறது. ஏனெனில், மணம் செய்துகொள்வதனால் உடலுக்குள்ள தளைகள் பலப்பட்டு விடுகின்றன.

பிரமசரியத்தினாலே பெரிய அனுகூல முண்டு; அதன் உதவிகொண்டு ஒருவன் கடவுளிடம் அடைக்கலம் புகுந்து விட முடியும். குழந்தைகளைப் பெற்று இனத்தைப் பெருக்குவதைத் தவிர, மண வாழ்க்கையால் வேறு என்ன பய

னைக் கண்டிருக்கிறார்கள்? மண வாழ்க்கை வேண்டுமென்று பரிந்து பேச வேண்டிய அவசியம் இல்லை. அது, தானாகவே பரவும் இயல்புடையது. மற்றொருவர் முயன்று அதைப் பரப்ப வேண்டியதில்லை."

"தாங்கள் சொல்லுவதைப் பார்த்தால், எல்லோரிடத்திலுமே பிரமசரிய விரதத்தைப்பற்றிப் பேச வேண்டும், எங்குமே அதைப் பரப்பப் பிரசாரம் செய்ய வேண்டும் என்று ஏற்படுகிறதே!" என்றார் ராமச்சந்திரன்.

"ஆம்" என்று காந்திஜி சொல்லவே, ராமச்சந்திரன் குழப்பமடைந்து போனார். தொடர்ந்து, காந்திஜி சொன்னார்: "படைப்புத் தொழிலே நின்றுபோய்விடும் என்ற அச்சம் உங்களுக்கு இருக்கிறதா? அப்படி ஒன்றும் ஏற்பட்டுவிடாது. மனிதவர்க்கம் இதனால் அழிந்துவிடாது; அதற்கு மாறாக அது உயர்ந்த நிலையையே அடையும்."

"கலைஞன், அல்லது கவிஞனிடம் அரியதொரு மேதாவிலாசத்தைக் காண்கிறோம். இவ்வரிய மேதாவிலாசத்தை அவருடைய சந்ததி மூலமாக உலகத்தார் அடையும்படி செய்ய வேண்டியது அவசியமல்லவா?" என்று ராமச்சந்திரன் கேட்டார்.

"அவசியமல்ல" என்று காந்திஜி அழுத்தமாகச் சொன்னார். "இத்தகைய அறிவாளிகளுக்குக் குழந்தைகள் சிலவே இருக்க முடியும்; ஆனால், சிஷ்யர்களின் கூட்டமோ ஏராளமாக இருக்கும். உலகத்துக்கு வழங்க வேண்டிய நன்மைகளையெல்லாம் இந்தச் சிஷ்யர்கள் மூலமாக எளிதில் வழங்க முடியும்; சிஷ்யர்களைப்போல் வேறு எவராலுமே இவற்றை நன்கு பரப்ப முடியாது. இப்படி ஏற்படுகிற உறவை, உயிருக்கும் உணர்வுக்கும் ஏற்படுகிற சம்பந்தம் என்று சொல்லிவிடலாம்; இந்தச் சம்பந்தத்தினால் தோன்றும் உண்மையான சிஷ்யவர்க்கத்தைத் தெய்வப் பிறவி என்று சொல்லலாம். மண வாழ்க்கையை அதனுடைய போக்கின்படியே விட்டுவிட வேண்டும். மண வாழ்க்கையால் மனிதவர்க்கம் பெருகுகிறதேயன்றி, அபிவிருத்தியடையவில்லை; மண வாழ்க்கையிலே காம உணர்ச்சியே பிரதானமாய்ப் போய்விடுகிற காரணம் பற்றி."

"தாங்கள் பிரமசரிய விரதத்தையே வற்புறுத்திச்

சொல்லிக்கொண்டு வருகிறீர்கள். ஆண்ட்ரூஸுக்கு இது பிடிக்கிற காரியமா, அல்லவே!"

"இது எனக்குத் தெரியும். பிராடெஸ்டண்ட் சமயத்தினாலேயே இந்த விபரீதம் ஏற்பட்டது. பிராடெஸ்டண்ட் சமயத்தால் பல நன்மைகள் விளைந்த துண்டு; என்றாலும், அதிலே சில குறைபாடுகளும் உள. பிரமசரிய விரதத்தை இகழ்ந்துவருவது, அதன் குறைபாடே யாகும்" என்றார் காந்திஜி.

"அந்தக் காலத்திலிருந்த பாதிரிமார் மிகவும் கேவலமாக வாழ்க்கை நடத்தினார்கள். அந்த வாழ்க்கை காரணமாகவே, பிரமசரிய விரதத்தைப் பிராடெஸ்டண்ட் சமயம் இகழ நேர்ந்தது."

"ஆனால், பாதிரிமார் செய்த தவறுகளுக்குக் காரணம் பிரமசரிய விரதமன்று; அந்த விரதத்தில் இயல்பாக எவ்விதக் குறைபாடும் கிடையாது. பிரமசரிய விரதம் காரணமாகவே, கத்தோலிக்க சமயம் இன்று உயிருடன் இருந்து வருகிறது" என்றார் காந்திஜி.

IV

நூல் நூற்றல்

"இந்தியாவில் வந்திறங்கும் அன்னியத் துணி ஒவ்வொரு கெஜமும், என்ன செய்கிறது? பசியால் மெலிந்து வாடி வதங்கும் ஏழை மக்களின் உணவில் ஒரு கவளத்தைப் பறித்துக் கொண்டு போய் விடுகிறது."

ராமச்சந்திரன் கேட்ட கடைசிக் கேள்வி, 'நூல் சந்தா'வைப் பற்றியது. காந்திஜி பட்டினி கிடக்கத் தொடங்கிய பிறகே, சாந்திநிகேதனத்தி லுள்ள மூன்று நண்பர்களும் தானுமாக நூல் நூற்கத் தொடங்கினோம் என்று, பேச்சின் ஆரம்பத்திலேயே ராமச்சந்திரன் தெரிவித்துக்கொண்டார். எல்லோரும் நூல் நூற்க வேண்டுமென்ற கொள்கையில் தனக்கு நம்பிக்கை உண்டென்றும் சொன்னார். அங்கத்தினரை நூல் நூற்கும்படி காங்கிரஸ் மகாசபை வற்புறுத்துவதன் நோக்கம் தனக்கு

விளங்க வில்லை என்றும் தெரிவித்தார். அங்கத்தினர்கள் தாங்களாகவே நூல் நூற்க இசைய வேண்டுமே யன்றி, அவர்களை வற்புறுத்துவது சரியான முறையாகாது என்பது அவர் கருத்து.

"அப்படியா சொல்லுகிறீர்கள்? தாங்கள் போகிற போக்கு ஆண்ட்ரூஸின் போக்கைவிடத் தீவிரமா யிருக்கிறதே! காங்கிரஸ் மகாசபை தன் அங்கத்தினர்களை வற்புறுத்துவது அவருக்குப் பிடிக்க வில்லை; ஆனால், நூல் நூற்கும் சங்க மொன்று தோன்றினால், அப்படிப்பட்ட சங்கத்தில் அங்கத்தினராக அவர் சேர விரும்புவார். தாங்களோ அந்தவிதமான சங்கம் எதுவுமே கூடாதென்கிறீர்கள்!" என்று காந்திஜி கூறினர்.

இதைக் கேட்ட ராமச்சந்திரன் மௌனமாயிருந்தார்.

இந்த வாதத்திலே காந்திஜிக்கு உற்சாகம் பிறந்தது. அவர் சொன்னர்: "அங்கத்தினர்கள் மதுபானம் செய்யக் கூடாது என்று சொல்லக் காங்கிரஸ் மகாசபைக்கு அதிகாரம் உண்டா? சொல்லுங்கள். அதிகார முண்டென்றால், அதுகூட, தனிநபர்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியதாகுமா? ஒருபோதும் ஆகாது; அதற்கு எதிர்ப்பும் இருக்க மாட்டாது. குடியால் வரும் கேடுகளை மக்கள் உணர்ந்திருக்கிறபடியால், இந்தக் கட்டுப்பாட்டை எதிர்க்க மாட்டார்கள். இந்தியாவிலே, இன்று கோடிக் கணக்கான மக்கள் பசியாலும் வறுமையாலும் பீடிக்கப்பட் டிருக்கிறார்கள்; இந்த நிலையில் அன்னியத் துணிகளை இறக்குமதி செய்வது, குடியைவிடப் பெருத்த கேடாகும். ஒரிஸா மாகாணத்தில் பசியாலும் பட்டினியாலும் கோடிக் கணக்கான மக்கள் துன்புறுவதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அங்கே போனபோது, வறுமையால் வாடிய மக்களை நான் நேரில் கண்டேன். கைத்தொழில் பாடசாலை வைத்து நடத்துகிற அன்பரொருவர், என்னை ஒரு பாடசாலைக்கு அழைத்துக்கொண்டு போய்க் காட்டினர். அங்கே கூடை, சமுக்காளம் முதலியவற்றைக் குழந்தைகள் செய்துகொண் டிருந்தார்கள். இந்தச் சாமான்கள் அப்போது தேவையாயிருந்தபடியால், நூல் நூற்கும் தொழிலை அங்கு கற்பிக்க வில்லை. குழந்தைகளின் முகம் 'வேலை செய்கிறோம்' என்ற உணர்ச்சியால்செழிப்பாயும் மகிழ்ச்சியாயு மிருந்தது. இதை

விட்டு, புஞ்சத்தில் அடிபட்ட மக்களைப் பார்த்தபோது, அங்கு நான் கண்டது என்ன? எலும்புந் தோலுமாக, சாவு கிட்டாதா என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்த மக்களைத்தான் கண்டேன். எந்த நிலையிலும் அவர்கள் வேலை செய்யத் தயாரா யில்லை; அதனாலேதான் அவர்கள் அந்த நிலையில் இருந்தார்கள். வேலை செய்ய மறுத்தால் சுட்டுக் கொன்றுவிடுவேன் என்று பயமுறுத்தினாலும், அவர்கள் வேலைசெய்ய முன்வர மாட்டார்கள்; சுட்டுக் கொல்லட்டு மென்று சும்மா இருப்பார்கள். வேலைசெய்ய மனமில்லாமல் இருப்பது, மதுபானம் செய்வதைவிடக் கேடான காரியம். குடிகாரனிடமிருந்து நாம் வேலைவாங்கிவிட முடியும்; குடித்து மதிமயங்கிப்போனாலும், அவன் உள்ளத்தில்மனோ திடம் ஒருசிறிதாவது மிஞ்சி நிற்கும்; விஷயங்களை அறிகிற சக்தியும் இருக்கும். ஆனால், வேலைபார்க்க மனமில்லாமல் பட்டினிகிடக்கிற மனிதர்களோ வெறும் விலங்குகளே. இப்படிப்பட்ட மக்களிடமிருந்து வேலை வாங்குவது முடிகிற காரியமா! எல்லோருமே நூல் நூற்க வேண்டுமென்பதைத் தவிர வேறு வழி எனக்குப் புலப்படவில்லை. இந்தியாவில் வந்திறங்கும் அன்னியத் துணி ஒவ்வொரு கெஜமும் என்ன செய்கிறது? பசியால் மெலிந்து வாடி வதங்கும் ஏழை மக்களின் உணவில் ஒரு கவளத்தைப் பறித்துக்கொண்டு போய்விடுகிறது. இப்போதிருக்கும் நிலையில், பசியால் வருந்தும் மக்கள் ஆனந்தத்தோடும் உற்சாகத்தோடும் உணவைப் பெறுவதற்கு வழிகாட்ட வேண்டும்; இதுவே இந் நாட்டுக்கு அவசியமான காரியம். நூற்பதைத் தவிரத் தக்க வழி வேறு எதுவு மில்லை. நீங்களும் சிறிது சிந்தித்துப்பார்த்தால், நூல் சந்தாவை எதிர்க்க மாட்டீர்கள். நூல் நூற்பது இன்றியமையாதது என்பதை ஏற்றுக்கொண்ட ஆடவரும் பெண்டிருமே, காங்கிரஸில் அங்கத்தினராக யிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே, அதிலுள்ள அங்கத்தினர் யாவரும் கட்டாயம் நூல் நூற்க வேண்டு மென்று விதிப்பதில் குற்ற மென்ன? கட்டாயப்படுத்தாதபடி, நயமாக எடுத்துச் சொல்லி, மற்றவர்களை வசப்படுத்த வேண்டும் என்று பேசுவதால் என்ன பிரயோசனம்? காங்கிரஸ் அங்கத்தினர் ஒவ்வொருவரும் மாதந்

தோறும் குறிப்பிட்ட அளவு நூல் நூற்பதைவிட, பிறரை வசப்படுத்துவதற்குச் சிறந்த வழி வேறுண்டா? காங்கிரஸ் அங்கத்தினர்கள் தாங்களே நூல் நூற்காமல் இருந்துகொண்டு, மற்றவர்களை நூல் நூற்கும்படி சொல்லுவது நியாயந்தானா?"

"நூல் நூற்கவில்லை என்பதற்காக, சிலரைக் காங்கிரஸிலிருந்து ஒதுக்கிவிடலாமா? வேறு வழிகளில் அவர்கள் சிறந்த தேசத் தொண்டு செய்யக் கூடு மல்லவா?" என்று கேட்டார் ராமச்சந்திரன்.

"ஏன் ஒதுக்கக் கூடாது என்று கேட்கிறேன். நாலணாக் கொடுத்துத்தான் அங்கத்தினராக வேண்டும் என்பதன் அவசிய மென்ன? சொத்துடையவர்களே ஓட்டுக் கொடுக்கலாம் என்ற நியதிக்குக் காரண மென்ன? வயது வர வேண்டு மென்று சொல்லுகிறார்களே, அதன் கருத்தென்ன? இத்தாலியிலே, எட்டு வயதில் பிடில் வாசிக்கும் திறமையுள்ள ஒரு சிறுவன் இருக்கிறானல்லவா? அவனுக்கு ஓட்டுரிமை கிடையாது. ஏன்? ஜான் ஸ்டுவர்ட் மில் என்பவருக்கு ஏழு வயதிலேயே கிரேக்க, லத்தீன் பாஷைகளில் விசேஷப் பயிற்சி இருந்ததாம்; அப்படி இருந்தும் அவருக்கு அந்த வயதில் ஓட்டுரிமை இல்லை. ஏன்? இப்படிப்பட்டவர்களுக்கு ஓட்டுரிமை கிடையாததற்குக் காரணங்கள் இலலாம லில்லை. எவ்விதமாக, ஓட்டுரிமை யளித்தபோதிலும், ஓட்டுரிமை ஜாபிதாவிலிருந்து சிலரை விலக்கத்தான் வேண்டியிருககிறது. நான் சொல்லுவதை இன்று அனேகர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; என்னவோ, 'காந்தி சொன்னதுதான் சரி' என்று கூறுகிற காலம் நிச்சயமாய் வரு மென்றே நம்புகிறேன். அது, ஒருக்கால் நான் இறந்த பிறகு வந்தாலும் வரக்கூடும்."

இதற்குள் மணி ஏழாகிவிட்டது. ராமச்சந்திரன் போவதாயிருந்த ரயில் தவறிவிட்டது. ஆனால், அவர் அடைந்த லாபம் எவ்வளவோ அதிக மென்று சொல்ல வேண்டும். மறு நாள் காலையில், புறப்படுமுன், காந்திஜியிடம் சிறிது பேச, அவருக்கு அவகாசம் கிடைத்தது. சிறிது நேரமே பேசினா ரென்றாலும், அந்தப் பேச்சின் பயனாக, அவருடைய மனம் மாறுதல் அடைந்துவிட்டது.

"ஆகவே, காந்திஜி, உண்மையே மிகவும் முக்கியம்,

உண்மையும் அழகும் ஒரே பொருளில் தனித்தனியாக இருக்கக் கூடிய அம்சங்கள் அல்ல" என்று, முந்திய நாள் பேசியதையே அன்றும் ராமச்சந்திரன் தொடர்ந்து சொன்னார்.

"உண்மையே மிகவும் முக்கியம். அதையே நாம் தேடிக்காண வேண்டும்" என்று காந்திஜி முன்னிலும் அழுத்தமாகச் சொன்னார். "அழகும் நன்மையும் தாமாகவே வந்துசேரும். கிறிஸ்து நாதரைச் சிறந்த கலைஞர் என்றே நான் சொல்லுவேன். அவர் உண்மைத்தத்துவத்தைக் கண்டு, அதைத் தெளிவாகச் சொன்னார். முகம்மது நபியும் அப்படியே. குரானைச் சிறந்த இலக்கியமென்று அரபிமொழி யறிந்த நிபுணர்கள் சொல்லுகிறார்கள். கிறிஸ்துவும் முகம்மதும் முதலில் உண்மையை நாடினார்கள். இந்த நாட்டத்தினால், அவர்கள் வாக்கிலே அழகும் இயல்பாகவே அமைந்தது; ஆயினும், கலை சம்பந்தமாக அவர்கள் இருவரும் ஒன்றும் எழுதிவைக்க வில்லை. இத்தகைய அழகையும் உண்மையையும் காணவே நானும் ஆசைப்படுகிறேன்; அதற்காகவே வாழ்ந்து வருகிறேன்; அதற்காகவே உயிர்விடவும் தயாரா யிருக்கிறேன்."

இயந்திர சம்பந்தமாகக் காந்திஜி கொண்டுள்ள அபிப்பிராயம் ராமச்சந்திரனுக்குச் சங்கடம் தருவதாயிருந்தது. அதை மறுபடியும் குறிப்பிட்டார். "தையல் இயந்திரத்தையும் நூல் நூற்கும் கதிரையும் தாங்கள் விதிவிலக்காகச் சொன்னீர்கள். ஆனால், உங்கள் விதிவிலக்கு எவ்வளவு தூரம் போய் நிற்கு மென்று தெரியவில்லையே?" என்று கேட்டார்.

"மக்களுக்கு உதவி செய்வதை விட்டுவிட்டு, மனிதத்தன்மையை ஒழிக்க முற்படும் காரியம் எதையுமே விலக்கிவிட வேண்டியதுதான். இயந்திரம் ஏற்பட்டதினால் மனிதனுடைய கை கால்கள் முடமாய்விடக் கூடாது."

"நடைமுறையைக் குறித்து நான் சொல்ல வரவில்லை; இலட்சிய முறையில் பார்க்கும்போது, எல்லா இயந்திரங்களையுமே வேண்டாமென்று ஒதுக்குவீர்களா? தையல் இயந்திரத்தை விதிவிலக் கென்று சொல்லும்போது, சைக்கில், மோட்டார் போன்றவற்றையும் தாங்கள் விதிவிலக்காகச் சொல்ல வேண்டி வருமல்லவா?"

என்றார் ராமச்சந்திரன்.

"அவையும் வேண்டாமென்றே நான் சொல்லுவேன். மனிதனுடைய அடிப்படையான தேவைகளை அவை பூர்த்தி செய்வனவாய் இல்லை. வேகமாக மோட்டார் காரில் பிரயாணம் செய்ய வேண்டும் என்கிற அவசியம் மனிதனுக்கு அடிப்படையான தேவை அன்று. ஆனால், ஊசி அப்படி அன்று; மனிதனுக்கு அவசியமான பொருள் என்று அதைச் சொல்லிவிடலாம். இலட்சிய முறையில் பார்க்கும்போது, இயந்திரங்கள் யாவையுமே வேண்டாமென்றுதான் ஒதுக்க வேண்டும். முக்தியடைய, உடல் துணை புரிவதில்லை; இவ்வுடலைத் துறந்துவிட்டு, ஆன்மாவுக்ுப் பூரண விடுதலையளிக்க நான் விரும்புவேன். இந்த நிலையை ஒட்டி யோசித்துப்பார்க்கும்போது, இயந்திரங்கள் யாவையுமே வேண்டாமென்றுதான் நான் ஒதுக்கித் தள்ளுவேன். வாழ்வதற்கு உடல் அவசியமாயிருப்பதைப் போல, இயந்திரங்களும் வாழ்க்கைக்கு அவசியமாய்விட்டன. இந்த உடம்பைக்கூட நான் ஒரு பூரண இயந்திரமென்றே சொல்லுவேன். ஆன்ம விடுதலைக்கு உடம்பு தடையாக இருக்குமாயின், அதையும் ஒதுக்கித் தள்ள நேரும்."

"தவிர்க்க முடியாத தீமை என்று தாங்கள் ஏன் அதைச் சொல்லுகிறீர்கள்? அழகிலேயே, அல்லது அழகின் மூலமாகவே உண்மைத்தத்துவத்தைச் சில கலைஞர்களாவது காண முடியாதா?" என்றார் ராமச்சந்திரன்.

"சிலருக்கு அது சாத்தியமாயிருக்கும். இருந்தாலும், கோடிக் கணக்கான மக்களின் சாமானியப் பக்குவத்தை வைத்தே நாம் யோசிக்க வேண்டும். எல்லோரையும் அழகின் மூலமாக உண்மையைக் காணும்படி பயிற்றுவது, முடியாத காரியம். முதலில் அவர்களுக்கு உண்மையைக் காண்பித்தால், பிறகு, அவர்கள் தாமாகவே அழகைக் கண்டுகொள்வார்கள். கனவிலும் நனவிலும் ஒரிஸா மாகாணத்தின் நினைவே என் மனதில் குடிகொண்டிருக்கிறது. அங்கு, பட்டினியால் வாடி வதங்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு உபயோகமாயிருப்பவை யாவும், அழகுடையனவாகவே எனக்குத் தோன்றுகின்றன. வாழ்க்கைக்கு அத்தியாவசியமாயுள்ள பொருள்களை அளிக்க

முதலில் ஏற்பாடு செய்தால், அழகும் சிறப்பும் தாமே அவற்றைப் பின்பற்றி வந்துவிடும்.''

நெடுநேரமாய் நடந்த இந்த சம்பாஷணை இதனோடு முடிந்தது. காந்திஜியின் ஆசியைப் பெற்றுக்கொண்டு, ராமச்சந்திரன் சாந்திநிகேதனத்திற்குத் திரும்பினார். தாம் இப்போது கேட்டறிந்தவற்றுக்கும், தமது குருவாகிய ரவீந்திரநாத் தாகூர் போதித்தவற்றுக்கும் ஒற்றுமை என்ன என்பதையும், அடிப்படையான வேற்றுமை என்ன என்பதையும் சிந்திந்துக்கொண்டே போனார்.

— மகாதேவ தேசாய்

வடிகட்டின கேடு

"ஆங்கிலக் கல்வி காரணமாக நமது ஆண்மையை இழந்து விட்டோம்; நமது அறிவு குன்றிவிட்டது. இக் கல்விமுறை காரணமாக, நாம் பேடிகளாகிவிட்டோம்."

"ஆங்கிலக் கல்வியினால் கேடு மட்டுமே விளைந்த தென்று சொல்ல முடியாது; நன்மையும் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், தாங்களும், லோகமான்ய திலகர், ராஜா ராம்மோகன் ராய் முதலியோரும் ஆங்கிலக் கல்வியினால் பயனடைந்தவர்களல்லவா?" என்று, கட்டாக்கில் நடந்த பொதுக்கூட்டத்தில் ஒரு அன்பர் காந்திஜியைக் கேட்டார். அதற்கு, காந்திஜி பின்வருமாறு பதிலளித்தார்.

ஆங்கிலக் கல்வி கெடுதலை மட்டுமன்றி, நன்மையும் செய்திருக்கிற தென்று அனேகர் சொல்லி வருகிறார்கள். இந்த எண்ணமுடையவர்கள் எங்கும்தான் இருக்கிறார்கள். ஆங்கிலக் கல்வியினால் நாம் நன்மை அடைந்துள்ளோம் என்று வேண்டு மென்றே கண்மூடித்தனமாக எண்ணிக்கொண்டிருக்கிறோம்; ஆங்கிலேயரும் அப்படித் தான் எண்ணுகிறார்கள். இந்த எண்ணத்தை அறவே அகற்றினாலன்றி, சுயராஜ்யப் போராட்டத்தில் நாம் வெற்றி பெற முடியாது. வடிகட்டின கேடாய் ஆங்கிலக் கல்வி முறை இருந்து வருகிறது. இந்தக் கல்விமுறையை ஒழிப்பதற்காக என்னால் இயன்ற மட்டும் முயன்று வருகிறேன். இந்தக் கல்விமுறையால் இதுவரையில் எந்த நன்மையும் நாம் அடைந்ததில்லை. நமக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள், இந்த ஆங்கிலக் கல்விமுறையையும் மீறி ஏற்பட்டனவேயன்றி, இந்தக் கல்விமுறை காரணமாக ஏற்பட்டனவல்ல. ஆங்கிலேயர் இந் நாட்டிற்கு வராமலிருந்தாலும், மற்ற நாடுகளுக்குச் சமமாக நமது நாடும் முன்னேற்றம் அடைந்திருக்கும். மொகலாய ஆட்சியின்கீழ் இருந்தாலுங்கூட, நம்மவர்கள் ஆங்கில மொழியையும் அதன் இலக்கியத்தையும் பயின்றிருப்பார்கள் என்பது திண்ணம். இப்போதுள்ள கல்விமுறை நம்மை அடிமைப்படுத்தி யிருக்கிறது; இதனால், ஆங்கில இலக்கியத்தைச் சரியானபடி நம்மால்

அறிந்து அனுபவிக்க முடியவில்லை. கேள்வி கேட்ட நண்பர் என்னையும், திலகரையும், ராஜா ராம்மோகனரையும் உதாரணமாகக் குறிப்பிட்டார். என்னை ஒரு பொருளாகக் கொள்ள வேண்டாம்; நான் ஒன்றுக்கும் உதவாத துரும்பு. என்னை விட்டுவிடுங்கள். திலகரையும் ராம்மோகனரையும்பற்றி இப்போது கவனிப்போம்.

ராம்மோகனரும் திலகரும் ஆங்கிலம் படியாது இருந்திருப்பார்களாயின்,—ஆங்கிலக் கல்வி என்ற தொத்து நோய் அவர்களைப் பற்றாதிருந்தால்—இன்னும் எவ்வளவோ பெரிய மகான்களாக அவர்கள் விளங்கியிருப்பார்கள். ஆங்கிலக் கல்விமீது எனக்கு வெறுப்பில்லை; அதை வேண்டாதபடி உயர்த்திப் பேசுவதையே நான் கண்டிக்கிறேன். இப்போது இருக்கும் ஆட்சியை ஒழித்துவிட வேண்டுமென்று சொல்லுவதனால், ஆங்கில மொழியையே ஒழித்துவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. தேசப்பற்றுள்ள ஒரு இந்தியன் ஆங்கிலத்தை எவ்விதம் பயில்வானோ, அவ்விதம் பயில்வதையே நான் விரும்புகிறேன். மக்களுக்குப் பொதுவாக சைதன்யர், சங்கரர், கபீர், நானக் போன்றவர்களிடத்திலே என்ன ஈடுபாடு இருந்ததோ, அதே ஈடுபாடு ராம்மோகனரிடத்திலும் திலகரிடத்திலும் இல்லையென்றே சொல்ல வேண்டும். இந்தப் பெரியார்களுக்கும், திலகர் ராம்மோகனர் ஆகியவர்களுக்கும், இடையிலுள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான். சங்கரர் ஒருவர் மட்டும் சாதித்துள்ள காரியத்தை, ஆங்கிலம் படித்தோர் அனைவரும் ஒன்றுகூடினாலும் சாதிக்க முடியாது. இன்னும் எத்தனையோ உதாரணங்களை நான் காட்ட முடியும். குரு கோவிந்தர் என்னும் பெரியார் ஆங்கிலம் படித்துத்தானா பெரியாரானார்?

குரு நானக் என்னும் பெரியார் தீரத்திலும் தியாகத்திலும் சிறந்ததொரு சமூகத்தைச் சிருஷ்டித்திருக்கிறார். அதை யொத்த தொரு சமூகத்தைக் காண்பதரிது. ஆங்கிலம் படித்த எந்த இந்தியனாவது இத்தகைய சமூகத்தைச் சிருஷ்டித்துவிட முடியுமா? தான் கொண்ட கொள்கைக்காகத் தன் உயிரையே தியாகம் செய்த துலீப் சிங்கைப்போன்ற ஒரு வீரனையாவது ராம்மோகனர்

தோற்றுவித் திருக்கிறாரா? திலகரிடத்திலும் ராம்மோகன ரிடத்திலும் எனக்கு மிக்க மதிப்பு உண்டு. ஆங்கிலக் கல்வி பெறாதிருந்து, இயல்பாயுள்ள பயிற்சியை மட்டும் பெற்றிருந்தார்களானால், திலகரும் ராம்மோகனரும், சைதன்ய ரைப்போல, அரும்பெருஞ் செயல்களைச் சாதித்திருப்பார்கள். அந்த இலட்சிய புருஷர்களைப் போன்ற சமூகம் மீண்டும் தோன்ற வேண்டுமானால், ஆங்கிலக் கல்விமூலமாக, அதைத்தோற்றுவிக்க முடியாது. சம்ஸ்கிருதமும் இந்துஸ்தானியும் எனக்கு அதிகமாகத் தெரியாதபடியால், எவ்வளவோ இலக்கியச் செல்வங்களை நான் இழந்துவிட்டேன். ஆங்கிலப் படிப்பில் நமக்கு ஏதோ ஒருவித மோகம் இருக்கிறது. அதனால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து பாருங்கள். ஆங்கிலக் கல்வி காரணமாக நமது ஆண்மையை இழந்துவிட்டோம்; நமது அறிவு குன்றிவிட்டது. இக் கல்விமுறை காரணமாக, நாம் பேடிகளாகிவிட்டோம். சுதந்திரம் என்ற தென்றலிலே நாம் உலவ விரும்புகிறோம்; ஆனால், ஆங்கிலக் கல்வி முறை அடிமைத்தனத்தைத்தான் உண்டாக்கிவிட்டது. இதனால், நமது சமுதாயம் ஆண்மையை இழந்துகொண்டு வருகிறது. ஆங்கில ஆட்சி ஏற்படுமுன் நாம் அடிமைகளாயிருந்ததில்லை. மொகலாயர் ஆட்சியின்கீழும் நமக்கு ஒரு வகையிலே சுதந்திரம் இருந்தது. அக்பர் காலத்தில் பிரதாப சிம்மன் போன்ற வீரர் தோன்றவில்லையா? ஒளரங்கஸீப் காலத்திலே, சிவாஜியைப் போன்ற தேசத் தொண்டர் வளர்ந்தோங்கவில்லையா? ஆனால், நமது நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டுள்ள இந்த நூற்றைம்பது வருஷ காலத்திலே, சிவாஜியோ, பிரதாப சிம்மனோ நம்மிடையே தோன்றியதுண்டா!

நமது நாட்டில் அனேக மகா ராஜாக்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தம் சமஸ்தானத்துப் பிரிட்டிஷ் அதிகாரிக்குமுன் முழந்தாளிட்டு வணங்குகிறார்கள்; தாங்கள் அடிமைகளே என்பதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்களைப்பற்றி நமது இளைஞர்கள் குறைகூறும் போது, எனது அனுதாபமெல்லாம் அவர்கள் பக்கமே போகிறது. அவர்களுக்கு இரு வகையிலும் கஷ்டம். தங்கள் குடிமக்களை அவர்கள் அடக்கி ஒடுக்கிறார்களென்றால்,

அதற்காக நான் அவர்கள்மேல் குற்றம் சொல்ல மாட்டேன். குற்றத்தை யெல்லாம் ஆங்கிலேய அதிகாரிகளின் தலைமேலேதான் போடுவேன். அடிமைப்படுத்துவதையே தொழிலாகக் கொண்டுள்ள ஆட்சிமுறைக்கு இவர்கள் அடிமைகளாக இருந்துவருகிறார்கள். இந்த அடிமைப் பேயின் பிடிப்பிலிருந்து விலகிஓடுங்கள் என்றே நான் உங்களை வேண்டுவேன். வீடு வீடாய்ச் சென்று பிச்சை வாங்கினாலும் பாதகமில்லை; அடிமையாக இருந்து உயிர்வாழ்வதைக்காட்டிலும், பிச்சை வாங்கி உண்பது எவ்வளவோ மேலான காரியம். அல்லாத பட்சம் உயிரை விடுங்கள். ஆங்கிலேயர் இந்த நிமிஷத்திலேயே நம் நாட்டைவிட்டு வெளியேறினாலும் அதற்காக நான் ஒரு துளிக் கண்ணீர் கூடச் சிந்த மாட்டேன். நண்பர்களாகவும், நம்மோடு சம அந்தஸ்துடையவர்களாகவும், ஊழியர்களாகவும் அவர்கள் இருந்து உதவி புரியட்டுமென்றே சொல்லுகிறேன். ஏதோ நம்முடைய சம்மதம் பெற்றே அவர்கள் அதிகாரம் செலுத்துகிறார்கள் என்பதை எந்த விதத்திலும் ஒப்புக்கொள்ள முடியாது. ஆகாயப்படை, கடற்படை, தரைப்படை ஆகியவற்றை எவ்வளவு வேண்டுமானாலும் அவர்கள் உபயோகித்துக்கொள்ளட்டும்; ஆனால், நமது சம்மதத்தை மட்டும் அவர்கள் நிச்சயமாகப் பெற முடியாது. இந்தியாவிலே கொள்ளைக்காரர்களே மலிந்திருக்கட்டும்; அதற்காக நீங்கள் பயந்துவிட வேண்டியதில்லை. உங்களுடைய கௌரவத்தை நீங்கள் காப்பாற்ற வேண்டும்; உங்கள் கடமையைச் செய்ய வேண்டும். சுதந்திரமுடைய இந்தியர்களாய் உயிர் துறப்பதைவிடச் சிறந்தது வேறு உண்டா? ஆங்கிலக் கல்விமுறை ஒரு பைசாசக் கல்விமுறையாகும். அதை அழிப்பதற்காகவே, நான் எனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறேன்.

ஆங்கிலக் கல்விமுறை

"இந்தியாவைப் பாதிக்கிற மூடநம்பிக்கைகள் அனேகம்; சுதந்திர உணர்ச்சியை ஊட்டுவதற்கும், கூர்மையான அறிவை அபிவிருத்தி செய்வதற்கும் ஆங்கிலக் கல்வி அவசியமென்று நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோமே, அதுதான் யாவற்றையும் விடப் பெரிய மூடநம்பிக்கையாகும்."

கூட்டாக் என்னுமிடத்தில், ஆங்கிலக் கல்வி கற்பதால் விளையும் பயனைப்பற்றிப் பேசினேன். அந்தப் பேச்சிலுள்ள விஷயத்தை விளக்கி எழுதும்படி ஒரு நண்பர் என்னைக் கேட்டிருக்கிறார். பத்திரிகையில் வெளிவந்த எனது பேச்சின் குறிப்பை நான் இன்னும் பார்க்கவில்லை. ஆனாலும், நண்பரது கேள்விக்கு நான் பதில் சொல்ல முன்வருகிறேன்.

ஆங்கிலக் கல்வியைப் போதிக்கும் முறை காரணமாக, ஆங்கிலம் படித்த இந்தியர் அனைவரும் ஆண்மையற்றவர்களாய்ப் போய்விட்டார்கள்; மாணவர்கள் படித்துப் படித்துச் சோர்வடைந்து போனார்கள்; சுயமாக எதுவும் செய்யத் தெரியாமல், மற்றவர்களைப் பார்த்துச் செய்கிற வழக்கமே நமக்குள் அதிகமாகிவிட்டது. இதுவே, ஆங்கிலக் கல்வியின் பயனைப்பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயம். பிரிட்டிஷாரின் தொடர்பு காரணமாக, வருந்தத்தக்க எத்தனையோ காரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன; கல்வி புகட்டுவதில் நமது தாய்மொழியை உபயோகிக்கக் கூடாதென்று விலக்கிவைத்திருப்பது மிகக் கேடான தொன்றாகும். ராம்மோகனரும் லோகமான்ய திலகரும் ஆங்கிலத்திலே படித்து, ஆங்கிலத்திலே சிந்தித்து, தங்கள் சிந்தனைகளையெல்லாம் முக்கியமாக ஆங்கிலத்திலேயே வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இந்த நிலை ஏற்படாதிருந்தால், திலகர் இன்னும் எவ்வளவோ சிறந்த கல்விமானாக விளங்கியிருப்பார்; ராம்மோகனரும் இன்னும் எவ்வளவோ சிறந்த சீர்திருத்தக்காரராக இருந்திருப்பார். நம் நாட்டு மக்களிடையே அவர்களுக்கு ஆச்சரியமானதொரு செல்வாக்கு இருந்தது. இயற்கைக்கு மாறுபட்ட முறையில்

அவர்கள் கல்வி பயிலாமல், இயற்கையோடு ஒத்த முறையில் கல்வி பயின்றிருப்பார்களாயின், பொதுமக்களிடையே அவர்களுடைய செல்வாக்கு இன்னும் அதிகமாகப் பரவி இருந்திருக்கும். ஆங்கில நூல்களைக் கற்று அவர்களது அறிவு விருத்தியாயிற்று; சந்தேகம் இல்லை. ஆனால், அத்தனை விஷயங்களையும் தாய்மொழி மூலமாக அடைவதற்கு வசதி யிருந்திருக்க வேண்டும். ஒரு தேசம் சிறந்தோங்குவதற்கு மொழிபெயர்ப்பாளர்களையே உண்டாக்கிக்கொண் டிருந்தால் போதுமா? போதாது. பைபிளை ஆங்கிலப் பண்பில்வைத்து எழுதாதிருந்தால், ஆங்கிலேயர் என்ன நிலையில் இருந்திருப்பார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். சைதன்யரும், கபீரும், குரு நானக்கும், குரு கோவிந்தரும், சிவாஜியும், பிரதாபசிம்மனும், திலகரையும் ராம்மோகனரையும்விடச் சிறந்தோ ரென்றே நான் மதிக்கிறேன். ஆனால், இப்படி ஒருவரை மற்றொருவரோடு ஒப்பிடுவது அழகல்ல; எல்லோரும் அவரவர் வழியில் பெரியோரே யாவர்.

ஆங்கிலம் படியாது பெரியவர்களான சைதன்யர் முதலியவர்களுக்குப் பொதுமக்களிடை ஏற்பட்ட செல்வாக்கைப்போல, ஆங்கிலம் கற்ற ராம்மோகனருக்கும் திலகருக்கும் செல்வாக்கு இல்லை. ஏற்பட்ட செல்வாக்கும் நிலையானதா யில்லை: எங்கும் பரவியதாயு மில்லை. ஆனாலும், அவர்கள் சமாளித்துள்ள இடையூறுகளை எண்ணிப்பார்க்கும் போது, அவர்களை மாபெரும் வீரர்கள் என்றே சொல்லலாம். ஆங்கில பாஷை மூலமாக அவர்கள் பயிற்சி பெறுமல் இருந்திருந்தால், இன்னும் சிறந்த நன்மைகள் அவர்களால் தோன்றி யிருக்கும். திலகருக்கும் ராம்மோகனருக்கும் தோன்றிய சிறந்த கருத்துக்கள், அவர்கள் ஆங்கிலம் படியாவிட்டால் தோன்றி யிருக்க முடியாதென்பதை என்னல் நம்ப முடியவில்லை. இந்தியாவைப் பாதிக்கிற மூடநம்பிக்கைகள் அனேகம்; சுதந்திர உணர்ச்சியை ஊட்டுவதற்கும் கூர்மையான அறிவை அபிவிருத்தி செய்வதற்கும் ஆங்கிலக் கல்வி அவசியமென்று நாம் எண்ணிக்கொண் டிருக்கிறேமே, அதுதான் யாவற்றையும்விடப் பெரிய மூடநம்பிக்கை யாகும். சென்ற ஐம்பது வருஷ காலமாக, ஒரேயொரு விதமான கல்வித் திட்டந்தான் நம்

நாட்டில் இருந்து வந்திருக்கிறது; நமது எண்ணங்களை வெளியிடுவதற்கு ஒரேயொரு பாஷையைத்தான் நம்மீது சுமத்தி யிருக்கிறார்கள்; இதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்போதிருக்கிற பள்ளிக்கூடங்களி லும் கல்லூரிகளிலும் எழுத்தறிவைத் தவிர வேறு எதை யும் நாம் பெற இயலவில்லை; இந்தப் படிப்பு முறையும் இல்லாவிட்டால் நாம் எப்படி இருந்திருப்போம் என்பதை வரையறுத்துச் சொல்ல ஆதார மில்லை. ஆனால், ஒன்று மட்டும் நமக்கு நிச்சயமாய்த் தெரிகிறது. ஐம்பது வருஷங்களுக்கு முன் இருந்ததைவிட, இப்போது இந்தியா மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கிறது; தன்னைப் பாது காத்துக்கொள்ளும் வலிமை அதற்கு இல்லைதான்; இந்திய மக்களிடையே, உடல்வலிமை குன்றிவிட்டது. இந்தச் சீர்கேடுக ளெல்லாம் அரசியல்முறையிலுள்ள குறைபாடு கள் காரணமாகவே வந்தன வென்பது எனக்குத் தெரி யாததல்ல; அரசியல்முறையிலுள்ள குறைகள் எல்லாவற்றி லும் மிக்க கேவலமானது, இந்த ஆங்கிலக் கல்விமுறை தான். நமது நாட்டில் பழைமையாக இருந்த கல்விமுறை பயனற்றதென்று, நம்மை ஆட்சி புரியவந்த ஆங்கிலேயர் உண்மையாகவே கருதினார்கள். ஆகவே, அவர்கள் வகுத்த புதுத் திட்டமானது, கருத்தளவிலும் தவறாயிற்று, செயல் முறையிலும் தவறாயிற்று. இந்தத் திட்டமானது பாதகத் திலேயே வளர்ந்ததென்று சொல்லுவேன்; ஏனென்றால், இந்தியர்களின் உடலையும் உணர்வையும், உயிரையுமே குன்றச்செய்யும் நோக்கத்தோடல்லவா எழுந்தது இந்தக் கல்வித் திட்டம்!

ஹிந்திப் பிரசினை

"வடக்கே ஸ்ரீநகரிலிருந்து தெற்கே கன்னியா குமரிவரையிலும், மேற்கே கராச்சியிலிருந்து கிழக்கே திப்ருகார்வரையிலும் பரந்துள்ள இந்தியாவை ஒருசேரச் சிறிது நேரம் மனதால் எண்ணிப் பாருங்கள். இந்தியர் என்ற முறையில் இவ்வாறு எண்ணுவது அவசியமல்லவா! அப்படி எண்ணும்போது, ஹிந்தி பாஷை எவ்வளவு அவசியமென்பதை உணர்ந்துகொள்வீர்கள். இவ்வாறு சேர்த்து எண்ணுவதற்கு ஹிந்தி மொழியொன்றே துணை செய்யுமென்பதையும், அதைக் கற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் கண்டுகொள்வீர்கள்."

பெங்களூரில் நடந்த கர்னாடக ஹிந்திப் பட்டமளிப்பு விழாவில், காந்திஜி பின்வருமாறு பேசினார்:

பரீட்சையில் தேறி, இன்று பட்டம் பெற்றிருப்பவர்களை நான் மனமார வாழ்த்துகிறேன். இனிமேலும் தொடர்ந்து படித்து, அவர்கள் தங்களது அறிவை மென்மேலும் பெருக்கிக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். பொதுவாக, உத்தியோகத்தில் அமர்ந்து, அதன்மூலமாகச் சம்பாத்தியம் செய்யலாம் என்பதற்காகவே, கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்கள் படிக்கிறார்கள். அதனால், பரீட்சை முடிந்ததுமே படிப்பையும் புத்தகத்தையும் அவர்கள் மறந்துவிடுகிறார்கள். அங்கே படிக்கிறவர்களில் பெரும்பாலோர் அறிவை விருத்தி செய்துகொள்வதற்காகப் படிப்பதில்லை; பட்டம் வாங்க வேண்டும் என்பதற்காகவே படிக்கிறார்கள். ஹிந்திப் பிரசார சபையின் நோக்கம், உத்தியோகம் தேடிக்கொடுப்பதன்று. எனவே, இன்று பரீட்சையில் தேறியவர்களும் பட்டம் பெற்றிருப்பவர்களும் வெறும் பட்டத்தை மட்டும் உத்தேசித்துப் படித்திருக்க மாட்டார்கள் என்பது வெளிப்படை. ஆசிரியர்களிடம் நீங்கள் எவ்வளவு படித்திருக்கிறீர்கள் என்பதைக் காட்டும்பொருட்டே, இந்தப் பட்டங்கள் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. உங்களில் சிலர் ஹிந்தி பயின்றதன் மூலம் சம்பாத்தியம் செய்யவும் கூடுமென்பது உண்மையே. ஆனால், நம்முடைய நோக்கம் அதுவன்று.

இன்று, பரீட்சையில் தேறியவர்களுள் பெரும்

பாலோர் பெண்களா யிருப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். இந்தியத் தாயின் நிலைமை பிற்காலத்தில் செம்மையா யிருக்கப் போகிற தென்பதையும், ஹிந்திப் பிரசார வேலை பிற்காலத்தில் நன்கு நடைபெறப் போகிற தென்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது. இந்தியப் பெண்கள் செய்கிற தியாகத்தையும், அவர்களுக்கு ஏற்படும் புத்துணர்ச்சியையும் பொறுத்தே, இந்தியாவுக்குக் கதிமோட்சம் ஏற்படக் கூடுமென்று நான் உறுதியாக நம்புகிறேன். புராதன காலத்தில் வாழ்ந்த இலட்சிய புருஷர்களையும் பெண்களையும் தெய்வங்களையும் குறிப்பிட நேரும்போது, பெண்களின் பெயரை முதலில் சொல்லியே ஆடவர்களின் பெயரைக் குறிப்பிடுவது வழக்கம். சீதா - ராமன், ராதா - கிருஷ்ணன் என்று சொல்லுகிறோமே யன்றி, ராமன் - சீதா, கிருஷ்ணன் - ராதா என்று நாம் சொல்லுவ தில்லை. பெண்களிடையே பேச நேர்ந்த சமயங்களி லெல்லாம் பெரும்பாலும் இந்த உண்மையை நான் எடுத்துக்காட்டுவ துண்டு. ஏதோ, ஒருவித உட்கருத்தை வைத்தே, நமது மூன்னோர்கள் பெண்களின் பெயரை முதலில் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள். பெண்களின் தொண்டு சமூகத்திற்கு எவ்வளவு முக்கிய மென்பதையும், அதற்குள்ள மதிப்பு எவ்வள வென்பதையும் உணர்ந்தே நாம் அவர்களை இவ்வாறு போற்றி வந்திருக்கிறோம். பரம்பரையாக வந்த இந்தப் பழக்கத்தை, சொல்லளவில் மட்டுமன்றி, செயலிலும் பின்பற்றுவோமாக.

ஹிந்தி, அல்லது ஹிந்துஸ்தானிதான் தேசிய பாஷையாக இருக்க முடியு மென்பதைச் சில வெளிப்படையான காரணங்களைக்கொண்டு நான் இப்போது விளக்கிக்காட்ட விரும்புகிறேன். உதாரணமாக, கன்னட தேசத்தின் எல்லைக்குள்ளே இருந்துகொண்டு, வெளியே நடக்கிற விஷயங்களில் நீங்கள் சிரத்தைகொள்ளா திருக்கிறவரையில், உங்களுக்குக் கன்னட பாஷை மட்டும் தெரிந்தால் போதுமான தாகும். ஆனால், கன்னட தேசத்திலுள்ள ஒரு கிராமத்திலே இன்று நடப்பவைகளைக் கவனித்துப் பாருங்கள். மக்களுடைய எண்ணங்கள் கன்னட தேசம் என்ற அளவோடு நின்றுவிட வில்லை; இந்தியா முழுவதையுமே ஒன்றுசேர்த்துப் பார்க்கிற மனநிலை அவர்

களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கன்னட தேசத்திற்கு வெளியே நடக்கிற காரியங்களோடும் நீங்கள் தொடர்பு பூண்டிருக்கிறீர்கள். அந்தத் தொடர்பைச் செயல்முறை யில் பயன்பெறச் செய்வதற்கு, பொது மொழி ஒன்று அவ சியம் இருந்தாக வேண்டும். சிந்து மாகாணத்தி லிருந்தும் ஐக்கிய மாகாணத்திலிருந்தும் வருபவர்களோடு, கன்னடம் பேசுகிற ஒருவர் பொது மொழி ஒன்றில்லாமல் எப்படித் தொடர்புகொள்ளமுடியும்! ஆங்கிலத்தைப் பொது மொழியாக வைத்துக்கொண்டால் போகிறது என்று நம் மவர்களில் சிலர் சொன்னதுண்டு; இப்போதும் சிலர் அப்படிச் சொல்லக் கூடும். எதோ, சில ஆயிரம் பேர்தான் நம்மவர்களில் ஆங்கிலம் படித்திருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் ஆங்கில மொழியே பொது மொழியா யிருந்தால் போதுமான தாகும். ஆனால், இந்த ஏற்பாடு உங்களுக்குத் திருப்தி அளிக்கா தென்பது நிச்சயம். இந்தி யாவில் கோடிக்கணக்கான மக்கள் பல மாகாணங்களில் வசித்து வருகிறார்கள். அவர்கள் ஒருவருக் கொருவர் தொர்டர்புவைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; நீங்களும் அப்படியே விரும்புவீர்கள். இன்னும் பல தலைமுறைகள் நாம் படித்தாலுமே, எல் லோருக்கும் பொது மொழியாக, ஆங்கிலத்தை ஆக்கிக் கொள்ளலாம் என்பது இயலாத காரியம். எல்லோருமே ஆங்கிலத்தைப் படிக்க வேண்டிய அவசியம் என்னவோ, எனக்குத் தெரிய வில்லை. அப்படியே படிப்பதாக வைத்துக்கொண்டாலும், சம்பாத்தியம் செய்ய ஆங்கிலம் உதவு மென்ற நிச்சயமாவது உண்டா? ஆங்கிலம் படிப்ப தால் சம்பாத்தியம் செய்ய முடியு மென்று சிலர் எண்ணுகி றார்கள். அப்படியே சம்பாதிக்க முடியு மென்று வைத்துக் கொண்டாலும், ஆங்கிலத்தை எல்லோருமே படித்துவிட் டால் அதற்குள்ள மதிப்பு வரவரக்குறைந்துவிடாதா? தவிர ஆங்கிலம் படிப்பதில் எவ்வளவோ கஷ்டங்க ளிருக்கின் றன; ஆனால், ஹிந்தி-ஹிந்துஸ்தானி படிப்பதில் அவ்வளவு சிரம மில்லை. ஆங்கிலம் படிப்பதற்கு நீண்டகாலமாவது போல, ஹிந்தி படிப்பதற்கு ஆகாது. ஹிந்தி-ஹிந்துஸ்தானி பேசுகிறவர்கள், ஹிந்துக்களும் முஸ்லிம்களுமாக, இருபது கோடிக்குமேல் இருக்கிறார்கள். கன்னடம் பேசுகிறவர்கள்,

ஆண்களும் பெண்களுமாக இப்போது ஒரு கோடிக்குச் சற்று அதிகமாக [110லட்சம்] இருக்கிறார்கள். தங்களுடைய சகோதர சகோதரிகளா யுள்ள இருபது கோடி மக்கள் பேசுகிற பாஷையைக் கற்க வேண்டு மென்கிற ஆசை இந்தக் கன்னட தேச மக்களுக்கு இல்லாமலா போய்விடும்? மேலும், ஹிந்தி மிக எளிதாகக் கற்கக் கூடியதுதானே? லேடி ராமன் [ஸர். சி. வி. ராமன் மனைவியார்] பேசிய ஹிந்திப் பேச்சை ஒருவர் கன்னடத்தில் மொழிபெயர்த்துச் சொல்ல நீங்கள் இப்போது கேட்டீர்கள். மொழி பெயர்த்துச் சொன்னவர் அனேக ஹிந்திச் சொற்களை அப்படியே உபயோகித்தார். **பிரேமா, பிரேமி, சங்கம், சபை, அத்தியக்ஷகர், பாதம், ஆனந்தம், பக்தி, ஸ்வாகதம், அத்தியக்ஷதம், சம்மேளனம்** போன்ற சொற்கள், கன்னடத்திற்கும் ஹிந்திக்கும் பொதுவாகவே இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். லேடி ராமன் பேசியதை ஒருவர் இப்போது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லுவதானால், மேலே சொன்ன சொற்களை யெல்லாம் அப்படியே அவர் கையாண்டிருக்க முடியுமா? ஒருக்காலும் முடியாது. இந்தச் சொற்களுக்கு நேரான ஆங்கிலச் சொற்கள் கேட்பவர்களுக்கு என்றும் கேளாத புதிய சொற்களாகவே இருக்கும். இதை யெல்லாம் பார்க்கும்போது,ஹிந்தி பாஷையை எளிதாய்க் கற்றுக்கொண்டுவிடலாம் என்று தோன்றவில்லையா? ஹிந்தி கற்பது கஷ்டமானது என்று கன்னட சகோதரர்கள் சொல்லும்போது, எனக்குக் கோபமும் ஆத்திரமும் மட்டும் உண்டாக வில்லை, சிரிப்புங்கூட வந்துவிடுகிறது. தினமும் கொஞ்ச நேரம் பயின்றால், ஒரு மாதத்தில் நிச்சயமாய் ஹிந்தியைக் கற்றுவிடலாம். எனக்கு இப்போது வயது 67. நான் இன்னும் அதிக நாள் இருக்கப் போவதில்லை. அப்படி இருந்தும், இந்தக் கன்னட மொழி பெயர்ப்பைக் கேட்டபோது, தினமும் கொஞ்ச நேரம் படித்தால், ஏழெட்டு நாட்களில் கன்னடத்தைக் கற்றுவிடலா மென்று எனக்குத் தோன்றிற்று. கனம் சீனிவாச சாஸ்திரியாரையும் என்னையும் போன்ற சிலர் நீங்கலாக, இங்குள்ள நீங்க ளனைவரும் இளைஞர்கள். ஹிந்தியைக் கற்றுக்கொள்ளுவதற்கு, ஒரு நாளைக்கு நான்கு மணிவீதம் நீங்கள் ஒரு மாதம் செலவு செய்தால் போதும். இதற்கு

வேண்டிய உற்சாகமும் ஊக்கமும் உங்களிடம் இல்லாமலா போய்விட்டன? நமது நாட்டிலிருக்கும் இருபது கோடி மக்களோடு தொடர்புவைத்துக்கொள்ளுவதற்காகக் கொஞ்ச நேரம் ஒரு பாஷையைக் கற்பது வீணென்று கருதுகிறீர்கள்? இருக்கட்டும். உங்களில் ஆங்கிலம் தெரியாதிருக்கும் சிலர், ஆங்கிலம் கற்க எண்ணியதாக வைத்துக்கொள்ளுவோம். நாள் ஒன்றுக்கு நான்கு மணிநேரம் செலவிட்டு, ஒரு மாதத்திலேயே, ஆங்கிலத்தைக் கற்றுவிடலாம் என்ற நம்பிக்கை இங்கிருப்பவர்களில் யாருக்காவது உண்டா? இருக்க முடியாது. தென் இந்தியாவிலுள்ள நான்கு பாஷைகளிலும் சம்ஸ்கிருதச் சொற்கள் நிறையக் கலந்திருக்கின்றன; ஆகையால்தான் ஹிந்தியைக் கற்றுக் கொள்ளுவது நமக்கு மிகமிக எளிதாயிருக்கிறது. பண்டைக் காலத்தில் தென் இந்தியாவிற்கும் வட இந்தியாவிற்குமிடையே சம்ஸ்கிருத பாஷை மூலமாகவே சம்பந்தமிருந்து வந்த தென்பதைச் சரித்திர வாயிலாக அறிகிறோம். இன்றைக்கும் தென் நாட்டிலுள்ள சாஸ்திரிகள் வட நாட்டிலுள்ள சாஸ்திரிகளுடனே, சம்ஸ்கிருத பாஷை மூலமாகவே சர்ச்சை செய்கிறார்கள். நம் நாட்டிலுள்ள வெவ்வேறு மொழிகளுக்குள் இருக்கும் வித்தியாச மெல்லாம் பெரும்பாலும் இலக்கணம் பற்றிய வித்தியாசங்களே. வட இந்திய மொழிகளுக்குள்ளே, இலக்கண அமைப்புங்கூட ஒத்தே யிருக்கிறது. ஆனல், தென் இந்திய மொழிகளில் இலக்கண வித்தியாசம் அதிகம்; சம்ஸ்கிருத பாஷையின் கலப்பு ஏற்படு முன்னர், அவற்றின் சொற்களிலும் பெருத்த வித்தியாசம் இருந்தது. ஆனல், இப்போது தென் இந்திய மொழிகளில் சம்ஸ்கிருதச் சொற்கள் மிகுதியாகக் கலந்துவிட்டன. இதனலே தென் இந்தியாவில் பிரயாணம் செய்யும்போது, பாஷை சம்பந்தமாக, எனக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுகிற தில்லே. கன்னடம், தெலுங்கு, மலேயாளம், தமிழ் இந்த நான்கு பாஷைகளில் ஒன்றில் யாரேனும் பேசினல், பேசியதன் சாராம்சத்தை எளிதில் புரிந்துகொள்ளுகிறேன்.

இனி, நமது முஸ்லிம் நண்பர்களேப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்ல வேண்டும். அவர்கள் வசித்து வரும் மாகாணத்தில் வழங்கும் பாஷை அவர்களுக்கு இயல்

பாகவே தெரிந்திருக்கும். அதோடு உருது பாஷையும் தெரியும். ஹிந்திக்கும், அல்லது உருது - ஹிந்துஸ்தானிக்கும் வித்தியாசமே இல்லை. இலக்கணமோ, இரண்டிற்கும் பொது. எழுத்திலேதான் இரண்டிற்கும் வித்தியாசம். பார்க்கப்போனல், இந்தப் பெயர்கள் மூன்றும் ஒரே பாஷையைத்தான் குறிப்பிடுகின்றன. இவற்றின் அகராதிகளைப் புரட்டிப்பார்த்தால், பெரும்பாலான சொற்கள், ஒன்ருகவே இருப்பதைக் காண்போம். ஆகவே, எழுத்தைத் தவிர வேறு ஒரு கஷ்டமும் இருக்கிறதாகத் தெரியவில்லை. அதுவும் காலக்கிரமத்தில் தானே சரிப்பட்டு விடும்.

தொடக்கத்தில், ஹிந்திதான் தேசிய பாஷையாக இருக்க முடியு மென்று சொன்னேன். வடக்கே ஸ்ரீநகரிலிருந்து தெற்கே கன்னியா குமரிவரையிலும், மேற்கே கராச்சியிலிருந்து கிழக்கே திப்ருகார்வரையிலும் பரந்துள்ள இந்தியாவை ஒருசேரச் சிறிது நேரம் மனதால் எண்ணிப்பாருங்கள். இந்தியர் என்ற முறையில் இவ்வாறு எண்ணுவது அவசிய மல்லவா? அப்படி எண்ணும் போது, ஹிந்தி பாஷை எவ்வளவு அவசியம் என்பதை உணர்ந்துகொள்ளுவீர்கள். இவ்வாறு சேர்த்து எண்ணுவதற்கு ஹிந்தி மொழி யொன்றே துணை செய்யும் என்பதையும், அதைக்கற்றுக்கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் கண்டுகொள்ளுவீர்கள். இந் நாட்டுப் பொது மொழியாக ஆங்கிலம் இருக்க முடியாதென்பதையும் உங்களுக்கு எடுத்துக்காட்டினேன். ஆங்கில பாஷை மீது எனக்கு வெறுப்பில்லை. சில அறிவாளிகளுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டியது அவசியந்தான்; எல்லா நாடுகளோடும் தொடர்புவைத்துக்கொள்ளவும், மேலை நாட்டுச் சயன்ஸ் ஆராய்ச்சிகளைத் தெரிந்துகொள்ளவும், ஆங்கிலப் பயிற்சி இன்றியமையாததுதான். அளவிற்கு மிஞ்சி ஆங்கிலத்திற்குப் பிரதானம் கொடுக்கச் சிலர் முயல்வதைக் கண்டே, எனக்கு மிகவும் வருத்த முண்டாகிறது. இம் முயற்சி தோல்வியுறும் என்பதில் சந்தேகமே இல்லை. அததற்குத் தகுந்த இடத்திலேதான், அதது சோபிக்க முடியும்.

ஹிந்தி பாஷையைக் கற்றுக்கொடுப்பதனல், கன்னட

பாஷையின் வளர்ச்சி குன்றிப்போகுமென்றும், கன்னட பாஷைக்குரிய ஸ்தானத்தில் ஹிந்தி வந்து அமர்ந்து கொள்ளும் என்றும் சிலர் அஞ்சுகிறார்கள். இதை வீண் கலவரமென்றே நான் சொல்லுவேன். பிறமொழிகளின் ஸ்தானத்தில் ஹிந்தி அமர்ந்துவிடும் என்பதற்கு மாருக, ஹிந்தியால் நன்மையே ஏற்படும் என்று சொல்ல வேண்டும். ஹிந்தியைப் பரப்பப் பரப்ப, மற்ற மொழிகள் வளரவும் சக்தி பெறவும் நாம் உதவி செய்தவர்களாகிறோம். பல மாகாணங்களிலிருந்து பெற்ற சொந்த அனுபவத்திலிருந்தே நான் இதைச் சொல்லுகிறேன்.

எழுத்தைப்பற்றி ஒரு வார்த்தை. நான் தென் ஆப்பிரிக்காவில் இருந்த காலத்திலேயே, சம்ஸ்கிருதத்திலிருந்து வந்த பாஷைகள் யாவற்றையும் தேவநாகரி லிபியைக் கொண்டே எழுதுவது நல்லதென்ற முடிவுக்கு வந்தேன். திராவிட பாஷைகளையுங்கூட, தேவநாகரி லிபியின் மூலமாகவே எளிதாய்க் கற்றுக்கொண்டுவிடலாம் என்பது என் நம்பிக்கை. தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியவற்றை அந்தந்த மொழிக்குரிய லிபியைக் கொண்டே நான் சில நாள் படித்துவந்தேன். லிபிகள் நான்கையும் தனித்தனியே கற்பது எனக்கு மிகவும் சிரமத்தைத் தந்தது. நான்கு மொழிகளுக்கும் லிபி ஒன்ருயிருந்திருக்குமாளுல், எவ்வளவோ குறுகிய காலத்திற்குள் அவற்றை நான் படித்திருக்க முடியும். இந்தப் பாஷைகளைப் படிக்க, என்னைப்போல் ஆவலோடிருக்கிறவர்களுக்கு, லிபியினுல் ஏற்படுகிற கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. தென் இந்தியாவில் இப்போது நான்கு பாஷைகள் இருக்கின்றன. இவை நான்கிற்கும் தேவநாகரி லிபியைக் கையாண்டால், ஒரு பாஷை தெரிந்தவர்கள் மற்ற மூன்று பாஷைகளையும், அந்த லிபியைக்கொண்டே, மிக எளிதாகக் கற்றுக்கொண்டுவிடலாம். ஹிந்தியைத் தேசிய பாஷையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற விஷயத்தையும், எல்லாப் பாஷைகளுக்கும் லிபி பொதுவாயிருக்கலாமென்றவிஷயத்தையும், சேர்த்துக்குழப்பவேண்டாம். இந்திய மொழிகள் யாவற்றையும் கற்க ஆசைப்படுகிறவர்களுக்கு ஏற்படும் கஷ்டத்தை விளக்கிக்காட்டுவதற்காக இதை இங்கே குறிப்பிட்டேனேயன்றி வேறில்லை.

ஆங்கில மொழிக்குரிய ஸ்தானம்

> "ஏதோ நாகரிக சமூகத்திலே பழகுவதற்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்ற உணர்ச்சியைச் சிறுவர் சிறுமியருக்கு நாம் ஊட்டுதல் கூடாது. இந்த உணர்ச்சியை ஊட்டுவது, இந் நாட்டு ஆண்குலத்துக்கும், அதனிலும் முக்கியமாக, பெண் குலத்துக்கும் தீங்கிழைப்ப தாகும்."

நாம் இப்போது கேவலமான அடிமைநிலையில் இருக்கிறோம். இதைவிட்டுச் சம அந்தஸ்தை அடைகிற வரையிலும்—அதாவது, அன்னிய ஆட்சியிலிருந்து விடுபட்டு, நம் காரியங்களை நாமே சாதித்துக்கொள்ளும் நிலைமை ஏற்படுகிற வரையிலும்—ஆங்கிலம் படிப்பதை நிறுத்திவிட வேண்டும் என்று மாணவர்களுக்குப் போதித்து வந்திருக்கிறேன். ஹிந்தி படிக்க வேண்டுமென்றுசொல்லுவதோடுகூட, இதையும்சேர்த்தேசொல்லி வந்திருக்கிறேன். சுயராஜ்யம் அடைவதற்கு எவை உதவியா யிருக்கின்றனவோ, அவற்றை எல்லாம் செய்ய நாம் முற்பட வேண்டும். சுயரார்ஜ்யம் அடைவதற்கான முயற்சிக்கு எதெது துணை செய்யாதோ, எதெது தடையா யிருக்குமோ, அவற்றை எல்லாம் நாம் நிறுத்த வேண்டும். ஆங்கில பாஷைப் பயிற்சியை அதிகமாக்கிக்கொள்ளுவதனாலே, சுயராஜ்யம் நமக்கு விரைவாய் வந்துவிடாது; அதனால் தடைகள் ஏற்படுவது ஓரளவு நிச்சயம். ஆங்கில அறிவு வளர வளர, சுயராஜ்ய இயக்கத்திற்கே ஆபத்து நேரிடுவது உண்மை என்பதைப் பல துறைகளிலும் நேராகப் பார்த்துவருகிறோம். ஆங்கிலச் சொற்களின் இன்னிசையை நமது காதுகள் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும்; நாவோ, ஆங்கிலத்தையே உச்சரிக்க வேண்டும்; அப்போதுதான் நமக்கு விடுதலை யுணர்ச்சி ஏற்படும் என்று பலர் நம்புகிறார்கள். இது வெறும் மயக்கம்; இதில் உண்மை யிருக்குமானால், சுயராஜ்யம் ஒருபோதும் நமக்குக் கிடைக்கப்போவ தில்லை. வியாபாரத் துறையிலே எல்லாத் தேசங்களுக்கும் பொதுவான மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது; அரசியல் துறைக்கும் அதுவே ஏற்றது. மேலும், ஆங்கில மொழியில் இலக்கிய வளமும் உண்டு. ஆங்கிலம் படிப்பதன் மூலமாக மேலைநாட்டா

ரின் சிந்தனைகளையும் பண்பாட்டையும் தெரிந்துகொள்ள லாம். ஆகவே, நம்மில் சிலருக்கு ஆங்கிலம் தெரிந்திருப் பது அவசியந்தான். நாட்டுக்குரிய வர்த்தகம், சர்வதேச அரசியல் ஆகிய துறைகளுக்குரிய காரியங்களை நடத்த ஆங்கிலம் உதவலாம். இது மட்டு மல்ல; மேலைநாட்டாரின் இலக்கியம், சயன்ஸ், சிந்தனைகள் ஆகியவற்றில் காணப் படும் சிறந்த அம்சங்களை ஆங்கிலத்தின் மூலமாக நாம் அறிந்துகொள்ளலாம். இப்படி ஆங்கிலத்தை உபயோகிப் பதுதான் நியாயமான முறை. ஆனல், நமது தாய்மொழி நம் இதயத்தில் வகித்துவந்த உன்னதமான ஸ்தானத்தை ஆங்கில மொழி கவர்ந்துகொண்டு, தாய்மொழியை அது வெளியே துரத்திவிட்டது. ஆங்கிலேயரும் நாமும் சம நிலையில் பழகாமையால், இயல்பாக இருக்க வேண்டிய நிலையைவிட மேலான நிலையை ஆங்கில மொழிக்கு நாம் கொடுத்துவிட்டோம். எவ்வளவு நுணுக்கமான விஷ யத்தையும் ஆங்கிலப் பயிற்சி இன்றியே ஆராயுந் திறன் இந்தியர்களுக்கு இருக்க வேண்டும். ஏதோ நாகரிக சமூ கத்திலே பழகுவதற்கு ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்ற உணர்ச்சியைச் சிறுவர் சிறுமியருக்கு நாம் ஊட்டு தல் கூடாது. இந்த உணர்ச்சியை ஊட்டுவது, இந்நாட்டு ஆண்குலத்துக்கும், அதனிலும் முக்கியமாக, பெண்குலத் துக்கும் தீங்கிழைப்ப தாகும். இவ்வளவு இழிவான எண் ணத்தை நாம் பொறுத்துக்கொண் டிருத்தல் முடியாது. சுயராஜ்யம் அடைவதிலுள்ள முக்கியமான அம்சங்களில், ஆங்கில மோகத்தைப் போக்குவதும் ஒன்றாகும்.

ஆங்கிலப் படிப்பு

"பிள்ளைகளுக்குப் பெற்றோர் எழுதும்போதும், மனைவியருக்குக் கணவன்மார் எழுதும்போதும், தாய்மொழியில் எழுதாமல், ஆங்கிலத்தில் எழுதுவதைச் சிறிதுகூட என்னால் சகிக்க முடியவில்லை."

அரசியலில் ஏதோ மதிப்பு இருக்கிறது என்பதற்காகவும், வியாபாரத் துறைக்கு உதவியாய் இருப்பதை உத்தேசித்தும், ஆங்கிலத்தைப் படித்து வருகிறார்கள். ஆங்கிலப் படிப்பின்றி உத்தியோகம் கிடைக்காதென்று நமது இளைஞர்கள் எண்ணுகிறார்கள். இப்போதுள்ள நிலைமையில் இது உண்மைதான். ஆங்கிலம் படிக்கவைத்தால் கல்யாணம்செய்துகொடுப்பது எளிது என்றெண்ணி, பெற்றோர், பெண் குழந்தைகளை ஆங்கிலம் படிக்கவைக்கிறார்கள். ஆங்கிலேயரோடு பேசுவதற் கென்றே ஆங்கிலம் படிக்க விரும்பிய பெண்களும் உண்டு. மனைவியர் தங்களோடும் தங்கள் நண்பர்களோடும் ஆங்கிலத்தில் பேச முடியவில்லையே என்பதற்காக வருந்திய கணவன்மாரும் உண்டு. இவர்களை நான் நேரில் அறிவேன். ஆங்கிலத்தைத் தாய்மொழியாக்கிவிட எண்ணி, அனேக குடும்பத்தினர் ஆங்கிலத்தையே பேசிவருவதைப் பார்த்திருக்கிறேன். ஆங்கிலப் பயிற்சி யின்றி இந்திய சுதந்திரம் சாத்திய மில்லை என்று நூற்றுக்கணக்கான இளைஞர்கள் நம்புகிறார்கள். இக்கொடிய நோயானது, கல்வி என்றால் ஆங்கிலம்படிப்பது தான் என்கிற அளவுக்குப் பரவி, சமூகத்தின் உடலையே அரித்துவிட்டது. இவை யாவும், நமது அடிமைத்தனத்தையும் இழிந்த நிலையையுமே எடுத்துக்காட்டுகின்றன வென்பது வெளிப்படை. நமது தாய்மொழிகளைப் படுத்தி வைக்கிற பாட்டையும், அவற்றை வளரவொட்டாமல் நசுக்கி வைத்திருக்கிற நிலையையும் நோக்கும்போது, என் உள்ளம் பதைக்கிறது. பிள்ளைகளுக்குப் பெற்றோர் எழுதும்போதும், மனைவியருக்குக் கணவன்மார் எழுதும்போதும், தாய்மொழியில்எழுதாமல், ஆங்கிலத்தில் எழுதுவதைச் சிறிதுகூட என்னால் சகிக்க முடியவில்லை.

என்னுடைய வீட்டில் யாரும் நுழையாதபடி சுற்றிச்

சுவரெழுப்ப வேண்டு மென்றோ, சன்னல்களில் காற்றுப் புகாதபடி, சாமான்களைத் திணித்து அடைத்துவிட வேண்டு மென்றோ நான் விரும்புவ தில்லை. உலகத்திலுள்ள பல் வேறு கலைகளும் நாகரிகமும் யாதொரு தடங்கலுமின்றி, என்னைச் சுற்றி வழங்கிவர வேண்டு மென்றே நான் விரும் புகிறேன். ஆனால், எனக்குச் சொந்தமான கலையுணர்ச்சி யையும் பண்பாட்டையும் மற்றொன்று வந்து அழித்துவிடு வதை நான் பார்த்துக்கொண் டிருக்க முடியாது. கள்ளன் போலவும், பிச்சைக்காரன் போலவும், அடிமை போலவும் இன்னொருவர் வீட்டிலிருந்து வாழ, நான் ஒருக்காலும் சம் மதியேன். அசட்டுத்தனமான கௌரவத்திற்காகவோ, சமூகத்தில் ஏதோ சௌகரியம் ஏற்படும் என்பதற்கா கவோ, நமது சகோதரிகள் ஆங்கிலம் படிப்பதையும், அதற் காகக் கஷ்டப்படுவதையும் நான் விரும்பவில்லை. இலக்கிய உணர்ச்சியில் ஈடுபட்ட நமது இளைஞர்களும் இளம் பெண் களும், ஆங்கில மொழியையும் உலகிலுள்ள வேறு மொழி களையும் எவ்வளவு வேண்டுமானாலும் படிக்கட்டும்; படித்து, படித்ததன் பயனை இந்தியாவுக்கும் உலகுக்கும் பயன் படும் முறையில், ஜகதீஸ் சந்திரபோஸ் போலவும், பி. ஸி. ரே போலவும், தாகூர் போலவும் அள்ளி வழங்கட்டும். இந்தநிலைமையையே நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன். ஆனால், சிலர் தாய்மொழியை மறந்து, அதைப் புறக்கணிப் பதோடு நில்லாமல், 'இந்த மொழிக்குரிய சமூகத்தில் நாம் பிறந்தோமே!' என்று வெட்கப்படவும் செய்கிறார்கள்; சிறந்த கருத்துக்களைத் தாய்மொழியிலேயே சிந்தனை செய்யவும், சிந்தித்தவற்றை வெளியிடவும் முடியா தென்று நினைக்கிறார்கள். இப்படி நினைப்பது சரியே அல்ல. என்னு டைய சமயம், சிறைச்சாலைபோல, மற்றவர்களை வெளியே ஒதுக்கும் சமயமன்று; அதன் வாயில் எப்போதும் திறந்தே கிடக்கும். இறைவன் படைப்பிலே மிகத் தாழ்ந்த உயிர்க் கும் அங்கு இடமுண்டு; ஆனால், இறுமாப்பு, சாதித்திமிர், நிறத்திமிர், மத விரோதம் ஆகியவற்றுக்கு அங்கு இடமே கிடைக்காது.

அன்னிய மொழியால் வந்த அவகேடு

"அன்னிய ஆட்சியால் நம் நாட்டிற்கு விளைந்த கேடுகள் பல. அவற்றில், அன்னிய மொழியாகிய ஆங்கில மொழியை வலிந்து புகுத்தி, நமது இளைஞர்கள் இழிந்த நிலையடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களை ஆங்கிலம் படிக்கச் செய்திருப்பதும் ஒன்று. அன்னிய ஆட்சியின் பயனாய் இந்தியாவில் விளைந்துள்ள மிகப் பெரிய கேடுகளில் இதையும் ஒன்றாகச் சரித்திரம் சொல்லப் போகிறது."

ஐதராபாத் சமஸ்தானத் தலைமைக் கல்வி அதிகாரி நவாப் மஸூத் ஜங் பகதூர், பெண்களுக்குரிய கார்வே சர்வ கலாசாலையில், சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது, தாய்மொழி மூலமாகவே கல்வி போதிக்க வேண்டுமென்பதை மிகுந்த உற்சாகத்தோடும் உணர்ச்சியோடும் அவர் வற்புறுத்திச் சொன்னார். அவருடைய கருத்துக்கு, **டைம்ஸ் ஆப் இந்தியா** என்னும் ஆங்கிலேயர் பத்திரிகை மறுப்பு எழுதியிருக்கிறது. அது சம்பந்தமாக என் கருத்தைத் தெரிவிக்கும்படி கேட்டு, எனது நண்பரொருவர் அந்தப் பத்திரிகையிலிருந்து சில பகுதிகளை எனக்கு அனுப்பியிருக்கிறார். அவை வருமாறு :

"உயர்ந்த விஷயமாகவும் பயன் தரத்தக்கதாகவும் இந்தியர் எழுதி வருகிறார்கள் என்பது உண்மையே. அதெல்லாம் மேலைநாட்டுக் கல்வியைக் கற்றதனால் ஏற்பட்டதே ஒழிய வேறில்லை......சென்ற அறுபது ஆண்டுகளாக - என், நூறு ஆண்டுகளாகவே - ராஜா ராம் மோஹன்ராய்முதல் மகாத்மா காந்திவரையும், எடுத்துச் சொல்லக் கூடியதாக ஏதாவது சாதித்திருந்தார்களேயானால், எந்தத் துறையிலானாலும் சரி, அவ்வளவும் ஆங்கிலக் கல்வி கற்றதனாலேயே ஏற்பட்டது. இப்படி ஏற்பட்ட விழிப்புக்குக் காரணம் சில விஷயங்களில் வெளிப்படையாய் இருக்கலாம்; வேறு சில விஷயங்களில் மறைமுகமாக இருக்கலாம்."

இந்த மேற்கோளிலே, மேலைநாட்டு நாகரிகத்தினால் நம்மவர்கள் பயனடைந்தார்கள் என்று அந்தப் பத்திரிகை கூறுகிறதே யன்றி, உயர்தரக் கல்வி அனைத்தையும் ஆங்கிலத்தில் போதித்ததனால் விளைந்த பயன் என்று அது கூறவில்லை. மேலைநாட்டு நாகரிகம் நமக்கு அவ்வளவு

முக்கியமல்லவென்றும், அதனால் பயன் விளையவேயில்லையென்றும் நவாப் பகதூரோ, மற்ற யாருமோ மறுத்துப் பேசவில்லை. இந்தியப் பண்பாட்டை, மேலைநாட்டு நாகரிகம் என்ற பலிபீடத்தில் பலிகொடுப்பதை மட்டுந்தான் ஆட்சேபித்தார்கள். கீழைநாட்டு நாகரிகத்தைவிட மேலைநாட்டு நாகரிகம் சிறந்ததென்று நிரூபிக்க முடியுமென்றே வைத்துக்கொள்ளுவோம். அப்படி நிரூபிக்க முடிந்தபோதிலும், மேலைநாட்டு நாகரிகத்தை இந்தியாவில் புகுத்த வேண்டிய அவசியமில்லை. பிற்காலத்தில் சிறந்து விளங்க வேண்டிய இந்தியச் சிறுவர் சிறுமியரை மேலைநாட்டு நாகரிக முறையிலே பயிற்றுவது, இந்தியா முழுவதுக்குமே கேடுபயப்பதாகும். அதனால், அவர்கள், தங்கள் நாட்டுக்குரிய சிறப்பியல்புகளை யெல்லாம் இழந்தவர்களாய், பொதுமக்களிடமிருந்து வேறாகித் தனியே போய்விடுகிறார்கள்.

மேலைநாட்டு நாகரிகமென்னும் தீயசுழலில் அகப்பட்டிருந்தும், தங்களுக்கு இயல்பாயுள்ளதொரு பண்பாட்டை நழுவவிடாமல் கைக்கொண்டிருந்த காரணத்தினாலேயே, மேற்கோளில் குறிப்பிட்டவர்களுக்குப் பொதுமக்களிடையே செல்வாக்கு இருந்தது. மேலைநாட்டுப் பண்பாடு கலந்திராவிட்டால், தங்களுக்கு இயல்பாயுள்ள பண்பாட்டினால் பெறக்கூடிய சிறந்த நன்மைகளை யெல்லாம் மேலே சொன்னவர்கள் அடைந்திருக்கக் கூடும்; அவற்றைப் பூரணமாக அவர்கள் அடைய முடியாதபடி மேலைநாட்டுப் பண்பாடுதான் தடை செய்துவிட்டது. இந்தத் தடை காரணமாகவே, அதை நான் ஒரு தீயசுழல் என்று குறிப்பிட்டேன். என்னைப் பொறுத்தவரையில், மேலைநாட்டுப் பண்பாட்டிற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருப்பது உண்மையென ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், எனது நாட்டினருக்கு என்னால் இயன்ற அளவு நான் செய்துள்ள பணியை, மேலைநாட்டுப் பண்பாட்டின் உதவிகொண்டு நான் செய்யவில்லை என்பது நிச்சயம்; கீழைநாட்டுப் பண்பாட்டிலே எந்த அளவுக்கு நான் தோய்ந்திருந்தேனோ அந்த அளவுக்குத்தான் என்னால் தொண்டு செய்ய முடிந்தது. ஆங்கிலேயர் போல நடிப்பவனாய், இந் நாட்டின் சிறப்பியல்புகளை யெல்லாம் இழந்தவனாய், பொதுமக்க

ஙைப்பற்றி யாதொன்றும் அறியாமலும், அறிய விரும்பாமலும் இருப்பவனாய், அவர்களுடைய நடை, உடை, பாவனைகளையும் கருத்துக்களையும் ஆர்வத்தையும் இகழ்ந்து ஒதுக்குபவனாய் இருந்திருப்பேனாயின், பொதுமக்கள் சம்பந்தப்பட்டவரையில், நான் ஒன்றுக்கும் உதவாதவனாகத்தான் இருந்திருப்பேன். சொந்தப் பண்பாட்டிலேயே தோய்ந்து வேரூன்றி நிற்க இயலாத நிலையில், இந்த நாட்டுக்குப் பொருத்தமில்லாத அன்னிய நாகரிகம் ஒன்று வந்து மக்களைப் பற்றிக்கொள்ளுவதினால், நன்மை எதுவும் விளையப் போவதில்லை. தன்னளவிலே அது எவ்வளவோ நல்லதாயிருக்கலாம்; ஆயினும், நாம் அதைத் தடுத்தே தீரவேண்டியிருக்கிறது. இப்படித் தடுக்கும் முயற்சியிலே நமது மக்களின் சக்தி எவ்வளவோ வீணாய்ப் போகிறது! அதனால், தேசத்திற்கு ஏற்படும் நஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல.

இதே விஷயத்தை வேறொரு வகையில் பார்ப்போம். சைதன்னியர், குரு நானக், கபீர், துளசிதாஸ் முதலிய எத்தனையோ சீர்திருத்தக்காரர்கள் நம்மில் இருந்திருக்கிறார்கள்; எவ்வளவோ அரும்பெரும் செயல்களை இவர்கள் சாதித்திருக்கிறார்கள். செம்மையாய் நடத்தும் ஆங்கிலப் பள்ளிக்கூடம் ஒன்றில் சிறுபிராயத்திலிருந்தே படித்திருப்பார்களானால், அதற்கு மேலாக அவர்கள் என்னத்தை அதிகமாகச் சாதித்து இருப்பார்கள்? இந்தப் பெரிய சீர்திருத்தக்காரர்கள் சாதித்திருப்பதைவிட அதிகமாகவா மேற்சொன்ன கட்டுரையில் குறித்தவர்கள் சாதித்துவிட்டார்கள்? தயானந்தர் இந்தியச் சர்வகலாசாலையொன்றில் படித்து எம். ஏ. பட்டம் பெற்றிருப்பாராயின், ஏற்கனவே செய்திருப்பதைக் காட்டிலும் அதிகமாக ஏதாவது செய்திருப்பாரா? சிவாஜி என்ற மகாராஷ்டிர வீரர் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்து, சாதாரண மனிதரைப்போலவே இருந்து, பேராபத்துக்களையெல்லாம் எதிர்த்து நின்றார். அவருடைய புகழ் எங்குமே பரவியிருந்தது. இப்போது நம்மிடையே எத்தனையோ ராஜாக்களும் மகாராஜாக்களும் இருக்கிறார்கள். அவர்கள் சுகபோக வாழ்க்கையில் வாழ்கிறார்கள்; பேசுவதெல்லாம் ஆங்கிலந்தான்; சிறுபிராயத்திலிருந்தே மேலைநாட்டு முறைகளிலே

ஊறித்திளைக்கிறார்கள். இப்படியெல்லாம் இருந்தும் சிவாஜி பெயரைச் சொன்ன வாயால் இந்த மகாராஜாக்களின் பெயரைச் சொல்ல முடியுமா? பயமென்பதையே அறியாத பிரதாப சிம்மனைக் காட்டிலுமா இவர்கள் சிறந்த அரசர்கள்? அதுதான் போகட்டும். மேலைநாட்டுப் பண்பாட்டின் சிறப்பியல்புகளையாவது இவர்களிடம் காண முடிகிறதா? இல்லையே! ரோமாபுரி தீப்பற்றி எரிந்த போது, அந்தத் தேசத்தை ஆண்ட மன்னனான நீரோ உல்லாசமாகப் பிடில் வாசித்துக்கொண் டிருந்தானாம்! அவனைப் போலவே, இந்த ராஜாக்களும் மகாராஜாக்களும், தங்கள் நாடு இந்த நிலையிலிருக்கும்போது,லண்டன் நகரிலும் பாரிஸ் நகரிலும் இருந்துகொண்டு உல்லாசமாகப் பொழுதுபோக்கி வருகிறார்கள். மேலைநாட்டுப் பண்பாடு அவர்களுக்குப் பெருமை தருவதாக இல்லை. இவர்கள் கொண்ட நாகரிகமானது, சொந்த நாட்டிலேயே இவர்களை அன்னியர்கள் ஆக்கிவிட்டது. மேலதிகாரிகளாயிருக்கும் ஆங்கிலேயர் இந்த ராஜாக்களை இப்படி ஆட்சி செய்யும்படி விட்டுவைத்திருக்கிறார்கள். தங்கள் குடிகளுக்கேற்படும் இன்ப துன்பங்களில் தாங்களும் பங்குகொண்டு ஆட்சிசெய்ய வேண்டியதிருக்க, அப்படிச் செய்யாது ஐரோப்பாவுக்குச் சென்று, அங்கு, தங்கள் குடிகள் பாடுபட்டு உற்பத்தி செய்துதந்த பொருளைமட்டுமன்றி, தங்கள் ஆத்மாவையுமேபாழ்படுத்திக்கொள்ளுகிறார்கள்;இதுதான் இவர்கள் மேலைநாட்டுப் பண்பாட்டினால் கற்றுக்கொண்ட பாடம். இதிலேஇவர்கள் பெருமைகொள்ளுவதற்கு என்ன இருக்கிறது?

மேலைநாட்டுப் பண்பாடு நல்லதா கெட்டதாவென்பது பற்றி இங்கே நாம் ஆராயவில்லை. எந்த மொழியிலே கல்வி கற்பிக்க வேண்டும் என்பதே கவனிக்கவேண்டிய விஷயம். இப்போது நமக்கு, கல்வி என்று சொல்லக் கூடியதெல்லாம் உயர்தரப் படிப்புத்தான். அதை ஆங்கில மொழியின் மூலமாகவே நமக்குப் போதித்து வருகிறார்கள். இதுதான் இப்போதுள்ள குறை. ஒரு நாட்டு மக்கள் அந்த நாட்டுக்குரிய உயர்ந்த பண்புகளுடன் விளங்க வேண்டுமானால், அந்த நாட்டு இளைஞர்களுக்கு உயர்தரக் கல்வி மட்டுமன்றி எல்லாக் கல்வியையும் தாய்மொழிமூலமாகவே கற்பிக்க

வேண்டும். அனைவரும் அறிந்த உண்மை இது. ஆனல், நமக்கு ஆங்கில மொழி மூலமாகவே கல்வி கற்பிக்கப்படுவதால், இதை இவ்வளவு தூரம் விரித்துச்சொல்ல நேர்ந்தது. பொதுமக்களுடன் இளைஞர்கள் நேருக்கு நேராக நெருங்கிப் பழக வேண்டுமானல், பொதுஜனங்களுக்குத் தெரிந்துள்ள பாஷையிலேயே கல்வி பயின்று, தங்கள் அறிவைப் பெருக்கியிருக்க வேண்டும்; இல்லை என்ருல், பொதுஜனங்களுடன் தொடர்புகொள்ள முடியாது; இது கண்கூடான உண்மை. தாய்மொழியையும் அதிலுள்ள இலக்கியச் செல்வத்தையும் படியாமல் அசட்டை செய்துவிட்டு, வேருெரு அன்னிய பாஷையைப் படித்து, அந்தப் பாஷையிலும் அதனுடைய பேச்சுவழக்கிலும் நிபுணராக எண்ணி, நமது இளைஞர்கள் எத்தனையோ ஆண்டுகளை வீணுக்கி வருகிருர்கள். இப்படி வீணுக்கியும், தினசரி வாழ்க்கையில் அதனல் எந்தப்பயனும் அவர்களுக்குக் கிட்டுவதாயில்லை. இவ்வாறு இளைஞர்கள் வீணுகத் தங்கள் சக்தியை விரையம் பண்ணுவது, நாட்டுக்கு அளவிடமுடியாத நஷ்டமாகும். இந்த நஷ்டத்தை யாராலே கணக்கிட்டுச் சொல்ல முடியும்? குறித்த ஒரு மொழியில் சயன்ஸ் சம்பந்தமான கருத்துக்களையும் வேறு பல நுணுக்கமான விஷயங்களையும் தெளிவாக எடுத்துச்சொல்ல முடியாதென்றும், அந்த மொழியில் வளர்ச்சிக்கு இடமில்லையென்றும் சிலர் சொல்லி வருகிருர்கள். இதைவிடப் பெரிய மூடநம்பிக்கை வேறு கிடையாது. பேசுகிறவர்களுடைய நடை உடை, பாவனைகளையும் வளர்ச்சியையும் அப்படியே பிரதிபலித்துக் காட்டுவதே பாஷையாகும்.

அன்னிய ஆட்சியால் நம் நாட்டுக்கு விளைந்த கேடுகள் பல. அவற்றில், அன்னிய மொழியாகிய ஆங்கில மொழியை வலிந்து புகுத்தி, நமது இளைஞர்கள் இழிந்த நிலையடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களை ஆங்கிலம் படிக்கச் செய்திருப்பதும் ஒன்று. அன்னிய ஆட்சியின் பயனுய் இந்தியாவில் விளைந்துள்ள மிகப் பெரிய கேடுகளில் இதையும் ஒன்ருகச் சரித்திரம் சொல்லப்போகிறது. ஆங்கில பாஷை நம் மக்களுடைய சக்தியை உறிஞ்சிவிட்டது. அதைப் படித்துப் படித்து, நம் மாணவர்களின் ஆயுளும் தேய்ந்துவிட்டது; ஆங்கில பாஷை, பொதுமக்களிடமிருந்து இளை

ஞர்களைப் பிரித்துவிட்டது; படிப்புக்காகும் செலவை எவ்வளவோ அதிகப்படுத்திவிட்டது. ஆங்கிலப் படிப்பையே இன்னும் சொல்லிக்கொடுத்து வரும்படி விட்டுவைத்தால் அது நமது நாட்டின் உயிரையே அபகரித்துவிடு மென்பது நிச்சயம். ஆகவே, படித்த இந்தியர்கள் ஆங்கில பாஷையின்மீது வைத்திருக்கிற மோகத்தை எவ்வளவு விரைவிலே உதறித்தள்ளுகிறார்களோ, அவ்வளவுக்கு, அவர்களுக்கு மட்டுமன்றி, பொதுவாக, இந்தியர்கள் அனைவருக்குமே அதனால் நன்மை யுண்டு.

அறிவு வளருகிறதா அல்லது சிதறிப் போகிறதா?

> "மனிதன் என்றால், வெறும் அறிவு மாத்திர மல்ல; அல்லது ஸ்தூல உடலு மல்ல; உணர்ச்சி மட்டுமோ; அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறையிலே ஒன்றுகூடினால்தான் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறை யாகும்."

திருவாங்கூர் சமஸ்தானத்திலும் சென்னை மாகாணத்திலும் சமீபத்தில் நான் சுற்றுப் பிரயாணம் செய்த போது, பல மாணவர்களையும் 'அறிவாளிகளையும்' சந்திக்க நேர்ந்தது. அவர்களில் பெரும்பாலோருடைய அறிவு விருத்தியடைந் திருப்பதாகத் தெரியவில்லை; சிதறிப்போய் விட்டதென்றே சொல்லத் தோன்றுகிறது. இந்த நிலைமைக்குக் காரணம், தற்காலத்துக் கல்விமுறையி லுள்ள குறைபாடே. இந்தக் கல்விமுறை அறிவைச் சிதறடித்து விடுகிறது; தவறான போக்கிலே மனதைச் செலுத்தி, அறிவை வளர ஒட்டாமல் தடைப்படுத்துகிறது. சேவாக் கிராமத்தில் நான் அனுபவத்தில் கண்ட சில ஆராய்ச்சிகள் காரணமாக, இந்தக் கருத்து உண்மை என்பது தெளிவாகிறது. என்னுடைய ஆராய்ச்சிகள் இன்னும் முற்றுப் பெறவில்லைதான்; ஆகவே, அவற்றை இங்கு உதாரணமாகச் சொல்லுவதற்கு இல்லை. கல்வி சம்பந்தமாக, இங்கே நான் சொல்லப்போகும் கருத்துக்கள், 1902-ம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் போனிக்ஸ் ஸெட்டில்மெண்டு என்ற குடியேற்ற ஸ்தலத்தை நிறுவிய காலத்திலிருந்தே, நான் கொண்டுள்ள கருத்துக்க ளாகும்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்ல முறையில் தொழிற்படச் செய்வதே அறிவுக்கு உண்மையான அபிவிருத்தி என்பது என் கருத்து. அறிவும் உடலும் ஒன்றாக வளர்ச்சியடையும்போது, இதய தத்துவமும் விழிப்படைய வேண்டுவது அவசிய மாகும். அவ்வித மின்றி, உள்ளமும் உடலும் வளர்ச்சி பெற்று, உணர்ச்சித் தத்துவம் விழிப்பு அடையாவிட்டால், அது கிரமமான வளர்ச்சி யாகாது; வெறுங் கோணலாகவே போய்விடும். உணர்ச்சித் தத்துவத்துக்குப் பயிற்சி

கொடுக்க வேண்டும் என்று சொல்லும்போது, இதயத்தைப் பண்படுத்துவது என்ற கருத்துப்படவே நான் சொல்லுகிறேன். எனவே, குழந்தையின் உடல் பண்பையும் உயிர்ப் பண்பையும் வளர்க்கும்போது, அதன் இதயப் பண்பையும் வளர்த்து வந்தால், உள்ளமானது சரியானபடி எல்லா அம்சங்களிலும் வளர்ச்சி யடைய முடியும். இவை மூன்றையும் தனித் தனியே பிரிக்க முடியாது ; ஒன்றாய் இயங்குவன அவை. ஆகவே, அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக வளரச் செய்யலாம், அல்லது ஒன்றுக்கொன்று தொடர்பில்லாது வளரச் செய்யலாம் என்று எண்ணுவது வீண் கனவுதான்.

உடல், அறிவு, இதயம் ஆகியவற்றைத் தமக்குள் அழகாக ஒத்தியங்கச் செய்யாது கல்வி புகட்டுவது காரணமாக, என்ன என்ன கேடுகள் விளையு மென்பது கண்கூடாகக் கண்ட உண்மை. இக் கேடுகள் நம்மைச் சுற்றி எங்குமே மலிந்திருக்கின்றன; இருந்தும் அந்தக் கேடுகளை நம்மால் உணர முடிய வில்லை, ஏன்? வேண்டாத தொடர்புகள் இக்காலத்தில் நமக்கு ஏற்பட்டு உள்ளதுதான் இதற்குக் காரணம். நாட்டுப்புற மக்களைப் பாருங்கள். அறிவு, உணர்ச்சி இரண்டையும் பொறுத்தவரையில், அவர்கள் விலங்குகளின் நிலைக்கு வந்துவிட்டார்கள் எனலாம். இது ஒரு புறமிருக்க, பட்டணங்களிலுள்ள பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்வி என்ற பெயரால் இன்று அளிக்கப்படும் பயிற்சியானது, உண்மையிலே அறிவைச் சிதறடித்து விடுகிறது. அறிவைப் பண்படுத்துவதற்கும் உடற்பயிற்சிக்கும் எவ்விதத் தொடர்பு இருந்து வருகிறது என்பதைக் கருதிப் பார்ப்பதில்லை; தொடர்பு இல்லை என்றே கருதுகிறார்கள். ஆனால், உடல் ஆரோக்கியமா யிருப்பதற்கு ஏதேனும் ஒருவகைப் பயிற்சி இருந்தாக வேண்டுமே! அதற்காக, ஒரு பயனும் அளிக்காத விளையாட்டுகளை ஏதோ திட்டம்போட்டு வைத்துக்கொள்ளுகிறார்கள்; இதனால் விளைந்த பலன் ரொம்பவும் வருந்தத்தக்கது. இல்லையேல் வெறும் கேலிக்கூத் தென்றே அதைத் தள்ளிவிடலாம். இந்தத் திட்டத்தின்படி பயின்றுவந்த எந்த இளைஞனும், உடல் வருந்தி உழைக்கும் விஷயத்தில், ஒரு சாதாரணத் தொழிலாளிக்கு ஈடாக நிற்க முடியாது. உடல் வருந்தச் சிறிது

உழைத்தாலும் அவனுக்குத் தலைவலி உண்டாகிறது; உடம்பிலே சிறிது வெயில் பட்டாலும் மயக்கம் வந்துவிடுகிறது. இந்தத் தலைவலியும் மயக்கமும் 'இயற்கையாக' வர வேண்டியவை என்று அவர்கள் எண்ணுகிற காரியந் தான் வேடிக்கையிலும் வேடிக்கை. இதயத்தை யொட்டிய பண்புகளோ, வரைதுறை யின்றி, தம் இச்சையாக வளர்ந்து முற்றிப்போய்விடுகின்றன. இதன் பயனாக அவனுடைய ஒழுக்கத்திலும் உணர்ச்சியிலும் வெறுங் குழப்பந்தான் மிஞ்சுகிறது. இதைப் பாராட்டுதற்குரிய தென்றுகூட நினைக்கிறார்கள்.

இந்த நிலைக்கு மாறாக, ஆரம்பத்திலிருந்தே இதயப் பண்பை நல்ல முறையிலே அபிவிருத்தி செய்த ஒரு குழந்தையைப் பாருங்கள். அவன் பயிலும் கல்வியில் நூல்நூற்றல், தச்சுவேலை, பயிர்த்தொழில் போன்ற பயனுள்ள தொருவேலை இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அவன் செய்து வரும் தொழில்பற்றிய அடிப்படையான உண்மைகளும், கையாளுகிற கருவிகளின் உபயோகமும், அவற்றைச் செய்யும் முறையும் அவனுக்குக் கற்பிக்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்ளுவோம். அப்படியானால், ஆரோக்கியமான திண்ணிய தேகம் அமைவதோடுகூட, கூர்மையான அறிவும் அவனுக்கு வாய்க்கும்; அவனுடைய அறிவு வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல; தினந்தோறும் பெற்ற அனுபவத்திலே வேரூன்றி நேராகக் கண்ட உண்மை அறிவாகும் அது. தொழிலைப் புத்திக்கூர்மையோடு திறமையாகச் செய்வதற்குக் கணிதமும் வேறு சில கலைகளும் அவனுக்கு உபயோகமாக இருக்கும்; தொழில் கல்வியுடன் பெறும் அறிவுப் பயிற்சி காரணமாக, அந்தக் கலைகளிலும் அவனுக்குப் போதிய அறிவு ஏற்படும். பொழுது போக்குக்காகச் சிறிது இலக்கியப் பயிற்சியும் பெற்றுக் கொண்டால், சகல அம்சங்களிலும் பூரணமான தொரு கல்வியைப் பெற்றவனாகிறான். உள்ளமும் உடலும் உயிரும் விரிவடைகின்றன; இயல்பாக ஒன்றோடொன்று பொருந்தி, பூரண வளர்ச்சியைப் பெறுகிறான். மனிதன் என்றால் வெறும் அறிவு மாத்திர மல்ல, அல்லது ஸ்தூல உடலு மல்ல; உணர்ச்சி மட்டுமோ; அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் அழகிய முறை

யிலே ஒன்றுகூடினால்தான் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்விமுறை யாகும். சுதந்திரம் அடைந்த பிறகுதான் இத்தகைய கல்வி யளிப்பது சாத்திய மாகும் என்று சொல்லுவது, மாட்டுக்கு முன்னாலே வண்டியைப்பூட்ட முயலுகிற கதைதான். கோடிக்கணக்கில் இருக்கும் நமது ஜனங்களை இயல்பா யுள்ள, மேற்சொன்னவை போன்ற தொழில்களைத் திற மையாகச் செய்யப் பழக்க வேண்டும்; அனைவருடைய பொது நன்மையின் பொருட்டே அவர்கள் பணிபுரிகிறார் கள் என்பதையும் உணரச் செய்ய வேண்டும்; இவ்வாறு செய்தோமானால், சுதந்திரம் பெறுகிற காலம் வெகு சமீபம்.

மாணவருக்கு அறிவுரை

"ஒரு காரியத்தை அரசாங்கத்தார் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அது தவறு என்று நமக்குத் தோன்றுகிறது. அந்தத் தவறை அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்ட வேண்டுவது நமது கடமை என்று நினைத்தால், அதைக் கட்டாயம் எடுத்துக்காட்ட வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்விதம் எடுத்துக்காட்டுவதை ராஜத்துவேஷம் என்று அரசாங்கத்தார் சொன்னாலும், அதற்காகப் பின்வாங்கக் கூடாது; அந்த ராஜத்துவேஷத்தைச் செய்தே தீரவேண்டும். ஆனால், அதைச் செய்வது உங்களுடைய பொறுப்பு. அதனால், ஏற்படும் விளைவுகளை நீங்கள் அனுபவிக்கத் தயாராயிருக்க வேண்டும்."

காந்திஜி சென்னை சென்றிருந்தபோது, சென்னை மாணவர்களெல்லாம் சேர்ந்து ,ஒய். எம். சி. ஏ. கட்டிடத்தில், கனம் சீனிவாச சாஸ்திரியார் தலைமையில், அவருக்கு ஒரு வரவேற்பு அளித்தார்கள். அந்த வரவேற்புக்குப் பதில் சொல்லும்போது, காந்திஜி பின்வருமாறு பேசினார்.

தலைவரவர்களே! அருமை நண்பர்களே!!

என் மனைவியைப்பற்றியும் என்னைப்பற்றியும் நீங்கள் என்னவெல்லாமோ சொல்லிப் புகழ்ந்திருக்கிறீர்கள். அனேகமாக, புகழ்வதற்கு ஆங்கில மொழியில் இனிமேல் ஒரு வார்த்தைகூட நீங்கள் விட்டுவைக்க வில்லையென்று சொன்னால்,அது மிகையாகாது. என்மீது உங்களுக்குஅவ்வளவு அன்பும், அவ்வளவு சிரத்தையும் இருக்கின்றன. இதுவரை என்னை அளவில்லாமல் புகழ்ந்து பாராட்டிய இடம் எது வென்று கேட்டால், அது சென்னைதான் என்று நான் தயங்காமல் சொல்லிவிடுவேன். [கைதட்டு.] சென்னை இப்படிப் பாராட்டும் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதுமே உண்டு; இதை நான் பல தரம் சொல்லியு மிருக்கிறேன். ஆகவே, தாராள குணம்படைத்த நீங்கள் என் மீது அன்பை அள்ளி அள்ளிச் சொரிந்தபோதிலும் கூட, நான் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இந்திய ஊழியர் சங்கத்தின்கீழ் நான் பயிற்சி பெற்று வருகிறேன் என்று ஒருவகையில் சொல்லலாம். இந்தச் சங்கத்தின் தலைவராயிருந்துவரும் கனம் சீனிவாச சாஸ்திரியார் அவர்கள், என்னைப் புகழ்ந்திருப்பதைப் பார்த்தாலோ, உங்கள் புகழ்ச்சிக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்ததுபோல் இருக்கிறது அது. இந்தப் புகழ்ச்சிக் கெல்லாம் நான் உண்மையில் உரியவன்

தானு? "அல்ல" என்று அழுத்தமாகச் சொல்லுகிறது என் இதயம். இருந்தாலும், நீங்கள் கூறும் புகழுரைகளுக்கெல்லாம் தகுதியுடையவனுகும் பொருட்டே நான் இந்தியாவுக்கு வந்திருப்பதாக எண்ணுகிறேன். நான் தக்க ஊழியனுக இருக்க விரும்பினுல், உங்கள் புகழ்மொழிக்குத் தகுதி உடையவ னென்பதை நான் நிரூபித்துக் காட்ட வேண்டும்; அதற்காக எனது வாழ்க்கை முழுவதையுமே அர்ப்பணம் செய்கிறேன்.

நீங்கள் அந்த அருமையான தேசிய கீதத்தைப் பாடினீர்கள்; அதை ஆரம்பித்ததும் நாம் எல்லோரும் அப்படியே எழுந்து நின்ளும். அந்தத் தேசிய கீதத்தை எழுதிய கவிஞர், இந்தியத்தாயை வருணிப்பதில் தமது சொல் வன்மை முழுவதையும் காட்டியிருக்கிருர். இந்தியத்தாயின் முகத்தில் புன்னகை தவழ்ந்துகொண் டிருக்கிறது; அவளுடைய பேச்சு இனிமையாய் இருக்கிறது; அவளுடைய மெய்யெலாம் நறுமணம் வீசுகிறது; அவள் மகா சக்தி வாய்ந்தவள்; உண்மைக்கும் நன்மைக்கும் உறைவிடம். இந்தியாவிலே பாலும் தேனும் ஆருக ஓடுகிறது. வளமிக்க வயல்கள்-கனி வர்க்கங்களும் தானிய வகைகளும்-இங்கே நிறைந்துள்ளன என்றெல்லாம் கவிஞர் வருணித்துக் கொண்டேபோகிருர். இந்தியாவில் வாழும் மக்களேப்பற்றிச் சொல்லுவதைப் பார்த்தாலோ, அம் மாதிரி மனிதர்களே அற்புதமானதோர் சத்திய யுகத்தில்தான் காண முடியுமென்று தோன்றுகிறது. கவிஞர் நமக்கு ஒரு தனியான இந்தியாவைப் படம்பிடித்துக் காட்டுகிருர். அந்த இந்தியாவானது உலகம் முழுவதையும், மக்கள் இனம் அனைத்தையும் தன்வசப்படுத்தி யிருக்கிறது; ஆனுல், எப்படி? தனக்குத்தான் வலிமை அதிகம் என்ற காரணத்தால் அல்ல; ஆன்மபலம் என்ற துணைகொண்டே அந்த நாடு உலகத்தையும் மக்களினத்தையும் வெற்றி கொண் டிருக்கிறது. இந்தியாவை ஒரேபடியாய்ப் புகழும் இந்தக் கீதத்தை நாம் பாடுவது பொருத்த மாகுமா? இந்தக் கீதத்தைக் கேட்க ஆரம்பித்ததுமே நான் எழுந்து நின்றது சரிதானு? என்று என் மனதில் ஒரு கேள்வி எழுகிறது. இந்தத் தேசிய கீதத்தில் சொல்லியுள்ள பெருமைகள் யாவும் இன்று இந்தியாவில் காணப்படுகின்

றனவா என்றால், இல்லை. இதுதான் உண்மை. வருங்கால இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்பதையே கவிஞர் நமக்குப் படமாக வரைந்து காட்டுகிறார். நமது தாய் நாட்டை வருணிப்பதில் கவி கையாண்ட சொற்களை எல்லாம் உண்மையாக்க வேண்டுவது உங்களுடைய பொறுப்பு. அதற்கு, இந்தியா உங்களைத்தான் நம்பி இருக்கிறது. இன்று இந்தியா இருக்கும் நிலையில், இந்த வருணனை, பொருத்தமற்றதாகவே எனக்குத் தோன்று கிறது. அவர் இந்தியாவின்மேல் ஏற்றிக் கூறியிருக்கும் சிறப்புக்களை எல்லாம் மெய்ப்பிப்பது உங்களுக்கும் எனக்கும் உரிய கடமையாகும்.

சென்னையில் கல்வி பயின்றுவரும் உங்களுக்கும், இந்தியாவில் ஏனைய பகுதிகளிலுள்ள மாணவர்களுக்கும், சரியான முறையில் இன்று கல்வி கற்பிக்கப்படுகிற தென்று நீங்கள் கருதுகிறீர்களா? இந்தக் கல்வியைக் கற்றதன்பயனாக மேற்கூறிய இலட்சியத்தை நிறைவேற்றி வைக்க உங்களால் முடியுமா? அதற்குத் தகுதியுடையவர் களாக இந்தக் கல்வி உங்களைச் செய்யுமா? உங்களிடம் அமைந்துள்ள சிறந்த பண்புகளைப் பிரகாசிக்கச் செய்ய, இந்தக் கல்விமுறை உதவுமா? அரசாங்கத்துக்கும் வர்த் தக நிலையங்களுக்கும் வேண்டிய குமாஸ்தாக்களைத் தயா ரித்துக் கொடுக்கும் தொழிற்சாலைபோல் இந்தக் கல்வி முறை இருக்கிற தல்லவா? நீங்கள் பயின்றுவரும் கல்வி யின் நோக்கம் உத்தியோகத்தை மட்டும் பார்ப்பதுதானா? இந்த நோக்கத்தோடுதான் நீங்கள் கல்வி கற்கிறீர்களென் றால், உங்கள் இலட்சியமும் இதுதான் என்றால், கவிஞர் கண்ட கனவை ஒரு நாளும் நனவாக்க முடியாது; அப்படி முடியாமல் போய்விடுமோ என்றும் அஞ்சுகிறேன். நவீன நாகரிக மென்றால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. இப் போது மட்டு மல்ல, எப்போதுமே அதற்கு விரோதியாய் இருந்து வருகிறேன். இதை எனது எழுத்து மூலமாகவும், பேச்சு மூலமாகவும், நீங்கள் தெரிந்துகொண் டிருக்கக் கூடும். ஐரோப்பாவில் இன்று என்ன நடக்கிறதென்று பாருங்கள். நவீன நாகரிகத்தின் காலில் அகப்பட்டு, நசுங்கி, ஐரோப்பா கண்டம் அலறுகிறது. இதை நீங்கள் ஒப்புக்கொண்டால், அந்த நாகரிகத்தை நமது நாட்டில்

கண்மூடித்தனமாய்ப் பின்பற்றும் விஷயத்தில் நீங்கள் மட்டு மல்ல, உங்களினும் பெரியவர்களுங்கூட, சற்று நிதானித்து யோசிக்கவேண்டி வரும். 'நம்மை ஆண்டு வருபவர்களல்லவா, இந்த நாகரிகத்தை நம் நாட்டில் புகுத்துகிறவர்கள்? அப்படி யிருக்கும்போது, அதை நம்மால் என்ன செய்ய முடியும்?' என்று சிலர் சொல்லுவதைக் கேட்டிருக்கிறேன். ஆனல், ஒரு நாகரிகத்தைத் தழுவிக் கொள்ள நீங்கள் தயாராக இல்லையென்ருல், அதை உங்களிடம் புகுத்துவது எந்த அரசாங்கத்தாராலும் முடியாத காரியம். இது எனது திடமான நம்பிக்கை. அப்படியே அரசாங்கத்தார் அந்த நாகரிகத்தை நம்மிடையே புகுத்துவதாக வைத்துக்கொள்ளுவோம்; ஆயினும், அந்த நாகரிகத்தைப் புகுத்தும் அரசாங்கத்தாரை நாம் ஏற்றுக் கொண்டபோதிலும், அவர்கள் புகுத்தப் பார்க்கும் நாகரிகத்தை ஏற்காமல் தள்ளிவிடுவதற்கு வேண்டிய வலிமை நம்மிடம் இருக்கவே செய்கிறது. இது சம்பந்தமாக நீங்கள் தவருன அபிப்பிராயம் வைத்துக்கொள்ள வேண்டாம். [கைதட்டு.] பிரிட்டிஷ் மக்கள் நம்மோடு வாழ நேர்ந்துவிட்டதென்று நான் பல இடங்களில் சொல்லி வந்திருக்கிறேன். ஏன் அவர்கள் நம்முடன் வாழ நேர்ந்ததென்பதை, நான் இப்போது விளக்கிச் சொல்ல விரும்ப வில்லை. இந்தியாவில் பண்டைக் காலத்திலிருந்த ஞானிகளைப்பற்றிச் சிறப்புவாய்ந்த நமது தலைவர் சொல்லக் கேட்டீர்கள். நாம் அந்த ஞானிகளின் வழித்தோன்றல்கள் என்பதைச் செயலிலே காட்ட வேண்டும். அப்போதுதான், கேவலம் உடல் வலிமை யல்ல, அன்பே தனது உபதேசம் என்பதை, இந்தியா உலகெங்கும் எடுத்துரைக்க முடியும். போரில் வென்று வாகைசூடிய வீர ரனைவரையும் வெற்றிகொள்ளும் பேறு, அப்போதுதான் உங்களுக்குக் கிடைக்கும். ரத்தத்தைச் சிந்தாது, ஆன்ம பலத்தாலேயே நீங்கள் வெற்றிகொள்ள இயலும். இந்தியாவிலே இன்று அரசியலின் பெயரினல் கொலைகள் நடக்கின்றன; கொள்ளைகள் நடக்கின்றன; இவற்றைக் கவனிக்கும்போது, இந்தக் கொலை, கொள்ளை சம்பந்தமாக நம்முடைய கருத்து என்ன வென்பதைத் தெளிவாக நான் சொல்லிவிட விரும்புகிறேன். அரசியல் கொலை, அரசியல்கொள்ளை

என்பன வெல்லாம் இந்தியாவில் உள்ளவை அல்ல; அவை இங்கே வேரூன்றி நிலைத்துநிற்கவும் முடியாது; வெளி நாட்டிலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட சரக் கென்றே அவற்றை நான் கருதுகிறேன். பயங்கரமான இந்த முறைகள் நியாயமானவைதான் என்று நீங்கள் எண்ணிவிடப் போகிறீர்கள்! மாணவர்களாகிய நீங்கள் இதுபற்றி மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று உங்களை நான் எச்சரிக்க விரும்புகிறேன். சத்தியாக்கிரகி என்ற முறையில், பலாத்காரத்துக்குப் பதிலாக, வேறொரு சரியான மார்க்கத்தை நான் உங்களுக்குக் காட்டுகிறேன். எதிரிகளை வெருட்டுவதற்குப் பதிலாக, உங்கள் உள்ளத் தையே நீங்கள் வெருட்டுங்கள். கொடுங்கோன்மையைக்கண் டால், தாராளமாக அதை எல்லா வழிகளிலும் எதிர்த்து நில்லுங்கள். உங்கள் சுதந்திரத்தில் யாராவது தலையிட் டால், அவ்விதம் தலையிடுவதைத் தடைசெய்யுங்கள். அதற் காக, கொடுங்கோல் செலுத்துபவர்களைச் சிரச் சேதம் செய்ய வேண்டிய அவசியமில்லை யென்றுதான் சொல்லு கிறேன். அவ்விதம் ரத்தத்தைச் சிந்தும்படி நமது சமயம் போதிக்கவில்லை. அஹிம்சையே நமது சமயத்தின் அடிப்படை. அஹிம்சையைச் செயலில் காட்டும்போது, அது அன்பாக மாறுகிறது. அன்பே அஹிம்சையின் உரு வம். அந்த அன்பாகிய அஹிம்சா நெறி எது? உங்களைச் சுற்றி வாழ்பவர்களிடமும், உங்கள் நண்பர்களிடமும் மட் டும் அன்பு காட்டுவதன்று; உங்களுடைய எதிரிகளிடமும் நீங்கள் அன்பு செலுத்த வேண்டும். இதுவே உண்மை யான அஹிம்சா நெறியாகும்.

இன்னொரு வார்த்தை. உண்மையையும் அஹிம்சை யையும் நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்றால், அச்சத்தை அறவே விட்டுவிட வேண்டும். ஒரு காரியத்தைஅரசாங்கத் தார் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். அது தவறு என்று நமக்குத் தோன்றுகிறது. அந்தத் தவறை அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்ட வேண்டுவது நமது கடமை யென்று நினைத்தால், அதைக் கட்டாயம் எடுத்துக் காட்ட வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அவ்விதம் எடுத்துக்காட்டுவதை ராஜத்துவேஷம் என்று அரசாங்கத்தார் சொன்னாலும், அதற்காகப் பின்வாங்கக்

கூடாது. அந்த ராஜத்துவேஷத்தைச் செய்தே தீர வேண்டும். ஆனல், அதைச் செய்வது உங்களுடைய பொறுப்பு. அதனல் ஏற்படும் விளைவுகளை நீங்கள் அனுப விக்கத் தயாரா யிருக்க வேண்டும். இந்தக் கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்துக்கொண்டு அஹிம்சா நெறியில் நிற்பீர்களானல், உங்கள் அபிப்பிராயத்தைக் கேட்குமாறு அரசாங்கத்தாரை நீங்கள் வற்புறுத்த முடியும். உங்களுக்கு அப்படி வற்புறுத்த உரிமை உண்டென்பதை நீங்கள் அப் போதுதான் நிரூபித்தவர்க ளாவீர்கள்.)

நான் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் சேர்ந்திருக்க விரும்புபவன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள குடிக ளனைவரும் அனுபவிக்கிற சகல உரிமைகளிலும் எனக்கும் சம பங்கு கேட்க வேண்டும் என்று எண்ணுகிறேன். இது காரணமாகவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பக்கமே சேர்ந் திருக்கிறேன். அந்தச் சம பங்கு வேண்டு மென்றே இன்று வாதாடுகிறேன். நான் அடிமை யினத்தைச் சேர்ந்தவனல் லன். அடிமையினத்தைச் சேர்ந்தவ னென்று என்னைச் சொல்லிக்கொள்ளவு மில்லை. நமக்குரிய சம பங்கைப் பிரிட் டிஷ் கவர்னர்களால் நமக்குத் தந்துவிட முடியாது; அதை நாமே கைப்பற்ற வேண்டும். நீங்கள் இதை உணருவது நலம். எனக்கு அந்தச் சம உரிமை வேண்டும்; அதை நான் பெறவும் முடியும். ஆனல், என் கடமையைச் செய் வது மூலமாகவே அவ்வுரிமையை நான் பெற விரும்பு கிறேன். நமது சமயத்தைப்பற்றி மாக்ஸ் முல்லர் என்பவர் தெளிவாகச் சொல்லி யிருக்கிறார். ஆனல், நமது சமயத் தைத் தெரிந்துகொள்ளுவதற்கு நாம் மாக்ஸ் முல்லரிடம் போகவேண்டிய தில்லை. இந்தியர்களுடைய சமயத்தின் உயிர்நாடி உரிமை என்பதில் இல்லை, கடமை என்பதி லேயே இருக்கிறது என அவர் விளக்கியிருக்கிறார். நமது கடமையை நாம் சரிவரச் செய்தால், விரும்பியவற்றை யெல்லாம் நாம் நிச்சயமாக அடைய முடியுமென்பதில் உங் களுக்கு நம்பிக்கை இருக்குமானல், இப்பொழுதிருந்தே உங்கள் கடமையை நிறைவேற்றுவதிலும், கடமை காட்டு கிற வழியிலே சென்று போராடுவதிலும் கண்ணும் கருத்துமா யிருங்கள். அப்போது நீங்கள் எந்த மனிதருக் கும் பயப்பட வேண்டிய திராது. கடவுள் ஒருவருக்கே பயப்

படவேண்டும்என்பதை உணர்வீர்கள். இதுதான் கோகலே செய்த உபதேசம். அவர் என்னுடைய குருநாதர்; உங்களுக்குமே அவர் குரு என்று நான் சொல்லுவேன். அவர் செய்த உபதேசம் என்ன? இந்திய ஊழியர் சங்கத்தின் அமைப்பிலேயே அந்த உபதேசம் பொதிந்துகிடக்கிறது. அந்த உபதேசம் சுட்டும் வழியில்தான் நான் வாழ்க்கையை நடத்த விரும்புகிறேன். இந் நாட்டின் அரசியல் வாழ்வையும் அரசியல் ஸ்தாபனங்களையும் தூய்மையாக்கி, ஆன்ம நெறியில் செலுத்த வேண்டு மென்பதே அந்த உபதேச மாகும். இதைச் செயலில் கொண்டுவருவதில் நாம் காலந்தாழ்த்தல் கூடாது. மாணவர்கள் அரசியலில் தொடர்பில்லா திருக்க முடியாது. சமயம் அவர்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு அரசியலும் முக்கியமாகும். சமயத்திலிருந்து அரசியலைப் பிரித்துவிட முடியாது. என் கருத்துக்கள் உங்களுக்குப் பிடிக்காதிருக்கலாம். இருந்தாலும், என்னுடைய இதயத்திலே ஆழமாகப் பதிந்திருக்கிற விஷயங்களைத்தானே நான் சொல்ல முடியும்? தென் ஆப்பிரிக்காவில் நடந்த சத்தியாக்கிரகப் போரில் நமது நாட்டினர் காட்டிய ஆன்மபலத்தை நான் என்னவென்று சொல்லுவேன்! நவீன நாகரிகத்தை அவர்கள் கண்டவர்க ளல்லர். ஆயினும், அவர்களிடம் நமது பண்டைக்கால ரிஷிகளிடமிருந்த மனவலிமை இருந்தது. அந்த ரிஷிகள் செய்த தபோபலம் அவர்களுக்குப் பரம்பரையாகக் கிடைத்திருக்கிறது. ஆங்கில இலக்கியத்தில் அவர்கள் ஒரு எழுத்தும் அறியார்; இக் காலத்திய நவீன நாகரிகத்தைப்பற்றி அவர்கள் கேட்டதுமில்லை; ஆயினும், மனிதத்தன்மைக்குரிய உயர்ந்த பண்புகள் அவர்களிடம் விளங்கின. இந்த விஷயங்களை நான் தென் ஆப்பிரிக்காவில் பெற்ற சொந்த அனுபவத்திலிருந்தே சொல்லுகிறேன். எழுதப் படிக்கக் தெரியாத நமது நாட்டினர் எவ்வளவு அரிய பெரிய செயலையும் சாதித்துவிடக் கூடும் என்று தென் ஆப்பிரிக்காவில் காட்டி யிருக்கிறார்கள். தென் ஆப்பிரிக்காவில் அந்த மக்களுக்குச் சாத்தியமான அந்த செயல்கள், எழுதப் படிக்கத் தெரிந்த உங்களுக்கும் எனக்கும் இந்தப் புண்ணிய பூமியான பாரத நாட்டில் பதின்மடங்கு சாத்தியமானதுதான் என்பதை, நான் சொல்லவும் வேண்டுமா? அவற்றை அனுபவத்தில் சாத்தியமாகச் செய்கிற பாக்கியம் உங்களுக்கும் எனக்கும் கிடைப்பதாக!

ஹிந்து சர்வகலாசாலைப் பிரசங்கம்

"பிரிட்டிஷ் இந்தியாவிலாயினும் சரி, சுதேச மன்னர்கள் ஆட்சி புரிகிற சமஸ்தானங்களிலாயினும் சரி, பெரிய நகர் ஒன்றில், பிரமாண்டமானதோர் அரண்மனையைக் கட்டப்போகிறார்கள் என்று கேள்விப்படும்போதெல்லாம் எனக்கு ஆத்திர முண்டாகி, 'அடடா! விவசாயிகளின் உழைப்பினால் வந்த செல்வமல்லவா இது?' என்று எனக்குள்ளேயே எண்ணிக்கொள்ளுவேன்."

காசி ஹிந்து சர்வகலாசாலைத் திறப்பு விழாவின்போது, காந்திஜி செய்த சொற்பொழிவு முழுவதையும் கீழே காணலாம்.

நண்பர்களே !

இவ்விடத்துக்கு நான் வர அதிக நேரமானதற்காக என்னை மன்னிக்கும்படி உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். தாமதத்திற்குக் காரணம் நான் அல்ல, வேறு மனிதர்களு மல்ல. இதுவே நீங்கள் என்னை உடனே மன்னித்துவிடப் போதுமானதென்று கருதுகிறேன். [சிரிப்பு.] உண்மை என்னவென்றால், கண்காட்சி சாலையில் வைத்துள்ள ஒரு பிராணியின் நிலைமையில் நான் இருக்கிறேன். என்னை உபசரிப்பவர்கள், அன்பின் மிகுதியால் எனது வாழ்க்கையில் அவசியமானதொரு அம்சத்தை எப்போதுமே மறந்துவிடுகிறார்கள். அவர்கள் வேண்டுமென்றே இப்படிச் செய்யவில்லை; சந்தர்ப்பவசத்தால் இப்படி நேர்ந்துவிடுகிறது. இங்கே வருவதற்குள், எனக்கும், என்னை உபசரிப்பவர்களுக்கும், நான் ஏறிவந்த வண்டிகளுக்கும் தொடர்ச்சியாக எதிர்பாராத பல விபத்துக்கள் நிகழ்ந்தன. அவற்றையெல்லாம் பார்த்து, முன்கூட்டியே தக்க ஏற்பாடு செய்திருக்கலாம்; செய்யவில்லை. அதுதான் கால தாமதத்திற்குக் காரணமாகும்.

நண்பர்களே! பெஸண்டு அம்மையார் இப்போதுதான் பேசி முடித்தார்கள். அவர்களுடைய ஒப்பற்ற பேச்சுத் திறமை உங்களை மயக்கி இருக்கிறது. அந்த மயக்கத்தில், நமது சர்வகலாசாலை சகல அம்சங்களிலும் பூரண நிலை அடைந்துவிட்டதென்று தயவுசெய்து நம்பிவிடாதீர்கள். இந்தச் சர்வகலாசாலைக்கு வந்து படிக்கப் போகிற இளைஞர்களனைவரும் ஏற்கனவே படித்துமுடித்து,

ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் பிரஜைகளுக்குரிய சகல பண்புகளும் பொருந்தியவர்களாக வெளியேறிவிட்டார்களென்றும் எண்ணிவிடாதீர்கள். இனித்தான் இளைஞர்கள் இங்கு வந்து படிக்கவேண்டியிருக்கிறது; இனித்தான் இந்தச் சர்வகலாசாலை வளர்ந்தோங்கி உயிர் பெறவேண்டியிருக்கிறது. இந்த நிலையிலே, இந்தச் சர்வகலாசாலை, பூரண வளர்ச்சி பெற்றுவிட்டதாக எண்ணுவது சரியில்லையல்லவா? மாணவர்களாகிய உங்களை எண்ணியே நான் இன்று பேசவேண்டியவன். ஆன்ம வாழ்க்கைக்கு இந்த நாடு பெயர் பெற்றது. அந்த வாழ்க்கையிலே இந்த நாட்டுக்கு ஈடு வேறெந்த நாடும் இல்லை. ஆன்ம வாழ்க்கையை வாயினாலேயே உபதேசித்துவிடலாம் என்று நீங்கள் எண்ணினால், அதைவிடத் தவறான எண்ணம் வேறில்லை. என்றைக்காவது ஒரு நாள் இந்தியா தன் ஆத்ம சக்தியாலெழுந்த உண்மையை உலகத்துக்கு உபதேசிக்குமென்றே நான் நம்புகிறேன். அதை வாய்ப் பேச்சினால் மட்டும் தெரிவித்துவிட முடியுமென்று நீங்கள் நினைத்துவிடாதீர்கள். அது முடியாத காரியம். பிரசங்கங்கள் செய்வதனால் ஒரு பிரயோசனமும் இல்லை. பிரசங்கங்கள் செய்தும், கேட்டும் நான் அலுத்துப்போய்விட்டேன். ஆனால், இரண்டு நாட்களாக இங்கு நடந்த பிரசங்கங்களை விதிவிலக்காகச் சொல்லலாம். இந்தவிதமான பேச்சுக்கள் அவசியமானவைதான். பேச்சுக் கலையில் நமது திறமையெல்லாம் காட்டியாகிவிட்டது; அதனால் பயனில்லையென்பதையும் கண்டுவிட்டோம். பேச்சு, காதுக்கும் கண்ணுக்கும் விருந்தளிக்கலாம்; ஆனால், அது மட்டும் போதாது என்று உங்களிடம் துணிந்து சொல்லுகிறேன். பேசுகிற பேச்சு நம் இதயத்தைத் தொட வேண்டும்; நமது கைகளும் கால்களும் தொழிற்படச் செய்ய வேண்டும். அப்போதுதான் அது பேச்சாகும். இந்தியர்கள் எளிமையும் அழகும் பொருந்திய சுபாவமுடையவர்கள். அந்தச் சுபாவத்தை நாம் இழந்துவிடாதிருக்க வேண்டுமென்றால், இதயத்தோடொத்து நமது அவயவங்களும் இயங்க வேண்டும் என, இந்த இரண்டு தினங்களாகப்பேசியவர்கள் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்கள். இவை யாவும் நான் சொல்லப் போவதற்குப் பீடிகைதான்.

புனிதமான இந்த நகரில் அமைந்துள்ள இப் பெரிய கலாசாலையின் நிழலில் நின்றுகொண்டு, என்னுடைய சொந்த நாட்டினரோடு நான் இன்று அன்னிய மொழியில் பேசும்படியாக நேர்ந்திருக்கிறது; இந்த இழிவான நிலைமையை எண்ணுந்தோறும் எனக்கு உண்டாகும் அவமானம் கொஞ்சநஞ்ச மல்ல. இங்கே இந்த இரண்டு நாட்களாகத் தொடர்ந்து ஆங்கிலத்தில் பிரசங்கங்கள் நடந்து வருகின்றன. இந்தப் பிரசங்கங்களை எத்தனையோ பேர் விடாமல் கேட்டுவந்திருக்கிறார்கள். அப்படிக் கேட்டவர்களை, கேட்ட விஷயங்களைப்பற்றி, பரீட்சை செய்வதாக வைத்துக்கொள்ளுவோம். நான் பரீட்சை செய்பவனாக இருக்கும் பட்சத்தில், இந்தப் பரீட்சையில், பெரும்பாலோர் தவறிவிடுவார்கள் என்பது திண்ணம். ஏன்? இந்தச் சொற்பொழிவுகள் கேட்டவர்களுடைய இதயத்தைத் தொடவில்லை. டிசம்பர் மாதத்தில், பம்பாயில் கூடிய மகத்தான காங்கிரஸ் கூட்டத்திற்கு நான் போயிருந்தேன். அங்கு கூடியிருந்த கூட்டம் இதைவிட எத்தனையோ மடங்கு பெரிது. ஹிந்துஸ்தானியில் பேசிய பேச்சுக்களே அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்தன. இதை நீங்கள் நம்புவீர்களா? இது நடந்தது பம்பாயில்; காசியில் அல்ல! காசியில் இருப்பவர்கள் அனைவருமே ஹிந்தி பேசுவார்கள்; பம்பாயில் அப்படி யல்ல. அப்படியிருந்தும், ஹிந்தியில் பேசினால் விஷயத்தை எளிதாகப் புரிந்துகொள்ளுகிறோம். இதற்குக் காரணம், பம்பாயில் வழங்கும் மொழிகளுக்கும் ஹிந்திக்கும் அதிக வேற்றுமையில்லாததே. ஆங்கில மொழி அப்படி யல்ல. அது, இந்திய மொழிகளிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கிறது. அதனால்தான் காங்கிரஸ் கூட்டத்தில் ஹிந்தியில் பேசும் போது, பொதுமக்கள் அந்தப் பேச்சுக்களை நன்றாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இங்கே கல்வி பயில வரும் மாணவர்களுக்கு அவரவர் தாய்மொழி மூலமாகவே கல்வி போதிக்கப்படும் என்று நம்புகிறேன். உயர்ந்த கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்ற சொற்கள் நமது தாய் மொழிகளில் இல்லை யென்று யாரேனும் எண்ணுவார்களானால், நாம் உயிரோடு இருப்பதைவிட இறந்தொழிவதே மேல் என்று எனக்குப் படுகிறது. மக்களுடைய அறிவின்

வளர்ச்சியைத்தானே பிரதிபலிக்கிறது பாஷை? ஆங்கில பாஷை எக்காலத்திலாவது இந்திய தேசிய பாஷையாக வர முடியு மென்று கனவு காண்பவர்கள் இங்கு யாரேனும் இருக்கிறார்களா? [*'ஒரு நாளுமில்லை' ஒரு நாளுமில்லை, என்ற கூச்சல்.*] எதற்காக இந்த முட்டுக்கட்டை நமக்கு! ஆங்கிலேய இளைஞரோடு நமது இளைஞர்களை ஒப்பிட்டுப் பார்த்தால், நம் நாட்டு இளைஞர்கள் மிகவும் கீழான நிலையில் இருக்கிறார்கள். ஆங்கிலக் கல்வி பயிலவேண்டி யிருப்பதனால், நமது இளைஞர்களின் நிலை எவ்வளவு மோசமாய் இருக்கிற தென்பதைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள். புனாவிலுள்ள சில பேராசிரியர்களுடன் நெருங்கிப் பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. "இந்திய இளைஞர்கள் கல்வியறிவு பெறுவதற்கு ஆங்கில மொழியைக் கருவியாகக்கொண் டிருப்பதனால் தங்கள் வாழ்க்கையில் விலைமதிக்க முடியாத ஆறு வருஷ காலத்தை வீணே செலவிடும்படி நேரிடுகிறது" என, அந்தப் பேராசிரியர்கள் என்னிடம் கூறினார்கள். இந்தியாவில், பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் எத்தனை ஆயிரம் மாணவர்கள் ஆங்கிலம் பயிலுகிறார்கள்? ஒரு மாணவர் ஆறு வருஷ காலத்தை இழந்துவிடுகிறான் என்றால், இந்திய மாணவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து எத்தனை ஆயிரம் ஆண்டுகளை இழந்துவிடுகிறார்கள்! இந்நாட்டுக்கு எத்தனை ஆயிரம் ஆண்டுகள் வீணாகின்றன? எது சம்பந்தமாகவும் நாமாகத் தொடங்குவதற்கு வேண்டிய ஊக்கம் நம்மிடத்தில் இல்லை. பிறருடைய தூண்டுதலின்றி நாமே ஒரு காரியத்தையும் செய்துகொள்ளத் தெரியாது என்று நம்மீது குறைகூறுகிறார்கள். நமது வாழ்நாளில், சிறந்த இளம் பருவத்தை, அன்னிய மொழி ஒன்றைப் படித்து, அதிலே நிபுணத்துவம் பெறுவதற் கென்று செலவிட்டபின், நம்மிடத்து ஊக்கம் எப்படி மிஞ்சியிருக்க முடியும்? ஆங்கில மொழியில் நிபுணத்துவம் அடைகிற விஷயத்திலும் நமக்குத் தோல்விதான். நேற்றும் இன்றும் இங்கே பேசியவர்களில் மிஸ்டர் ஹிக்கின்பாதம் போல, கேட்பவர்கள் மனதில் பதியும்படி பேச யாருக்காவது முடிந்ததா? அவருக்கு முன் பேசியவர்கள், கேட்டோர் இதயத்தைப் பிணிக்க முடியவில்லை யென்றால்

அது அவர்கள் குற்ற மல்ல. அவர்கள் பேசிய பேச்சுக்களில் நல்ல கருத்துக்கள் நிரம்பியிருந்தபோதிலும், அவை நமது இதயத்திலே பதிய வில்லை. ஆங்கிலக் கல்விமுறையால் கேடே விளைந்ததென்று கருதலாம். ஆனல், இன்று இந்தியாவில் முன்னணியில் நிற்பவர்களும், தேசத்திற்காகப் பாடுபடுபவர்களும் ஆங்கிலம் படித்த இந்தியர்கள் தானே என்று சிலர் வாதம் செய்கிறார்கள். நாம் பயிலுகிற ஒரே கல்வி ஆங்கிலக் கல்வி ; இந்தக் கல்வியைக் கற்றதற்கு நாம் ஏதாவது செய்ய வேண்டாமா? இல்லையேல் எவ்வளவு கேவலமான காரியம் அது? இருக்கட்டும். சென்ற ஐம்பது வருஷகாலமாகத் தாய்மொழிமூலமாகவே நாம் கல்வி பயின்றதாக வைத்துக்கொள்ளுவோம். அப்படிப் பயின்றிருந்தால், இன்று என்ன ஏற்பட்டிருக்குமென்று நினைக்கிறீர்கள்? இன்று சுதந்திர இந்தியாவிலே வாழ்ந்து வருவோம்; நம்மிடையே படித்தவர்களா யுள்ளவர்கள் தங்கள் சொந்த நாட்டில் அன்னியர்களைப்போல வாழாமல், நாட்டு மக்களின் இதயத்தில் பதியும்படி பேசி உறவாடும் தன்மை பெற்றிருப்பார்கள். பரம ஏழைகளிடையிலே வசித்து அவர்கள் தொண்டு புரிந்து இருப்பார்கள். இந்த ஐம்பது வருஷ காலத்தில் அவர்கள் பெற்றிருக்கும் அனுபவமும் அறிவும் தேசத்துக்குப் பயன்படக் கூடிய ஒரு செல்வமாக இருந்திருக்கும். [கைதட்டு.] இன்றைய நிலைமையில், நம்முடைய மனைவியர்கூட, நமது அறிவியல் வாழ்க்கையில் பங்குபெற இயலவில்லை. ஜகதீஸ் சந்திர போஸையும், ஆசிரியர் ரேயையும் பாருங்கள். அவர்கள் எவ்வளவு அரிய ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார்கள்? அவர்களுடைய ஆராய்ச்சிகள் யாவும் ஆங்கிலத்தில் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் மொழியில் இவை அமைந்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? அப்படி இல்லாதது அவமானமான காரியம் அல்லவா?

இனி, இதைவிட்டு, வேறொரு விஷயத்தைக் கவனிப்போம்.

சுய ஆட்சி வேண்டுமென்று காங்கிரஸ் மகாசபை ஒரு தீர்மானம் செய்திருக்கிறது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாரும், முஸ்லிம் லீகினரும் தங்கள் கடமையை உணர்ந்து, ஒரு திட்டத்தைச் சொல்லுவார்கள் என்பதில்

சந்தேக மில்லை. வெளிப்படையாகச் சொல்லும் பட்சத்தில் என்னைப் பொறுத்தவரையில், அவர்கள் செய்யப்போகும் காரியங்களில் எனக்குச் சிரத்தை யில்லை. அவற்றைவிட, மாணவர் உலகம் என்ன செய்யப்போகிறது, பொதுமக்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுவதிலேதான் எனக்கு ஆவல் அதிகம். பத்திரிகைகளில் எழுதுவதனாலேயே சுயராஜ்யம் வந்துவிடாது. எவ்வளவுதான் நாம் மேடைமீது நின்று பிரசங்கங்கள் புரிந்தபோதிலும், சுயராஜ்யத்திற்குத் தகுதியுடையவர்களாகிவிட மாட்டோம். சுயஆட்சியைப் பெற நமக்குத் தகுதி ஏற்பட வேண்டுமென்றால், அது நாம் நடந்துகொள்ளும் விதத்தையும், செய்யும் செயல்களையும் பொறுத்தே இருக்கிறது. [கைதட்டு.] நமக்குச் சுயராஜ்யம் கிடைக்கிறதென்றே வைத்துக்கொள்ளுவோம். அப்போது நமது சொந்த அரசியலை எப்படி நடத்துவோம்? இதை யோசிக்க வேண்டும். நான் இன்று சம்பிரதாய முறையில் பேச விரும்ப வில்லை. என் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் எழுகின்றனவோ அவற்றை யெல்லாம் ஒளிக்காமல் அப்படியே சொல்ல விரும்புகிறேன். அதாவது, என்னுடைய சிந்தனையில் நீங்களும் பங்குகொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். இந்த மாதிரி மனம்விட்டுப் பேசும்போது, நான் அத்து மீறிச் செல்வதாகத் தோன்றினால், என்னை மன்னித்துவிடுங்கள். நேற்று மாலை நான் விசுவநாதர் கோயிலுக்குப் போயிருந்தேன். அதன் பிரகாரங்களின் வழியாகப் போய்க்கொண் டிருந்தபோது, என் மனதில் சில எண்ணங்கள் தோன்றின. யாரேனும் ஒரு அன்னியர், ஆகாயத்திலிருந்து நேரே விசுவநாதர் கோயிலுக்குள் குதித்தார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஹிந்துக்களது நிலைமையை இந்தக் கோயிலையும் அதன் நிலைமையையும்கொண்டே ஆராய்ந்தாரானால், ஹிந்துக்கள் மிகக் கேவலமான மக்கள் என்று முடிவுகட்டுவா ரல்லவா? இந்தப் பெரிய கோயிலின் இன்றைய நிலைமை நமது இயல்புகளைப் பிரதிபலித்துக்காட்ட வில்லையா? ஒரு ஹிந்து மதஸ்தனுக்கு இருக்கக் கூடிய ஆத்திரத்தோடேயே நான் இப்போது பேசுகிறேன். புனிதமான இந்த ஆலயத்தின் பிரகாரங்களை இவ்வளவு அசுத்தமான நிலை

மையில் வைத்திருக்கலாமா? கோயிலைச் சுற்றி எப்படியோ வீடுகளைக் கட்டிவிட்டார்கள். சந்துகள் வளைவாகவும் குறுகலாகவும் இருக்கின்றன. விசாலமாகவும் சுத்தமாகவும் உள்ள இடம் என்பதற்கு எடுத்துக்காட்டாக நமது கோயில்களைக்கூடச் சொல்ல முடியவில்லையென்றால், நம்முடைய சுய ஆட்சி என்று சொல்லுவதில் பொருளுண்டா? ஆங்கிலேயர், தங்கள் மூட்டை முடிச்சுகளையெல்லாம் சுருட்டிக் கட்டிக்கொண்டு, கட்டாயத்தின் பேரிலோ, அல்லது தாங்களாகவோ இந்தியாவைவிட்டுப் போனவுடனே, நமது கோயில்களில் புனிதத்தன்மையும் தூய்மையும், அமைதியும் தாமாகவே வந்து குடிபுகுந்துகொள்ளுமா?

சுயராஜ்யம் என்ற எண்ணம் நமக்கு வருவதற்கு முன் அதை அடைவதற்கு நம்மை நாம் தகுதியாக்கிக்கொள்ள வேண்டும்; இது மிகவும் கஷ்டமான வேலைதான். இருந்தாலும் அவசியம் செய்தாக வேண்டிய வேலை என்று காங்கிரஸ் தலைவர் கூறுகிறார். இதை நான் அப்படியே ஒப்புக்கொள்ளுகிறேன். பெரிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் துருப்புகள் வசிக்கும் பகுதி என்றும், இதர மக்கள் வசிக்கும் பகுதி என்றும், ஆக இரண்டு பகுதிகள் இருக்கின்றன. பெரும்பாலும் இந்த நகரங்கள் நரகங்களாகவே இருக்கின்றன; அவ்வளவு துர்நாற்றம். நகர வாழ்க்கையில் பொதுவாக நமக்குப் பழக்கமில்லை. நகர வாழ்க்கை நமக்கு அவசியம் வேண்டுமென்று தோன்றினால், கஷ்டமில்லாமல் வாழ்வதாகிய நாட்டுப்புற வாழ்க்கையை நகரத்தில் நாம் அமைத்துக்கொள்ள முடியாது. பம்பாய் நகரத்தில் இந்தியர்கள் வசிக்கும் பகுதியில், வீதியில் நடந்து செல்லுகிறபோதெல்லாம் மாடியிலிருந்து யாராவது எச்சில் துப்பிவிடுவார்களோ என்ற பயந்தான். இப்படிச் சதா பயந்துகொண்டே நடப்பது எவ்வளவு சங்கடமான காரியம்? நான் ரயிலில் அதிகமாகப் பிரயாணம் செய்கிறவன். மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் படுந் துன்பங்களை நேரில் கண்டிருக்கிறேன். இந்தத் துன்பங்கள் எல்லாவற்றுக்கும் ரயில்வே அதிகாரிகளே பொறுப்பென்று சொல்ல முடியாது. எப்படிச் சுத்தமாயிருப்பதென்னும் சாதாரண விஷயமே நமக்குத் தெரிவதில்லை. ரயில் வண்டிகளின் தளத்தில் எங்கு பார்த்தாலும் எச்சிலைத் துப்பிவைக்கி

ரோம்; அந்த இடங்களில் இரவில் ஜனங்கள் படுத்துக்கொள்ளுவார்களே என்பதை நாம் நினைத்துப்பார்ப்ப தில்லை. ரயில் வண்டியை எப்படி வைத்திருக்க வேண்டுமென்கிற நினைப்பே நமக்கு இருப்ப தில்லை. வண்டி முழுதும் சொல்ல முடியாத நாற்றமும், எச்சிலும், அசுத்தமும்தான். உயர்ந்த வகுப்புப் பிரயாணிகள் என்று சொல்லிக்கொள்ளுகிறார் களே, அவர்களும் பல சமயங்களில் இப்படித்தான் நடந்து கொள்ளுகிறார்கள். இந்த மேல் வகுப்புப் பிரயாணி களிலே, மாணவர்களையும் பார்த்திருக்கிறேன். அவர்களின் நடத்தையும் இப்படித்தான். அவர்களுக்கு ஆங்கிலம் பேசவரும்; நார்போக் சட்டை அணியத் தெரியும்; ஆகவே, மற்றவர்களை இடித்துத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்து, தங்களுக்கு இடம்விடும்படி அதிகாரம் செய்வார்கள். இப்படிப்பட்ட விஷயங்களை எல்லாம் நான் கூர்ந்து கவனித்திருக்கிறேன். உங்கள் இதயத்துடன் நேரே பேச எனக்கு நீங்கள் அனுமதி யளித்தபடியால், எனது இதயத்தை உங்கள்முன் அப்படியே திறந்து காட்டுகிறேன். சுயராஜ்ய மென்ற இலட்சியத்தை நோக்கி முன்னேறும்போது, இப்படிப்பட்ட ஒழுங்கீனத்தை யெல் லாம் சரிப்படுத்திக்கொண்டுபோவது அவசிய மல்லவா? இனி, வேறொரு காட்சியை உங்களுக்குக் காட்டுகிறேன். நேற்றையக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மேன்மைதங் கிய மகாராஜா அவர்கள், இந்திய மக்களின் வறுமையைப் பற்றிப் பேசினார்கள். மற்றும் பலரும் அதே விஷயத்தை அழுத்தமாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இந்தப் பெரிய பந்தலிலே அஸ்திவாரக் கல் நாட்டும் விழாவை வைஸ்ராய் நடத்தியபோது, நாம் என்ன கண்டோம்? உண்மையிலேயே, அலங்காரமான தொரு காட்சியைக் கண்டோம்; ஆபரணங்களைக் கொலுவைத்தது போன்ற காட்சி. பாரிஸ் நகரிலுள்ள சிறந்த நகை வியாபாரி யொரு வர் இங்கு வந்திருந்தால், அவருடைய கண்களுக்கு இந்தக் காட்சி பெரிய விருந்தாக அமைந்திருக்கும். எனக்கோ, விலையுயர்ந்த ஆபரணங்களை ஏராளமாக அணிந்து வந்த பிரபுக்களையும், சுதேச மன்னர்களையும் பார்த்தபோது, வறுமைப் பிணியால் பீடிக்கப்பட்டுள்ள கோடிக்கணக் கான எளிய மக்களைப்பற்றிய நினைப்புத்தான் வருகிறது.

'இந்த ஆபரணங்களை யெல்லாம் கழற்றிவைத்து, அவற்றை இந்திய மக்களின் பொதுச் சொத்தாகப் பாவித்து, அச் சொத்துக்கு நீங்கள் தர்மகர்த்தா என்ற முறையில் நடந்துகொள்ளாதவரையில், இந்தியாவுக்கு விமோசனம் கிடையாது' என்று அந்த மன்னர்களைப் பார்த்துச் சொல்ல வேண்டு மென்ற ஆத்திரம் எனக்குப் பொங்கிவருகிறது. [*'கேளுங்கள் 'கேளுங்கள்' என்ற பல குரல்கள்; கைதட்டு.*] நமது சக்கரவர்த்தியிடம் நமக்குள்ள ராஜவிசுவாசத்தைத் தெரிவித்துக்கொள்ளுவ தென்றால், நகைப் பெட்டிகளை எல்லாம் காலிசெய்து, உச்சிமுதல் உள்ளங்கால்வரைப் பூட்டிக்கொள்ள வேண்டிய அவசிய மில்லை. அப்படி அலங்கரித்துக்கொள்ளுவது அவசியந் தான் என்று நமது சக்கரவர்த்தியோ, வைஸ்ராயான ஹார் டிஞ்சு பிரபுவோ விரும்ப வில்லை யென்று நான் நிச்சய மாய்ச் சொல்லுவேன். ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்தமாதிரி எதையும் எதிர்பார்க்க வில்லை என்பதாக, அவரிடமிருந்தே வேண்டுமானாலும் ஒரு செய்தியைக் கொண்டுவரும் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்ளுகிறேன்; இதனால் எனக்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் பாதக மில்லை. பிரிட்டிஷ் இந்தியாவிலாயினும் சரி, சுதேச மன் னர்கள் ஆட்சி புரிகிற சமஸ்தானங்களிலாயினும் சரி, பெரிய நகர் ஒன்றில், பிரம்மாண்டமானதோர் அரண்மனை யைக் கட்டப்போகிறார்கள் என்று கேள்விப்படும்போதெல் லாம், எனக்கு ஆத்திரமுண்டாகி, 'அடடா! விவசாயிகளின் உழைப்பினால் வந்த செல்வம் அல்லவா இது?' என்று எனக் குள்ளேயே எண்ணிக்கொள்ளுவேன். இந்திய ஜனத் தொகையில் முக்கால் பங்குக்கு அதிகமான மக்கள் பயிர்த் தொழில் செய்பவர்கள். இவர்கள் ஒரு கதிர் விளையக்கூடிய இடத்தில், இரண்டு கதிர்களை விளையச் செய்யும் ஆற்றல் படைத்தவர்கள் என்று ஹிக்கின்பாதம் நேற்றிரவு பேசிய போது, அழகாகச் சொன்னார். இன்றைய நிலைமையைப் பார்த்தால், விவசாயிகளின் உழைப்பினால் வரும் பலன் முழுவதும் அவர்கள் கையைவிட்டுப் போய்விடுகிறது. நாம் எடுத்துக்கொள்ளுகிறோம், அல்லது வேறு சிலர் கொண்டு போக விட்டுவிடுகிறோம். இப்படிச் செய்கிறவரையில், சுயராஜ்ய உணர்ச்சி நம்மிடம் அதிகமாக இருக்க முடி

யாது. உழவன் மூலமாகவே நமக்கு விமோசனம் ஏற்பட வேண்டும். வக்கீல்களாலும், டாக்டர்களாலும், பணக்கார ஜமீன்தார்களாலும் நமக்குச் சுயராஜ்யம் வரப்போவதில்லை.

சென்ற இரண்டு மூன்று தினங்களாக நமது மனத்தை அலைத்துக்கொண் டிருந்த விஷயத்தைச் சொல்ல வேண்டுவது எனது முக்கிய கடமை யாகும். கடைசியில் சொல்லுகிறபடியால், அவ்வளவு முக்கியமான தல்ல என்று இதைக் கருதிவிடக் கூடாது. காசி நகர வீதிகளில் வைஸ்ராய் ஊர்வலம் வந்தபோது, ஏதாவது நேர்ந்துவிடுமோ என்று நாமெல்லோரும் மிகவும் கவலைப்பட்டோம். அனேக இடங்களில், போலிஸார் உளவுபார்ப்பவர்களை நிறுத்திவைத்திருந்தார்கள். இதை யறிந்து நாம் திடுக்கிட்டுப் போனோம். 'எதற்காக இந்த அவநம்பிக்கை? ஹார்டிஞ்சு பிரபு இப்படி அஞ்சி அஞ்சி வாழ்வதைவிட, செத்தேபோவது மேலாகத் தோன்றவில்லையா?' என்ற கேள்வி நம் மனதில் எழுந்தது. ஆனால், மகத்தான பலம் பொருந்திய ஒரு சக்கரவர்த்தியின் பிரதிநிதி இப்படி உயிர்விட இயலுமா? சாவுக்கு அஞ்சி அஞ்சியாயினும், எப்படியாவது உயிர் வாழ்வது அவசியம் என்று அவர் நினைக்கலாம். அதற்காக, இந்த உளவுகாரரை யெல்லாம் நம்மீது ஏவிவிடும்படியான அவசியம் அப்படி என்ன ஏற்பட்டுவிட்டது என்று நமக்குக் கோபம் உண்டாகிறது. நமக்கு இது அவமான மென்று எண்ணி, நமது உள்ளம் கொதிக்கலாம்; முணுமுணுக்கலாம்; ஆத்திரப்படலாம். ஆனால், இந்த ஆத்திரம் காரணமாகவும், உள்ளக்கொதிப்புக் காரணமாகவும், இன்று அராஜகத்தை ஆதரிக்கும் பெருங் கூட்ட மொன்று இந்தியாவில்ஏற்பட்டு விட்ட தென்பதை நாம் மறந்துவிடலாகாது. நானும் அராஜகத்தை ஆதரிப்பவன்தான்; ஆனால், இந்த வகையில் அல்ல, வேறு வகையில். மேலும், வேறொரு வகையான அராஜகத்தை ஆதரிக்கும் கூட்டத்தார் நம்மிடையே இருக்கிறார்கள். அவர்களை நான் அணுக நேரிட்டால், அவர்களின் அராஜகத்திற்கு இந்தியாவில் இடமில்லை என்று சொல்லிவிடுவேன். தம்மைக் கீழ்மைப்படுத்திய பகைவனை வெற்றிகொள்ளுவது இந்தியாவின் இலட்சியமானால், இந்த வகையான அராஜகத்தை வளர்க்கலாகாது. இந்த அரா

ஜகம் பயத்தின் அறிகுறி யாகும். கடவுளிடத்தில் நம் பிக்கை வைத்து, கடவுளுக்கு மட்டும் அஞ்சி நடப்போ மானல், எவருக்கும் நாம் அஞ்ச வேண்டுவ தில்லே; உளவு காரர் மட்டுமல்ல, மகாராஜாக்களாயினும் சரி, வைஸ்ராய் களாயினும் சரி, அல்லது ஜார்ஜ் மன்னரேயாயினும் சரி, அவர்களுக்கு நாம் அஞ்ச வேண்டுவதே இல்லே. நாட்டின் மீது கொண்டுள்ள அன்பு காரணமாகவே, இந்தக் கூட்டத் தார் அராஜகத்தை ஆதரிக்கிறார்கள். இவர்களின் அன்பை நான் போற்றுகிறேன். நாட்டின் நலனுக்காக, உயிரையும் விட இவர்கள் சித்தமா யிருப்பதனல், இவர்களே நான் கௌரவிக்கிறேன். ஆனல், கொலே செய்வதைப் போற்று தற்குரிய செயலென்று நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இவர்கள் கொலே செய்யத் துணிவது, கௌரமாக உயிர் துறக்கத் தாங்கள் சித்தமாயிருக்கிறார்கள் என்ப தைக் காட்டுமா? இத்தகைய பலாத்கார முறைகளுக்கு எந்தச் சாஸ்திரத்திலும் ஆதார மில்லே. ஆங்கிலேயர் இந்தியாவைவிட்டு வெளியேறினல்தான், இந்த நாட் டுக்கு விமோசன முண்டு என்று தோன்றினல், அவ் விதம் சொல்லுவதற்கு நான் சிறிதும் தயங்க மாட் டேன். அந்த நம்பிக்கைக்காக உயிர்விடவும் நான் தயாரா யிருப்பேன். அப்படி உயிர்விடுவதே கௌரவ மான தென்று கருதுகிறேன். வெடிகுண்டு எறிபவனு டைய நிலேமையோ அப்படி இல்லே. ரகசியமாகச் சூழ்ச்சி செய்கிறபடியால், அவன் வெளிவர அஞ்சுகிறான். பிடி பட்டுவிட்டால், நியாயத் தவறான வழியில் சென்றதற் காகத் தண்டனே அடைகிறான். 'வங்காளப் பிரிவினேக் கிளர்ச்சியில் நாம் வெற்றியடைந் திருக்கிறோ மல்லவா? பலாத்காரத்தில் இறங்காவிட்டால், சிலர் வெடிகுண்டு எறிந்திராவிட்டால், வெற்றி கிடைத் திராது' என்று சிலர் சொல்லுகிறார்கள். [பெஸண்டு அம்மையார்: 'தயவு செய்து இதை நிறுத்திக்கொள்ளுங்கள்.'] வங்காளத்தில் திரு. லேயன் தலேமையில் நடந்த கூட்டத்திலும் நான் இதையே சொன்னேன். நான் சொல்லிவருவது அவசிய மென்றே கருதுகிறேன். இதை நிறுத்திவிட வேண்டு மென்றல் அப்படியே செய்துவிடுகிறேன். [தலேவரைப் பார்த்து] தங் கள் உத்திரவு எதுவோ அதன்படி நடக்கக் காத்திருக்

கிறேன். இப்போது பேசுகிற விதமாக நான் பேசுவதனால் இந் நாட்டிற்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் நன்மை ஒன்றும் ஏற்படாதென்று நீங்கள் கருதினால், என் பேச்சை நிச்சயமாக நிறுத்திக்கொள்ளுகிறேன். [*'மேலே பேசுங்கள், மேலே பேசுங்கள்' என்ற கூச்சல்,*] [*தலைவர்: 'தயவு செய்து தங்கள் நோக்கத்தை விளக்கமாகச் சொல்லுங்கள்.'*] எனது நோக்கத்தை விளக்கிச் சொல்லிக்கொண்டுதானிருக்கிறேன். நான் மட்டும்........ [*மறுமுறையும் பெஸண்டு அம்மையார் தடுக்கிடுகிறார்.*] அன்பர்களே, பேச்சினிடையே இப்படித் தலையிடுவதற்காகக் கோபிக்காதீர்கள். பெஸண்டு அம்மையார் இப்போது நான் பேசுவதை நிறுத்தும்படி சொல்லுகிறாரென்றால், இந்தியாவின்மீது, அவர் கொண்டுள்ள பற்றினாலேயே அவர் அப்படிச் சொல்லுகிறார். இளைஞர்களாகிய உங்கள்முன், நான் இவ்வளவு தூரம் வாய்விட்டுப் பேசுவது சரியல்லவென்று நினைக்கிறார் போலும். அப்படியே வைத்துக்கொண்டாலும், விபரீதமாக நான் ஒன்றையும் சொல்லிவிடவில்லையே! இந்திய அரசாங்கத்தாரும் இந்தியப் பொதுமக்களும் ஒருவர்மீது ஒருவர்கொண்டுள்ள அவநம்பிக்கையை நீக்கிவிட வேண்டுமென்று தானே சொல்லுகிறேன். நமது இலட்சியத்தை அடைவதற்கு, பரஸ்பர அன்பையும் பரஸ்பர நம்பிக்கையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசு வேண்டும். பொறுப்பில்லாமல் வீட்டிலிருந்து பேசிக்கொண்டிருப்பதைவிட, இந்தக் கல்லூரியின் ஆதரவில் நாம் பேசுவது சிறந்ததல்லவா? இவ் விஷயங்களை வெளிப்படையாகப் பேசுவதே உத்தமம் என்று நினைக்கிறேன். இதற்குமுன் இவ்வாறு நான் பல இடங்களில் பேசி இருக்கிறேன்; அதனால் நல்ல பலனும் ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் ஆராய்ந்து அலசாத விஷயமே இல்லையென்பது எனக்குத் தெரியும்; அவர்களுக்குத் தெரியாத விஷயமும் இல்லை. அதன் காரணமாகவே, நான் நம்மிடத்தில் காணப்படும் குறைபாடுகளை யெல்லாம் எடுத்துச்சொல்லிக்கொண்டு வருகிறேன். எனது நாட்டின் புகழ் எனக்கு உயிர் போன்றது. அந்தப் புகழுக்கு மாசு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற கவலையினால்தான் இந்த எண்ணங்களை யெல்லாம் உங்களிடம் வெளியிட்டுச் சொல்லுகிறேன். இந்தியாவிலே

அராஜகம் இருக்க வேண்டிய அவசியமே யில்லை என்று உங்கள்முன் சொல்லிக்கொள்ளுகிறேன். மனதிலுள்ளவற்றை வெளிப்படையாகவும் ஒளிக்காமலும் அரசாங்கத்தாருக்கு எடுத்துச்சொல்லுவோம். நாம் சொல்லுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை யென்றால், அதன் பலனை அனுபவிக்கத் தயாரா யிருப்போம். இதற்காகத் தவறான சொல்லும் செயலும் நமக்கு வேண்டாம். இந்தியன் சிவில் சர்விஸ் என்னும் ஊழியர் வர்க்கமானது எவ்வளவோ பழிச்சொல்லுக்கு உள்ளாகி யிருக்கிறது. அந்த ஊழியர் வர்க்கத்தைச் சேர்ந்தவர் ஒருவரோடு ஒரு நாள் நான் பேச நேர்ந்தது. சிவில் சர்விஸ் உத்தியோகத்தினர் போக்கு வேறு, என்னுடைய போக்கு வேறு. இருந்தாலும், அவர் என்னோடு பேசிய முறையை நான் போற்றாமல் இருக்க முடியாது. 'காந்தியவர்களே, சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தர்களாகிய நாங்கள் எல்லோருமே மிகவும் கொடியவர்கள். மக்களைப் பரிபாலிப்பதற்குப் பதிலாகக் கொடுமைப்படுத்துகிறோம் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?' என்று அவர் என்னைக் கேட்டார். 'இல்லை' என்று சொன்னேன். அப்படியானால், சந்தர்ப்பம் வாய்க்கும்போது, பெரிதும் அவதூறுக்கு உள்ளாகியிருக்கும் எங்கள் உத்தியோக வர்க்கத்தின் சார்பாக நீங்கள் பரிந்துபேச வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். அவ்விதம் பரிந்துபேசவே நான் இங்கு வந்திருக்கிறேன். இந்தியன் சிவில் சர்விஸ் வர்க்கத்தில் வேலைபார்ப்போரில் பலர் மிகவும் அகம்பாவம் பிடித்தவர்கள்; மக்களை மிக்க கொடுமையாக நடத்துபவர்கள்; சில சமயங்களில் கண்மூடித்தனமாகவும் நடந்துகொள்ளுவார்கள். இவ்வளவும் உண்மைதான். இவர்கள் பரிபாலனம் செய்யும் அழகை வருணிப்பதற்கு இன்னும் பல கடுமையான பதங்களையும் உபயோகிக்கலாம். இவை யாவும் உண்மை யென்றே நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இந்தியாவில் சில வருஷங்கள் வாழ்ந்த பிறகு, இவர்களில் சிலர் கேவலமாக நடந்துகொள்ளுகிறார்கள் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், இவ்விதம் இவர்கள் கேவலமாய் நடந்துகொள்ளுவது எதைக் காட்டுகிறது? இந்தியாவுக்கு வருமுன், இவர்கள் நல்ல பண்புடையவர்களா யிருந்தார்கள்; இங்கே வந்தபின் அவர்களுடைய தன்மை சிறிது

மாறிவிட்ட தென்றால், நம்முடன் கலந்து பழகிய தோஷத்தினால் இப்படி நேர்ந்ததாகக் கொள்ளலா மல்லவா? ['இல்லை 'இல்லை' என்ற கூச்சல்.] நீங்களே சற்று நினைத்துப் பாருங்கள். நேற்றுவரை நல்லவனாக இருந்த ஒருவன், இன்று என்னுடன் பழகிய பின்னர், கெட்டுப்போய்விட்டானென்றால், அவன் கெட்டுப்போனதற்குப் பொறுப்பாளி அவனா? அல்லது நானா? சிவில் சர்விஸ் வர்க்கத்தார் இந்தியாவில் காலெடுத்து வைத்தவுடனே, பொய்யும் முகஸ்துதியும் அவநம்பிக்கையும் அவர்களைச் சூழ்ந்துகொள்ளுகின்றன. அதனால், அவர்களது நல்லதன்மை திரிந்துபோகிறது. அத்தகைய தீயசூழலில் நாம் இருந்தால், நம்முடைய தன்மையுமே கெட்டுவிடும். நம்முடைய குற்றத்தை உணர்ந்து, ஒப்புக்கொள்வதுதே நலம். சுயராஜ்யம் பெற வேண்டு மென்றால், அதை நாமே கைப்பற்ற வேண்டுமே யொழிய, வேறெவரும் நமக்கு அதைத் தந்துவிடப் போவதில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தையும் பிரிட்டிஷ் மக்களுடைய சரித்திரத்தையும் கவனித்துப் பாருங்கள். பிரிட்டன் சுதந்திரப் பற்றுள்ள நாடு. தாங்களாகவே சுயராஜ்யத்தைக் கைப்பற்றாத மக்களுக்கு, அந் நாடு ஒரு நாளும் சுதந்திரம் அளிக்கப்போவ தில்லை. தென் ஆப்பிரிக்காவில் நடந்த போயர் யுத்தத்திலிருந்து நீங்கள் நல்ல படிப்பினைகளைக் கற்றுக்கொள்ளலாம். சில வருஷங்களுக்கு முன்னே, எந்த மக்கள், பிரிட்ரிஷ் சாம்ராஜ்யத்தை எதிர்த்துவந்தார்களோ, அதே மக்கள், இன்று அந்த சாம்ராஜ்யத்தின் நண்பர்களா யிருக்கிறார்கள்.

[இந்த இடத்தில் யாரோ தூறுக்கிட்டதினால், பேச்சில் தடை ஏற்பட்டது. பிரசங்க மேடையை விட்டுப்போக நேரிட்டபடியால், பேச்சு நின்று போயிற்று.]

குருகுலத்தில்

"நிலையான எந்தக் காரியத்தையும், அல்லது உண்மையான எந்தக் காரியத்தையும் சாதிப்பதற்கு முதல் படியாக, நமது நெஞ்சத்தில் அஞ்சாமை வேரூன்றி நிற்க வேண்டு மென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். சமய உணர்ச்சி விழிப்படைந்தாலன்றி, அஞ்சாமை என்ற நிலையை நாம் அடைய முடியாது. இனிக் கடவுள் ஒருவருக்கே அஞ்சுவோம்; எந்த மனிதனுக்கும் அஞ்ச மாட்டோம்."

குருகுல ஆண்டு விழாவில் காந்திஜி பின்வருமாறு பேசினார்:

நான் பிரயாணம் செய்த இடங்களி லெல்லாம் இந்தியாவுக்கு உடனடியாகத் தேவையா யுள்ளது என்னவென்று கேட்கிறார்கள். வேறோரிடத்தில் சொன்ன விடையையே உங்களுக்கும் இன்று சொல்லுவது உசித மென்று நினைக்கிறேன். பொதுப்படையாகச் சொன்னால், சரியான சமய உணர்ச்சிதான் நமக்கு உடனே வேண்டியது. இப்படிப் பொதுப்படையாகச் சொல்லுவதனால் யாருக்கும் திருப்தி யுண்டாகாது என்பது எனக்குத் தெரியும். எல்லாக் காலத்துக்குமே பொருந்துவதான உண்மை அது. நம்மிடையே சமய உணர்ச்சி குன்றிய நிலையில் இருந்து வருவதனாலேயே, நாம் சதா பயந்த நிலையில் இருக்கிறோம். உலக விவகாரங்களிலும், சமய விவகாரங்களிலும் அதிகாரிகளாய் இருப்பவர்களைக் கண்டால் பயப்படுகிறோம். புரோகிதர் முன்னும் பண்டிதர் முன்னும் மனதைத் திறந்து பேச அஞ்சுகிறோம். அரசியல் அதிகாரிகளைக் கண்டுவிட்டால் நடுங்குகிறோம். இப்படி நடந்துகொள்ளுவதனால், நமக்கு நாமே தீங்கிழைத்துக்கொள்ளுவதுடன், அதிகாரிகளுக்குமே தீங்கிழைத்தவர்க ளாகிறோம். தங்களிடம் உண்மையை மறைத்துப் பேச வேண்டு மென்று புரோகிதரோ, அரசாங்க அதிகாரியோ ஒருக்காலும் விரும்ப மாட்டார்கள். இதையே வெல்லிங்டன் பிரபு சமீபத்தில் பம்பாயில் பேசியபோது சொன்னார். மறுத்துச் சொல்ல வேண்டு மென்று நினைக்கும் எந்த விஷயத்தையும், நம் மக்கள் வெளிப்படையாகச் சொல்ல அஞ்சுகிறார்கள் என்றார். அஞ்சாம லிருக்கப் பழக வேண்டு மென்று அந்தக் கூட்டத்தி லிருந்தவர்களுக்கு அவர் அறிவுறுத்தினார். அஞ்சாமை என்ற

வுடனே, பிறருடைய உணர்ச்சியைத் தக்கபடி மதிக்க வேண்டாம், அல்லது அதைப் புண்படுத்தலா மென்று ஒரு போதும் எற்படாது. நிலையான எந்தக் காரியத்தையும், அல்லது உண்மையான எந்தக் காரியத்தையும் சாதிப்ப தற்கு முதல் படியாக, நமது நெஞ்சத்தில் அஞ்சாமை வேரூன்றி நிற்க வேண்டு மென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். சமய உணர்ச்சி விழிப்படைந்தா லன்றி, அஞ்சாமை என்ற நிலையை நாம் அடைய முடியாது. இனிக் கடவுள் ஒருவருக்கே அஞ்சுவோம்; எந்த மனித னுக்கும் அஞ்ச மாட்டோம். நமக்குள்ளே ஒரு தெய்விக சக்தி இருக்கிறது. அது நாம் செய்யும் ஒவ்வொரு செயலை யும், நினைக்கிற ஒவ்வொரு நினைப்பையும், பார்த்துக் கொண் டிருக்கிறது. அது நம்மைப் பாதுகாத்து வரு கிறது; மெய்ந் நெறியில் நம்மைச் செலுத்துகிறது; இந்த உண்மையை நாம் உணர்ந்தோமானால், கடவுளுக்கு அஞ் சுவதல்லாமல், இந்த மண்மீதுள்ள வேறு எதற்குமே நாம் அஞ்ச மாட்டோம். இது நிச்சயம். மன்னருக் கெல்லாம் மன்னராக விளங்கும் கடவுளிடத்து நமக்கு விசுவாசமிருந் தால் போதும். மற்ற விசுவாச மெல்லாம் இதற்குப் பிறகு தான். கடவுளிடத்து உண்மையா யொழுகினால், அவ் வொழுக்கம், மற்றெல்லா ஒழுக்கத்தையும் திருத்தமான முறையில் அமைக்க வல்லது.

அஞ்சாமை என்ற மனநிலையைப் பண்படுத்தி, போது மான அளவு வளர்ச்சியடையச் செய்துவிட்டால், சுதேச இயக்கம் வளரும். இந்தியாவுக்கு விமோசனம் உண்டு என்ற நம்பிக்கையும் நமக்கு ஏற்படும். வேண்டுமென் கிறபோது வைத்துக்கொண்டு, வேண்டா மென்கிற போது ஒதுக்கித்தள்ளுவது சுதேசியம் ஆகாது. அது போலிச் சுதேசியம். நான் இப்போது உண்மையான சுதேசியத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். சுதேசியம் என்ற சொல்லுக்கு, சாதாரண வழக்கில் என்ன பொருள் இருக்கிறதோ, அதைவிட மிகவும் ஆழ்ந்த பொருள் இருப்ப தாக நான் கருதுகிறேன். நமது பொருளாதார வாழ்க்கை யிலும் அரசியல் வாழ்க்கையிலும் சமய வாழ்க்கையிலும் சுதேசியம் என்ற தத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டு மென்பது எனது விருப்பம். ஆகவே, எப்போதாவது ஒரு

நாள், சுதேசி உடையை உடுத்திக்கொள்ளுவதனால் மட்டும் சுதேசி ஆகிவிட முடியாது. சுதேசி உடையை நாம் எப்போதுமே அணிய வேண்டும்; பொறாமை காரணமாகவோ பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற உணர்ச்சி காரணமாகவோ அல்ல, நாம் சுதேசி உடை உடுப்பது. நமது அருமைத் தாய் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமை என்றே, நாம் சுதேசி உடையை அணிகிறோம். அன்னிய நாட்டுத் துணியை அணியும்போது நிச்சயமாகச் சுதேசியத்திற்குப் பங்கம் விளைவிக்கிறோம். அன்றியும், அன்னிய நாட்டினர் உடை அணியும் முறையைப் பின்பற்றி நாமும் உடை யணிந்தால், அதனாலும் சுதேசியத்திற்குப் பங்கம் விளைவிக்கிறோமென்பதில் சந்தேகமில்லை. நமது சூழ்நிலைக்கும், இடம் பொருள் ஏவலுக்கும், நாம் ஆடை அணிந்து கொள்ளும் முறைக்கும் சம்பந்தமிருக்கவே செய்கிறது. வெள்ளைக்காரர் அணியும் கால்சட்டை மேல் சட்டைகளை விட, நாம் உடுத்திக்கொள்ளும் ஆடை எவ்வளவோ அழகு வாய்ந்தது. ஆடை அணிந்துகொள்ளும் நம்முடைய முறையில் ஒருவிதத் தனி அழகும் சிறப்பும் இருக்கின்றன. பைஜமாவிற்கு மேலே ஒரு சட்டை; அதற்கு மேலே இடை வரை வரும் கையில்லாத இன்னொரு சின்னச் சட்டை; ஆனால், கழுத்தைச் சுற்றி டையும் அதன் பறக்கிற வாலும் கிடையாது. இப்படி ஒரு இந்தியன் காட்சி யளிப்பானாயின், அழகான காட்சி என்று அதைச் சொல்லவா முடியும்? இந்த விதமாக, மதத்திலும் சுதேசிய உணர்ச்சி வேண்டும். அதனால், சென்ற காலத்தின் சிறப்பை நினைக்க நேருகிறது; பூர்வ காலத்தில் நமது முன்னோர்கள் அடைந்த பெருமைகளை மதிப்பிட முடிகிறது. அது மட்டுமல்ல, இந்தத் தலைமுறையில் அவற்றைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டுவர அந்த உணர்ச்சி வழிகாட்டியாய் இருக்கிறது. தற்கால நாகரிகத்திற்கும் இந்திய நாகரிகத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். தற்கால நாகரிகம் ஐரோப்பாவை ஒரு நரகமாக்கி வைத்திருக்கிறது. அக்கிரமம், அறியாமை என்ற சக்திகளுக்கு அந்த நாகரிகம் ஆதாரமாய் இருக்கிறது. நம்முடைய பழங்கால நாகரிமோ, சுருங்கச் சொன்னால், தெய்விக சக்திக்கு ஆதாரமாய் இருக்கிறது. தற்கால நாகரிகம்

உலக விஷயங்களை ஒட்டி அமைந்திருக்கிறது. நமது நாகரிகமோ அப்படி அல்ல. ஆன்மீக விஷயங்களை ஒட்டி அமைந்திருக்கிறது. வஸ்து, அதாவது ஸ்தூலப்பொருள் எதனால் ஆக்கப்பட்டிருக்கிறது? அதனுடைய இயற்கையும் போக்கும் எப்படி உள்ளன என்று கண்டுபிடிப்பதில், தற்கால நாகரிகம் முனைந்து வேலை செய்கிறது. அத்துடன் உற்பத்தி சாதனங்களையும் நாசக் கருவிகளையும் கண்டுபிடிப்பதில், மனிதனுடைய மூளையை எல்லாம் அது வேலை வாங்கி விடுகிறது. நமது நாகரிகம் முக்கியமாக ஆத்மாவைப்பற்றிய உண்மைகளை அலசி ஆராய்வதில் ஈடுபட்டிருக்கிறது. சரியான வாழ்க்கைக்கு இன்றியமையாதவை எவை எவை என்று, நமது சாஸ்திரங்கள் சந்தேகத்திற்கு இடமில்லாமல் வரம்புகட்டி இருக்கின்றன. உண்மை வழியில் ஒழுகுதல், ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், உயிருக்கு ஹிம்சை செய்யாதிருத்தல், பிறர் சொத்துக்கு ஆசைப்படாதிருத்தல், தினசரி வாழ்க்கைக்குத் தேவையானதற்கு மேல் ஒரு பொருளையும் வைத்துக் கொள்ளாமை இந்த விஷயங்களைப்பற்றி எல்லாம் நமது சாஸ்திரங்கள் எடுத்துக் கூறி இருக்கின்றன. மேற்சொன்ன விஷயங்களை, செயலிற் கொண்டுவராதவரையில், தெய்விக அருளைப்பற்றி அறிந்துகொள்ளுவது முடியாத காரியம் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. அஹிம்சையை செயலில் கடைப்பிடிக்கும்போது அது உண்மையான அன்பாகவும் கருணையாகவும் விளங்குகிறது. அஹிம்சை என்கிற இந்தக் குணத்தைச் சரியான முறையில் பூரணமாக வளர்த்துவிடுவோமேயானால், உலகம் முழுவதையும் நாம் வெற்றி கொள்ளலாம். இது நிச்சயமென்று நமது நாகரிகம் துணிந்து உரைக்கிறது. இந்த உண்மையை அறிந்து, நான் செயலில் கடைப்பிடித்து வருகிறேன். இது சரிதான் என்பதற்கு எல்லோரும் ஒப்புக்கொள்ளும் வகையில், ஏராளமான உதாரணங்களை என்னால் காட்ட முடியும்.

அஹிம்சையால், அரசியல் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பயனை இங்கு ஆராய்வோம். தானத்தில் எத்தனையோ வகை உண்டு. ஆனால், உயிரையே தானம் செய்வதைப்போன்ற சிறந்த தானம் வேறில்லையென்று நமது

சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. அரசாங்க அதிகாரிகளின் உயிருக்கு நாம் எவ்விதத் தீங்கும் புரிவதில்லையென்று உறுதிகொண்டிருந்தால், இன்று அவர்களுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு எவ்வளவு மேன்மையானதாக இருந்திருக்கும்! அவர்கள் செய்த செயலைக் குறித்து நாம் எவ்வளவு ஆத்திரங்கொண்டபோதிலும், அவர்கள் உடலை, நமது உடல் போலவே புனிதமாகப் பாவிக்கிறோம் என்று அவர்கள் உணர்ந்துவிடக் கூடுமென்றால், நம்மிடத்திலே அவர்களுக்கு நல்லெண்ணம் உண்டாகும்; பரஸ்பர நம்பிக்கையும் ஏற்பட்டுவிடும். இரு தரப்பிலும் எதையும் ஒளித்துவையாமல் மனம்விட்டுப் பேசக்கூடிய நிலைமை உண்டாகும்; அதன் மூலம், இன்று நமக்குள்ள துன்பங்களுக் கெல்லாம் நியாயமான முறையிலே கௌரவமானதொரு முடிவுகாண வழி ஏற்படும். அஹிம்சையைக் கடைப்பிடிப்பது சம்பந்தமாக நீங்கள் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நாம் அஹிம்சையைக் கடைப்பிடித் தொழுகும்போது, நமது எதிரிகளும் அஹிம்சா நெறிப்படி நடக்க வேண்டும் என்பதில்லை. ஆனால், உண்மை என்னவெனில், நாம் அஹிம்சையைக் கடைப்பிடிப்பதன் பயனாக, இறுதியில், நமது எதிரிகளும் அஹிம்சையைக் கடைப்பிடித்துத் தீரவேண்டியே வரும். உலகத்துக்கே நாம் அரியதோர் உபதேசத்தைச் செய்யப் போகிறோம்; நமது நாகரிகத்தின் மூலமாகவே அந்த உபதேசம் வெளியாகும் என்று நமது நாட்டினர் பலர் நம்புகிறார்கள்; அப்படி நம்புகிறவர்களில் நானும் ஒருவன். எனது நலத்தைக் கருதியே பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் நான் விசுவாச முடையவனாக இருக்கிறேன். உலக முழுவதிலும் இந்த அஹிம்சா தத்துவமென்னும் மகத்தான செய்தியைப் பரப்புவதற்கு, பிரிட்டிஷ் ஜனசமூகத்தை உபயோகித்துக்கொள்ள வேண்டுமென்பது என் ஆவல். நம்மை வெற்றிகொண்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்களே, அந்த வெற்றி வீரர்களை நாம் வெற்றிகொண்டால்தான், என்னுடைய ஆவல் நிறைவேற முடியும். ஆரிய சமாஜ நண்பர்களே! இந்தப்புனிதமானபணியைச்செய்து முடிப்பதற் கென்றே நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். நமது சாஸ்திரங்களை நுணுகி

ஆராய்வதாக நீங்கள் சொல்லி வருகிறீர்கள். ஆராயாமல் எதையும் நீங்கள் ஒப்புக்கொள்ளுவ- தில்லே. அது மட்டு மல்ல. சரியென்று நம்புவதைச் செயலில் கடைப்பிடிப்ப தற்குஅஞ்சமாட்டோம்என்றும்நீங்கள் சொல்லிக்கொள்ளு கிறீர்கள். நீங்கள் சொல்லுவதெல்லாம் உண்மையாயின், அஹிம்சா தத்துவத்தை செயலில் கொண்டுவர முன்வாருங் கள். பொழுது போக்கிற்காக, 'அஹிம்சை, அஹிம்சை' என்று வாயினுல் பேசிவிட்டுப் போவதற்கு இங்கு இட மில்லே. அஹிம்சையை இன்ன சமயங்களில்தான் கடைப் பிடிக்கலா மென்று சொல்லுவதும் எனக்குச் சரி யென்று தோன்ற வில்லே. உடனே விளேயும் பலன்களேக் கருதாமல், அஹிம்சையைச் செயலில் கொண்டுவர நீங்கள் துணிந்தால் உங்கள் நம்பிக்கையில் உங்களுக்கு உறுதி இருக்கிற தென்பதை நான் ஒப்புக்கொள்ளுவேன். அவ்விதம் செய் தால், இந்தியாவுக்கு நீங்கள் விமோசனத்தைத் தேடிக் கொடுத்தவர்க ளாவீர்கள். அது மட்டு மல்ல, மனித சமூகத் திற்கே ஒருவன் செய்யக் கூடிய மிக்க மேன்மையான சேவையையும் செய்தவர்களாவீர்கள். இந்தச் சேவையைச் செய்யும் பொருட்டே மகான் சுவாமி தயானந்தர் பிறந்தார். சுதேசியம், வேகத்துடன் இயங்குகிற, ஒரு பெரிய சக்தி. இந்தச் சக்தியை, ஒரு கணங்கூட, சும்மாவிட்டு வைக்க லாகாது: விழிப்போடு உபயோகித்த வண்ணம் இருக்க வேண்டும். உபயோகிக்கும்போது, உயர்ந்த நோக்கத் தோடேயே அதை உபயோகிக்க வேண்டும். அப்படி உப யோகிக்கிறோமா என்பதை நிச்சயிப்பதற்கு, அடிக்கடி நமது நடத்தையை நாமே துருவிப்பார்த்துக்கொள்ள வேண் டும். இந்தத் தத்துவம், சோம்பேறிகளுக்கு ஏற்பட்டதன்று. சத்தியத்துக்காக, முகமலர்ச்சியுடன் உயிரையே தியாகம் செய்ய முன்வருவோருக்கே, முக்கியமாக, இந்தத் தத்துவம் ஏற்பட்டுள்ளது. சுதேசியத்தின் வேறு பல அம்சங்களேப் பற்றி விரிவாகப் பேசிக்கொண்டே போகலாம். ஆனுல், நான் சொல்ல விரும்பியதை நீங்கள் உணரத்தக்க அளவு தெரியப்படுத்திவிட்டதாக நான் கருதுகிறேன். நீங்கள் சீர்திருத்தக்காரர்கள்; ஆகவே, நான் சொன்ன விஷயங் களே ஆராயாமல் தள்ளிவிட மாட்டீர்கள். நான் சொல்லு வது நியாய மென்று உங்களுக்குத் தோன்றினுல், இன்று

நான் எடுத்துச் சொன்ன நிலையான உண்மைகளை வாழ்க்கையிலே கடைப்பிடிப்பீர்களென்று எதிர்பார்ப்பதோடு, அவற்றை இந்தியா முழுதும் பரப்ப வேலை செய்வீர்களென்றும் எதிர்பார்க்கிறேன். சென்ற காலத்தில் அரிய காரியங்களை நீங்கள் செய்து முடித்திருக்கிறீர்கள். ஆகவே, நான் மேலே சொன்ன உண்மைகளையும் கடைப்பிடிப்பீர்களென்று எதிர்பார்க்க எனக்கு உரிமை யிருக்கிறது.

‘கடவுளுக்காக, அரசனுக்காக, தேசத்துக்காக’

“உலகமெங்குமே மனித சமூகத்திற்கு ஒரேயொரு கொள்கை தான் இருக்க முடியும். கடவுளுக்கு உண்மையாய் நடப்பது தான் அது. கடவுளுக்கு உண்மையாய் நடப்பது என்பதில் அரசனுக்கும், தேசத்திற்கும், மனித சமூகத்திற்கும், உண்மை யாய் நடப்பதும் அடங்கி யிருக்கிறது. அரசனும் தேசமும் மனித சமூகமும் கடவுளுக்கு மாறுபட்டு நிற்கும்போது, கடவு ளுக்கு உண்மையாய் நடக்க வியலாத நிலையையே அது குறிக் கிறது. அரசனும் தேசமும் மனித சமூகமும் கடவுள் நெறி யில் நிற்கிறவரையில்தான் ராஜபக்தியோ தேசபக்தியோ இருக்க முடியும்.”

நான் இந்தியாவில் பிரயாணம் செய்துகொண் டிருந்த காலம். அப்போது ஒரு சமயம், சில சிறுவர்களைப் பார்க்க நேர்ந்தது. அவர்கள் எல்லோருமே ஒரே மாதிரி யான உடையை அணிந்திருந்தார்கள். அவ்விதம் ஒரே மாதிரியான உடை அணிவதன் நோக்கம் என்னவென்று அவர்களைக் கேட்டேன். அவர்களுடைய உடை அன்னியத் துணியாலோ, அன்னியநாட்டு நூலில் நெய்யப்பட்ட துணி யாலோ தைத்திருந்தது என்பதைக் கண்டேன். சாரணர் கள் அணியும் உடை யென்று, அதை அவர்கள் சொன்னார் கள். அவர்கள் சொன்ன பதில் எனது ஆவலை அதிகப் படுத்தியது. சாரணர்கள் என்ற முறையில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிய ஆவலா யிருந்தது. அதைப்பற்றி அவர்களைக் கேட்டேன். ‘கடவுளுக்காக, அரசனுக்காக, தேசத்திற்காக வாழ்கிறோம்’ என்று அவர் கள் பதில் சொன்னார்கள். ‘உங்களுடைய அரசர் யார்?’ என்று கேட்டேன். ‘ஜார்ஜ் மன்னர்’ என்று பதில் வந் தது. அவர்களில் ஒரு சிறுவனைப் பார்த்து நான் கேட் டேன், ‘ஜாலியன்வாலா சம்பவம் உனக்குத் தெரிந் திருக்குமே, அதைப்பற்றி என்ன நினைக்கிறாய்? 1919-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி யன்று, நீ அந்த ஜாலியன்வாலா சவுக்கத்தில் இருந்ததாக வைத்துக்கொள். திகிலடைந்திருந்த உன் தேச மக்கள்மீது, ஜெனரல் டயர் உன்னைச் சுடச் சொல்லுகிறார்; அப்போது நீ என்ன செய்திருப்பாய்?’

'அதைக் கேட்பானேன்? நான் அந்த உத்திரவுக்குக் கீழ்ப்படிய மறுத்திருப்பேன்!'

'ஆனால், ஜெனரல் டயர் அரசர் படைகளுக்கு உரிய உடுப்பல்லவா அணிந்திருந்தார்?'

'அதனுலென்ன? அவர் அடக்கியாளும் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர். நானே அந்த வர்க்கத்தோடு எவ்விதத் தொடர்பும் இல்லாதவன்.'

அதிகார வர்க்கம் வேறு ஜார்ஜ் மன்னர் வேறு என்று பிரித்து எண்ண முடியாது என்பதை, நான் அவனுக்குச் சொன்னேன். அரசர் என்று சொல்லுவதெல்லாம் பிரிட்டிஷ் சாம்ரராஜ்யத்தைக் குறிக்கும் ஒரு அடையாளந்தான்; சாம்ராஜ்யம் இப்போது எப்படி நடக்கிறது என்பதை யோசித்துப்பார்த்தால், எந்த இந்தியனும் அதற்கு உண்மையாய் ஒழுகுவது சாத்தியமா யிராது; அந்தச் சாம்ராஜ்யத்திற்கு உண்மையா யிருக்கிற தென்ருல், அதே சமயத்தில் கடவுளுக்கு உண்மையா யிருப்ப தென்பது முடியாத காரியம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், ராணுவச் சட்டத்தை அமலுக்குக்கொண்டுவந்து, ஜனங்களுடைய மனதில் பயத்தை உண்டுபண்ணுவதற்காக, பயங்கரமான அடக்குமுறையைக் கையாளுகிறது. இந்த அடக்குமுறைக்குப் பொறுப்பா யிருக்கும் சாம்ராஜ்யத்தை, கடவுளை மதிக்காத சாம்ராஜ்யம் என்று சொல்லாமல், வேறு எப்படிச் சொல்லுவது? இந்தச் சாம்ராஜ்யம், தான் செய்துள்ள தீங்கை எண்ணி வருந்த மறுக்கிறது; பொறுப் புணர்ச்சியுடன், தான் கௌரமாகச் செய்து கொடுத்த ஒப்பந்தங்களை மீறி ரகசியமாக உடன்படிக்கைகள் செய்து கொள்ளுகிறது; இப்படிப்பட்ட சாம்ராஜ்யத்தில் கடவுளுக்கு இடமுண்டா? இந்தச் சாம்ராஜ்யத்திற்கு உண்மையாய் ஒழுகுவ தென்னும் காரியம் கடவுடளித்து உண்மையில்லாது ஒழுகுவ தென்பதே யாகும்.

இவ்வளவையும் கேட்டபோது அந்தச் சிறுவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை; மனம் குழம்பிவிட்டது.

தொடர்ந்து என் கருத்தைச் சொன்னேன்: 'நமது நாடு ஏராளமான பணம் சேர்க்க விரும்புவதாக வைத்துக் கொள்; மற்ற நாட்டு மக்களை அது சுரண்டுகிறது; லாபத்தை உத்தேசித்து, குடி வகைகளில் வியாபாரம் செய்

கிறது. சொந்த வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்ளும் பொருட்டு மற்ற நாடுகளோடு போர் தொடங்குகிறது; அதிகாரத்தையும் கௌரவத்தையும் இழந்துவிடாம லிருக்கும் பொருட்டு, பித்தலாட்ட மெல்லாம் செய்கிறது; இந்தக் காரியங்களை யெல்லாம் செய்வதற்குச் சௌகரியமாக, கடவுள் சிந்தனையையே அது அகற்றிவிடுவதாக வைத்துக்கொள். அப்போது கடவுளுக்கும் தேசத்திற்கும் சேர்ந்தாற்போல் எப்படி நாம் உண்மையாக நடக்க முடியும்? அந்த நிலையில், நாம் கடவுளையே மேலாகக்கொண்டு, இதர விஷயங்களைக் கைவிட்டுவிட வேண்டாமா? ஆகவே, கடவுளுக்கு மட்டும் உண்மையாக, விசுவாசமாக நடந்துகொள்ள நீ கடமைப்பட்டவனே யன்றி, வேறெவருக்கும் இதே கருத்தோடு உண்மையா யிருக்கவோ, விசுவாசமா யிருக்கவோ கடமைப்பட்டவன் அல்லன். இதுவே நான் உனக்குச் சொல்லவேண்டிய காரியம்.

அந்தச் சிறுவனுடைய தோழர்களில் பலர் இந்த சம்பாஷணையை அதிகக் கவனமாய்க் கேட்டு வந்தார்கள். அவர்களின் தலைவரும் அங்கே வந்து சேர்ந்தார். அவரிடம் என்னுடைய கருத்தைத் திரும்பவும் சொல்லி, நான் சொன்னவற்றை யெல்லாம் சிந்தித்துப்பார்க்கும் படியாகக் கேட்டுக்கொண்டேன். அவரைப் பின்பற்றும் இளைஞர்கள் பலரையும் இவ்விஷயங்களைக் குறித்து மேலும் மேலும் ஆராய்ந்து சிந்திக்கும்படி தூண்டுமாறு அவரைக் கேட்டுக்கொண்டேன். மனக்கவர்ச்சியுடன் விவாதித்து வந்த விஷயம் முடிந்தது. ரயில் வண்டியும் ஸ்டேஷனை விட்டுப் புறப்பட்டது. இந்த அருமையான சிறுவர்களை யெல்லாம் இப்படித் தவறான வழியில் பயிற்றுகிறார்களே யென்று எனக்கு வருத்தமா யிருந்தது. ஒத்துழையாமை இயக்கத்தில் அமைந்துள்ள ஆழமான கருத்துக்கள் யாவும் எனக்கு அப்போது விளங்கலாயின. உலகமெங்குமே மனித சமூகத்திற்கு ஒரேயொரு கொள்கைதான் இருக்க முடியும். கடவுளுக்கு உண்மையாய் நடப்பதுதான் அது. கடவுளுக்கு உண்மையாய் நடப்பது என்பதில், அரசனுக்கும் தேசத்திற்கும் மனித சமூகத்திற்கும், உண்மையாய் நடப்பதும் அடங்கி யிருக்கிறது. அரசனும் தேசமும் மனித சமூகமும் கடவுளுக்கு மாறுபட்டு நிற்கும்

போது, கடவுளுக்கு உண்மையாய் நடக்க வியலாத நிலையையே குறிக்கிறது. அரசனும் தேசமும் மனித சமூகமும் கடவுள் நெறியில் நிற்கிறவரையில்தான் ராஜபக்தியோ, தேசபக்தியோ இருக்க முடியும்.

இந் நாட்டின் இளைஞர்களும் அவர்களுடைய ஆசிரியர்களும் தாங்கள் சென்ற நெறி பிழையான தென்று கண்டால், அதை விலக்கிவிட்டு, சரியான நெறியில் ஒழுகுவார்களென்று நம்புகிறேன். தவறென்று முடிவுகட்டக்கூடிய கொள்கைகளை ஏதோ பிரம்ம சூத்திரம் என்று சொல்லிக் கொடுப்பதால், இளைஞருக்கு ஏற்படும் தீங்கு கொஞ்ச நஞ்ச மல்ல. பக்குவமடையாத சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துவிடுவதனல் யாதொரு பயனுமில்லை.

தேசியச் சர்வகலாசாலைப் பிரசங்கம்

"நான், இலையுதிர் காலத்தில் ஒரு மரத்தில் இருக்கும் இலைக்குச் சமானமாயிருக்கிறேன். இந்த இலை எந்தச் சமயத்திலும் கீழே உதிர்ந்துவிடலாம். ஆசிரியர்களோ, இப்பொழுது தளிர்த்த இளந் தளிர்கள். இந்தத் தளிர்களும் முற்றிய பிறகு, காலக் கிரமத்தில் உதிர்ந்துவிடும். ஆனால், மாணவர்களாகிய நீங்களோ, பழுத்த இலைகளுக்குப் பதிலாகப் புதிய இலைகளைத் தளிர்க்கச் செய்யவல்ல கிளைகள் ஆவீர்கள்."

கூர்ஜர வித்தியாபீடம் என்று சொல்லப்படும் கூர்ஜர தேசியக் கலாசாலையைத் திறந்துவைத்தபோது, காந்திஜி பின்வருமாறு பேசினர்:

இங்கே வந்திருக்கும் பெண்மணிகளுக்கும் பெரியவர்களுக்கும் ஒரு விண்ணப்பம்: இப்போது நடந்துவரும் ஒத்துழையாமை இயக்கத்தை ஆசீர்வதிக்கும்படி முதன் முதலில் உங்களை கேட்டுக்கொள்ளுகிறேன். சொல்லளவிலே ஆசீர்வதிப்பதோடு மட்டும் நின்றுவிடாது, இந்த இயக்கம் வெற்றிபெறச் செயலினாலும் உதவிபுரிய முன்வரும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குச் சரியான வழி, உங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் இந்த ஸ்தாபனத்திற்குக் கல்வி கற்க அனுப்புவதாகும். இத்தகைய ஸ்தாபனங்களுக்கு எந்தக் காலத்திலும் இந்தியா பொருள் உதவி செய்தே வந்திருக்கிறது. இந்த ஸ்தாபனங்களின் முன்னேற்றம் பொருளுதவி இல்லாததனாலே தடைபட்டுப் போய்விடவில்லை. தக்க மனிதர்களும், ஆசிரியர்களும், கல்விநிலையங்களை அமைத்து நடத்துபவர்களும் இல்லாத குறைதான் முன்னேற்றம் இல்லாததற்குக் காரணமென்பது என் துணிபு. கருவி கோணல் என்று சொல்லுபவன் சரியான வேலைக்காரன் அல்லன். தனக்குக் கிடைத்துள்ள கருவியைக்கொண்டே, முடிந்த அளவு நல்ல முறையில் வேலை செய்கிறவனே, எல்லோரையும்விடச் சிறந்த வேலைக்காரன். இங்குள்ள தலைமைப் பேராசிரியருக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் நான் சொல்லக் கூடியது ஒன்றுதான்: சுதந்திர தத்துவத்தைக் கற்றுக் கொடுங்கள் என்றான். பாண்டித்தியத்தைக்காட்டிக் கற்பிப்பது பிரயோசனமில்லை; ஆசிரியர்களது உண்மையான ஒழுக்கத்தாலே, மாணவர்கள் தாங்களாகவே உணர்ந்து

கொள்ள வேண்டும். அதுவே சிறந்த முறையில் கல்வி கற்பிப்பதாகும். இந்த ஒரே கொள்கையை ஆசிரியர்கள் கடைப்பிடித்தால் போதும். அரசாங்கத்தின் சார்பில் நின்று போராடும் சக்திகளை யெல்லாம், அமைதி வாய்ந்த தங்கள் தெய்விக சக்திகளைக்கொண்டே எதிர்க்க வேண்டும் அவர்கள். சுதந்திரம் என்ற வித்தை விதைக்கிறோம். அதற்கு எவ்வகையிலும் தீங்கு நேராதபடி பாதுகாத்து வளர்த்து, அதை சுயராஜ்யம் என்ற பெரிய மரமாக்க வேண்டும். இதற்கு நான் உங்களையே நம்பியிருக்கிறேன். என் நம்பிக்கை நிறைவேறக் கடவுள் அருள்புரிவாராக! ஒரு சர்வ கலாசாலையின் தலைவராக இருப்பதற்கு வேண்டிய விசேஷ பாண்டித்தியம் என்னிடம் இல்லை யென்பதை நான் அறிவேன். ஆயினும், நான் கொண்ட நம்பிக்கை காரணமாக, இதை ஒப்புக்கொள்ளும்படி என்னை நீங்கள் கேட்டபோது, நானும் ஒப்புக்கொண்டேன். இந்தப் பணியைச் செய்வதற்காகவே, என்னுடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்யத் தயாரா யிருக்கிறேன். என்னைப்போலவே நீங்களும் நினைக்கிறீர்க ளென்பதனாலே, இவ்வளவு உயர்ந்த வேலையை ஏற்றுக்கொள்ள இசைந்தேன்.

இனி, மாணவர்களுக்கு ஒரு வார்த்தை. தற்கால மாணவர்களை எல்லோரும் குறைகூறுவது வழக்கமா யிருந்து வருகிறது. அவர்கள் ஒரு கண்ணாடிபோல் இருக்கிறார்கள்; தற்கால நிலைமை யெல்லாம் அப்படியே அந்தக் கண்ணாடியில் பிரதிபலிக்கிறது. ஆகவே, அவர்களைக் குறைகூறுவது பாவம் என்றே எனக்குத் தோன்றுகிறது. அவர்களைத் தெரிந்துகொள்ளுவதில் கஷ்டமே யில்லை; புத்தகத்தைப் படிக்கிறதுபோல், அவர்களுடைய மனதைப் படித்துவிடலாம். அவர்களிடம் சிறந்த பண்புகள் இல்லை யென்றால், அது அவர்களுடைய குற்றமல்ல. பெற்றோரும் ஆசிரியர்களும் அரசுமே குற்றவாளிகள் ஆவர். அரசனைப் பற்றி மட்டும் குற்றஞ் சொல்லுவானேன்? **யதா ராஜா ததா ப்ரஜா** [அரசனெவ் வழி, அவ் வழி குடிகள்] என்பது ஒரு பழமொழி; இது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை தான், **யதா ப்ரஜா, ததா ராஜா,** [குடிகளெவ் வழி அவ் வழி அரசன்] என்ற வாக்கியமும். அரசனது அதிகாரம் செல்லுகிறவரையில்தானே அரசன் அரசனாக இருக்

கிறான். மக்கள் தவறாக நடக்கிறார்கள்; அவர்களுடைய தவறுகளெல்லாம் மாணவர்களிடம் பிரதிபலிக்கின்றன. ஆகவே, பெற்றோரையும் ஆசிரியர்களையும் அரசர்களையும் திருத்த முயல வேண்டும். ஒவ்வொரு வீடும் ஒரு கலாசாலை. பெற்றோர்களே ஆசிரியர்கள். இன்றைய இந்தியாவிலே இந்தப் புனிதமான கடமையைப் பெற்றோர் மறந்துவிட்டனர். தவிர, நம்மிடையே அன்னிய நாகரிகம் வந்திருக்கிறதை மதிப்பிட நம்மால் இயலவில்லை. கடன் வாங்கிய பண்பாட்டைக்கொண்டு உன்னத நிலையை அடைய முடியுமா? முடியவே முடியாது.

இந்தச் சர்வகலாசாலையை ஒரு கல்வி ஸ்தாபனம் என்ற முறையில் அல்லாமல், ஒரு தேசிய ஸ்தாபனம் என்ற முறையிலேயே ஆரம்பித்து வைக்கிறோம். மாணவர்கள் மனதில் தனித்த ஒழுக்கநடையையும் தைரியத்தையும் பதியச் செய்வதற்காகவே, இதை நாம் ஆரம்பித்து வைக்கிறோம். இதில் அடையும் வெற்றியை வைத்தே, சுயராஜ்யம் பெற நாம் தகுதியடைந்துவிட்டோமா, அல்லவா என்பதை முடிவு கட்ட வேண்டும்.

பேச்சிலேயே பொழுதைப் போக்காமல் செயலில் இறங்க வேண்டிய காலம் இது. தேசநலனுக்காக இந்தப் பணியில் உங்களாலான தியாகத்தைச் செய்யும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது நான் மாணவர்களைப் பார்த்தே பேசுகிறேன். எந்தப் பொறுப்புமே இல்லாதவர்களாக நான் அவர்களைக் கருதவில்லை. இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்துள்ள மாணவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். ஆசிரியர்களின் கடமைகளையும் ஓரளவுக்கு மாணவர்கள் நிறைவேற்றி வைக்க முயல வேண்டும். அவர்களை அடிப்படையாகக் கொண்டே, இந்த மகா வித்தியாலயம் நிறுவப்பெற்றிருக்கிறது; அவர்கள் இல்லாவிட்டால் இந்த மகா வித்தியாலயம் ஏற்பட்டிருக்க வியலாது. இதற்குள்ள பொறுப்பை நிறைவேற்றுவதில் அவர்களுக்கும் பங்குண்டு. இந்த உண்மையை மாணவர்கள் உணராதவரையில், ஆசிரியர்கள் என்னதான் பாடுபட்டாலும், பிரயோசனம் இல்லை. கல்லூரிகளில் படித்துவிட்டு, இதில் வந்துசேரும் மாணவர்கள் இந்த உண்மையை

தொடங்கியிருக்கிற கடுமையான போர் எவ்வளவு காலம் நீடித்தாலும் சரி, அதில் தங்கள் கடமையைச் செய்ய மாணவர்களுக்கு வேண்டிய மனோதிடத்தைக் கடவுள் அளிப்பாராக.

மாணவர்களின் தொகை யல்ல, கொண்ட கொள்கை யிலுள்ள மனவுறுதிதான், இந்த ஸ்தாபனத்திற்கு வெற்றி யளிக்கப்போகிறது. அதே மனவுறுதிதான், இந்தியாவின் மற்றப் பகுதிகளுக்கு, இந்த ஸ்தாபனத்தை ஒரு இலட்சிய ஸ்தாபனமாக எடுத்துக்காட்டப்போகிறது. கூர்ஜரத்தின் செல்வத்தினாலோ, அல்லது அதன் அறிவுப் பெருக்கத்தி னாலோ அல்ல, இந்த ஸ்தாபனம் அப்படி ஒரு இலட்சிய ஸ்தாபனமாக விளங்கப்போவது. ஒத்துழையாமை இயக்கம் பிறந்த இடம் என்பதனாலேதான் இது அவ்வளவு பெருமை யடையப் போகிறது. ஒத்துழையாமை விதையை விதைக்கக் கூர்ஜரந்தான் முதலிலே பண்படுத்தப்பட்டது; விதையும் விதைத்தாய்விட்டது. இந்த ஒத்துழையாமை இயக்கம் பிறப்பதற்கு உண்டான பிரசவ வேதனை யெல்லாம் கூர்ஜரமே அனுபவித்தது. இந்த இயக்கத்தை வளர்த்ததும் கூர்ஜரந்தான். தற்பெருமை யடித்துக்கொள் ளும் நோக்கத்துடன் நான் இப்படிச் சொல்ல வில்லை. இந்த இயக்கத்தை நான்தான் ஆரம்பித்தேன் என்றும் சொல்லிக்கொள்ள வில்லை. நான் ஒரு செட்டிதான். ஆனா லும், இந்த விஷயத்தில், ஒரு ரிஷியாகவே, ஞானியாகவே இருந்திருக்கிறேன். செயல்முறையில் இதைக் கடைப்பிடித் தவர்கள் என்னுடைய தோழர்கள். அவர்களுடைய நம் பிக்கை மிகவும் உயர்ந்த நிலையிலுள்ளது. சாத்விக ஒத் துழையாமையினால்தான் இந்தியா உன்னத நிலைக்கு வர வேண்டும். இதற்கு வேறு வழி யிருக்கிறதென்று சொல்லி, தேவர்களாலேகூட என்னைத் திருப்ப முடியாது. இங்கே என் முன் நிற்கிற மரங்களை எவ்வளவு நேர்முகமாகப் பார்க்கிறேனோ, அவ்வளவு நேர்முகமாக, இந்த உண் மையை அனுபவமூலமாக நான் அறிந்திருக்கிறேன். என் னுடைய தோழர்களோ இதைக் கற்பனையாலும் தர்க்க ரீதியாலுந்தான் உணர்ந்திருக்கிறார்கள். தனிமனிதனு டைய அனுபவம் மட்டும் ஒரு செயலைத் தூண்டக்கூடிய தல்ல; நம்பிக்கையும் மனோபாவமும் அதில் கலந்து

எனது தோழர்கள் ஒத்துழையாமை என்ற இந்த ஆயுதத்தை நன்றாகத் தேய்த்துக் கூர்மைப்படுத்திவிட்டார்கள். அதனால் ஏற்படுகிற பயன் பூரணமாக இப்போது தெரியவராது; இன்னும் ஆறு மாதம் கழித்தே நன்றாய்த் தெரியவரும். அதன் ஸ்தூல அடையாளமாகவே இந்த மகா வித்தியாலயம் நிற்கிறது. கலாசாலைத் தலைவரும் ஆசிரியர்களும் மாணவர்களும் அந்த அடையாளப் பொருளைச் சிருஷ்டிப்பதற்கான அம்சங்களாக அமைந்திருக்கிறார்கள். நான், இலையுதிர் காலத்தில் ஒரு மரத்தில் இருக்கும் இலைக்குச் சமானமாயிருக்கிறேன். இந்த இலை எந்தச் சமயத்திலும் கீழே உதிர்ந்துவிடலாம். ஆசிரியர்களோ, இப்பொழுது தளிர்த்த இளந் தளிர்கள்; இந்தத் தளிர்களும் முற்றிய பிறகு, காலக் கிரமத்தில் உதிர்ந்துவிடும். ஆனால், மாணவர்களாகிய நீங்களோ, பழுத்த இலைகளுக்குப் பதிலாகப் புதிய இலைகளைத் தளிர்க்கச் செய்யவல்ல கிளைகள் ஆவீர்கள். என்னிடத்தில் மாணவர்களுக்கு எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ, அவ்வளவு நம்பிக்கை ஆசிரியர்களிடத்திலும் இருக்க வேண்டுமென்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீடித்து நிற்கும் உயிர்ப்பண்பு ஆசிரியர்களிடம் இல்லையென்று கண்டால், உங்களுடைய உத்தம குணங்களால் அவர்களைச் சீர்திருத்தும்படி மாணவர்களாகிய உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவே கடவுளிடத்தில் நான் வேண்டும் வரம்; இதுவே மாணவர்களுக்கு நான் சொல்லும் உபதேசமும்.

முடிவாக, இந்த நாடு மட்டுமன்றி, உலகம் முழுவதையுமே வானுலகமாகச் செய்யும்படியான ஒரு சுதந்திரத்தை நாம் அடைய, இந்த மகா வித்தியாலயம் உதவி செய்ய வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன். நீங்களும் என்னோடு சேர்ந்து கடவுளை வேண்டுவீர்களாக.

மாணவர்களுக்கு உபதேசம்

"எண்ணிக்கை உயர்ந்தால் பலம் அதிகரிக்கிறதென்று எண்ணி, கோழைகள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால், தீரநெஞ்சு படைத்தவர்களோ, போர்புரிவது ஒன்றிலேயே நம்பிக்கை வைத்து அதிலேயே திளைக்கிறார்கள்.........நீங்கள் ஒருவராய் இருந்தாலும் சரி, பலராய் இருந்தாலும் சரி, அது முக்கியமல்ல; அதனால், பலமோ பலக்குறைவோ ஏற்பட்டுவிடாது; உள்ளத்தில் தீரமுடைமையே உண்மையான தீரம்; மற்றவை யாவும் போலி."

ஆமதாபாத்திலுள்ள கூர்ஜர மகா வித்தியாலய மாணவர் கூட்டத்தில், காந்திஜி பின்வருமாறு பேசினார்:

அன்று 1921-ஆம் வருஷம்; இன்று 1926-ஆம் வருஷம்; பாருங்கள் வித்தியாசத்தை!

நான் மிக்க துயரத்தோடு பேசுவதாகத் தயவு செய்து எண்ணிவிடாதீர்கள். நாம் பின்னேக்கிச் செல்லவில்லை; நமது நாடும் பின்னேக்கிச் செல்லவில்லை. சுயராஜ்யம் என்ற இலட்சியத்தை நோக்கி ஐந்தாண்டுகள் முன்னேறி வந்திருக்கிறோம். இதில் சந்தேகமேயில்லை. 1921-ஆம் ஆண்டில் சுயராஜ்யம் அனேகமாகக் கிடைத்துவிட்டதென்று சொல்லும் நிலை இருந்தது. இன்று அது எவ்வளவோ தூரத்தில் போய்விட்டது என்பதாக யாரேனும் சொன்னால், அதை நீங்கள் நம்ப வேண்டாம். சுயராஜ்யம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்பதை யார் கண்டது? கடவுளை வேண்டி, உண்மையான நோக்கத்தோடு செய்கிற எந்தக் காரியமும் வீண்போகாது; காரியத்தை அப்படிச் செய்வதனாலேயே மனிதன் வெற்றி பெறுகிறான். செயலின் பயனே இறைவன் கையிலிருக்கிறது.

எண்ணிக்கை உயர்ந்தால் பலம் அதிகரிக்கிறதென்று எண்ணி, கோழைகள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால், தீரநெஞ்சு படைத்தவர்களோ, போர்புரிவது ஒன்றிலேயே நம்பிக்கை வைத்து அதிலேயே திளைக்கிறார்கள். இந்தத் தீர உள்ளத்தைப் பெறவே நீங்கள் அனைவரும் இங்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் ஒருவராய் இருந்தாலும் சரி, பலராய் இருந்தாலும் சரி, அது முக்கிய மல்ல; அதனால் பலமோ பலக்குறைவோ ஏற்படட்டுவிடாது. உள்ளத்தில்

தீரமுடைமையே உண்மையான தீரம்; மற்றவை யாவும் போலி. தியாகம், மனவுறுதி, நம்பிக்கை, பணிவு — இவையே உள்ளத்தில் தீரத்தைத் தோற்றுவிக்க வல்லவை.

உள்ளத்தூய்மை என்பதை அஸ்திவாரமாகக்கொண்டு இந்த வித்தியாலயத்தை நீங்கள் எழுப்பி யிருக்கிறீர்கள். சாத்விக ஒத்துழையாமை என்பது உள்ளத்தூய்மையிலே ஓரம்சம். அஹிம்சை என்ற சொல்லின் முன்னுள்ள 'அ' என்ற எழுத்து, ஹிம்சையை ஒழிப்பதை, - ஹிம்சைக்கு ஏதுவாயிருப்பவை யாவற்றையும் ஒழிப்பதை, - அதாவது அரசாங்கக் கட்டுப்பாட்டை மீறுவதை எல்லாம் குறிப்பிடுகிறது. 'தீண்டத்தகாத' சகோதரர்களோடு நாம் இன்னும் ஒத்துழையாம லிருக்கிறோம்; பிற சமயத்தினரோடு நமக்கு இன்னும் உள்ளங்கலந்த ஒற்றுமை ஏற்படாம லிருக்கிறது. சர்க்காவுக்கும் கதருக்கும் நமது வாழ்வில் அளிக்கவேண்டிய புனிதமான ஸ்தானத்தை அளிக்காமையினால், நம் நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மக்களுடன் நாம் இன்னும் ஒத்துழைக்க வில்லை யென்றே சொல்ல வேண்டும். இவற்றை யெல்லாம் நாம் செய்யாமலிருப்பதனாலே, மேற்சொன்ன அன்மைச் சொல் முற்றிலும் பொருந்தாமலே இருந்து வருகிறது. இவற்றை யெல்லாம் நாம் செய்து முடிக்காதவரை, ஒத்துழையாமை, அஹிம்சையை அடிப்படையாகக்கொண் டிராது; ஹிம்சையை, அதாவது,பகைமை யுணர்ச்சியைத்தான் அடிப்படையாகக் கொண் டிருக்கும். இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லாமல், இதை செய்ய வேண்டாம் என்று மட்டும் கட்டளையிடுவது, உயிரில்லாத உடலை யொக்கும். அப்படி யொரு கட்டளை இருப்பதைவிட, அதை நெருப்புக்கு இரையாக்குவதே மேல். இந்தியாவில் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஏழு லட்சம் கிராமங்களுக்கு ஏழாயிரம் ரயில்வே ஸ்டேஷன்கள் இருக்கின்றன. ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகிலிராத கிராமங்களின் நிலைமையைச் சரித்திர வாயிலாக நன்றாய் அறிந்திருக்கிறோம். இந்தக் கிராமங்களில் வசிக்கும் கோடிக்கணக்கான மக்கள் நம்முடன் யாதொரு விதமான தொடர்பும் இன்றி வாழ்ந்து வருகிறார்கள்; அவர்களை நம்முடன் அன்போடு பிணிக்கக் கூடியதளை, ராட்டினம் ஒன்றுதான். இந்த அடிப்படையான

உண்மையை இன்னும் அறிந்துகொள்ளாதவர்கள் யாரே னும் இங்கு இருந்தால், அவர்கள் இந்தக் கலாசாலையால் எவ்வித நன்மையும் அடையப்போவதில்லை. இந்தியாவில் பசிப்பிணியைப் போக்க வழியின்றிக் கோடிக்கணக்கான மக்கள் மடிந்துகொண் டிருக்கிறார்கள்; இவர்களுடைய துன்பத்தைப்பற்றிச் சிந்தனை செய்யும்படி தூண்டி, இவர் களின் பசிப்பிணியைப் போக்க ஒரு வழியும் கற்பிக்கப் படாவிட்டால், அப்படிப்பட்ட தொரு கல்விமுறையைத் 'தேசியக்' கல்விமுறையென்று எப்படிச் சொல்ல முடியும்? இந்தக் கிராம மக்களுடன் அரசாங்கம் வைத்திருக்கிற தொடர்பு, வரி வசூல் செய்வது ஒன்றுதான்; இதற்குமேல் எதுவுங் கிடையாது. ராட்டினம் மூலமாகச் சமூகத்துக்கே அவர்கள் செய்யும் சேவையிலிருந்து அவர்களுக்கும் நமக்கு முள்ள தொடர்பு ஆரம்பமாகிறது; இதனோடு மட்டும் நின்று விடவில்லை அந்தத் தொடர்பு. ராட்டினமே அந்தச் சேவையை மத்தியில் நின்று ஆட்டுகிறது. அடுத்தாற்போல் வரும் விடுமுறைக் காலத்தில், ஒரு குக்கிராமத்திற்குச் சென்று தங்கியிருந்து பாருங்கள். நான் சொல்லியது உண்மையென்று அப்போது தெரியவரும். நீங்கள் அங்கே என்ன காணலாமென்று நினைக்கிறீர்கள்? மக்கள், வாழ்க் கையில் ருசி இழந்து, பயத்திற்கு அடிமையாகி இருப்பதைக் காண்பீர்கள்; வீடுகள் இடிந்து பாழ்பட்ட நிலையிலிருப்ப தைக் காண்பீர்கள். தேகாரோக்கியத்தையும் சுகாதாரத் தையும் கவனித்து அமைத்த வாழ்க்கை முறைகளை அங்கே மருந்துக்கும் காண முடியாது. ஆடுமாடுகளைப் பார்க்கப் பரிதாபமாயிருக்கும். இவ்வளவு படுமோசமான நிலைமைக் கிடையே, ஜனங்களாவது சுறுசுறுப்புடன் இருக்கிறார் களா என்றால், அதுவும் இல்லை. சோம்பலுக்கு அடிமை களாயிருக்கிறார்கள். தங்கள் வீடுகளில் எவ்வளவோ கால மாக ராட்டினமும் நூல்நூற்கும் பழக்கமும் இருந்து வந் தது என்றெல்லாம் சொல்லுவார்கள். ஆனால், இப்போது ராட்டைப்பற்றியோ வேறு குடிசைத் தொழிலைப்பற் றியோ பேசினால், அது தங்களுக்கு வேண்டுவ தில்லை யென்று சொல்லிவிடுவார்கள். அவர்களுக்கு வாழ்க்கையி லுள்ள நம்பிக்கை போய்விட்டது. விரும்பியபோது சாக முடியாததனால்தான் அவர்கள் உயிரோடிருக்கிறார்களே

யன்றி வேறில்லை. தாங்களாக நூற்க மாட்டார்கள்; நீங்கள் நூற்றால்தான் அவர்கள் நூற்பார்கள். கிராமந்தோறும் முன்னூறு ஜனங்கள் வசிப்பதாக வைத்துக்கொள்ளு வோம். இந்த முன்னூறு பேரில், நூறு பேர் நூற்க ஆரம் பித்தாலே, அந்தக் கிராமத்தாருக்கு ஒரு வருஷத்தில் 1800 ரூபாய் வருவாய் அதிகப்படியாகக் கிடைத்துவிடும். இந்த விஷயத்தைக் கிராம மக்களிடம் நீங்கள் எடுத்துச்சொல்ல வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் இந்த வருவாயைக் கொண்டே அவசியமான சீர்திருத்தங்களைச் செய்யத் தொடங்கலாம். இதைச் சொல்லுவது எளிது, செய்வது அரிது என்பதை நான் உணர்வேன். நம்பிக்கை மட்டும் இருந்தால் இது மிக எளிதாய்ப் போய்விடும். 'உதவிக்கு ஆளில்லாமல், நான் ஒருவன் மட்டும் ஏழு லட்சம் கிராமங் களுக்குச் சென்று எப்படித் தொண்டு செய்ய முடியும்?' என்று பலர் கேட்கிறார்கள். இந்தக் கேள்வி தற்பெருமை யினால் ஏற்பட்டதே யன்றி வேறல்ல. ஒரு கிராமத்தில் நிலையாக இருந்துகொண்டு இந்த வேலையைச் செய்யுங்கள். அதில் வெற்றி பெற்றால், மற்றக் கிராமங்களும் தாமாகவே பின்பன்றும். பிறகு, நிச்சயமாக முன்றேற்றந்தான். இந்த முறையில் வேலை செய்யும்படி பயிற்சி யளிப்பதே இந்த வித்தியாலயத்தின் விருப்பம். இந்தத் தொண்டு உங்களுக் குச் சந்தோஷத்தை அளிக்காமல் போனால், வித்தியா லயத்திலும் சந்தோஷம் இராதுதான். அதை அப்படியே விட்டுவிட வேண்டியதுதான் நீங்களும்.

பீகார் வித்தியாபீடத்தில்

"சத்தியத்தில் நிற்பதென்பது, பஞ்சணையில் படுத்திருப்பதல்ல. உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு எவ்வளவோ தியாகம் செய்யவேண்டி இருக்கிறது; அதிலே எவ்வளவோ கஷ்டம்; எவ்வளவோ கட்டுப்பாடுகள்; இப்படியெல்லாம் இராமல், ஆனந்தமான காரியமாக மட்டும் இருக்குமானால், அதிலே இவ்வளவு அழகுக்கு இடமில்லை. வானமே இடிந்து தலையில் விழுவதாயிருந்தாலும், நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும்."

பீகார் வித்தியாபீடப் பட்டமளிப்பு விழாவில், மாணவர்களுக்காகக் காந்திஜி ஒரு பிரசங்கம் செய்தார். அப்போது, ஸ்ரீ மகாதேவ தேசாய் பிரசங்கத்துக்குக் குறிப்பெடுத்தார். அந்தக் குறிப்புகள் பின்வருமாறு:

பீகார் வித்தியாபீட மாணவர்களுக்குப் பட்டமளித்த விழாவின்போது, காந்திஜி பேசிய பேச்சு மேடைப் பிரசங்கம்போல் இராமல், இதயத்தோடு பேசுகிற பேச்சாயிருந்தது. அது, மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், பொதுஜனங்களையும் எண்ணிப் பேசிய பேச்சாயிருந்தது. காதால் கேட்டவுடனே மறந்துவிட்டுப் போகிறவர்களல்லர் அந்தப் பொதுஜனங்கள். அவருடைய பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் அவர்கள். சொல்லால் வெளியிட்டவற்றை மட்டுமன்றி, அவர் இதயத்திலே நின்றவற்றையும் நன்றாய்த் தெரிந்துகொண்டவர்கள். அந்தப் பேச்சில் உணர்ச்சியும் ஆவேசமும் நிரம்பியிருந்தன; அவருடைய சொந்த வாழ்க்கைபற்றிய குறிப்புகளும் நிறைந்திருந்தன.

பட்டம் பெற்றவர்கள், அன்று மனப்பூர்வமாகச் செய்துகொடுத்த உறுதிமொழிகளை வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவார்கள் என்று நம்புவதாக, காந்திஜி ஆரம்பத்தில் சொன்னார். இந்த வித்தியாபீடமானது, பிற மாணவருக்கு இலட்சியமாக விளங்கத்தக்க ஒரே ஒரு மாணவனையும், பிற ஆசிரியர்களுக்கு இலட்சியமாக விளங்கத்தக்க ஒரே ஒரு ஆசிரியரையும் தந்தால் போதும்; அதுவே இந்த ஸ்தாபனம் இருந்ததற்குப் போதிய பலன் ஆகும் என்று தெரிவித்தார்; இக்கருத்தை, கூர்ஜர வித்தியா

பீடத்தில் பேசியபோதும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த ஸ்தாபனங்கள் செய்ய வேண்டுவது என்ன? நல்ல, ஒளி படைத்த உண்மையான மாணிக்கங்களை—அவை சொற்பமாகவே கிடைத்தபோதிலும் குற்றமில்லை—கண்டு வெளிப்படுத்துவதுதானே அவற்றின் நோக்கம் என்றார். பிறகு, தமது தென் ஆப்பிரிக்கா அனுபவங்களைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தார்.

"தென் ஆப்பிரிக்காவில் நான் இருபது ஆண்டுகள் வாழ்ந்தேன். ஒரு நாள்கூட அங்கேயுள்ள வைரச் சுரங்கத்தைப் பார்க்க வேண்டுமென்று நான் நினைத்ததில்லை. அங்கே போனால், ஒருவேளை 'தீண்டத்தகாதவன்' என்ற முறையில், என்னைச் சுரங்கத்திற்குள்ளே போக அனுமதிக்காமல் அவமரியாதை செய்வார்களோ என்ற அச்சமும் எனக்கு ஓரளவு இருந்தது. ஆனால், கோகலே அங்கே வந்திருந்த சமயத்தில், அந் நாட்டிலுள்ள முக்கியமான தொழில் நிலையத்தை அவருக்குக் காட்டுவது எனது கடமை என்று கருதினேன். அவருக்கு அவமரியாதை ஏற்படாதென்ற நம்பிக்கையும் இருந்தது. எனவே, அங்கேயுள்ள பெரிய சுரங்கத்துக்கு இருவருமாகப் போனோம். அங்கே பார்த்த காட்சியை நான் இன்னும் மறக்கவில்லை. கல்லையும் மண்ணையும் தோண்டித் தோண்டி மலை மலையாகக் குவித்திருந்தார்கள்; ஆனால், வைரம் என்ற பேச்சையே காணோம்! கோடிக்கணக்கான பணத்தைப் போட்டு, கோடிக் கணக்கான டன் நிறையுள்ள கல்லையும் மண்ணையும் தோண்டித் தோண்டி வெளிப்படுத்திய பிறகு, ஏதோ ஒரு பிடி வைரக் கற்களைப் பெறலாம். எவ்வளவோ பணத்தைச் செலவு செய்து, எத்தனையோ வருஷங்கள் பாடுபட்ட பிறகு, சுரங்கத்துக்குச் சொந்தக்காரரான கலினன் என்பவருக்கு ஒரு பெரிய வைரக் கல் கிடைத்தது. அப்போது பார்க்க வேண்டுமே அவர் அடைந்த ஆனந்தத்தை! அந்த வைரமானது ருஷ்ய சக்ரவர்த்தியாகிய ஜார் முடியிலுள்ள கல்லைவிடவும், கோஹினூர் வைரத்தை விடவும் பெரிது. அதற்குக் கலினன் தன் சொந்தப் பெயரையே இட்டார். அந்தக் கல்லைப் பெற்றதும், தனது வாழ்க்கை சாபல்ய மடைந்துவிட்டதாக எண்ணினார் அவர். ஏதோ தாமாகவே ஏற்படுத்திக்கொண்ட மதிப்பு

மட்டுமே உடைய ஒரு பொருளுக்கு, சிறிதும் தயங்காமல், இவ்வளவு பணத்தையும் இத்தனை வருஷங்களையும் செலவு செய்கிறோம் நாம். அப்படியானால், மனிதனது இதய மாகிற சுரங்கத்திலிருந்து அருமையான மாணிக்கங்களை வெளிப்படுத்த எவ்வளவு செலவு செய்ய வேண்டும்? இந்த உணர்ச்சியோடு, அயர்வின்றி வேலை செய்துகொண்டே போவோம்.''

இது முற்றிலும் பொருத்தமான உவமை. இதே விஷ யத்தைச் சொல்ல வந்த, ஆங்கில ஆசிரியர் ரஸ்கின், 'ஆன் மாக்களை உற்பத்தி செய்யும் தொழில்' என்ற வாக்கியத் தைச் சிருஷ்டித்தார். அதைவிட, காந்திஜியின் உவமை பொருத்தமா யிருக்கிறது. ஆன்மாக்களை உற்பத்தி செய்வ திலே வல்லவர் கடவுள் ஒருவரே. அது அவர் ஒருவரால் தான் முடியும். ஆன்மாவினுள் முன்னமே அவராலே பொதிந்து வைத்துள்ள உண்மைகளை அறிவதுதான் மனி தர்களாகிய நாம் செய்யத்தக்க வேலை.

ஒத்துழையாமையில் கலந்துகொள்ளும் ஸ்தாபனங் கள் செய்யவேண்டியவற்றையும் விலக்கவேண்டியவற்றை யும், அதன் பிறகு காந்திஜி குறிப்பிட்டார். அரசாங்கத் தோடுள்ள சகல தொடர்புகளையும் அறுத்துக்கொள்ள வேண்டியது ஒரு காரியம். அதை இப்போதிருக்கும் எல்லா ஸ்தாபனங்களும் ஏற்கனவே செய்துவிட்டன. பள்ளிக் கூடங்களை விட்டு விலகும்படி மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் காந்திஜி கூறியிருந்தார். அவர் சொல்லை ஏற்று, எத்தனையோ மாணவர்களும் ஆசிரியர்களும் பள்ளிக் கூடங்களை விட்டார்கள்; அந்தமாதிரி கூறியதற்காக ஒரு சிறிதும் தாம் வருந்தவில்லையென்று காந்திஜி கூறினார். அவர்களில், பலர் திரும்பவும் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து விட்டார்கள்; சிலர் மனதில் மகிழ்ச்சி யிழந்து துன்புற்றார் கள். அதைக் கண்டபோதும், அவர் வருந்தவில்லை. தங்கள் வழியினின்றும் அவர்கள் தவறிவிட்டார்களே யென்று தான், [அவர்களுடைய நன்மையை எண்ணியே] காந்திஜி யின் மனதில் துக்கம் ஏற்பட்டது; அதைத் தவிர, ஏதோ அவர்களைக் கெடுத்துவிட்டோமே என்ற வருத்தம், அல் லது பச்சாதாபம் என்கிற பேச்சே கிடையாது.

''இந்தக் கஷ்டங்களும் துன்பங்களும் நமது தினசரி

வாழ்க்கையில் சகஜமாகிவிட்டன; இவை சகஜமாகவே தான் இருக்க வேண்டும். சத்தியத்தில் நிற்பதென்பது, பஞ்சணையில் படுத்திருப்பதல்ல. உண்மையைக் கடைப் பிடிப்பதற்கு எவ்வளவோ தியாகம் செய்யவேண்டி யிருக் கிறது; அதிலே எவ்வளவோ கஷ்டம், எவ்வளவோ கட்டுப் பாடுகள்; இப்படி யெல்லாம் இராமல் ஆனந்தமான காரியமாக மட்டும் இருக்குமானால், அதிலே இவ்வளவு அழகுக்கு இடமில்லை. தலையில் வானமே இடிந்து விழு வதா யிருந்தாலும், நாம் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். உண்மையைக் கடைப்பிடிக்கிறதனால், உலக முழுவதையும், இந்தியாவையுங்கூட, இழப்பதா யிருந்தாலும் குற்றமில்லை. எவை எவை நமக்கு அருமை யாய் இருக்கின்றனவோ அவற்றை யெல்லாம், இந்தியா வையுங்கூட, இறுதியில் திரும்பப் பெற்றுவிடுவோம்; இதற்குக் கடவுள் துணை செய்வார். இந்த நம்பிக்கையோடு உயிர் போகும்வரையில் சத்தியத்தையே கடைப்பிடித்து ஒழுக வேண்டும்; இப்படி ஒழுகினால்தான் உண்மையி லேயே நாம் சத்தியத்தைப் பின்பற்றுபவர்க ளாவோம். நமது ஆசிரியர்களில் பலர் அமைதியற்ற நிலையிலிருக்கிறார் கள் என்பதும், சிலர் சாப்பாட்டுக்கும் இல்லாது சாகிறார் கள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனாலும், இதுதான் தேசிய வாழ்வில் படிந்திருக்கும் மாசைப் போக்குவதற்கு வேண்டிய உண்மையான தவம்."

இவ்வளவும் விலக்கவேண்டிய அம்சங்கள். இது நிறைவேறி, வேண்டிய அளவு தியாகங்கள் செய்துவிட் டோம் என்று காந்திஜி மகிழ்ச்சி யடைந்தார். விதிவிலக்கு களுக்கிடையே செல்லும் இந்த உலகத்திலே, விதித்தவற் றைச் செய்து தீர்க்கவேண்டிய அவசியமும் உண்டல்லவா? விலக்க வேண்டியதைவிட இதுவே கஷ்டமானது; ஆனால் நிரந்தரமாக நிற்கக் கூடியதும் இதுவே. இது வித்தியா பீடத்தைப்போன்ற ஸ்தாபனங்களிலன்றி, வேறு எங்கு தான் இந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியும்? பின்னர், காந்திஜி ஐரோப்பாவில் வழங்கும் கல்விமுறையையும் இந்தியாவில் பின்பற்றும் கல்விமுறையையும் ஒப்பிட்டுக் காட்டி, இரண்டிற்கும் உள்ள வித்தியாசங்களை எடுத்துச் சொன்னார்.

" ஐரோப்பிய நாடுகளி லெல்லாம், கல்விமுறையானது அந்தந்த நாட்டு மக்களின் தனிப்பண்புக்கு ஏற்றவாறு அமைந்திருக்கிறது. ஒரே விஷயம் மூன்று நாடுகளில் சொல்லிக்கொடுக்கப்பட்டாலும், அந்தந்த நாட்டின் பண்பாட்டுக்கும் தனிப்பண்புக்கும் ஏற்ற முறையில், அதே விஷயத்தை மூன்று விதமாகச் சொல்லிக்கொடுக்கிறார்கள். நாம் மட்டுமே ஆங்கிலமுறையை அடிமைத்தனமாகப் பின் பற்றுவதில் ஆனந்தம் அடைகிறோம். தற்காலப் படிப்பு முறையின் அடிப்படையான நோக்கம் மேலைநாட்டை அப்படியே காப்பியடிக்க வேண்டு மென்பதுதான். இதில் புதிது ஒன்றுமே இல்லை; மன இயல்பை அறியாதவர்களி டம், அறிய விரும்பாதவர்களிடம், நம்முடைய விவகாரங் களை யெல்லாம் நம்பி ஒப்படைத்துவிட்டோம்; அதன் பலனை இன்று அனுபவிக்கிறோம். பாவம், மெகாலே என்ன செய்வார்! நமது 'ஸம்ஸ்கிருத இலக்கியம் மூடநம்பிக்கை களை உண்டாக்குவதா யிருக்கிறது; மேலைநாட்டின் நாகரிகம் என்ற பெயரால் மனதிற்கு உவந்த ஆரோக்கியமான விஷ யங்களைக் கொடுப்போமே' என்று அவர் உண்மையாகவே எண்ணினர். எண்ணியபடி செய்து, நம்மைப் பாழாக்கி விட்டார்; வேண்டு மென்றே அவர் நம்மைப் பாழாக்க வில்லை; அதற்காக, அவரை நாம் குறைகூற வேண்டாம். ஆங்கிலத்தின் மூலமாகவே அனைத்தையும் கற்க வேண்டி யிருப்பதனல், நாமாக ஒரு காரியத்தைச் செய்வ தென்னும் உணர்ச்சி செத்தொழிந்தது. சிறகொடிந்த பறவையாகி விட்டோம் நாம். அதிகமாக விரும்புகிற விஷயம், ஏதோ ஒரு குமாஸ்தா, அல்லது பத்திரிகை ஆசிரியராவது தான். இந்த முறையில் படித்துவந்தவர்களிலே சின்ஹா வைப்போல் ஒரே ஒரு பிரபுதான் தோன்ற முடியும். மற் றவர்க ளெல்லாம் பெரும்பாலும் நம்மை அடிமைப்படுத்தி யுள்ள இந்தப் பிரமாண்டமான அன்னிய ஆதிக்கம் என்ற இயந்திரத்தின் அங்கங்களாகத்தான் விளங்க முடியும்; அப்படி நாம் விளங்க வேண்டு மென்றே இந்தக் கல்வி முறையை நம்மிடையே புகுத்தி யிருக்கிறார்கள். நான் முஸாபர்பூருக்குச் சென்றிருந்தபோது, ஒரு சிறுவன் என் னிடம் வந்து, தேசியப் பள்ளிக்கூடத்துக்குச் செல்வதனல், தான் 'லார்ட்' என்ற பிரபுப் பட்டம் பெற முடியுமா

என்று கேட்டான். "முடியாதுதான். ஆனால், ஒரு கிராமத்தில் நீலார்டா யிருக்கலாம். ஒரு நாளும் சின்ஹா பிரபுவைப்போல் ஆகமுடியாது. சீமையில் பார்க்கென் ஹெட் பிரபு இருக்கிறாரே, அவர்தான் உன்னை அப்படி ஆக்கமுடியும்" என்று நான் பதில் சொன்னேன்.

பெரிய மாளிகைகள் கட்டுகிற மோகம் இப்போது வர வர அதிகமாகி வருகிறது. இந்த மோகத்தைப்பற்றிக் காந்திஜி குறிப்பிட்டார். ஏழைகளிடமிருந்து பெற்ற பணத்தைக்கொண்டு இந்த மாளிகைகளைக் கட்டுகிறார்கள். கல்விச் சாலைக் கென்று சொல்லி, பெரிய பெரிய கட்டிடங்களை எழுப்புகிறார்கள். ஆனால், அங்கே, ஏழைகள் கல்வி கற்க இடமில்லை. "அலஹாபாத்தி லிருக்கும் பொருளாதாரக் கல்வி ஸ்தாபனத்தைப் பார்க்க, எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆசிரியர் ஜீவான்ஸ் அக் கட்டிடம் முழுவதையும் எனக்குக் காட்டிக்கொண்டே போனார். அதைக் கட்ட முப்பது லட்ச ரூபாய் செலவாயிற் றென்று அவர் சொன்னதாக ஞாபகம். அதைக் கேட்டபோது, என் உள்ளம் திடுக்கிட்டது. கோடிக்கணக்கான ஏழை மக்களை வயிற்றில் அடித்தால்தானே இவ்வளவு பெரிய கட்டிடங்களை எழுப்ப முடியும்? புதுடில்லியைப் பாருங்கள்; அதுவும் இதே கதையைத்தான் சொல்லுகிறது. முதல் வகுப்பு ரயில் வண்டிகளில் ஏராளமான வசதிகளை அமைத்திருப்பதையும் பாருங்கள். இப்போதைய அரசியல் போக்கில் ஏழைகள் இருப்பதாக ஒரு நினைவே இல்லை; பணக்காரர்களுக்குச் சௌகரியம் செய்துவைப்ப தொன்றே நோக்கமா யிருக்கிறது. இதைப் பேய்த்தன மென்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்லுவது? உண்மையைச் சொல்லுவ தென்றால், வேறுவிதமாய்ச் சொல்ல முடியாது. ஒரு யானை, எங்கேயாவது சிறியதொரு எறும்பின் நன்மையைக் குறித்து நினைக்குமா? தென் ஆப்பிரிக்கத் தூது கோஷ்டி அங்கத்தினராக இருந்த ஸர். லெப்பல்கிரிப்பென் என்பவர் ஒரு தரம் பேசியபோது, உரல் படுகிற அவஸ்தை உலக்கைக்கு எப்படித் தெரியும் என்று சொன்னார். நமது விவகாரங்களை ஒழுங்கு செய்கிற அதிகார மெல்லாம் அவர்கள் கையில் இருக்கிறது. அவர்கள் எவ்வளவு தூரம் நல்லவர்களா யிருந்தாலும், காரியங்களைச் சரிப்படுத்த வேண்டு மென்று

நினைத்தாலும்கூட, நமது வாழ்க்கையை நாமே ஒழுங்கு படுத்திக்கொள்ளுவதுபோல, அவர்களால் ஒழுங்குபடுத்த முடியாது. காரணம் அவர்களுடைய நோக்கம் நம் நோக்கத்திற்கு நேர்மாறானது. விசேஷ சௌகரியங்களையும் உரிமைகளையும் அனுபவிக்கிற செல்வர்களாகிய சிலருடைய நன்மையை மட்டுமே அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், நாமோ, கோடிக் கணக்கான ஏழை மக்களுடைய நலத்தைக் கருதவேண்டியவர்களா யிருக்கிறோம்."

இதைத் தொடர்ந்து, காந்திஜி சர்க்காவைப்பற்றியும் பேச நேர்ந்தது. நாம் செய்கிற ஏற்பாடுகளுக் கெல்லாம் சர்க்காவே நடுநாயகமாக அமைய வேண்டும் என்று அவர் சொன்னார்.

"மாணவர்கள் பட்டங்கள் பெறட்டும்; விரும்பியதைப் படிக்கட்டும். ஆனால், சர்க்காவை நடுநாயகமாக வைத்தே அவர்கள் படிப்பார்களாக. பொருளாதாரக் கலையிலும் விஞ்ஞானக் கலையிலும் அவர்கள் பெறும் அறிவானது, சர்க்காவின் நோக்கத்திற்கு உதவுவதாக இருக்கட்டும். சர்க்காவை ஒரு மூலையில் ஒதுக்கிவிட வேண்டாம். சூரியனுக்குச் சமானம் அது. நமது காரியங்கள் யாவும் அச் சூரியனைச் சுற்றிவரும் கிரகங்களாக அமைய வேண்டும். சர்க்கா இல்லாவிட்டால், வித்தியாபீடங்கள் யாவும் பெயரளவில்தான் வித்தியாபீடங்களா யிருக்க முடியும். சட்ட சபைகள் மூலமாக ஏதாவது முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், அதற்கு, பிரிட்டிஷ் பார்லிமெண்ட்டின் தயவையே நாம் எதிர்பார்க்க வேண்டுமென்று, இர்வின் பிரபு பெரியதோர் உண்மையைச் சொன்னார். அவரைக் கோபிக்கிறதில் என்ன பயன்? பார்லிமெண்ட்டை வைத்தேதான் அவருடைய சகல சிந்தனைகளும் செல்லும். அவருடைய மண்டலத்திற்கு சூரியன், லண்டன் மாநகரம்; நமது மண்டலத்திற்குச்சூரியன், சர்க்கா. நான் இவ்வாறு சொல்லுவது பிழையா யிருக்கலாம். அது பிழை யென்று உணராத வரையில், நிச்சயமாக நான் அதைப் போற்றியே வருவேன். எப்படியானாலும், சர்க்கா யாருக்கும் ஒரு கெடுதி செய்யாது. அது இல்லாவிட்டால், நாம் சீர்குலைந்து நாசமடைவோம்; உலகம் முழுவதுமே நாசமடையும் என்றும் நான்சொல்லுவேன். யுத்தத்தின்போது, பொய்யைச் சிறந்த

சமய சித்தாந்தம்போலப் பிரசாரம் செய்துவந்தார்கள். அதன் பலனை ஐரோப்பிய மக்கள் யுத்தம் முடிந்த பிறகு உணர்ந்து வருகிறார்கள். இதை நாம் நன்றாய் அறிவோம். அந்த யுத்தத்தினால் விளைந்த தீமைகள் இன்னும் உலகத்தை வாட்டிக்கொண்டு வருகின்றன. உலக மக்கள் அந்தத் தீமைகளை அனுபவித்துப் பெரிதும் களைத்துப் போயிருக்கிறார்கள். சர்க்கா, இன்று இந்தியாவுக்கு ஆறுதல் அளிக்கிறது; நாளை, அது உலகத்திற்கே ஆறுதல் அளிக்கக் கூடும்; காரணம், ஏராளமான நன்மையை ஏதோ பெரும்பான்மையான மக்களுக்கு மட்டும் செய்வதற்காகச் சர்க்கா ஏற்படவில்லை; ஏராளமான நன்மையை எல்லா மக்களுக்குமே செய்ய அது ஏற்பட்டுள்ளது. தவறு செய்த ஒருவனைப் பார்க்கும்பொழுது, 'நானும் தவறு செய்திருக்கிறேன்' என்று எனக்குள்ளே சொல்லிக்கொள்ளுகிறேன்; காம உணர்ச்சி மிகுந்த ஒருவனைப் பார்க்கும் போது, 'நானும் ஒரு காலத்தில் அப்படி யிருந்தேன்' என்று எனக்குள்ளே எண்ணிக்கொள்ளுகிறேன். இவ்விதமாக, உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனுடனும் நான் உறவு பாராட்டுகிறேன். ஆகவே, நம்மில் மிக மிகத் தாழ்ந்த நிலையிலிருப்பவர்கள்கூடச் சந்தோஷமாக வாழ்ந்தால் தான் நானும் சந்தோஷமாக வாழ முடியும் என்று கருதுகிறேன். இந்தக் கருத்தோடுதான் உங்கள் கல்விக்கு நடு நாயகமாக, சர்க்கா விளங்க வேண்டு மென்று விரும்புகிறேன். பிரகலாதனுக்கு எங்கு பார்த்தாலுமே நாராயணனைத் தோன்றியது; துளசிதாசரும் கிருஷ்ண விக்கிரகத்திற்கூட, ராமனைத்தான் கண்டார். இவை போலவே, சர்க்காவின் நோக்கங்களைப் பூர்த்தி செய்யும் நெறியிலே உங்கள் படிப்பை யெல்லாம் செலுத்துங்கள். ஏழை மக்களுக்குச் சர்க்கா வொன்றே ஊன்றுகோலாகவும், உயிர் நாடியாகவும் அமையச் செய்யும் வகையிலே, நமது சயன்ஸ், தச்சுவேலை, பொருளாதாரம் முதலிய யாவற்றையும் உபயோகிக்க வேண்டும். கூர்ஜர வித்தியாபீடத்தில், இக் கருத்தை நிறைவேற்றுவதில் நாங்கள் இன்னும் வெற்றி பெறவில்லை; நீங்களும் இன்னும் முயன்று வெற்றி பெறவில்லை. குறைகூறுகிற நோக்கத்தோடு நான் இதைச் சொல்லவில்லை. எனது இதயத்திலுள்ள தாங்க முடியாத வேதனையை உங்களிடம் அப்படியே வெளியிட்டேன். நீங்கள் அவற்றை உரிய முறையிலே உணர்வீர்களாக!"

தேசியக் கல்விக்கும் அன்னியக் கல்விக்கும் உள்ள மாறுபாடு

"நாம் கற்ற இலக்கியக் கல்வியானது, நமது தேசிய வாழ்க்கையில் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சமயத்தில் நம்மை அடக்கி, ஒடுக்கி, கட்டுப்படுத்திவைக்கத்தான் உதவுகிற தென்றால், அந்தக் கல்வியும் ஒரு கல்வியா? மனிதத்தன்மையையே நாம் இழந்துவிட்டோம்; இழந்துபோன மனிதத்தன்மைக்கு அறிவும் இலக்கியப் பயிற்சியும், ஈடுசெய்ய முடியுமா?"

கூர்ஜர வித்தியாபீட மாணவர்களிடையே பேசியபோது, காந்திஜி பின்வருமாறு கூறினார்:

இந்த வித்தியாபீடம் சமீப காலத்தில் அடிப்படையான சில கொள்கைகளை ஏற்றுக்கொண் டிருக்கிறது. இந்தக் கொள்கைகளைப்பற்றி விடுமுறைக் காலத்தில் நீங்கள் கவனமாய்ச் சிந்தித்திருப்பீர்க ளென்று நம்புகிறேன். நமது வலிமை, எண்ணிக்கையைப் பொறுத்த தல்ல; இதை நான் அடிக்கடி சொல்லி வருகிறேன். எண்ணிக்கைப் பலம் வேண்டாம் என்பதில்லை; ஆனால், நமது கொள்கையை அனுசரிப்போர் தொகை குறைவா யிருக்கிறதே என்று பெரிதும் கவலைப்படத் தேவையில்லை. இந்த அடிப்படையான கொள்கைகளைச் சரியானபடி தெரிந்துகொண்டு, அவற்றை ஏற்று, எவ்வளவுக்கு நம்மால் நிர்வகிக்க முடியுமோ அவ்வளவுக்கு நிர்வகிப்போம். நமது வலிமை நாம் இப்படி ஒழுகுவதையே பொறுத்திருக்கிறது. இந்த வித்தியாபீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் இதனிடத்து விசுவாசம் வைத்து, இதனுடைய கொள்கைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவார்களாயின், அவர்கள் மூலமாக, நமது இலட்சியமாகிய சுயராஜ்யத்தை நாம் அடைவது திண்ணம். கொண்ட கொள்கையில் உறுதியும் உண்மையும் வேண்டும்; எதற்கும் அஞ்சாமல் அதைப் பின்பற்றி ஒழுகவும் வேண்டும். என்ன துன்பம் நேரிட்டபோதிலும், இந்த வித்தியாபீடம் எந்தக் கொள்கைகளுக்காக நிற்கிறதோ, அந்தக் கொள்கைகளுக்கு உண்மையாய் நீங்கள் ஒழுக வேண்டும். இப்படி ஒழுகுவீர்க ளென்ற உறுதியை உங்களுடைய ஆசிரியர்கள் உணரும்படி நடந்து, அவர்கள் கவு

லையைப் போக்குங்கள்; இதுவே நான் உங்களிடம் வேண்டுவது. அஹிம்சை, உண்மை என்ற இரண்டு தூண்களும் நமது பீடத்தைத் தாங்கி நிற்கின்றன; இந்த இரண்டிலும் நம்பிக்கை யில்லாதவர்களுக்கு இங்கே இடமில்லை.

அரசாங்க ஸ்தாபனங்களுக்கும் தேசிய ஸ்தாபனங்களுக்கு முள்ள வெளிப்படையான சில வித்தியாசங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பர்தோலியிலே, நமது மாணவர்களில் ஒருவர் சிறை புகுந்திருக்கிறார்; இன்னும் பலர் சிறை செல்லக் கூடும். இவர்களே இந்த வித்தியா பீடத்திற்குப் பெருமை தருகிறார்கள். அரசாங்கக் கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவர்கள் என்னதான் விரும்பினாலும், அவர்களுக்கு இந்தத் துணிவு வருமா? பர்தோலிக்குச் சென்று வல்லபாய் படேலுக்கு உங்களால் உதவி செய்ய முடியும்; அவர்களால் முடியுமா? மறைவாகவே தான் அவர்கள் தங்கள் அனுதாபத்தைக் காட்ட முடியும். நாம் கற்ற இலக்கியக் கல்வியானது, நமது தேசிய வாழ்க்கையில் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சமயத்தில் நம்மை அடக்கி, ஒடுக்கி, கட்டுப்படுத்திவைக்கத்தான் உதவுகிறதென்றால், அந்தக் கல்வியும் ஒரு கல்வியா? மனிதத்தன்மையையே நாம் இழந்துவிட்டோம்; இழந்துபோன மனிதத்தன்மைக்கு அறிவும் இலக்கியப் பயிற்சியும் ஈடு செய்ய முடியுமா?

மேலும், அவர்கள் கற்றுக்கொடுக்கும் முறைக்கும் நாம் கற்றுக் கொடுக்கும் முறைக்கும் இடையே, கடல் அத்தனை வித்தியாசம் இருக்கிறது. உதாரணமாக, அவர்கள் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் அளித்துச் சொல்லிக்கொடுப்பது போல, நாம் சொல்லிக்கொடுக்க மாட்டோம்; உலக விவகாரங்களைத் தெரிந்துகொள்ளும் அளவுக்கே, நாம் ஆங்கிலத்தைச் சொல்லிக்கொடுக்கிறோம். தாய் மொழியைப் புறக்கணித்து, நமது கருத்துக்கள் அனைத்தையும், அவர்களைப் போல நாம் ஆங்கிலத்தில் சொல்லிக்கொடுக்க மாட்டோம்; அப்படிச் சொல்லிக்கொடுப்பது தற்கொலைசெய்துகொள்ளுவதையே ஒக்கும். பாதகமான இந்தப் பழக்கத்தை மாற்றவே, இத்தகைய தேசியக் கல்வி நிலையங்களில் நாம் முயன்று வருகிறோம். சகல விஷயங்களையும் குஜராத்தி மொழி மூலமாகவே நாம் கற்க வேண்டும். அந்த மொழியை

வளர்த்து, சகல கருத்துக்களையும், சகல உணர்ச்சிகளையும், அவற்றின் நுட்பங்களையும் வெளியிடும் ஆற்றலை அம் மொழிக்கு உண்டுபண்ண வேண்டும். இங்குள்ள நிலைமையைப்போல வேறெந்த நாட்டிலும் பார்க்க முடியாது. இத்தனை வருஷங்களாக எல்லா விஷயங்களையும் ஆங்கில மொழி மூலம் படித்து வந்த பாவத்தினாலே, நாம் அதிகமாக நஷ்ட மடைந்துவிட்டோம்; கடமை, இன்னதென்று வழி காட்டி இருக்க, அதைவிட்டு விலகி நெடுந் தூரம் போய்விட்டோம்.

இது போகட்டும். பொருளாதாரக் கல்வியைப் பாருங்கள். தற்காலம், அரசாங்கக் கலாசாலைகளில் சொல்லிக் கொடுக்கிற முறை மிகவும் கேடு பயக்கக் கூடியது. ஒவ்வொரு தேசத்திற்கும் தனியான ஓர் பொருளாதார முறை இருக்கிறது; அந்தந்தத் தேசத்திற்குத் தகுந்தபடி அது அமைந்திருக்கிறது. ஜெர்மனியில் வழங்கும் பொருளாதாரப் பாடப் புத்தகங்கள் ஆங்கிலப் பாடப் புத்தகங்களினும் வேறானவை. வியாபாரத்திலே கட்டுப்பாடில்லாமல் சுதந்திரமாக வியாபாரம் செய்வதனால், இங்கிலாந்துக்கு விசேஷ லாபமுண்டு; ஆனால், அதே வியாபார சுதந்திரம் நம் நாட்டு வியாபாரத்துக்கு நாசத்தை விளைவிக்கும். இந்தியாவுக்குப் பொருளாதார முறை தக்கவிதமாக இப்போது இல்லை; இனித்தான் அதை நாம் அமைக்க வேண்டும்.

சரித்திரத்தை எடுத்துக்கொண்டாலும், இதே பல்லவிதான். இந்தியச் சரித்திரத்தை ஒரு பிரெஞ்சுக்காரர் எழுதுவாரானால், தமக்குச் சரி யென்று படுகிறதையே அவர் எழுதுவார். அதே இந்தியச் சரித்திரத்தை ஓர் ஆங்கிலேயர் எழுதினால், அது முற்றிலும் வேறு மாதிரியாகவே இருக்கும். ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் நடந்த சண்டைகளைப்பற்றி இருவரும் வெவ்வேறு விதமாகவே வருணிப்பார்கள். மூல ஆதாரங்களை வைத்துக் கொண்டு, தேசபக்தி நிறைந்த ஒரு இந்தியர் இந்தியச் சரித்திரத்தை எழுதினால், அது அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த ஆங்கிலேயர் எழுதுவதற்கு மாறாய்த்தான் இருக்கும்; இருந்தாலும், இருவரும் உண்மையாகவே தாங்கள் சரி யென்று நம்பியதை எழுதியிருக்கலாம். நமது தேசிய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி ஆங்கி

லேயர் எழுதிவைத்த அபிப்பிராயத்தை நாம் அப்படியே ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறோம்; இது பெரிதும் வருந்தத்தக்க தவருகும். ஆகவே, இந்தியச் சரித்திரப் பகுதியில், நீங்களும் உங்கள் ஆசிரியர்களும் புது முறையிலே ஆராய்ச்சி செய்வதற்கு, வேண்டிய அளவு இடமிருக்கிறது.

கணக்குச் சொல்லிக்கொடுப்பது போன்ற ஒரு சிறிய விஷயமாய் இருந்தாலும், நாம் அதைச் சொல்லிக்கொடுக்கிற முறை வேறுதான். நமது கணித ஆசிரியர் இந்திய வாழ்க்கையிலிருந்தே உதாரணங்களை எடுத்துச் சொல்லுவார். இதனுலே, கணக்குச் சொல்லிக்கொடுக்கிறதோடு, இந்தியப் பூகோளத்தையுமே சேர்த்துச் சொல்லிக்கொடுத்துவிட முடியும்.

அது போகட்டும். கைவேலை, கைத்தொழில் இவற்றில் பயிற்சியளிக்க வேண்டுமென்பதை நாம் வற்புறுத்திச் சொல்லுவோம். இந்தப் பயிற்சியினுல் அறிவின் கூர்மை மழுங்கிப்போகுமென்று எண்ணிக்கொள்ளாதீர்கள்; அப்படி எண்ணுவது தவறு. நெட்டுருப்போட்டு, கண்டகண்ட விஷயங்களையெல்லாம் மூளையில் திணித்துக்கொள்ளுவதனுல் மட்டும் அறிவு ஏற்பட்டுவிடாது. ஒருநோக்கமும் இல்லாமல் வெறுமனே இலக்கியத்தைப் படிக்கிறதைவிட, நல்ல விவேகத்தோடு கைத்தொழில் பயிற்சி பெறுவது, அறிவை விசாலப்படுத்த எவ்வளவோ உதவியாயிருக்கும்.

காசி வித்தியாபீடத்தில்

"எந்தப் பெரிய காரியத்தை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். அதைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன்வருகிறார்கள் என்பது முக்கியமல்ல; எத்தகைய உள்ளப்பண்பு வாய்ந்தவர்கள் முன்வருகிறார்கள் என்பதே இறுதியில் வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும். உலகத்தில் மகத்தான காரியங்களைச் சாதித்த பெரியார் அனைவரும் எப்போதும் தனித்துநின்றே போராடி யிருக்கிறார்கள்."

பட்டம் பெற்றவர்கள் சம்பிரதாய முறைப்படி உறுதிமொழி * கூறினார்கள். அதன் பிறகு, காந்திஜி பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்தைச் செய்தார். தேசியக் கல்வி முறையில் தமக்குள்ள நம்பிக்கை நாள் தோறும் வளர்ந்து வருவதாயும், தேசியக் கலாசாலைகளில் படித்து வெளியேறும் மாணவர்கள் தங்கள் கடமைகளை வெற்றிகரமாகச் செய்து, சுதந்திரப் போரின் முன்னணியிலே நிற்பார்கள் என்று தாம் பூரணமாக எதிர்பார்ப்பதாகவும் காந்திஜி சொன்னார். மேலும் தொடர்ந்து, பின்வருமாறு பேசினார்:

உங்கள் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் அரசாங்கப் பாடசாலைகளுடனும் கல்லூரிகளுடனும் ஒப்பிட்டுப் பார்த்தீர்களானால், ஏமாற்றம்தான் ஏற்படும். இரண்டும் வெவ்வேறு தன்மையுடையவை. அரசாங்கக் கல்விநிலையங்கள் ஜனங்களுடைய பணத்தை யுண்டு வளர்ந்திருக்கின்றன. அதனால், அவைகளுக்கு அரண்மனைபோன்ற, பெரிய பெரிய கட்டிடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றின் ஆசிரியர்கள் ஏராளமாகச் சம்பளம் பெறுகிறார்கள்; நிறையப் படித்து மிருக்கிறார்கள். அந்தமாதிரி யெல்லாம் இங்கே எதிர்பார்க்க முடியாது. பொருள்வசதி இருந்தாலும் கூட, உங்களுக்கு அவை கிடைக்க மாட்டா. அரசாங்கக்

---

* உறுதிமொழியும் உபதேசமும் சம்ஸ்கிருதத்திலேயே சொல்லப்பட்டன.

வினா. மூதாதையர்களுக்காக நீங்கள் செய்யவேண்டிய கடமைகள் யாவை?

விடை. மக்களிடையே காணப்படும் அக்கிரமம், திக்கற்ற நிலை, வறுமை ஆகியவற்றை ஒழித்தல்; இவற்றுக்குப் பதிலாக, சகோதரப்பண்பையும், மானத்தையும், சத்தியத்தையும் நிறுவுதல்.

கல்விநிலையங்களின் நோக்கமானது, முக்கியமாக, குமாஸ் தாக்களையும் அவர்களை யொத்த மற்ற ஊழியர்களையும் உற்பத்தி செய்வதாகும்; இப்படி உற்பத்தி செய்யப்பட்டவர் களின் உதவிகொண்டே, இந்த அன்னிய அரசாங்கம் தனது ஆட்சியை நடத்தவேண்டி யிருக்கிறது. ஆனால், தேசியக் கல்வி நிலையங்களின் நோக்கம், இதற்கு முற்றும் நேர்மாறானது; இவற்றின் நோக்கம், குமாஸ்தாக்களையும் மற்ற ஊழியர்களையும் உற்பத்தி செய்யவதன்று; என்ன வந்தாலும் சரி, எத்தகைய தியாகம் செய்ய நேரினும் சரி, இந்த அன்னிய ஆட்சியைக் கூடிய விரைவில் ஒழித்தே தீர்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டி ருக்கும் வீர மக்களைச் சிருஷ்டிப்ப தொன்றே இவற்றின் நோக்கமாகும். அரசாங்கக் கல்விநிலையங்கள், இயல்பாகவே அன்னிய அரசாங்கத்திற்கு உண்மையாக இருக்க வேண்டியவை. தேசிய ஸ்தாபனங்களோ இந்தத் தேசம் ஒன்றுக்குத்

வினா. ரிஷிகளுக்காக நீங்கள் செய்யவேண்டிய கடமைகள் யாவை?

விடை. அறியாமையைப் போக்கி அறிவைப் பரப்புதல்; அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலைநாட்டுதல்; சுயநலவுணர்ச்சியை அகற்றி, பரோபகாரச் சிந்தையையும் உண்மையான பண்பாட்டையும் வளர்த்தல்; தனிப்பட்ட வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் ஆன்ம உணர்ச்சியையே அடிப்படையாக அமைத்தல்.

வினா. தேவர்களுக்காக நீங்கள் செய்யவேண்டிய கடமைகள் யாவை?

விடை. மக்களிடையே தர்மத்தைப் பரப்புதல்; இயற்கையின் சக்தியனைத்தையும் சேமித்துத் திரட்டி மனிதவர்க்கத்தின் சேவைக்காகவே பயன்படுத்துதல்; வாழ்க்கையின் இறுதி நிலையாகிய சன்னியாச நிலையை, இறை பணிக்கென்றே அர்ப்பணஞ் செய்தல்.

வினா. இந்தக் கடமைகளை நீங்கள் சரிவர நிறைவேற்றுவீர்களா?

விடை. இறைவனுடைய திருவருள் சாட்சியாக, இந்தக் கடமைகளை நிறைவேற்ற என்னால் இயன்றவரை முயலுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன். தங்கள் ஆசீர்வாதத்தாலும் இறைவன் திருவருளாலும் எனது முயற்சிகள் பயன்பெற்றுச் சிறந்துமிக்கோங்குக!

தான் உண்மையாக இருக்க முடியும். அரசாங்கக் கல்வி நிலையங்கள், நல்ல வருவாயுள்ள உத்தியோகங்களைப் பெற ஏதுவா யிருக்கின்றன. தேசிய ஸ்தாபனங்களோ அப்படி யல்ல; இவற்றில் பயின்றவர்கள், வேறு வேலைகளில் ஈடு படாமல், தேச சேவையிலேயே முழுதும் ஈடுபடவேண்டி வரும்; தினசரி வாழ்க்கைக்கு வேண்டிய சொற்ப வருவாய் தான் இதில் கிடைக்கும். மூன்று விதமான கடமைகளைச் செய்வதாக, நீங்கள் இப்போது உறுதிமொழி கூறியிருக் கிறீர்கள். ஜெர்மானிய ஆசிரியர் ம்ராக்ஸ் முல்லர் நமக்கு ஞாபகப்படுத்தியதுபோல, நாம் உண்மையாக வாழ்வது என்றால், கடமையைச் செய்வது என்றே பொருள்படும். கடமையை ஒழுங்காகச் செய்தால், அது காரணமாகச் சில உரிமைகளும் தாமே வருகின்றன என்பதில் சந்தேக மில்லை. ஆனால், உரிமைகளையும் சௌகரியங்களையும் அடைவதற்காகவே ஒருவன் கடமைகளைச் செய்வானானால், பொதுவாக, முழு மனதோடு அவன் அவற்றைக் செய்கிற தில்லை; இதனால் சில சமயங்களில், எதிர்பார்த்த சௌகரி யங்களைக்கூட அவன் அடைய முடியாமல் போய்விடுகிறது. அப்படியே, அவன் எதிர்பார்த்த உரிமைகளை அடைந்த போதிலுங்கூட, அந்த உரிமைக ளெல்லாம் அவனுக்கு வீண்பாரமாக மாறிவிடுகின்றன. உங்களுடைய உரிமை சேவை செய்வ தொன்றே யாகும். நாட்டிற்குச் சுதந்திரத் தைத் தேடியளிக்கும் பணியிலே உங்களுக்குள்ள பங்கை நீங்கள் செய்து முடிக்கும்வரையில், உங்களுக்கு ஓய்வு கிடைக்காது. அரசாங்கக் கல்வி நிலையங்களுக்கும் உங்க ளுடைய கல்வி நிலையங்களுக்கு முள்ள அடிப்படையான வேறுபாட்டை நீங்கள் சரியாக மனதில் வாங்கிக்கொண் டால், தேசிய ஸ்தாபனங்களில் சேர்ந்ததற்காக ஒரு நாளும் நீங்கள் வருந்த மாட்டீர்கள். ஆனால், இந்த ஸ்தாபனங்களில் சிலர்தானே சேர்ந்திருக்கிறார்கள் என்று எண்ணி நீங்கள் அடிக்கடி மனதைத் தொல்லைப்படுத்திக்கொள்ளுகிறீர்க ளென்பது எனக்குத் தெரியும். உங்களில் சிலர், பழைய கல்விநிலையங்களை விட்டுவந்தது சரியல்ல என்றும் எண் ணுகிறீர்கள்; அங்கேயே திரும்பப் போய்விடலாமா என்ற ஆசையும் சிலருக்கு அந்தரங்கத்திலே இருக்கிறது. நான் இங்கே ஒன்று சொல்லுவேன்; எந்தப் பெரிய காரியத்தை

வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள் ; அதைச் சாதிப்பதற்கு எத்தனை பேர் முன்வருகிறார்கள் என்பது முக்கியமல்ல; எத்தகைய உள்ளப்பண்பு வாய்ந்தவர்கள் முன் வருகிறார்கள் என்பதே இறுதியில் வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும். உலகத்தில் மகத்தான காரியங்களைச் சாதித்த பெரியார் அனைவரும் எப்போதும் தனித்துநின்றே போராடி யிருக்கிறார்கள். ஜொராஸ்டிரர், புத்தர், ஏசு கிறிஸ்து, முகம்மது போன்ற மகத்தான தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையைக் கவனியுங்கள். அவர்களெல்லோரும் தனியாகவேதான் நின்றார்கள். அவர்களைப்போல இன்னும் எத்தனையோ பெரியவர்களை உதாரணமாகக் கூற முடியும். ஆனால், ஒன்று : அவர்களுக்கு, தங்கள் கொள்கையிலே உறுதி யிருந்தது ; கடவுள்மீதும் திடமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். கடவுள் தங்கள் பக்கம் இருந்ததாக அவர்கள் நம்பினதால், தனிமையாக நின்று போராடுகிறோமே என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டதே இல்லை. முகம்மது நபியின் வாழ்க்கையில் நடந்த ஓர் சம்பவத்தை இங்கே உங்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். முகம்மது நபியும் அவருடைய சிஷ்யரான அபூபக்கரும் தப்பியோடிக் கொண் டிருந்தார்கள். எதிரிகள் அவர்களைத் துரத்திக் கொண்டு, சமீபத்திலே நெருங்கிவிட்டார்கள். அப்போது, என்ன ஆகுமோ என்று அபூபக்கருக்கு நடுக்கமாயிருந்தது. அவர் முகம்மதைப் பார்த்துச் சொன்னார்: 'நம்மைத் துரத்திக்கொண்டு வருகிற எதிரியின் கூட்டத்தைப் பாருங்கள். இத்தனை பேருக்கு எதிராக நின்று, நாம் இருவரும் என்ன செய்ய முடியும்?' என்றார். முகம்மது நபி கணமும் யோசனை செய்யாமல், தமது சீடரை இதமாகக் கண்டிக்கிற தொனியில், 'இல்லை யப்பா, நாம் மூன்று பேர் இருக்கிறோம்; கடவுளும் நமது பக்கத்தில் இருக்கிறார் அல்லவா?' என்றார். அது போகட்டும். விபீஷணன், பிரகலாதன் இவர்களுடைய அசைக்க முடியாத பக்தியைக் கவனியுங்கள். அதைப்போன்ற தீவிரமான உறுதியும், கடவுளிடம் அதைப்போன்ற திடமான நம்பிக்கையும் உங்களுக்கு ஏற்பட வேண்டு மென்றே நான் விரும்புகிறேன்.

வெறும் கொள்கையா, செயலா?

"தற்காலக் கல்வியானது, ஆன்ம தத்துவத்திலிருந்து நமது பார்வையை வேறு வழியில் திருப்புகிறது; ஆகவே, ஆன்மபலத்தால் என்னென்ன காரியங்களைச் செய்தல் கூடும் என்பதை நாம் உணர்வதில்லை. இதன் பயனாக, நமது பார்வையானது, எப்போது பார்த்தாலும், விரைவிலே தோன்றி மறைந்துபோகிற சொற்ப வாழ்வுள்ள உலகியல் சக்தியிலேயே பதிந்திருக்கிறது."

ஒரு மாணவர் எழுதுகிறார்:

"உங்களைக் கேள்வி கேட்போர் பலருக்கும் நீங்கள் கூறும் விடைகள், பெரும்பாலும் கொள்கையளவில் முற்றிலும் பொருத்தமாகவே யுள்ளன. அந்த விடைகளினால் மனதிலே அப்போதைக்கு ஒருவகையில் திருப்திகூட ஏற்படுகிறது. ஆனால், செயல்முறையில் பார்க்கும்பொழுது, பழைய சங்கடங்களை அவை போக்கிவிட்டதென்று சொல்லுவதற்குஇல்லை. உதாரணமாக, தொகையிலே நாம்அதிகமா யிருக்கிறோமென் எண்ணிப் போராடுபவன் கோழையாவான் என்று நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். கொள்கையளவில் இக் கருத்துச் சரியாகத்தான் தோற்றுகிறது; தற்காலிகமாக மனதுக்குச் சமாதானத்தையும் இது அளிக்கிற தென்பது உண்மை தான். ஆனால், செயல்முறையில் இதனால் என்ன பிரயோஜனம்? ஆன்மசக்தியே வலிமை யுடையது என்ற உங்கள் சித்தாந்தத்தை நீங்கள் எல்லோருக்குமே போதிக்கிறீர்கள். ராட்டினத்தாலும் கதரினாலுந்தான் நமக்கு விமோசனம் என்பதில் எத்தனையோ பேருக்கு நம்பிக்கை யில்லை. ஒரு இலட்சிய உலகத்திலே நின்று, நீங்கள் சொல்லுகிற இந்த ஆலோசனையை, அவர்கள் அனைவரும்மனப்பூர்வமாக ஏற்று நடப்பார்கள் என்று எண்ண இடமுண்டா? வாத்தின் தலையிலே தண்ணீரை ஊற்றுவதனால் ஏதாவது பயனுண்டா? எந்நேரமும் தான் மிதந்து உழன்றுகொண்டிருக்கும் அதே தண்ணீர், தலையில் பட்டதனால், வாத்துக்கு உணர்ச்சி வருமா? அதுபோல, உங்கள் போதனையும் சற்றும் பயனற்றதாய்த் தானே போகும்?"

ஆன்ம சக்தியே வலிமை யுடையது என்ற எனது போதனை, தற்சமயத்திற்குப் பயனில்லாதது போலத் தோன்றினாலும், முற்றிலும் வீண்போகா தென்றே நான் நிச்சயமாய் நம்புகிறேன். எறும்பூரக் கல்லும் தேயும்

என்பது பழமொழி யல்லவா? எனக்குக் கடிதம் எழுதிய அன்பருக்கு,இன்று வெறும் மனக்கோட்டையாகத் தோன்றும் கருத்து, நாளை, செயல்முறைக்குப் பொருத்தமான தாகத் தோன்றவுங் கூடும். இது என்னுடைய நம்பிக்கை. சரித்திரத்தில் இந்தமாதிரி உதாரணங்கள் எத்தனையோ காணலாம். ஆன்ம சக்தி என்ற தொடர் இன்று பொருளில்லாத ஒரு தொடராக நமது மாணவர்களுக்குக் காணப்படுகிறது. நாம் எத்தகைய இழிந்த நிலைக்கு வந்துவிட்டோம் என்பதையே இது காட்டுகிறது. ஏனென்றால், நமது மாணவர்களுக்கு, உயிரோடொட்டிய விஷயங்கள், நிரந்தரமான உண்மைகள் ஆகிய யாவும் செயல்முறைக்கு, ஒவ்வாத வெறும் கற்பனைகளாகத் தோன்றுகின்றன; அற்பமான லௌகீக விஷயங்களை மட்டுமே செயலுக்குப் பொருத்தமானவையாக அவர்கள் கருதுகிறார்கள். இதை விடத் துக்ககரமான விஷயம் வேறு என்ன வேண்டும்?

வெறும் எண்ணிக்கைப் பலத்தினால் ஒரு பயனுமில்லை என்பதை ஒவ்வொரு நாளும் நாம் கண்முன்னாகக் கண்டு வருகிறோம். இந்தியாவிலுள்ள முப்பது கோடி மக்களை இன்று ஒரு லட்சத்துக்கும் குறைவான ஆங்கிலேயர் ஆளுகிறார்கள். வெறும் எண்ணிக்கையினால் பயனில்லை என்ற கூற்றுக்கு இதைவிடப் பெரிய அத்தாட்சி வேறென்ன வேண்டும்? ஒரு சிங்கத்தைக் கண்டாலே ஆயிரக்கணக்கான ஆடுகள் ஓட்டம் பிடிக்கின்றன. இதற்குக் காரணம் தெளிவாகத் தெரிகிறது. ஆடுகள் தங்கள் பலவீனத்தை உணர்ந்திருக்கின்றன; சிங்கம் தன் பலத்தை உணர்ந்திருக்கிறது. தனக்குப் பலம் இருக்கிறதென்று சிங்கம் அறிந்திருப்பதனாலேயே, ஆட்டு மந்தையின் எண்ணிக்கைப் பலத்தை அது வென்றுவிடுகிறது. இந்த உவமைப்படி, ஆன்ம சக்தி என்பது, அப்படி யொன்றும் வீண்பிரமையோ, கற்பனையோ அல்ல, சத்தான உண்மைதான் என்று முடிவு கட்ட முடியாதா?

எண்ணிக்கைப் பலத்தைக் குறைத்துக் கூறுவது என் கருத்தல்ல; அதற்கும் உபயோகம் உண்டு. ஆனால், உள்ளிருந்து இயக்கும் ஆன்ம சக்தியின் வலிமைகொண்டே அது உபயோகமானதா யிருக்க முடியும். யானை எவ்வளவு பெரியது? ஆனால், அதன் மிருதுவான பாகத்தில் லட்சக்

கணக்கான எறும்புகள் ஒன்றுசேர்ந்து அரிப்பதனுலே அவை அந்த யானையைக் கொன்றுவிடுதலுங் கூடும். எறும்புகளுக்கு உடம்புகள் வேவ்வேருக இருந்தபோதிலும், உணர்ச்சியளவிலே அனைவரும் ஒன்றுதான் என்ற நினைவு, அதாவது, - அந்த எறும்புகளின் ஆன்ம சக்தியே - அவைகளுக்கு அப்படிப்பட்ட, வெல்லமுடியாத பலத்தைத் தந்திருக்கிறது. நமக்கும் அப்படித்தான். எறும்புகளுக்கு உள்ள உணர்ச்சிபோல, நமக்கும், இந்திய மக்கள் எல்லோரும் ஒன்றுதான் என்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டதானுல், அந்தக் கணமே, நாமும் பிறரால் எதிர்த்து நிற்க முடியாத வலிமை பொருந்தியவர்களாகி, நம்மைப் பிணித்திருக்கும் தளையை அறுத்து எறிந்துவிடலாம்.

நமது தேசியப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் தொகை மிகவும் சொற்பமாயிருப்பினும், உண்மையான தியாகம், சேவை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி இவற்றுடன், தங்கள் இலட்சியத்தில் உறுதியான நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்குமானுல், அரசாங்கக் கல்வி ஸ்தாபனங்களில் படிக்கும் மாணவரனைவரும்சேர்ந்து இந்நாட்டுக்குச் செய்யக்கூடிய தொண்டைவிடப் பல மடங்கு மேலான தொண்டை அவர்களால் செய்ய முடியுமென்பதே எனது உறுதியான நம்பிக்கை. உயர்ந்த உள்ளப்பண்பு, தொகையின் பெருக்கத்தைவிடச் சிறப்பு வாய்ந்தது என்ற கொள்கை மிகவும் ஆதாரபூர்வமானது. ஏனென்றுல், அது செயல்முறையில் உண்மையா யிருக்கிறது. செயல்முறையில் சரி யென்று நிரூபிக்க முடியாத விஷயமெதுவும், கொள்கையில் சரியாக இருக்க முடியாதென்றே நான் முடிவு கட்டுகிறேன்.

பூமி பந்துபோல உருண்டையான தென்றும், தன்னைத்தானே சுற்றிக்கொள்ளுகிற தென்றும் இத்தாலியவான நூல் வல்லவரான கலிலியோ முதன் முதலில் கண்டுபிடித்துச் சொன்னபோது, அவரை வெறும் கற்பனைக்காரரென்றும் கனவுகாண்கிறவர் என்றும் உலகமெல்லாம் கேலி செய்தது. சென்ற இடமெல்லாம் அவருக்கு இகழ்ச்சிதான். ஆனுல், இன்று கலிலியோ சொன்னதுதான் உண்மையென்பதை நாம் அறிவோம்; கலிலியோவின் கருத்தை ஏற்காமல், பூமி அசையாது அப்படியே நிற்ப

தென்றும், தட்டுப்போலத் தட்டை வடிவமுடைய தென்றும் நம்பியவர்களே அறியாமை என்ற இருளிலே மயங்கி நின்றார்க ளென்றும் நாம் அறிவோம்.

தற்காலக் கல்வியானது ஆன்ம தத்துவத்திலிருந்து நமது பார்வையை வேறு வழியில் திருப்புகிறது; ஆகவே, ஆன்மபலத்தால் என்னென்ன காரியங்களைச் செய்தல் கூடும் என்பதை நாம் உணர்வதில்லை. இதன் பயனாக, நமது பார்வையானது, எப்போது பார்த்தாலும், விரைவிலே தோன்றி மறைந்துபோகிற சொற்ப வாழ்வுள்ள உலகின் சக்தியிலேயே பதிந்திருக்கிறது. உண்மையிலேயே மனோபாவம் அற்றுப்போன அறிவின் மந்தநிலையைத் தான், இது புலப்படுத்துகிறது.

ஆனால், நான், நம்பிக்கையோடு, பொறுமையாக வாழ்கிறேன். நான் சொல்லுகிற கருத்தே சரி என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை யுண்டு; இது வறட்டு நம்பிக்கை யல்ல; என்னுடைய அனுபவத்தாலும், என் தோழர்களின் அனுபவத்தாலும் உறுதிபெற்ற நம்பிக்கை இது. இவ்விரு கொள்கைகளையும் மாணவர் ஒவ்வொருவரும் பொறுமையோடும் விருப்பு வெறுப்பில்லாமலும் தாமே ஆராய்வாரானால், மெய்யானவை யென்று நேருக்கு நேராகக் கண்டுகொள்ளுவார்கள்.

1. வெறும் தொகைப் பெருக்கத்தால் பயனில்லை; எண்ணிக்கைப் பலம் ஒரு பலமாகாது.

2. ஆன்மபலம் அல்லாத வேறெந்தப் பலமும் சொற்ப வாழ்வுடையது, வீணானது.

மேலே சொன்ன இரண்டு கொள்கைகளும் சரியென்றால், ஒவ்வொரு மாணவரும் தன்னை ஒழுங்குபெற நிறுத்தி, தூய்மைப்படுத்தி, ஆன்மபலம் என்ற ஒப்பற்ற ஆயுதத்தைப் பெறச் சதா முயலவேண்டும் என்பது சொல்லாமலே விளங்குகிற தல்லவா?

கதரும் உள்ளத்தூய்மையும் பற்றிய உபதேசம்

> "நேரத்தோடு விழித்தெழாவிட்டால், அதிக உக்கிரமாகத் திரண்டு சுழன்றுவருகிற ஒழுக்கவீனம் என்ற சுவாலையிலே நீங்களும் சிக்கிக்கொள்ளுவீர்கள்; இச் சுவாலை விரைவிலே உங்களைச் சூழ்ந்து, அப்படியே பொசுக்கிவிடும். ஆகவே, விழிப்பாயிருங்களென்று உங்களுக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன். 'எச்சரிக்கையாயிருங்கள். உங்களை இந்த நெருப்பு விழுங்குவதன் முன்னர், இதிலிருந்து தப்பி ஓடிவிடுங்கள்' என்று என் பலம் கொண்ட மட்டும் உங்களுக்கு அழுத்திச் சொல்லுகிறேன்."

பண்டித மாளவியாவின் அபிப்பிராயத்தை யொட்டி, காசி ஹிந்து சர்வகலாசாலை மாணவர் கூட்டத்தில் காந்திஜி பேசினர். அப்போது, கதரும் உள்ளத்தூய்மையும்பற்றிய உபதேசத்தை, காந்திஜி பின்வருமாறு வெளியிட்டார்:

'நீங்கள் இதுவரை சொல்லியது போதும். உங்கள் வார்த்தைக்கு ஒருவரும் இப்போது செவிசாய்ப்ப தில்லை. கதரைப்பற்றிப் பேசுவதை இனிமேல் நிறுத்திக்கொண்டாலென்ன?' இந்த மாதிரி சில வட்டாரங்களிலிருந்து எனக்கு ஆலோசனை கூறி வருகிறார்கள். பண்டைக் காலத்தில், பிரகலாதன், மரணத்தினுங் கொடிய பல சித்திரவதைகளுக்குஉட்பட்டபோதுங்கூட,ராமநாம ஜெபத்தை அவன் நிறுத்தவில்லை. பிரகலாதனுடைய அந்த அரிய செயலை நான் உணர்ந்திருக்கும்போது, எனக்கு மிகவும் பிரியமான இந்த மந்திரத்தை ஜெபிப்பதை நான் ஏன் நிறுத்த வேண்டும்? மேலும், இதுவரையில் சித்திரவதைக்கு நான் உட்படும்படி நேரவில்லை. எனது நாடு இன்றைய நிலையிலே எனக்கு ஒரே ஒரு செய்தியைத்தான் அறிவித்திருக்கிறது. அந்தச் செய்தியை நான் எப்படிச் சொல்லாதிருக்க முடியும்? ராஜாக்களிடமிருந்தும் மகா ராஜாக்களிடமிருந்தும் பண்டித மாளவியாஜி லட்சக்கணக்கான பணத்தை உங்களுக்காகச் சேர்த்திருக்கிறார்; இன்னும் சேர்த்து வருகிறார். இந்தப் பணமானது, வெளித்தோற்றத்தில், பணக்கார மன்னர்களிடமிருந்து கிடைப்பதாகத் தெரிகிறது. ஆனால், உண்மையில் இந்தப் பணம்

கோடிக்கணக்கான ஏழை மக்களிடமிருந்தே வருகிறது. ஐரோப்பாவில் இருக்கிற நிலைமைக்கு முற்றிலும் மாறாக, நமது நாட்டுப் பணக்காரர்கள் அனைவரும் நாட்டுப்புறத்து மக்களைச் சுரண்டித்தான் பணக்காரர்களானார்கள்; இப்படி இவர்கள் சுரண்டுகிறதனால், அந்தமக்களில் பெரும்பான்மை யோருக்கு, ஒரு நாளைக்கு, ஒரு வேளைக்கு வேண்டிய முழுச் சாப்பாடுகூடக் கிடைப்ப தில்லை. ஆகவே, நீங்கள் இன்று பெற்றுவருகிற கல்விக்கு, சாப்பாடு இல்லாமல் சாகிற அந்த நாட்டுப்புறத்து ஏழை மக்களே பணம் கொடுக்கிறார்கள். ஆனால், இதே கல்வியை அவர்கள் பெற எப்போதாவது சந்தர்ப்பம் வருமா? ஒருக்காலும் வராது. ஏழைகளும் வந்து படிக்கக்கூடிய முறையில் அமைந்திராத இந்தக் கல்வி எங்களுக்கும் வேண்டாம் என்று மறுத்துவிடுவது உங்கள் கடமை யாகும்; ஆனால், இப்போது அப்படிச் செய்ய வேண்டு மென்று உங்களை நான் கேட்கவில்லை. அவர்களிடமிருந்து நீங்கள் பெறும் பெரிய உதவிக்கு, சொற்பக் கைம்மாறு என்ற முறையில், இந்த ஏழைகளின் பொருட்டு, ஒரு சிறிய தர்மத்தைச் செய்யும்படி நான் உங்களை வேண்டுகிறேன். ஏனெனில், தான் செய்யவேண்டிய தர்மத்தைச் செய்யாமல் உணவு கொள்ளுபவன் தன் உணவைத் திருடுபவனாகிறான் என்று கீதை சொல்லுகிறது. சென்ற மகா யுத்தத்தின்போது, பிரிட்டிஷ் மக்கள் செய்ய வேண்டி யிருந்த தர்மம் என்ன வென்றால், ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்கள் தங்கள் கொல்லையில் உருளைக் கிழங்கு பயிரிடுவதும், கொஞ்சம் சாதாரண நெசவுவேலை செய்வது மாகும். இந்தக் காலத்தில் நமக்கேற்ற தர்மமாவது நூல்நூற்றலாகும். இரவும் பகலும் இதைத்தான் நான் பேசிவந்திருக்கிறேன்; ஆகவே, இன்று இதைக் குறித்து நான் ஒன்றும் சொல்லப்போவ தில்லை. இந்தியாவின் ஏழை மக்கள் உங்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் உங்கள் இதயத்தை உருக்கிவிட்ட தென்றால், நாளையே, நீங்கள் 'திமு திமு' வென்று கிருபாளினியின் கதர்க்கடையில் நுழைந்து, அங்கு கையிருப்பிலுள்ள கதர்த் துணி அவ்வளவையும் காலிசெய்துவிடும்படி உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு முன்னாலே, உங்களுடைய பைகளிலுள்ள பணம் முழுவதையும் இப்போது இங்கு

கொடுத்துவிடுங்கள். பண்டித மாளவியாஜி, யாசகம் வாங்குகிற கலையில் நல்ல தேர்ச்சி யடைந்திருக்கிறார்; அந்தக் கலையை நானும் அவரிடமிருந்து கற்றிருக்கிறேன். ராஜாக்களிடமிருந்து பணத்தைப் பிடுங்குகிற வித்தையில் அவர் நிபுணர். நானோ, ஏழைகளிடமிருந்து பணம் வசூல் செய்வதற்குச் சிறிதும் தயங்குவதில்லை. இந்த ஏழைகளைவிடப் பரம ஏழைகளா யிருப்பவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டே, நான் இப்படி வசூல் செய்கிறேன்.

உங்களுக்காக, மாளவியாஜி கோடிக்கணக்கான ரூபாயை யாசகமாகப் பெற்று இந்தப் பெரிய கட்டிடங்களைக் கட்டி இருக்கிறார். அவருடைய நோக்கம் என்னவென்றால், சிறந்த ஒளிபடைத்த மாணிக்கங்களை, - அதாவது, ஆரோக்கியமான திடகாத்திரம் படைத்த ஆடவர்களையும் பெண்களையும்-இக் கலாசாலைகளிலிருந்து நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பி, தாய் நாட்டுக்குத் தொண்டு செய்வதே யாகும். இன்று, மேலைநாட்டிலிருந்து வீசுகிற நாகரிகமென்னும் காற்று மாசு பொதிந்திருக்கிறது; அது உங்களை அடித்துக்கொண்டு போகும்படி நீங்கள் விட்டுவிட்டால், மாளவியாஜியின் நோக்கம் வெற்றி பெறாது. மேலைநாட்டு நாகரிகமுறைகளெல்லாம் மேலைநாட்டிலேயே எல்லோராலும் அங்கீகரிக்கப் பெற்றுவிட்டன என்று கொள்ளலாகாது. நஞ்சை யொத்த இந்தப் போக்கை எதிர்த்தழிக்க, ஐரோப்பாவில் ஒருசில நண்பர்கள் கடுமையாகப் போராடி வருகிறார்கள். நேரத்தோடு விழித்தெழாவிட்டால், அதிக உக்கிரமாகத் திரண்டு சுழன்றுவருகிற ஒழுக்கவீனம் என்ற சுவாலையிலே நீங்களும் சிக்கிக்கொள்ளுவீர்கள். இச்சுவாலை விரைவிலே உங்களைச் சூழ்ந்து, அப்படியே பொசுக்கிவிடும். ஆகவே, விழிப்பா யிருங்க ளென்று உங்களுக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன். 'எச்சரிக்கையா யிருங்கள். உங்களை இந்த நெருப்பு விழுங்குவதன் முன்னர், இதிலிருந்து தப்பி ஓடிவிடுங்கள்' என்று என் பலம்கொண்டமட்டும் உங்களுக்கு அழுத்திச் சொல்லுகிறேன்.

இரண்டு வருடம் சென்று, இச் சர்வகலாசாலை மாணவர்களிடையே பேசியபோது, காந்திஜி இதே செய்தியைப் பின்வருமாறு தெரிவித்தார்:

இந்தியத் தாயின் சிறந்த புதல்வராகிய மாளவியாஜி,

என்றும் நிலைத்து நிற்கவல்லதொரு சேவையைச் செய்து வருகிறார். உங்களுக்காக அவர் செய்துவரும் இந்தச் சேவைக்கு நீங்கள் பாத்திரமானவர்க ளென்பதை நிரூபிக்க என்ன செய்கிறீர்கள்? நீங்கள் பெரிய பண்டிதர்களாக வேண்டுமென்று அவர் எதிர்பார்க்க வில்லை; உங்களுடைய வாழ்க்கையின் மூலமாக, மெய்யான சமத்துவம் இன்னதென்பதை வெளிப்படுத்தி, ஹிந்து மதத்தையும் இந்திய நாட்டையும் நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்றே அவர் எதிர்பார்க்கிறார். மாளவியாஜி சிருஷ்டித்துள்ள இந்த மகத்தான கலாசாலையை இக் கட்டிடங்களின் பெருமையைக்கொண்டோ, இந்தக் கட்டிடங்களைச் சுற்றியுள்ள 1300 ஏகரா விஸ்தீரணமுள்ள தோட்டத்தைக்கொண்டோ மதிப்பிடக் கூடாது. மாளவியாஜியின் நோக்கங்களை நிறைவேற்ற நீங்கள் எவ்விதம் தகுதியடைந்து வருகிறீர்க ளென்பதைக்கொண்டே அதை மதிப்பிட வேண்டும். இதை நீங்கள் எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இக் கலாசாலையிலே பயின்றதற்கு ஏற்றதொரு மாசற்ற ஒழுக்கம் உங்கள் நடத்தையிலே வெளிப்பட வேண்டுமானல், அதற்கு ராட்டினத்தைவிடச் சிறந்த சாதனம் வேறு கிடையாது. கடவுளுக்குச் சொல்லப்படும் பெயர்கள் அனந்தம்; அவற்றுள்ளே தரித்திர நாராயணன் என்ற பெயர்தான் எல்லாவற்றையும்விடப் புனிதமானது; ஏனென்றால், அந்தப் பெயரானது, விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசில பணக்காரர்களி னின்று வேறுபட்டு நிற்கிற, எண்ணிக்கையற்ற ஏழை மக்களைக் குறிக்கும் ஓர் அடையாளம். மேலே நான் எடுத்துக்காட்டிய வழிகளில் ராட்டினத்தின் உபதேசத்தைப் பரப்புவதொன்றுதான், வயிற்றுக்கில்லாது சாகும் அந்தக் கோடிக்கணக்கான மக்களோடு நீங்களும் கலந்துழைப்பதற்கு ஏற்ற, எளிதான, சிறந்த வழியாகும். நீங்கள் இந்த உபதேசத்தைப் பரப்புவதற்கு நூல்நூற்பதில் நிபுணர்களாகலாம்; கதருடுக்கலாம்; கதர் இயக்கத்துக்குப் பண உதவி செய்யலாம். மாளவியாஜி உங்களுக்கு அளித்துள்ள கல்வி வசதிகளையெல்லாம் இந்த ஏழை மக்கள் ஒரு நாளும் அடைய வழியில்லையென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய சகோதரர்களும் சகோதரிகளுமாகிய இந்த ஏழை

மக்களுக்கு நீங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறீர்கள்? இந்தச் சர்வகலாசாலையை ஸ்தாபிப்பதென்று மாளவியாஜி எண்ணியபோது, இந்தக் கேள்வி அவர் மனதில் எழுந்தது. இங்கு கொடுக்கிற பயிற்சிக்குப் பாத்திரமானவர்கள்தான் என்று சொல்லத்தக்க முறையில் நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். அவ்விதம் நடந்துகொள்ளுவீர்கள் என்ற நம்பிக்கையோடுதான், அவர் இந்தப் புனிதமான பணியை மேற்கொண்டார்.

கூர்ஜர வித்தியாபீடத்தில்

" இருப்பு விலங்கைவிடப் பொன் விலங்கு மிக மிக மோசமான தென்றே எனக்குப் படுகிறது. இருப்பு விலங்கு நம்மை அழுத்தி அழுத்திப் புண்படுத்துவதால், அதனால் உண்டாகும் தொந்தரவையும் வலியையும் எளிதில் உணர்கிறோம். ஆனால், பொன் விலங்கை, ஒரு விலங்கு என்பதை மறந்துவிடுகிறோம். ஆகவே, இந்தியாவுக்கு விடுதலையே கிடையாது, விலங்கு போட்டுக்கொண்டுதான் இந்தியா இருக்க வேண்டும் என்றால், அந்த விலங்கு பொன்னாலோ, வேறு விலையுயர்ந்த உலோகத்திலோ இருப்பதைவிட, இருப்பு விலங்காக இருப்பது எவ்வளவோ நல்லது."

புதிதாகப் பட்டம் பெற்ற மாணவர்களை ஆசீர்வதித்து, காந்திஜி பின்வருமாறு பேசினார்:

லாகூர் காங்கிரஸில் நிறைவேறிய சுதந்திரத் தீர்மானத்தைப்பற்றி ஏதாவது நான் சொல்லுவேனென்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடும்; சிறப்பாக, சட்டமறுப்பு சம்பந்தமான பகுதியைக் குறித்துச் சொல்லுவேனென்று எதிர்பார்ப்பீர்கள்; இந்தப் போராட்டத்தில் நீங்கள் செய்ய வேண்டியதென்ன என்பதையும் அறிய ஆவலாயிருப்பீர்கள். அடிக்கடி நான் இங்கே சொல்லிவருகிற விஷயத்தையே, இப்போதும் சொல்லவேண்டியிருக்கிறது. வெறும் எண்ணிக்கைப் பலத்தை மட்டும் நாம் நம்பியிருக்க வில்லை. ஒழுக்கத்தின் சிறப்பால் வரும் பலத்தையே நாம் நம்பியிருக்கிறோம். சட்டமறுப்புத் தீர்மானத்தை நான் கொண்டுவந்ததின் முக்கிய காரணம், ஒரு சிலரேனும் அதற்காகத் தங்களைத் தியாகம் செய்ய முன்வருவார்களென்ற நம்பிக்கையினால்தான். அதனுடைய அழைப்பிற்கு இசைந்து ஏதோ பல பேர் அதில் வந்து சேர்ந்துவிடுவார்களென்ற நம்பிக்கை அவ்வளவாக இல்லை. 1929-ஆம் வருஷம் முடிவதற்குள் குடியேற்ற நாட்டந்தஸ்து இந்தியாவுக்குக் கொடுபடவேண்டும்; அப்படிக் கொடுபடாவிட்டால், கல்கத்தா காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானத்தின்படி, காங்கிரஸ் அமைப்பு விதிகளில் முதல் விதியை மாற்றி, சட்டமறுப்புச் சம்பந்தமாக ஒரு திட்டத்தைத் தயாரிக்கவேண்டியிருக்கும். இதை

நீங்கள் அறிவீர்கள். குடியேற்ற நாட்டு அந்தஸ்து நமக்குக் கொடுபட வில்லை. ஆகவே, மேற்சொன்ன காங்கிரஸ் தீர்மானப்படி, நமக்கு ஏற்பட்டுள்ள கடமையை நிறைவேற்றுவதை யன்றி வேறு வழி யில்லாமல் போய்விட்டது; சிலர் சட்டமறுப்பு இயக்கத்தைக் கண்டிக்கலாம்; உண்மையைத் திரித்தும் கூறலாம். இருந்தாலும், இதுவே நமது கடமை என்பது தெளிவு. அத் தீர்மானம் நிறைவேறிய பின்னர், நடந்த சம்பவங்கள், நாம் செய்தது சரி யென்பதை வலியுறுத்துகின்றன. குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்றால் கனடா, நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் அந்தஸ்தை யொத்ததாயிருக்கு மென்று நாம் நம்பி யிருந்தோம்; ஆனால், இந்தியாவுக்கு வழங்கப்போகிற குடியேற்ற நாட்டு அந்தஸ்து தனி ரகமானது என்றும், மேலே சொன்னபடி நாம் நம்பி யிருந்த தல்ல வென்றும், ரஸ்ஸல் பிரபு நமக்கு வெளிப்படையாகவே சொல்லிவிட்டார். கனடா, நியூஜிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் அனேகமாய்ச் சுதந்திரமுடைய நாடுகள் என்பதையும் இந்தப் பெரிய மனிதர் ஒப்புக்கொள்ளுகிறார். இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வேண்டு மென்று நான் பேசியபோ தெல்லாம், இந்த மாதிரியான சுதந்திர அந்தஸ்தை மனதில் கொண்டு தான் பேசி வந்திருக்கிறேன். இந்தியா பல ஆண்டுகளாக இருப்புச் சங்கிலிகளால் பிணிக்கப்பட் டிருக்கிறது. இப்போது, அதற்குப் பதிலாக, பொற் சங்கிலியால் பிணிக்கப்படும் உரிமையை இந்தியாவுக்கு வழங்குவோம் என்கிறார் ரஸ்ஸல் பிரபு. அவர் சொல்லுவதன் பொருள் இதுவேயாகும். இப்படி அவர் சொல்லுவதை நம்மில் சிலர் ஆசையோடு ஏற்றுக்கொள்ளுவதாகவும் தெரிகிறது. பிரிட்டிஷ் தொடர்பு அற்றுவிட்டால் என்ன செய்வது? இந்தியாவில் ஒரே குழப்பமும் அக்கிரமமும் ஏற்பட்டுவிடுமே என்று நாம் அஞ்சுகிறோம். இங்கு எனது கருத்தை மீண்டும் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நான் அஹிம்சாவாதி என்பது உண்மைதான். இருந்தாலும், நாட்டுக்கு நிரந்தரமான அடிமைத்தனம் வேண்டுமா? கலகமும் குழப்பமும் அதிகரிக்கையில் அவற்றைக் கண்டு ஒன்றும் செய்ய முடியாம லிருக்கும் கையற்றதன்மை வேண்

டுமா ? என்று என்னைக் கேட்டால், இந்தியாவில் குழப்பமும் கலகமும் மலிந்திருக்கட்டும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை யொருவர் குத்திக்கொன்றாலும் கொல்லட்டும். அவற்றை யெல்லாம் கண்ணாரக் கண்டு அவற்றைப் போக்க ஒன்றும் செய்ய இயலாத நிலையில் நான் இருந்தாலும் பாதக மில்லை. ஏதோ கௌரவமான ஒரு போர்வை போர்த்து வைத்துள்ள அடிமை வாழ்வு வாழ்வதைவிட, அந்த வாழ்வையே எங்கும் காண்பதைவிட, மேற் சொல்லிய கலகமும் குழப்பமும் மலிந்த நிலை, எவ்வளவோ மேலானது என்று சொல்லுவேன். இருப்பு விலங்கை விடப் பொன் விலங்கு மிக மிக மோசமான தென்றே எனக்குப் படுகிறது. இருப்பு விலங்கு நம்மை அழுத்தி அழுத்திப் புண்படுத்துவதால், அதனால் உண்டாகும் தொந்தரவையும் வலியையும் எளிதில் உணர்கிறோம். ஆனால், பொன் விலங்கை, ஒரு விலங்கு என்பதையே மறந்து விடுகிறோம். ஆகவே, இந்தியாவுக்கு விடுதலையே கிடையாது, விலங்கு போட்டுக்கொண்டுதான் இந்தியா இருக்க வேண்டும் என்றால், அந்த விலங்கு, பொன்னாலோ, வேறு விலையுயர்ந்த உலோகத்திலோ இருப்பதைவிட, இருப்பு விலங்காக இருப்பது எவ்வளவோ நல்லது.

சுதந்திரம் என்று பேச வாயெடுத்ததுமே, ஆப்கனிஸ்தானம் இந்தியாவின்மீது படையெடுத்துவிடும் என்று சிலர் பூச்சாண்டி காட்டுகிறார்கள். பிரிட்டனோடு நமக்குள்ள அடிமைத் தொடர்பை வேரறுத்துவிட்டபின், ஆப்கனிஸ்தானம் படையெடுப்பதை நான் அவ்வளவாகப் பொருட்படுத்த வில்லை. இறுதியில் உண்மை வெல்லும், நன்மை உண்டாகும் என்ற திடமான நம்பிக்கை எனக்கு உண்டு. ஒரு சொட்டு இரத்தம்கூடச் சிந்தாதபடி புரட்சி ஏற்பட்டு, இந்தியா விடுதலையடையும் என்பதில் எனக்குள்ள நம்பிக்கையை ஒருவராலும் அசைக்க முடியாது. நமது இயக்கத்தை நடத்த, பண்டித ஜவாஹர்லால் நேருவைப்போன்ற ஒருவர் இருக்கும்போது நமக்கென்ன கவலை ? இவரைவிடச் சிறந்த இளைஞர் நமக்கு ராஷ்டிர பதியாக இனிக் கிடைக்கப்போவ தில்லை. இவரிடத்தில் நமது காரியங்களை ஒப்படைத்திருக்கும்போது, நமது இலட்சியத்தை நாம் அடைந்துவிட்டால், எவ்வளவு நன்றா யிருக்

கும்? நீங்கள் செய்துகொடுத்த உறுதிமொழிப்படி நடந்து கொண்டால், இது சாத்தியமாகு மென்றே நான் கருதுகிறேன். நான் நடத்தும் சுயராஜ்யப் போராட்டத்தின் முன்னணியில் இந்த வித்தியாபீட மாணவர்களும் நிற்பார்க ளென்று நம்புகிறேன். நேரப்போவது என்ன என்பதை மனக்கண்ணினுல் நீங்கள் பார்த்துச் சிந்தனை செய்ய வேண்டும். சிறை புகுவதைவிடக் கடுமையான சோதனைகள் உங்களுக்கு ஏற்படும். திருடர்களும், கொள்ளைக்காரர்களும், கொலைஞர்களும்கூடச் சிறை செல்லுகிறார்கள்; சிறையில் இருப்பது அவர்களுக்கு வீட்டிலிருப்பதுபோல சுகமாயிருக்கிறது. ஆனல், சிறைக்குச் செல்லுவதால் அவர்கள் தேசத்தொண்டு செய்தவர்களாக மாட்டார்கள். சிறைசெல்லுவ தென்பது மட்டும் தேசத்திற்கு உதவி செய்வதாகாது. தூய்மையான எண்ணத்தோடு மனப்பூர்வமாக உங்களையே நீங்கள் இந்தப் போராட்டத்திற்கு அர்ப்பணம் செய்யத் தயாரா யிருக்க வேண்டும்; இதையே நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன். பல இடங்களில் பலாத்கார முறைகள் பரவி வருகின்றன. என்னைச் சிறையில் வைப்பதனுலோ, வைத்த பிறகோ, பலாத்காரம் செயல்கள் அளவுகடந்து ஏற்படலாம். அப்போது, அந்தத்தீயில் உங்களையே நீங்கள் பலியிட வேண்டியிருக்கும். சத்தியம், அஹிம்சை என்ற உங்கள் வாக்குறுதிகளுக்கு உண்மையாக நீங்கள் நடப்பதென்ருல், நாட்டில் பலாத்காரமும், தீ வைப்பது போன்ற செயல்களும் நடக்கிற காலத்தில் நீங்கள் வீடுகளில் ஒளிந்துகொள்ளலாகாது. இச் செயல்களைச் செய்வதில் நீங்கள் கலந்துகொள்ளவும் கூடாது. ஆனல், இந்த நாசகரமான கொடிய செயல்களிடையிலும் விரைந்து புகுந்து அவற்றை ஒழிக்க முற்பட வேண்டும். இதுவே நிச்சயமாக உங்களிடம் பலரும் எதிர்பார்க்கக் கூடியது. பலாத்காரக் கொள்கையைப் போற்றுபவர்களுங்கூட உங்களிடம் இதைத் தவிர வேறொன்றையும் எதிர்பார்க்க மாட்டார்கள். அதர்மம், தர்மத்துக்குத் தலைவணங்குகிறது. எங்குமே அதர்மம் மலிந்திருந்தபோதிலும், தர்மமானது தனது உன்னத நிலையிலிருந்து பிறழக் கூடாது என்றே அந்த அதர்மமும் எதிர்பார்க்கிறது.

நீங்கள் சிறைக்குச் செல்லத் தயாரா யிருப்பீர்கள்

என்பது தெரிந்த விஷயமே. ஆனால், இந்த முறை நீங்கள் சிறை செல்லவேண்டி யிருக்குமென்று தோன்றவில்லை. சிறை செல்லுவதைவிட நான் இப்போது சொன்ன கடுமையான சோதனைகளுக்கு நீங்கள் உட்பட வேண்டி யிருக்கும். சட்ட மறுப்பு என்ன உருவத்திலே நடைபெறப் போகிறதென்று இன்னும் எனக்குத் தெளிவாக வில்லை; இருந்தாலும், நல்ல பயன் தரத்தக்க வழியைக் கண்டு பிடிக்கத் தீவிரமாக முயன்று வருகிறேன்.

அஹிம்சையையும் சத்தியத்தையும் கடைப்பிடித்து இலட்சியத்தை யடைந்துவிட வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆத்திரம். ஆனால், அஹிம்சையையும் சத்தியத்தையும் கைவிடாமல், இலட்சியத்தை யடைவது முடியாதென்றால், அதை அடைவதற்கு எவ்வளவு காலம் வேண்டுமானாலும் பொறுத்திருக்க நான் தயார்; இலட்சியம் மெதுவாகவே கிட்டட்டும். அஹிம்சையும் சத்தியமும் யாவற்றிலும் மிகுந்த சக்தி வாய்ந்தவை என்று நான் நம்புகிறேன். இவற்றின்மீது எனக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையி லிருந்தே மேற்சொன்ன ஆத்திரமும் பொறுமையும் எனக்கு உண்டாகின்றன. அஹிம்சையையும் சத்தியத்தையும் கடைப்பிடிக்கிறதென்னும் பாதை நீண்டதெனத் தோன்றியபோதிலும், அதுவே குறுக்குப் பாதை என்பது என் கருத்து.

நடைமுறைக்கேற்ற போக்கன்று, உண்மையான சித்தாந்தம்

"எதிரியைக் கொல்லுவதற்கான வலிமை, தற்காப்புக்கு அவசியமல்ல; அஞ்சாது உயிர் துறப்பதற்குரிய வலிமையே ஒருவனுக்கு வேண்டுவது. உயிர் துறப்பதற்கு முற்றிலும் தயாராயிருக்கும்போது, ஹிம்சையோ, கொடுமையோ, செய்ய வேண்டுமென்று ஒருவன் விரும்ப மாட்டான். உயிர் துறப்பதற்கு எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் துணிந்திருக்கிருனே அவ்வளவுக்கு அவ்வளவு உயிரை வாங்குவதில் அவனுக்கு ஆத்திரம் குறைவு தான் என்பது வெளிப்படையான உண்மை."

கூர்ஜர மகா வித்தியாலயத்தின் தலைவர் காகா சாஹெப் கலேல்கார் ஆமதாபாத் நகரில் ஒரு தேசியக் கல்வி மகாநாட்டைக் கூட்டினர். அந்த மகாநாட்டில் காந்திஜி பின்வருமாறு பேசினர்:

இந்த வித்தியாபீடம் தோன்றக் காரணமா யிருந்தது, ஒத்துழையாமை இயக்கம். இந்த வித்தியாபீடத்தின் நோக்கம் சுயராஜ்யம் பெறுவது; இதைப் பல வருடங்களுக்கு முன்னரே நான் சொல்லி யிருக்கிறேன். தேசியக் கல்விநிலையங்களில் பயின்றுவருகிற மாணவர்கள், அந்த நிலையங்களுடன் தொடர்புகொண் டிருப்போர் ஆகிய அனைவரும், சுயராஜ்யம் பெறும் பொருட்டு நமது நாட்டில் நிறைவேற்ற வேண்டியனவா யுள்ள வேலைகள் அனைத்தையும் தாங்களே செய்ய வேண்டும். அதன் பொருட்டு, நமது நாடு என்னென்ன ஒழுக்கமுறைகளில் பயில வேண்டுமோ அவை யனைத்தையும் அவர்கள் பயில வேண்டும். இப்படிச் செய்தாலும் பயின்ருலுந்தான், சமயம் நேரும்போது அவர்கள் மனப்பூர்வமாகத் தங்களையே தியாகம் செய்ய முன்வருதல் சாத்திய மாகும்.

நமது இயக்கமானது உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதற்கான இயக்க மாகும். அரசியலுக்கும் நல்லொழுக்கத்துக்கும் தொடர்பே வேண்டுவ தில்லை யென்று சிலர் கருதுகிருர்கள். பொதுவாக, நமது தலைவர்கள் நன்னடத்தையுடையவர்களா என்று நாம் சிறிதும் கவனிப்ப தில்லை. அரசியல் வாழ்வில் நன்னடத்தையும் வேண்டற்பாலது என்ற எண்ணம் அறவே இல்லாமல், ஐரோப்பிய

ஜனநாயகங்களும் அமெரிக்க ஜனநாயகங்களும் நடை பெற்று வருகின்றன. கெட்ட நடத்தையுடையவர்கள், சில சமயம் சிறந்த அறிஞர்களாகவும் இருக்கக் காண்கிறோம். அறிவுத் திறமையினால், எதிர்பார்க்கிற அளவுக்குமேல் சில காரியங்களை நன்றாகச் செய்துவிட முடிகிறது. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் கீழ் சபையாகிய காமன்ஸ் சபையிலுள்ள சில பிரமுகர்களின் நடத்தை வெளியே சொல்லக் கூடிய நிலைமையில் இல்லை. மேலைநாட்டுப் பாணியிலேயே நாமும் நமது அரசியல் இயக்கத்தை அடிக்கடி நடத்தி வந்திருக்கிறோம். காங்கிரஸ் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோருடைய நடத்தையைப்பற்றி நாம் கவனிப்ப தில்லை. ஆனால், 1920-ஆம் ஆண்டில், இந்த வழியைவிட்டு விலகி, முற்றிலும் புதிதான ஒரு வழியில் செல்ல ஆரம்பித்தோம். சத்தியத்தையும் அஹிம்சை யையும் கடைப்பிடித்துத்தான் காங்கிரஸ் தனது இலட்சி யத்தை அடைய வேண்டும். அரசியல் வாழ்விலுங்கூட உள்ளத்தூய்மை இன்றியமையாதது என்று நாம் சொன்னோம்.

இந்தக் கருத்தை இப்போது யாரும் வெளிப்படையாக ஆட்சேபிப்ப தில்லை; என்றாலும், அரசியலில் ஈடுபட்டவர் களுக்கு நல்லொழுக்கம் அவ்வளவு அவசியமானதல்ல என்று அந்தரங்கத்தில் கருதுகிறவர்கள் பலர் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். நமது முன்னேற்றம் இவ் வளவு மந்தமாக இருப்பதற்கும், சில அம்சங்களில் முன் னேற்றம் அறவே ஏற்படா திருப்பதற்கும் இதுவே காரண மாகும். 1920-ஆம் ஆண்டில் மேற்கொண்ட கொள்கையை நாம் உண்மையாகக் கடைப்பிடித்திருந்தால், இப்போது அடைந்திருக்கும் இந்த நிலையை அடைவதா யிருந்தாலுங் கூட, ஒருக்காலும் ஒன்பது வருடங்கள் பிடித்திரா. நம்மை நாகரிகப்படுத்துவதும் நமது நாகரிகத்தைத் தூயதாக்கி, ஒருநிலைப்படுத்துவதும் சுயராஜ்யம் அடைவதன் நோக்க மல்ல வென்றால், அப்படிப்பட்ட சுயராஜ்யத்தைப் பெறு வதனால் நமக்கு என்ன பயன்? பொது வாழ்க்கையில் நடைபெறும் காரியங்களி லாயினும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையில் நடைபெறும் காரியங்களி லாயினும் சரி, யாவற்றிலுமே, ஒழுக்கத்திற்குத்தான் நாம் முதல்

ஸ்தானம் கொடுக்கிறோம். இதுவே நமது நாகரிகத்தின் சாரமாகும். நம்மை நாகரிகம் பெறச் செய்வது இந்த வித்தியாபீடத்திற் குரிய வேலைகளில் ஒன்றாகும்; ஆகவே, தேசியக் கல்விநிலையங்களைச் சேர்ந்தவர்கள் சுயராஜ்யப் போராட்டத்திற்காகப் பெரிய தியாகம் செய்யவேண்டி யிருக்கும்.

நமது கொள்கை என்னென்ன விஷயங்களை உள்ள டக்கி யிருக்கிறது என்பதை நீங்கள் எல்லோரும் உணர்ந்துகொள்ள வேண்டும். சத்தியத்தையும் அஹிம்சை யையும் கடைப்பிடிப்பது, காங்கிரஸின் முடிவானசித்தாந்த மல்ல, நடைமுறைக்கேற்ற வெறும் போக்குத்தான் என்று நீங்கள் நினைத்தால், அப்புறம் எனக்கு இங்கே என்ன வேலை? இப்படி நினையாமல், சத்தியமும் அஹிம்சையும் உங்களுக்குரிய சொந்த சித்தாந்தமென்று நீங்கள் தீர்மானமாகக் கொண்டால், அவற்றை நான் விரிவாக எடுத்துச்சொல்லத் தேவை யில்லை. ஒருவர் இந்த வித்தியா பீடத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னாலே, அவர் சத்தியத்தையும் அஹிம்சையையும் உறுதியாகக் கடைப் பிடிப்பவர் என்று நம்புவதற்கு அது போதுமானதா யிருக்க வேண்டும். ஆதலால், இந்தத் தேசியக் கல்வி மகாநாடும், இதற்காக வந்திருப்பவர்களும், தாங்கள் செய்யும் காரியங்கள் யாவும் இந்தக் கொள்கைக்குப் பொருந்தி யிருக்கின்றனவா என்று தங்களையே கேட்டுக் கொள்ள வேண்டும்; இதுவே அவர்கள் முதன் முதலாகச் செய்யவேண்டிய காரியம். சத்தியத்தையும் அஹிம்சை யையும், நடைமுறைக்கேற்ற போக்கென்று கொண்டு, சுதந்திரப் போராட்டத்தில் முனைந்து வேலை செய்துவரும் பட்சத்தில், அந்தப் போக்கை மாற்ற வேண்டு மென்ற ஆசை ஒரு நாள் உங்களுக்கு ஏற்படலாம். உதாரணமாக, எனது தோழர்களான அலி சகோதரர்கள் சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடிப்பது அக் காலத்திற்கு மட்டுமே பொருத்தமான போக்கு என்று ஒப்புக் கொண்டார்கள்; இதை அவர்கள் வெளிப்படையாகவும் சொன்னார்கள். அவற்றை முடிவான சித்தாந்தமாகக் கொள்ள முடியாதென்று அவர்கள் எப்போதும் சொல்லி வந்தார்கள். அவர்களைப்போலக் கருதுபவர்கள் இன்னும்

பலர் இருக்கிறார்கள். இந்த நாட்டுக்காகச் செய்யும் தொண்டில் அவர்களுக்கும் இடமுண்டென்பதில் சந்தேகமில்லை. ஆனால், தேசியக் கல்விநிலையங்களைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களுமாகிய உங்களுக்கு, அந்த நோக்கம் போதாது. சத்தியத்தையும் அஹிம்சையையும் உங்களுடைய முடிவான சித்தாந்தமாகவே நீங்கள் கொள்ள வேண்டும்; அவை உங்களுடைய ரத்தத்தில் ஊறி உடம்போடு உடம்பாகிவிட வேண்டும். நீங்கள் எல்லோரும் தற்காலத்துக் கேற்ற போக்கென்று மட்டும் அஹிம்சையைப் பின்பற்றி வந்து, நான் மட்டுமே அதை முடிவான சித்தாந்தமாகக் கடைப்பிடித்து வருவதென்றால், நாம் அனைவரும் சேர்ந்து அதிகமாக முன்னேறிவிட முடியாது. ஆகவே, சுயராஜ்யத்தை யடையும் பொருட்டு எந்தச் சந்தர்ப்பத்திலும், பொய், ஹிம்சை என்ற இரண்டுக்கும் மனத்தில் இடங்கொடுக்க மாட்டோம் என்று நாம் திரும்பவும் உறுதி செய்துகொள்ளுவோமாக. அவ்விதம் உறுதி செய்து கொண்டால், எல்லாம் நன்மையாய் முடியும்.

சத்தியத்தையும் அஹிம்சையையும் கடைப்பிடிப்பதென்ற சித்தாந்தத்திலிருந்தே நமது நிர்மாணத் திட்டம் தோன்றியிருக்கிறது. இந்தத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நாம் இப்போது கூர்ந்து கவனிக்கலாம். முஸ்லிமை ஹிம்சிக்க வேண்டுமென்று ஹிந்துவும், ஹிந்துவை ஹிம்சிக்க வேண்டுமென்று முஸ்லிமும் விரும்புகிறவரையில், ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்படவே ஏற்படாது. ஹிந்து-முஸ்லிம் பிரசினை சம்பந்தமாக லாகூர் காங்கிரஸில் நிறைவேறிய தீர்மானமானது, மேற்சொன்ன நமது முடிவான சித்தாந்தத்திலிருந்தே எழுந்தது. தங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்று மட்டுமே சீக்கியர் விரும்பினார்கள். ஆனால், இந்தத் தீர்மானம் சீக்கியர் விரும்பியதற்கு மேலும் போயிருக்கிறது; சீக்கியர் மட்டுமேயன்றி, இந்தியாவிலுள்ள சமூகத்தினர் அனைவருக்குமே நியாயம் அளிக்கும் பொருட்டே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறதென்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

அது போகட்டும். தீண்டாமை விலக்கு என்ற பிரசினையைப் பாருங்கள். உடல் முதலிய ஸ்தூலமான பொருள்கள்

சம்பந்தப்பட்ட அளவிலே தீண்டாமையை ஒழிக்க வேண்டு மென்று சிலர் நினைக்கிறார்கள். பொதுக் கிணறுகளை உபயோகிப்பது, பொதுப் பாடசாலைகளில் படிப்பது, கோவில்களுக்குச் செல்வது முதலியவை சம்பந்தமாக, தீண்டத்தகாதவர்கள் என்போருக்குள்ள தடைகளை நீக்க வேண்டுமென்று வேறு சிலர் பேசுகிறார்கள். நீங்களோ தீண்டாமை விஷயத்தில் இன்னும் நுணுக்கமான காரியங்களை ஆராய வேண்டும். உங்களைப் போலவே அவர்களையும் பாவித்து, அவர்களிடம் நீங்கள் அன்பு காட்ட வேண்டும். இதனால், உங்களைக் கண்டவுடன் நீங்களும் அவர்களோடொட்டியவர்களென்று தீண்டாதவர்கள் எண்ணும் படியாக, நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். அப்போது தான், நாம் வகுத்திருக்கும் இந்த நிர்மாணத் திட்டத்தில் அவர்களுடைய ஒத்துழைப்பையும் பெற முடியும்.

மதுவிலக்கு, கதர்த் திட்டம் சம்பந்தமாகவும் இது உண்மையாகும். கதர்த் திட்டத்தைப்பற்றி நான் இங்கே பேசவும் வேண்டுமா? நூல்நூற்கும் வேலையானது ஸ்தூலமானது; இவ்வளவு ஆயிற்று என்று திட்டமாக அளவிட்டுச் சொல்லக் கூடியது. தினந்தோறும் நினைவுக் குறிப்பு எழுதிவைக்கும் பழக்கமுள்ள ஒருவர், தாம் நூற்றதன் பயனாக, வருவாய் இவ்வளவு பெருகி யிருக்கிறது என்பதை மிகவும் தெளிவாகக் கணக்கிட்டுச் சொல்ல முடியும். இந்த உணர்ச்சியோடு நாம் இந்த வேலையைச் செய்ய ஆரம்பித்திருந்தால், இதற்குள் வெகு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கலாம். சென்ற வருடம் நாம் அதிகமாகப் பாடுபட வில்லை; ஆயினும், அந்தச் சொற்ப வேலையிலிருந்து நாம் எவ்வளவு சாதிக்க முடிந்த தென்பதை அன்னியத் துணிப் பகிஷ்காரக் கமிட்டி நமக்கு நன்றாக எடுத்துக்காட்டி யிருக்கிறது. என்னைக் கேட்டால் இது மிகவுங் குறைவென்றே சொல்லுவேன். ஆனால், நாமெல்லோரும் உறுதியோடும் உண்மையான நம்பிக்கையோடும் இந்த வேலையில் ஈடுபட்டிருந்தால், எவ்வளவு அதிகமான பயன் விளைந்திருக்கும்? திறமைவாய்ந்த உண்மையான தொண்டர்களே இப்போது பெரிதும் தேவையாயிருக்கிறார்கள். ஆனால், உங்களிடையேகூட, பலருக்கு மனஉறுதி யில்லை; ஆகவே மனஉறுதியினால் வருகிற

செயல் திறமையும் இல்லை என்பது எனக்குத் தெரியும். செயலின்றி மந்தமா யிருக்கும் நிலைமைப் போக்கிக் கொள்ள வேண்டும்; நம்மிடமுள்ள நம்பிக்கையற்ற நிலையையும் நாம் உதறித்தள்ள வேண்டும். இவற்றைச் செய்துவிட்டால், செயல் திறமை தானுகவே உண்டாகும்.

செய்ய வேண்டுவது என்ன என்பதைப்பற்றி இது வரையில் உங்களுக்குச் சொன்னேன். இனி விலக்க வேண்டுவது என்ன என்பதைப்பற்றியும் கொஞ்சம் சொல்லுகிறேன். இலக்கியத்தில் பெறும் பயிற்சி, பண்டித முறையில் செய்யும் ஆராய்ச்சி, மொழி சம்பந்த மான ஆராய்ச்சி, ஆங்கிலமும் சம்ஸ்கிருதமும் பயிலுவது, அருங்கலைகளிலே பழகுவது போன்றவை யெல்லாம், நமது ஆக்கத் திட்டத்தில் பின்னணியிலேதான் நிற்கவேண்டியவை. நமது தேசியப் பாடசாலைகள் யாவும் போர்த் தொழிற்சாலைகளாக, அதாவது, ஆக்க வேலைக் குரிய இடங்களாக மாற வேண்டும். இன்றைய இந்தியா வில் கோடிக்கணக்கான குழந்தைகள் கல்வி கற்க வழி யில்லா திருக்கிருர்கள்; சாதாரணக் கல்வியே பெற முடியாதபோது, தேசியக் கல்வியைப் பெறுவது எவ்வாறு சாத்திய மாகும்? மேலே நான் குறிப்பிட்டுள்ள இலக் கியம், கலைப்பயிற்சி போன்ற பெரிய விஷயங்களை எவ் வாறு இவர்கள் அடைய முடியும்? நிலைமை இப்படி யிருக்கும்போது, சுயராஜ்யம் பெறுகிறவரையிலாவது அந்தப் பெரிய விஷயங்களை ஒதுக்கிவைத்தால் என்ன?

அங்கத்தினர்களாகவும் தொண்டர்களாகவும் சேரும் படி இந் நாட்டு மக்களை, காரியக் கமிட்டி கேட்டுக்கொண் டிருக்கிறது. இந்தப் பணியை நிறைவேற்ற, எதற்காக இன்னெரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டும்? நீங்கள் எல்லோரும் அங்கத்தினர்களாவும் தொண்டர்களாகவும் இருந்து, அந்த வேலையை மேற்கொள்ளலாமே? சென்ற மகா யுத்தத்தில், ஐரோப்பிய மாணவர்கள் என்ன செய் தார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். அவர்கள் செய்த தியாகங்களை நாமும் செய்யத் தயாராய் இருக்கிருேமா? சுதந்திரம் அடையாதவரையில், அமைதியாக மூச்சு விடுவதுகூட நம்மால் சாத்திய மன்று என்ற எண்ணம் நம்மிடம் உறுதியாகவும் அழுத்தமாகவும் இருக்குமானல்

நமது ஆக்கத் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டே நாம் உயிர்வாழ்வோம்; அதற்காக என்றே நடமாடுவோம்; அதை நிறைவேற்றுவதே நமது வாழ்க்கை என்று ஆகிவிடும்.

கடைசியாக, உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறேன் என்பதை ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாமல்லவா? நாம் பரிசுத்தமாக வாழவேண்டுமென்பதற்காகவே, மரண பயத்தைத் துறந்துவிடுவோம். ஆங்கிலேயர் இந் நாட்டை விட்டுப் போய்விட்டால் அதனால் இந்தியாவுக்குப் பெருத்த நஷ்டமேற்பட்டுவிடாது என்று நான் சொல்லியிருக்கிறேனல்லவா? இதைப்பற்றி ஒரு ஆங்கிலேயர் சமீபத்தில் சொன்னார்: ‘காந்தி இம்மாதிரி நினைக்கலாம்; ஆனால், ஆங்கிலேயர் போன அந்த நிமிஷமுதல், இந்தியாவில் பணக்காரர் ஒருவருடைய சொத்துக்கூடப் பத்திரமாயிராது; கன்னிப் பெண் ஒருத்திகூடக் கற்போடு இருக்க மாட்டாள் என்பதில் எனக்குக் கொஞ்சங்கூடச் சந்தேகமில்லை’ என்றார். இந்தியர்களைப்பற்றி இவர் எவ்வளவு இழிவான அபிப்பிராயத்தைக்கொண் டிருக்கிறார் என்பதைத்தான் இது காட்டுகிறது. அவருக்கு எப்படி வேறு விதமான அபிப்பிராயம் இருக்க முடியும்? இன்று நாம் பயங்கொள்ளிகளா யிருக்கிறோம்; நமது சொத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றிக்கொள்ளுவதற்குக் கூடக் கூலி ஆட்களை வைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. இந்த இழிந்த நிலையிலிருந்து நாம் மீளவேண்டுமானால், சாவை எண்ணி அஞ்சுவதை விட்டுவிட வேண்டும். இந்த வித்தியா பீடத்தில் படிக்கிற ஒவ்வொரு பெண்ணும் புத்துணர்ச்சி பெற வேண்டும்; ஒவ்வொரு பெண்ணும், தீய எண்ணத்தோடு ஒருவன் தன்னைத் தீண்டுவதை அருவருத்து அவனை எதிர்க்கவல்ல மனத்திட்பம் பெறவேண்டும். நீங்கள் அனைவரும் மரண பயத்தை ஒழிக்க வேண்டும். அப்படி ஒழித்தால், இந்தியச் சுதந்திரப் போரின் சரித்திரம் எழுதும் காலத்து, தேசியப் பாடசாலைகளில் பயின்ற மாணவ மாணவிகளின் பெயர்கள் அதிலே இடம் பெறும்; தீமையும் பலாத்காரமும் புரிந்து உயிர் துறந்தார்களென் றல்ல; பிறர் யாராயிருந்தபோதிலும் சரி, அவர்கள் செய்த கொடுமையையும் பலாத்காரச் செயல்களையும் எதிர்த்து நின்று போரிட்டு

உயிரைத் தியாகம் செய்தார்க ளென்றே அவர்களுடைய பெயர் அச் சரித்திரத்திலே பிரசித்தி யடையும். எதிரியைக் கொல்லுவதற்கான வலிமை, தற்காப்புக்கு அவசிய மல்ல; அஞ்சாது உயிர் துறப்பதற்குரிய வலிமையே ஒருவனுக்கு வேண்டுவது. உயிர் துறப்பதற்கு முற்றிலும் தயாரா யிருக்கும்போது, ஹிம்சையோ, கொடுமையோ செய்ய வேண்டு மென்று ஒருவன் விரும்ப மாட்டான். உயிர் துறப்பதற்கு எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் துணிந் திருக்கிறானே அவ்வளவுக்கு அவ்வளவு உயிரை வாங்கு வதில் அவனுக்கு ஆத்திரம் குறைவுதான் என்பது வெளிப்படையான உண்மை. தாங்கள் உயிர் துறக்க நேர்ந்தபோதுங்கூட, மனவுறுதி குன்றாமல், பிறர்மீது கொண்ட கருணை முகத்திலே தவழ, உயிர்விட்டவர்களைக் கண்டு, கொடிய பகைவருடைய உள்ளமும் இரங்கி யிருக் கிறது. இத்தகைய வரலாறுகள் பலவற்றைச் சரித் திரத்திலே காணலாம்.

ஒப்பற்ற சேவை

> "இந்த வித்தியாபீடமானது பெருமை தரத்தக்க ஒப்பற்ற சேவை செய்திருக்கிறது. இத்தனைச் சிறப்பு வாய்ந்த கூர்ஜர வித்தியா பீடத்தின் மாணவரா யிருக்கும் பாக்கியம் பெற்றோமே என்று இதன் மாணவர்கள் பெருமை கொள்ளலாம். வேறு வழி இல்லா மையினால்தான் இந்த வித்தியாபீடத்தில் வந்து சேர்ந்தோ மென்று எண்ணி அவர்கள் வருந்த வேண்டாம். 'நாம் ஒருசிலர் தானே இருக்கிறோம்' என்று எண்ணி அவர்கள் சோர்வடைய வேண்டாம். நீங்கள் ஒருசிலராயினும் உங்கள் வலிமை கடல் போலப் பெரிது. அரசாங்கக் கல்விநிலையங்களில் படிக்கும் மாணவர்களோ, எண்ணிக்கையில் கடலளவு பெருந்தொகையின ராயினும், செயலளவிலே அவர்கள் கானல்நீரை யொப்பர்."

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு, பாராட்டத்தகுந்த முறையில் தொண்டு செய்த வித்தியாபீட மாணவர்களைப் பாராட்டி, காந்திஜி பின் வருமாறு பேசினார் :

இந்த மகத்தான போராட்டத்தில் கலந்துகொண்டு நீங்கள் செய்த அரிய செயல்களைக்கேட்க நான் மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறேன். பீகார் வித்தியாபீடமும், காசி வித்தியாபீடமும், உங்கள் வித்தியாபீடத்தைப் போலவே, தங்கள் பெயர் விளங்கும்படி செய்துவிட்டன. சுதந்திரப் போராட்டத்தின் சரித்திரத்தை எழுதும்போது, அதில் நமது வித்தியாபீடங்கள் செய்த தொண்டைப்பற்றி விரி வாக எழுதியிருக்கும். உங்களுடைய ஒப்பற்ற சேவை யைக் கண்டு உலகமே பெருமை யடையும். நான் சிறை யில் இருந்தபோது, வித்தியாபீட மாணவர்களையும் ஆசிரியர்களையும்பற்றி ஏதோ சில செய்திகளைப் படித் தேன்; அப்போது, அரசாங்கக் கல்விநிலையங்களை சீர் தூக்கிப்பார்க்க வேண்டு மென்ற எண்ணம் இயல்பாகவே தோன்றியது. அவ்விதம் பார்த்தபோது, அரசாங்கக் கல்விநிலையங்களைப் பகிஷ்காரம் செய்ய வேண்டு மென்று நாம் போட்ட திட்டம் மிகவும் சரியான தென்று கண்டேன். இப்படி நான் சொன்னபோதிலுங்கூட, அரசாங்கப் பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் இன் னும் மாணவர்கள் அனேகர் படித்துக்கொண் டிருக் கிறார்கள் என்பதை நான் மறந்துவிட வில்லை. இதை விட வருத்தமான சங்கதியும் இருக்கிறது : அதாவது,

மாணவர்கள் இந்தக் கலாசாலைகளுக்குத் திரும்பவும் போக மிகவும் ஆசைப்படுகிறார்கள். திரும்பவும் சேர்ந்து கொள்ளுவதற்காக, மிகவும் கேவலமான முறையில் மன்னிப்புக் கேட்கவும் தயாரா யிருக்கிறார்கள்; கேட்ட அபராதத்தைக் கொடுக்கவும் பின்வாங்க வில்லை. இந்தச் சுதந்திரப் போராட்டத்தில் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ ஈடுபட்டிருந்த மாணவர்களையும் சிறை சென்ற மாணவர்களையும் திரும்பவும் சேர்த்துக்கொள்ள முடியாதென்று அரசாங்கக் கல்வி அதிகாரிகளும் கல்வி இலாகாத் தலைவர்களும் சுற்றறிக்கைகள் விட்டிருப்பது எனக்குத் தெரிய வந்திருக்கிறது. அந்தத் தலைவர்களின் சம்மதத்தை முன்னதாகவே பெற்றுக்கொண்டால்தான் அப்படிப்பட்ட மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலாமாம். இந்தக் கல்வி இலாகா அதிகாரிகளைப்பற்றி என்ன சொல்லுவதென்றே எனக்கு விளங்க வில்லை. ஹிந்து சர்வகலாசாலை சம்பந்தமாக, அரசாங்கத்தார் என்ன எண்ணிக்கொண் டிருக்கிறார்க ளென்பதுபற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா என்பது சந்தேகமே. பண்டித மதன் மோகன மாளவியாஜி அஞ்சாமல் எதையும் தியாகம் செய்யச் சித்தமா யிருக்கிறார்; அதனாலேயே அந்தச் சர்வகலாசாலை தனக்குக் கிடைத்து வந்த அரசாங்க உதவிப் பணத்தை இச் சமயம் இழக்க நேரவில்லை. ஆனா[illegible] ஹிந்து சர்வகலாசாலைக்கு உதவிப் பணம் அளிப்ப[illegible] அரசாங்கத்தார் நிறுத்திவிட்டாலுங்கூட, அதற்க[illegible] மாளவியாஜி ஒரு சொட்டுக் கண்ணீர்கூட வடித்திரு[illegible] மாட்டார். நாட்டுக்குச் சேவை செய்வதற்காக ஒரு மாண[illegible] வரோ, அல்லது ஒரு ஆசிரியரோ தண்டனை யடைவதை[illegible] காட்டிலும், சர்வகலாசாலையானது அரசாங்க உதவி[illegible] பணத்தை இழந்துவிடுவதே சாலச் சிறந்ததென்று மா[illegible] வியாஜி உறுதியாகத் தீர்மானித்திருந்தார்.

இந்த வித்தியாபீடமானது, பெருமை தரத்தக்க ஒ[illegible] பற்ற சேவை செய்திருக்கிறது. இத்தனைச் சிறப்[illegible] வாய்ந்த கூர்ஜர வித்தியாபீடத்தின் மாணவரா யிருக்[illegible] பாக்கியம் பெற்றோமே என்று இதன் மாணவர்க[illegible] பெருமை கொள்ளலாம். வேறு வழி இல்லாமையின[illegible] தான் இந்த் வித்தியாபீடத்தில் வந்து சேர்ந்தோமென்[illegible]

எண்ணி அவர்கள் வருந்த வேண்டாம். 'நாம் ஒருசிலர் தானே இருக்கிறோம்' என்று எண்ணி அவர்கள் சோர்வடைய வேண்டாம். நீங்கள் ஒருசிலராயினும், உங்கள் வலிமை கடல்போலப் பெரிது. அரசாங்கக் கல்விநிலையங்களில் படிக்கும் மாணவர்களோ எண்ணிக்கையில் கடலளவு பெருந்தொகையின ராயினும் செயலளவிலே அவர்கள் கானல்நீரை யொப்பர். ஏனென்றால், அந்த மாணவர்கள் பெறும் கல்வியும் கற்கும் வாழ்க்கை முறையும், சுயராஜ்யத்தைப் பெறுவதற்குத் தேவையான ஜீவசக்தியை அளிக்க முடியாது. அதற்கு மாறாக, இந்த வித்தியா பீடத்தைப்போன்ற கல்விநிலையங்கள் அந்த ஜீவசக்தியை மிகுதியாக ஊட்ட முடியும். சென்ற வருடம் இந்த வித்தியாபீடம் செய்த வேலையிலிருந்தே இதைத் தெரிந்து கொள்ளலாம். இந்த வித்தியாபீடம் நடைபெறுவதற்குப் பொருளுதவி செய்தவர்களெல்லாம் தாங்கள் அளித்த பணம் உயர்ந்த நோக்கத்திற்காக உபயோகப்பட்டதென்றும், வட்டிக்கு வட்டியும் சேர்த்துத் தங்களிடமே திரும்பி வந்துவிட்டதென்றும் உணரட்டும். வித்தியாபீட அதிகாரி வெளியிட்டிருக்கும் அறிக்கையைப் படித்துப் பார்த்து இந்த வித்தியாபீடத்தைவிடப் பெருமை தரத்தக்க செயலை, இந்தியாவிலுள்ள வேறெந்த நிலையமாவது செய்திருக்கிறதா வென்று பார்க்கட்டும். மேலும் பொருளுதவி வேண்டுமென்று காகா சாஹேப் வேண்டுகிறார். தேவையான தொகை தானாகவே வந்துவிடுமென்று நம்புகிறேன்.

வித்தியாபீடத்தின் கணக்குகளைக் கூர்ந்து கவனியுங்கள்; செட்டாகவே செலவு செய்யப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். ஒரு லோபி பணத்தை எப்படிக் காத்து வருவானோ, அப்படியே பொதுப் பணத்தைப் பாதுகாப்பதிலும் செலவிடுவதிலும் எனக்கு ஆர்வம் அதிகம்; இவ்வளவு ஆர்வம் வேறு யாருக்கும் இருக்காது; இதற்குக் காரணம் என்ன வென்பது வெளிப்படை. இந்திய மக்களை விட ஏழையான மக்கள் உலகில் வேறெங்குமே யில்லை. இவ்வளவு எளிய மக்களிடமிருந்து வருகிற பணமே இந்தப் பொதுப் பணம். இந்தக் காரணத்தை ஒட்டியே, அடுத்த வருட வரவுசெலவுத் திட்டத்தில் போட்டிருக்கும் செலவை

கூர்ஜரம் சம்பந்தப்பட்டவரையில் ரொம்பவும் சுருக்கிவிட வேண்டு மென்று சர்தாரிடம் சொல்லி யிருக்கிறேன். இந்தத் தற்காலிக ஒப்பந்தம்* நிரந்தரமான சமாதானத் திற்கு வழிகோலும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறேன். அந்த நிரந்தரமான சமாதானத்தைப் பெறுவதற்கு என்னாலான முயற்சியை எல்லாம் செய்வேன். ஆனால், இயற்கைக்குமுன் மனிதன் அனேகமாய் வலியற்றவன். எப்படி இருந்தபோதிலும், இயற்கையுடன் போட்டி போட என்னாலே முடியவில்லை; தற்சமயம் இயற்கைகூட நமக்கு எதிரியா யிருப்பதாகத் தோன்றுகிறது. அமைதி நிலவ வேண்டாம் என்பது கடவுள் சித்தமானால், முந்திய போராட்டத்தைவிட அடுத்த போராட்டம் அதிக உக்கிரமா யிருக்கும்; நம்மெல்லோரையும் அதன் சுழற்சியிலே அமுக்கிவிடும். மேலும், அந்தப் போராட்டத்தை எவ்வித உதவியுமின்றியே நடத்தவேண்டி யிருக்கும். கூர்ஜரம் எப்போதுமே பண உதவி செய்யத் தயாரா யிருக்கு மென்பது உண்மை; ஆனால், கூர்ஜரத்தின் செல்வத்தால் வரும் உதவிக்கும் ஓர் எல்லை யுண்டு. ஆகவே, நாம் ஒரு பைசா செலவு செய்வதானாலும், நன்றாக எண்ணிப்பார்த்தே செலவு செய்ய வேண்டும். எல்லா வழிகளிலும் நாம் செலவைச் சுருக்க வேண்டும். நாம் உபயோகிக்கிற மோட்டார் கார்க ளெல்லாம் நமக்கு எங்கிருந்து கிடைக்கின்றன? இவ்வ உண்மையில் நமக்குத் தேவைதானா? இவ்விதம் நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு. மோட்டாரில் நான் அடிக்கடி பிரயாணம் செய்வது என்னவோ உண்மை தான்; இது எனக்குத் தெரியும்; ஆனால், இந்தக் கெட்ட பழக்கத்தைத் தயவுசெய்து ஒருவரும் பின்பற்ற வேண்டாம். இயன்றபோ தெல்லாம் இந்த வித்தியாபீட மாணவர்கள் கிராமங்களுக்கு நடந்தே செல்லுவ தென்ற பழக்கத்தை வைத்துக்கொள்ளுவார்களாக. சுயராஜ்யம் வரும் போது, மோட்டார் வசதிகளைப் பெற நாம் தகுதியுடையவர் களா யிருப்போம். சுயராஜ்யத்தின் சாரம் இதுதான் என்று சொல்லும் ஷரத்துகள் முன்னமே பதினொன்று இருந்தன. இப்போதோ, இருபது ஷரத்துக்கள் ஆகிவிட்டன. இதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

---

* காந்தி — இர்வின் ஒப்பந்தம்

சுயராஜ்யம் பெற்ற இந்தியாவிலே, வைஸ்ராய்க்கு மாதச் சம்பளம் உயர்ந்தது 500 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறது; நான் நிர்ணயிக்க வில்லை; பண்டித ஜவாஹர்லால் தான் இதை நிர்ணயித்தார். சம்பளப் பிரசினையை அவர் ஆராய்ந்து, இறுதியில் இந்தத் தொகையே தக்கதென்ற முடிவுக்கு வந்தார். வைஸ்ராயின் சம்பளமே இதுவானால், சாதாரண வேலைக்காரன் சம்பளம் எவ்வளவா யிருக்கும்? இந்த இலட்சியத்தை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். கையிலுள்ள துணிக்குத் தகுந்தபடிதானே சட்டை தைக்க முடியும்? இன்றுள்ள அரசாங்கம் நிர்ப்பந்தப்படுத்தி வரி வசூலிக்கிறது. துப்பாக்கியைக் கண்டு பயந்தே மக்கள் வரி செலுத்துகிறார்கள். சுயராஜ்ய இந்தியாவிலே, நிர்ப்பந்தப்படுத்தி வரி வசூலிக்க இயலாது; தங்கள் நாட்டினர்மீது ஆயுதப் பிரயோகம் செய்ய மாட்டோம் என்று சொல்லக் கூடிய கார்வாரிச் சிப்பாய்கள் இனிமேல் ஏராளமாக இருப்பார்கள். ஆகையால், இந் நாட்டின் ஏழை மக்களுக்குப் பொருத்தமான முறையில் நாம் நமது விவகாரங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும். தற்காலிக ஒப்பந்தம் வந்துவிட்டது, இனிமேல் கவலையற்று உறங்கலாம் என்று நினைக்க வேண்டாம். இப்போதுதான் நாம் முன்னிலும் விழிப்பாகவும், கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டிய காலம். பொதுமக்களிடமிருந்து வசூலிக்கிற ஒவ்வொரு பைசாவுக்கும் சரியான கணக்குக் காட்ட நாம் தயாராய் இருக்க வேண்டும்.

மாணவர்களும் ஒத்துழையாமையும்

"ஒத்துழையாமை என்பது, இந்திய மக்களின் போக்கிலும் நாகரிகத்திலும் சிறந்தவை யனைத்துடனும் ஒத்துழைப்பதாகும். அப்படி ஒத்துழைப்பதற்கான மனோபாவத்தைப் பெர்லின் நகரில் இருந்துகொண்டு நாம் வளர்க்க முடியாது. நமது சோதனை முறைகளை யெல்லாம் இந்தியாவிலேதான் கையாண்டு பார்க்க வேண்டும்."

தேசியக் கலாசாலையில் படிக்கும் மாணவ ரொருவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதனுடைய சாரத்தைக் கீழே காணலாம்:

"இந்தியா வெங்கும் அரசாங்க மேல்விசாரணையிலுள்ள கல்விநிலையங்களில் படித்த மாணவர்களில், பலர் 1920-ம் ஆண்டில் படிப்பை நிறுத்தி விட்டார்க ளென்பதைத் தாங்கள் அறிவீர்கள். அப்போது அனேக தேசியக் கல்விநிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் சில ஏற்கனவே மறைந்தும் போயின. நான் படிக்கிற தேசியக் கல்விநிலையம் மிகச் சாமானியமானது. அன்னியநாட்டுக் கல்விநிலையத்தை முழுதும் பின்பற்றியதாக இல்லாமல், தேசிய மேல்விசாரணையின்கீழ் நடைபெறுகிறது; ஆனால், அவற்றிலுள்ள ஒழுங்குமுறைகூட இதில் காண முடியவில்லை. எங்கள் ஆசிரியர்களில் பலருக்கு, கதருக்கும் அன்னியநாட்டுத் துணி, அல்லது, மில் துணிக்கு முள்ள வித்தியாசம் தெரியாது. ஆங்கிலேயர்போல அவர்கள் ஆடம்பரமாக ஆடை அணிகிறார்கள்; ஆனால், அவர்கள் உடுப்பது அன்னியநாட்டுத் துணியா யிருந்தாலும், எங்களுக்குச் சுதேசியைப்பற்றி உபதேசம் செய்ய அவர்கள் தயங்குவதில்லை. ஒரு குடிகாரன் குடியை விட்டுவிடும்படி மற்றக் குடிகாரர்களுக்கு உபதேசம் செய்தால் எப்படியோ, அப்படித்தான் எங்கள் ஆசிரியர்கள் செய்யும் உபதேசமும். தியாக உணர்ச்சி வேண்டு மென்றும் தேசியக் கல்விநிலையங்களில் சேர்ந்து படிப்பது அவசிய மென்றும் அவர்கள் பேசுவதிலொன்றும் குறைவில்லை; ஆனால், அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் உறவினர் பிள்ளைகளையும் அரசாங்க மேல்விசாரணையி லுள்ள பாடசாலைகளுக்கும் கல்லூரிகளுக்கும் அனுப்பி வைக்கிறார்கள். உண்மையைச் சொன்னால், எங்கள் ஆசிரியர்களுக்கும் எங்களுக்குமிடையே அன்பு என்ற தொடர்பு அறவே கிடையாது. இந்த நிலையில், அனேக மாணவர்கள் அரசாங்கக் கல்விநிலையங்களுக்கே திரும்பச் சென்றார்க ளென்பது உங்களுக்கு வியப்பைத் தர முடியாது. ஆயினும், எங்களில் சிலர் இன்னும் வெளியேதான் இருக்கிறோம். ஆனால், எவ்வளவு நாட்கள் எங்களால் இப்படி இருக்க முடியும்? ஜெர்மனிக்குச் சென்று படிக்கலாம் என்று எனக்கு ஆசையா யிருக்கிறது; ஆனால், எனது வறிய நிலை அதற்கு இடந்தராது. பெர்லின் சர்வகலாசாலைக்கோ, வேறு ஏதாவது ஒரு ஐரோப்பிய சர்வகலாசாலைக்கோ தாங்கள் என்னை அனுப்பிப் படிக்கவைக்க முடியுமா?"

இதை எழுதியவர் தமது முழுப் பெயரையும், தாம் படிக்கிற கலாசாலையின் பெயரையும், முடிந்தவரையில் மற்ற விவரங்களையும் தந்திருக்கிறார். அந்தக் கலாசாலையின் பெயரையும் இதர விவரங்களையும், வேண்டுமென்றேதான் நான் விட்டுவிட்டேன். ஏனெனில், அதைப்பற்றி நான் சரியாகத் தெரிந்துகொள்ள வில்லை; அந்தக் கலாசாலை எப்படி நடைபெறுகிற தென்பதைச் சரியாக அறிந்துகொள்ளாமல், அதன்மீது குறைகூறுபவர்களோடு நானும் சேர்ந்து எப்படிக் குறைகூற முடியும்? பொதுவாக இப்படிப் பழி ஏற்பட்டிருக்கிற தென்று பிரசுரிப்பதன்மூலம், போதுமான அளவு நமது நோக்கம் நிறைவேறிவிடுகிறது. இந்தப் பழிக்கு இலக்காகக் கூடிய ஸ்தாபனங்கள் தங்கள் போக்குச் சரிதானா என்று ஆராய்ந்து, பழி ஏற்படுவதற்கு அடிப்படையான காரணங்களைக் களைந்தெறிய இதுவே போதுமானது. தேசிய ஸ்தாபனங்கள் எப்படி யிருக்க வேண்டுமோ அப்படி அனேக ஸ்தாபனங்கள் இல்லை யென்பதில் சந்தேகமில்லை; தேசியக் கல்வி சம்பந்தப்பட்டவரையில் அனுசரிக்கவேண்டிய திட்டத்தின் அடிப்படையான கொள்கைகளைக்கூட அந்த ஸ்தாபனங்களிலுள்ள ஆசிரியர்கள் அனுசரிக்க வில்லை. அஹிம்சை, சத்தியம், ஒத்துழையாமை முதலியவற்றில் ஆசிரியர்களுக்கே நம்பிக்கை யில்லை யென்றால், இவற்றின் தத்துவத்தை மாணவர்களுக்கு அவர்கள் எப்படி உணர்த்த முடியும்? தங்கள் குழந்தைகளை அரசாங்கப் பாடசாலைகளுக்கு அனுப்பிவிட்டு, தேசிய ஸ்தாபனங்களில் படிக்கும்படி மாணவர்களுக்கு உற்சாக மூட்டலா மென்று அவர்கள் எதிர்பார்ப்பதும் முடியாத காரியம். தாங்களே நூற்காமலும் கதர்க் கட்டாமலும் இருக்கிற ஆசிரியர்கள், மாணவர்களுக்குக் கதரிலும் ராட்டிலும் அன்பு ஏற்படச் செய்துவிடலா மென்று எதிர்பார்க்கலாமா? எனக்குக் கடித மெழுதிய மாணவர் தாம் படிக்கிற ஸ்தாபனத்தைப்பற்றிக் கூறிய குறைகள், எல்லாத் தேசிய ஸ்தாபனங்களுக்கும் பொருந்து மென்று சொல்ல முடியாது. ஆனால், இந்தக் கடிதம் சம்பந்தமாக ஒரு விஷயத்தைப்பற்றி நான்

அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். அதாவது, தாம் செய்த தியாகத்திற்காக ஒருவர் வருந்த வேண்டுவ தில்லை. தியாகம் என்பது துன்ப உணர்ச்சியைப் பொருட்படுத் தாத ஒரு நிலை. தியாகம் செய்வதனால் வருத்த மேற்படு மானால், அந்தத் தியாகம் தனது புனிதத்தன்மையை இழந்து, நெருக்கடியான காலத்தில் சிதைந்துவிடுகிறது. ஒரு விஷயம் தீமை பயக்கக் கூடிய தென்று கருதினால், அதை விட்டுவிடுகிறோம். அவ்விதம் விட்டுவிடுகிறதில் ஓர் ஆனந்தம் பிறக்க வேண்டும். கைவிட்ட அந்த விஷயத் திற்குப் பதிலாக, புதிதாய் அமைத்துக்கொண்ட விஷயம் பயனுடையதா, அல்லவா என்பது முற்றிலும் வேறு பிரசினை யாகும். புதிதாக அமைத்துக்கொண்ட விஷயம் பயன் தரத்தக்கதா யிருந்தால் நல்லது; பயன் தரத்தக் கதா யில்லாவிடினும்கூட, அதனால் நன்மையே யொழியத் தீமை யில்லை. புதிய விஷயம் நல்ல பயன் விளைவிக்காத போது, அதைவிடப் பயன் தரத்தக்க ஒரு விஷயத்தை அடைய அது தூண்ட வேண்டும்; வேண்டா மென்று எதை வெறுத்து ஒதுக்கினோமோ, அதற்கு ஒருக்காலும் திரும்பிப் போகும்படி தூண்டக் கூடாது; ஏனென்றால், தீமை பயக்கக் கூடிய தென்று அறிந்து, அனுபவத்திலும் கண்ட பின்னர்தானே அதை நாம் வெறுத்து ஒதுக்கி னோம்? பெர்லினுக்கோ, அல்லது வேறொரு ஐரோப்பிய சர்வகலாசாலைக்கோ போக வேண்டு மென்று ஆசைப் படுவது உண்மையான ஒத்துழையாமை உணர்ச்சியைக் காட்ட வில்லை. இங்கிலாந்தில் உற்பத்திசெய்த துணியை வாங்கக் கூடாது என்று கருதி, ஒரு இந்தியர் ஜப்பான் துணியை வாங்கினால் எப்படி இருக்கும்? அதைப் போலத்தான் இருக்கிறது இதுவும். இங்கிலிஷ் துணி என்பதற்காகவா அதைக் கட்டக் கூடா தென்று சொல்லு கிறோம்? இல்லை. ஏழை மக்கள் பரம்பரையாகச் செய்து வந்த தொழிலை அவர்களிடமிருந்து அது பிடுங்கிவிடுகிறது; இதனால் அவர்கள் இன்னும் ஏழைகளாகிவிடுகிறார்கள். பிரிட்டிஷ் துணிக்குப் பதிலாக ஜப்பான் துணியைக் கட்டினாலும், அதுவும் இதே தீமையைத்தான் செய்யும். அதைப்போல, அரசாங்க ஸ்தாபனங்களும் தீமை பயக்கக் கூடியனவாய் இருப்பதால் அவற்றில் படிப்பதை நிறுத்

திக்கொள்ளுகிறோம். ஆகையால், அதே கல்விமுறையை வேறு பெயராலே அனுசரித்து வந்து, நம்மையும் ஒத்துழையாமைவாதிகள் என்று எண்ணிக்கொள்ளுவது சரியில்லை யல்லவா? ஒத்துழையாமை என்பது, இந்திய மக்களின் போக்கிலும் நாகரிகத்திலும் சிறந்தவை யனைத்துடனும் ஒத்துழைப்ப தாகும். அப்படி ஒத்துழைப்பதற்கான மனோபாவத்தை பெர்லின் நகரில் இருந்துகொண்டு நாம் வளர்க்க முடியாது. நமது சோதனை முறைகளை யெல்லாம் இந்தியாவிலேதான் கையாண்டு பார்க்க வேண்டும். எல்லா முறைகளையும் ஆராய்ந் தறிந்த பின்னர், பூரணமான, நல்ல, பயன் தரத்தக்க புதிய கல்விமுறை ஒன்றை நாம் கண்டுபிடிக்க முடியும்; அவ்விதம் கண்டுபிடிக்கு முன், முதலிலே நாம் செய்யவேண்டியது, அரசாங்க ஸ்தாபனங்களில் படிப்பதை விட்டுவிடுவதுதான். இது வெளிப்படையாக எல்லோருக்கும் தெரியக் கூடிய விஷயம். ஆகையால், இப்படிப் படிப்பைவிட்ட மாணவர்கள் தங்கள் செயலை யுணர்ந்து செய்திருந்தால், நல்ல காரியம் செய்தார்க ளென்றே சொல்ல வேண்டும். காலம் செல்லச் செல்ல இந்த மாணவர்களின் தியாகமே நாட்டிற்கு மென்மேலும் நன்மை பயக்கக் கூடியதா யிருக்கும். ஆனால், தாங்கள் செய்த செயலுக்காக வருந்துபவர்களும் தங்களுடைய நிலைமையில் திருப்தி கொள்ளாதவர்களும் அரசாங்க ஸ்தாபனங்களுக்குச் சென்று மீண்டும் படிப்பதற்குக் கொஞ்சம்கூடத் தயங்க வேண்டிய தில்லை. முடிவாகப் பார்த்தால் மாறுபட்ட இலட்சியங்களின் விளைவு தானே இந்தப் போராட்டம்? ஒத்துழையாமை என்ற இலட்சியமானது நன்மை யளிப்பதா யிருப்பதோடு, இந்தியர்கள் மனதுக்கு ஏற்றதாயு மிருந்தால், சாதாரணமாய் ஏற்படக் கூடிய எல்லா இடையூறுகளையும் கடந்து சென்று, இறுதியில் அது வெற்றி பெறு மென்பது திண்ணம்.

தியாகம்

"இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள், சாதாரண வாழ்க்கைக்கு வேண்டிய வருவாய் கிடைக்காமல் துன்புறுகிறார்கள்; கோடிக்கணக்கான பேர் சாப்பாட்டுக்கே இல்லாது சாகிறார்கள்; இந்த நிலைமையிலே, நமது உறவினர் கல்வி கற்க பெருஞ் செலவிலே ஏற்பாடு செய்வது விபரீதமான செயலாகும்."

பல இளைஞர்களிட மிருந்து எனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன; அவர்கள் எல்லோரும் பொதுச் சேவையில் ஈடுபட்டவர்கள். அவர்களுக்குக் குடும்ப பாரம் மிக அதிகமா யிருக்கிறது; பொதுச் சேவையிலிருந்து தங்களுக்குக் கிடைக்கிற குறைந்த சம்பளத்தை வைத்துக்கொண்டு குடும்பத்தை நடத்த முடியவில்லை யென்று அவர்கள் தங்களுக்குள்ள குறையைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். அவர்களில் ஒருவர், பொதுச் சேவையை விட்டுவிட்டு, கடன் வாங்கியோ, நன்கொடையாகப் பணம் பெற்றுக் கொண்டோ ஐரோப்பா சென்று, தமது சம்பாத்தியத்தைப் பெருக்க வேண்டு மென்று சொல்லுகிறார். இன்னொருவர், நல்ல வருமானம் கிடைக்கக் கூடிய வேலையை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்; மற்றொருவர் நல்ல லாபம் கிடைக்கக் கூடிய தொழிலை ஆரம்பிக்க மூலதனம் வேண்டு மென்கிறார். இந்த இளைஞர்கள் எல்லோரும் தியாக புத்தியுள்ள யோக்கியமான தொண்டர்கள்தான். ஆனால், இதற்குள் பிற்போக்கான நிலை இவர்களிடையே ஏற்பட்டுவிட்டது. குடும்பத் தொல்லைகள் அதிகரித்துவிட்டன. கதரோ, தேசியக் கல்வியோ இவர்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை. அதிகச் சம்பளம் கேட்டு, அது காரணமாகப் பொதுச் சேவைக்கே ஒரு பாரமா யிருக்க, அவர்கள் விரும்பவில்லை. தொண்டர்களிடையே காணப்படும் இந்த மனப்போக்கு எங்கே கொண்டுபோய்விடும்? பொதுச் சேவையில் ஈடுபட்டுள்ள எல்லா இளைஞர்களும் இந்த மனப்பாங்கிலேயே இருக்கிறார்கள் என்றால், ஒன்று, பொதுச் சேவையே நின்றுபோகும். ஏனெனில், அவர்களைப் போன்ற இளைஞர்களும் பெண்களும் செய்கிற தொண்டை நம்பித்தானே பொதுச் சேவை நடைபெறுகிறது? அல்

லது ஏதோ இலட்சியம் இல்லாத கூட்டம் பெருகிக் காரியம் கெட்டுவிட்டது என்ற கணக்குக்குத்தான் வரும்.

நம்மைச் சுற்றியுள்ள நிலைமைக்கு முற்றிலும் பொருத்த மில்லாத முறையில் தேவைகளைப் பெருக்கிக் கொண்டுபோகிற பழக்கம் நம்மிடையே இப்போது மிக வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறது. இதைக் கண்டு தான் நாம் ஒத்துழையாமைத் திட்டத்தை மேற்கொண்டோம். இது தனிமனிதர்களுடன் ஒத்துழையாம விருப்ப தன்று; ஒரு அரசியல் முறையானது நம்மைப் பிணித் திழுத்து, பாம்பு சுற்றுவதுபோலச் சுற்றிவளைத்து, இறுக்கி, நம்மைச் சர்வநாசம் செய்துவருகிறது; இந்த அரசியல்முறை தோன்றக் காரணமா யிருந்த மனப்பாங் குடன் ஒத்துழையாம விருப்பதற்காகவே, ஒத்துழையா மைத் திட்டத்தை நாம் உருவாக்கினோம்; அந்த அரசியல் முறை காரணமாக, அதன் அடிமைகளாய் இருந்துவரும் நமக்கு வாழ்க்கைக்குரிய செலவு அதிகமாக உயர்ந்துவிட் டது. நமது நாட்டின் நிலைமையைப் பார்க்கும்போது, இப்படி வாழ்க்கைச் செலவு உயர்ந்திருப்பது சற்றும் பொருந்தவே பொருந்தாது. மேலும், இந்தியா இதர நாட்டு மக்களைச் சுரண்டிப் பிழைக்கிற நாடன்று. ஆகவே, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள் விருத்தியடைவ தென்றால், இன்னும் கீழ்த்தரத்திலுள்ள மக்களைச் சுரண் டினால்தானே விருத்தி ஏற்பட முடியும்? அதிலும் நடுத்தர வர்க்கத்தார் வியாபாரத்தில் வேண்டாத ஆசாமிகள் என்று கருதப்படும் தரகர்களாகவும் இருக்கிறார்கள் என் றால், கீழ்த்தர வகுப்பார் நசித்தே போனார்கள் என்பதில் ஆச்சரியமுண்டா? எனவே, உழைத்து உழைத்துப் பயன் காணமல், அந்த அயர்ச்சி காரணமாகவே, சிறு சிறு கிராமங்க ளெல்லாம் அழிந்துபோயின. 1920-ம் ஆண்டி லேயே இவ் விஷயத்தை நம்மில் பலர் நன்றாக உணர்ந் தோம். இதைத் தடுக்கத் தோன்றிய இயக்கம் இன்னும் குழந்தைப் பருவத்திலே இருக்கிறது. வளர்ந்துகொண்டு வருகிற இந்த இயக்கத்தின் வளர்ச்சியை நாம் அவசரப் பட்டு ஏதாவது செய்து தடுத்துவிடக் கூடாது.

இயற்கைக்கு மாறாகத் தேவைகளைப் பெருக்கிக் கொள்ளும் இந்த முறை மிகுந்த துன்பத்தைக் கொடுத்

திருக்கிறது. ஏனென்றால், இந்தியாவில் அவிபக்த குடும்பமுறை பெருவாரியாக இன்னும் வழக்கத்தில் இருந்துவருகிறது. மேலைநாட்டு வாழ்க்கை முறையானது இந்த நிலைமைக்கு ஏற்றதாக அமைந்திருக்க வில்லை. ஆகவே, மேலைநாட்டு வாழ்க்கை முறையை நமது குடும்ப முறையில் அமைத்து நடத்தும்போது, இந்தக் குடும்ப வாழ்க்கை உணர்ச்சியில்லாத ஒரு முறையாகிவிட்டது. இந்த இரண்டு முறைகளிலும் உள்ள கேடுகளே ஓங்கிவிட்டன; அவற்றின் நலங்கள் அறவே மறைந்துவிட்டன. தீமையுடன் தீமை சேர்ந்து பெருகிக்கொண்டது.

ஆகவே, நாம் செய்யும் ஆன்மத் தியாகமானது இந்த நாட்டின் தேவைகளுக்குப் பொருத்தமான விதத்தில் அமைய வேண்டும். நமக்கு இன்றியமையாத சீர்திருத்தங்கள் யாவும் நமக்குள்ளிருந்து தோன்ற வேண்டியவையேயன்றி, புறத்திலிருந்து வரக்கூடியவை யல்ல. உள்ளிருப்பன வெல்லாம் செல்லரித்துக் கிடக்கிறபோது, எல்லா விதத்திலும் பூரணமானதொரு அமைப்பு முறையை அதன்மேல் நிர்மாணிப்பது பயன்படாது; இப்படிச் செய்வது மயானத்திற்கு வெள்ளை அடித்து அலங்காரம் செய்வதையே ஒக்கும்.

எனவே, ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் வேலை முற்றும்படி செய்ய வேண்டும். ஆன்மத் தியாகம் என்ற உணர்ச்சியை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். இதுவரை செய்துள்ள தியாகம் பெரிய தியாகம் என்பது உண்மைதான். ஆயினும், இந் நாட்டுக்கு இன்னும் செய்ய வேண்டிய தியாகம் எவ்வளவு என்பதைப் பார்க்கும் போது, நாம் செய்திருக்கிற தியாகங்கள் அற்ப மென்றே சொல்ல வேண்டும். ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, பாடுபடத்தக்க உடல் வலிமையுள்ள அனைவரும், கட்டாயம் உழைக்க வேண்டும்; உழைக்காதவர்களுக்கு நாம் எப்படி உணவளித்துக் காப்பாற்றுவது? பணக்கார இடங்களில் பெண் கொடுக்க ஆசைப்படுதல்; அல்லது பெண்கொள்ள ஆசைப்பட்டு ஏராளமான பணத்தை வாரி இறைத்தல்; சாதி முறைமைகள் காரணமாகப் பெருத்த செலவிலே விருந்து நடத்துதல், போன்ற அர்த்த மற்ற மூடப் பழக்கவழக்கங்களை யொட்டி ஒரு பைசாக்

கூட நாம் செலவு செய்யக் கூடாது. ஒரு குடும்பத்திலே கலியாணமானாலும் சரி, கருமாதியானாலும் சரி, ஏராளமான செலவுக்குத்தான் அது வழி வைக்கிறது. அதனால், அந்தக் குடும்பத்தாருக்கு வேண்டாத, தாங்க முடியாத பாரம் ஏற்படுகிறது. இந்த மாதிரியான தன்னல மறுப்பைத் தியாகம் என்று நாம் கருதிவிடக் கூடாது; இவை தீமை பயக்கும் செயல்கள்; இவற்றைத் தைரியத்துடனும் உறுதியுடனும் எதிர்த்து நிற்க வேண்டும்.

கல்விக்காக அளவில்லாமல் நாம் செலவு செய்வது இருக்கவே இருக்கிறது. இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள், சாதாரண வாழ்க்கைக்கு வேண்டிய வருவாய் கிடைக்காமல் துன்புறுகிறார்கள்; கோடிக்கணக்கான பேர் சாப்பாட்டுக்கே இல்லாது சாகிறார்கள்; இந்த நிலைமையிலே, நமது உறவினர் கல்வி கற்கப் பெருஞ்செலவிலே ஏற்பாடு செய்வது விபரீதமான செயலாகும். மனது விரிவடைவதற்கு, கல்லூரிகளுக்கும் கலாசாலைகளுக்கும் போய்த்தான் ஆக வேண்டுமென்பதில்லை; கடுமையான அனுபவங்களிலிருந்தே மனது விரிவடைய வேண்டும். உயர்தரக் கல்வி யென்று சொல்லுகிற கல்வி நமக்கு வேண்டாம்; நம்மைச் சார்ந்தவர்களுக்கும் வேண்டாம் என்று நம்மில் சிலர் உறுதிகொள்ளும்போதுதான், வாஸ்தவத்திலே சிறந்ததொரு கல்வியை அளிப்பதற்கும் பெறுவதற்கும் உரிய உண்மையான வழியை நாம் காண முடியும். ஒவ்வொரு சிறுவனும் தான் படிப்பதற்குச் செலவாகும் பணத்தைத் தானே சம்பாதித்துக்கொள்ளும் முறை ஏற்பட வழியில்லையா? அந்த வழி யிருக்கமுடியாதா? இப்போது அப்படி ஒரு வழி இல்லாம லிருக்கலாம். ஆனால், இந்த விஷயத்தில் ஒரு சந்தேகமும் இல்லை. அதிகச் செலவுபிடிக்கும் கல்வி எங்களுக்கு வேண்டாமென்று ஒதுக்கிவிடும்போது, உயர்தரக் கல்வியே வேண்டாம் என்று நாம் ஒதுக்கவில்லை; உயர்தரக் கல்வி வேண்டியதுதான்; ஆனால், இப்படி வேண்டாமென்று ஒதுக்கிவிட்டால்தான் நம்மைச் சூழ்ந்துள்ள நிலைமைக்குப் பொருத்தமான முறையில் அந்தக் கல்வியை நிறுவ வழி கண்டுபிடிப்பது சாத்திய மாகும். கோடிக் கணக்கான மக்கள் அடையமுடியாத கல்வி நமக்கும் வேண்டாம்

என்று உறுதியுடன் மறுத்துவிடுவதுதான் இந்த நிலைமையிலே சாலச் சிறந்ததாகும். வேண்டாமென்று நீக்குவதற்குரிய சக்தி திடீரென்று நம்மிடம் வந்துவிடாது. கோடிக் கணக்கான மக்களுக்குக் கிடைக்க முடியாத சொத்தும் பொருளும் போன்ற வசதிகள் நமக்கு உடனடியாக வேண்டாம் என்கிற மனநிலையை அதை யடுத்து முதலில் வளர்க்க வேண்டும்; அந்த நிலைக்குப் பொருத்தமான முறையிலே இயன்ற அளவு வாழ்க்கையைத் திருத்தியமைக்க வேண்டும்.

உறுதியோடு தம்மையே தியாகம் செய்யவல்ல தொண்டர் படை யொன்று, பெரிதாக, மிகமிகப் பெரிதாக, ஏற்படாதவரையில், பாமர மக்களிடையே உண்மையான முன்னேற்றம் ஏற்படுவது அரிதென்று நான் கருதுகிறேன். இந்த முன்னேற்றம் ஏற்படாமல் சுயராஜ்யம் அடைகிறதென்பதும் இல்லை. ஏழை மக்களுக்காகத் தங்களையும் தங்களுடைய தனத்தையும் அர்ப்பணம் செய்யத் துணியும் தொண்டர்களின் எண்ணிக்கை எவ்வளவுக்குப் பெருகுகிறதோ, அவ்வளவுக்குத்தான் சுயராஜ்யத்தை நோக்கி நாமும் முன்னேற முடியும்.

தாய் தந்தையரைவிட ஸ்தாபனங்கள் உயர்வா?

"தியாகம் செய்வதனால் ஆனந்தம் பிறக்காவிட்டால், அந்தத் தியாகம் தியாகமன்று. தியாகமும் வருத்தமும் ஒன்றுக்கொன்று பொருத்தமானவை அல்ல......தான் செய்யும் தியாகத்திற்காகத் தன்னிடம் எல்லோரும் அனுதாபம் காட்ட வேண்டுமென்று எதிர்பார்ப்பவன், மனிதவர்க்கத்திலே ஒரு அற்பமான பிரகிருதியாவான்."

பொது ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் பெற்றோரை விட, ஸ்தாபனத்தைப் பரிபாலிப்பதே தங்களின் முதற் கடமையென்று சொல்லிக்கொண்டார்களாம். வங்காளத்தில் நான் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது இதைக் கேட்க நேர்ந்தது. இது என்னை அப்படியே திக்பிரமை கொள்ளச் செய்தது. இதை நான் ஒப்புக்கொண்டதாகவும் சொல்லிக்கொண்டதாகவும் சொன்னார்கள். நான் எழுதியவற்றுள் ஏதேனும் இவ்வித எண்ணத்தை யுண்டுபண்ணக் கூடியதா யிருந்தால், நேயர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்விதக் குற்றம் எதுவும் நான் செய்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் இன்று அடைந்துள்ள நிலைமைக்கு என் பெற்றோரே காரணமாவர். சிரவணன் தன் பெற்றோருக்கு எவ்வளவு கடமைப்பட்டிருந்தா னென்று சொல்லுவார்களோ, அதேபோல, நானும் என் பெற்றோருக்குக் கடமைப்பட் டிருக்கிறேன். பெற்றோரைவிட ஸ்தாபனங்களையே பெரிதாக மதிப்பது சரி யென்று சிலர் சொன்னதைக் கேட்டதும், எனக்கு அடக்கமுடியாத கோபம் வந்தது; மிக்க கஷ்டத்தோடுதான் அதை அடக்கிக் கொண்டேன். மேற்கூறிய கருத்தோடு பேசிய இளைஞன் ஆழ்ந்து சிந்திக்காமல் ஏதோ விளையாட்டாகப் பேசினன். தற்காலத்தில், தங்களை எல்லாமறிந்த பெரியவர்களாக நினைத்துக்கொள்ளுகிற ஒரு பழக்கம் இளைஞர்களிடை ஏற்பட்டிருக்கிறது; அறிவிலே நிறைவெய்தி யிருப்பதாக அவர்கள் தங்களை எண்ணிக்கொள்ளுகிறார்கள். வயது முதிர்ந்து, தளர்ந்த நிலையிலிருக்கிற தாய் தந்தையரைப் பாதுகாப்பதே வாலிபர்களின் முதன்மையான கடமை

என்பது எனது அபிப்பிராயம். பெற்றோரை ஆதரிக்கக் கூடிய நிலையிலிராதவர்கள், கலியாணம் செய்துகொள்ளா மல் இருப்பதுதான் உசிதம். பெற்றோரைப் பராமரிப்ப தென்ற முதல் கடமையைப் பூர்த்தி செய்யும்வரையில், அவர்கள் பொதுச் சேவையில் ஈடுபடலாகாது. பெற்றோ ருக்கு உணவும் உடையும் உதவுவதற்காக, தாங்கள் பட்டினி கிடக்கும்படி வந்தாலும், அந்த நிலைக்கு அவர்கள் உட்படத்தான் வேண்டும். இருந்தபோதிலும், தாய் தந்தையர் கண்மூடித்தனமாக, அறிவுக்குப் பொருந்தாத காரியங்களைச் செய்யச் சொன்னால், பிள்ளைகள் அதைக் கேட்க வேண்டியதில்லை; அப்படி அவர்கள் கேட்க வேண்டுமென்று பிறர் எதிர்பார்க்கவு மாட்டார்கள். சாப்பாட்டிற்கு வேண்டிய பொருளை மட்டுமே பிள்ளைகளி டம் பெற்றோர் கேட்கிறார்கள் என்பதில்லை; பொய்யான ஆடம்பரத்துக்காகவும் பெண்களுக்குத் தடபுடலாகக் கலியாணம் செய்வதற்காகவும் அவர்கள் பணம் கேட்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இவ்வித வேண்டு கோள்களைப் பூர்த்தி செய்ய மரியாதையுடன் மறுத்துவிடு வதே பொதுச் சேவையில் ஈடுபட்டுள்ள தொண்டர்களின் கடமை என்று எனக்குப் படுகிறது. உண்மையாகப் பார்த்தால், நியாயமாகத் தனக்குக் கிடைத்த ஊதியம் போதாமல், அது காரணமாகப் பட்டினிகிடந்த பொதுத் தொண்டர் ஒருவரையாவது நான் பார்த்ததாக எனக்கு நினைவில்லை. சிலர், தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வாழ்க்கை நடத்துகிறார்கள். இன்னும் சிலர், தங்கள் உழைப்புக்கு நியாயமாக என்ன ஊதியம் கிடைக்க வேண்டுமோ அதிலும் குறைவாகவே பெற்று வருகிறார்க ளென்பதையும் நான் அறிவேன். ஆனால், அவர்களது தொண்டு விருத்தியாகி மதிப்பும் வெளிப்பட விளங்கிய பிறகு, அவர்களுக்குப் பணக் கஷ்டம் இராது. கஷ்டங்களும் கடின சோதனைகளுமே ஒருவனை மனித னைச் செய்கின்றன. ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அவையே அறிகுறியாகும். எல்லா இளைஞர்களுமே சுக மாயும் சௌகரியமாகவும், தேவை என்பதே இன்ன தென்று தெரியாத முறையிலும் வாழ்க்கை நடத்திவந் தால், சோதனை வரும்போது வெற்றியோடு அதிலிருந்து

அவர்களால் மீள முடியாது. தியாகமே ஆனந்த மளிக்கும்.

தாம் செய்த தியாகத்தைப்பற்றி ஒருவர் பொதுமக்களிடத்தில் பிரமாதப்படுத்துவது சரியல்ல. எந்தத் தியாகம் வேண்டுமானாலும் செய்கிறோம் என்று என்னிடம் பல தொண்டர்கள் சொன்னார்கள். அவர்களை நான் மடக்கிக் கேட்டபோது, யாசகம் வாங்கியோ, வேறு விதத்திலோ, நன்கொடைகள் வசூலித்தோ வாழ்க்கை நடத்துவதே அவர்கள் குறிப்பிட்ட தியாகம் என்று எனக்குத் தெரிய வந்தது. நன்கொடை பெற்று உயிர் வாழ்வதில் தியாகம் எதுவுமில்லை யென்று நான் அவர்களுக்குச் சொன்னேன். பொதுச் சேவையில் ஈடுபட்டோர் பலர் இவ்விதம் நன்கொடை பெற்றே உயிர்வாழ்ந்தார்கள். ஆனால், அதன் மூலம் அவர்கள் எதையும் தியாகம் செய்ததாகச் சொல்லிக் கொள்ள வில்லை. அதிக வருமானம் வரக் கூடிய வேலைகளைப் பல இளைஞர்கள் விட்டுவிட்டார்கள். அது அவர்களுக்குப் பெருமை யளிக்கிற விஷய மென்பதில் சந்தேகமில்லை. ஆனால், இதற்காக அவர்களை அளவுக்குமேல் புகழ்தல் கூடா தென்று எடுத்துச் சொல்ல வேண்டியவனா யிருக்கிறேன். தியாகம் செய்வதனால் ஆனந்தம் பிறக்கா விட்டால், அந்தத் தியாகம் தியாக மன்று. தியாகமும் வருத்தமும் ஒன்றுக்கொன்று பொருத்தமானவை அல்ல. தியாகம் என்பதற்குப் பொருள் "புனிதமாக்குவது" என்பதாகும். தான் செய்யும் தியாகத்திற்காகத் தன்னிடம் எல்லோரும் அனுதாபம் காட்ட வேண்டு மென்று எதிர்பார்ப்பவன் மனிதவர்க்கத்திலே ஒரு அற்பமான பிரகிருதி யாவான்.

புத்தர் சுகபோகங்களனைத்தையும் துறந்தார். ஏன்? அவற்றைத் துறக்காமல் அவரால் இருக்க முடியவில்லை. எதையும் வைத்துக்கொண் டிருப்பது அவருக்குச் சித்திர வதையாகவே தோன்றியது. பணத்தை வைத்துக் கொண்டிருப்பது மனதுக்குத் துன்பத்தை உண்டாக்கு மென்று உணர்ந்தே, லோகமான்ய திலகர் தம் வாழ்நாள் முழுதும் ஏழையாக இருந்தார். இரண்டொரு ரூபாய் கையிலிருந்தாலும், அதுவே பெரும் பாரமென் றெண்ணியவர் ஆண்ட்ரூஸ்; கையில் ரூபாய் வந்ததும், அதை

எப்படியாவது வினியோகம் செய்துவிடுவது அவர் வழக்கம். அவரை மேற்பார்த்துக்கொள்ளுவதற்காக, ஒரு ஆள் கூடவே இருக்க வேண்டுமென்று நான் பல தரம் அவரிடம் சொல்லி யிருக்கிறேன். நான் சொல்லுவதைக் கவனமாகக் கேட்பார், சிரிப்பார்; ஆனால், தம் செயலுக்காகச் சிறிதும் வருந்தாமல், மறுபடியும் முன் போலவே செய்வார். இந்தியத் தாய் ஒரு பயங்கரமான தெய்வ மென்றே சொல்லுவேன். அனேக இளைஞர்களையும் யுவதிகளையும் தியாகம் செய்யச் சொல்லுவாள் அவள். அவர்கள் மனமுவந்து தியாகம் செய்தாலும் சரி, கட்டாயத்தின்மேல் செய்தாலும் சரி, பெருந் தியாகம் செய்த பிறகுதான், அவள் "குழந்தைகளே! நல்ல தொண்டு செய்திருக்கிறீர்கள். சந்தோஷம். இனி நீங்கள் போகலாம்" என்று சொல்லுவாள். தியாகம், தியாகம் என்று சொல்லி வார்த்தை யளவிலேதான் நாம் இன்னும் விளையாடிக்கொண் டிருக்கிறோம். உண்மையான தியாகம் இனிமேல்தான் வர வேண்டும்.

வழிபாடா? குருட்டு வணக்கமா?

" காரணங்களைத் தெரிந்துகொள்ளுவதற்குக் காத்திராமல், சில சமயங்களில் உத்தரவுக்கு உடனே கீழ்ப்படிந்து நடக்கவேண்டி யிருக்கும். அச் சமயங்கள் யாவை என்பதை நானும் உணரு கிறேன்............ஆனால், நல்ல முறையில் அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில், கீழ்ப்படிவதற்குரிய இத்தகைய சந்தர்ப்பங்கள் மிகச் சிலவே ஏற்படுகின்றன; மிகச் சிலவே ஏற்பட முடியும்."

ஒரு உபாத்தியாயர் எழுதுகிறார் :

"........ிலுள்ள எங்கள் பாடசாலையில் படிக்கும் பையன்களில் சிலர் ஒன்றுசேர்ந்து, சில மாதங்களாகச் சொந்தமாக நூற்று, அகில பாரத சர்க்கா சங்கத்திற்கு மாதந்தோறும் ஆயிரம் கெஜம் நூல் ஒழுங் காக அனுப்பி வருகிறார்கள். தங்களிடத்திலே அவர்களுக்குள்ள அன்பு மேலீட்டினாலேயே இந்தச் சிறு சேவையை அவர்கள் செய்து வருகிறார் கள். எதற்காக நூற்கிறீர்க ளென்று யாராவது கேட்டால், அவர்கள் " இது மகாத்மா காந்தியின் கட்டளை. நாங்கள் அதை நிறைவேற்றியாக வேண்டும் " என்று விடை யளிக்கிறார்கள். சிறுவர்களிடம் காணப் படும் இந்த மனநிலையை எல்லா வழிகளிலும் உற்சாகமூட்டி வளர்க்க வேண்டு மென்றே நான் கருதுகிறேன். கேள்வி கேட்காமல் உத்தரவுக் குக் கீழ்ப்படிதல், தீர புருஷர்களை வழிபடுதல் என்பவற்றுக்கும், அடிமை மனப்பான்மைக்கும் பெருத்த வித்தியாசம் உண்டு. தங்களிட மிருந்து, தங்கள் கையெழுத்திலே ஒரு செய்தியைப் பெற அவர்கள் மிக்க ஆவலா யிருக்கிறார்கள்; இந்தச் சிறுவர்களுக்கு வழிகாட்டி ஊக்கும் பொருட்டு அவர்களது வேண்டுகோளைப் பூர்த்தி செய்வீர்க ளென்று நம்பு கிறேன்."

இந்தக் கடிதத்தில் காணப்படுகிற மனநிலை உண்மை யாகவே வீரர் வழிபாட்டைக் குறிக்கிறதா, அல்லது வெறும் குருட்டு வணக்கத்தைக் குறிக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. காரணங்களைத் தெரிந்து கொள்ளுவதற்குக் காத்திராமல், சில சமயங்களில் உத் தரவுக்கு உடனே கீழ்ப்படிந்து நடக்கவேண்டி யிருக்கும். அச் சமயங்கள் யாவை என்பதை நானும் உணருகிறேன். காரண காரியங்களைத் தெரியாமல் கீழ்ப்படிந்து நடக்க வேண்டிய குணம் முக்கியமாக ஒரு போர்வீரனுக்கு யிருக்க வேண்டிய குணமாகும். நாட்டின் மக்களில் பெரும்பான்மையோருக்கு இந்தக் குணம் அமைந்திரா விட்டால், அந்த நாடு விசேஷமாக முன்னேற்றம் அடைய

முடியாது. ஆனல், நல்ல முறையில் அமைந்துள்ள ஒரு சமுதாயத்தில், கீழ்ப்படிவதற்குரிய இத்தகைய சந்தர்ப்பங்கள் மிகச் சிலவே ஏற்படுகின்றன; மிகச் சிலவே ஏற்பட முடியும். பாடசாலையில் உபாத்தியாயர் சொல்லுவதையெல்லாம் மாணவர்கள் அப்படியே கண்மூடித்தனமாகக் கீழ்ப்படிந்து பின்பற்றுவது அதிக தீமையாகும். அவர்களுக்கு ஏற்படும் தீமைகள் யாவற்றிலும் இதுதான் மிகக் கொடிய தீமையாகும். இதற்கு மாருக, தங்களிடத்திலே படிக்கும் சிறுவர் சிறுமிகளை எந்த விஷயத்தையும் பகுத்தறிந்து பார்க்கும்படி அவர்கள் தூண்டிவிடுவார்களானல், அச் சிறுவர் சிறுமிகளுடைய அறிவுக்குச் சதா வேலை ஏற்படும்; அவர்கள் எதையும் தாங்களாகவே சிந்தித்துப் பார்க்கும்படி பயிற்சியும் பெறுவார்கள். பகுத்தறிவு மேலே செல்லாத நிலையிலேதான் பகுத்தறிவு பிறக்கிறது. ஆனல், அனேகமாக இவ்வுலகத்தில் நடக்கும் எல்லா காரியங்களுக்கும் நியாயமான சமாதானம் சொல்லிவிட முடியும். ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள கிணற்று நீரில் நோய்க் கிருமிகள் இருக்குமோ என்று சந்தேக மிருக்கிற தென்று வைத்துக் கொள்ளுவோம். அந்த இடத்தில் வசிக்கும் மாணவர்கள் காய்ச்சி வடிகட்டிய தண்ணீரையே பருகிஞர்கள்; 'நீங்கள் ஏன் காய்ச்சி வடிகட்டிய தண்ணீரைக் குடிக்கிறீர்கள்?' என்று உபாத்தியாயர் அவர்களைக் கேட்கிருர். அதற்கு 'மகாத்மாவின் உத்தரவு அப்படி' என்று அவர்கள், விடை யளித்தால், அந்த உபாத்தியாயர் அதைக் கேட்டுக் கொண்டு பொறுமையாக இருப்பாரா? இங்கே சொன்ன இந்தப் பதில் சரியில்லை யென்ருல், நூல்நூற்கிற விஷயத்தில் அந்தப் பள்ளிச் சிறுவர்கள் சொன்ன நியாயத்தை ஒப்புக்கொள்ளுவதும் சரியல்ல வென்றே ஏற்படுகிறது. இதற்குமுன் என்னிடம் பக்தி பூண்டிருந்த பல குடும்பங்களில், சில இப்போது என்னை மகாத்மா வென்று கருதுவதை விட்டுவிட்டார்கள். தங்களுக்கு இருந்த பக்தி மறைந்துவிட்ட தென்று பலர் தாங்களாகவே எனக்கு எழுதியதிலிருந்து இது எனக்குத் தெரிய வந்தது. அதைப் போலவே இந்தப் பள்ளிக்கூடத்திலும், என்னை மகாத்மா அல்ல வென்று ஒரு காலத்தில் எண்ணவேண்டி வரும்

பொழுது, சர்க்கா சுற்றி வருவதையே அடியோடு நிறுத்தி விடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன்! தனிமனி தனைவிட, கொள்கை பெரிதல்லவா! ஏதோ அறி வில்லாமல் சில தவறுகளை நான் செய்துவிடுகிறேன், அல்லது, ஏதோ ஒரு காரணத்தைக்கொண்டு ஜனங்கள் என்மீது கோபமா யிருக்கிறார்கள் என்று ஏற்பட்டால், அப்போது, என்னையே ஒரு தீர புருஷனாகக் கொண்டு செய்யும் வழிபாடு நின்றுபோகும். அது காரணமாக, மிக நல்ல காரியமாகிய சர்க்கா சுற்றுவதும் நின்றுவிடக் கூடும். என் குற்றத்திற்காகச் சர்க்காவின் காரியம் தடைப்படுவது எனக்கு அளவில்லாத வருத்தத்தை யளிக் கும். ஆகையால், மாணவர்கள் தங்களால் முடிந்தவரை யில் எல்லா விஷயங்களையும் பகுத்தறிவைக்கொண்டு சிந் தித்துப் பார்க்க வேண்டுமென்பது மிக முக்கியமானது. முக்கியமாக, சர்க்காவைச் சுற்ற வேண்டுமா வேண்டாமா என்பது பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கத் தக்கதொரு விஷயம். சர்க்காவோடு இந்திய மக்களின் நன்மையானது பிணைக்கப்பட் டிருக்கிறது. ஆதலால், பாமர மக்களிடையே பரவியிருக்கும் வறுமைப் பிணி யைப்பற்றி மாணவர்கள் கொஞ்சம் தெரிந்து கொள்ளுவது அவசியம். சில கிராமங்கள் சின்னாபின்னப் பட்டுச் சிதைந்துபோவதை அவர்கள் நேரிலே சென்று பார்ப்பது நலம். இந்தியாவின் ஜனத்தொகை எவ்வளவு என்பதை அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த நாடு எவ்வளவு பரந்த நாடு என்பதையும், இதில் வசிக்கும் கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்குக் கிடைக்கும் மிக மிகச் சொற்பமான வருவாயை எப்படிச் சிறிதளவேனும் அதிகப்படுத்துதல் கூடும் என்பதையும் அவர்கள் உணர் தல் வேண்டும். நமது நாட்டில் தாழ்த்தப்பட்டுக் கிடக் கும் ஏழை மக்களுடன் தாங்களும் ஒத்து உணரப் பழகிக் கொள்ள வேண்டும். மிக எளிய மக்களுக்கு என்னென்ன வசதிகள் கிடைக்க மாட்டாவோ, அவைகள் தங்களுக்கு வேண்டுவதில்லையென்று அவர்கள் கூடியவரை விலக்கி விடக் கற்றுக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் தான் நூற்பதில் அடங்கியுள்ள நுட்பத்தை அவர்களால் அறிய முடியும்; அதன்பிறகு என்மீதுள்ள மயக்கம் மாறி

விட்டபோதிலும், அவர்கள் மனம் மாறிவிடாது. கொள்கையளவிலே திடுக்கிடும்படியான எந்த மாறுதல் நேரிட்டாலும் மனம் மாருது. சர்க்காவின் தத்துவம் மிக மிக உயர்ந்தது ; மிக்க நன்மைக்கு காரணமா யுள்ளது. அது வெறும் வீர வழிபாட்டை மட்டும் நம்பி யிருக்கக் கூடியதன்று. அறிவுக்குப் பொருத்தமான முறையில் அதன் பொருளாதார நிலையை அலசி ஆராய்ந்தபோதிலுங்கூட, அதன் சிறப்பு, தனியாக நிற்கவல்லது.

கடிதத்தை எழுதி இருப்பவர் சொல்லியது போன்ற தீர புருஷர்களை வழிபாடு செய்யும் குருட்டுத்தனமான பழக்கம் நம்மிடையே அதிகமாக இருக்கிற தென்பதை நான் அறிவேன். தேசியப் பாடசாலைகளில் ஆசிரியரா யுள்ளவர்கள் நான் கூறிய இந்த எச்சரிக்கையை மனத்துட்கொள்ளுவார்க ளென்று நம்புகிறேன். பெரிய மனிதர்கள் என்று புகழப்படுகிறவர் சொல்லுவதைச் சோதனை செய்து பார்க்காமல் அப்படியே அவற்றை நம்பிக் காரியங்களைச் செய்யலாகா தென்று தங்கள் மாணவர்களுக்கு அவர்கள் அறிவுறுத்துவார்க ளென்று நம்புகிறேன்.

சோதனைக் காலம்

"மாணவர்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடான இரண்டு காரியங்களை ஒரே சமயத்தில் செய்ய முடியாது. பொதுஜனங்கள் எந்த இலட்சியத்திற்காகப் போராடுகிறார்களோ அந்த இலட்சியத்திற்காகவே தாங்களும் பாடுபட வேண்டுமென்று கருதினால், படிப்பினும் இலட்சியமே விசேஷமென்று மாணவர்கள் கருத வேண்டும். நாட்டின் நலனுக்கு, தங்களது படிப்பு முரணாயிருக்கிறதென்று உணர்ந்தால், அந்தப் படிப்பை விட்டுவிடவும் துணிய வேண்டும்."

ரௌலட் சட்டம் காரணமாக ஏற்பட்ட கிளர்ச்சியின் போது, மாணவர்களுக்கு என்ன நேர்ந்ததோ அதே விதமாக இப்போதும் நிகழ்ந்து வருகிறது. விசேஷமான அந்த நாட்களில், ஒரு மாணவர் கிராமத்திலேயே யிருக்கச் சொல்லி, தம்மை நகரப்பிரஷ்டம் செய்துவிட்டார்களென்ற வருத்தத்தில் தற்கொலை செய்து கொள்ளலாமா வென்றுகூடத் தோன்றியதாக எனக்கு எழுதினார். இப்பொழுது ஒரு மாணவர் எழுதுகிறார்:

"..................ல் உள்ள மாணவர்களாகிய நாங்கள் தாய்நாடு அழைக்குங் குரலைக் கேட்டு, தொண்டிலே ஈடுபட்டோம். 3-ஆம் தேதியன்று ஹர்த்தால் செய்தோம். இப்படித் துணிந்து செய்த செயலுக்காகத் தலைக்கு இரண்டு ரூபாய் எங்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. ஏழை மாணவர்கள் தங்களுக்கு இலவசமாகக் கிடைத்து வந்த உபகாரச் சம்பளம் முதலியவற்றை யெல்லாம் இழந்து வருகிறார்கள். தலைமை ஆசிரியராகிய......க்குத் தயவுசெய்து இப்படிச் செய்யக் கூடாதென்று எழுதுங்கள்; அல்லது "யங் இந்தியா" பத்திரிகைமூலம் அவருக்கு அறிவுறுத்துங்கள். நாங்கள் யாதொரு விதமான குற்றமும் செய்யவில்லை என்பதை எடுத்துக்காட்டுங்கள். தாய்நாட்டின் அழைப்புக்கு இணங்கிச் செயலில் இறங்கியதைத் தவிர, வேறு ஒரு கெடுதலும் நாங்கள் செய்யவில்லை என்பதையும் சொல்லுங்கள். எங்களாலானவரையில் தாய்நாட்டுக்கு அவமானம் ஏற்படாமல் காப்பாற்ற முயன்றோம். நாங்கள் கோழைகள் அல்ல என்பதையும் அவரிடம் சொல்லுங்கள். தயவுகூர்ந்து எங்களுக்கு உதவி செய்யுங்கள்."

தலைமை ஆசிரியருக்கு எழுதும்படி கேட்டிருப்பதற்கு நான் இணங்க முடியாது. தலைமை ஆசிரியர் தமது வேலையை இழக்காம லிருக்க வேண்டுமானால், அவர் ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துத்தான் ஆக வேண்டும். கல்விநிலையங்கள் அரசாங்கத்தின் ஆதரவில் வாழவேண்

டிய அவசியம் இருக்கிறவரை அவை அரசாங்கத்தின் நன்மைக்காகத்தான் உபயோகிக்கப்பட்டு வரும். அரசாங்கத்தை எதிர்த்து, பொதுஜனங்களுக்கு ஆதரவான காரியங்களைச் செய்யத் துணிகிற மாணவர்களும் ஆசிரியர்களும் அதனல் ஏற்படும் பலனை உணர வேண்டும்; எந்தச் சமயத்திலும் பள்ளிக்கூடத்தினின்றும் நீக்கப்படுவதற்கு அவர்கள் தயாராகவே இருக்க வேண்டும். மாணவர்கள் பொது மக்களோடு தைரியமாகச் சேர்ந்து கொண்டு நல்லமுறையிலே தங்கள் கடமையைச் செய்தார்கள் எனத் தேசபக்தர்கள் எண்ணுவார்கள். தாய்நாட்டின் அழைப்புக்குச் செவி சாய்க்காமல் மாணவர்கள் இருந்துவிட்டால், தேசபக்தியே இல்லாதவர்களென்று பிறர் தூற்ற நேரிடும்; இன்னும் கேவலமாகச் சொல்லுதலும் கூடும். ஆனல், துரைத்தனத்தார் அபிப்பிராயப்படி பார்த்தால், இந்த மாணவர்கள் செய்தது தவறென்பதில் சந்தேக மில்லை; இதன் காரணமாக அரசாங்கத்தாரின் கோபத்திற்கும் ஆளாகி யிருக்கிருர்கள். மாணவர்கள் ஒன்றுக்கொன்று முரண்பாடான இரண்டு காரியங்களை ஒரே சமயத்தில் செய்ய முடியாது. பொதுஜனங்கள் எந்த இலட்சியத்திற்காகப் போராடுகிருர்களோ அந்த இலட்சியத்திற்காகவே தாங்களும் பாடுபட வேண்டுமென்று கருதினல், படிப்பினும் இலட்சியமே விசேஷமென்று மாணவர்கள் கருத வேண்டும். நாட்டின் நலனுக்கு, தங்களது படிப்பு முரணு யிருக்கிற தென்று உணர்ந்தால், அந்தப் படிப்பை விட்டுவிடவும் துணிய வேண்டும். இந்த உண்மையை 1920-ம் ஆண்டில் தெளிவாக நான் உணர்ந்தேன். அதன் பின்னர், நான் பெற்ற அனுபவமானது தொடக்கத்தில் நான் கண்ட இந்த உண்மையை உறுதி செய்திருக்கிறது. என்ன கஷ்டம் நஷ்டம் வந்தாலும் சரி, அரசாங்கக் கல்லூரிகளையும் பாடசாலைகளையும் விட்டுவிடுவ தொன்றே மாணவர்கள் பின்பற்றக்கூடிய சிறந்த கௌரவமான வழி. இதில் சந்தேகமே இல்லை. ஆனல், அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் போர் தொடங்க நேரிட்டால், அப்போது மாணவர்கள் எந்த நிமிஷத்திலும் பள்ளிக்கூடத்தினின்று நீக்கப்படுவார்கள். அதற்கும் தயாரா யிருக்க வேண்டும்;

இதுவே அடுத்தபடியாகப் பின்பற்றக் கூடிய நல்ல வழியாகும். அரசாங்கத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி ஏற்பட்டபோது பல இடங்களில் மாணவர்களே தலைவர்களாயிருந்திருக்கிறார்கள்; அப்படி அவர்கள் தலைவர்களாய் வரத் துணியாதபோதிலும், தலைவர்களை உறுதியோடும் உண்மையோடும் பின்பற்றவாவது தயாரா யிருக்க வேண்டும். நாட்டின் அழைப்பிற்கு இணங்கிச் செயலில் இறங்குவதற்கு அவர்களுக்கு எவ்வளவு தைரியம் இருந்ததோ அவ்வளவு தைரியத்தோடு செயலினால் விளைந்த பலாபலன்களையும் அவர்கள் அனுபவிக்கத் துணிவார்களாக. தங்களைத்தானே அவர்கள் இழிவுபடுத்திக்கொள்ள வேண்டாம். தங்களை நீக்கிவிட்ட கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் திரும்பவும் சேர எத்தனிப்பது காரணமாக, அவர்கள் தங்கள் கௌரவத்தை இழக்க வேண்டாம். தாய் நாட்டின் அழைப்பைக் கேட்டுப் பாடசாலைகளை விட்டதிலுள்ள துணிச்சல் முதல் எடுப்பிலே தோல்வி யடைந்துவிட்டால், அந்தத் துணிவை வெறும் அசட்டுத் துணிச்ச லென்றே பிறர் கருதிவிடுவார்கள்.

மாணவர்கள் அன்னியத் துணியை உதறிவிட்டுக் கதர் அணிந்து, கதருக்கு மிக்க ஆதரவு தந்தார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஆனால், ஏதோ அந்தச் சமயத்துக்குச் செய்த காரியந்தான் இது என்று யாரும் சொல்லும்படி அவர்கள் வைத்துக்கொள்ளக் கூடாது. எவ்வளவு வேகமாக அன்னியத் துணியை விட்டார்களோ, அவ்வளவு வேகமாக, மற்றவர்கள் வற்புறுத்தலினாலோ, அல்லது அன்னியத் துணிமீது தங்களுக்குள்ள ஆசை காரணமாகவோ கதரையும் விட்டுவிட்டார்க ளென்று ஒருவரும் சொல்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த நாட்டிலே அன்னியத் துணி கட்டுவ தென்பது, அன்னிய ஆட்சிக்கு உட்படுவது என்றே எனக்குப் படுகிறது. வெளிப்படையான உண்மை யென்று இதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்களாக.

பகிஷ்காரமும் மாணவர்களும்

"இந்தியாவில் சமீப காலம்வரையில் துர்ப்பாக்கிய வசமாகப் பெரும்பாலும் ஆங்கிலம் படித்த வர்க்கத்தாரிடை மட்டும் தான் அரசியல் விஷயங்களிலே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. ஆதலால், இந் நாட்டில் மாணவர் கடமை இன்னும் அதிக மென்பதில் சந்தேக மில்லை. சீனாவிலும் எகிப்திலும் தேசிய இயக்கம் ஏற்பட்டதற்கு மாணவர்களே காரணமாயிருந்திருக்கிறார்கள். இந்திய மாணவர்கள் அதற்கும் குறைவான முறையிலா நடந்துகொள்ளுவது ?"

ஒரு கல்லூரியின் தலைவர் எழுதுகிறார் :

"பகிஷ்கார இயக்கத்தை ஊக்கி நடத்துபவர்கள், மாணவர்களையும் தாங்கள் நடத்தும் இயக்கத்திலே இழுத்துக்கொள்ள முயலுகிறார்கள். அரசியல் பிரசாரமாகிய இந்தக் காரியத்தில் கலந்துகொண்டு மாணவர்கள் செய்யும் காரியங்களை மற்றவர்கள் யாரும் அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டார்கள் என்பது வெளிப்படையான விஷயம். பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் விட்டுவிட்டு ஏதாவது ஒரு பகிஷ்கார ஊர்வலத்தில் அவர்கள் கலந்துகொள்ளும்போது, மாணவர்கள் அங்குள்ள காலிகளுடன் கலந்து பழகுகிறார்கள்; இதனால் அங்கே நடக்கும் காலித்தனமான அக்கிரமச் செயல்களுக்கு அவர்களும் பொறுப்பாளிகளாக வேண்டியிருக்கிறது. போலீஸ்காரர்களின் தடியடி அனேகமாக இவர்கள்மீதுதான் முதன்முதலில் விழுகிறது. இது மட்டு மல்ல; பாடசாலை அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாகி, அவர்கள் விதிக்கும் தண்டனைக்கும் உள்ளாக வேண்டி வருகிறது. இது காரணமாக, பெற்றோர், படிப்பு முதலியவற்றுக்காக மேலும் பண உதவி செய்ய மறுக்கிறார்கள்; இப்படி இவர்கள் வாழ்க்கை பாழாகிவிடுகிறது. இளைஞர்களின் இயக்கத்தையே கூடாதென்று நான் சொல்லவில்லை. விடுமுறை நாட்களில், படிப்பு வாசனை இல்லாத உழவர்களுக்கும் எளியவர்களுக்கும் எழுதப் படிக்கச் சொல்லிக்கொடுப்பது, சுகாதார முறைகளை எடுத்துச்சொல்லி அவற்றைப் பரப்புவதுபோன்ற ஆக்க வேலைகளில் மாணவர்கள் ஈடுபடலாம். அப்படியின்றி, பெற்றோர் வார்த்தையையும் ஆசிரியர் கட்டளையையும் அலட்சியம் செய்து, அவர்களுக்கு விரோதமாக நடப்பதோடல்லாமல், கெட்ட சகவாசம் செய்து, காலிகளோடு சேர்ந்து வீதியிலே திரிவதும், பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதும் மிக்க துயரத்தை உண்டுபண்ணுகின்றன. பொதுக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் மிக்க பயனுள்ளவாகச் செய்யும் நோக்கத்தோடு, அரசியல்வாதிகள், மாணவர்களை வேலையையெல்லாம் விட்டுவிடச் செய்து இயக்கத்திலே அவர்களையும் இழுத்துக் கொள்ளுகிறார்கள்.

"இப்படிச் செய்யாம லிருக்குமாறு அவர்களுக்குப் புத்திமதி சொல்லும்படி தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். உண்மையில், இப்படி

மாணவர்களைச் சேர்ப்பதனுல் அவர்களுடைய ஊர்வலம், அல்லது கூட்டத்தின் மதிப்பு குறைந்தே போகிறது. ஏனென்றுல், சுயநலம் மிகுந்த, அறிவில்லாத கிளர்ச்சிக்காரர்களின் தூண்டுதல் காரணமாக, சிறுவர்கள் சேர்ந்து முன்பின் யோசியாமல் செய்கிற காரியம் என்று, இந்த இயக்கத்தை வெகு எளிதில் மற்றவர்கள் அசட்டை செய்வதற்கு இது ஏதுவாகும்.

"மாணவர்கள் தற்காலத்திய அரசியலை அறிந்துகொள்ள வேண்டாமென்று நான் சொல்லவில்லை. தற்சமயம் பெரிதும் விவாதிக்கப்பட்டு வருகிற பிரசினைகளை ஆதரித்தும் எதிர்த்தும் பத்திரிகைகளில் வெளிவரும் அபிப்பிராயங்களைத் தொகுத்து ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டும்; இவற்றை ஆராய்ந்து பார்த்து, தாங்களாகவே முடிவுகாணும்படி மாணவர்களைப் பழக்க வேண்டும். இவ்வாறு ஆசிரியர்கள் செய்தல் நலம். இந்த முறையைக் கையாண்டு நான் நல்ல பலன் அடைந்திருக்கிறேன். வாஸ்தவத்தில் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கக் கூடாதென்ற விஷயம் எதுவுமே இல்லை; ஆண் பெண் தொடர்பு சம்பந்தமான விஷயங்களைக்கூட, மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று பெர்ட்ரண்ட் ரஸ்ஸலும் வேறு பல பேராசிரியர்களும் அபிப்பிராயப்படுகிருர்கள்; மாணவர்களுக்கு நன்மையுமின்றி, அவர்களைப் பயன்படுத்துவோருக்கும் நன்மையுமின்றி, வெறும் கருவிகளாக மட்டும் மாணவர்களை உபயோகப்படுத்திக்கொள்ளுவதையே நான் பலமாக எதிர்க்கிறேன்."

இதை எழுதிய நிருபர், அரசியல் வேலையில் மாணவர்கள் செயலளவில் ஈடுபடுவதை நான் கண்டிப்பேன் என்ற நம்பிக்கையில் எழுதியிருக்கிருர். ஆனுல், நான் அவருக்கு ஏமாற்றத்தை யளிக்க வேண்டியவனுகவே யிருக்கிறேன். 1920-21-ஆம் ஆண்டில் பாடசாலைகளையும் கல்லூரிகளையும் விட்டு விலகச்செய்து, சிறைத் தண்டனை ஏற்படுகிற அளவுக்கு அரசியல் வேலைகளை ஏற்றுக்கொள்ளும்படி மாணவர்களை நான் மிகுதியாகத் தூண்டி யிருக்கிறேன் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். நாட்டில் நடைபெறும் அரசியல் இயக்கத்தில் முதன்மையான பங்குகொள்ளுவது மாணவர்களின் கடமை. இது தெளிவாக விளக்கக் கூடுமென்றே நான் நினைக்கிறேன். உலகமெங்குமே அரசியல் போராட்டங்களில் மாணவர்கள் பெரும் பங்குகொள்ளுகிருர்கள். இந்தியாவில், சமீபகாலம் வரை, துர்பாக்கியவசமாகப் பெரும்பாலும் ஆங்கிலம் படித்த வர்க்கத்தாரிடை மட்டும்தான் அரசியல் விஷயங்களிலே ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது; ஆதலால் இந்நாட்டில் மாணவர்களின் கடமை இன்னும் அதிகம்

என்பதில் சந்தேக மில்லை. சீனவிலும் எகிப்திலும் தேசிய இயக்கம் ஏற்பட்டதற்கு மாணவர்களே காரணமா யிருந்திருக்கிறார்கள். இந்திய மாணவர்கள் அதற்கும் குறைவான முறையிலா நடந்துகொள்ளுவது ?

ஆனால், கல்லூரித் தலைவர் ஒன்று செய்திருக்கலாம். மாணவர்கள் அஹிம்சை நெறியிலே ஒழுகி, காலிகளுக் குத் தாங்கள் கட்டுப்பட்டிருப்பதற்குப் பதிலாக, அக் காலி களைக் கட்டுப்படுத்தித் தங்கள் வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் மாணவர்களுக்கு அவர் வற்புறுத்திச் சொல்லி யிருக்கலாம்.

எதிர்க்க வேண்டிய கடமை

"அன்னிய ஆதிக்கத்தின்கீழ் அகப்பட்டுக்கொண்டு தின்றும் இந்தியா போன்ற நாட்டில், தேசத்தின் சுதந்திரத்திற்காகத் தோன்றுகிற இயக்கங்களில் மாணவர்கள் பங்குகொள்ளுவதை ஒருவராலும் நிறுத்த முடியாது. படிப்புக்கு இடையூறு வராத படி அவர்களின் உற்சாகத்தை ஒழுங்குபடுத்திவிடுவதே நாம் செய்யத் தக்கது."

கூர்ஜரக் கல்லூரியில் படிக்கும் சுமார் எழுநூறு மாணவர்கள் கல்லூரி செல்லாது வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். இந்த வேலைநிறுத்தம் இருபது நாட்களாக நடைபெற்று வருகிறது. உள்ளூர் விஷயமென இனி இந்த வேலைநிறுத்தத்தைக் கருதுதல் கூடாது. தொழிலாளர் வேலைநிறுத்தமே கேடுபயப்ப தாகும். மாணவர்களின் வேலைநிறுத்தமோ—அது ஏற்பட நியாயமான காரணமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி—முந்தியதை விடக் கேடுபயப்ப தாகும். ஏனென்றால், இறுதியில் அதனால் விளையும் பயன் அவ்வளவு கெடுதியானது; தவிர, மாணவர்கள், கலாசாலை யதிகாரிகள் ஆகியோரின் கௌரவத்தையும் அது பாதிப்பதாக இருக்கிறது. தொழிலாளர் கல்வி கற்றவர்கள் அல்லர். மாணவர்களோ, கல்வி கற்றவர்கள். அதோடுகூட, பொருள் சம்பந்தப்பட்ட காரியம் எதுவும் வேலைநிறுத்தம் செய்து ஆகவேண்டியது மாணவ்களுக்கு இல்லை; மாணவர்களுடன் முரண்டுவதனால் கல்வி நிலைய அதிகாரிகளுக்கும் முதலாளிகளைப்போல் யாதொரு மிச்சமும் இல்லை. மேலும், மாணவர்கள் ஒழுங்குமுறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்க வேண்டியவர்கள். ஆதலால் மாணவர்களின் வேலைநிறுத்தம் மிகப் பல விஷயங்களைப் பாதிக்கக் கூடியது; மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்வதை அபூர்வமான சந்தர்ப்பங்களில்தான் நியாயமானதென்று கருதலாம்.

ஒழுங்காக நடக்கிற கல்வி நிலையங்களில் வேலைநிறுத்தம் செய்வதற்குரிய சந்தர்ப்பம் மாணவர்களுக்கு மிக அரிதாகவே இருக்கும். இருப்பினும் இன்னின்ன சந்தர்ப்பங்களில்தான் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்யலாம் என்று முன்கூட்டியே முடிவு கட்ட

முடியாது. உதாரணமாக, பொதுமக்கள் அபிப்பிராயத்திற்கு விரோதமாகக் கல்லூரியை நடத்தும் ஒரு தலைமை ஆசிரியரை எடுத்துக்கொள்ளுவோம். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் படிக்கிற பிள்ளைகளும், பெண்களும், அவர்கள் பெற்றோரும் ஒரு பொதுக் கொண்டாட்ட தினத்தன்று விடுமுறை வேண்டுமென்று விரும்புகிறார்கள்; ஆனால், மேலே குறிப்பிட்ட தலைமை ஆசிரியர் விடுமுறை தர முடியாதென்று மறுத்துவிடுவாரானால், அன்று மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்வதாக அறிவிப்பது மிக்க நியாயமானதாகும். மாணவர்கள் அதிகமாகப் புத்துணர்ச்சி பெற்று, நாட்டுக்குத் தாங்கள் செய்ய வேண்டிய கடமையை உணர ஆரம்பிக்க ஆரம்பிக்க, வேலைநிறுத்தம் செய்வதற்குரிய இத்தகைய சந்தர்ப்பங்கள் இந்தியாவில் முன்னைவிட அதிகமாக ஏற்படும்.

கூர்ஜரக் கல்லூரி சம்பந்தமாக, நான் அறிந்தவரையில், மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்யப் போதிய நியாயம் இருந்ததென்றே கருதுகிறேன். இந்த வேலைநிறுத்தம் சம்பந்தமான உண்மையைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். சைமன் கமிஷன் பகிஷ்கார தினத்தன்று, இந்தியா வெங்குமே மாணவர்கள் கலாசாலைகளுக்குப் போகவில்லை; கூர்ஜரக் கல்லூரி மாணவர்களும் அவ்விதமே செய்தார்கள். கல்லூரிக்கு வராமலிருக்க ஆசிரியர்களிடம் அவர்கள் அனுமதி பெறவில்லையென்பது உண்மைதான். கிரமப்படி பார்த்தால், மாணவர்கள் செய்தது தவறாகும். கல்லூரிக்கு வராமல் நிற்பதற்கு முன், சம்பிரதாயத்திற்காகவாவது அவர்கள் ஆசிரியர்களிடம் அனுமதி கேட்டிருக்க வேண்டும். ஆனால் உலகமெங்குமே மாணவர்கள் இப்படித்தானே இருக்கிறார்கள்! அவர்களுடைய இதயத்தில் உற்சாகம் கிளம்பிவிட்டால், அப்புறம் அதைக் கட்டுப்படுத்துவதென்பது அவ்வளவு எளிதன்று. அவர்களின் உற்சாகத்தைக் கட்டுப்படுத்துவதைவிட, காற்றை எளிதாகக் கட்டுப்படுத்திவிடலாம். இளங்கன்றுதானே அவர்கள்? பின் விளைவுகளைக் கருதாமல், காரியத்தைச் செய்துவிட்டார்கள். அதிகமாகச் சொன்னாலும் அவர்களைப்பற்றி இவ்வளவுதான் சொல்லலாம். மாணவர்களுக்கும் தலைமை ஆசிரி

யருக்கும் இடையே சமரசப் பேச்சுவார்த்தைகள் அதிக மாக நடந்த பின்னர், தலைமை ஆசிரியர் இச் செயலை மன்னித்துவிட்டார். விரும்பினால், மாணவர்கள் தலைக்கு மூன்று ரூபாய் கட்டணம் செலுத்தி, பரீட்சை எழுதலாம் என்று அனுமதி யளித்தார். பெரும்பாலான மாணவர்கள் பரீட்சை எழுதுவார்க ளென்றும் அவ்விதம் பரீட்சை எழுதாத மாணவர்களுக்கு எவ்விதத் தண்டனையும் இராது என்றும் எல்லோரும் பொதுவாக நினைத்தார்கள். நிலைமை இப்படி இருக்கும்போது தலைமை ஆசிரியர் தமது வாக்குறுதியை மீறி, கட்டாயமாக எல்லோரும் தலைக்கு மூன்று ரூபாய் அபராதம் செலுத்தியே பரீட்சை எழுத வேண்டுமென்று அறிவித்தாராம். இது இயல்பாக மாண வர்களுக்குக் கோபத்தை உண்டாக்கியது. 'உப்பு, தனது உவர்ப்புத்தன்மையை இழந்துவிடுமானால் எதைக் கொண்டு அதற்கு உவர்ப்பூட்டுவது ?' என்று மாணவர்கள் நினைத்தார்கள். எனவே, கல்லூரி செல்லாமல் வேலை நிறுத்தம் செய்தார்கள். அதற்குப் பின்னர் நடந்தது தெரிந்ததுதான். இப்போதும் வேலைநிறுத்தம் நடந்து கொண் டிருக்கிறது; மாணவர்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளுகிறார்கள் என்று வேண்டியவர்களும் வேண்டாதவர்களும் ஒருங்கே சாட்சி சொல்லுகிறார்கள். கூர்ஜரக் கல்லூரித் தலைமை ஆசிரியர் தமது வாக்குறுதியை மீறிவிட்டா ரென்றும் சொல்லு கிறார்கள். இவ்விதம் ஒரு தலைமை ஆசிரியர் நடந்து கொள்ளும் பட்சத்தில், அதை எதிர்ப்பது அக் கல்லூரி மாணவர்களின் கடமை யென்றே நான் கருதுகிறேன். ஆசிரியர் பதவி மிக்க மதிப்பு வாய்ந்தது ; அதற்குரிய மரியாதையைப் பூரணமாகச் செலுத்த மாணவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் ; ஆனால், வாக்குறுதி தவறிய ஆசிரியருக்கு மரியாதை செலுத்துவ தென்பது முடியாத காரியம்.

மாணவர்கள் உறுதியாக இருந்தால் இந்த வேலை நிறுத்தத்திற்கு ஒரேயொரு முடிவுதான் ஏற்படக் கூடும். மாணவர்கள் கட்டாயமாகப் பரீட்சை எழுத வேண்டு மென்ற அக்கிரமமான அறிவிப்பை நீக்கிவிட்டு, அவர் களுக்கு எவ்விதத் தண்டனையும் விதிப்பதில்லை யென்று

பூரணமாக வ்ாக்களித்திருக்க வேண்டும். இதைத் தவிர வேறு வழி இருக்க முடியாது. வாஸ்தவத்தில், இந்தக் கல்லூரிக்கு, அரசாங்கத்தார் வேறொரு தலைமை ஆசிரியரை நியமிப்பதுதான் எல்லாவற்றையும்விடப் பொருத்தமான செயலாகும்.

மாணவர்கள் அரசியல் விஷயங்களிலே உறுதியான கொள்கை யுடையவர்களா யிருந்தாலும், அரசாங்கத்துக்குப் பிடிக்காத அரசியல் கூட்டங்களிலே கலந்து கொண்டாலும் அரசாங்கத்துக்குக் கோபம் வருகிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க, அரசாங்கக் கல்லூரிகள் அதிகப்படியான உளவு வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. இவை காரணமாக, மாணவர்களை அளவுக்கு மிஞ்சித் தொந்தரவு செய்வதே அவற்றின் வேலையாய் இருந்து வருகிறது. நியாயமில்லாமல் இப்படி மாணவர்கள் விஷயத்தில் கலாசாலை அதிகாரிகள் தலையிடுவதை நிறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. அன்னிய ஆதிக்கத்தின்கீழ் அகப்பட்டுக் கொண்டு திணறும் இந்தியா போன்ற நாட்டில், தேசத்தின் சுதந்திரத்திற்காகத் தோன்றுகிற இயக்கங்களில், மாணவர்கள் பங்குகொள்ளுவதை ஒருவராலும் நிறுத்த முடியாது. படிப்புக்கு இடையூறு வராதபடி அவர்கள் உற்சாகத்தை ஒழுங்குபடுத்திவிடுவதே நாம் செய்யத்தக்கது. மாணவர்கள் எந்தக் கட்சியிலும் சேர வேண்டாம்; எதிர்க் கட்சியுடன் போராடவும் வேண்டாம். ஆனால், தங்களுக்குப் பிடித்த அரசியல் கொள்கையைப் பின்பற்றவும், அதை வெளிப்படையாக எடுத்துப் பேசவும், கடைபிடித்து ஒழுகவும் சுதந்திரம் இருக்கும்படியாக மாணவர்களை விட்டுவிட வேண்டும். அறிவைப் பெருக்குவதே பாடசாலைகளின் வேலையா யிருக்க வேண்டும்; அந்த அறிவின் வளர்ச்சிமூலமாக, மாணவர்களுக்கு நல்லொழுக்கம் உண்டாகும்படி செய்ய வேண்டும்; பாடசாலைக்கு வெளியே, மாணவர்கள் அரசியலிலோ, அல்லது நல்லொழுக்கத்துக்கு மாறுபடாத இதர காரியங்களிலோ ஈடுபட்டால், அதில் தலையிடுவது பாடசாலைகளின் வேலை யல்ல.

ஆகையால், ஆமதாபாத் மாணவர்களின் வேலைநிறுத்

தத்தால் ஏற்பட்டிருக்கிற இந்தப் பிரசினையே இப்போது முதன்மையானது. ஆமதாபாத் மாணவர்களிடம், இதர மாணவ நிலையங்களும் பொதுமக்களும் பரிவுகொண்டு ஆதரவு காட்ட வேண்டும். பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர் சிறுமிகளைப்போலவே, பெற்றோருக்கும் இந்த வேலை நிறுத்தத்தில் அதிகச் சிரத்தை யிருக்கிறது. ஏனெனில், ஆமதாபாத் மாணவர்கள் நெடுகிலும் தங்களைப் பராமரித்து வரும் பெற்றோர் முதலியவர்களின் சம்மதம் பெற்றே வேலைநிறுத்தத்தை நடத்தி யிருக்கிறார்க ளென்று நான் அறிகிறேன்.

மாணவர்களின் வேலைநிறுத்தம்

"கல்வி நிலையங்கள் நம்மை மனிதர்கள் ஆக்குவதற்கு ஏற்பட்டவை. நமது பாடசாலைகளும் கல்லூரிகளுமோ, நம்மை அடிமைகளாகவும், கோழைகளாகவும், சந்தேகப் பிராணிகளாகவும், உறுதியற்றவர்களாகவும் ஆக்கியிருக்கின்றன என்பது எனது திட்டமான கருத்து. மனிதத்தன்மை என்பது, வெறும் பயமுறுத்தலிலும், அசட்டுத் தைரியத்திலும், அடாபிடித்தன்மையிலும் இல்லை. சமூக விஷயத்திலாகட்டும், அரசியல் விஷயத்திலாகட்டும், அல்லது வேறு எந்த விஷயத்திலாகட்டும், நியாயமான காரியத்தை அஞ்சாமல் செய்து, அதனால் விளையும் பலனை ஏற்கச் சித்தமா யிருப்பதே மனிதத்தன்மை. மனிதத்தன்மை செயலில் இருக்கிறது, சொல்லில் இல்லை."

ஆமதாபாத் கூர்ஜரக் கல்லூரி மாணவர்கள், குறையாத ஊக்கத்தோடு, இன்னும் கல்லூரி செல்லாமலே இருந்து வருகிறார்கள். அவர்களுடைய உறுதியும், அமைதியும், ஒற்றுமையும் பெரிதும் போற்றத்தக்கவை. இப்போதுதான் அவர்கள் தங்கள் வலிமையை உணர ஆரம்பித்திருக்கிறார்கள். ஏதாவது நல்ல ஆக்கவேலையில் ஈடுபட்டார்களானால், இந்த வலிமையை இன்னும் அதிகமாக உணர்வார்களென்று நான் தைரியமாய்ச் சொல்லுவேன். கல்விநிலையங்கள் நம்மை மனிதர்கள் ஆக்குவதற்கு ஏற்பட்டவை; நமது பாடசாலைகளும் கல்லூரிகளுமோ, நம்மை அடிமைகளாகவும், கோழைகளாகவும், சந்தேகப் பிராணிகளாகவும், உறுதியற்றவர்களாகவும் ஆக்கி யிருக்கின்றன என்பது எனது திட்டமான கருத்து. மனிதத்தன்மை என்பது வெறும் பயமுறுத்தலிலும், அசட்டுத் தைரியத்திலும், அடாபிடித்தன்மையிலும் இல்லை. சமூக விஷயத்திலாகட்டும், அரசியல் விஷயத்திலாகட்டும், அல்லது வேறு எந்த விஷயத்திலாகட்டும், நியாயமான காரியத்தை அஞ்சாமல் செய்து, அதனால் விளையும் பலனை ஏற்கச் சித்தமா யிருப்பதே மனிதத்தன்மை. மனிதத்தன்மை செயலில் இருக்கிறது, சொல்லில் இல்லை. மாணவர்கள் ஒருவேளை நெடுங்காலம் காத்திருக்கவேண்டி யிருந்தாலும், அதற்காக, அவர்கள் உற்சாகத்தை இழந்துவிடக் கூடாது. இப்படிக் காத்திருக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் இதில் தலையிட வேண்டியவர்களாவர். அதன் பிறகு, இந்தியா வெங்குமுள்ள மாணவர்கள் இந்தக் கலாசாலை

மாணவர்கள் செய்த செயல், முற்றிலும் நியாயமான தென் பதை எடுத்துக்காட்டும் காலமும் வரும். இந்தப் பிரசினை யைக் குறித்த எல்லா விவரங்களையும் தெரிந்துகொள்ள விரும்புவோர், ஸ்ரீ மாவலங்கரிடம் தெரிந்துகொள்ளலாம். ஆமதாபாத் மாணவர்கள் தங்களுடைய சொந்த உரிமை களுக்காகப் போராடவில்லை; பொதுவாக, மாணவர் உல கின் கௌரவத்தை நிலைநாட்டவே போராடுகிறார்கள். இவ்வளவு தீரத்துடன் போராடுகிற மாணவர்கள் பொது மக்களின் பூரணமான ஆதரவுக்குப் பாத்திரமானவர்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஏதாவது தேசிய ஆக்கவேலைகளில் முனைந்து ஈடு பட்டால், பொதுஜன ஆதரவு அவர்களுக்குக் கட்டாயம் கிடைக்கும். காங்கிரஸ் வகுத்துள்ள திட்டம் பொருத்த மான தென்று தோன்றாவிட்டால், மாணவர்கள் அதைப் பின்பற்ற வேண்டாம். எல்லோரும் ஒன்றுசேர்ந்து, தனித்த முறையில், ஏதாவது உருவான வேலையைச் செய் வதற்குத் தங்களிடம் ஆற்றல் உண்டு என்பதைக் காட்டுவது தான் அவர்களது முக்கியமான வேலை. சரமாரியாகப் பிர சங்கங்கள் செய்யவும், பயனற்ற முறையில் ஏதோ அந்தந் தக் காலங்களில் ஆர்ப்பாட்டங்கள் செய்யவும் நமக்குத் தெரியும். ஆனால், ஒருமைப்பாடு, ஒத்துழைப்பு, தைரியம், தளராத மனவுறுதி இவற்றை அடிப்படையாகக்கொண்ட வேலைகளைச் செய்ய வேண்டிய காலங்களில், வலியிழந்து, தோல்வியுற்றுவிடுகிறோம் நாம் என்று நம்மைப் பிறர் அடிக்கடி குறைகூறுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டு உண்மை யில்லை என்பதை நிரூபிக்க இந்த மாணவர்க ளுக்கு ஒரு அருமையான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் சரியாக உபயோகித்துக் கொள்ளுவார்களாக.

எக் காரணத்தை யொட்டியும் மாணவர்கள் நம்பிக்கை இழக்கலாகாது. இந்தக் கல்லூரி இந் நாட்டு மக்களின் சொத்து. நாம் சீர்கெட்டு, மானமற்று வாழாமல் மட்டு மிருந்தால், ஓர் அன்னிய அரசாங்கம், நமது சொத்தை இவ்வளவு நாள் வைத்துக்கொண் டிருக்க முடியுமா? தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை நடத்துவது மாண வர்களின் கடமையாகவும் விசேஷ உரிமையாகவும் இருக்க, அந்தப் போராட்டத்தில் மாணவர்கள் கலந்து கொள்ளுவதே முக்காலும் குற்றம் என்று அந்த அன்னிய அரசாங்கம் சொல்லிவர முடியுமா?

மாணவர்களும் ஒழுக்கமும்

"ஒழுக்கநடை இல்லாதிருப்பதற்குக் காரணம் பொறுப்பற்ற கல்விமுறைதான். இதற்குப் பரிகாரம், எனது அபிப்பிராயத்தையோ உதவியையோ பெறுவதன்று; ஆசிரியர்கள் மாணவர்களுடன் பொதுநோக்கோடு சேர்ந்து ஒத்துழைத்து, மாணவர்கள் செய்யும் முயற்சி வெற்றி பெறுமாறு உதவுவதே இந்த நிலைமைக்குப் பரிகாரமாகும்."

பஞ்சாபில், பாடசாலைகளின் இன்ஸ்பெக்டராயிருந்து, இப்போது ஓய்வுபெற்றிருப்பவரொருவர் பின்வருமாறு எழுதுகிறார்:

"கடைசியாக நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்திற்குப்பின், எங்கள் மாகாணத்திலுள்ள கல்லூரி மாணவர்களிடையே, ஒரு விசேஷப் பரபரப்பு ஏற்பட்டிருப்பதைத் தாங்கள் கவனித்திருக்கலாம். அந்தப் பால்ய இதயங்களில் புதியதொரு தீ, சுடர்விட் டெரிகிறது. இந்தத் தீ உண்டாவதற்கு முக்கிய காரணம் தாங்களே. இனி, அது எந்த எந்தத் துறைகளிலெல்லாம் பிரவேசிக்குமோ, சொல்ல முடியாது. அப்படிப் பிரவேசிப்பதற்கும் தாங்கள்தான் பொறுப்பாளி. ஆகையால், கீழே தந்துள்ள இரண்டு விஷயங்கள் சம்பந்தமாகத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பீர்கள் என நம்புகிறேன்.

1. உண்மையான 'அஹிம்சை' நெறியிலிருந்து ஒருசிறிதும் பிறழாது, தக்க சந்தர்ப்பங்களில் தாய்நாட்டினிடம் தங்களுக்குள்ள அன்பை, இளைஞர்கள் தெரிவித்துக்கொள்ளுவதையோ, சுயஆட்சி வேண்டுமென்று விரும்புவதையோ நான் ஒருசிறிதும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், பொருத்தமான காலத்திலும், பொருத்தமில்லாக் காலங்களிலுங்கூட, புரட்சிகரமான கோஷங்களைச் செய்துகொண்டு, பகைமையையும் வெறுப்பையும் வெளிப்படையாகக் காட்டும்போது, அவர்கள் ஹிம்சை வழியில் செல்லுகிறார்களென்றே நான் கருதுகிறேன். பிரிட்டிஷ் கொடியாகிய யூனியன் ஜாக்கை, "ஒழிக, ஒழிக" என்று கூச்சல் போடுவது, ஹிம்சை வழியில் செல்லுகிறார்கள் என்ற குற்றத்துக்கு அவர்களை இலக்காக்கவில்லையா?

2. மாணவர்களின் ஒழுக்கநடையை உருவாக்கும் முறையில், நமது பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் எதுவுமே செய்யப்படவில்லை. இந்த நிலையில், மாணவர்கள் தங்கள் கடமைகள் அனைத்தையும் புறக்கணித்துவிட்டு, தகுதி, யோக்கியதை முதலியவற்றையும் மறந்து, அந்தக் கணத்தில் தங்களுக்கு என்ன தோன்றுகிறதோ அதையே செய்து வருவார்களானால், அவர்களை அப்படி இருக்கட்டுமே யென்று தாங்கள் விட்டுவிடலாமா? நமது இளைஞர்களிடத்து அனுதாபமுள்ள எல்லோருக்கும் அவர்களிடையே மனிதத்தன்மையை உருவாக்க வேண்டியதே முதல் வேலையல்லவா?"

சமீபத்தில் வெளியான 'யங் இந்தியா' இதழொன்றில் மாணவர்கள் செய்கிற கோஷங்களைப்பற்றி நான் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். "யூனியன் ஜாக் ஒழிக" என்ற கோஷத்தில் ஹிம்சை தொனிக்கிற தென்பதை நான் முழுதும் ஒப்புக்கொள்ளுகிறேன். இது போக, ஆட்சேபத்திற்கிடமான இன்னும் எத்தனையோ கோஷங்கள் இப்போது வழக்கமாகிவிட்டன. கோஷம் செய்கிற தென்பது ஒரு நாகரிகமாகப் போய்விட்டது. அஹிம்சை நெறியை ஒரு சாதனமாகக் கருதுபவர்கள்கூட, இந்த விதமான கோஷங்களைச் செய்வது நல்லதல்ல; இதனால் தீமையே யன்றி நன்மை யொன்றும் இல்லை. ஒழுங்கான முறையிலே பயின்றுவந்த எந்த இளைஞனும் இந்த விதமான கோஷங்களைச் செய்ய மாட்டான். இப்படிக் கோஷம் செய்வது சத்தியாக்கிரகத்திற்கு முரணான செய்கையாகும். இனி, நமது அன்பர் கூறும் இரண்டாவது பிரசினையைச் சற்று பார்ப்போம். அதிகாரிகள் தாங்கள் செய்த செயலின் பயனையே அனுபவிக்கிறார்க ளென்ற உண்மையை அவர் தெரிந்துகொள்ளத் தவறிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். ஒழுக்கநடை இல்லாதிருப்பதற்குக் காரணம் பொறுப்பற்ற கல்விமுறைதான். இதற்குப் பரிகாரம் எனது அபிப்பிராயத்தையோ, உதவியையோ பெறுவ தன்று; ஆசிரியர்கள் மாணவர்களுடன் பொதுநோக்கோடு சேர்ந்து ஒத்துழைத்து, மாணவர்கள் செய்யும் முயற்சி வெற்றி பெறுமாறு உதவுவதே இந்த நிலைமைக்குப் பரிகாரமாகும். தங்கள் நாட்டின் சரித்திரம் எவ்வளவு பரிதாபகரமானதாய் இருக்கிறது என்பதை மாணவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்; பிற நாடுகள் எப்படி விடுதலை பெற்றன என்பதையும் படித்திருக்கிறார்கள். ஆகவே, சொந்த நாட்டின் விடுதலைக்காக அவர்கள் பாடுபடுவதை யாராலும் தடுக்க முடியாது. அந்த இலட்சியத்தை, அடைவதற்குரிய வழியிலே அவர்களைச் செலுத்தாவிட்டால், முதிராத தங்கள் அறிவைக்கொண்டு, ஏதோ ஒரு மார்க்கத்தில் அவர்கள் பாடு சென்றுகொண்டுதான் இருப்பார்கள். உண்மை எப்படி இருந்தபோதிலும், என்னைப் பொறுத்தவரையில், நான் அவர்களுக்குத் தக்கதொரு வழியைக் காட்டியிருக்கிறேன். அவர்களிடம் காணப்படும் ஊக்கத்துக்குக்

காரணம் நானென்றால், அது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும், அவர்கள் உற்சாகத்தைச் சரியான நெறியிலே செலுத்த நான் முயன்று வருகிறேன். நான் எவ்வளவு முயன்றபோதிலும் தவறான நெறியிலே அவர்கள் செல்லுவார்களானால், அதற்கு நான் பொறுப்பாளி அல்ல.

அமிர்தசரஸில் வெடிகுண்டு வீசிய அக்கிரமச் செயல், எல்லோரையும்விட எனக்கு அதிக வருத்தத்தை அளித்தது. ஒரு பாவமும் அறியாத சர்தார் பிரதாப் சிங் என்ற இளைஞர், இந்த விபத்தில் உயிர் துறந்தார். வெடிகுண்டு எறிந்தவருடைய இலக்கு, பிரதாப சிங் அன்று; இருந்தாலும், இவர் இறக்கும்படி ஆயிற்று. பாடசாலை இன்ஸ்பெக்டரா யிருந்த இந்த அன்பர் குறிப்பிட்டுள்ள மனிதத் தன்மை யில்லாமைதான் இவ்வித அக்கிரமச் செயல்களுக்குக் காரணம் என்பது நிச்சயம். 'மனிதத்தன்மை' என்ற சொல் அவ்வளவு பொருத்தமான சொல் அல்ல வென்று தோன்றுகிறது; மனிதத்தன்மையை ஒருநிலைப்படுத்துகிற 'நிதானம்' என்பதே இதற்குப் பொருத்தமான சொல்லாகும். கல்சா கல்லூரித் தலைவர்மீதுதான் இந்த வெடிகுண்டு உண்மையில் வீசப்பட்ட தென்றால், ஆழமாக வேரூன்றிப்போன ஒரு வியாதி இருக்கிற தென்பதையே இந்தச் சம்பவம் காட்டுகிறது. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கு மிடையே அன்பு என்ற தளை இல்லவே இல்லை. அரசாங்கத்தாருடைய பாடசாலையானாலும் சரி, அரசாங்கப் பண உதவியினால் நடைபெறுகிற பாடசாலையானாலும் சரி, அங்குள்ள ஆசிரியர்கள் இப்போதிருந்துவரும் அரசாங்கத்தினிடம் விசுவாசமா யிருப்பதாகச் சொல்லிக்கொள்ளுவதும், பிறருக்கு அந்த விசுவாசத்தைப் புகட்டுவதும் தங்கள் கடமை யென்று கருதுகிறார்கள். அவர்களுக்கு இவ்வித உணர்ச்சி இருப்பது உண்மைதானா வென்பது வேறு பிரசினை. இப்படி விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டுமென்ற உணர்ச்சி மாணவர்களுக்கு இல்லை. எனவே ஆத்திர முண்டாகி யிருக்கிறது. பொறுமை யிழந்து ஆத்திரப்படுகிற நிலையில், அடக்கம் என்ற அருங் குணத்தை மாணவர்கள் இழந்துவிடுகிறார்கள்; எனவே, அவர்கள் ஊக்க மெல்லாம், முற்றிலும் சரி யென்று சொல்லுவதற்கு இல்லாத வழிகளில் செல்லுகிறது. இந்தச் சம்பவங்களைத்

தையும் கண்டு, எனது முயற்சியை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. இருதரப்பிலும் ஹிம்சை மேலோங்கி வருகிறது; இந்த ஹிம்சை வழியை ஒழிக்க நான் செய்யும் முயற்சி வெற்றியடைந்தாலும், வெற்றியடையாமல் இம் முயற்சியிலே நான் பட்டொழிய நேர்ந்தாலும், எனது திட்டப்படி நான் செயலாற்றிக்கொண்டு போக வேண்டுமென்பதையே, இச் சம்பவங்கள் எனக்குத் தெரிவிக்கின்றன.

நம்பிக்கைத் துரோகம்

"எப்படிக் கருதினாலும், பாடசாலைகளும் கல்லூரிகளும் புனிதமான ஸ்தலங்களல்லவா? அங்கே புனிதத்தன்மையற்ற, இழிவான எந்தச் செயலுக்காவது இடமுண்டா? பாடசாலைகளும் கல்லூரிகளும் தொழிற்சாலைகள். அங்கே சிறந்த, பண்புவாய்ந்த மனிதத்தன்மை என்னும் அரிய பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது."

பம்பாய் ஆக்டிங் கவர்னர் ஸர் எர்னெஸ்ட் ஹாட்ஸனை, கல்லூரி அதிகாரிகள், கல்லூரிக்கு அழைத்திருந்தார்கள். அந்த அழைப்பிற்கு இசைந்து வந்திருந்த கவர்னரை, கௌரவம் வாய்ந்த விருந்தினர் என்ற முறையில், கல்லூரியைச் சுற்றிக் காண்பித்தார்கள்; அப்போது அவரை ஒருவன் கொல்ல முயன்றான். விருந்தினராக வந்திருந்தவரை, அந்தக் கல்லூரி மாணவனே கொல்ல முயன்றது, கொடிய பாதகமான செயலாகும். தன்னுடைய வீட்டுக்கு வந்த விருந்தினரை, வீட்டுக்காரனே கொலை செய்தால் எப்படியோ, அப்படியேதான் இதுவும். கொடிய பகைவனயிருப்பினும் சரியே, நம் வீட்டுக்கு விருந்தினனக வந்துவிட்டால், அவனுக்கு எவ்வித தீங்கும் நேராமல் அவனைப் பாதுகாப்பது நமது கடமை; இது உலக முழுதும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு சாதாரண உண்மை. எனவே, சாராம்சத்தில் பார்த்தால், இந்த மாணவன் செய்தது மோசடியான காரியம். இதற்கு அனுகூலமாகச் சொல்லுவதற்கு ஓர் அற்பக் காரணம்கூட அவன் பக்கம் இல்லை.

தெய்வாதீனமாக, கவர்னர் தப்பிவிட்டார். அவர் தப்பியது, இந்தியாவுக்கும், அதைவிட மாணவர் உலகுக்கும் நல்லதாயிற்று. இது சம்பந்தமாக, எர்னெஸ்ட் ஹாட்ஸனுக்கும், இந்திய மக்களுக்குமே எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஹிம்சையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள், மகிழ்ச்சியைத் தரத்தக்க இக் கொடுமையிலிருந்து, ஒரு நல்ல நீதியைக் கற்றுக்கொண்டால் நலமாயிருக்கும். மகிழ்ச்சி தரத்தக்க தென்று ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், கொலை செய்ய முயன்ற மாணவனைத் தவிர, வேறு யாருக்கும் இதனல் துன்பம் ஏற்படவில்லை.

அந்த மாணவன் ஏதேனும் துன்பம் அனுபவித்தானா? அனுபவித்து வருகிறானா? அல்லது தன்னை வீரன் என்று எண்ணி ஏமாந்து வருகிறானா? மாணவர்களுக் கெல்லாம் இந்தச் சம்பவம் ஓர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எப்படிக் கருதினாலும், பாடசாலைகளும் கல்லூரிகளும் புனிதமான ஸ்தலங்க ளல்லவா? அங்கே புனிதமற்ற, இழி வான எந்தச் செயலுக்காவது இடமுண்டா? பாடசாலை களும் கல்லூரிகளும் தொழிற்சாலைகள். அங்கே சிறந்த, பண்புவாய்ந்த மனிதத்தன்மை என்னும் அரிய பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது. குழந்தைகள் சிறந்த, பண்பு வாய்ந்த ஆடவராகவும் பெண்டிராகவும் வர வேண்டு மென்ற விருப்பத்தினாலேயே, பெற்றோர் தங்கள் குழந்தை களைக் கல்விநிலையங்களுக்கு அனுப்புகிறார்கள். கொலை செய்வதற்குக்கூடத் தயங்க மாட்டார்கள் என்பதாக மாண வர்கள் அனைவரையுமே சந்தேகிக்கக் கூடிய நிலைமை ஏற் படுமானால், அதைவிட நமது நாட்டுக்குத் தீமை பயப்பது வேறு உண்டா?

பகத் சிங்கிடம் காட்டும் பக்தி நம் நாட்டுக்குக் கணக்கி லடங்காத தீங்கு செய்திருக்கிறது; இன்னும் செய்து வரு கிறது. பகத் சிங்கின் குணத்தைப்பற்றி நான் பல இடங்க ளிலிருந்து நம்பத்தகுந்த முறையிலே அறிந்திருக்கிறேன். அவருக்கு விதித்த மரண தண்டனையைக் குறைப்பதற்குச் செய்த முயற்சிகளிலும் எனக்கு நெருங்கிய சம்பந்தமிருந் தது. இவற்றின் காரணமாக, கராச்சியில் பட்சபாதமின்றிக் கவனத்தோடு நிறைவேற்றிய தீர்மானத்தை நான் ஆத ரித்தேன். ஆனால், நான் செய்த எச்சரிக்கையைக் கவனி யாமல் காற்றோடு காற்றாகப் பறக்க விட்டுவிட்டார்கள் என் பதைக் காண எனக்கு வருத்தமா யிருக்கிறது. பகத் சிங் கின் செயலானது, பிறரும் பின்பற்றத் தகுந்தது என்று எண்ணி, பலர் கொண்டாடுகிறார்கள். இந்தச் செயலைப் பாராட்டி அறிவில்லாமல் கொண்டாடுகிற இடங்களி லெல் லாம், இறுதியாக ஏற்படும் பலன் தடித்தனமும் இழிவுமே யாகும்.

இந்த நாட்டில் காங்கிரஸ் இன்று சக்திவாய்ந்த ஒரு ஸ்தாபனமா யிருக்கிறது; ஆனால், காங்கிரஸ்காரர்கள் பகத் சிங் பக்தியிலே, எண்ணத்திலும் சரி, சொல்லிலும் சரி,

அல்லது செயலிலும் சரி, நம்பிக்கை வைத்து அதற்கு ஊக்கமளிப்பார்களாயின், காங்கிரஸினிடத்துப் பொது மக்களுக்கிருந்து வரும் ஈடுபாடு முழுதுமே இல்லாது போய் விடும் என்று நான் அவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். காங்கிரஸின் கொள்கையாகிய அஹிம்சை, சத்தியம் என்பவற்றில் பெரும்பான்மையோருக்குப் பற்றுதல் இல்லாவிட்டால், காங்கிரஸ் அமைப்புத் திட்டத்தின் முதல் விதியை அவர்கள் மாற்றிவிடட்டும். நடைமுறைக் கேற்ற கொள்கை என்பதற்கும் முடிவான சித்தாந்தம் என்பதற்குமுள்ள வேறுபாட்டை நாம் கொஞ்சம் உணர வேண்டும். நடைமுறைக் கேற்ற கொள்கையை மாற்றிக்கொள்ளலாம்; முடிவான சித்தாந்தத்தை மாற்றிக்கொள்ள முடியாது. எனினும் பின்பற்றுகிற காலங்களில் ஒன்றைப் போலவே மற்றொன்றும் வலிவுடையதாகும். ஆதலால், அஹிம்சையை நடைமுறைக்கேற்ற கொள்கையாகக் கொண்டவர்களும், தங்களது ஹிம்சைச் செயலை மறைக்க, காங்கிரஸ் அங்கத்தினர் பதவியை ஒரு போர்வையாக வைத்துக்கொள்ள லாகாது. அப்படி வைத்துக்கொண்டால் மிக்க இழிவாக நடந்துகொண்டார்களென்ற பழிச் சொல்லுக்கு அவர்கள் உள்ளாவார்கள். நாம் சுயராஜ்யத்தை நோக்கி முன்னேறுவதற்குப் பெருந் தடையாயிருப்பது, கொள்கையில் நமக்குப் போதிய நம்பிக்கை இல்லாமையே என்ற முடிவுக்குத்தான் கடைசியில் வர வேண்டியவனாயிருக்கிறேன். கொலை செய்ய முயன்ற இந்த முயற்சி பாக்கியவசமாக வீணாயிற்று என்று, இது நமது கண்ணைத் திறந்து நமக்கு நல்லறிவூட்டுக!

'இந்தக் கவர்னர் நமக்குச் செய்திருக்கும் கேடுகளைப் பாருங்கள். ஷோலாப்பூரிலே நடந்த கொடுமைகளை எண்ணியும், ஒரு இந்தியரைத் தள்ளிவிட்டு, அவர் வரவேண்டிய கவர்னர் பதவிக்கு இவர் வந்துவிட்டாரென்பதை எண்ணியுமே மேற்சொன்ன மாணவர் கவர்னரைச் சுட முயன்றதாகச் சொல்லவில்லையா' என்று படபடப்புள்ள சில இளைஞர்களும், வயதானவர்களுங்கூட, வாதம் செய்வார்கள். இதற்கு நான் சொல்லும் பதில் இதுவாகும்: 1920-ம் ஆண்டில், அஹிம்சையும் சத்தியமுமே காங்கிரஸ் கொள்கைகள் ஆகுமென்று நாம் முடிவு செய்தபோது,

இதை யெல்லாம் அறிந்தே அப்படி முடிவு செய்தோம். சர் எர்னெஸ்ட் ஹாட்ஸனைப்பற்றி அவரது கொடிய பகைவரும் சொல்ல முடியாத பாதகங்கள் உண்டு என்பதை அந்தச் சமயம் நாம் அறிந்திருந்தோம். அரசாங்கம் இழைத்த கொடுமைகளுக்கும், செய்த இழிவான செயல்களுக்கும் பதிலாக நாமும் அவற்றினும் அதிகமான ஹிம்சை பொருந்திய செயல்களைச் செய்வது சரியான எதிர்ப்பாகாது; ஆனல், ஹிம்சையை அஹிம்சையைக் கொண்டும் இழிவான அற்பத்தனத்தைச் சத்தியத்தைக்கொண்டும் எதிர்ப்பதே நமக்கு நன்மை பயப்பதாகுமென்று, 1920-ம் ஆண்டிலே, நெடுநேரம் வாதம் செய்தபிறகு, ஒரு திட்டமான முடிவிற்கு வந்து, தீர்மானம் செய்தோம். எவ்வளவுதான் கொடுமையாக ஆட்சி புரிந்தவர்களா யிருக்கட்டும்; இயல்பாகவே கெட்டவர்கள் அல்லர் அவர்கள்; இருப்பினும் நடைபெற்று வருகிற ஆட்சித் திட்டத்துக்கு இசைந்தோ, இசையாமலோ பலியாகி விட்டமையால் அவர்கள் கொடுமை செய்பவர்கள்தான் என்று காங்கிரஸ் கண்டது. இந்த ஆட்சித் திட்டமானது நம்மில் உயர்ந்தவர்க ளென்று சொல்லத் தக்கவர்களையுமே கெடுத்துவிட்ட தென்று கண்டோம். ஆகவே, இந்தத் திட்டத்தை வேரோடு களைந்து எறிவதற்காகவே அஹிம்சை நெறியைக் கடைப்பிடிப்ப தென்று வகுத்துக்கொண்டோம். முழு மனதோடு இதைப் பின்பற்றாதபோதிலும், அஹிம்சையையும் சத்தியத்தையும் கடைப்பிடித்து இந்தப் பத்து வருட காலமாக நமக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதிலிருந்து, நமது கொள்கை சாதாரண மக்களும் உணரும்படியான அளவுக்கு வெற்றி யடைந்து விட்ட தென்று தெரிகிறது; அன்றியும் இந்த அனுபவம் நாம் சுதந்திரம் என்கிற கரைக்கு மிக்க சமீபத்திலும் வந்துவிட்டோம் என்பதையும் காட்டுகிறது. ஸர் எர்னெஸ்ட் ஹாட்ஸன் செய்த காரியங்கள எவ்வளவு கேவலமாய் இருந்தால் என்ன, அது வேறு காரியம்; அதை வைத்துக் கொண்டு, கொலையும் நம்பிக்கைத் துரோகமும் கலந்த குற்றத்தைக் குறைத்துவிட முடியாது; மன்னித்துவிடவோ, முடியவே முடியாது. இந்தக் குற்றம் சில மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தினல் அதிகக் கேவலமாய்த்தான் தோன்

றுகிறது. இந்தியா வெங்குமுள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் கல்விநிலையங்களை இது சம்பந்தமாக ஓர் ஒழுங்குபடுத்த முன்வருவார்களென்று நம்புகிறேன். நம்பிக்கைத் துரோகமான இந்த அக்கிரமச் செயலைக் கண்டித்து, வரப்போகும் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமானது, காங்கிரஸின் கொள்கை இன்னது என்பதை மீண்டும் சந்தேகமறத் தெளிவாகச் சொல்ல வேண்டும்; அக் கூட்டத்தில் செய்யவேண்டிய அவசியமான காரியம் இது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

அரசாங்கத்தாருக்கும் அதிகாரிகளுக்கும் ஒரு வார்த்தை. பழிவாங்குதல், அடக்குமுறை ஆகியவற்ருல் ஒரு காரியமும் நடைபெருது. ஹிம்சையோடுகூடிய இந்த அக்கிரமச் செயல்கள் இனிவரப்போகும் சம்பவங்கள் எப்படியிருக்கும் என்பதையே காட்டுகின்றன. அவ்வளவுதான். உடனடியாகக் குற்றம் செய்தவர்களை அவர்கள் தண்டிக்கலாம். ஆனல், வியாதியைக் குணப்படுத்த வேண்டுமென்ருல், அதன் அடிப்படையான காரணத்தைக் கண்டுபிடித்து அதைப் போக்க வேண்டும்; அப்படியில்லாமல் குணப்படுத்துதல் என்பது முடியாத காரியம். அவ்விதம் குணப்படுத்துவதற்கு வேண்டிய விருப்பமோ, அல்லது தைரியமோ இல்லையென்ருல், அந்த வேலையைத் தேச மக்களிடமாவது விட்டுவிடட்டும். அடக்குமுறை, பழிக்குப்பழி வாங்குவது என்ற நிலைகளைக் கடந்து, இந்திய மக்கள் முன்னேறிச் சென்றுவிட்டார்கள். தங்களுக்குள் இருக்கிற ஹிம்சாவாதிகளை இந்திய மக்கள் தங்களுக் கேற்ற முறையில் சரியானபடி தண்டிப்பார்கள். சட்டத்தின் நோக்கத்தைவிட அதிகமாக அடக்குமுறையை ஒரு அரசாங்கம் கையாண்டால், கொடுமை புரியும் ஆத்திரத்தை மென்மேலும் அது வளர்த்துவிடுகிறது; இதனல் அஹிம்சாவாதிகளின் பாடு ஏற்கனவே இருப்பதைவிடக் கடினமாய்ப் போய்விடுகிறது.

மாணவர்களும் வேலைநிறுத்தமும்

“எந்த விதமான அபிப்பிராயங்களைக் கொள்ளவும் கொண்ட அபிப்பிராயங்களை வெளியிடவும் மாணவர்களுக்குப் பூரணமான சுதந்திரம் இருக்க வேண்டும். எந்த அரசியல் கட்சியை ஆதரிக்க விரும்பினாலும், வெளிப்படையாக அப்படி ஆதரிக்க மாணவர்களுக்குத் தாராளமாக உரிமை யுண்டு. ஆயினும் கல்வி பயின்று வரும்போது, செயலில் ஈடுபடுகிற சுதந்திரம் மாணவர்களுக்கு அவசியமில்லை யென்று நான் கருதுகிறேன்.”

பெங்களூரைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஒருவர் பின் வருமாறு எழுதுகிறார்:

“ ‘ஹரிஜன்’ பத்திரிகையில் தாங்கள் எழுதிய *கட்டுரையைப் படித்தேன். அந்தமான் தினம், † அபட்வார் தினம் போன்ற தினங்களில் நடைபெறும் வேலைநிறுத்தங்களில் மாணவர்கள் கலந்துகொள்ளுவதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன என்பதைத் தயவுசெய்து தெரிவிக்க வேண்டுகிறேன்.”

பேச்சுரிமையும் இயக்கங்களில் ஈடுபடுகிற உரிமையும் மாணவர்களுக்கு இருக்க வேண்டும் என்றும், இவற்றுக்கு எவ்விதத் தடையும் இருக்கக் கூடாதென்றும் நான் சொல்லி வருபவன்; ஆயினும், மாணவர்கள் அரசியல் வேலைநிறுத்தங்களில் கலந்துகொள்ளுவதையும், கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்வதையும் என்னால் ஆதரித்துப் பேச முடியவில்லை; எந்த விதமான அபிப்பிராயங்களைக் கொள்ளவும் கொண்ட அபிப்பிராயங்களை வெளியிடவும் மாணவர்களுக்குப் பூரணமான சுதந்திரம் இருக்க வேண்டும். எந்த அரசியல் கட்சியை ஆதரிக்க விரும்பினாலும், வெளிப்படையாக அப்படி ஆதரிக்க, மாணவர்களுக்குத் தாராளமாக உரிமை யுண்டு. ஆயினும் கல்வி பயின்று வரும்போது செயலில் ஈடுபடுகிற சுதந்திரம் மாணவர்களுக்கு அவசிய மில்லை யென்று நான் கருதுகிறேன். ஒரு மாணவன் அரசியல்வாதியைப்போலச் செயலில் ஈடுபட்டுக் கொண்டு, அதே சமயத்தில் கல்வியையும் பயின்றுவர முடியாது. மகத்தான தேசியக் கொந்தளிப்பு ஏற்படுகிற சமயங்களில், மாணவர்கள் செயலில் ஈடுபடலாமா, வேண்டாமா என்பதுபற்றித் திட்டமாக வரையறுத்துச் சொல்

---

* ஷை கட்டுரையில் காந்திஜி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

லுவது கடினம். எனவே, கொந்தளிப்புக் காலங்களில் மாணவர்கள் வேலைநிறுத்தம் செய்யலாகாது. செய்ய விரும் பின், அது பூரணமானதொரு வேலைநிறுத்தமாக இருக்க வேண்டும்; அதாவது, கல்வி கற்பதையே அவர்கள் அறவே நிறுத்திக்கொள்ள வேண்டும். இதனால் விதிவிலக்குபோலத் தோன்றுகிற ஒரு காரியம் உண்மையிலே விதிவிலக்கு அல்ல என்று தெரிய வரும்.

இந்த நிருபர் சொல்லுவதைப்போன்றதொரு பிரசினை காங்கிரஸ் மாகாணத்தில் ஏற்பட நியாயமில்லை. ஏனெனில், சிறந்த மாணவர்களின் மனப்போக்குக்கு ஒவ்வாத, அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத கட்டுப்பாடுகள் அங்கே இருக்க மாட்டா. மாணவர்களில் பெரும்பான்மையோர் காங்கிரஸ் கொள்கையை யுடையவர்கள்; அப்படித்தான் இருக்கவும் வேண்டும். மந்திரி சபைக்கு உபத்திரவமா

"மாணவர்களின் மனதைக் கூண்டில் அடைப்பதுபோல் அடைத்து வைக்க வேண்டாம்; சொல்லப்போனால் ஆசிரியர்களுக்குமே அப்படித்தான். தாங்களோ, அரசாங்கத்தாரோ எதை மிகச் சிறந்த வழி யென்று கருது கிறார்க ளென்பதை மட்டும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்துக்காட்ட லாம். அப்படிக் காட்டிய பின்னர், மாணவர்களின் எண்ணத்தையும் உணர்ச்சியையும் அடக்க அவர்களுக்கு உரிமை யில்லை. இப்படி நான் சொல்லுவதனால், மாணவர்களை எவ்விதக் கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்தலா காதென்று கொள்ளக் கூடாது. கட்டுப்பாடு இல்லையேல் எந்தப் பள்ளிக் கூடமும் நடைபெறாது. ஆனால், மாணவர்கள் சகலஅம்சங்களிலும் வளர்ச்சி பெறுவதற்குத் தடங்கலாகத் தடைகளை ஏற்படுத்தக் கூடாது; இப்படி ஏற் படுத்தும் தடைகளைக் கட்டுப்பாடென்று மதிக்க இடமில்லை. மாணவர் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்று உளவு பார்க்கிற ஏற் பாட்டுக்கு அவர்கள் அடங்கியிருக்க வேண்டிய நிலைமை யிருப்பின் அவர்க ளால் எவ்வாறு சகலத் துறைகளிலும் வளர்ச்சி யடைய முடியும்? உண்மை யென்ன வென்றால், நாட்டு நலனுக்கு விரோதமான மனப்பாங்கு அமைந் துள்ள அரசியல்முறையில் சிக்குண்டு மாணவர்கள் இதுவரை தத்தளித்து வந்திருக்கிறார்கள்; இந்த மனப்பாங்கு வெளிப்படையாகத் தெரியாவிட்டா லும், மிக்க நுட்பமான முறையில் இருந்து வந்திருக்கிறது. தேசிய உணர்ச்சியை வளர்ப்பது குற்றமான காரியமல்ல; அது போற்றத் தகுந்த குணமென்பதை மாணவர்கள் தெரிந்துகொள்ளுவது அவசியம்."

† வட நாட்டிலே, சில நகரங்களில், ஹிந்துக்கள் வசிக்கிற பகுதிகளின் மத்தியிலும் அவர்களின் வீடுகளை யடுத்தும் கசாப்புக் கடைகள் அமைக்கப் பட்டிருந்தன. இவற்றை மாற்றித் தனியிடங்களிலே வைக்க வேண்டு மென்று ஒரு கிளர்ச்சி நடந்தது. இது காரணமாகக் கொண்டாடின வேலை நிறுத்த தினமே 'அபட்வார் தினம்'. அபட்வார்-கசாப்புக் கடை.

யிருக்கக் கூடிய எவ்விதக் காரியங்களையும் மாணவர்கள் செய்யலாகாது. வேலைநிறுத்தம் செய்ய விரும்பினால் மந்திரி சபையார் விருப்பத்தையொட்டி வேலைநிறுத்தம் செய்ய வேண்டும். காங்கிரஸ் பதவியில் இல்லாமல் இருந்து, அப் போதைய அரசாங்கத்துடன் ஒருவேளை சாத்விகப் போர் தொடுக்க எண்ணி அறிவித்தால் மட்டுமே, காங்கிரஸ், மாணவர்களைவேலைநிறுத்தம் செய்யச் சொல்லுதல் கூடும்; அதைத் தவிர வேறு சந்தர்ப்பங்கள் ஏற்படு மென்று எனக்குத் தோன்றவில்லை. அப்படியே அரசாங்கத்தின் மீது போர் தொடுக்க நேர்ந்தாலும், படிப்பை நிறுத்தி விட்டு வேலைநிறுத்தம் செய்யும்படி மாணவர்களை முதலில் அழைத்தல் கூடாது. அழைத்தால், அரசியல் அறிவும் செயலும் சூனியம் என்றுதான் ஏற்படும். வேலைநிறுத்தம் போன்ற தொரு அரசியல் ஆர்ப்பாட்டங்களில் காங்கிர ஸுடன் பொதுஜனங்கள் ஒத்துழைக்கத் தயாராய் இருப் பின், மாணவர்களது ஒத்துழைப்பை நாடவேண்டிய அவசியமில்லை; வேறு வழியில்லை யென்ற நிலை ஏற்பட்டால் ஒழிய, மாணவர்களைப் போராட்டத்தில் கலந்துகொள்ளும் படி கேட்கலாகாது. சென்ற போராட்டத்தில் மாணவர் களை நாம் முதலில் வெளிவரும்படி அழைக்கவில்லை; கடைசியாகத்தான் அவர்களை அழைத்தோ மென்று எனக்கு ஞாபகம்; அப்போதும், கல்லூரி மாணவர்களை மட்டுமே கல்லூரியை விட்டுவிடும்படி யழைத்தோம்.

இலக்கியத்தில் சாக்கடை

"மேலே சொல்லிவந்த சீர்திருத்தம் மிக மிகத் தேவையானது. மாணவர்கள் ஒழுங்கான முறையில் வேலைநிறுத்தம் செய்வார்களாயின், இச் சீர்திருத்தத்தை எளிதில் சாதித்துவிடலாம். இந்த வேலைநிறுத்தம் தடபுடலாக இராமல் அமைதியாக நடைபெற வேண்டும். ஆட்சேபத்திற்கிடமான இலக்கியத்தைப் படித்து எழுத வேண்டிய பரீட்சை எங்களுக்கு வேண்டா மென்று பரீட்சையைப் பகிஷ்காரம் செய்யப்போவதாக மாணவர்கள் அறிவிக்க வேண்டும்."

திருவாங்கூர் உயர்தரப் பாடசாலை யொன்றின் தலைமை ஆசிரியர் எழுதுகிறார்:

"தற்காலம் திருவாங்கூர் அரசியல் நிலைமை விரும்பத்தக்கதாக இல்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள். உயர்தரப் பள்ளி மாணவர்களுமே வேலைநிறுத்தம் செய்துவருகிறார்கள். மற்ற மாணவர்களையும் பள்ளிக்கூடம் போகக்கூடா தென்று மறியல் செய்கிறார்கள். கலாசாலை மாணவர்களும் பள்ளிப் பிள்ளைகளும் வேலைநிறுத்தம் செய்வதைத் தாங்கள் ஆதரிப்பதாக' இவர்களிடையே ஓர் அபிப்பிராயம் இருந்து வருகிறது. இந்த விஷயத்தில் தாங்கள் என்ன எண்ணுகிறீர்க ளென்பதை மாணவர்களுக்குத் தெரிவித்தால், நன்றா யிருக்கு மென்று நினைக்கிறேன். இப்போது ஏற்பட்டுள்ள நிலைமையைத் தெளிவாக்க அது உதவியாய் இருக்கும்."

சாதாரணமான நிலைமையில், கலாசாலை மாணவர்களும் பள்ளிப் பிள்ளைகளும் வேலைநிறுத்தம் செய்வது தவறு என்றும், மிக மிக அரிதான சந்தர்ப்பங்களில்தான் அவர்கள் வேலைநிறுத்தம் செய்வது நியாயமா யிருக்கும் என்றும் நான் முன்னமே பல தரம் எழுதி இருக்கிறேன். அரசியல் ஆர்ப்பாட்டங்களிலும், அரசியல் கட்சிச் சண்டைகளிலும் கலாசாலை மாணவர்களும் பள்ளிப் பிள்ளைகளும் கலந்துகொள்ளுவது முற்றிலும் தவறென்றே நான் நினைக்கிறேன். இவ்விதக் கிளர்ச்சிகள் அவர்களைக் கருத்தோடு படிக்க முடியாதபடி செய்துவிடுவதுடன், வருங்காலத்தில் சிறந்த மனிதர்களாக விளங்கி, தக்க திடமான வேலையைச் செய்வதற்கும் தகுதியற்றவர்களாயும் செய்துவிடுகிறது. இருந்தபோதிலும், கலாசாலை மாணவர்களும் ஒரே ஒரு விஷயத்துக்காக வேலைநிறுத்தம் செய்வது கடமையாக இருக்கிறது. லாகூரிலுள்ள இளைஞர் பொதுநலச் சங்கத்தின் கௌரவ காரியதரிசியிட மிருந்து எனக்கு ஒரு

கடிதம் வந்திருக்கிறது. அந்தக் கடிதத்தில் அவர் பல சர்வகலாசாலைகள் வெளியிட்டிருக்கிற பாடப் புத்தகங்களில், காம உணர்ச்சியை யூட்டும் ஆபாசமான பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன வென்று சொல்லி, வேண்டிய அளவு உதாரணங்களையும் தந்திருக்கிறார். அந்தப் பகுதிகளைப் படிப்பதற்கே அருவருப்பா யிருக்கிறது. மாணவர்கள் படிப்பதற்கென்றே வெளியிட்ட பாடப் புத்தகங்களில் அவை அடங்கியிருந்தபோதிலும், அவற்றின் சாரத்தை இங்கே எடுத்தெழுதி, கட்டுரையை மாசுபடுத்த எனக்கு விருப்பமில்லை. நான் படித்திருக்கிற இலக்கியத்தில் எங்கும் இந்த மாதிரி அருவருக்கத்தகுந்த இலக்கியச் சாக்கடையை இதுவரை நான் கண்டதில்லை. பாரபட்சமின்றி, சம்ஸ்கிருதம், பாரசீகம், ஹிந்தி ஆகிய மொழிகளிலிருந்து சில பகுதிகளை அந்தக் காரியதரிசி எடுத்துத் தந்திருக்கிறார். இம் மாதிரி ஆபாசமான இலக்கியப் பகுதிகளை வார்தாவிலுள்ள மஹிலா ஆசிரமப் பெண்களே முதன்முதலில் எனது கவனத்துக்குக் கொண்டுவந்தார்கள். டெஹராடூனில் கன்யா குருகுலத்தில் படித்துவருகிற எனது மருமகளும் சமீபத்தில் இதில் எனது கவனத்தைச் செலுத்தும்படி செய்தாள். அவள் எழுதப் படிக்கத் தெரியாதவள் அல்லள்; ஆயினும், அவளுக்கு வைத்திருக்கும் பாடப் புத்தகங்கள் சிலவற்றில் இருக்கும் ஆபாசத்தைப் போல் வேறு எந்த இலக்கியத்திலும் அவள் படித்ததில்லையாம். இந்த ஆபாசங்களைப் போக்க உதவி செய்ய வேண்டுமென்று அவள் என்னை வேண்டிக்கொண்டாள். இந்த விஷயத்தைப்பற்றி ஹிந்தி சாஹித்திய சம்மேளனத்தாரிடம் சொல்லி, வேண்டுவன செய்யத் தூண்டிவருகிறேன். ஆனாலும், பெரிய ஸ்தாபனங்கள் மெதுவாகத் தானே இயங்கும் இயல்புடையன? எந்த விஷயத்திலும் ஏகபோக உரிமையைச் சிலரே பெற்றுவிடுகிறார்கள். புத்தகம் எழுதுகிற ஆசிரியர்கள், வெளியிடுவோர் ஆகியவர்களின் சுயநலம் மேலோங்கி, சீர்திருத்தத்திற்குத் தடையாக நிற்கிறது. இலக்கியம் என்கிற தெய்வத்துக்கு விசேஷ தூப தீப ஆராதனை செய்யவேண்டி வருகிறது. 'பரீட்சை தேறுமற்போனாலும் போகிறது. இந்த ஆபாசமான, கொச்சையான, சிற்றின்பப் பகுதிகளை ஒதுக்கிவிடப்

போகிறேன்' என்று எனது மருமகள் சொன்னாள். நானும் அதை உடனே ஒப்புக்கொண்டேன். இது, தனித்த முறையில் அவள் செய்கிற சாத்விக வேலைநிறுத்த மென்று சொல்லுவேன். அவளைப் பொறுத்தவரையில், இது முற்றிலும் பயன்தரக் கூடிய நல்ல வேலைநிறுத்தம் தான். ஆனால், இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில், மாண வர்களும் பள்ளிச் சிறுவர்களும் ஒன்றுசேர்ந்து வேலை நிறுத்தம் செய்வது மிக்க நியாயமானது. வேலைநிறுத்தம் செய்வதோடு அமையாமல், இவ்வளவு ஆபாசமான இலக் கியச் சாக்கடையைத் தங்கள்மீது கட்டாயமாகச் சுமத்தக் கூடா தென்று கிளர்ச்சி செய்வதும் அவர்கள் கடமை யென்று எனக்குப் படுகிறது.

ஒருவர் தாம் விரும்பியதைப் படிக்கச் சுதந்திரம் இருக்கிற தென்று சொல்லுவது ஒரு விஷயம். ஆனால், இளைஞர்கள் மனதிலே இப்படிப்பட்ட இலக்கியத்தைப் பலவந்தமாகப் புகுத்துவது முற்றிலும் வேறு விஷயம். காலப்போக்கில் தேவையான பல விஷயங்களை இளை ஞர்கள் தெரிந்துகொள்ளாமல் முடியாதுதான்; ஆனால், வேண்டாத விஷயங்களையெல்லாம் முன்கூட்டியே அறிந்து விட வேண்டும் என்ற தவறான ஆவலை, இந்த இலக்கியம் கிளறுகிறது. பெரிய சர்வ கலாசாலைகளின் அங்கீகாரத் தோடு வெளிவரும் இந்த ஆபாசக் குப்பை, ஏதோ குற்றம் அற்ற இலக்கியம் என்ற உருவத்தில் காட்சியளிப் பதனால், மேற்சொன்ன கேடு இன்னும் அதிகமாகிறது.

மேலே சொல்லிவந்த சீர்திருத்தம் மிக மிகத் தேவை யானது. மாணவர்கள் ஒழுங்கான முறையில் வேலை நிறுத்தம் செய்வார்களாயின், இச் சீர்திருத்தத்தை எளிதில் சாதித்துவிடலாம். இந்த வேலைநிறுத்தம் தடபுடலாக இராமல் அமைதியாக நடைபெற வேண்டும். ஆட்சேபத் திற்கிடமான இலக்கியத்தைப் படித்து எழுதவேண்டிய பரீட்சை எங்களுக்கு வேண்டா மென்று பரீட்சையைப் பகிஷ்காரம் செய்யப் போவதாக மாணவர்கள் அறிவிக்க வேண்டும். இப்படிப் பகிஷ்கரிப்பது, தூய மனமுடைய எல்லா மாணவர்களின் கடமையுந்தான்.

லாகூர் இளைஞர் பொதுநலச் சங்கத்தார் ஆட்சேபத் திற்கிடமான வகுப்புப் புத்தகங்களை, அல்லது இலக்கியப்

பகுதிகளை நீக்குவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி, காங்கிரஸ் மந்திரிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டு மென்று எனக்கு எழுதுகிறார்கள். காங்கிரஸ் மந்திரிகளுக்கு மட்டும் அல்ல, இதர மாகாணங்களிலுள்ள கல்வி மந்திரிகளுக்குமே, இதன்மூலம் முழுமனத்தோடு என் வேண்டுகோளை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மாணவர்களின் உள்ளம் ஆரோக்கியமான முறையில் வளர வேண்டு மென்பதில் எல்லோருக்குமே அக்கறை உண்டல்லவா?

இது அஹிம்சையா ?

"பாடசாலையிலுள்ள ஆசிரியர்களிடத்து நாம் மதிப்பு வைக்கா விட்டால், அந்தப் பாடசாலையில் படிக்க வேண்டாம் என்பது நியாயம். ஆனால், ஆசிரியர்களை இழிவுபடுத்துவதையும், அவமரியாதை செய்வதையும் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். இம்மாதிரி நடத்தை பெருந்தன்மைக்கு முரணானது. பெருந்தன்மைக்கு முரணானது எதுவும் ஹிம்சையே யாகும்."

அண்ணாமலை பல்கலைக் கழகத்து ஆசிரிய ரொருவர் எழுதியுள்ள கடிதத்தில், ஒரு பகுதியைக் கீழே கொடுத்திருக்கிறேன் :

"சென்ற நவம்பர் மாதத்தில், சர்வகலாசாலை மாணவர் சங்க காரியதரிசியா யிருந்த மாணவரை, ஆறு மாணவர்கள் ஒன்றுகூடித் தாக்கினார்கள். சர்வகலாசாலை வைஸ்சான்ஸலரான கனம் சீனிவாச சாஸ்திரியார் இதுபற்றிக் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டார். தாக்கின மாணவர்களுக்குத் தலைவனா யிருந்தவனைச் சர்வகலாசாலையி லிருந்து வெளியேற்றினார். மற்ற மாணவர்களை அந்த வருஷம் முடியும்வரை கல்லூரிக்கு வரக்கூடா தென்று விலக்கிவைத்தார்.

"இவ்விதம் தண்டிக்கப்பட்ட மாணவர்களின் நண்பர்கள் சிலர் வகுப்புகளுக்குச் செல்லாது வேலைநிறுத்தம் செய்ய விரும்பினார்கள். மறு நாள் மற்ற மாணவர்களோடு கலந்து பேசி, வைஸ்சான்ஸலர் விதித்த தண்டனையைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக, வேலைநிறுத்தம் செய்ய வேண்டு மென்று தூண்ட முயன்றார்கள். ஆனால், அவர்கள் செய்த முயற்சி வெற்றிபெற வில்லை. அந்த ஆறு மாணவர்களுக்கு அளித்த தண்டனை நியாயமானது என்று பெரும்பாலான மாணவர்கள் கருதியபடியால், அவர்களுக்காக அனுதாபம் காட்டுவதிலோ, வேலை நிறுத்தம் செய்வதிலோ சேர்ந்துகொள்ள மறுத்துவிட்டார்கள்.

"இதற்கு அடுத்த நாள், மாணவர்களிலே சுமார் ஐந்திலொரு பகுதியினர் வகுப்புக்குச் செல்லவில்லை ; எஞ்சிய நான்கு பகுதியினர், வழக்கம்போல் வகுப்புகளுக்குச் சென்று, படித்து வந்தார்கள். கலாசாலை மாணவர்களின் எண்ணிக்கை 800 ஆகும்.

"கலாசாலையி லிருந்து அடுத்தபடியாக வெளியேற்றப்பட்ட மாணவன், மாணவர் இல்லத்திற்குள் நுழைந்து, வேலைநிறுத்தத்தை நடத்தினான். வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற வில்லை யென்று கண்டு, மாலையில் வேறு வழிகளைக் கையாண்டான் ; உதாரணமாக, மாணவர் இல்லத்திலிருந்து வெளிச் செல்லும் நான்கு முக்கிய வழிகளிலே குறுக்கு வசமாய்ப் படுத்துக்கொண்டான் ; சில வாசல்களைப் பூட்டி வைத்தான் ; பயமுறுத்தினால் இளம் பிள்ளைகள் பயப்படுவார்க ளல்லவா ? இவை போன்ற முறைகளைக் கையாண்டான். எஞ்சிய மாணவர்கள் பிற்பகலில் வெளியே செல்ல முயன்றபோது, இல்லத்தின் வாசல்களில் ஐம்பது, அறுபது பேராக நின்றுகொண்டு தடுத்தார்கள்.

"மாணவர் இல்லத்தின் வாசல்கள் யாவும் மூடியிருப்பது கண்டு, அதிகாரிகள் வேலி அடைப்பை ஒரு பக்கத்தில் திறந்துவிட விரும்பினார்கள். வேலைக்காரர்களைக்கொண்டு கலாசாலை அதிகாரிகள் வேலியை நீக்க ஆரம்பித்ததும், நீக்கிவிட்ட பாகத்தின் வழியாக மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லுவதை வேலைநிறுத்தக்காரர்கள் தடுத்தார்கள். மறியல் செய்கிறவர்களை அப்படியே தூக்கிக்கொண்டு போய், வேறிடத்தில் வைத்துவிடுவதென்று அதிகாரிகள் முயன்றார்கள்; ஆனால், அது முடியவில்லை. நிலைமை சமாளிக்க முடியாமற்போகவே, விலக்கப்பட்ட மாணவனே தொந்தரவுக்கெல்லாம் மூலகாரணம் என்று கண்டு, அவனை அங்கிருந்து நீக்கிவிடும் பொருட்டு, அதிகாரிகள் போலீஸாரை வரவழைத்தார்கள்; போலீஸார் வந்து அவனை அப்புறப்படுத்தினார்கள். இந்தச் செயலானது, வேலைநிறுத்தத்தில் இதுவரையில் அனுதாபம் காட்டாதிருந்த சில மாணவர்களுக்கு இயல்பாகவே கோபமூட்டிவிட்டது. எனவே, அவர்களும் வேலைநிறுத்தக்காரர்களிடம் அனுதாபம் காட்டத் தொடங்கினார்கள். மறு நாள் காலையில் மாணவர் இல்லத்திற்குச் சுற்றிலுமிருந்த வேலி முழுவதுமே நீக்கப்பட்டிருப்பது கண்டு, வேலைநிறுத்தக்காரர்கள் கல்லூரிக்குள் நுழைந்து, மாடிக்குச் செல்லும் பாதைகளிலும் வகுப்புக்குள் நுழையும் வாசல்களிலும் குறுக்கே படுத்துக்கொண்டு, மறியல் செய்தார்கள். அதன்மேல் நவம்பர் 29-ம் தேதியிலிருந்து ஜனவரி 16-ம் தேதிவரை, ஒன்றரை மாதத்திற்கு நீண்ட விடுமுறையளித்து, கனம் சீனிவாச சாஸ்திரியார் கலாசாலையை மூடிவிட்டார். பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கைவிட்டு, அதன்மூலம் விடுமுறை முடிந்து படிக்கவரும் போது, முன்னையைவிட மகிழ்ச்சியோடும் திருந்திய மனப்பாங்கோடும் வரும்படி மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

"கல்லூரி திறந்தது. ஆனால், வேலைநிறுத்தக்காரர்கள்,............ருடைய ஆலோசனையின் பேரில் முன்னையைவிட அதிகச் சுறுசுறுப்பாயிருந்தார்கள். அவர்கள் ராஜாஜியிடம் போனார்களென்றும் தெரிகிறது. ஆனால், தாம் இதில் தலையிட முடியாதென்றும், சர்வகலாசாலை வைஸ் சான்சிலருக்குக் கீழ்ப்படிவதே முறையென்றும் ராஜாஜி சொல்லிவிட்டார். அன்றியும், வேலைநிறுத்தத்தை விட்டுவிட்டு, வகுப்புக்குப் போய் எப்போதும்போல் படிப்பில் ஈடுபடும்படி புத்திமதி கூறி, வைஸ் சான்சிலர் மூலமாக வேலைநிறுத்தக்காரர்களுக்கு அவர் இரண்டு தந்தியும் அடித்தார். இந்தத் தந்திகள் வந்ததனால் பெரும்பாலான மாணவர்களிடையே நல்ல பலன் ஏற்பட்டாலும், வேலைநிறுத்தக்காரர்கள் பிடிவாதமாகவே இருந்தார்கள்.

"மறியல் இன்னும் நடந்து வருகிறது, அது, அனேகமாக, நெடுநாளைய நோய்போலப் பற்றிவிட்டது. வேலைநிறுத்தக்காரர்கள் சுமார் 35 அல்லது 45 பேர் இருக்கலாம். அவர்களை ஆதரிப்பவர்கள் சுமார் 50 பேர் இருக்கிறார்கள். இந்த ஐம்பது பேரும் வெளிப்படையாக வந்து மறியல் செய்ய அஞ்சுகிறார்கள். ஆனால், உள்ளே இருந்துகொண்டு கிளர்ச்சியைத் தூண்டிவிடுகிறார்கள். ஒவ்வொரு நாளும், வேலைநிறுத்தக்காரர்கள் கூட்டமாக வந்து, வகுப்புகளின் வாசல்களிலும் மாடிக்குச்

செல்லும் பாதைகளிலும் படுத்துக்கொண்டு, மாணவர்கள் வகுப்புக ளுக்கு நுழைய முடியாதபடி தடுக்கிறார்கள். ஆனால், இதற்கேற்றபடி ஆசிரியர்களும் தினமொரு இடமாகச் சென்று, மறியல் செய்பவர்கள் அங்கு வந்து சேருமுன் பாடங்களை நடத்துகிறார்கள். மணிக்கு மணி, வகுப்புகள் நடைபெறுகிற இடம் மாறுகிறது. சில சமயத்தில் வகுப் புகள் திறந்த வெளியில் நடக்கின்றன; வாசல்களில் படுத்துக்கொண்டு வழியை அடைப்பதுபோல் இங்கே அடைக்க முடியாதல்லவா? இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில், வேலைநிறுத்தக்காரர்கள் கூச்சல்போட்டு வகுப்புகள் நடைபெறாதபடி கலவரம் செய்கிறார்கள்; சில சமயங்களில் ஆசிரியர்களிடம் பாடம் கேட்க வந்திருக்கிற மாணவர்களுக்கு அவர் களே பிரசங்கம் செய்யத் தொடங்கிவிடுகிறார்கள்.

"நேற்று, இதில் ஒரு புதிய நிலை ஏற்பட்டது. வேலைநிறுத்தக் காரர்கள் வகுப்புக்குள் வந்து, தரையில் புரண்டு, பெருங் கூச்சல் போட்டார்கள். ஆசிரியர் வருவதற்குமுன் சில வேலைநிறுத்தக்காரர்கள் வகுப்புக்குள் வந்து கரும்பலகையில் எழுத ஆரம்பித்தார்க ளென்றும் கேள்விப்பட்டேன். ஆசிரியர்களில் யாராவது சாத்விக சுபாவமுள்ள வரா யிருந்தால், அவரையும் சில வேலைநிறுத்தக்காரர்கள் பயமுறுத்த முயல்கிறார்கள். வாஸ்தவத்தில் தங்கள் கோரிக்கைகளுக்கு இசையா விட்டால் ஹிம்சித்து ரத்தம் சிந்தும்படி செய்துவிடுவோம் என்று, கலா சாலை வைஸ்சான்சிலரை அவர்கள் பயமுறுத்தினார்கள்.

"இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும். வெளி ஆட்களிடமிருந்து வேலைநிறுத்தக்காரர் களுக்கு உதவி கிடைக்கிறது. காலிகளை அமர்த்தி, கலாசாலைக் கட்டி டங்களில் நுழைந்து, வேலை நடக்காத முறையில் தொந்தரவு கொடுக்கும் படி அவர்கள் செய்கிறார்கள். உண்மையாகவே மாணவரல்லாத இவ் விதக் காலிகள் பலர், தாழ்வாரங்களிலும் வகுப்பு அறைகளுக்குப் பக்கத் திலும் திரிவதை நானே பார்த்திருக்கிறேன். இதனோடு நில்லாமல் மாண வர்கள் வைஸ்சான்சிலரை இழிவான பாஷையிலும் பேசுகிறார்கள்.

"இப்போது நான் சொல்ல விரும்பியது இதுதான்: இந்தச் செயல்கள் யாவும் சத்தியத்தையும் அஹிம்சையையும் அடிப்படையாகக் கொண்டவை யல்ல, சத்தியாக்கிரக உணர்ச்சிக்கு விரோதமானவை என்று ஆசிரியர்களாகிய நாங்களும் மாணவர்களில் மிகப் பலரும் கருதுகிறோம்.

"இது அஹிம்சை நெறிதான் என்று வேலைநிறுத்தம் செய்யும் மாணவர் சிலர் பிடிவாதம் செய்கிறார்க ளென்பதாக நான் அறிகிறேன். இது ஹிம்சைதான், அஹிம்சை அல்ல வென்று மகாத்மாஜி சொல்லி விட்டால், இந்தச் செயலை உடனே நிறுத்திக்கொள்ளுவதாகவும் அவர்கள் சொல்லுகிறார்கள்."

இந்தக் கடிதம், 1939-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 17-ம் தேதி காகா சாஹெப் கலேல்காருக்கு எழுதிய கடிதம். எழுதிய ஆசிரியருக்குக் கலேல்காரை நன்றாய்த் தெரியும்.

அண்ணுமலை சர்வகலாசாலை மாணவர்கள் நடந்துகொண்ட முறை அஹிம்சை முறையாகுமா வென்று காகா சாஹெப்பினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிற பகுதியையும், இந்தியாவில் ஆங்காங்கு மாணவர்களிடையே ஒழுங்கு மீறிய இந்த மனப்பாங்கு அதிகமாகக் காணப்படுவதற்கு வருத்தம் தெரிவிக்கிற பகுதியையும் நான் மேலே சேர்க்கவில்லை.

வேலைநிறுத்தக்காரர்களைப் பிடிவாதமாக இப்படிச் செய்யும்படி தூண்டுகிற மனிதர்களின் பெயரையும் கடிதத்தில் அவர் தந்திருக்கிறார். இந்த வேலைநிறுத்தம் சம்பந்தமாக நான் தெரிவித்த அபிப்பிராயம் வெளிவந்தவுடனே அதைப் படித்தவரொருவர்—அனேகமாக, மாணவராய்த்தான் இருக்க வேண்டும்—வேலைநிறுத்தக்காரர்கள் முற்றிலும் அஹிம்சையைக் கடைப்பிடித்தே நடந்து வருகிறார்கள் என்று ஆத்திரத்தோடு எனக்கு ஒரு தந்தி யடித்தார். மேலே நான் தந்துள்ள கடிதத்தில் கூறிய விஷயங்கள் உண்மை யென்று வைத்துக்கொண்டால், வேலை நிறுத்தம் செய்த மாணவர்களின் மனப்பாங்கு, முக்கியாம்சங்களில், ஹிம்சையைக் கொண்டது என்று சொல்ல நான் தயங்க மாட்டேன். எனது வீட்டுக்குள் நுழைகிறபாதையை ஒருவர் அடைத்துக்கொண்டால், நிச்சயமாக, அது என்னை வீட்டிலிருந்து அவர் வெளியே தள்ளினுல் எவ்வளவு ஹிம்சையோ, அவ்வளவு ஹிம்சைதானே? இதில் சந்தேகமுண்டா?

ஆசிரியர்கள்மீது மாணவர்களுக்கு உண்மையில் மனவருத்தம் இருந்தால், கலாசாலைக்குப் போகாமல் வேலை நிறுத்தம் செய்யவும், மறியல் செய்யவுங்கூட, அவர்களுக்கு உரிமை இருப்பது உண்மைதான். ஆனுல், சிரத்தையில்லாமலிருக்கிற மாணவர்களை வகுப்புகளுக்குப்போகக்கூடாதென்று மரியாதையாக எச்சரிக்கிற அளவோடு இவர்கள் மறியல் செய்வது நின்றுவிட வேண்டும். நேரே பேசியோ, துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோ, அவர்கள் இந்த வேலையைச் செய்ய முடியும். ஆனுல், வேலைநிறுத்தம் செய்ய விருப்பமில்லாத மாணவர்களுக்குப் போக வழி விடாமல் தடுப்பதோ, கட்டாயப்படுத்துவதோ, சரியான முறையன்று.

மேலும், இந்த மாணவர்கள் யாருக்கு விரோதமாக வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள்? கனம் சீனிவாச சாஸ்திரியார் இந்தியாவிலுள்ள சிறந்த ஆசிரியர்களில் ஒருவர். இந்த மாணவர்களில் பெரும்பான்மையோர் பிறக்கு முன்னமே, அல்லது அவர்களுக்குப் பல் முளைப் பதற்கு முன்னமேயே பிரசித்திபெற்ற ஆசிரியராக இருந் திருக்கிறார் அவர். உலகத்திலுள்ள எந்தச் சர்வகலாசாலை யுமே அவரை வைஸ்சான்ஸிலராகப் பெறுவதில் பெருமை கொள்ளும்.

காகா சாஹெப்புக்குக் கடிதம் எழுதிய ஆசிரியர், அண்ணாமலை சர்வகலாசாலையில் நடந்ததை நடந்தவாறே சொல்லியிருக்கிறா ரென்று வைத்துக்கொண்டால், நிலை மையைச் சாஸ்திரியார் சமாளித்த முறை சரியானது என்று எனக்குத் தோன்றுகிறது. வேலைநிறுத்தக்கா ரர்கள் தங்களது நடத்தையால் தங்களுக்கே கெடுதல் செய்துகொள்ளுகிறார்க ளென்று நான் கருதுகிறேன். ஆசி ரியர்களுக்கு மரியாதை செலுத்தவேண்டுமென்று நம்புகிற கர்நாடகக் கூட்டத்தைச் சேர்ந்தவன் நான். பாடசாலை யிலுள்ள ஆசிரியர்களிடத்து நாம் மதிப்பு வைக்காவிட் டால் அந்தப் பாடசாலையில் படிக்க வேண்டாம் என்பது நியாயம். ஆனால், ஆசிரியர்களை இழிவுபடுத்துவதையும் அவமரியாதை செய்வதையும் நான் ஒப்புக்கொள்ள மாட் டேன். இம் மாதிரி நடத்தை பெருந்தன்மைக்கு முரணா னது; பெருந்தன்மைக்கு முரணானது எதுவும் ஹிம்சையே யாகும்.

மாணவர்களும் அரசியல் வேலைநிறுத்தங்களும்

"மாணவர்கள் பூரண மனதுடன் கட்டுப்பாட்டுக்கு உட்படுவார்களானால், தேசியப் போராட்டத்தில் அவர்கள் பயன்தரத்தக்க நல்ல வேலையைச் செய்தல் கூடும். ஆனால், ஒரு ஒழுங்குமின்றி, மனம்போனபடி நடந்துகொண்டு, பயனற்ற ஆர்ப்பாட்டங்கள் செய்வதில் தங்கள் சக்தியைச் செலவிடுவார்களானால், தேசத்தின் போராட்டத்திற்கு அவர்களால் தடங்கலே ஏற்படும்."

மாணவர்கள் அரசியல் வேலைநிறுத்தங்களில் கலந்துகொள்ளுவதையும், பயனில்லாத ஆர்ப்பாட்டங்களில் தங்கள் சக்தியை வீண்விரையம் செய்வதையும் கண்டித்து, காந்திஜி அறிக்கையொன்று வெளியிட்டார். அதிலே பின்வருமாறு சொல்லி இருக்கிறார் :

பண்டித ஜவாஹர்லால் நேருவைக் கைதுசெய்து சிறையிலிட்டது சம்பந்தமாக, சென்னை மாகாணத்திலும் ஐக்கிய மாகாணத்திலும் உள்ள மாணவர்கள், கூட்டம் போடுவது, ஊர்வலம் வருவது போன்ற ஆர்ப்பாட்டங்கள் செய்தது பற்றியும், இந்த இரண்டு மாகாணங்களின் அரசாங்கத்தார் இச் செயல்களுக்காக மாணவர்மீது பதில் நடவடிக்கை எடுக்கப்போவதாகப் பயமுறுத்தி யிருப்பதுபற்றியும், அங்குள்ள மாணவர்களிடமிருந்து எனக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. அரசாங்கத்தாரின் இந்தப் போக்கைக் கண்டிக்கும் முறையில், மாணவர்கள் இப்போது வேலை நிறுத்தம் செய்கிறார்கள் ; அதைக் குறித்து என் ஆலோசனையைக் கேட்கிறார்கள்.

இந்தியத் தாயின் புதல்வர்களெல்லாம் மிக்க சிறப்பும் தீரமும் வாய்ந்த புதல்வராகிய பண்டித ஜவாஹர்லாலைக் கைதுசெய்தது உலகம் முழுதுமே வெட்கமடையத்தக்க ஒரு செயலாகும். ஆகவே, இந்திய மாணவருலகமே அடிப்படையில் தாக்குண்டு கலங்கிப்போனதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஆதலால், எனது அனுதாபம் முழுதும் அவர்கள் பக்கமே இருக்கிறது. என்றாலும், ஜவாஹர்லாலுக்குச் சிறைத் தண்டனை விதித்ததில் தங்களுக்கு ஏற்பட்ட கோபத்தைக் காட்டுவதற்காக, மாணவர்கள் வகுப்புகளிலிருந்து வெளியேறியது தவறு என்றே கருதுகிறேன். மேலே

சொன்ன இரண்டு மாகாணங்களின் அராசாங்கங்களும் மாணவர்கள்மீது பதில் நடவடிக்கை எடுப்பதாகப் பய முறுத்துவது, அதைவிடப் பெரிய தவறுதான்.

ஆயினும், மாணவர்கள், தாங்கள் எண்ணியபடி கண்ட னத்தைத் தெரிவிக்கும் பொருட்டு, வேலைநிறுத்தம் செய்ய முற்படாம லிருத்தல் நலம். என் ஆலோசனையைப் பெற விரும்பினால், இது சம்பந்தமான விஷயங்கள் அனைத்தை யும் விபரமாக அறிந்துள்ள பிரதிநிதி ஒருவரை அவர்கள் என்னிடம் அனுப்ப வேண்டும். இப்போது இதைப்பற்றி மேற்போக்கான சில விஷயங்களைத்தான் நான் அறிந் திருக்கிறேன். என் ஆலோசனையினால் ஏதாவது நன்மை விளையுமென்று கருதினார்களானால், மகிழ்ச்சியுடன் நான் வழிகாட்டத் தயாரா யிருக்கிறேன். நான் நடத்த முயன்று கொண்டிருக்கிற இந்தப் போராட்டத்தில், அவர்களுடைய மனப்பூர்வமான ஒத்துழைப்பை நான் எவ்வளவு மதிக் கிறேன் என்பதை அவர்கள் அறிவார்கள். எது எப்படி யிருந்தாலும், தவறான எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு, ஆத்திரத்தோடு செய்கிற எந்தக் காரியமும், அவர்களது சொந்த நோக்கத்தையும் கெடுத்துவிடும்; தேசத்தின் நோக்கத்தையும் நிச்சயமாகக் கெடுத்துவிடும்.

இதே விஷயமாக வெளியிட்ட இன்னொரு அறிக்கையில், காந்திஜி மாணவர்களுக்குப் பின்வருமாறு புத்திமதி கூறுகிறார்:

மாணவர்களிடையே பெருங்கிளர்ச்சிக்குக் காரணமா யுள்ள சில பிரசினைகளைப்பற்றி நான் வெளியிட்ட அபிப் பிராயம் என்பதாக, பத்திரிகைகளில் பல பத்திகள் எழுதப் பட்டிருக்கின்றன. இப்படி எழுதியிருக்கும் பத்திகளை என் னைப் பார்க்கும்படி சிலர் சொன்னார்கள். பத்திரிகைகளில் வெளியானவை யனைத்தையும் நான் படிக்கவில்லை. சமீப காலத்தில், சக்திக்கு மீறிய அளவு எனக்கு வேலை ஏற்பட்டு விட்டதால், அவசியமில்லாமல் எதிலும் ஈடுபட்டு, என் சக்தியை விரையமாக்க எனக்கு விருப்பம் இல்லை; என் அபிப்பிராயம் எப்போதும்போல் உறுதியாகவே யிருக் கிறது. இனிமேல் கலாசாலைகளில் படிப்பதில்லை யென்று தீர்மானத்துக்கு மாணவர்கள் வந்தாலொழிய, அரசியலில் எவ்வளவு கோபமூட்டுகிற செயலாயிருந்தாலும், அதற்காக

அவர்கள் வேலைநிறுத்தம் செய்ய முற்படுவது நியாய மாகாது. சுதந்திரமுள்ள சில நாடுகளில் இருப்பதற்கு முற்றிலும் மாறாக, நாம் நாட்டுக் கல்விநிலையங்கள் இருக் கின்றன. நம்மை ஆளுவோரின் கட்டுப்பாட்டுக்குள் அவை அடங்கிக் கிடக்கின்றன. அவர்களிடமிருந்து நமது நாடு விடுதலை பெறப் போராடி வருகிறது. ஆகவே, நம்மை ஆட்சிபுரிபவர்கள் உருவாக்கிக் கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்கும் கல்வியைக் கற்பது காரணமாக, மாணவர்கள் தங்கள் மனவெழுச்சியை யெல்லாம் அடக்கிவைக்க வேண் டிய நிர்ப்பந்தம் ஏற்படவே செய்கிறது. மீசைக்கும் ஆசை கூழுக்கும் ஆசை என்ற நிலைமை சாத்திய மல்ல. இத்தகைய பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் அவர்கள் கல்வி பெற விரும்புகிறார்க ளென்பது திட்டமாகத் தெரி கிறது. அப்படி விரும்பும் பட்சத்தில், இந்தக் கல்விநிலை யங்கள் சம்பந்தமாக அமைத்துள்ள விதிகளுக்கும் கட்டுப் பாடுகளுக்கும் அடங்கியே அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். ஆகையால், இந்த ஸ்தாபனங்களின் தலைவர் சம்மதித்தா லொழிய, மாணவர்கள் அரசியல் சம்பந்தமாக வேலைநிறுத்தங்கள் செய்வது கூடாது. ஆனால், இதற்கு நான் ஒரு வழி சொல்லி யிருக்கிறேன். பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும் நேரம் போக, மாணவர்களுக்கு வேண்டிய சாவகாசம் இருக்கிறது. இப்படிக் கிடைக்கும் ஓய்வுநேரத்தைத் தங்கள் செளகரியம்போல் உபயோகிக்க, அவர்கள் யாருடைய அனுமதியையும் கேட்க வேண்டிய தில்லை. அவர்கள் கூட்டம் கூடலாம். தேசியக் கொள்கை களிலும் போராட்டத்திலும் தங்களுக்குள்ள அனுதா பத்தை ஒழுங்கான முறையிலே வெளியிடலாம்; வேண்டு மானால் ஊர்வலமும் வரலாம். எனது தலைமையை ஒப்புக் கொண்டு சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்துகொள்ள விரும்பு கிறவர்கள், அப்போதைக்கு மட்டுமே தங்கள் படிப்பை நிறுத்திவிட வேண்டும்; சட்டமறுப்புச் செய்ய என் னென்ன நிபந்தனைகள் உண்டோ, அவற்றை அனு சரித்து நடந்துகொண்டு, என்னுடைய அனுமதியையும் பெற்ற பிறகு, அவர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்து கொள்ளலாம்.

நான் தலைமை வகிப்பதில் மாணவர்களுக்குக் கொஞ் சம்கூட நம்பிக்கை இல்லை யென்பதைத் தனித்த மாணவர்

களிடமிருந்து வருகிற கடிதங்களே காட்டுகின்றன; ஏனென்றால், கதரைநடுநாயகமாகவும் வெளிப்படையாகத் தெரியக் கூடிய அம்சமாகவும் கொண்ட ஆக்கத்திட்டத்தில் அவர்களுக்கு நம்பிக்கை யில்லை. எனக்குக் கடிதமெழுதிய வர்களைச் சரியான சாட்சிகளாகக் கொள்ளுவோமானல், அஹிம்சையில் அவர்களுக்குள்ள நம்பிக்கையும் சந்தேகத் திற்கிடமானதுதான்.

மாணவர்கள் பூரண மனதுடன் கட்டுப்பாட்டுக்கு உட் படுவார்களானல், தேசியப்போராட்டத்தில் அவர்கள் பயன் தரத்தக்க நல்ல வேலையைச் செய்தல் கூடும். ஆனல், எவ்வித ஒழுங்குமின்றி, மனம்போனபடி நடந்துகொண்டு, பயனற்ற ஆர்ப்பாட்டங்கள் செய்வதில் தங்கள் சக்தியைச் செலவிடுவார்களானல், தேசத்தின் போராட்டத்திற்குஅவர் களால் தடங்கலே ஏற்படும். காங்கிரஸ்காரர்கள் ஓரளவு கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளுகிருர்க ளென்பதைக் காண எனக்கு மிக்க மகிழ்ச்சி யுண்டாகிறது; வியப்பாகவு மிருக்கிறது. இவர்கள் இப்படிக் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுவார்களென்று நான் எதிர்பார்க்கவில்லை. கடைசி நேரத்தில் தங்கள் உறுதியைக் கைவிட்டார்க ளென்று மாணவர்களைப் பார்த்து யாரும் குறைசொல்லாம லிருக் கும்படி அவர்கள் நடந்துகொள்ளுவார்களாக. கட்டுப் பாடில்லாமலும் வரப்போகும் பலனைக் கருதாமலும் செய் யும் ஆர்ப்பாட்டங்களிலே, என்ன உறுதியும் தீரமும் தியாக மும் வேண்டியிருக்குமோ, அதைவிட மேலான உறுதியை யும் அதிகமான தைரியத்தையும் உண்மையான தியாகத் தையுமே அவர்கள் காட்ட வேண்டுமென்று நான் கேட்கி றேன். இதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்திய மக்களின் எண்ணிக்கை 35 கோடி யாகும். இவ்வளவு பெரிய தொகையினருடன் ஒப்பிடும் போது, ஒருசிலரையே சட்டமறுப்புச் செய்வதற்காக எடுத்துக்கொள்ள முடியும் என்பதையும் மாணவர்கள் உணர வேண்டும். ஆக்கத்திட்டத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு பேர்தான் பங்கெடுத்துக்கொள்ளலா மென்ப தற்கு எல்லையே யில்லை. சுதந்திரத்திற்காகப் போராடும் இந்த இயக்கத்தில், மிகவும் உபயோகமான, பயனளிக்கக் கூடிய பகுதி இந்த ஆக்கத்திட்டமே என்பது என் கருத்து. இந்த ஆக்கத்திட்டம் இல்லாத வெறும் சட்டமறுப்பு, ஒரு நியதிக்குள் அமையாது. ஆதலால், அது முற்றிலும் பய னற்றதாகிவிடும்.

மாணவர்களும் அரசியல் ஆதிக்கமும்

"நேரடியாக அரசியலில் கலந்துகொண்டு ஆதிக்கம் பெறுவ தென்பது மாணவருலகத்துக்குத் தெரிந்திருக்க வேண்டிய காரிய மன்று. இந்த மாதிரி வேலையில் அவர்களும் தங்கள் கைத் திறத்தைக் காட்ட ஆரம்பித்த உடனேயே, அவர்கள் மாண வர்கள் என்ற நிலையிலிருந்து மாறிவிடுகிறார்கள். எனவே நாட்டில் நெருக்கடி நேரும்போது, அவர்களால் சேவை செய்ய முடியாமல் போகிறது."

அகில இந்திய மாணவர் கூட்டமைப்புச் சங்கப் பொதுக் காரியதரிசி, சங்கத்தில் ஒரு பிளவு ஏற்பட்டுவிட்ட தென்று சொல்லி, காந்திஜிக்குக் கடிதம் மூலம் தெரிவித்தார். அதற்குக் காந்திஜி பின்வரு மாறு பதில் எழுதினார்:

நாட்டின் போராட்டத்தை நான் நடத்தி வருகிறேன். நாட்டின் அரசியல் அமைப்பைச் சேர்ந்த மற்ற அங்கங் களைப்போலவே, மாணவர்களும் அதில் ஓர் அங்கமாவார் கள். எனினும், மாணவர்களிடம் நான் விசேஷ உரிமை பாராட்டுகிறேன்; அவர்களும் என்னிடம் அப்படியே விசேஷ உரிமை பாராட்டுகிறார்கள். இதற்குக் காரணம் என்னை இன்னும் ஒரு மாணவனாகவே நான் கருதுவதாகும். மேலும், நான் இந்தியாவுக்குத் திரும்பிய காலத்திலிருந்தே மாணவர்களுக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அவர்களில் பலர் சத்தியாக்கிரக நோக்கத்தை நிறைவேற் றச் சேவை புரிந்திருக்கிறார்கள்.

எனவே, மாணவருலகம் முழுதுமே நான் சொல்லு வதை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், அதற்குப் பயந்து நான் எனது ஆலோசனையைக் கூறாமலிருக்க மாட்டேன். இக் காலத்தில் ஏற்பட்டுள்ள சில நிலைமைகளை எண்ணி, அவர்கள் என்மீது குறைகூற முடியும். ஆனால், அவர்கள் கூறும் காரணங்கள் இயல்பாகவே தற்காலத்துக்கு மட் டுமே பொருத்தமானவை யாகும்.

அரசியலிலே, ஒரு கட்சியின் கொள்கையை மட்டும் பின்பற்றுவ தென்பது, மாணவர்களுக்கு இதமான செயல் அன்று. பல வகையான புத்தகங்களைப் படிப்பதுபோல வே, சகல கட்சிகளின் வாதங்களையும் மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், அவற்றில் அமைந்

துள்ள உண்மையை மட்டுமே கிரகித்துக்கொண்டு, அல்லாததைத் தள்ளி விட்டுவிட வேண்டும். இந்த மனப்பாங்கோடு அரசியலைக் கவனிப்பதுதான் மாணவர்களுக்குப் பொருத்தமானது.

நேரடியாக அரசியலில் கலந்துகொண்டு ஆதிக்கம் பெறுவதென்பது, மாணவருலகத்துக்குத்தெரிந்து இருக்க வேண்டிய காரியமன்று. இந்த மாதிரி வேலையில் அவர்களும் தங்கள் கைத்திறத்தைக் காட்ட ஆரம்பித்த உடனேயே, அவர்கள் மாணவர்கள் என்ற நிலையிலிருந்து மாறிவிடுகிறார்கள். எனவே, நாட்டில் நெருக்கடி நேரும் போது, அவர்களால் சேவை செய்ய முடியாமல் போகிறது.

நேரடியாக அரசியலில் கலந்துகொண்டு ஆதிக்கம் பெற முயல்வதால், பொதுக் காரியதரிசி யென்ற முறையில், மாணவர் உலகிற்குச் சரியானபடி தங்களால் தொண்டாற்ற முடியாது.

காங்கிரஸ்காரர்கள் எல்லோருமே தெய்வப்பிரவிகளல்லர்; அதேபோல் பொதுவுடமைக்காரர்கள் அனைவருமே கெட்டவர்கள் அன்று. எனவே, பொதுவுடமைக்காரர் என்றதனாலேயே, அவர்கள்மீது எனக்கு எவ்வித வெறுப்பும் இல்லை.

பொதுவுடமைக்காரர்கள் தங்கள் அரசியல் தத்துவத்தை எனக்கு எடுத்துச்சொன்னார்கள்; அந்தத் தத்துவத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. டாக்டர் அஷ்ராப் சிறந்த ஆற்றல் படைத்தவர்; அவரை நான் பெரிதும் மதிப்பவன். தாய்நாட்டினிடத்து அவருக்குள்ள ஆர்வம் பெரிது என்பதை நான் அறிவேன். ஆனால், மாணவர் உலகத்தை அவர் தவறான நெறியில் செலுத்திக் கொண்டிருக்கிறாரென்பது உண்மை; இதற்காக, ஒரு நாள் அவர் வருந்துவாரென்பதும் நிச்சயம்.

ஆனால், தம்முடைய நோக்கங்களே சரியானவையென்று அவற்றின்மீது அவர் அபாரக் காதல் கொண்டிருக்கிறார்; நானும் என்னுடைய நோக்கங்களிலே உறுதியோடிருக்கிறேன். இருவரும் பிடிவாதத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பவர்கள் அல்லர்; ஆகவே, அவருடைய கொள்கை தவறானதென்று காட்டி அவரை ஒப்புக்கொள்ளச் செய்துவிடலாம் என்ற நம்பிக்கை

எனக்கு இல்லை. ஆதலால், அவரோடு நான் ஒருபோதும் தர்க்கம் செய்ய முயல்வதில்லை. இதேபோல, அவரும் என்னுடன் தர்க்கம் புரிவதால் பயனில்லை யென்று கருதி, என்னைச் சந்திக்காம லிருக்க விரும்புகிறார்.

ஆனால், இந்தச் சமயம் நாட்டின் விடுதலைக்காக நான் போராடுகிறேன் என்பதை மாணவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். என்னை அனுபவமில்லாத தளகர்த்தன் என்றும் சொல்லுவதற்கு இல்லை; நான் 50 வருடம் போர்த் துறையில் பக்குவமடைந்த ஒரு போர் வீரன்.

எனவே, என்னைக் கலந்து ஆலோசியாமல், வேலை நிறுத்தங்களில் விளையாட்டுத்தனமாகக் கலந்துகொள்ளக் கூடா தென்று நான் மாணவர்களிடம் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாது மறுப்பதற்குமுன் அவர்கள் ஒரு தடவைக்கு ஐம்பது தடவையாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாணவர்கள் வேலைநிறுத்தமே செய்யக்கூடா தென்று நான் ஒருபோதும் சொன்னது கிடையாது. சமீபத்தில் கிறிஸ்து சர்ச் கல்லூரி மாணவர்களுக்கு நான் கூறிய அறிவுரையை அவர்கள் மறத்தலாகாது. அவ்விதம் அறிவுறுத்தியதற்காக நான் வருந்தவில்லை. அந்த அறிவுரையைப் பயன்படுத்திக்கொண்டு, அதன் முழுப் பயனையும் அவர்கள் அடையட்டும்.

மாணவர்கள் செய்த அரிய சத்தியாக்கிரகம்

" மாணவர்களாலேயே இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும்; சுதந்திரத்தின் சாவி மாணவர்களிடமே இருக்கிறதென்றால், அது மிகையல்ல. சிரத்தையின்மை காரணமாகவும் கவனக்குறைவாலும் மாணவர்கள் இந்த உண்மையை அறியாமலிருக்கலாம். எப்படி இந்திய சுதந்திரம் அவர்களைப் பொறுத்திருக்கிறதோ, அதேபோல, சமூக சீர்திருத்தமும் சமயப் பாதுகாப்பும் அவர்களைப் பொறுத்தே இருக்கின்றன; அவற்றின் திறவுகோலும் அவர்கள் கைவசம்தான் இருக்கிறது."

இன்னதில் செய்யலாம், இன்னதில் கூடாது என்ற நியதி சத்தியாக்கிரகத்துக்கு இல்லை. சகல இடங்களிலும், சகல சந்தர்ப்பங்களிலும், சகல விஷயங்களிலும் அதை உபயோகிக்கலாம்; அரசியலில் கையாளுவதைப்போலவே சமூகத் துறையிலும் அதைக் கையாளலாமென்று பல தரம் இந்தப் பத்திரிகையில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். அரசாங்கத்துக்கு எதிராக மட்டுமல்ல, சமூகத்துக்கு எதிராகவும் சத்தியாக்கிரகம் செய்யலாம். சொந்தக் குடும்பமானாலும்சரி, தாய், தந்தை, மனைவிமுதலியவர்களாயிருப்பினும் சரி, அவர்களுக்கு எதிராகவும் சத்தியாக்கிரகம் செய்யலாம். ஏனென்றால், ஆன்மவலி பொருந்திய இவ்வாயுதத்தின் அருமையே தனி. ஹிம்சை என்ற கறை அறவே படியாதபடி அதைத் தூயதாக வைத்துக்கொண்டு, அன்பினால் தூண்டப்படுகிறபோது மாத்திரமே அதை நாம் பிரயோகிக்க வேண்டும். ஆதலால், அதனுடைய உபயோகத்தால் தீங்கு நேரிட்டுவிடுமோவென்ற அச்சம் ஒருசிறிதும் இல்லாமல், அதை எந்த விஷயத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரயோகம் செய்யலாம். சமூகத்திற்குக் கேடு தரும் பழக்க வழக்கங்களை எதிர்க்கச் சத்தியாக்கிரக ஆயுதத்தை உபயோகிக்கலாம் என்ற உண்மையை, கோடா ஜில்லாவைச் சேர்ந்த தர்மாஜ் என்னும் இடத்தில், சில நாட்களுக்கு முன்னர், தீர உணர்ச்சியுள்ள மாணவர்கள் நடத்திக்காட்டியிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தைப்பற்றிப் பல இடங்களி

லிருந்து எனக்குக் கிடைத்துள்ள செய்திகளிலிருந்து தொகுத்த சில விவரங்களைக் கீழே தருகிறேன் :

தர்மாஜ் என்ற ஊரில், ஒரு பெரிய மனிதர், சில நாட்களுக்குமுன், தமது தாயார் இறந்தபின், கருமாதி தினத்தன்று, தமது சமூகத்தாருக்கு விருந்தளித்தார். அங்கு வந்திருந்த இளைஞர்களுக்குள், இம் மாதிரி விருந்தளிப்பது சரியானதுதானா வென்று, விருந்து நடைபெறுவதற்குச் சிறிது நேரம் முன்னதாக, தீவிரமான ஒரு விவாதம் நடந்தது. அந்த ஊர்வாசிகளில் பலரும், இவ் இளைஞர்களும் இந்தப் பழக்கத்தைக் கெடுத லென்றே நினைத்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஏதாவது செய்ய வேண்டுமென்று இவர்களுக்குத் தோன்றிற்று. எனவே, இவர்களில் பெரும்பாலோர், கீழ்க்கண்ட செயல்கள் மூன்றையுமாவது, அல்லது அவற்றில் ஒன்றிரண்டையாவது பின்பற்றுவ தென்று உறுதிகொண்டார்கள் :

1. அந்தச் சந்தர்ப்பத்தில் அளிக்கிற விருந்தில், பெரியவர்களோடு சேர்ந்து உண்பதில்லை ; அல்லது, அந்த உணவை வேறு எவ்விதத்திலும் உண்பதில்லை.

2. இந்தப் பழக்கத்தைப் பலமாகக் கண்டிக்கும்பொருட்டு, விருந்து நடந்த தினத்தன்று பட்டினிகிடப்பது.

3. இந்த நடவடிக்கை காரணமாக, பெரியவர்கள் தங்களை எவ்வளவு கொடுமையாக நடத்தினாலும், அதைப் பொறுமையுடனும் மகிழ்ச்சியுடனும் சகித்துக்கொள்ளுவது.

இந்த முடிவை யனுசரித்து விருந்தன்று, அனேக மாணவர்களும், சில சிறு குழந்தைகளும்கூட, பட்டினி கிடந்தனர். இப்படிச் செய்து, பெரியவர்கள் என்போரின் கோபத்தையும் சகித்துக்கொண்டார்கள். இந்தச் செயல் காரணமாக, மிக்க பணக் கஷ்டம் ஏற்படுகிற நிலைமைக்கு மாணவர்கள் வந்துவிட்டார்கள். 'பெரியவர்கள்' இளைஞர்களுக்குச் செலவுக்குக் கொடுப்பதை நிறுத்திவிடுவோம் என்று பயமுறுத்தினார்கள் ; உள்ளூர் கல்வி நிலையங்களுக்குச் செய்த பொருளுதவியைக்கூட நிறுத்திக்கொள்ளப் போவதாகவும் சொன்னார்களாம். ஆனால், பையன்களின் உறுதியை அசைக்க முடியவில்லை. இருநூற்றெண்பத்தைந்து மாணவர்கள் அந்த விருந்தில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர்; விருந்து நடந்த தினத்தன்று, பெரும்பான்மையோர் பட்டினிகிடந்தனர்.

இந்த இளைஞர்களை நான் மிகவும் பாராட்டுகிறேன். சமூக சீர்திருத்தங்களைச் செய்வதில் மாணவர்கள் எங்குமே பிரதானமான பங்கெடுத்துக்கொள்ளுவார்களென்று நம்புகிறேன். மாணவர்களாலேயே இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும்; சுதந்திரத்தின் சாவி மாணவர்களிடமே இருக்கிற தென்றால், அது மிகை யல்ல. சிரத்தையின்மை காரணமாகவும், கவனக்குறைவாலும் மாணவர்கள் இந்த உண்மையை அறியாம லிருக்கலாம். எப்படி இந்திய சுதந்திரம் அவர்களைப் பொறுத்திருக்கிறதோ, அதே போல, சமூக சீர்திருத்தமும் சமயப் பாதுகாப்பும் அவர்களைப் பொறுத்தே இருக்கின்றன; இவற்றின் திறவுகோலும் அவர்கள் கைவசம்தான் இருக்கிறது. தர்மராஜ் மாணவர்களின் செயல், மாணவர்கள் தங்களுக்கு உள்ள ஆற்றலை உணர உதவும் என்று நம்புகிறேன். இறந்து போன பெண்மணிக்காக உண்மையான சிரார்த்தம் செய்தோர் அன்று பட்டினிகிடந்த இவ் இளைஞர்களே யாவார். விருந்தளித்தவரோ வென்றால், நல்ல பணத்தை விரையமாக்கி ஏழை மக்கள் பின்பற்றுவதற்குக் கேடான ஒரு வழியையே காட்டி யிருக்கிறார். பணக்காரர்கள், கடவுளால் தங்களுக்குத் தரப்பட்ட செல்வத்தை, பொது நன்மையின் பொருட்டே உபயோகிக்க வேண்டும். கலியாணம், கருமாதி போன்ற சடங்குகளில் ஏழைகளால் பணக்காரர்களைப் போல, பொருட் செலவு செய்து, தங்கள் சமூகத்தாருக்கு விருந்தளிக்க முடியாதென்பதை அவர்கள் உணர வேண்டும். இந்தக் கெட்ட வழக்கம் எத்தனை ஏழை மக்களை நாசம் செய்திருக்கிறது! அன்று தர்மாஜில் சமூக விருந்திற்காகச் செலவு செய்த பணத்தை எளிய மாணவர்களுக்கு உதவி செய்வதற்காகவும் ஏழை விதவைகளுக்கு உதவி செய்வதற்காகவும், கதர் அபிவிருத்திக்காகவும், பசுப் பாதுகாப்புக்காகவும், தீண்டத்தகாதவர்களைக் கைதூக்கிவிடுவதற்காகவும் உபயோகித்திருந்தால், அது எவ்வளவோ நல்ல பயனைத் தந்து, இறந்தவரின் ஆன்மாவுக்குச் சாந்தி யளித்திருக்கும். ஆனால், இப்போதோ, விருந்தளித்தவரும் விருந்துண்டவர்களும் விருந்தைப்பற்றி மறந்தே போனார்கள். இது கெட்ட வழக்கம் என்று நினைத்த தர்மாஜ்வாசிகளில் உணர்ச்சியுள்ள சிலருக்கும்

மாணவர்களுக்கும் மனவருத்தத்தை யுண்டுபண்ணியதைத் தவிர, இந்த விருந்தால் ஒருவருக்கும் நன்மை யில்லை.

மாணவர்கள் செய்த இந்தச் சத்தியாக்கிரகத்தினாலே, விருந்து நின்றுபோகவில்லை என்பது உண்மைதான். ஆகவே, அது வீண்போயிற்று என்று யாரும் நினைக்க வேண்டாம். தாங்கள் செய்யும் சத்தியாக்கிரகத்தால் உடனடியான, திட்டமான பயன் விளைவது சாத்தியமில்லை என்று அறிந்தே, மாணவர்கள் சத்தியாக்கிரகம் செய்தார்கள். ஆனால், அவர்கள் இனிமேலும் தூங்கிவிடாமல் விழிப்பாகவே இருந்தால், எந்தப் பணக்காரனும், இனி, சிரார்த்த தினத்தன்று விருந்தளிக்கத் துணிய மாட்டானென்று நாம் உறுதியாக நம்பலாம். நெடுநாள் உடலோடு உடலாக ஒட்டியிருந்த சமூகக் கேட்டை, ஒரேயடியில் போக்கிவிட முடியாது; அதற்குப் பொறுமையும் விடா முயற்சியும் அதிகம் வேண்டும்.

காலத்தினால் ஏற்படுகிற மாறுதல்களை நமது சமூகப் 'பெரியார்கள்' என்றுதான் உணர ஆரம்பிப்பார்களோ? நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் பழக்க வழக்கங்களைப் பயன்படுத்திக்கொள்ளுவதை விட்டுவிட்டு, இன்னும் எவ்வளவு காலந்தான் அவைகளுக்கு அடிமையா யிருப்பார்களோ? உதவி செய்து படிக்க வைத்து, அந்தப் படிப்பினால்பெறும் அறிவைச் செயலிலே பயன்படுத்திக்கொள்ளாதபடி, இவர்கள் தங்கள் மக்களை எவ்வளவு நாள்தான் தடுத்துரைப்பார்களோ? நியாய மெது, அநியாய மெது என்று பகுத்தறிகிற உணர்ச்சி இன்று அவர்களிடையே உறக்கத்திலிருக்கிறது; இதை அவர்கள் தட்டி யெழுப்பி, என்றுதான் உண்மையான மக்களாக ஆகப்போகிறார்களோ?

மாணவர்களின் கடமை

"உண்மையில் ஒரு கவலையுமில்லாதவர்களா யிருக்க வேண்டி யிருக்க, கவலைகளும் சங்கடங்களும் இன்று நமது மாணவர்களைப் பிய்த்துத் தின்னுகின்றன. அறிவைப் பெற்று அதைத் தங்களதாக்கிக்கொள்ள வேண்டியதுதான் அவர்கள் வேலை. எதைப் பெறுவது, எதைத் தள்ளுவது என்று பகுத்தறிய மட்டும் அவர்களுக்குத் தெரிந்து இருந்தால் போதும்."

பவநகர் சாமில்தாஸ் கல்லூரி மாணவர்களிடையே பேசியபோது, காந்திஜி பின்வருமாறு சொன்னார்:

மாணவர்களின் தருமம், அல்லது கடமை என்பதுபற்றி இன்று நான் பேச வேண்டியவனா யிருக்கிறேன். கஷ்டமா யிருப்பதைப் போலவே, தருமம் எளிதாயு மிருக்கிறது. ஹிந்து மதக் கொள்கையின்படி, மாணவன் பிரமசாரியாவான்; மாணவனுடைய நிலை பிரமசரிய ஆசிரமத்தைக் குறிக்கிறது. பெண்ணோடு வாழாதிருப்பது என்று அந்தச் சொல்லுக்குப் பொருள்கொள்ளுவது குறுகிய முறையில் பொருள்கொள்ளுவதாகும். மாணவனுடைய வாழ்க்கை, அல்லது நிலை என்பதே அதற்குரிய அடிப்படையான பொருள் ஆகும். புலன்களை அடக்குவ தென்பதே அதன் பொருள். புலன்களை அடக்கிக் கட்டுப்படுத்தி, அதன் மூலம், கல்வி கற்று, அறிவை வளர்க்கிற காலம் முழுவதையும் நாம் பிரமசரிய ஆசிரமம் என்று சொல்லுகிறோம். வாழ்க்கையின் இந்தப் பருவத்தில் ஒருவர் பிறருக்குக் கொடுப்பது வெகு குறைவு; பிறரிடமிருந்து பெறுவதோ வெகு அதிகம். முக்கியமாக நாம் இந்த நிலையில் பெறுபவர்களாகவே யிருக்கிறோம்; பெற்றோரிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும், பொதுவாக, பிரபஞ்சம் முழுவதிலிருந்துமே கிடைக்கக்கூடியவற்றை யெல்லாம் நாம் இந்த நிலையில் பெற்றுக்கொள்ளுகிறோம். ஆனால், பெறுவ தென்றால், திருப்பிக் கொடுப்ப தென்பதும் ஏற்படவே செய்கிறது. ஆகவே, இப்படி நாம் பெறுகிறவற்றுக்கெல்லாம் திருப்பிக் கொடுக்கிற கடமையும் அதே சமயத்தில் ஏற்படுகிற தென்றால், உரிய காலத்தில் முழுக் கடனையும் நெடுவட்டி சேர்த்துத் திருப்பிக் கொடுக்கிற கடமையும் கட்டாயமுமாக ஏற்படுகிறது. இது காரணமாகவே, பிரமசரிய ஆசிரமத்தைச்

சமய சம்பந்தமான கடமையென்று ஹிந்துக்கள் கருதுகிறார்கள்.

பிரமசாரியினது வாழ்க்கையையும் துறவியினது வாழ்க்கையையும் ஆன்மீகத் துறையில் ஒன்றுபோலவே கருதி வருகிறார்கள். உண்மையான பிரமசாரியாக இருப்பதற்கு, பிரமசாரி சன்னியாசியாக யிருந்து தீர வேண்டும். சன்னியாசிக்கோ அப்படி ஒரு கட்டாயமில்லை; விரும்பிய வண்ணம் அவர் இருந்துகொள்ளலாம்; ஹிந்து மதம் கூறுகிற நான்கு ஆசிரமங்களும் தற்காலத்தில் தங்களது புனித இயல்பை இழந்துவிட்டன; பெயரளவில் மட்டுமே அவை இன்று விளங்கிக்கொண் டிருக்கின்றன. மாணவ பிரமசாரியின் வாழ்க்கை தொடக்கத்திலேயே கெடுக்கப் பட்டுவிடுகிறது. இந்த நான்கு ஆசிரமங்களும் இன்று நடைமுறை வாழ்க்கையில் இல்லை. எனவே, அந்த முறைகளை அனுசரித்து வாழும்படியும், அதிலிருந்து அறிவு பெறுமாறும் இந்தத் தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்கு எடுத்துச்சொல்ல இயலாத நிலையில் நாம் இருந்துவருகிறோம். ஆயினும், இந்த ஆசிரமங்களைத் தோற்றுவிக்கக் காரணமா யிருந்த இலட்சியங்களையே நாம் நாடிச் சென்று அவற்றை இன்றும் பின்பற்றலாம்.

மாணவர்களின் கடமை என்ன என்பதை இன்று நாம் தெரிந்துகொள்ளுவது எப்படி? இலட்சியத்தி லிருந்து விலகி, நாம் மிகவும் தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டோம். பிள்ளைகளைத் தவறான நெறியில் செலுத்துவதில் பெற்றோரே முன் அணியில் நிற்கிறார்கள்; செல்வமும் அந்தஸ்தும் அடைவதற்காகவே, குழந்தைகளுக்குக் கல்வி பயிற்ற வேண்டுமென்று எண்ணுகிறார்கள். கீழ்மையான நோக்கங்களுக்காகக் கல்வியும் அறிவும் விலைக்கு வாங்கப்படுகின்றன. மாணவனுடைய வாழ்க்கையில் இருக்கவேண்டிய அமைதி, தூய உள்ளம், ஆனந்தம் ஆகியவை அங்கு அறவே காணப்பட வில்லை. உண்மையில் ஒரு கவலையுமில்லாதவர்களா யிருக்கவேண்டி யிருக்க, கவலைகளும் சங்கடங்களும் இன்று நமது மாணவர்களைப் பிய்த்துத் தின்னுகின்றன. அறிவைப் பெற்று அதைத் தங்கள தாக்கிக் கொள்ள வேண்டியதுதான் அவர்கள் வேலை. எதைப் பெறுவது, எதைத் தள்ளுவது என்று பகுத்தறிய மட்டும்

அவர்களுக்குத் தெரிந்திருந்தால் போதும். மாணவருக்கு இந்தப் பகுத்தறிவைப் புகட்டுவதே ஆசிரியரின் கடமை ஒரு பாகுபாடுமின்றி, எது வந்தாலும் ஏற்றுக்கொள்ளு வது என்று இருந்தோமானல், நாம் இயந்திரங்களைப் போலாகிவிடுவோம். சிந்தித்துப் பார்க்கிற சக்தியையும், பகுத்தறிந்துகொள்ளுகிற சக்தியையும் படைத்த உயிர்கள் நாம். ஆகவே, மாணவ நிலையிலுள்ள இக் காலத்தில், பொய்யையும், மெய்யையும், அவதூற்றையும், புகழையும், அசுத்தமான விஷயங்களையும் தூய்மையான விஷயங்களையும் பிரித்தறிய நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனல், மாணவன் செல்லும் நெறியானது, கெட்டதையும் நல்லதையும் பாகுபடுத்தியறிவதென்ற கஷ்டத்துடன் மட்டும் இன்று அமையவில்லை; அதில் இன்னும் எத்தனையோ கஷ்டங்கள் வந்து குறுக்கே நிற்கின்றன. மாணவன் தன்னைச் சுற்றியுள்ள எத்தனையோ எதிர்ப்புக்களோடு போராட வேண்டியவனு யிருக்கிருன். தனது குருவாகிய ரிஷியின் ஆசிரமத்திலும் அதை யொட்டியுள்ள புனிதமான வாழ்க்கையிலும், பெற்றோரின் பராமரிப்பிலும் வாழவேண்டிய மாணவன், இன்று, சீர்குலைந்த தொரு குடும்பத்தின் மத்தியிலும் தற்காலக் கல்வித் திட்டத்திஞல் ஏற்பட்டுள்ள செயற்கையான வாழ்க்கை முறையின் மத்தியிலும் வாழ்ந்துகொண்டு வருகிருன். ரிஷிகள் புத்தகங்களின்றியே தம் மாணவர்களுக்குக் கல்வி போதித்தார்கள்; சில மந்திரங்களையும் சொல்லிக் கொடுத்தார்கள். மாணவர்கள் அவற்றைப் பேணி நினைவில் வைத்துக்கொண்டு, வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகினுர்கள். தற்கால மாணவனே, புத்தகக் குவியலுக்குள் மூழ்கிக்கிடக்க வேண்டியவனுய் இருக்கிருன். இந்தப் புத்தகக் குவியல் அவனை மூச்சுத் திணறும்படி செய்துவிடுகிறது. நான் மாணவனுக யிருந்த காலத்தில், ரெய்னால்ட் எழுதிய நாவல்களைப் படிப்பது மாணவர்களுக்குள் நாகரிகம் என்று கருதப்பட்டது. கெட்டிக்காரனு யிராதபடியால், பாடப் புத்தகங்களைத் தவிர, வேறு புத்தகங்களை நான் படிப்பதில்லை; இதனுல் ரெய்னால்ட் நாவல்களைப் படிக்காமல் தப்பித்துக்கொள்ள நேர்ந்தது. ஆயினும், நான் இங்கிலாந்து சென்றிருந்தபோது, மதிப்பு

வாய்ந்த மனிதர்கள் இந்த நாவல்களை வெறுத்து ஒதுக்கு வதைக் கண்டேன். அவற்றைப் படிக்காததனல் நான் ஒன்றையும் இழந்துவிட வில்லை என்பதையும் தெரிந்து கொண்டேன். மாணவர்கள் தள்ளவேண்டிய விஷயங்கள், இதைப்போலவே, இன்னும் எத்தனையோ இருக்கின்றன; இவற்றில் பதவிமோகம் என்பதும் ஒன்று. இதைப்பற்றி நினைக்க வேண்டியவன் இல்லறத்தானேயன்றி, பிரமசாரி யாக வாழ்க்கை நடத்தும் மாணவன் அல்லன். சொந்த நாட்டின் நிலைமையை உள்ளது உள்ளவாறே அறிந்து, தனது நாடு இன்று எவ்வளவு பெரிய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டி யிருக்கிற தென்பதையும் உணர்ந்து நாட்டுக்காகத் தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய மாணவன் தெரிந்துகொள்ள வேண்டும். உங்களில் பலர் பத்திரிகைகள் படிக்கிறீர்க ளல்லவா? பத்திரிகை படிப் பதை அடியோடு நிறுத்திவிடும்படி நான் உங்களைக் கேட்கவில்லை; ஆனல், அன்று தோன்றி அன்று மறை யும் இயல்புடைய விஷயங்களை நீங்கள் தள்ளிவிட வேண்டு மென்று விரும்புகிறேன். நிரந்தரமாக நமக்கு ஆர்வம் தரும் விஷயங்களைச் செய்திப் பத்திரிகைகளிலே காண முடியாது. மாணவர்களிடம் நல்லொழுக்கத்தை உண்டு பண்ணச் செய்திப் பத்திரிகைகள் துணை செய்யமாட்டா. இருந்தபோதிலும், மாணவர்களுக்கு அவற்றில் எவ்வளவு மோகமிருக்கிற தென்பதை நான் அறிவேன். இது மிக்க பரிதாபகரமான நிலை; பயங்கரமான நிலை. கல்வி சம்பந்த மாக, நானே சில சோதனைகளைச் செய்து பார்த்திருக் கிறேன்; அதனலேதான் நான் இந்த ரீதியில் பேசு கிறேன். நான் செய்த சோதனைகளி லிருந்து, கல்வியின் பொருள் என்ன என்பதைத் தெரிந்துகொண்டேன். சத்தி யாக்கிரகமும் ஒத்துழையாமையுமே நான் முதன் முதலாகக் கண்டேன்; பிறகு எனது சோதனைகளைத் தொடங்கி னேன். இந்தப் புதிய சோதனைகளை நடத்திய தற்காக நான் ஒருசிறிதும் வருந்திய தில்லை; அன்றியும் அரசியல் சுதந்திரத்தை அடைவதற்காக மட்டும் இவற்றை நான் கையாள வில்லை. இவற்றைப் பின்பற்றும்படியாக மாணவர்களைத் தூண்டவும் நான் துணிந்திருக்கிறேன். ஏனெனில், இவை ஒரு தீங்கும் செய்யாதவை; இவற்றின்

தத்துவங்கள் இன்று ராட்டினத்திலே பூரணமாக அமைந்துள்ளது. முதன்முதலாக ராட்டினத்தைக் கொண்டுவந்தபோது 'இந்த ராட்டினமா இந்தியாவுக்கு விமோசனமளிக்கப் போகிறது!' என்று எல்லோரும் சிரித்தார்கள்; ஏளனம் செய்தார்கள். ஆனால், இன்னும் சிறிது காலத்தில், அதை எல்லோரும் ஆனந்தத்துடன் வரவேற்பார்கள். காங்கிரஸ் அதைக் கடைப்பிடித்திருக்கிறது; வைஸ்ராய் ரீடிங் பிரபுவுக்குக்கூட நான் அதைச் சிபார்சு செய்கிறேன். அப்படி அவருக்குச் சிபார்சுசெய்வதில் எவ்வித நஷ்டமும் இல்லை யென்று எனக்குத் தெரியும். அதனால் அவருக்குச் சிபார்சு செய்ய நான் சற்றும் தயங்கவில்லை. அதை வேண்டாமென்று ரீடிங் பிரபு தள்ளிவிடுவாரானால், அதனால் நஷ்டம் அவருக்கே யன்றி எனக்கில்லை. கல்கத்தா பாதிரியாரை டெல்லியில் சந்தித்துப் பேச நேர்ந்தபோது, ராட்டினத்தாலேயே மக்களுக்கு விமோசனம் உண்டு என்ற செய்தியை அவரிடம் தெரிவிக்க நான் தயங்கவில்லை. கர்னல் மாடக்குக்கும் இந்த உபதேசத்தையே செய்தேன். கர்னல் மாடக்கின் மனைவியார் இங்கிலாந்துக்குப் பிரயாணமானபோது, நினைவுக்குறியாக, ஒரு கதர்த் துண்டைக் கொடுத்து, கதர் தெரிவிக்கும் செய்தியை வீடுவீடாகப் பரப்பும்படி அவரைக் கேட்டுக் கொண்டேன்.

• எந்தச் சந்தர்ப்பத்திலும், எந்தச் சமயத்திலும், ராட்டினத்தின் செய்தியை எடுத்துச்சொல்லுவதில் எனக்கு அலுப்புத் தோன்றாது; ஏனெனில், அது தீங்குபயவாத அவ்வளவு நல்லதொரு சாதனம். ஆரோக்கியத்திற்குத் தீங்கு செய்யும் காரசாரமான உணவு ருசியாய் இருப்பதைப் போல, ஆரோக்கியத்தை வளர்க்கும் நல்ல உணவில் ருசி இராதுதான். முதலில் மனதிற்குக் கசப்பா யிருந்து இறுதியில் அமரநிலையை அளிக்கவல்ல பொருள்களையே உட்கொள்ளும்படி, கீதையில் ஒரு அழியாத வாக்கியம் ஆழ்ந்து சிந்திக்கவல்ல மக்களுக்கு உபதேசம் செய்கிறது. இன்று ராட்டினத்தையும், அது தரும் நூலையும் அப்படிப்பட்ட பொருளென்று கூறலாம். நூற்பதைவிடச் சிறந்த யக்ஞம் [தியாகம்] வேறு உண்டா? ராட்டினமே துயருற்ற உள்ளத்துக்குச் சாந்தியைக் கொடுக்கவல்லது; கவலையால் அலைப்

புண்பட்ட மாணவனுடைய மனதிற்கு ஆறுதல் அளித்து அவனுடைய வாழ்க்கையைப் பரமார்த்த நெறியிலே செலுத்த வல்லது. செய்த காரியத்துக்குப் பலன் உடனடியாகவே ஏற்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிற காலம் இது; இந்தக் காலத்தில் நமது நாட்டுக்குக் கொடுக்க இதைவிட நல்ல மருந்து என்னிடம் இல்லை. காயத்திரியைக்கூட அவ்வளவு பொருத்தமானதென்று சொல்ல முடியாது. காயத்திரியை நான் மகிழ்ச்சியோடு குறிப்பிடுவேன். ஆனால் உடனடியாக அதனால் பலன் கிடைக்குமென்று சொல்லுவதற்கில்லை. நான் இப்போது சொல்லுகிற ராட்டினத்தையோ, கடவுளுடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டே நீங்கள் கடைப்பிடிக்கலாம். அதன் மூலம் உடனடியான பலனையும் நீங்கள் எதிர்பார்க்க முடியும். ஆங்கில நண்பரொருவர், ஒழிந்தபொழுது மகிழ்ச்சியோடு செய்வதற்குரிய வேலை என்ற அளவில், ராட்டினம் மிகச் சிறந்ததென்று தம் அறிவில் பட்டதாக எனக்குக் கடிதம் எழுதினார். 'நீங்கள் பொழுதுபோக்குக்காக ராட்டினம் சுற்றலாம். ஆனால், அது எங்களுக்கு எல்லாச் செல்வத்தையும் அளிக்கவல்ல கற்பக தருவாயிருக்கிறது' என்று நான் அவருக்குப் பதில் சொன்னேன். மேல்நாட்டுப் பழக்கங்களில் பலவற்றில் எனக்கு விருப்பம் இல்லை. ஆனால் சிலவற்றைப் பார்க்கும்போது, எனக்கு மிக்க வியப்புண்டாகிறது. பொழுதுபோக்குக்காக ஒழிந்த நேரத்தில் செய்யும் வேலையென்று மேல்நாட்டினர் சில வேலைகளில் ஈடுபடுகிறார்கள். இப்படி ஈடுபடுவதில் சிறந்த பொருள் இருக்கிறது. கார்லைல் மிக்க திறமைவாய்ந்த சத்திர வைத்தியர்; சத்திர வேலையில் அவருக்கு மிக்க ஆனந்தம் இருந்தது. ஆனால், அந்த வேலையிலேயே அவர் தம் நேரத்தையெல்லாம் கழித்ததில்லை. தோட்ட வேலையில் அவருக்குப் பிரியம் அதிகம்; தோட்ட வேலைக்காகத் தினம் இரண்டு மணி நேரம் அவர் ஒதுக்கி வைத்திருந்தார். இந்தத் தோட்ட வேலைதான் வாழ்க்கையில் ருசியையும் மகிழ்ச்சியையும் அவருக்கு உண்டுபண்ணியது.

ஆகவே, ராட்டினத்தைக் கைக்கொள்ளும்படி உங்களுக்குச் சிபார்சு செய்கிறேன். பொழுதுபோக்குக்கேற்ற வேலைபோல வேண்டுமானாலும் ராட்டினத்தை வைத்துக்

கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் ருசியும் உற்சாகமும் ஏற்பட்டுச் சாந்தியையும் ஆனந்தத்தையும் அடைய இதுவே தக்க சாதனம். பிரமசரிய வாழ்க்கை வாழ இது உங்களுக்கு உதவி புரியும். மாணவ நிலையில் நம்பிக்கை என்பது ரொம்ப முக்கியமான ஒரு விஷயம். கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. ஆசிரியர் சொல்லுகிறார் என்பதற்காகவே, அவற்றை நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறீர்கள். உதாரணமாக, ஜியாமெட்ரி சம்பந்தமான பல உண்மைகளை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை; அவை தீர்மானிக்கப்பட்ட உண்மைகள் என நான் நம்பினேன். இது காரணமாக, இன்று அவற்றை நான் புரிந்துகொள்ள முடிகிறது. இது மட்டுமல்ல. தற்சமயம் நான் செய்கிற வேலை எனக்கு எவ்வளவு எளிதாயிருக்கிறதோ, அவ்வளவு எளிதாகவே ஜியாமெட்ரி ஆராய்ச்சியிலும் நான் ஈடுபட முடிகிறது. நம்பிக்கையோடு மட்டும் நீங்கள் ராட்டினத்தைச் சுற்றுவீர்களானால், ஒரு காலத்தில், இந்தக் கிழவன் சொன்னது அவ்வளவும் உண்மை என்பதைக் கண்டுகொள்ளுவீர்கள். இதில் சந்தேகமில்லை. சாஸ்திரங்களை நன்றாகக் கற்ற அறிஞரொருவர், கீழ்க்கண்ட கீதையின் வாக்கியத்தை, ராட்டினத்திற்குப் பொருத்திச் சொன்னார் :

"வீணாக முயற்சி செலவாகிற தென்கிற பேச்சு இதில் இல்லை; தடையாக நிற்கும் விஷயமும் இல்லை. இந்தக் கடமையை ஒருசிறிது செய்தாலே போதும்; அது ஒருவனைப் பெரிய ஆபத்தினின்றும் காப்பாற்றும்.'

மாணவர் செய்யக்கூடியது என்ன?

"உள்ளத்தூய்மையைப் பூரணமாகப் பண்படுத்தி, அதை வளர்ப்பதற்குக் கல்வி உதவியாய் இருக்க வேண்டும். அதற்கு உதவியா யிராத கல்வி பயனுடைய தல்ல. எவ்வளவுதான் வேதங்களைப் பாராயணம் பண்ணியிருந்தாலும், சமஸ்கிருதம் லத்தீன், கிரீக் பாஷைகளை எவ்வளவுதான் பிழையறக் கற்றாலும், அவற்றால் யாதொரு பயனுமில்லை. அறிவு படைத்ததன் முடிவான நோக்கம், ஒழுக்கத்தை வளர்ப்பதே யாகும்."

வேலூர் மாணவர்களிடையே பேசியபோது, காந்திஜி சொன்னதாவது :

உங்கள் தலைமை யாசிரியருக்குக் குடும்பத்தில் ஏற்பட்ட துக்கத்தைக் குறித்து, முதன்முதலில் எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இங்கே வந்தவுடன் அச்செய்தி என் காதில் விழுந்தது. தலைமை யாசிரியர் அவர்களே! இந்தக் கூட்டம் நடைபெறுவதற்குத் தங்கள்வீட்டிலேயே தாங்கள் இடந் தந்ததோடு, தங்களுக்கு நேர்ந்திருக்கும் துயரத்தையும் பொருட்படுத்தாமல், அன்பு கூர்ந்து இங்கு வந்திருந்து, தலைமைப் பதவியையும் தாங்கள் ஏற்றுக்கொண் டிருக்கிறீர்கள். இப்படித் தாங்கள் எனக்கு அளிக்கும் கௌரவத்தை, நான் பெரிதும் போற்றுகிறேன். தங்களுக்கு நேர்ந்திருக்கும் துயரத்தை அனுபவிப்பதில், என்னையும் ஒருவனாகக் கருதும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்.

இன்று மாலை, எனக்கு வாசித்தளித்த வரவேற்புப் பத்திரத்திற்காகவும், கதர் நிதிக்கு அளித்த பணமுடிப்பிற்காகவும் மாணவருக்கும் ஏனையோருக்கும் எனது வந்தனம் உரியதாகும். என்மீது உங்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையிலுள்ள அன்பை இதன்மூலம் வெளிப்படுத்தினீர்கள். நாட்டில் மிக மிக ஏழைகளா யிருக்கிறவர்களுடன் நீங்களும் ஒருங்கு உணர்கிறீர்கள் என்பதையே இது காட்டுகிறது. இதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை. ஏனெனில், அழகுவாய்ந்த நமது நாட்டில் நான் எங்கு சென்றபோதிலும், இவ்விதமே எல்லோரும் நடந்து கொள்ளுகிறார்கள்.

எனது வேலையில் எனக்கு எவ்வளவோ கஷ்டங்கள்

ஏற்பட்டபோதிலும், இந்தியா வெங்குமுள்ள மாணவர்கள் என்னை அன்போடு நேசித்து வருவது எனக்குப் பெரிய ஆறுதலையும் உவகையையும் அளிக்கிறது. என்னுடைய பொறுப்பை மாணவர்கள் மிகவும் குறைத்திருக்கிருர்கள். எங்குமே மாணவர்கள் சொந்த முறையில் என்னிடம் அன்பு காட்டுவதோடு, இந்தியாவிலுள்ள ஏழைகளுடன் தங்களையும் ஒன்ருக எண்ணுகிருர்கள். இவை யாவும் உண்மையே; ஆனல், இவ்வளவெல்லாம் செய்த பிறகும் கூட, அவர்கள் இன்னும் நெடுந்தூரம் முன்னேறிச் செல்ல வேண்டியிருக்கிறதென்ற உணர்ச்சியை என்னுலே அடக்கிவைக்க முடியவில்லை! ஏனெனில், எதிர்காலத்தில் இந்திய மக்கள் ஈடேறுவதற்கு உங்களைத்தான் நம்பியிருக்கிருர்கள். பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் படித்து முடித்த பின்னர், பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, நாட்டின் எளிய மக்களை நீங்கள் வழிகாட்டி நடத்திச் செல்லவேண்டியிருக்கும். ஆகையால், மாணவர்களாகிய உங்களுக்குள்ள இந்தப் பொறுப்பை உணர்ந்து, அதை இன்னும் உருவான முறையில் நீங்கள் காட்டவேண்டுமென்று விரும்புகிறேன். படித்துக்கொண்டிருக்கும்போது உயர்ந்த காரியங்களைச் செய்ய வேண்டுமென்கிற மேன்மையான உணர்ச்சி பெரும்பான்மையான மாணவர்களுக்கு இருக்கிறது. படிப்பு முடிந்ததும் இந்த உணர்ச்சி அவர்களை விட்டு மறைந்துவிடுகிறது. இது குறிப்பிடத்தக்கதோர் உண்மை; வருந்தத்தக்க உண்மையுங்கூட. படித்து வெளிவந்த மாணவர்களில் பலர், பணத்தையும் உத்தியோகத்தையும் தேடி அலைகிருர்கள். எனவே, இந்தப் படிப்பு முறையில் ஏதோ ஒருவகையான கோளாறு இருந்துகொண்டிருக்கிறது. ஒரு காரணம் மட்டும் வெளிப்படை. கல்வியைப் பற்றி ஆராய்ந்தோர் அனைவரும் மாணவர்களுடன் சிறிதேனும் தொடர்புள்ளோர் அனைவரும், நமது கல்விமுறையில் ஏதோ ஒரு கோளாறு இருக்கிறது என்பதை எப்படியோ உணர்ந்திருக்கிருர்கள். நாட்டின் நிலைமையையோ, தேவையையோ ஒட்டி இந்தக் கல்விமுறை அமையவில்லை; தரித்திர இந்தியாவுக்கு இது சற்றும் பொருத்தமற்ற விதமாக அமைந்திருக்கிறது. கல்விமுறை, வீட்டு வாழ்க்கை, கிராம வாழ்க்கை ஆகியவற்றுக்கிடையே எவ்விதமான

தொடர்பும் இல்லாது இருந்து வருகிறது. இது ஒரு பெரிய பிரசினை; எனவே, இந்த மாதிரியானதொரு கூட்டத்தில் நீங்களும் நானுமாகச் சேர்ந்து முடிவுகட்டக் கூடிய விஷயமன்று இது.

இருப்பதை வைத்துக்கொண்டு, மாணவர் என்னென்ன காரியங்களைச் செய்தல் கூடும் என்பதையும் நாட்டுக்குரிய சேவையிலே நாம் இன்னும் அதிகமாக என்னென்ன காரியங்களைச் செய்தல் கூடும் என்பதையும் கவனிப்போம். இப்படிக் கவனிக்கும்போது, தங்கள் உள்ளத்தை ஆராய்ந்து, சொந்த நடத்தையில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றே எனக்குத் தோன்றுகிறது. மாணவர்கள் பெரிய பெரிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்க்கிறவர்களுக்கும் இதே கருத்துத்தான் உண்டாகிறது. சொந்த வாழ்க்கையைத் தூய்மையாக்குவதொன்றே திறமையான கல்வி முறையை அமைப்பதற்கு இன்றியமையாத நிபந்தனையாகும். நான் ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சந்தித்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான மாணவர்களோடு எனக்கு அடிக்கடி கடிதப் போக்குவரத்து இருந்துவருகிறது. இடைவிடாது எனக்கு வந்துகொண்டிருக்கும் இந்தக் கடிதங்களில், அவர்கள் தங்கள் உள்ளத்துணர்ச்சிகளை அப்படியே காட்டுகிறார்கள்; என்னிடம் தங்களுடைய அந்தரங்கத்தையெல்லாம் சொல்லுகிறார்கள். இவையாவற்றிலிருந்தும், மாணவர்களிடம் அமைய வேண்டிய இயல்புகள் இன்னும் இருக்கின்றன என்பதையே நான் தெளிவாகக் காண்கிறேன். சொல்லுவதை நீங்களனைவரும் தெளிவாக உணருகிறீர்களென்றே எண்ணுகிறேன், நமது மொழிகளிலே, மாணவன் என்ற சொல்லைக் குறிப்பதற்கு இன்னொரு அழகான சொல் இருக்கிறது. பிரமசாரி என்பதே அந்தச் சொல். வித்யார்த்தி என்ற சொல் நாமாக ஏற்படுத்திக்கொண்ட ஒரு சொல்; 'பிரமசாரி' என்ற சொல்லுக்கு இந்தச் சொல் இணையாகாது. 'பிரமசாரி' என்ற சொல்லின் பொருள் உங்களுக்குத் தெரிந்திருக்குமென நம்புகிறேன். பிரமத்தைத் தேடுபவன், அதாவது, குறுகிய காலத்தில் கடவுள் நிலைக்கு மிக அருகிலே செல்லத்தக்க முறையில் நடந்துகொள்ளுபவன்

என்று பொருள். உலகத்திலுள்ள பெரிய மதங்கள் அனைத்தும் தமக்குள் எவ்வளவுதான் மாறுபட்டபோதிலும், இந்த அடிப்படையான ஒரு விஷயத்தில் மட்டும் முற்றிலும் அவை ஒரே கருத்துடையனவாய் இருக்கின்றன. அதாவது, இறைவனுடைய மகத்தான மாசுமறுவற்ற சிங்காதனத்தின் முன்,- அதாவது கடவுள் சன்னிதானத்திலே,-தூயஉள்ளமில்லாத எந்த ஆணும் பெண்ணும் அணுக முடியாது. உள்ளத் தூய்மையைப் பூரணமாகப் பண்படுத்தி, அதை வளர்ப்பதற்குக் கல்வி உதவியாய் இருக்க வேண்டும். அதற்கு உதவியா யிராத கல்வி பயனுடையதல்ல. எவ்வளவுதான் வேதங்களைப் பாராயணம் பண்ணியிருந்தாலும், சம்ஸ்கிருதம், லத்தீன், கிரீக் பாஷைகளை எவ்வளவுதான் பிழையறக் கற்றாலும், அவற்றால் யாதொரு பயனுமில்லை. அறிவு படைத்ததன் முடிவான நோக்கம் ஒழுக்கத்தை வளர்ப்பதே யாகும்.

ஷிமோகாவில் வசிக்கும் ஆங்கிலேயரொருவர் என்னிடம் வந்தார்; அவரை முன்னமே எனக்குத் தெரியாது. இந்தியா பாரமார்த்திக நெறியில் முன்னேற்ற மடைந்த நாடென்பது உண்மையானால், கடவுளை அறிய வேண்டுமென்ற உண்மையான ஆர்வம், இந்திய மாணவர்களிடம் இல்லாதிருப்பதற்குக் காரணம் யாதென்றும், அவர்களில் பலர் பகவத் கீதைப்பற்றி தெரிந்துகொள்ளாதிருப்பதற் காரணம் யாதென்றும் என்னைக் கேட்டார். மாணவர்களிடம் காணப்படும் இந்தக் குறையை அவர் எப்படியோ கண்டுபிடித்துவிட்டார். இதற்குரிய காரணத்தை, எனக்கு நியாயமென்று தோன்றியதை, விளக்கிச்சொல்லி, சமாதானம் கூறினேன். அதே விளக்கத்தை உங்களிடம் சொல்லவும், மாணவர்களிடம் காணப்படும் இந்த இழிவான குறையைச் சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக்கழித்துவிடவும் நான் விரும்பவில்லை. இங்குள்ள மாணவர்களாகிய உங்களிடம் நான் முதன்முதலாகவும் மனப்பூர்வமாகவும் வேண்டிக்கொள்ளுவது ஒன்று உண்டு. நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உள்ளத்தையே துருவிப்பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால், நான் சொல்லியவை உங்களுக்கு உண்மையென்று தோன்றும் காலத்தில், உங்களைச் சீர்திருத்திக்

கொள்ளவும் உங்கள் வாழ்க்கையை முறைப்படுத்தவும் தொடங்குவீர்கள். உங்களிலே பெரும்பாலோர் ஹிந்துக்களாகவே யிருக்கிறீர்கள். ஹிந்துக்களா யிருப்பவர்கள்,- கீதை போதிக்கிற எளிய அழகுமிக்க உபதேசத்தை, ஜீவன் நிறைந்த தென்று நான் கருதுகிற உபதேசத்தை,- உணர முயலுவீர்க ளென்பதை நான் அறிவேன். கடவுளிடத்து உண்மையான பக்தி செலுத்தாமல், உள்ளத் தூய்மை யடைவது முற்றிலும் அசாத்தியமான முயற்சி. மனப்பூர்வமாகவே உண்மைத் தத்துவத்தில் நாட்டம் உடையவர்கள் அனைவருக்குமே இந்த அனுபவம் உண்டு. இதற்கு ஒருவர்கூட விலக்கல்ல. இந்த உண்மையை நான் துணிந்து சொல்லுவேன். ஆதலால், நீங்கள் எதைச் செய்த போதிலும் கடவுளிடத்துள்ள பற்றுதலை மட்டும் இழந்து விடாதீர்கள். இப் பற்றுதலுக்குரிய நியாயத்தை உங்களுக்கு என்னால் விளக்கிச் சொல்ல முடியாது; ஏனெனில், உண்மையைப் பேசுமிடத்து, அறிவின் எல்லையைக் கடந்த ஒரு நிலையாகும் இது. உண்மையான பணிவு உங்கள் உள்ளத்திலே உதிக்க வேண்டும். இவ் வுலகத்திலிருந்த சிறந்த ஆசாரியர்களும், ரிஷிகளும், ஏனையோரும் மூட, நம்பிக்கையில் தோய்ந்தவர்க ளென்று கருதி, அவர்கள் பெற்றிருந்த அனுபவங்களை ஆய்ந்து பார்க்காமல் நீங்கள் தள்ளிவிடலாகாது. இதை மட்டும் செய்வீர்களானல், நான் சொல்ல விரும்புகிற பிற விஷயங்கள் யாவும் உங்களுக்குப் பளிங்குபோலத் தெளிவாக விளங்கும். இதைக் கொண்டுதான் உங்களுடைய சொல்லும் செயலும் ஒன்றுபோலவே இருக்கின்றன என்பதை நான் அறிய முடியும். கடவுளிடம் உங்களுக்குப் உண்மையான நம்பிக்கை இருக்குமாயின், அவர் படைத்தவற்றுள் மிக அற்பமான உயிர்களிடத்தும் உங்களுக்குப் பரிவு ஏற்படும். ராட்டினம் அல்லது கதராய் இருந்தாலும் சரி, தீண்டாமை, அல்லது பூரண மதுவிலக்குப்போன்றதாயினும் சரி, பால்ய விதவைகள், பால்ய விவாகம் போன்ற சமூகச் சீர்திருத்தங்களாயினும் சரி, இவை யாவும் கடவுள் நம்பிக்கை என்ற ஒன்றிலிருந்தே வெளிப்படுகின்றன என்பது தெரியவரும்.

எனவே, கதரைத் தவிர வேறு எந்தத் துணியையும்

இனிமேல் உபயோகிப்பதில்லை யென்று முடிவாகத் தீர்மானம் செய்வது உங்களுக்கு மிக எளிது. நீங்கள் கதர் அணிந்தால், அதன் பயனாய் பணம் என்பதையே கண்டறியாத எளிய ஜனங்கள் கையில் கொஞ்சம் காசு போய்ச் சேரும். இந்தக் கல்விநிலையத்தில் மட்டும் 1400-க்கு அதிகமான மாணவர்கள் படிக்கிறீர்கள் என்று அறிகிறேன். இங்குள்ள 1400 மாணவர்களும் நாள் ஒன்றுக்கு அரை மணி நேரம் நூற்றாலே நாட்டின் செல்வத்தைத் திட்டமாக, எந்த அளவுக்கு அதிகப்படுத்த முடியும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். தீண்டத்தகாதவர்களென்று சொல்லுகிற மக்களுக்காக, இந்த 1400 பேரும் எவ்வளவோ சேவை செய்ய முடியுமே! பால்ய விவாகம் செய்துகொள்ளுவதில்லை யென்று இந்த 1400 பேரும் உறுதிகொண்டு, அதன்படியே நடக்கிறீர்களென்று வைத்துக்கொண்டால், உங்கள் சமூகத்தில் எவ்வளவு பெரிய சீர்திருத்தத்தைச் செய்தவர்கள் ஆவீர்களென்பதைச் சிறிது கற்பனைக் கண்ணால் பாருங்கள். அப்படி நடப்பது இயலாத காரியமன்று. இந்த 1400 பேருமோ, அல்லது அதில் பெரும் பகுதியினரோ தங்கள் ஓய்வு நேரத்திலாவது, அல்லது ஞாயிற்றுக் கிழமையிலாவது, குடிப்பவர்களிடம் சென்று குடியினால் வரும் கேட்டை அவர்கள் மனதில் பதியும்படி, அன்போடு அவர்களிடம் நயமாக எடுத்துச் சொல்லி, அதை ஒழிக்கும்படி பிரசாரம் செய்து வந்தால், அதனாலே அந்தக் குடிகாரர்களுக்கும் இந்த நாட்டுக்குமே எவ்வளவு மகத்தான சேவையைச் செய்தவர்கள் ஆவீர்கள் என்பதையும் எண்ணிப்பாருங்கள்.

இப்போதுள்ள கேடான கல்விமுறையை வைத்துக்கொண்டே, நீங்கள் மேலே கூறிய காரியங்களைச் செய்ய முடியும். இவற்றைச் செய்வதற்குப் பிரமாதமான முயற்சி செய்யத் தேவை யில்லை, உங்கள் இதயத்தை, நவீன அரசியல் மொழியில் சொன்னால், உங்கள் மனப்பாங்கை மட்டும், சிறிது இதமாக மாற்றிக்கொண்டால் போதுமானது.

இந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்பு

கிறேன். இன்று மாலையில் நம்மை இங்குக் கூட்டிவைத்த புனிதமான சந்தர்ப்பத்தையும், பேச்சு ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட விஷயத்தையும் கவனிப்பீர்களாயின், இச் சந்தர்ப்பத்தை நீங்கள் நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளுவீர்கள் என்று நினைக்கிறேன். லௌகீகம் தெரிந்த ஒருவர், தமது குடும்பத்தில் நேர்ந்த துக்க காரியத்தை யொட்டி இம் மாதிரியான கூட்டத்தில் கலந்துகொள்ளா மல் விலகியிருக்கலா மென்று எண்ணிச் சமாதானம் அடைந்துவிட்டால், அவர் செய்தது நியாயமான காரிய மென்றே சொல்லிவிடலாம்; உலகத்தாரும் அதை நியாய மென்று ஒப்புக்கொள்ளுவார்கள். ஆனால், இத்தகைய சொந்தத் துயரத்தை யெண்ணி மட்டும் மனம் வருந்துவதை விட்டுவிட்டு, அந்தச் சிந்தனையை யெல்லாம் கடவுளின் சேவைக்கும் மனித சமுதாயத்தின் சேவைக்கும் உதவியா யிருக்கிற சிந்தனையாகவும் செயலாகவும் மாற்றிக்கொண்டு விட்டால், அதில் எத்தகைய சிறப்பும் பெருமையும் வெளிப் படுகிறது!

நான் கூறிய சில மொழிகளை அறிந்துகொள்ளக் கடவுள் உங்களுக்கு அருள்புரிவாராக. நீங்கள் என்னை வரவேற்று உபசரித்ததற்காகவும், எனக்கு அளித்த பண முடிப்புக்காகவும் மீண்டும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாணவர்களும் கீதையும்

"சமய உணர்ச்சி இந்தியாவில் அறவே ஒழிந்துவிடாமல் இருக்க வேண்டுமாயின், இந்திய இளைஞர்களுக்கு உலகியல் சம்பந்தமான கல்வி யளிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு, சமய சம்பந்தமான கல்வி அளிப்பதும் அவசிய மாகும்."

கிறிஸ்தவ மதப்பிரசாரகரான நண்பர் ஒருவருடன் பேசிக்கொண் டிருந்தபோது ஒரு நாள் அவர் என்னை ஒரு கேள்வி கேட்டார்: 'ஒருசிலரைத் தவிர, இந்திய மாணவர் அனைவருமே தங்கள் சமயத்தைப்பற்றி அறிந்து கொள்ளாம லிருக்கிறார்களே! பகவத் கீதையைப்பற்றிக் கூடச் சிறிதும் தெரிந்துகொள்ள வில்லையே! உண்மையிலேயே, இந்தியா பாரமார்த்தீக நெறியில் பெரிதும் முன்னேற்ற மடைந்த நாடாயிருப்பின் மாணவர்கள் ஏன் இப்படி இருக்கிறார்கள்?' என்று கேட்டார். மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதிலே அவரும் ஈடுபட்டவர். மாணவர்களைச் சந்திக்கும்போ தெல்லாம் அவர்களுடைய மதக் கோட்பாடு, பகவத் கீதை, இவற்றைப்பற்றி அவர்களுக்கு ஏதாவது தெரியுமா என்று தாம் கேட்பதுண்டென்றும் சொன்னார். அப்படிச் சந்தித்த மாணவர்களில் அனேகருக்குச் சமய அறிவோ, கீதையைப் புற்றிய அறிவோ இல்லை யென்று கண்டதாகவும், தம் வாதத்தை உறுதிப்படுத்தும் முறையிலும் பேசினார்.

சில மாணவர்களுக்குத் தங்கள் சமயத்தைப்பற்றி ஒன்றுமே தெரியவில்லை யென்பதற்காக, இந்தியா பாரமார்த்தீக நெறியில் முன்னேறிய நாடல்ல வென்று அவர் கொண்டுள்ள முடிவைப்பற்றி இப்போது நான் பேச எண்ணவில்லை. சமய நூல்களை மாணவர் படிக்கவில்லை என்பதனாலேயே, சமயத்துக்கே இடம் இல்லை யென்று ஏற்பட்டுவிடாது; மாணவர்களின் சொந்த நாட்டினரிடையே சமய உணர்ச்சி குறைவு என்பதையும் அது குறிக்காது. ஆனால், அரசாங்கக் கல்வி நிலையங்களில் கல்வி கற்று வெளிவருகிற மாணவர்களில் பெரும்பான்மையோருக்கு சமய அறிவே இல்லை. மேற்சொன்ன கிறிஸ்தவ மதப்பிரசாரகர், மைசூர் மாணவர்களையே குறிப்பிட்டார்.

மைசூர் மாணவர்களுக்குக்கூடத் தங்கள் சமஸ்தான பள்ளிக்கூடங்களில் சமய சம்பந்தமான அறிவு போதிக்கவில்லை யென்பதை அறிய எனக்கு மிக்க வருத்தமா யிருக்கிறது. பொதுப் பாடசாலைகளில் உலகியல் கல்வியை மட்டும் கற்றுக்கொடுத்தால் போதும் என்று ஒரு சாரார் எண்ணுகிறார்கள். இதை நான் அறிவேன். உலகத்திலுள்ள அத்தனை மதங்களும் இந்தியாவில் நடைமுறையிலிருக்கின்றன. ஒரே மதத்தில் பல பிரிவுகள். இந்த நிலையில், இந்தியப் பள்ளிக்கூடங்களில் சமய சம்பந்தமான கல்வி போதிப்பதில் சிறிது சிரமம் இருக்கவே செய்யும். சமய உணர்ச்சி இந்தியாவில் அறவே ஒழிந்துவிடாமல் இருக்க வேண்டுமாயின் இந்திய இளைஞர்களுக்கு உலகியல் சம்பந்தமான கல்வி அளிப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு சமய சம்பந்தமான கல்வி அளிப்பதும் அவசிய மாகும். சமய நூல்களைப் படித்துத் தெரிந்துகொள்ளுவது மட்டும், சமயத்தைச் சரியானபடி தெரிந்துகொள்ளுவது ஆகாது என்பது உண்மையே. ஆனால், சமய வாழ்க்கையைப் பின்பற்ற முடியாதபோது, அதற்கு அடுத்தபடியாகவுள்ள புத்தக அறிவையாவது சிறுவர் சிறுமியருக்கு ஊட்ட நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். தவிர, சமயக் கல்வி, பள்ளிக்கூடங்களில் போதிக்கப்பட்டாலும் சரி, படாவிட்டாலும் சரி, வயதுவந்த மாணவர்கள் மற்ற விஷயங்களில் சொந்தமாகத் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொள்ளுவது போல, சமய விஷயங்களிலும் தங்கள் அறிவைத் தாங்களே பெருக்கிக்கொள்ள முயல வேண்டும். அவர்கள் விவாதங்கள் செய்வதற் கென்று சொந்தத்தில் ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண் டிருப்பதுபோல, இப்போது நூற்பவர்கள் சங்கமும் ஏற்படுத்தி யிருப்பதுபோல, சமய அறிவுக்காகவும் தாங்களே ஒரு வகுப்பை அவர்கள் ஆரம்பிக்கலாம்.

ஷிமோகாவில், கல்லூரியுடன் இணைத்துள்ள பாடசாலை மாணவர்களிடையே நான் பேச நேர்ந்தது. அந்தக் கூட்டத்தில் விசாரித்தபோது, அங்கிருந்த நூறு, அல்லது நூற்றுக் கதிகமான ஹிந்து மாணவர்களில், எட்டுப் பேர் கூடப் பகவத்கீதையைப் படிக்கவில்லையென்று கண்டேன். இவ்விதம் படித்தவர்களில் யாருக்காவது அதன் பொருள்

தெரியுமா வென்று கேட்டபோது, ஒருவர்கூடக் கைதூக்க வில்லை. ஆனால், அங்கிருந்த ஐந்து, அல்லது ஆறு முஸ்லீம் மாணவர்களோஎல்லோருமே குரானைப் படித்திருப்பதாகக் கை தூக்கினார்கள். ஆனால், இவர்களில் ஒருவர் மட்டுமே குரானைப் புரிந்துகொண் டிருப்பதாகச் சொன்னார். கீதையோ, எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு நூல். சமா தானம்சொல்லுவதற்குக்கஷ்டமான சிலஅடிப்படையான பிரசினைகளைக் கீதைஎழுப்புவதுஉண்மைதான். ஆயினும், கீதையின் பொதுவான போக்குச் சந்தேகத்திற்கு இடமில் லாமல் தெளிவுடன் இருக்கிற தென்றே நான் நினைக்கி றேன். ஆதாரபூர்வமான சாஸ்திர மென்று ஹிந்து மதத் தின் எல்லாப் பிரிவினரும் கீதையை ஒப்புக்கொள்ளுகிறார் கள். ஒன்றை இப்படித்தான் செய்ய வேண்டு மென்று அதிகாரத்தோடு சொல்லுவது கீதையின் முறையல்ல. பூரணமான அறிவோடு ஒட்டிய ஒழுக்க விதிகள் அனைத்தை யும் சுருக்கமாக அது சொல்லுகிறது. அறிவுக்கும் உணர்ச் சிக்கும் அது ஒருங்கே திருப்தி அளிக்கிறது. எனவே, அது தத்துவ நூலாகவும் பக்தி நூலாகவும் இருக்கிறது. அது, உலக மக்கள் அனைவரையுமே நோக்கிச் சொல்லிய ஒரு நூல். அதன் நடையோ, நம்ப முடியாத அளவு எளிமையா யிருக்கிறது. கீதையின் சரியான மொழிபெயர்ப்பு இந்திய மொழி ஒவ்வொன்றிலும் இருக்கு மென்று நினைக்கிறேன். சாதாரண மக்களுடைய பாஷையில் வழங்காத கடுமை யான சொற்களை விலக்கியும், சாதாரண அறிவுடைய மக் களுக்குமே கீதையின் போதனை புரியும்படியாகவும், இந்த மொழிபெயர்ப்புகளெல்லாம் அமைய வேண்டும். மூலத் திற்குப் பதிலாக மொழிபெயர்ப்பையே வைத்துக்கொள் ளலா மென்று நான் சொல்ல வரவில்லை. ஒவ்வொரு ஹிந்துச் சிறுவனும் சிறுமியும் சம்ஸ்கிருதம் படிக்க வேண்டு மென்ற எனது அபிப்பிராயத்தை இங்கே திரும்பவும் வற்புறுத்திக் கூறுகிறேன். ஆனால், இன்னும் நெடுங்காலம் வரை சமஸ்கிருதம் தெரியாத ஜனங்கள் கோடிக்கணக் காக இருப்பார்கள். சம்ஸ்கிருதம் தெரியவில்லை யென்பதற் காக,கீதையின் போதனையை அறியாத நிலையில் அவர்களை வைத்திருப்பது, தற்கொலை செய்துகொள்ளுவதை ஒக்கும்.

ஹிந்து மாணவர்களும் கீதையும்

"பைபிளிலும் குரானிலும் எந்தக் கடவுளை காண்கிறேனே, அதே கடவுளை, பகவத்கீதையிலும் காண்கிறேன். எனவே, பகவத் கீதையிலிருந்து சிறந்த ஒரு மனவெழுச்சியை-ஒப்பற்றதொரு ஞானத்தை - ஹிந்து மாணவர்கள் அடைய முடியு மென்று சொல்ல விரும்புகிறேன்; ஏனெனில், மற்றெந்த நூலையும் விட, கீதையே அவர்களது மனப்பண்புக்கு ஏற்றதொரு நூலாக இருக்கும்."

மன்னார்குடி மாணவர்களிடையே பேசியபோது, காந்திஜி பின் வருமாறு பேசினார் :

பூரணத்துவம் என்பது கடவுளுக்கே யுரிய இயல்பு. அதை விவரிக்க முடியாது; விளக்கிச் சொல்லவும் முடியாது. மனித சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவனும் பூரண நிலைமையை அடைய முடியு மென்று நான் நம்புகிறேன். பரிபூரணனு யிருக்கிற கடவுளைப்போல, நாமும் பரிபூரண நிலையை யடைய அவசியம் ஆசைப்பட வேண்டும். பூரண நிலையை யடைய ஆசைப்படுவது எல்லோருக்கும் அவசியந் தான்; ஆனால், அந்த உன்னத நிலையை யடைந்தவுடன் அது இன்னதுதான் என்று விவரித்துச் சொல்லுவது முடியாத காரியம். ஆதலால், வேதங்களும், குரானும், பைபிளும் கடவுள் அருளிய அருள்மொழிகளாம் என்று மிக்க பணிவோடு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பக்குவமடையாத அபூர்ண நிலையிலுள்ள நாம், எண்ணற்ற ஆசைகளால் அங்கும் இங்கும் அலைக்கப்படுகிறோம். எனவே, கடவுள் அருளிய இந்த நூல்களின் பொருளை முற்றிலும் நம்மால் தெரிந்துகொள்ள முடியவில்லை. தம்மைப் போஷிக்க உதவியாயிருந்த பரம்பரையான சம்பிரதாயங்களை அடியோடு பெயர்த்தெறிய வேண்டா மென்று ஹிந்துச் சிறுவர்களுக்குச் சொல்லுகிறேன். இதைப் போலவே, முஸ்லிம் சிறுவர்களும் கிறிஸ்தவச்சிறுவர்களும் தங்கள் தங்கள் சம்பிரதாயங்களை வேரோடு பெயர்க்க முயலலாகா தென்று சொல்லுகிறேன்.

எனவே, குரானையும் கிறிஸ்துவின் போதனையையும் நீங்கள் படிப்பதை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில், கீதையையும் ஹிந்து மாணவர்கள் அனைவரும் கட்டா

யம் படிக்க வேண்டு மென்று, எனக்கு அதிகாரம் இருக்கும் பட்சத்தில் வற்புறுத்திக் கூறுவேன். இன்று, பள்ளிக் கூடங்களில் படிக்கிற மாணவர்களிடம் தூயதன்மை இல்லவே இல்லை; வாழ்க்கையில் மிக மிக முக்கியமானவை யென்று கருதக்கூடிய விஷயங்களில் அவர்களுக்குச் சிரத்தை யில்லாமல் இருக்கிறது. மேன்மையானவற்றை யும் வாழ்க்கைக்கே ஆதாரமானவற்றையும் அற்ப விஷ யங்க ளென்று கருதி அவர்கள் உதறித்தள்ளிவிடுகிறார்கள். தங்களைப் போஷிக்க உதவிய சம்பிரதாயங்களை மாணவர் கள் அடியோடு தகர்த்தெறிய முற்பட்டதனால் வந்த வினையே யாகும் இது.

நான் சொல்லுவதைத் தப்பாக அர்த்தம் செய்து கொண்டு விடாதீர்கள். பழைய தென்ற ஒரு காரணத்தின லேயே பழையன வெல்லாம் நல்லவை என்று நான் சொல்லவில்லை. கடவுள் அளித்துள்ள அறிவைப் பலி கொடுத்துவிட்டு, புராதன பழக்க வழக்கங்களை ஆதரிக் கும்படி நான் பரிந்து பேசவில்லை. எந்தப் பழக்க வழக்க மாயினும் சரி, அது எவ்வளவு புராதனமா யிருப்பினும்சரி, ஒழுக்கநெறிக்குப் புறம்பானதாக இருப்பின், அதை நாட்டிலிருந்து அடியோடு தொலைத்துவிடுவதுதான் சரி யான முறை. தீண்டாமை என்பது பண்டைக் காலத்து வழக்கங்களில் ஒன்றாகக் கருதப்படலாம். பால்ய விவாக மும், அதன் பயனாக பால்ய விதவைகள் ஏற்படுவதும், பண்டைக் கால வழக்கங்களாகக் கருதப்படலாம். இவை போன்ற இன்னும் எத்தனையோ கொடிய மூடப் பழக்கங் களையும் பழமையானவை என்று கருதலாம். எனக்கு மட்டும் அதிகாரம் இருக்குமானால், இவற்றை யெல்லாம் ஒரேயடியில் ஒழித்துவிடுவேன். ஆகவே, பண்டைக்காலத் துச் சம்பிரதாயங்களைப் போற்ற வேண்டு மென்று சொல் லும்போது, எந்தக் கருத்தோடு சொல்லுகிறேன் என்பதை இதிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்ள முடியும். பைபிளி லும் குரானிலும் எந்தக் கடவுளை காண்கிறேனே, அதே கடவுளை, பகவத் கீதையிலும் காண்கிறேன். எனவே, பகவத் கீதையி லிருந்து சிறந்த ஒரு மனவெழுச்சியை-ஒப்பற்றதொரு ஞானத்தை-ஹிந்து மாணவர்கள் அடைய முடியு மென்று சொல்ல விரும்புகிறேன். ஏனெனில், மற்றெந்த நூலையும்விட, கீதையே அவர்களது மனப்பண் புக்கு ஏற்றதொரு நூலாக இருக்கும்.

கீதையே நமது அன்னை

"கீதையே அகிலத்துக்கும் அன்னை; எவரையும் அவள் புறக்கணிப்பதில்லை. அவளது வீட்டு வாயில் திறந்தே கிடக்கும். விரும்புவோர் யாரும் தாராளமாக உள்ளே போகலாம்; கீதையில் உண்மையான பக்தியுடையவர் எவருக்கும் ஏமாற்றம் என்பதே இன்னதென்று தெரியாது. அறிவின் எல்லையைக் கடந்துள்ள நிரந்தரமான ஓர் ஆனந்தத்தையும் சாந்தியையும் அவர்கள் எப்போதும் அநுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்"

காசி விசுவ வித்தியாலய மாணவர்களுக்குக் கீதையைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறும்படி ஆச்சாரியர் ஆனந்த சங்கர துருவர் என்னைக் கேட்டுக்கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்குக் கொஞ்சம் தயக்கத்தோடு தான் நான் இணங்கினேன். அவரைப் போன்ற ஞானி முன்னிலையில், கீதையைப்பற்றிப் பேச, தத்துவ ஞானம் ஒருசிறிதும் இல்லாத சாதாரண மனிதனாகிய எனக்கு என்ன உரிமை யுண்டு? அவரிடமுள்ள பூரண பாண்டித்தியமோ, நமது பூர்வீக சமய இலக்கியங்களில் நுட்பமான பயிற்சியோ என்னிடம் இல்லை; பண்டித மாளவியாஜிக்குத்தான் இருக்கிறதென்று சொல்லலாம். பண்டிதர்கள் நிறைந்த இந்தக் காசி நகரத்திலே, பண்டித மாளவியாஜி, ஆச்சாரியர் துருவர் போன்ற பண்டிதர்களின் மத்தியிலே, சர்தார் வல்லபாய் படேலையும் என்னையும் போன்றவர்களுக்கு இடமுண்டா? தோட்டிகளும், உழவர்களும், நெசவுக்காரர்களுமாகிய நாங்கள் இவ்வித சபைகளில் தோன்றுவது பொருத்தமான காரியமா என்று, இன்று காலையில், சர்தார் வல்லபாய் தமக்கேயுரிய நயமான முறையில், என்னைக் கேட்டார்; அவர் கேட்டதும் ஒருவாறு சரிதான். ஆனால், ஏதோ அதிகம் படித்திருப்பதாக எண்ணிக் கொண்டு நான் இங்கே பேச வரவில்லை. என்னையும் சர்தாரையும் போன்ற சாமானிய மக்கள் கீதையைப் படிப்பதனால் எவ்விதப் பயனடைகிறார்கள் என்பதைச் சொல்லவே நான் இங்கு வந்திருக்கிறேன். சிறையிலிருந்த காலத்தில், கீதை சர்தாரின் உள்ளத்தை எவ்வளவு தூரம் கவர்ந்ததென்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். எரவாடச் சிறையில் இருந்தபோது, உணவினால் கிடைப்பதைவிட மேலான

பலத்தையும் ஆதரவையும் அந்த அருள் நூல் அவருக்கு அளித்தது. அதை உங்களுக்குத் தெரிவிக்கவே நான் இங்கு வந்திருக்கிறேன். கீதையை ஸம்ஸ்கிருத மூலத்தி லேயே படிக்க விரும்பி, பண்டித சதாவலேகர் எழுதிய ஸம்ஸ்கிருதச் சுவபோதினியை வைத்துக்கொண்டு, சர்தார் படேல் ஸம்ஸ்கிருதம் படிக்க ஆரம்பித்தார். படிக்க ஆரம் பித்தது முதல் அந்தப் புத்தகம் அவர் கையைவிட்டு அக லவே யில்லை. காலையிலிருந்து இரவுவரை அவர் அதிலேயே மூழ்கி யிருந்தார். வேலையே இல்லாத மனம் ஏதாவது ஒன்றைக் கட்டிக்கொண்டு அழாமல் தீருமா என்று நீங்கள் நினைப்பீர்கள்; அதற்காக வேண்டி, சர்தார் கீதையைப் படிக்கவில்லை. ஆழ்ந்து சிந்தனை செய்து முடிவுகட்டிய பிறகே அவர் அதைப் படிக்க ஆரம்பித்தார். "கிறிஸ்தவர் களுக்குப் பைபிள் போலவும், முஸ்லிம்களுக்குக் குரான் போலவும் ஹிந்துக்களுக்கு இருக்கத்தக்க நூல் எது?' என்று எங்களையே நாங்கள் கேட்டுக்கொண்டோம். அது வேதமா? அல்ல. பாகவதமா? அல்ல. தேவி புராணமா? அதுவு மல்ல. வாழ்க்கையில் ஏற்படும் எத்தனையோ சோத னைகளிலும் ஆசைகளிலும் நம்மை என்றும் கைவிடாமல் வெற்றிகரமாக வழிகாட்டி நடத்திச் செல்லக்கூடிய சமய நூலொன்று மிக்க அவசியமான தென்பதை எனது இளமையிலேயே நான் உணர்ந்தேன். அப்படிப்பட்ட நூல் வேதம் அல்ல என்பதையும் கண்டேன். ஏனெனில் காசி போன்ற இடத்தில் இருந்துகொண்டு, குறைந்த பட் சம் பதினைந்து, அல்லது பதினாறு வருஷங்கள் மிக்க சிரத் தையோடு படித்தாலொழிய, வேதங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள முடியாது. இப்படிப் படிக்க நான் அப்போது தயாரா யில்லை. கீதையோ 700 சுலோகங்களுக் குள்ளேயே சகல சாஸ்திரங்கள், உபநிடதங்கள் முதலியவற் றின் சத்தைச் சுருக்கித் தருகிற தென்று எங்கேயோ படித்தேன். உடனே தீர்மானம் செய்துவிட்டேன். கீதையைப் படிக்கும் பொருட்டு, ஸம்ஸ்கிருதம் கற்றுக் கொண்டேன். இன்று, கீதை எனக்குப் பைபிளாகவும், குரான் ஆகவும் மட்டு மல்ல, இவற்றை யெல்லாம்விட அது எனக்கு மிகச் சிறப்புடையது. கீதையே எனது அன்னை. என்னை ஈன்றெடுத்த அன்னை மானிட வடிவிலிருந்து

நெடுங் காலத்திற்கு முன்னரே மறைந்துவிட்டார். ஆனல், அழிவற்ற இந்த அன்னேயோ, பூரணமாக, சகல அம்சங்களிலும் எனது சொந்தத் தாயைப் போலவே அன்று முதல் என் பக்கத்தி லிருந்து எனக்கு உதவி செய்துவருகிருள். இவளுக்கு என்றும் மாறுதலில்லே; இவள் என்னே ஒரு நாளும் கைவிட்டதில்லே. எந்த இன்னல் வந்தபோதிலும், எப்படிப்பட்ட கவலே வந்தபோதிலும், இந்த அன்னேயின் மடியிலே நான் சரண் புகுந்துவிடுவேன். தீண்டாமையை ஒழிக்கும் பொருட்டுத் தொடுத்திருக்கும் போராட்டத்தில், அறிவில் சிறந்த பெரியவர்கள் சொல்லுகிற முரண்பாடான அபிப்பிராயங்களே, அடிக்கடி நான்எதிர்க்கும்படி நேரிடுகிறது. தீண்டாமை என்ற பெயரில் இன்று நாம் கடைப்பிடித்து வருகிற இந்தத்தீண்டாமையானது, ஹிந்து மதத்தில் இருந்ததென்பதற்கு என்றுமே ஆதாரமில்லேயென்று அவர்களில் சிலர் சொல்லி, தீண்டாமையை ஒழிக்க நான் மேற்கொள்ளும் முயற்சிக்கு ஆசி கூறுகிருர்கள். ஆனல், வேறு சிலர், ஆரம்ப முதலே தீண்டாமை என்பது ஹிந்து மதத்தில் ஒரு முக்கிய அம்சம் என்று சொல்லி வாதிக்கிருர்கள். இப்படிப்பட்ட நிலேயில் யார் சொல்லுவதை அதிகாரபூர்வமானதாகக் கொண்டு நான் பின்பற்றுவது? எனக்கு ஒரே குழப்பந்தான். வேதங்களும் ஸ்மிருதிகளும் இந்தக் குழப்பத்தைத் தெளிவுபடுத்தவில்லே. இறுதியில், என் அன்னேயிடம் சென்று, 'தாயே! கல்விமான்களான இப் பண்டிதர்கள் என்னே ஆபத்தில் விட்டுவிட்டார்கள். இந்தச் சங்கடமான நிலேயிலே எனக்கு உதவி செய்ய வேண்டும்.' என்று முறையிட்டேன். 'ஒன்பதாவது அத்தியாயத்தில் நான் உறுதியாக ஒரு விஷயம் சொல்லி யிருக்கிறே னல்லவா? அந்த உறுதி மொழி பிராமணர்களுக்கு மட்டும் உரிய தன்று; பாவிக்கும், தாழ்த்தப்பட்டவனுக்கும், சொத்துரிமை யிழந்தவனுக்கும் எல்லோருக்குமே அது உரியதாகும்' என்று என் அன்னே முகத்திலே புன்னகை தவழ விடை யளிக்கிருள். ஆனல், அன்னேயினுடைய வாக்குறுதியை நாம் கண்ணியமுடையதாகச்செய்ய வேண்டுமானல், நாம்அவளுக்குக்கீழ்ப்படிந்து நடந்துகொள்ளுவதோடு,விசுவாசம்நிறைந்தகுழந்தைகளாகவும் இருக்க வேண்டும்; போலி அன்பு காட்டி விசுவாசம்

அற்றவர்களாகவும் சொன்னபடி கேளாதவர்களாகவும் இருத்தல் கூடாது.

கீதையைப் பாமர மக்கள் புரிந்துகொள்ள முடியாது என்று சில சமயம் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவது ஆதாரமில்லாத பேச்சென்று நான் துணிந்து கூறுவேன். காலஞ்சென்ற லோகமானிய திலகர் கடல் போல் பரந்த கல்வியுடையவர்; விரிந்த ஆராய்ச்சியும் உடையவர். இவற்றின் துணைகொண்டு நிலைபேறுடைய தான ஒரு வியாக்கியானத்தை அவர் எழுதி யிருக்கிறார். அவருக்குக் கீதையானது, அறிவைச்செலுத்தி ஆராய்வதற் கேற்ற பேருண்மைகளடங்கிய நிலையமாயிருந்தது. ஆனால், இதைக் கண்டு சாமானிய அறிவு உடையோர் கீதையைப் படிப்பதற்கு அஞ்ச வேண்டியதில்லை. கீதையிலுள்ள 18 அத்தியாயங்களையும் பயில்வது உங்களுக்குக் கஷ்டமாகத் தோன்றினால், முதல் மூன்று அத்தியாயங்களை மட்டும் கருத்தோடு படித்தாலே போதும். எஞ்சிய 15 அத்தியாயங்களில் விரிவாகவும் பலவகையான நெறிகள் பற்றியும் விளக்கிக் கூறியுள்ள விஷயங்கள் இந்த மூன்று அத்தியாயங்களில் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று அத்தியாயங்களையும் சுருக்கி, இவற்றிலிருந்து சில சுலோகங்களை மட்டுமே எடுத்துக்கொண்டாலும் போதுமானது. இந்த உண்மையோடுகூட, இன்னொரு விஷயத்தையும்நாம்கீதையில்தெரிந்துகொள்ளுகிறோம். குறிப்பாக, மூன்று இடங்களிலே, கீதையானது, ஒவ்வொரு படியாக மேலே சென்று, குழப்பத்தைத் தருகின்ற வெறும் தத்துவ நெறிகளனைத்தையும் கடந்து, பரம்பொருளாகிய கடவுள் ஒருவரிடமே அடைக்கலம் புகும்படி நமக்கு உணர்த்துகிறது. இதைப் படித்த பின்னரும், கீதையின் உபதேசம் சாமானிய மக்கள் அறிந்துகொள்ள முடியாத வண்ணம் நுட்பமாகவும்சிக்கலாகவும்இருக்கிறதென்றுசொல்லுவது, எவ்வளவு ஆதாரமற்ற கூற்று என்பதை நாம் காணலாம். கீதையே அகிலத்துக்கும் அன்னை. எவரையும் அவள் புறக்கணிப்பதில்லை. அவளது வீட்டு வாயில் திறந்தே கிடக்கும்; விரும்புவோர் யாரும் தாராளமாக உள்ளே போகலாம். கீதையில் உண்மையான பக்தியுடைய எவருக்கும் ஏமாற்றம் என்பதே இன்னதென்று தெரியாது.

அறிவின் எல்லையைக் கடந்துள்ள நிரந்தரமான ஆனந்தத்தையும் சாந்தியையும் அவர்கள் எப்போதும் அனுபவித்துக்கொண் டிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சாந்தியும் ஆனந்தமும் சந்தேகப் பேர்வழிக்கும், அறிவையோ, படிப்பையோபற்றிக் கர்வம்கொண் டிருப்பவனுக்கும் கிட்டாது. நம்பிக்கை நிறைந்து, சித்தம் ஒன்றி, பணிவுடைய உள்ளத்தோடு வழிபடுபவர்களுக்கே அந்தப் பாக்கியம் கொடுத்து வைத்திருக்கிறது. இந்த உணர்ச்சியோடு, கீதையை வழிபட்டு ஏமாற்றம் அடைந்தவர் யாருமே இல்லை.

நம் மாணவர்களின் மன அமைதியை, அற்ப விஷயங்கள் குலைத்துவிடுகின்றன. பரீட்சையில் தவறிப் போவது போன்ற சிறிய விஷயமும் அவர்களுக்குப் பெரிய ஏக்கத்தை உண்டுபண்ணிவிடுகிறது. வெளிக்குத் தோல்வி எனத் தோன்றியபோதிலும்கூட, விடாமுயற்சியோடு, தம் கடமையைச் செய்ய வேண்டு மென்கிற உணர்ச்சியை, கீதை அவர்களுக்கு ஊட்டுகிறது. நமது கடன் பணி செய்துகிடப்ப தொன்றுதான். பலனை எதிர்பார்க்க நமக்கு உரிமை இல்லை என்றும், ஆழ்ந்து நோக்கினால், வெற்றியும் தோல்வியும் ஒன்றேதான் என்றும் கீதை நமக்குப் போதிக்கிறது. தற்காலிகமாகத் தோன்றி மறையும் ஆசைகளுக்கும் ஒழுக்க வரம்பைமீறிய உணர்ச்சிகளுக்கும் அடிமையாகி, மனதை இந்திரிய இன்ப எண்ணங்களில் அலையவிடாமல், கடமை யொன்றை மட்டுமே செய்வதற்கு உடலையும் உள்ளத்தையும் உயிரையும் அர்ப்பணம் செய்யும்படி கீதை நம்மை அழைக்கிறது. சத்தியாக்கிரகி என்ற முறையில், கீதை எனக்கு எப்போதும் புதிய புதிய பாடங்களைக் கற்பித்த வண்ணம் யிருக்கிறது எனலாம். இப்படி நான் நினைப்பதை வெறும் பிரமை என்று சிலர் சொல்லக் கூடும்; பிரமையா யிருந்தாலும், அந்தப் பிரமையை, எனக்குக் கிடைத்துள்ள ஒப்பற்ற ஒரு செல்வமாகப் பாவித்து நான் போற்றிவருவேன். இதுவே நான் அவர்களுக்கு அளிக்கக்கூடிய பதில்.

அதி காலையில் கீதையைப் பாராயணம் செய்வதை நாள்தோறும் முதல் வேலையாகக் கொள்ளும்படி மாணவர்களுக்கு நான் ஆலோசனை கூறுவேன். எனக்குத் துளஸிதாஸரிடம் அபாரப் பிரீதி யுண்டு; நான் அவருடைய

பக்தன். துன்பத்தால் வாடி வருந்தும் இந்த உலகுக்கு, எல்லா வியாதிகளையும் குணப்படுத்துகிற மந்திரமாகிய ராம நாமத்தைத் தந்த அந்த மகாத்மாவை நான் வணங்குகிறேன். ஆனால், உங்கள் முன்துளஸிதாஸரைப்பற்றிப் பேசுவதற்காக நான் இங்கு வரவில்லை. நீங்கள் கீதையைப் படிக்க வேண்டும்; பிழைகளைத் தேடுகிற நோக்கோடும் குறை குணங்களை ஆராய்கிற நோக்கோடும் இன்றி, மெய்யான பயபக்தியோடு கீதையைப் படிக்கும்படி உங்களை வேண்டவே வந்திருக்கிறேன். இந்த உணர்ச்சியோடு கீதையைப் படித்தால், உங்களுக்கு வேண்டியதை யெல்லாம் அதிலிருந்து பெறலாம். 18 அத்தியாயங்களையும் மனப்பாடம் செய்வது எளிதான காரியமல்ல என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்; ஆனால், மனப்பாடம் செய்வதற்குக் கட்டாயம்முயலவேண்டும். இந்த இனியஅமுதத்தை நீங்கள் ஒரு தரம் ருசிபார்த்துவிட்டால், அப்புறம் அதன் மீது உங்களுக்குள்ள அன்பு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகும். கஷ்டமான காலங்களில் கீதையின் சுலோகங்களைப் பாராயணம் செய்தால், அது உங்களுக்கு உற்சாகம் அளிக்கும்; துன்பத்திலும் அந்தகாரத்தில் தனிமையாக அடைபட்டுக்கிடக்கும்போதும் கீதை உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். உயிர் நீங்கும் தருவாயிலுங் கூட, இந்தச் சுலோகங்களை உங்கள் நா உச்சரிக்குமானால் நீங்கள் வீடுபேறடைவது திண்ணம். அந்த வீடுபேறு - அதாவது அந்தப் பேரின்ப நிலை - எப்படிப்பட்டதென்பதை விளக்கிக் காட்டும் பொறுப்பை அறிவிற்சிறந்த உங்கள் ஆசிரியர்களுக்கு விட்டுவிடுகிறேன்.

பிரார்த்தனையில் நம்பிக்கை இல்லையா?

"கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை நிரூபிக்க முடியாது; நிரூபிக்கத் தேவையு மில்லை. கடவுள் ஒருவர் உண்டு, அவர் இருக்கிறார் என்பதை உணராவிட்டால், அதனால் நமக்குத்தான் கேடு. கடவுளைப்பற்றிய உணர்ச்சியே இல்லாதிருப்பது, பிணிவாய்ப்பட்ட நிலை போன்றது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இந்தப் பிணியிலிருந்து ஒரு நாள் நாம் விடுபடுவோம் என்பது நிச்சயம்."

கடவுளை வழிபடும் பொருட்டுக் கூடுகிற மாணவர் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தனக்கு விருப்பம் இல்லை என்றும், அதற்காகத் தன்னை மன்னித்துவிடும்படியும் கேட்டுக்கொண்டு, ஒரு மாணவர் தான் படிக்கிற தேசியக் கல்விநிலையத் தலைமை ஆசிரியருக்குப் பின்வருமாறு எழுதுகிறார்:

"வழிபடுவதற்குரிய கடவுள் என்கிற எந்தப் பொருளிலும் எனக்கு நம்பிக்கை யில்லை; ஆதலால், வழிபாட்டிலும் நம்பிக்கை யில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்னைப் பாதுகாக்க கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற அவசியம் எனக்கு எப்போதுமே ஏற்பட்டதில்லை. கடவுளைப்பற்றிய சிந்தனை எதுவுமின்றி, அமைதியாகவும் உண்மையாகவும் எனது திட்டப்படி வேலை செய்துகொண்டு போவதனால் எனக்கு வந்துவிடக்கூடிய நஷ்டம் என்ன?

"கூட்டமாகச் சேர்ந்து இறை வழிபாடு செய்வதில் யாதொரு பயனும் இல்லை. இத்தனை பெரிய கூட்டம் சேர்ந்து எந்த விஷயத்திலும்—அது எவ்வளவு அற்பமானதா யிருப்பினும் சரியே—மனதை ஒருமுகப்படுத்த முடியுமா? கடவுள் என்றும், உயிர் என்றும், மக்கள் அனைவரும் சமமானவர்கள் என்றும், இன்னும் இவைபோன்ற பல தடபுடலான சொற்களையும் சொற்றொடர்களையும்பற்றி, பெருமைமிக்க நமது சாஸ்திரங்கள் பேசுகின்றன. ஒன்றுமறியாத நமது சிறு குழந்தைகள்—ஒரே விஷயத்தில் நிற்காமல், சஞ்சலப்படும் மனநிலையுடைய குழந்தைகள்—வெகு வெகு நுட்பமான இந்தச் சாஸ்திரக் கருத்துக்களில் தங்கள் மனதைச் செலுத்தித்தான் ஆக வேண்டுமா? குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒருவரின் தலைமையில், பெரிய தொரு கேலிக் கூத்தாகத்தான் இச் செய்கையை இவர்கள் நடத்த வேண்டி யிருக்கிறது. இயந்திரம் போலச் சிறு பிள்ளைகளின் மனதை இப்படித் தொழிற்படச் செய்வதனால், கடவுளென்று சொல்லுகிறீர்களே, அந்தப் பொருளிடம் அவர்களுக்கு அன்பு ஏற்படுமா? வெவ்வேறு வகையான மனப்பாங்குள்ள மனிதர்கள் எல்லோருமே இப்படி ஒரே மாதிரியாக நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்ப்பது அறிவுடைமை யன்று. ஆகை

யால், வழிபாடு செய்வ தென்பது கட்டாயமான விஷயமாக இருக்க வேண்டிய தில்லை. விருப்பமுள்ளவர்கள் வழிபாடு செய்யட்டும், விருப்ப மில்லாதவர்கள் செய்ய வேண்டாம். சரி யென்று மனதிலே நிச்சயப் படுத்திக்கொள்ளுமுன் செய்கிற காரியம் எதுவும், நீதியற்ற, இழிவான செயலாகும்."

கடைசியாக இவர் வெளியிட்டுள்ள கருத்து எவ்வளவு உண்மையான தென்பதை முதலில் கவனிப்போம். எதற்கும் ஒரு ஒழுங்கும் கட்டுப்பாடும் வேண்டும் என்கிறோம். அப்படி ஒரு கட்டுப்பாடு வேண்டு மென்பதைத் திட்டமாக உணருமுன், அந்தக் கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படிந்து நடப்பது நீதியற்ற, இழிவான செயலாகுமா? கல்வி இலாகாதார் வகுத்துள்ள பாடத் திட்டம் பயனுடைய தென்று நன்றாகத் தெரிந்துகொள்ளுமுன், ஒருவர் அந்தத் திட்டப்படி பாடங்களைப் படிப்பது, நீதியற்ற, இழிவான செயல்தானா? தாய் மொழியைப் படிப்பதனால் உபயோக மில்லை யென்று எண்ணிக்கொண்டு, ஒரு சிறுவன் அதைப் படிக்காம லிருந்தால் அவனை மன்னிக்க முடியுமா? தான் படிக்க வேண்டிய விஷயங்களைப்பற்றிப் பள்ளிச் சிறுவனுக்கு முன்னரே திட்டமான கருத்து ஏற்பட முடியா தென்பதும், தான் பின்பற்ற வேண்டிய கட்டுப்பாடுகளைப் பற்றித் தீர்க்கமான ஒரு முடிவிற்கு அவனால் வர முடியா தென்பதும் மேலே சொன்னவற்றிலும் பார்க்க உண்மை யான விஷயமல்லவா? பள்ளிச் சிறுவன் தானாக ஒரு விஷயத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவது சாத்திய மன்று. சாத்தியமா யிருப்பினும், ஒரு ஸ்தாபனத்தில் சேருவ தென்று முடிவு செய்தவுடனேயே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை அவனுக்கு இல்லாது போய்விடுகிறது. ஒரு ஸ்தாபனத்தில் அவன் சேருகிறா னென்றால், அந்த ஸ்தாபனத்தின் விதிகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் மனப் பூர்வமாக உட்பட அவன் சம்மதிக்கிறான் என்றே பொருள். அந்த ஸ்தாபனத்தைவிட்டு விலகிக்கொள்ள அவனுக்கு உரிமை யுண்டேயன்றி, இன்னதைத்தான் கற்றுக்கொள்ளுவேன், இப்படித்தான் கற்றுக்கொள்ளுவே னென்று சொல்ல உரிமை யில்லை.

ஆரம்பத்தில் வெறுப்பாகவோ, ரஸமில்லாததாகவோ மாணவர்களுக்குத் தோன்றுகிற விஷயங்களைக் கவர்ச்சி பொருந்தியனவாயும், எளிதில் விளங்கக்கூடியனவாயும்

செய்வது ஆசிரியர்களின் கடமை.

"கடவுளை நான் நம்பவில்லை" யென்று சொல்லுவது எளிது. ஏனெனில், தண்டனை ஏற்படுமே யென்ற பயமில்லாமல் கடவுளைப்பற்றி மனதில் தோன்றுகிற விஷயங்களையெல்லாம் யாரும் சொல்ல அவர் இடங்கொடுக்கிறார். நாம் செய்கிற செயல்களை அவர் கவனித்த வண்ணம் இருக்கிறார். அவர் விதித்துள்ள சட்டங்களை மீறி நடந்தால், தண்டனை ஏற்படுகிறது. பழிக்குப் பழி வாங்கும் பொருட்டாய் அந்தத் தண்டனை ஏற்படவில்லை. மீறி நடந்தவரைப் புனிதப்படுத்தி, அவர்கள் கட்டாயம் அனுபவித்துத் தீர வேண்டிய தண்டனை யாகும் அது. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உண்மையை நிரூபிக்க முடியாது; நிரூபிக்கத் தேவையு மில்லை. கடவுள் ஒருவர் உண்டு. அவர் இருக்கிறார் என்பதை உணராவிட்டால், அதனால் நமக்குத்தான் கேடு. கடவுளைப்பற்றிய உணர்ச்சியே இல்லாதிருப்பது, பிணிவாய்ப்பட்ட நிலை போன்றது. விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், இந்தப் பிணியிலிருந்து ஒரு நாள் நாம் விடுபடுவோம் என்பது நிச்சயம்.

பள்ளிச் சிறுவனுக்கு இந்தக் கேள்விகள் அனாவசியம். தான் சேர்ந்துள்ள கல்விநிலையத்தில் வழிபாட்டுக் கூட்டங்களுக்குச் செல்வது கட்டாயமா யிருக்குமானால், அக் கூட்டங்களுக்கு அவன் செல்வதுதான் ஒழுங்கு. அவன் தனக்குத் தோன்றும் சந்தேகங்களை ஆசிரியர்களிடம் மரியாதையாகத் தெரிவிக்கலாம். தனக்குப் பிடித்த மில்லாதவற்றை அவன் நம்ப வேண்டாம். ஆனால், தன் ஆசிரியர்களிடத்திலே ஏதாவது மதிப்பு வைத்திருப்பானாயின், தனக்கு நம்பிக்கையில்லாவிட்டாலும்கூட, அவர்கள் செய்யச் சொன்னதை அவன் கட்டாயம் செய்வான்; பயம், முரட்டுத்தனம் இவை காரணம் அல்ல, செயலில் ஈடுபடுவது. அவர்கள் சொன்னபடி செய்வது தனது கடமை யென்று உணர்ந்தும், இன்று விளங்காம லிருப்பது பின்னர் ஒரு நாள் தெளிவாக விளங்கு மென்று நம்பியுமே அவன் செயலில் ஈடுபடுகிறான்.

பிரார்த்தனை என்பது கடவுளிடம் எதையாவது வேண்டுகிற காரியமல்ல. ஆன்மாவின் வேட்கையே பிரார்த்தனை. தான்வலியற்றவன் என்பதை ஒருவன் தினந்தோறும் உணர்வதையே பிரார்த்தனை என்கிறோம். பிணி,

மூப்பு, சாக்காடு, எதிர்பாராத விபத்துக்கள் ஆகியவற்றைக் காணும்போது, மனிதனுக்குச் செயல் ஒன்றுமே இல்லை என்பதை, ஒருவர் எவ்வளவு பெரியவராக யிருந்தாலும், சதா நினைவுகூரா திருக்க முடியாது. சாவுக்கு மத்தியில் நாம் வாழுகிறோம். நமது சொந்தத் திட்டங்களை நிறைவேற்றவே நாம் உழைக்கிறோம் என்றால் அதனால் என்ன பயன்? ஒரு கண்ணிமைப் பொழுதில் இந்தத் திட்டங்கள் ஒன்றுமே யில்லை யென்று ஆகிவிடலாம்; அல்லது நம்மை அறியாமலே இத் திட்டங்களிலிருந்து நாம் பிரிய நேரலாம். ஆனால், 'கடவுளுக்காகவும் அவருடைய திட்டங்களுக்காகவுமே வேலை செய்கிறோம்' என்ற எண்ணம் உண்மையில் நமக்கு ஏற்படுமானால், அதனால் நமக்கு மலையைப்போன்ற அசைக்கமுடியாத வலிமை உண்டாகும். யாவும் பட்டப் பகல் போல தெளிவுபட விளங்கும். எதற்கும் அழிவில்லை; அழிவென்று தோன்றுவ தெல்லாம் வெறும் வெளித் தோற்றமேயன்றி வேறில்லை யென்பது புலப்படும். மரணம், அழிவு என்பதெல்லாம் மெய் யல்ல, பொய் யென்பது அப்போதுதான் விளங்கும். ஏனெனில் அந்த நிலையிலே, சாவோ, அழிவோ ஒரு மாறுதலே யன்றி வேறல்ல. ஓவியனொருவன் மேலான படம் வரைவதற்காகவே, ஏற்கனவே வரைந்த படத்தைக் கிழித்தெறிகிறான். கடிகாரம் செய்பவன் உபயோகமான புதிய வில்லைப் பொருத்துவதற்காகவே, கெட்டுப்போன பழைய வில்லை எறிந்துவிடுகிறான்.

கூட்டமாகச் சேர்ந்து பிரார்த்தனை செய்வது ஒரு மகத்தான காரியம். தனியாகச் செய்ய இயலாத காரியங்களையே, அனேகமாக, நாம் சேர்ந்து செய்ய முயலுகிறோம். சிறு பிள்ளைகள் எதையும் முடிவாக உணரவேண்டிய அவசியமில்லை. வழிபாடு செய்ய அழைக்கும்போது யாதொரு மறுப்புணர்ச்சியு மின்றி அவர்கள் கீழ்ப்படிந்து நடந்தாலே போதும்; அதனால் பெரியதொரு மனவெழுச்சி ஏற்படுவதை அவர்கள் உணர்வர். ஆனால், அனேகமாக மாணவர்களுக்கு இவ்வித உணர்ச்சி ஏற்படுவதில்லை. அவர்களிடம் குறும்புத்தனம் இருப்பதைக் காண்கிறோம். இருப்பினும், தங்களை அறியாமலே ஏற்படுகிற பலாபலன்களை அவர்களால் தடுக்க முடியாது. பள்ளிக்கூடத்தில் சேர்ந்த

புதிதில், கூட்டமாகச் சேர்ந்து வழிபடுவதைக் கேலிசெய்த மாணவர்களே, பின்னர் அதில் அபாரமாக நம்பிக்கை வைப்பதை நாம் பார்க்கவில்லையா? திடமான நம்பிக்கை இல்லாதவர்கள், பொது வழிபாட்டில் கலந்துகொண்டு, அதனால் மன ஆறுதல் அடைவது சாதாரணமாக நாம் காணுகிற அனுபவம். மாதாகோயில்களுக்கும் மசூதிகளுக்கும் கோயில்களுக்கும் செல்லுபவர்கள் அனைவருமே பொய்யர்கள், கேலிக்காரர்கள் அல்லர்; அவர்கள் யோக்கியமான மனிதர்களே யாவர். அவர்களுக்கு, நாள்தோறும் ஸ்நானம் செய்வது வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருக்கிறதோ, அதுபோல, பொது வழிபாடும் அவர்களுக்கு இன்றியமையாததாய் இருக்கிறது. இறைவழிபாட்டிற்குரிய இந்த இடங்கள் யாவும், சந்தர்ப்பம் வரும்போது, அழித்துவிட வேண்டிய மூடப் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக்கொண்ட, வெறும் சோம்பேறி மடங்களல்ல. இவற்றைத் தொலைத்துவிடுவதற்காக இதுவரை செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தையும் இவை எதிர்த்து நின்றிருக்கின்றன; இன்னும் எத்தனை எத்தனையோ யுகங்கள்வரையிலும் எதிர்த்து நின்று, என்றும் நிலைபேறுடையனவாய் இவை விளங்கும் என்பது திண்ணம்.

சொற்களின் கொடுமை

"நம்பிக்கையும் வழிபாடும் இல்லாது செய்கிற வேலைகள் யாவும் வாசமில்லாத செயற்கைப் பூவை ஒக்கும். அறிவை அவித்துவிட வேண்டு மென்று நான் சொல்லவில்லை; நம் முள்ளே குடிகொண் டிருந்து, அந்த அறிவையே தூய்மைப் படுத்துகிற ஒரு பொருளை, உரிய முறையில் அங்கீகரிக்க வேண்டும் என்றே சொல்லுகிறேன்."

'பிரார்த்தனையில் நம்பிக்கை இல்லையா?' என்று நான் எழுதிய கட்டுரை சம்பந்தமாக, ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:

'பிரார்த்தனையில் நம்பிக்கை யில்லையா?' என்ற தலைப்புடன் எழுதி யுள்ள கட்டுரையில், தாங்கள் அந்தச் "சிறுபிள்ளை"யின் வாதத்திற்கு மதிப்பு வைக்கவில்லை. சிறந்த சிந்தனையாளர் என்ற முறையில், தங்க ளுடைய கட்டுரை பொருத்தமாய் இல்லை. அந்தக் கடிதம் எழுதிய மாண வர், தம் கருத்தை வெளியிடுவதற்கு உபயோகித்துள்ள வாசகம் பொருத்தமா யில்லை என்பது உண்மைதான். ஆயினும், அவருடைய கருத்துக்கள் விளக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன என்பதில் சந்தேக மில்லை. சாதாரணமாய் நாம் வழங்குகிற முறையில், அவர் ஒரு சிறு பிள்ளை யல்ல என்பது நிச்சயம். இருபது வயதிற்கு மேற்பட்டவராகத் தான் அவர் இருக்க முடியும்; இருபது வயதிற்குட்பட்டவரா யிருந்தால் அது எனக்கு ஆச்சரியத்தை யளிக்கும். இளைஞரா யிருந்தபோதிலுங் கூட, அவருக்குப் போதுமான அளவு அறிவுவளர்ச்சி யிருக்கிற தென்றே தோன்றுகிறது. எனவே 'பள்ளிச் சிறுவனுக்கு இந்தக் கேள்விகள் அனாவசியம்' என்ற முறையில் புத்தி சொல்லுவது நியாயமாகாது. அந் தக் கடிதம் எழுதியவர், சகல விஷயங்களையும் அறிவோடு பொருத்திப் பார்க்கும் அறிவியல்வாதி யாவர். தாங்களோ, நம்பிக்கைதான் யாவற்றிற்கும் அடிப்படை யென்று வாதிப்பவர். இவ் விரு சாரரும், முரண்பாடான கோட்பாடுகளை யுடையவர்கள். இந்த இரு சாரரும் தொன்றுதொட்டே இருந்து வருகிறார்கள். ஒருவர், 'என் அறிவுக்குப் பொருத்த மென்று பட்டால், நம்பிக்கை தானே பிறக்கிறது' என்கிறார். மற்றவர், 'முதலிலே நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், சரி என்ற உணர்ச்சி தானே பிறக்கிறது' என்கிறார். முதலாமவரின் மனப்பாங்கு அறிவை நாடுகிறது; இரண்டாமவரின் மனப்பாங்கு அதிகாரத்தை நாடுகிறது. இந்திரியங்களின் உதவியையும் அறிவின் உதவியையும் கொண்டு, உல கத்தில் நாம் காண்கிற காட்சியைத் தவிர, கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு எவ்வித சான்றும் இல்லை யென்று எண்ணுகிற உலகாயத நிலை இளைஞர்களிடம் ஒரு காலத்தில் நிச்சயம் காணப்படும் என்றும், காலக்கிரமத்தில் அது மறைந்துபோய், விரைவாகவோ சிறிது காலம் தாழ்த்தோ நம்பிக்கை பிறக்கு மென்றும் தாங்கள் எண்ணுவதாகத்

தெரிகிறது. சுவாமி விவேகாநந்தரின் பிரசித்திபெற்ற சரித்திரம் தங்கள் கருத்துக்குத் துணை செய்வதாய் இருக்கிறது. ஆதலால், அந்தப் 'பைய னின்' சொந்த நன்மையைக் கருதி, வைத்தியர் மருந்து சாப்பிடச் சொல்லுவதுபோல, தினமும் கொஞ்சம் வழிபாடுசெய்ய வேண்டுமென்று அதிகாரபூர்வமாக உபதேசிக்கிறீர்கள். அதற்குத் தாங்கள் கூறுகிற காரணங்கள் இரண்டு. முதலாவது, நம்முடைய சிறுமையையும் முழு முதற்பொருளின் பெருமையையும் கருணையையும் உணர்ந்து, வேறு பயன் கருதாது வழிபாடு செய்தல் வேண்டும்; இரண்டாவது காரணம் அதனால் விளையும் பயனைக் கருதி—அதாவது ஆறுதல் பெற விரும்பு வோர் மனதுக்கு அது எவ்வளவோ ஆறுதல் அளிக்கிறது என்பதைக் கருதி—வழிபாடு செய்தல் வேண்டும்; தங்கள் அபிப்பிராயங்கள் இவையே. இரண்டாவது காரணத்தை முதலில் பார்ப்போம். பிரார்த் தனை உடல் வலியற்றவர்களுக்கு ஊன்றுகோல்போல உதவுகிறதென்று சிபாரிசு செய்கிறீர்கள். வாழ்க்கையில் ஏற்படுகிற சோதனைகள் கடின மானவை; மனிதனுடைய அறிவையே இவை கலக்கிவிடுகின்றன. இது காரணம் பற்றியே பெரும்பான்மையோருக்குக் கொஞ்ச காலம்வரை பிரார்த்தனையும் பற்றுக்கோடும் தேவைப்படுகின்றன என்பது உண் மையே; இது நியாயமுங்கூட. தாராளமாக, அவர்கள் வழிபாட்டில் ஈடுபடட்டும். ஆனால், சிலர் உண்மையான அறிவியல்வாதிகளாக இருந்து வந்திருக்கிறார்கள்; இன்னும் இருக்கிறார்கள். இவர்களின் எண் ணிக்கை குறைவா யிருக்கலாம். வழிபாடோ, அல்லது பற்றுக்கோடோ வேண்டுமென்ற அவசியத்தை இவர்கள் எப்பொழுதும் உணர்ந்ததில்லை. இவர்கள்போல வேறு சிலரும் உண்டு. அவர்கள் கடவுள் நம்பிக்கையைப் பலமாகத் தாக்குவ தில்லை; மத உணர்ச்சியும் அவர்களுக்கு இருப்பதில்லை.

"முடிவாகப் பார்த்தால், எல்லா மக்களும் வழிபாட்டின் உதவியை நாடவில்லை. வழிபாடு வேண்டுமென்று உணருகிறவர்கள் வழிபாடு செய்யத் தாராளமாய் இடமிருக்கிறது; வேண்டியபொழு தெல்லாம் அவர்கள் வழிபாடு செய்யவும் செய்கிறார்கள். ஆதலால், பயனைக் கருதி வழிபாடு செய்வது அவசிய மென்று வாதிப்பவர்கள் இவ் விஷயத்தில் நிர்ப்பந்தம் வேண்டுமென்பதை நிலைநாட்ட முடியாது. உடல் வளர்ச்சிக் காகவும் அறிவு வளர்ச்சிக்காகவும் தேகப் பயிற்சி செய்வதையும் கல்வி பயில்வதையும் கட்டாய மாக்கலாம். ஆனால், கடவுளிடத்திலே பற்று தலும் பிரார்த்தனையும், ஒழுக்க வளர்ச்சி கருதி அவ்விதம் கட்டாயப் படுத்தத்தக்க காரியங்க ளல்ல. உலகாயதக் கொள்கையுடையவர்களாக உலகத்தில் தோன்றிய அறிவியல்வாதிகளில் சிலர் சிறந்த சீலமுடையவர் களாக வாழ்ந்திருக்கிறார்கள். நமது பணிவு காரணமாக, வேறு பயன் கருதாது வழிபாடு செய்ய வேண்டுமென்று இவர்களுக்கு தாங்கள் அறி வுறுத்தக் கூடும்; ஏனென்றால், இதுவே தாங்கள் சொல்லுகிற முதற் காரணம். இந்தப் பணிவைப்பற்றி அளவுக்கு மிஞ்சியே நாம் எண்ணி யும் பேசியும் வந்திருக்கிறோம். அறிவுக்கு எல்லையே இல்லை; அதன் பரப்பை நோக்கும்போது பெரிய விஞ்ஞான நிபுணர்கள்கூட, தாங்கள்

சிறியவர்கள் என்பதைச் சில சமயம் உணருகிருர்கள். ஆனல், தன்னம்பிக்கையோடு தங்கள் நோக்கப்படியே உண்மைகளை ஆராயும் இயல்பு, பொதுவாக அவர்களிடத்தில் காணும் சிறந்த அம்சமாக இருந்து வந்திருக்கிறது. இயற்கையை வெற்றிகொள்ளுவதில் அவர்களுக்கு எவ்வளவு உறுதியான நம்பிக்கை யிருக்கிறதோ, அவ்வளவு நம்பிக்கை தங்கள் சொந்த ஆற்றலிலும் அவர்களுக்கு இருந்துவருகிறது. இந்த நிலை இல்லாவிட்டால், வெறுங் கை விரல்களினல் தரையைக் கீறி, கிழங்குகளைத் தின்னும் நிலையிலேயேதான் நாம் இன்னும் இருந்துவருவோம்; அல்லது இந்தப் பூமியைவிட்டே அடியோடு ஒழிந்துபோயிருப்போம்.

"உலகம் பனி மயமாக இருந்த காலத்தில், மக்கள் குளிர் தாங்க முடியாமல் இறந்துகொண் டிருந்தார்கள். அப்போது முதன் முதலாக நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் தங்களைப்போன்ற கருத்துடையவர் இருந்திருந்தால், 'உங்களுடைய திட்டங்களினல் என்ன பயன்? கடவுளுடைய ஆற்றலுக்கும் கோபத்திற்கும் முன்னர் உங்கள் திட்டம் எம்மாத்திரம்?' என்று குத்தலாக இடித்துச் சொல்லி யிருப்பார். கடவுளிடத்திலே பணிவுடையவர்களுக்கு மறுமையில் வானுலகம் கிடைக்கு மென்று சொல்லப்பட் டிருக்கிறது. அவர்கள் வானுலகைப் பெறுவார்களா என்பதைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது; ஆனல், இந்த உலகத்தில் அவர்களுக்கு அடிமை வாழ்வுதான் கொடுத்துவைத்திருக்கிறது. நமது முக்கியமான விஷயத்திற்குத் திரும்பிச் செல்வோம். 'கடவுள் இருப்பதாக முதலில் ஒப்புக்கொள், நம்பிக்கை தானக வரும் என்று தாங்கள் வற்புறுத்திக் கூறுவது மிக்க உண்மையானது; பயங்கரமான அளவுக்கு உண்மையானது. இவ்வுலகத்தில் மதவெறிக்கு நேரடியான காரணம் பெரும்பாலாக இம்மாதிரிப் போதனைதான்; மக்களுள் பெரும்பாலோரை இளமையிலேயே இப்படிப் பயிற்ற ஆரம்பித்தால், எதை வேண்டுமானலும் அவர்கள் நம்பும்படி செய்துவிடுதல் கூடும். இந்த முறையிலேதான் உங்களுடைய சனதன ஹிந்துவும், மத வெறிகொண்ட முகம்மதியனும் உண்டாகிருர்கள். நிர்ப்பந்தமாகத் தங்கள்மீது சுமத்தப்பட்ட இந்த நம்பிக்கைகளை ஒதுக்கிவிட்டு, அப்பால் செல்லக்கூடியவர்கள், ஏதோ இரண்டொருவர், இயல்பாக இந்த இரண்டு சமூகங்களிலும் என்றும் இருக்கவே செய்வார்கள். ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் வயது வந்தவர்க ளாகிறவரையில் தங்கள் தங்கள் சமய நூல்களைப் படிக்காமல் நிறுத்திவைத்திருந்தால், தங்கள் மதக்கோட்பாடுகளில் அவர்கள் இவ்வளவு வெறிபிடித்தவர்களாக இருக்க மாட்டார்கள். அவற்றிற்காகத் தங்களுக்குள் இவ்வாறு சண்டை போட்டுக்கொள்ளவும் மாட்டார்கள். இதைத் தாங்கள் அறிவீர்களா? உலகியல் சம்பந்தமான அறிவுக்கு மட்டும் உரிய கல்விமுறை ஏற்பட்டால்தான் ஹிந்து—முஸ்லிம் கலகங்கள் ஒழியும்; ஆனல், அந்த முறையில் நீங்கள் தயாராகவில்லையே!

"நமது நாட்டில் மக்கள் எந்த விஷயத்திலும் கோழைகளாகவே வாழ்க்கை நடத்தி வந்திருக்கிருர்கள். இப்படிப்பட்ட மக்களிடையே தோன்றி, தீரம், செயல், தியாகம் ஆகியவற்றிற்கு இதுவரையில் இல்

லாத சிறந்த எடுத்துக்காட்டாகத் தாங்கள் விளங்குகிறீர்கள்; இதன் பொருட்டு நாங்கள் தங்களுக்கு மிகமிகக் கடமைப்பட் டிருக்கிறோம்; இருப்பினும், தாங்கள் செய்துள்ள தொண்டை முடிவாக மதிப்பிடும் போது, தங்களின் செல்வாக்கு, இந்நாட்டின் அறிவு வளர்ச்சி பின்ன டைவதற்கு ஓரளவு காரணமா யிருந்த தென்றே சொல்லவேண்டி வரும்.''

இருபது வயதுடைய இளைஞன் சிறுபிள்ளை யல்ல வென்றால், சிறுபிள்ளை என்ற சொல் சாதாரணமாக எந் தப் பொருளில் வழங்குகிற தென்பதை நான் அறியேன். என்ன வயதுடையவர்களா யிருந்தாலும் சரி, பள்ளிக் கூடம் செல்லும் சிறுவர் சிறுமியர்களை சிறு பிள்ளைக ளென்றே நான் கூறுவேன். ஆனால், சந்தேகத்தில் இருக்கும் இந்த மாணவன் சிறுவனாயினும் சரி, வயதுவந்த மனிதனாயினும் சரி, அது நான் சொல்லுகிற வாதத்தை பாதிக்கவில்லை. மாணவன் போர்வீரனைப் போன்றவன். [போர்வீரன் நாற்பது வயதானவனாகவும் இருக்கலாம்.] ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு, அதன்படி நடப்பதாகத் தானே விரும்பி ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த ஒழுங்கு சரி யானதா, இல்லையா என்று மாணவன் ஆராய்த லாகாது. கட்டளையிட்ட வேலையைச் செய்வதற்கும் செய்யாமலிருப் பதற்கும், போர்வீரனுக்குச் சொந்தமாக எவ்வித உரிமை யும் இல்லை. அந்த உரிமை இருப்பின் அவன் படையைச் சேர்ந்த போர்வீரனாக இருக்க இயலாது. அதுபோலவே ஒரு மாணவனுக்கும், அறிவில் அவன் எவ்வளவு சிறந்த வனாயிருப்பினும் சரி, அல்லது என்ன வயதுடையவனா யிருப்பினும் சரி, பாடசாலையிலோ அல்லது கல்லூரி யிலோ சேர்ந்ததுமே அவற்றின் ஒழுங்குமுறைக்கு அவன் கீழ்படிந்து நடக்க வேண்டும். அவற்றை மறுத்து ரைக்கும் உரிமை அவனுக்கு இல்லை. இதனால் அவனு டைய அறிவின் மதிப்பும் கண்ணியமும் குறைந்துபோய் விடா. தானாகவே ஒழுங்குமுறைக்கு உட்படுவது, அவனது அறிவு வளர உதவியா யிருக்கிறது. இக் கடிதம் எழுதிய நிருபர் வெறும் வார்த்தைகளினால் ஏற்படும் கொடுமைக்குத் தாமாகவே உட்படுகிறார். பிடித்தம் இல் லாத வேலையைச் செய்யச் சொன்னால், அதில் ஏதோ நிர்ப் பந்தம் இருப்பதாக அவர் எண்ணுகிறார். நிர்ப்பந்தம்

என்பதில் எத்தனையோ வகை உண்டு. தாமாக ஏற்படுத்திக் கொள்ளுகிற நிர்ப்பந்தத்தை, நாம் நியதி, அல்லது தன்னடக்கம் என்கிறோம். இத் தன்னடக்கத்தை ஏற்று, அதனால் அபிவிருத்தி பெறுகிறோம். விருப்பத்திற்கு மாறாகப் பிறரால் நிர்ப்பந்தம் ஏற்படுமாயின் நம்மை இழிவுபடுத்தும் பொருட்டு—மனிதர் என்ற முறையிலும் சிறுவர் என்ற முறையிலும் நமக்குள்ள கௌரவத்தையும் கண்ணியத்தையும் போக்கும் பொருட்டு என்று வேணுமானால் வைத்துக் கொள்ளுங்கள்—பிறரால் நிர்ப்பந்தம் ஏற்படுமாயின், உயிரைக் கொடுத்தாவது அந்த நிர்ப்பந்தத்தைத் தவிர்க்க வேண்டுவது அவசியம். சமூகக் கட்டுபாடுகள் பொதுவாக நன்மை யுடையவை; அவற்றை வெறுத்து ஒதுக்கினால் அதனால் நமக்குத்தான் கேடு. தரையில் ஊர்ந்து செல்லும்படி ஒருவர் உத்திரவிட்டால், அதற்குக் கீழ்ப்படிவது கோழைத் தனமே யன்றி மனிதத்தன மாகாது. இதைவிட மோசமானது, நம்மைச் சூழ்ந்து, நம்மைஅடிமைப் படுத்தத் தயாராயுள்ள எண்ணற்ற ஆசைகளுக்குக் கீழ்ப்படிவ தாகும்.

இந்த நிருபர் இன்னொரு சொல்லுக்கும் அடிமையாயிருக்கிறார். அதுதான் 'அறிவியல்வாதம்' என்ற மகத்தான சொல். நல்லது, நானும் ஒரு காலத்தில் பெரிய அறிவியல்வாதியாகத்தான் இருந்தேன்; அறிவைக்கொண்டே எதையும் அறிந்துவிடலா மென்று எண்ணினேன். இந்தக் கூர்வம் பங்கமடைந்தது. அறிவிற்குத் திட்டமானதொரு எல்லை இருக்கிற தென்பதை அனுபவத்தில் கண்டேன். வேண்டாத இடத்தில் ஒரு பொருளைப் போட்டுவிட்டால், அது குப்பையாகிறது; அதைப்போலவே, அறிவைத் தீய வழியிலே செலுத்தினால் அது பைத்தியமாகிறது. எதையும் அதற்கு உரிய இடத்தில் சேர்த்துவிட்டால், யாவும் நன்மையாய் முடியும்.

அறிவியல்வாதிகள் சிறந்த மனிதர்களே யாவர். ஆயினும், சர்வவல்லமை பொருந்திய தென்று அறிவியல் வாதம் தன்னைப் பாராட்டிக்கொள்ளும்போது, அது கோர ரூபங்கொண்ட ஒரு பேயாகிறது. அறிவுக்குச் சர்வ வல்லமை உண்டென்று சொல்லுவது, கல்லும் மரமுமே கடவுள் என்றெண்ணிக் கும்பிடுவது எவ்வளவு மோசமானதோ, அவ்வளவு மோசமானது.

வழிபாட்டின் பயனைப்பற்றி பகுத்தறிவோடு யாராவது ஆராய்ந்து இருக்கிறார்களா! வழிபாடெல்லாம் முடிந்த பின்னரே, அதன் பயனை நாம் உணருகிறோம். இதுவே வழிபாடு சம்பந்தமாக, உலகத்தார் கொடுக்கும் சான்று. கார்டினல் நியூமன் தமது அறிவை ஒரு நாளும் விட்டுக் கொடுத்தவரல்லர்; ஆனால், 'ஒருபடி மேல் நோக்கிச் சென்றாலே எனக்குப் போதும்'' என்ற பாட்டை அவர் தாழ்மையோடு பாடியபோது அறிவைவிட வழிபாட்டிற்கே உயர்ந்த நிலை உரியதென்று கண்டார். அறிஞர்களுக்குள் தலைசிறந்த அறிஞர் சங்கரர்; உலக இலக்கியத்திலேயே, அவருடைய அறிவியல்வாதத்தை வெல்லவல்லது எதுவுமே இல்லை என்று சொல்லலாம். ஆனால், வழிபாட்டிற்கும் சமயப் பற்றுக்கும் அவர் முதல் இடம் அளித்தார்.

நம்முன் நிகழ்ந்து வருகிற சம்பவங்கள், அமைதியைக் குலைப்பனவாயும் விரைவிலே மறைந்துவிடுவனவாயும் இருக்கின்றன; இவற்றைக்கொண்டு, இந்த நிருபர் அவசர அவசரமாக சில விஷயங்களைப்பற்றி முடிவுசெய்துவிடுகிறார். எதையும் நம்மால் தீய வழியில் பயன்படுத்த முடியும். மனிதன் சம்பந்தப்பட்டவை அனைத்திற்கும் பொதுவானதொரு நியதி உண்டு என்பது இதனால் தெரிகிறது. மக்கள் சரித்திரத்தில் நிகழ்ந்துள்ள மிக்க பயங்கரமான சில குற்றங்கள் மதம் காரணமாக நிகழ்ந்தனவென்பதில் ஐயமில்லை. ஆனால், இது மதத்தின் குற்றமல்ல; மனிதனிடமுள்ள கட்டிலடங்காத மிருகத்தன்மைதான் இதற்குக் காரணம். வழி வழியாக வரும் இந்த மிருகத்தன்மையினால் ஏற்பட்ட பலாபலன்களை மனிதன் இனிமேல்தான் அகற்ற வேண்டும்.

வெறும் நம்பிக்கையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, காரியாதிகளில் ஈடுபட்ட அறிவியல்வாதி ஒருவரையாவது நான் இதுவரை கண்டதில்லை. நம்மையெல்லாம் படைத்த இறைவனிடத்தில் குழந்தைபோல நம்பிக்கை வைத்தது காரணமாகக் கோடிக் கணக்கான மக்கள் ஓரளவுக்கு ஒழுங்கான வாழ்க்கை வாழ்வதை நாம் காண்கிறோம். அந்த நம்பிக்கையே ஒரு வகையில் வழிபாடாகிறது. எந்தச் சிறுபிள்ளையினுடைய கடிதத்தைக் குறித்து இந்தக் கட்டுரை எழுத நேர்ந்ததோ, அந்தச் சிறு

பிள்ளையும் மனித சமுதாயத்தைச் சேர்ந்தவனே யாவான். இந்தக் கட்டுரை எழுதியதன் நோக்கம் அலைந்துகொண்டிருக்கும் அவனுடைய அறிவையும், அவனுடைய தோழர்களின் அறிவையும் ஒருநிலைப்படுத்துவதே யாகும்; இந்த நிருபரைப் போன்ற அறிவியல்வாதிகளின் அமைதியைக் கெடுப்பது அதன் நோக்கமன்று.

பெற்றோரும் ஆசிரியர்களும் இன்ன நெறியைப்பற்றி யொழுக வேண்டு மென்று இளைஞர்களுக்குக் காட்டுகிற போக்கே இந்த நிருபருக்குப் பிடிக்கவில்லை. இதை ஒரு குறைபாடு என்று கருதுவோமாயின் மனதில் எதுவும் நன்ருகப் பதியக்கூடிய பருவத்தில் ஏற்படுகிற தவிர்க்க முடியாத ஒரு குறைபாடேயாகும் இது. உலகியல் அறிவை மட்டும் புகட்டுவது இளைஞர்களின் மனதை ஏதோ ஒரே வகையில் உருவாக்கும் முயற்சியே யாகும். உடலுக்கும் மனதுக்கும் பயிற்சி யளித்து, அவற்றை நல்வழியில் செலுத்த வேண்டும் என்பதை நிருபர் நல்ல வேளையாக ஒப்புக்கொள்ளுகிருர். உடலும் மனமும் இருப்பதற்கு மூல காரணம் ஆன்மாதான். இந்த ஆன்மாவைப்பற்றி அவருக்குக் கவலையில்லை; அல்லது ஒருவேளை அவர் ஆன்மா என்பது உண்டா என்று சந்தேகிக்கவும் கூடும். இப்படி நம்புவது சரியன்று. அவருடைய தர்க்கத்தினுல் ஏற்படுகிற முடிவுலிருந்து அவரே தப்ப முடியாது. ஏனெனில் சிறுவர் சிறுமியரின் உடலையும் மனத்தையும் மற்றவர்கள் திருத்தி வளர்ப்பதுபோல, அவர்களின் ஆன்மாவைத் திருத்தி வளர்ப்பதில், எனக்கும் பங்கில்லையா என்று, கடவுளிடம் நம்பிக்கை யுள்ளவர் இந்த நிருபர் சொல்லுவதை அடிப்படையாகக்கொண்டே, வாதம் செய்யக் கூடும். உண்மையான சமய உணர்ச்சி வேருன்றி வளர்ந்த பின்னர், சமய போதனையில் காணப்படுகிற கெடுதல்கள் யாவும் மறைந்துவிடும். சமய போதனை அறவே விட்டுவிட வேண்டு மென்பது, உழவனுக்குச் செம்மையாக பயிர் செய்யும் முறை தெரியாமையினுலே, நிலத்தைத் தரிசாகப் போட்டு, அதில் களைகளையே பயிராக்க வேண்டு மென்பதற்குச் சமமாகும்.

இந்த நிருபர் நம் முன்னேர்கள் கண்ட உண்மைகளில் மனம் போனவாறு புகுந்து திரிகிருர்; நாம் எடுத்துக்

கொண்ட பொருளுக்கு உண்மையில் சம்பந்த மில்லாத விஷயம் இது. அந்த உண்மைகளினுல் விளையும் நன்மை யையோ அவற்றின் சிறப்பையோ ஒருவரும் சந்தேகிக்க வில்லை. அறிவை உபயோகப்படுத்தவும் அதைப் பயிற்ற வும் அந்த உண்மைகள் பொதுவாக பயன்படுகின்றன. ஆனுல்,, நம் முன்னேர்கள் கடவுள் நம்பிக்கை, வழிபாடு என்ற முக்கியமான காரியாதிகளைத் தங்கள் வாழ்க்கையி லிருந்து அகற்றிவிட வில்லை. நம்பிக்கையும் வழிபாடும் இல்லாது செய்கிற வேலைகள் யாவும் வாசமில்லாத செயற்கைப் பூவை யொக்கும். அறிவை அவித்துவிட வேண்டு மென்று நான் சொல்லவில்லை. நம்முள்ளே குடி கொண் டிருந்து, அந்த அறிவயே தூய்மைப்படுத்துகின்ற ஒரு பொருளை உரிய முறையில் அங்கீகரிக்க வேண்டு மென்றே சொல்லுகிறேன்.

வழிபாட்டைப்பற்றிய விளக்கம்

"மனிதனுடைய மனதில் இருளுக்கும் ஒளிக்கும் இடையே நிரந்தரமாக ஒரு போராட்டம் நடைபெறுகிறது. வழிபாடு என்ற சிறந்த பாதுகாப்பை நம்பியிராதவன் இந்தப் போரில் இருளுக்கு அடிமையாகிவிடுவான்."

சபர்மதியில், சத்தியாக்கிரக ஆசிரமத்தில் கூடிய கூர்ஜர, மாணவர் இல்லத்தைச் சேர்ந்த சிறுவர் மகாநாடாகிய சத்ர சம்மேளனத்தில், காந்திஜி வழிபாட்டைப்பற்றி ஒரு விரிவுரை ஆற்றினர். அதன் சாராம்சம் வருமாறு :

வழிபாடு என்பதன் பொருளென்ன? ஏன் வழிபாடு செய்ய வேண்டும்? என்பதைப்பற்றி என்னைப் பேசச் சொல்லுகிறீர்கள். இது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. சமயத்தின் உயிர்நாடியாகவும் அதன் சாராம்சமாகவும் வழிபாடு இருக்கிற தென்று நான் நம்புகிறேன். ஆதலால், வழிபாடு என்பது மனித வாழ்க்கைக்கு உயிராய் அமைய வேண்டும்; மதம் இன்றி எந்த மனிதனுலும் வாழ முடியாது. எங்களுக்கு மதம் தேவையில்லை யென்று அறிவின் மமதையினுல் சிலர் கூறுகிறார்கள். இது எப்படியிருக்கிறதென்றால், நான் சுவாசிக்கிறேன், ஆனல் எனக்கு மூக்கு இல்லை என்று சொல்லுவதைப்போல் இருக்கிறது. தெய்விக சக்தியோடு ஏதோ ஒருவகைத் தொடர்பு இருக்கிறதென்பதை அறிவினுலோ, இயற்கை உணர்ச்சியினுலோ, அல்லது மூடநம்பிக்கையாலோ, மனிதன் ஒப்புக்கொள்ளுகிறான். தீவிரமாக, கடவுள் இல்லை யென்று மறுக்கும் நாஸ்திகன்கூட, வாழ்க்கையில் ஒருவித ஒழுக்கவரம்பு வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறான்; அந்த ஒழுக்கவரம்பின் பிரகாரம் நடந்தால் நன்மை ஏற்படுகிறதென்றும், நடக்காவிட்டால் தீமை ஏற்படுகிறது என்றும் எண்ணுகிறான். பிராட்லா என்பவர் பெரிய நாஸ்திகர் என்பது பிரசித்தம். தமது உள்ளுணர்ச்சியில் தோன்றும் எண்ணங்களை அப்படியே வெளியிட்டுச் சொல்லிவிட வேண்டும் என்று அவர் எப்போதும் வற்புறுத்துவது வழக்கம். மனதில் தோன்றிய உண்மைகளை இவ்விதம் வெளியிட்டுச் சொல்லியமைக்காக அவர் எவ்வளவோ துன்பங்களை

யெல்லாம் அனுபவித்தார். ஆனால், அப்படி அனுபவிப் பதில் ஓர்வித ஆனந்தம் இருப்பதாகக் கண்டார். உண்மை யைக் கடைப்பிடித்து நடப்பதனால் கிடைக்கும் நன் கொடை உண்மையே யாகும் என்று அவர் சொல்லுவது வழக்கம். உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவதனால் உண்டாகிற ஆனந்தத்தை அவர் முற்றிலும் அனுபவிக்க வில்லை யென்று இதனால் எண்ணிவிடக் கூடாது. எப்படி இருந்த போதிலும், இந்த ஆனந்தம் இகத்தை ஒட்டிய தன்று; தெய்விக சக்தியோடு ஒன்றுபடுவதினால் ஏற்படுகிற ஆனந்தம் இது. இதுபற்றியே மதம் வேண்டாம் என்று சொல்லுகிறவன்கூட, மதமில்லாது வாழ முடியாது, வாழவில்லை யென்று சொன்னேன்.

இனி, அடுத்த விஷயத்திற்குச் செல்லுகிறேன்; அதாவது, சமயத்தின் உயிர்நாடியாக இருப்பதைப்போலவே, மனித வாழ்க்கையின் உயிர்நாடியாகவும் வழிபாடு இருக்கிற தென்ற விஷயம். குறையிரத்தல் என்ற முறையிலோ, அல்லது இன்னும் விரிந்த பொருளில் சொல்லின் ஆன்ம ஒருமைப்பாட்டுக்காகவோ நாம் வழிபாடு செய்கிறோம். இந்த இரண்டு நிலைகளிலும் இறுதியில் அடையும் பயன், ஒன்றுதான். குறையிரத்தல் என்ற முறையில் வழிபாடு செய்யும்போது அடுக்கடுக்காக ஆன்மாவைச் சூழ்ந்து அதை மறைத்துக்கொண் டிருக்கும் அறியாமையையும் இருளையும் நீக்கிவிட வேண்டும் என்றும், ஆன்மாவைச் சுத்தம் செய்து புனிதமாக்கிவிட வேண்டுமென்றும் வேண் டிக்கொண்டு வழிபாடு செய்ய வேண்டும். ஆகையால் தம்முள் இருக்கிற தெய்வாம்சம் விழிப்புற வேண்டுமென்ற ஆர்வமுடையவர்கள் வழிபாடு செய்தே ஆக வேண்டும் சொற்களை உச்சரிப்பதும் கேட்பதும் வழிபாடாகாது; வெறும் சொல்லடுக்குகளைத் திருப்பித் திருப்பிச் சொல்லுவ தும் வழிபாடாகிவிடாது. ஆன்மாவைத் தட்டி எழுப்பி விட்டால் ராம நாமத்தைத் திருப்பித் திருப்பி எத்தனை தரம்தான் செபித்தாலும், அதனால் ஒரு பயனும் இல்லை. வழிபாடுசெய்யும்போது, இதயநெகிழ்ச்சி ஏற்படாமல் சொற் களைச்சொல்லுவதைவிடசொற்களில்லாமல்இதயநெகிழ்ச்சி ஏற்படுவது எவ்வளவோ சிறப்புடையது. வழிபாடு செய்ய வேண்டும் வழிபாடு செய்ய வேண்டுமென்று உள்ளத்திலே

ஒரு தவிப்பு ஏற்பட்டு, அந்தத் தவிப்பு சாந்தியடையும் வகையில் வழிபாடு அமைய வேண்டும். பசியெடுத்தவன், நல்ல ஆகாரம் கிடைத்தவுடன் அதை எவ்வளவு சுவையோடு புசிப்பானே, அதேபோல, ஆன்மத் தவிப்பெடுத்த உயிரானது இதயபூர்வமாகச் செய்கிற வழிபாட்டிலே ஈடுபடுகிறது. வழிபாட்டிலுள்ள மந்திர சக்தியை அனுபவித்தோர், நாட் கணக்காக உணவில்லாமல் உயிர்வாழ முடியும்; ஆனல், வழிபாடு இன்றி அவர்களால் ஒரு கணம் கூட வாழ முடியாது. என்னுடைய அனுபவத்தையும் எனது சகாக்களின் அனுபவத்தையும்கொண்டே நான் இதைச் சொல்லுகிறேன். ஏனெனில், வழிபாடு இல்லாத உள்ளம் அமைதி பெறாது.

இது உண்மையானல், வாழ்க்கையில் ஒவ்வொரு கணமும் நாம் வழிபாடு செய்தாக வேண்டுமே என்று சிலர் கேட்கலாம். இதைப்பற்றிச் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனல், தவறான நெறியில் செல்லும் இயல்புடைய மனிதர்களாகிய நாம் வேறு வேலைகளை யெல்லாம் அப்படியே ஒதுக்கி வைத்துவிட்டு இறைவனேடு ஒன்றிநிற்கும் பொருட்டாய் மனத்தை ஒரு கணமேனும் கட்டுப்படுத்தி வசப்படுத்த இயலாதவராய் இருக்கிறோம். எனவே, இறைவனேடு எப்போதுமே ஒன்றிநிற்பது நமக்கு இயலாத ஒரு காரியமாய் இருக்கிறது. அது காரணமாகவே, கொஞ்ச நேரத்திற்காவது உலகப்பற்றுதல்களை அகற்றிவிட எண்ணி, அதாவது இந்த உடலை மறந்து, உள்ளத்தோடு மட்டும், ஒன்றிநிற்க கடுமையாக முயலுகிறோம். இதற்காகக் குறிப்பிட்ட சில வேளைகளை வழிபாட்டுக்கென்று ஒதுக்கி வைக்கிறோம். * சூர்தாசருடைய கீதத்தை நீங்கள் கேட்டிருப்பீர்கள். பரம்பொருளோடு கலக்க வேண்டும் என்று ஆன்மாவுக்கு உள்ள தவிப்பை-உணர்ச்சி ததும்ப ஆன்மா கதறுவதை—அந்தக் கீதம் வெளியிடுகிறது. நாம் அவரை ஒரு சிறந்த அடியாராகக் கருதுகிறோம். ஆனல், அவரோ, தம்மை வெளிப்படையாகப் பாவி என்றே சொல்லிக் கொண்டார். ஆன்ம நெறியிலே நம்மைவிட அவர் எவ்வளவோ தூரம் முன்னே சென்றிருந்தார். இருந்தும் இறை

* என்னிலும் வெறுக்கத்தக்க கொடிய கசடன் யாவன்? என்னைப் படைத்த பிரமனை மறந்தேன்; நன்றிகெட்ட பாதகனய் விட்டேன்!

வனிடமிருந்து பிரிந்த துக்கத்தை அவரால் சகிக்க முடிய வில்லை; கடவுளின் பிரிவாகிய ஆற்றொணாத துன்பத்தைச் சகிக்கமுடியாமல், நம்பிக்கை யிழந்து, தம்மையே வெறுத்த நிலையில் அவர் இவ்வாறு கதறினர்.

வழிபாடு எவ்வளவு இன்றியமையாதது என்பதைச் சொல்லி அதன்மூலம், முக்கியமாக வழிபாட்டின் சாராம் சத்தையும்பற்றிச் சொன்னேன். மனிதவர்க்கத்திற்குச் சேவை செய்யவே நாம் பிறந்திருக்கிறோம். தக்க முறையில் இச் சேவையைச் செய்வதற்கு நாம் நன்கு விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையேல், நம்மால் சேவை செய்ய முடியாது. மனிதனுடைய மனதில் இருளுக்கும் ஒளிக்கும் இடையே நிரந்தரமாக ஒரு போராட்டம் நடைபெறுகிறது. வழிபாடு என்ற சிறந்த பாதுகாப்பை நம்பியிராதவன் இந்தப் போரில் இருளுக்கு அடிமையாகிவிடுவான். வழி பாடு செய்பவன் மனச்சாந்தி பெற்று, உலகத்தோடு மன மொத்த அன்பு பூண்டு வாழ்வான். வழிபாட்டில் ஈடுபடும் இதயநெகிழ்ச்சி இல்லாதவன் லௌகிக விஷயங்களில் அழுந்தி, தன்னையும் துன்பத்தி லாழ்த்தி, உலகத்தையும் துன்பத்தி லாழ்த்துவான். இறந்த பிறகு வழிபாட்டினல் நன்மை ஏற்படும் என்பது ஒருபுறமிருக்க, இந்த உலகத் திலேயே மனிதனுக்கு அதனல் அளவற்ற நன்மைகள் உண்டு. நாள்தோறும் நாம் செய்கிற செயல்களில் ஒழுங்கையும் அமைதியையும் ஓய்வையும் நிலைபெறச் செய்வதற்கு, வழிபாடுதான் சிறந்த சாதன மாகும். இந்த ஆசிரமவாசிகளாகிய நாம் உண்மையையே நாடி, அதன்வழியே நிற்ப தென்ற உறுதியோடு இங்கு வந்தோம். அப்படி வந்த நாம், வழிபாட்டினல் சிறந்த நலன் ஏற்படும் என்று நம்புவதாகச் சொல்லிக் கொண்டோம். ஆனல், நெடுங்காலம்வரை, வழிபாட்டை முக்கிய விஷயமாகக் கருதாமல் இருந்துவிட்டோம். மற்ற விஷயங்களில் கவனம் செலுத்திய அளவு, வழிபாட்டில் நாம் கவனம் செலுத்தவில்லை. இந்த உறக்கத்தி லிருந்து ஒரு நாள் நான் விழித்துக்கொண்டேன்; இந்த விஷயத் தில் எனது கடமையைச் செய்வதிலே மிக்க வருந்தத்தக்க முறையில் தவறிவிட்டதாக உணர்ந்தேன். எனவே, இந்த நிலையைச் சீர்திருத்தும் பொருட்டு, கடுமையான கட்டுப்

பாட்டை எல்லோரும் பின்பற்ற வேண்டுமென்று சொன்னேன். இந்தக் கட்டுப்பாட்டைப் பின்பற்றியதனல், நமது நிலை முன்னைய நிலையைவிடச் சிறப்புடையதா யிருக்கிறதே யொழிய, கெட்டுப்போக வில்லை என்றே நம்புகிறேன். இது வெளிப்படையாகவே தெரிகிறது. பிரதானமான விஷயத்தை முதலில் கவனித்தால், மற்றவை தாமே ஒழுங்குபட்டு வரும். நாற்கோணமான சதுரத்திலே, ஒரு கோணத்தை நிமிர்த்திவிட்டால், மற்றக் கோணங்கள் தாமாகவே நிமிர்ந்துவிடும்.

ஆகையால், தினசரி வாழ்க்கையில், முதல் வேலையாக வழிபாடு செய்யுங்கள். மாலைவரை வழிபாட்டு உணர்ச்சி உங்களைவிட்டு அகலாதவாறு இதய நெகிழ்ச்சியோடு வழிபாடு செய்யுங்கள். எல்லாவிதத் தீய எண்ணங்களும் பயங்கரமான கனவுகளும் இல்லாமல் அமைதியோடு உறங்குவதற்கு அனுகூலமாக, நாள்தோறும் மாலையில் வழிபாடு செய்து அன்றாட வேலைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவாருங்கள். வழிபாடு என்ன உருவத்தில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றிய கவலை வேண்டாம். எந்த உருவத்தில் நடைபெறினும் சரியே, பரம்பொருளோடு நம்மை ஒன்றுபடுத்தக் கூடிய முறையில் வழிபாடு இருந்தால் போதும். முறை எப்படி யிருந்தபோதிலும், வாயிலிருந்து சொற்கள் வெளிவரும்போது, மனம் அலையாம லிருக்கிறதா வென்பதை மட்டும் கவனத்தோடு பார்த்துக்கொள்ளுங்கள்.

நான் சொன்னது உங்கள் மனதில் பதிந்துவிட்டால், வழிபாட்டில் சிரத்தைகொண்டு, அதை மாணவரின் கட்டாயமான கடமையில் ஒன்ருக ஆக்கும்படி, உங்கள் மாணவர் இல்லத்தின் கண்காணிப்பாளர்களை நீங்கள் நிர்ப்பந்திப்பீர்கள்; அப்படிக் கட்டாயமானல்தான் உங்களுக்கு அமைதி ஏற்படும். தானகவே ஏற்படுத்திக்கொள்ளுகிற கட்டுப்பாடு நிர்ப்பந்தமான தன்று. ஆன்ம அடக்கமில்லாமல், மனதில் தோன்றுவதை யெல்லாம் செய்கிறவன், அதாவது, இன்ப நுகர்ச்சியில் அழுந்திச் சுகமாக வாழ எண்ணுகிறவன், ஆசைகளுக்குக் கொத்தடிமையாகிருன்; ஆனல், சில விதிகளையும் கட்டுப்பாடுகளையும் அமைத்துக்கொண்டு, அவற்றிற்கு உட்பட்டு ஒழுகுபவனே என்ருல், தன்னையே விடுதலை செய்துகொள்ளுகிருன். இந்தப் பிரபஞ்சத்தி

ளுள்ளவையாவும், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை அனைத்தும் சில விதிகளுக்கு உட்பட்டே நடக்கின்றன. இந்த விதிகளினால் ஏற்படும் கட்டுப்பாடு இல்லாவிட்டால் உலகம் ஒரு கண நேரம்கூட நடைபெறாது. மனித வர்க்கத்துக்குச் சேவை செய்வதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ள நீங்கள், ஏதாவது ஓர் ஒழுங்கை ஏற்படுத்திக்கொள்ளாவிட்டால், சிதறுண்டு போவீர்கள். ஆன்ம நெறியில் கட்டுப்பாடுடன் இருப்பதற்கு வழிபாடு மிக்க அவசியமானது. நாமாக ஏற்படுத்திக்கொள்ளும் கட்டுப்பாடும் ஒழுங்குமே நம்மை மிருகத்தினின்றும் வேறு படுத்திக் காட்டுகின்றன. நான்கு கால்களால் நடக்கும் விலங்குகளா யிராமல், நிமிர்ந்து நடக்கும் மனிதர்களா யிருக்க விரும்பின், நாம் இந்த உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொண்டு, நமக்கு நாமே சில கட்டுப்பாடுகளையும் ஒழுக்க முறைகளையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

வழிபாடு என்றால் என்ன?

"கடவுள் குடிகொண்டிருக்கிறார் என்று எண்ணுபவர்களுக்குப் பணி செய்வதே வழிபாடு ஆகும். அவர்கள் வாழ்க்கையானது இடைவிடாமல் தொடர்ந்து செய்கிற வழிபாடாகவோ, அல்லது வணக்கமாகவோ இருக்கிறது."

வைத்தியக் கல்லூரிப் பட்டம்பெற்ற ஒருவர் கீழ்வருமாறு கேட்கிறார்:

வழிபாடு செய்வதிலே சிறந்த முறை யாது? எவ்வளவு நேரம் வழிபாடு செய்ய வேண்டும்? நியாயமாக நடந்துகொள்ளுவதே எல்லாவற்றையும்விடச் சிறந்த வழிபாடு என்றும், மனப்பூர்வமாகவும் நியாயமாகவும் நடந்துகொள்ளுபவன் வேறு வழிபாடு செய்யத் தேவையில்லையென்றும் நான் கருதுகிறேன். சந்தியாவந்தனம் செய்யச் சிலருக்கு நீண்ட நேரம் பிடிக்கிறது; அவர்களிலே நூற்றுக்கு 95 பேருக்கு, தாங்கள் சொல்லுகிற மந்திரங்களின் பொருளே தெரியாது. தாய்மொழியிலேதான் வழிபாடு செய்ய வேண்டும் என்பது என் அபிப்பிராயம். தாய் மொழியில் சொல்லும் பிரார்த்தனைதான் ஆன்மாவை அதிகமாகத் தொட முடியும். மனங் கசிந்து, ஒரு நிமிஷம் வழிபாடு செய்தாலே போதும். பாவம் செய்ய மாட்டேன் என்று கடவுளறிய உறுதிகொள்ளுவதே போதுமானது.''

ஏதாவது ஒன்றை விரும்பி, பயபக்தியோடு கடவுளை வேண்டிக்கொள்ளுவதே வழிபாடாகும். ஆனால், பக்தி மேலிட்டுச் செய்கிற செயல்களைக் குறிக்கவும் வழிபாடு என்ற சொல் வழங்கிவருகிறது. இந்த நிருபருடைய கருத்தைக் குறிப்பிடுவதற்கு, வழிபாடு என்ற சொல்லை விட, தோத்திரம் என்ற சொல்லே பொருத்தமானது. இப்படிப் பொருள் வரையறை செய்வது ஒருபக்கமிருக்க, கடவுள் வணக்கத்திற்றென்று ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள நேரத்தில், கோடிக்கணக்கான ஹிந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், யூதர்களும், ஏனைய மதத்தினரும் நாள்தோறும் என்ன செய்கிறார்கள்? கடவுளோடு ஒன்ற வேண்டுமென்ற விருப்பத்தையும் அவருடைய அருளைப் பெறக் கடவுளை வேண்டிக்கொள்ளுவதையும் நான் வழிபாடு என்று கருதுகிறேன். எனவே, உள்ளப்பாங்கு முக்கியமேயன்றி, வாய்விட்டுச் சொல்லும் சொற்களோ மனதிற்குள்ளேயே சொல்லிக்கொள்ளும் சொற்களோ முக்கியமல்ல. முன்னோர் காலத்திலிருந்தே புராதனமாக வழங்கிவரும் சொற்களை உச்சரிப்பதில் ஒரு தனியான

நயம் இருக்கிறது; இச் சொற்களைத் தாய் மொழியில் கூறி னல் மேலேசொன்ன நயம் மறைந்துவிடும். உதாரணமாக, காயத்திரி மந்திரத்தை, சம்ஸ்கிருதத்தில் உள்ளபடியே சொல்லும்போது ஏற்படுகிற பயன், அதைக் குஜராத்தி மொழியில் மொழிபெயர்த்துப் பாராயணம் செய்யும்போது ஏற்படாது. கடவுள் என்ற சொல்லுக்குப் பொருள் தெரிந் திருந்தாலும்கூட, கோடிக்கணக்கான ஹிந்துக்களுக்கு அந்தச் சொல் மனதிலே ஒரு கிளர்ச்சியையும் உண்டு பண்ணுது. ஆனல், ராமநாமத்தைச் செபித்த மாத்திரத் திலே, அவர்களிடையே ஏதோ ஒருவித உணர்ச்சி ஏற்படு கிறது. கடைசியாகப் பார்த்தால், நீண்ட காலம் வழங்கு வதால், சொற்களுக்கு ஒருவித வலிமை ஏற்பட்டுவிடுகிறது. அவற்றை உபயோகிப்பது காரணமாகவே, ஒரு புனிதத் தன்மையும் ஏற்படுகிறது. ஆதலால், அதிகமாகப் பிர சித்தி பெற்றிருக்கிற மந்திரங்களுக்குப் புராதனமான பழைய சம்ஸ்கிருதச் சொற்களையே வைத்துக்கொள்ளுவது தான் நியாயம். இதனுல் அவற்றின் பொருளைச் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும்.

பக்தி மேலீட்டால் கடவுளை வழிபடும்போது, எவ்வளவு நேரம் வழிபட வேண்டுமென்று திட்டமான நியதி ஒன்றை யும் வகுக்க முடியாது. வழிபாடு செய்கிறவரின் மனே நிலையைப் பொறுத்திருக்கிறது அது. மனிதனுடைய தினசரி வாழ்க்கையில் வழிபாடு செய்கிற நேரம் பெரு மதிப்புடைய காலமாகும். சிறுமையை உணர்ந்து அமைதி யோடிருக்கும் பொருட்டும், அவனன்றி ஓரணுவும் அசை யாது என்பதையும், அந்தப் பரமனுகிய 'குயவன்' கையி லிருக்கும் வெறும் களி மண்தான் நாம் என்பதையும் உணரும் பொருட்டே, இவ் விதமான பயிற்சிகள் ஏற்பட்டுள்ளன. வழிபாடு செய்யும்போது அண்மை யில், தமக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிப் போக்குகளை கவனித்து, தம்மிடம் காணப்பட்ட குறைபாடுகளை ஒப்புக்கொண்டு, அவற்றிற்காக வருந்தி மன்னிப்புக் கேட்கும்படி சமயங்கள் நேரலாம்; அல்லது சென்ற காலத்தைவிட நல்ல முறை யில் நடந்துகொள்ளுவதற்கும் பலம் அளிக்க வேண்டு மென்று கேட்கும்படியான சமயங்களும் எழுவதுண்டு.

இதற்குச் சிலருக்கு ஒரு நிமிஷமே போதும். இன்னும் சிலருக்கு இருபத்து நான்கு மணி நேரமுமே போதாது. கடவுள் குடி கொண்டிருக்கிறார் என்று எண்ணுபவர்களுக்கு, பணி செய்வதே வழிபாடு ஆகும். அவர்கள் வாழ்க்கையானது இடைவிடாமல் தொடர்ந்து செய்கிற வழிபாடாகவோ, அல்லது வணக்கமாகவோ இருக்கிறது. வேறு சிலர் பாவம் நிரம்பிய செயல்களைப் புரிந்து, போகத்தில் அழுந்தி, தங்களுக்காகவே வாழ்கிறார்கள்; இவர்கள் எவ்வளவு நேரம் வழிபாடு செய்தாலும் அது போதியதாகாது. பொறுமையும், நம்பிக்கையும், உள்ளத்தைத் தூயதாக்க வேண்டுமென்ற உறுதியும் இருப்பின் எல்லாவற்றையும் புனித மயமாக்கும் கடவுள் தங்களுக்குள் நிச்சயமாக இருக்கிறார் என்பதை உணருகிறவரை இவர்கள் வழிபாடு செய்வார்கள். நம்போன்ற சாதாரண மக்களுக்கு, மாறுபட்ட இந்த இரண்டு கோடிக்கும் மத்திய நெறியாக, ஒரு நெறி அவசியமாகும். நமது செயல்கள் யாவும் கடவுளுக்குச் செய்யும் அர்ப்பணம் என்று சொல்லக் கூடிய உயர்ந்த பதவியை நாம் அடையவில்லை; தன்னலத்திற்காகவே வாழ்வது என்ற அளவுக்கு நாம் தாழ்ந்தும் போய்விடவில்லை. இது காரணமாகவே, பொதுவாகவே வழிபாடு செய்வதற்காக எல்லா மதங்களும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி வைத்திருக்கின்றன. துர்ப்பாக்கிய வசமாக, இந்த நேரங்களில் செய்கிற வழிபாடெல்லாம் இப்போது ஏமாற்றுகிற காரியமாகப் போய்விட்டது. அது போலி வழிபாடாக இல்லை யென்றாலும், வாயினால் ஏதோ சில வார்த்தைகளைச் சொல்லுகிற சடங்காகப் போய்விட்டது. ஆதலால், வழிபாடு செய்வதற்கு இப்போது தேவையாய் இருப்பது பக்குவமான இதய நெகிழ்ச்சியே யாகும்.

தன்னுடைய நன்மையைக் கருதியும், கடவுளிடம் ஏதாவது வேண்டிக்கொண்டும் வழிபாடு செய்யும்போது, அந்த வழிபாடு, நிச்சயமாகத் தாய் மொழியிலேதான் இருக்க வேண்டும். உயிரோடு இயங்குகிற ஜீவராசிகள் அனைத்தினிடமும் நியாயமான முறையில் நடந்துகொள்ளத் தனக்கு மனோதிடம் அளிக்குமாறு கடவுளை வேண்டிக் கொள்ளுவதைவிடச் சிறந்த காரியம் உலகில் எதுவுமே இல்லை.

சங்கீதத்தின் சக்தி

"இசை எனக்குச் சாந்தி அளிக்கிறது. ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி நான் பெரிதும் பரபரப்படைந்திருந்த காலத்தில், சங்கீதம் என் மனதுக்கு உடனே அமைதியை அளித்ததுண்டு."

கூர்ஜர வித்தியா பீடத்தைச் சேர்ந்த மாணவரொருவர் கேட்கிறார் :

"வாழ்க்கையில், சங்கீதம் தங்களுக்கு எவ்விதம் பயன்பட்டிருக்கிறது ?"

இசை எனக்குச் சாந்தி அளிக்கிறது. ஏதாவது ஒரு விஷயத்தைப்பற்றி நான் பெரிதும் பரபரப்படைந்திருந்த காலத்தில், சங்கீதம் என் மனதுக்கு உடனே அமைதியை அளித்ததுண்டு. கோபத்தை வெல்லுவதற்குச் சங்கீதம் எனக்கு உதவியாய் இருந்திருக்கிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் பலவற்றை நான் நினைவுகூர முடியும். பக்தி பாவம் பொருந்திய இசையோடு கலந்த கீதம் எனது இதயத்தில் ஆழ்ந்து பதிந்திருக்கிறது. ஆனால், அதே கீதத்தை வசனத்தில் சொன்னபோது என் மனதில் எவ்வித உணர்ச்சியும் ஏற்படவில்லை. அபஸ்வரத்தோடு பாடியபோது பொருளே விளங்காமலும் உணர்ச்சியை உண்டுபண்ணாமலும் இருந்த அதே கீதம், முறைப்படி பாடியபோது பொருள் விளங்கியதையும் மனநிலை அப்படியே பதிந்து வெளிவிட்டுக்கொண்டிருந்ததையும் கண்டேன். கீதையின் சுலோகங்களை இனிமையாகப் பாராயணம் செய்யும்போது, அதை என்னால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் கேட்க முடியும் ; அப்படிக் கேட்பதில் எனக்குக் கொஞ்சம்கூடக் களைப்பு உண்டாவதில்லை. கேட்கக் கேட்க அவற்றின் பொருள் என் இதயத்தில் அழுந்திவிடுகிறது. நான் குழந்தையாக இருந்தபோது இராமயணத்தை இனிமையாகப் பாடக் கேட்டிருக்கிறேன். அது என் மனதில் அப்படியே பதிந்துவிட்டது. கேட்டு எத்தனையோ வருஷங்கள் ஆகியும், அது என் மனதைவிட்டு அகலாமலும் வேகம் குறையாமலும் இன்னும் அப்படியே இருந்து வருகிறது ; '**கடவுளை நாடிச் செல்லும் வழி, வீரருக்கு ஏற்பட்டது, கோழைகளுக்கு ஏற்பட்டதன்று**' என்ற அபூர்வமான கீதத்தை இனிய குரலில் எனக்கு ஒரு தரம் பாடி

காட்டினார்கள். அப்போது அந்தக் கீதம் என்னை என்று மில்லாத அளவு பரவசப்படுத்தியது எனக்கு நன்ருக ஞாபகம் இருக்கிறது. 1907-ம் ஆண்டில், தென் ஆப்பிரிக்காவிலுள்ள டிரான்ஸ்வாலில், உயிருக்கே ஆபத்துவரக் கூடிய முறையில் என்னைத் தாக்கிவிட்டார்கள். அதனுல் ஏற்பட்ட காயங்களின் காரணமாக, நான் மிகவும் வேதனைப்பட்டேன். என்னுடைய வேண்டுகோளின் பேரில் "அன்பு நிறைவே, ஒளி வடிவே, என்னை வழி நடத்து" என்ற கீதத்தை ஆலிப் டோக் என்பவர் அமைதியாகப் பாடினுர். அந்தக் கீதம் எனது வேதனையைப் போக்கியது.

இதிலிருந்து, எனக்குச் சங்கீதம் தெரியும் என்று யாரும் எண்ணிவிட வேண்டாம். அதற்கு மாருக, சங்கீதத்திலே எனக்குள்ள அறிவு மிகவும் அற்பமானது என்று சொல்லுவதே சரியாகும். சங்கீதத்தை இசையறிவோடு மதிப்பிடும் ஆற்றல் என்னிடம் இல்லை. ஆனுல், இயல்பான எளிய நல்ல சங்கீதத்தை என்னுல் அனுபவிக்க முடியும்.

சங்கீதமானது என் வாழ்க்கையில் எப்போதும் நல்ல பயனைத் தந்திருப்பதால், மற்றவர்களுக்கும் அதனுல் நல்ல பயன் ஏற்படக் கூடும் என்ற பொருளில் நான் இதைச் சொல்லவில்லை. அதற்கு மாருக, அனேகர் தங்கள் இந்திரிய உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காக, இசையைப் பயன்படுத்திக்கொள்ளுகிருர்கள். இதை நான் அறிவேன். ஆதலால், இவற்றை யெல்லாம் பார்க்கும்போது, மனநிலைக்குத் தகுந்தபடி சங்கீதத்தின் சக்தி மாறுபடுகிறதென்று நாம் சொல்லலாம். துளசிதாசருடைய பாடலொன்றைப் பார்க்கலாம்.

"பரமன் இவ்வுலகத்தில் நன்மையும் தீமையும் கலந்திருக்கும்படியாகவே படைத்திருக்கிருன். அன்னப் பறவையானது, பாலை மட்டும் உண்டு நீரை ஒதுக்கிவிடுவது போல, நல்லோர் எல்லாப் பொருள்களிலும் உள்ள நன்மையை எடுத்துக்கொண்டு, தீமையைத் தள்ளிவிடுகிருர்கள்."

சமயக் கல்வி

"சமயக் கல்வி புகட்ட வகுக்கிற திட்டத்தில், தன் சொந்த மதக் கோட்பாடுகளோடன்றி, பிற மதக் கோட்பாடுகளையும் பயில வசதி செய்ய வேண்டும். இந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டு, உலகத்திலுள்ள பலவேறு பெரிய சமயங்களின் கோட்பாடுகளைச் சிரத்தையுடனும் விரிந்த மனப்பான்மையுடனும் உணர்ந்துகொள்ளவும். உணர்ந்துகொண்டவற்றைப் போற்றும் முறையிலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்."

கூர்ஜர வித்தியா பீட மாணவர் ஒருவர் கேட்கிறார் :

"வித்யா பீடத்தில், திட்டமான முறையில், சமயக் கல்வி எந்த விதத்தில் சொல்லிக்கொடுக்க வேண்டும் ?"

சமயம் என்பதன் பொருள், உண்மையும் அஹிம்சையும் ஆகும். உண்மை மட்டுமே சமயமாகும் என்றுகூடச் சொல்லிவிடுவேன். ஏனென்றால், அஹிம்சை என்பது, உண்மையைக் காண்பதற்கு இன்றியமையாத, முக்கியமான ஒரு சாதனமே யாகும். மேலும் அஹிம்சைத் தத்துவம் உண்மைத் தத்துவத்தில் அடங்கிவிடுகிறது. ஆதலால், இவ் விரண்டு உயர்ந்த பண்புகளை வளர்ப்பதற்குச் சாதகமாக யிருப்ப தெதுவும் சமயக் கல்வியைப் பயிற்று விப்பதற்குக் கருவியாக அமையும். சமயக் கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு மிகச் சிறந்த முறை, இவ்வுயர்ந்த, அடிப்படையான பண்புகளை ஆசிரியர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையிலேயே கடைப்பிடித்து ஒழுகுவதே யாகும். அப்படிக் கடைப்பிடித்து ஒழுகிற ஆசிரியர்களோடு, மாணவர்கள் கலந்து பழகுவது மிகவும் உதவியாய் இருக்கும். அப்படிக் கலந்து பழகுகிற இடம், விளையாடும் இடமாயு மிருக்கலாம்; அல்லது, படிக்கிற வகுப்புகளாயும் இருக்கலாம்.

சமய தத்துவங்களின் சாராம்சத்தைப் போதிப்பதற்கு நான் மேலே சொன்னமுறை போதியதாகும். சமயக் கல்வி புகட்ட வகுக்கிற திட்டத்தில், தன் சொந்த மதக் கோட்பாடுகளோடன்றி, பிற மதக் கோட்பாடுகளையும் பயில வசதி செய்ய வேண்டும். இந்த நோக்கம் நிறைவேறும் பொருட்டு, உலகத்திலுள்ள பல்வேறு பெரிய

சமயங்களின் கோட்பாடுகளைச் சிரத்தையுடனும் விரிந்த மனப்பான்மையுடனும் உணர்ந்துகொள்ளவும், உணர்ந்து கொண்டவற்றைப் போற்றும் முறையிலும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். இவ் வேலையை ஒழுங்காகச் செய்துவிட்டால், தங்கள் சொந்தச் சமயத்தின் ஆன்மீக விஷயங்களிலே ஒரு உறுதியான பற்றுதலும் அதனோடு கூடச் சொந்த மதத்தை முன்னைவிடச் சிறந்த முறையில் உணர்ந்து பாராட்டத்தக்க திறமையும் மாணவர்களுக்கு ஏற்படும். எனினும், பெரிய மதங்களை யெல்லாம் தெரிந்துகொள்ளும்போது ஒரு விஷயத்தை, எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதாவது, அந்தந்த மதங்களைச் சிறந்த முறையில் பின்பற்றியவர்கள் எழுதிய நூல்களின் மூலமாகவே அவற்றைக் கற்கத் தலைப்பட வேண்டும். உதாரணமாக, பாகவதத்தை ஒருவர் படிக்க விரும்பினால், பாகவதத்தில் அன்பு செலுத்தியவர் தயாரித்த பதிப்பைப் படிக்க வேண்டுமேயன்றி, அதைக் கண்டிக்கும் மனப்பாங்குடையவர் தயாரித்த பதிப்பைப் படித்தல் கூடாது. அதுபோல, பைபிளைப் படிப்பதென்றால், பக்தி செலுத்திய கிறிஸ்தவர்கள் எழுதிய உரைகளின் உதவி கொண்டே படித்தல் வேண்டும். சொந்த மதத்தைப் படிப்பதோடு, பிற மதங்களையும் இம் முறையில் பயிலுவது, எல்லா மதங்களிலும் நிலவும் அடிப்படையான ஒற்றுமையைத் தெரிந்துகொள்ளவும், யாவற்றுக்கும் பொதுவானதாக விளங்கிக்கொண் டிருக்கிற ஒரு தனித்த உண்மையின் மீது படிந்துள்ள கோட்பாடுகள், மதங்கள், என்ற தூசியை நீக்கிவிட்டு, ஒருவாறாகக் காணவும் உதவி புரியும்.

பிற மதங்களைப் பக்தியோடு கற்பதனால், சொந்த மதத்தில் வைத்துள்ள பற்றுதல் குறைந்துவிடு மென்றோ அல்லது பற்றுதலே இல்லாது செய்துவிடும் என்றோ ஒருவரும் அஞ்ச வேண்டியதில்லை. சகல மதங்களிலுமே அடிப்படையான உண்மைக் கூறுகள் இருக்கின்றன வென்றும், பிற மதங்களிடம் வினயத்தோடும் பக்தியோடும் நடந்துகொள்ள வேண்டும் என்றும் ஹிந்துக்கள் வகுத்த தத்துவ முறை கருதுகிறது. பிற மதங்களைக் கௌரவிக்க வேண்டுமென்பதனால் சொந்த மதத்தைப் போற்ற வேண்டும், கௌரவிக்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

பிற மதங்களைப் பயிலுவதும், அவற்றைப் போற்றுவதும் சொந்த மதத்தினிடமுள்ள பக்தியையும் பற்றுதலையும் குறைத்துவிட மாட்டாது. மற்ற மதங்களிடம் பக்தியையும் பற்றுதலையும் அது வளர்க்கவே செய்யும்.

இந்த அம்சத்தில், பண்பாடும் சமயமும் ஒரே படித் தானவை. சொந்தப்பண்பாட்டைப் பேணிப் பாதுகாப்பது பிறருடைய பண்பாட்டைப் இகழ்வதாகாது. ஆனால், பிற பண்பாடுகளில் காணப்படும் சிறந்த அம்சங்களைத் தமதாக்கிக்கொண்டு, தன்னுடைய சொந்த பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்க வேண்டு மென்பதையே அது குறிக்கும். இந்த உண்மை மத விஷயத்திலும் பொருந்தும். பயமும் கவலையும் நம் மனதில் குடிகொண் டிருப்பதற்கு, நம் நாட்டில் தாண்டவமாடிக்கொண் டிருக்கும் நச்சு நிலை போன்ற சூழ்நிலையே காரணமாகும். இந்த நச்சு நிலையில் பரஸ்பர வெறுப்பு, பகைமை, அவநம்பிக்கை முதலியன இடம் பெற்று இருக்கின்றன. மறைமுகமாக யாராவது நமது மதத்தைப் பாழ்படுத்திவிடுவார்களோ, அல்லது நமக்கு வேண்டியவர்களின் மதத்தைச் சிதைத்துவிடுவார்களோ என்று நாம் அஞ்சுகிறோம்; இதனால், எப்போது பார்த்தாலும் இந்தப் பயம் என்கிற ஒரு தீய கனஉலகத்திலேயே வாழ்ந்து துன்புற்று வருகிறோம். பிற மதங்களையும் மதத்தினரையும் கௌரவித்து, சகிப்புத்தன்மையோடு வாழப் பழகி வருவோமேயானால், இயற்கைக்கு மாறான இந்த நச்சு நிலை தானகவே மறைந்துவிடும்.

கல்வியில் அஹிம்சை

"பகை, கோபம், குரோதம் ஆகிய இந்த இருளை எல்லாம் அஹிம்சையாகிய சூரியன் அழித்துவிடுகிறது. கல்வியில் அஹிம்சா நெறியானது மிகத் தெளிவாயும் நெடுந்தூரம் வரையிலும் ஒளிவிடுகிறது. அதை எந்தச் சாதனங் கொண்டும் இனி ஒளித்துவைக்க முடியாது. அஹிம்சையாகிய இந்தத் தத்துவமானது, இந்த வித்தியா பீடத்தைச் சூழ்ந்து விளங்கும்போது, இதன் மாணவர்கள் மனத்தைக் குழப்பிக் கொண்டு தொல்லைப்பட மாட்டார்கள் என்பது நிச்சயம்."

கூர்ஜர வித்தியா பீட மாணவர்களிடையே, காந்திஜி வாரா வாரம் பேசுவதுண்டு. ஒரு வாரம் அவ்வாறு பேசிக்கொண் டிருந்தபோது, ஒருவர் காந்திஜியைப் பின்வருமாறு கேட்டார்:

" அஹிம்சையைப்பற்றிப் பேசத் தொடங்கியவுடனேயே நாய்களைக் கொல்வது சரியா? புலி, ஓநாய், பாம்பு, பேன் போன்ற உயிர்களைக் கொல்வது சரியா? கத்திரிக்காயையோ, உருளைக்கிழங்கையோ, சாப் பிடுவது அஹிம்சை யாகுமா என்பன போன்ற அற்பக் கேள்விகளைச் சிலர் கேட்கத் தொடங்கிவிடுகிறார்கள். அல்லது, ராணுவத்தை வைத்துப் பரிபாலிப்பது, அதன் துணைகொண்டு விரோதியை எதிர்த்துநிற்பது போன்ற காரியங்கள் அஹிம்சைக்கு முரண்பாடில்லையோ என்ற விவா தத்தில் இறங்கிவிடுகிறார்கள். அஹிம்சைத் தத்துவத்தைக் கல்வித் திட் டத்தில் ஓர் அம்சமாக வைத்து, எப்படிச் செயலாற்றுவ தென்பதைப் பற்றி, ஒருவரும் கவனிப்பதாகவே தெரியவில்லை. இந்தப் பிரசினையைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாக எடுத்துச்சொல்லுவீர்களா ?"

இந்தக் கேள்வியின் முதல் பகுதியானது, மிகக் குறுகிய மனப்பான்மையோடு கேள்விகளை அடிக்கடி கேட்கிறார்களென்பதைக் காட்டுகிறது. அற்பமான பிராணிகளையும் மிருகங்களையும் கொல்வது நியாயமா வென்று ஆராய்கிற புதிர்போன்ற கேள்விகளில், அனாவசியமாக நமது அறிவைச் செலவிடுவதானால், முதன்மையான கடமைகளைச் செய்ய அடிக்கடி நாம் மறந்து விடுகிறோம். துஷ்ட மிருகங்களையோ, வெறுப்பான உயிர்களையோ கொல்லும்வேலை நம் ஒவ்வொருவருக்கும் தினந்தோறும் ஏற்படுவதில்லை. பாம்பு போன்ற அபாயகரமான பிராணிகளிடமும் அஹிம்சையைக் கையாளக்கூடிய அளவுக்கு நம்மில் அனேகர் அன்பையும் தைரியத்தையும் வளர்த்துக் கொள்ளவில்லை. நமக்குள்ளேயே வளர்ந்து வருகிற பகைமை, கோபம் முதலிய நச்சுப் பாம்புகளையே

நாம் இன்னும் கொன்றபாடில்லையே! அப்படியிருக்கும் போது, துஷ்டப் பிராணிகளைக் கொல்வது சரியா என்பது போன்ற பயனற்ற விவாதங்களில் இறங்குகிற துணிசல் மட்டும் நம்மிடம் இருக்கிறது. எனவே, முடிவு காண முடியாமல் கேடான இந்த விவாதம் என்ற வட்டத்தில் நாம் சுற்றிச் சுற்றி வருகிறோம். முக்கியமான கடமைகளை நிறைவேற்றுவதில் அக்கரைகொள்ளாமல் இருந்துவிடு கிறோம், ஆயினும் தீங்கு பயக்கும் பிராணிகளைக் கொல்வ தில்லை யென்ற காரணத்தால், நமது ஆன்மாவை எப்படியோ திருப்திசெய்துகொண்டு பெருமையடைகிறோம். அஹிம்சையைப் பின்பற்ற விரும்புவர், பாம்பு முதலிய தீய பிராணிகளைப்பற்றிய எண்ணத்தைத் தற்காலிகமாகவா வது மறந்துவிட வேண்டும். அவற்றைக் கொல்லாமலிருக்க முடியவில்லை யென்றால், அதன் பொருட்டு அவர் தம் மனதைப் புண்படுத்திக்கொள்ள வேண்டாம். உலகெங் குமே அன்பு நெறியை வளரச் செய்யும் நோக்கத்தோடு, அதற்கு முதற்படியாக மனிதர்களிடம் காணப்படும் பகைமையையும் கோபத்தையும் வெற்றிகொள்ள அவர் தம்மாலானவரையில் பொறுமையோடு முயலட்டும். கூடு மானால் கத்திரிக்காயையும் உருளைக் கிழங்கையும் உண் பதைத் தாராளமாக விட்டுவிடுங்கள்; ஆனால், உண்ணாம லிருப்பதனால் மட்டுமே தரும நெறியைக் கடைப்பிடித்து விட்டதாகவோ, அஹிம்சையைக் கடைப்பிடிப்பதாகவோ எண்ணிக்கொள்ள வேண்டா மென்று உங்களை மன்றாடிக் கேட்டுகொள்ளுகிறேன். இந்த வெறும் எண்ணமே ஒருவனை நாணித் தலைகுனிய வைக்கப் போதுமானது. அஹிம்சை யென்பது, வெறும் சாப்பாட்டு விஷயமான ஒரு நியதி யன்று. அதற்கு எவ்வளவோ மேற்பட்டுச் செல்லுகிறது அது. ஒரு மனிதன் எதை உண்கிறான், எதைக் குடிக் கிறான் என்பது முக்கியமான விஷய மன்று; அப்படி உண்பதற்கும் குடிப்பதற்கும் உள்ளீடா யிருக்கிற தன்னல மறுப்பும் தன்னடக்கமுமே முக்கியமானவை. உண்கிற பதார்த்தங்களை உங்கள் விருப்பப்படி எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்குக் கட்டுப்படுத்திக்கொள்ளுவதில தாராளமாய்ப் பழகுங்கள். இந்தக் கட்டுப்பாடு போற்றத் தக்கது. அவசியமானதுங்கூட. ஆனால், இது அஹிம்சை

யின் ஒரு ஓரத்தைத்தான் அணுகி வந்திருக்கிறது. உணவு சம்பந்தமாக அதிகக் கட்டுப்பாடின்றித் தாராளமாக நடந்துகொண்டபோதிலுங்கூட, இதயத்திலே அன்பு நிறைந்து, பிறர் படும் இன்னலைக் கண்டு இதயம் உருகி, காமக் குரோதங்களை யெல்லாம் துறந்துவிட்டார் என்றால், அவரே அஹிம்சையின் அவதாரமாவார்; அவரே நமது வணக்கத்துக்குப் பாத்திரமானவர் ஆவார். இதற்கு மாறாக, உணவில் எப்போதும் மிக்க கட்டுப்பாடான விதிமுறைகளை அனுசரித்து வந்தும், தன்னலத்திற்கும் காமக் குரோதங்களுக்கும் அடிமையாகி நெஞ்சில் ஈவிரக்கம் இல்லாதவரா யிருந்தால், அவர் அஹிம்சைக்கு முற்றிலும் புறம்பான வரே யாவார்.

இந்தியாவுக்கு ராணுவம் இருக்க வேண்டுமா வேண்டாமா, அரசாங்கத்தை ஆயுதபலங்கொண்டு எதிர்த்து நிற்கலாமா கூடாதா என்பன போன்ற முக்கியமான பிரசினைகளை நாம் ஒரு நாள் தீர்த்துத்தான் ஆகவேண்டும். காங்கிரஸானது, தான் வகுத்துக்கொண்ட திட்டத்தில் இந்தப் பிரசினைகளில் ஒரு பகுதிக்கு ஏற்கனவே பதிலளித்திருக்கிறது. ஆனால், இவை எவ்வளவு முக்கியமானவையா யிருந்தபோதிலும், பாமர மக்களைப் பாதிக்கவில்லை; கல்வித் திட்டத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்பவர்களுக்கும் மாணவர்களுக்கும் அஹிம்சையிலே என்ன வகையான சம்பந்தமுண்டோ அதை இவை பாதிக்கவில்லை. மாணவருடைய வாழ்க்கை சம்பந்தப்பட்டவரையில் அஹிம்சை என்பது இந்தப் பெரிய அரசியல் பிரசினைகளோடு யாதொரு தொடர்பும் இன்றித் தனித்து நிற்கிறது. கல்வியில் அஹிம்சை நெறி என்று சொன்னால், அது மாணவர்கள் தங்களுக்கிடையே வைத்துக்கொள்ளும் சம்பந்தத்தைப்பற்றியதாக இருக்க வேண்டுமென்பது வெளிப்படை. அஹிம்சையின் புனித ஒளி வீசுகிற இடத்தில் படிக்கிற மாணவர்களும் மாணவிகளும் சகோதர சகோதரிகள் போலச் சுதந்திரமாக நடத்துகொள்ளுவார்கள்; தாங்களாகவே மேற்கொண்ட தன்னடக்கம் அவர்களிடம் இருக்கும். அங்கே மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களைத் தாய் தந்தையர்போல் எண்ணி, அன்பு செலுத்துவார்கள்; பரஸ்பர மரியாதையும், பரஸ்பர நம்பிக்கையும் அவர்களை

ஒன்றுகப் பிணிக்கும் தூய மனநிலையே அஹிம்சையைக் கற்றுக்கொடுக்க உதவி புரியும். இந்த நிலையில் பயிலுகிற மாணவர்கள், விரிந்த மனப்பான்மையுள்ளவர்களாகவும், தொண்டு செய்வதிலே மிக்க ஊக்கம் உடையவர்களாகவும் விளங்குவார்கள், சமூகக் கேடுகளைக் களைந்தெறிவது, அவர்களுக்குக் கஷ்டமாய்த் தோன்றுது. அவர்களது அன்பின் பெருக்கே அக் கேடுகளை எரித்துவிடப் போதியதாயிருக்கும். உதாரணமாக, குழந்தை மணம் என்ற எண்ணம் ஒன்றே அவர்களுக்கு மிக்க வெறுப்பை யளிக்கும். பெண்களுக்குச் சீதனம் கேட்டுப் பெண்களின் பெற்றேரை வீணை துன்பத்துக்குள்ளாக்க வேண்டுமென்ற நினைவே அவர்களுக்கு இராது. எனவே இப்படிப்பட்டவர்கள், மணமான பிறகு, தங்கள் மனைவியரை வெறும் உடமை யென்றே, காமவெறியைத் தணிவிக்கிற முக்கிய இன்பப் பொருளென்றே கருத இடமுண்டா? இத்தகைய அஹிம்சை நெறியில் வளர்ந்த இளைஞனொருவன் தனது மதத்தையோ, பிற மதத்தையோ பின்பற்றுபவனோடு சண்டை போடுவான் என்று எண்ண முடியுமா? எப்படியாளுலும், இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாவற்றையுமோ அல்லது சிலவற்றையோ செய்கிறவர், தம்மை அஹிம்சை நெறியில் நிற்பவர் என்று சொல்லிக்கொள்ளவே முடியாது.

சுருங்கச் சொன்னுல், அஹிம்சை யென்பது இணையற்ற ஓர் அரிய ஆயுதம். அது வாழ்க்கையின் உயிர்நாடி; வீரர்களின் சிறப்பியல்பு. உண்மையில் அவர்களுடைய இயல்புகள் யாவுமே இதில் அடங்கிவிட்டது. அது கோழைகளின் கைக்கு எட்டாததோர் தத்துவம். உணர்ச்சியில்லாத, உயிரில்லாத மரக்கட்டை போன்ற தத்துவம் அன்று அது;உயிர் ததும்பிக்கொண் டிருக்கிற பெருஞ் சக்தி யாகும் அது. ஆன்மாவுக்குத் தனித்து அமைந்த அருங்குணமும் அதுவே. இது காரணமாகவே, அதை நாம் எல்லாவற்றிலும் சிறந்த தருமமாகச் சொல்லுகிறேம். அஹம்ஸா பரமோ தர்ம; ஆதலால் கல்வி ஆராய்ச்சியாளர் கையில் அது மிக்க தூய்மையான அன்பின் உருவம் பெற்று விளங்க வேண்டும்; என்றும் புதிதாகவும், என்றும் பெருக்கெடுத்துக்கொண் டிருக்கிற உயிர் ஊற்றுகவும் விளங்குவதோடு

அவர்கள் செய்யும் செயல் ஒவ்வொன்றிலும் அது வெளிப் பட்ட வண்ணம் இருக்க வேண்டும். அதனுடைய சமூகத்தில் கெட்ட எண்ணம் தலைகாட்ட முடியாது. பகை, கோபம், குரோதம் ஆகிய இந்த இருளையெல்லாம் அஹிம்சையாகிய சூரியன் அழித்துவிடுகிறது. கல்வியில் ஆஹிம்சா நெறி யானது மிகத் தெளிவாயும் நெடுந்தூரம்வரையிலும் ஒளி விடுகிறது. அதை எந்தச் சாதனங்கொண்டும் இனி ஒளித்துவைக்க முடியாது. அஹிம்சையாகிய இந்தத் தத்துவமானது, இந்த வித்தியா பீடத்தைச் சூழ்ந்து விளங்கும்போது, இதன் மாணவர்கள் மனத்தைக் குழப் பிக்கொண்டு தொல்லைப்பட மாட்டார்கள் என்பது நிச்சயம்.

மாணவர்களின் பங்கு

"அருமையான அரசியல் முறையைக்கூடத் திடீரென்று ஒரு சமயம் பிரிட்டிஷ் பார்லிமெண்டிலிருந்து நீங்கள் பெற்றாலும் பெற்றுவிடலாம். அந்த அரசியல் முறையைச் சரிவர நடத்தத் தகுதிவாய்ந்த மக்கள் இல்லாவிட்டால், அது கிடைத்தும் பயனற்றதாய்தானே போய்விடும்."

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பேசியபோது, காந்திஜி கீழ் வருமாறு சொன்னார் :

தரித்திர நாராயணனை உத்தேசித்து, நீங்கள் என்னிடம் அளித்த நன்கொடைகளுக்காக, உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். இந்த மண்டபத்துக்கு நான் வருவது, இது முதல் தடவை யன்று. 1896-ம் வருடம் தென் ஆப்பிரிக்கப் போராட்டம் சம்பந்தமாகப் பேச இந்த மண்டபத்துக்கு நான் வந்திருக்கிறேன். நமது மரியாதைக்குப் பாத்திரமான காலஞ்சென்ற டாக்டர் சுப்பிரமணிய ஐயர் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அப்போதுதான், முதன்முதலாக இந்திய மாணவர்களுடன் பழகும் சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது என்பதைச் சொல்லவே, அந்தக் கூட்டத்தைப்பற்றி இப்போது நான் நினைவூட்டுகிறேன். நான் மெட்ரிகுலேஷன் வரைதான் படித்தவன் என்பது உங்களுக்குத் தெரியும். ஆதலால், கல்லூரிப் படிப்பென்று சொல்லக்கூடிய எந்தப் படிப்புமே எனக்கு இல்லை. ஆனால், பேச்சு முடிந்து, நன்றி கூறியான பிறகு, நான் வெளியே சென்றபோது, எனக்காக அனேக மாணவர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள் என்பதைக் கண்டேன். அப்போது நான் இந்தியா முழுதும் பச்சைத்தாள் அறிக்கை யொன்றைப் பரப்பிக்கொண்டிருந்தேன்; என் கையிலிருந்த பச்சைத்தாள் அறிக்கைப் பிரதிகள் எல்லாவற்றையும் அந்த மாணவர்கள் என்னிடமிருந்து எடுத்துக்கொண்டுவிட்டார்கள். தென் ஆப்பிரிக்க விஷயத்திலும் என்னிடத்திலும் யாரையும்விட அதிகமான அன்பு செலுத்திய காலஞ்சென்ற திரு. ஜி. பரமேசுவரன் பிள்ளையை, அந்த அறிக்கையை அச்சிட்டு அதன் பிரதிகளை மாணவர்களிடம் விநியோகிக்கும்படி கேட்டுக்

கொண்டேன். மிக்க மகிழ்ச்சியோடு அவர் அந்த அறிக்கையில் 10,000 பிரதிகள் அச்சிட்டார். தென்ஆப்பிரிக்க நிலைமையை யறிந்துகொள்ள மாணவர்களிடம் அவ்வளவு ஆவலிருந்தது. அவர்கள் காட்டிய ஆவலைக் கண்டு நான் பேருவகை யடைந்து, "ஆம். இந்தியத் தாய் தன் மக்களைப் பற்றி பெருமைகொள்ளலாம். அவர்களைப் பூரணமாக நம்பி யிருக்கலாம்" என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன். அந்தக் காலத்திலிருந்தே மாணவர்களோடு எனக்குள்ள தொடர்பு ஆழ்ந்ததாயும் விரிந்ததாயும் இருந்துவருகிறது. நான் பெங்களூரில் சொன்னது போல, அதிகமாகக் கொடுப்பவர்களிடமே நாம் அதிகமாக எதிர்பார்க்கிறோம்; நீங்கள் எனக்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறீர்கள். அது காரணமாகவே, உங்களிடம் இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிற உரிமை எனக்கு இருக்கிறது. நீங்கள் எவ்வளவு தந்தாலும் சரியே, அதை மட்டும்கொண்டு நான் திருப்தி யடையேன். நான் செய்துள்ள சில பணிகளை நீங்கள் பாராட்டியிருக்கிறீர்கள்; எனக்கு அளித்த உபசாரப் பத்திரத்தில் தரித்திர நாராயணன் என்ற பெயரை அன்பு ததும்ப, பக்தி ததும்பக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். தலைமை ஆசிரியராகிய தாங்கள், சர்க்காவினால் ஏற்படுகிற நன்மையைப்பற்றி நான் கூறும் பெருமையை மனப்பூர்வமாக ஆதரிக்கிறீர்கள்; இப்படித் தாங்கள் ஆதரிப்பதைச் சிறிதும் நான் சந்தேகிக்கவில்லை. சர்க்காவினால் நமக்கு நன்மை உண்டு என்று நான் கூறுவதை, நம் நாட்டினருள் மதிப்புவாய்ந்த சில அறிஞர்கள் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்; நல்ல காலத்திற்கு அடையாளமாகவே, நம் சகோதரிகளும் தாய்மார்களும் இதைத் தள்ளிவிட்டார்களென்றும், ராட்டினத்தின் மூலம் நமக்கு ஒரு நாளும் சுயராஜ்யம் கிடைக்கப் போவதில்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், தாங்களோ சர்க்கா சம்பந்தமாக நான் சொல்லுவதை முற்றும் அங்கீகரிக்கிறீர்கள். இது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. மாணவர்களே! நீங்கள் எனக்களித்த உபசாரப் பத்திரத்தில் சர்க்காவைப்பற்றித் தெளிவுபடச் சொல்லாத போதிலும், சர்க்காவில் உங்களுக்கு இதயபூர்வமான நம்பிக்கை இருக்கிறது என்பதைக் காட்டப் போதிய அளவு

சொல்லிவிட்டீர்கள். எனவே நீங்கள் தரும் இந்தப் பண முடிப்பு, ராட்டினத்திடம் நீங்கள் காட்டும் அன்பிற்கு முதலாவது அறிகுறியாகவும், அதுவே அந்த அன்பிற்கு முடிவான அறிகுறியாகவும் இருத்தலாகாது. உங்களது முடிவான அறிகுறியாக அது இருக்குமானல், அது எனக்கு மிக்க குழப்பத்தையே யளிக்கும். ஏனெனில், இந்தப் பணமானது பசியால் வாடி வதங்கும் கோடிக் கணக்கான மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டு, அவர்களால் கதர் ஆடை நெய்யப்படுகிறது; அவர்களே நூற்று, அவர்களே நெய்த இந்தக் கதர் ஆடையை நீங்கள் வாங்கி உபயோகிக்காவிட்டால், நீங்கள் தரும் இந்தப் பணத்தினல் யாதொரு பயனும் இல்லை. கடைசியாகப் பார்த்தால், சர்க்காவில் நம்பிக்கை யிருப்பதாக வாயினல் சொல்லிக் கொண்டு, எனக்கு ஆதரவு அளிக்கிற முறையில் கொஞ்ச ரூபாயை என்னிடம் தூக்கி எறிந்துவிடுவதனல், சுயராஜ்யம் கிடைத்துவிடாது; சதா உழைத்துக்கொண்டே யிருந்தாலும் கோடிக்கணக்கான ஏழை மக்கள் பசியால் வாடி மடிகிருர்கள். இவர்களுடைய வறுமை நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிறது. நீங்கள் வீசி எறிகிற இந்தப் பணத்தால் அவர்களுடைய வறுமைப் பிரசினையைத் தீர்த்துவிட முடியாது. 'சதா உழைத்துக்கொண்டே யிருக்கும் மக்கள்' என்று நான் குறிப்பிட்டேன். இப்படி நான் அவர்களை வருணித்தது முற்றிலும் உண்மை. துர்ப்பாக்கிய வசமாக, ஆடை யணிவதுபற்றிய நம் மனப்பாங்கையும் ஆடையின் வகையையும் நாம் மாற்றிக்கொள்ளாமல் இருப்பதால், பசியால் வாடி வருந்தும் இந்தக் கோடிக்கணக்கான மக்களுக்கு வருஷம் முழுவதும் வேலை கிடைக்காதபடி செய்து விட்டோம். வருஷத்தில் குறைந்தது நான்கு மாத காலம் ஓய்ந்திருக்கும்படியான கட்டாய நிலையில் அவர்களை வைத்துவிட்டோம். இந்த ஓய்வு அவர்களுக்குத் தேவையில்லை. இது என் கற்பனையால் விளைந்த கட்டுக்கதையன்று. இந்த ஏழை மக்களோடு பழகிய உங்கள் நாட்டினரில் பலர் கண்கூடாகக் கண்ட உண்மை இது. உங்கள் நாட்டினர் சொல்லுவதை நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், அனேக ஆங்கிலேய அரசியல் அதிகாரிகள் இது உண்மை என்பதைப் பலமுறை சொல்லி யிருக்கிருர்கள்.

எனவே, இந்தப் பணமுடிப்பைப் பசியால்வாடும் சகோதரிகளிடம் எடுத்துக்கொண்டு போய் நான் பகிர்ந்து கொடுத்துவிட்டால், அதனுல் மட்டும் இந்த வறுமைப் பிரசினை தீர்ந்துவிடாது. அதற்கு மாருக, அது அவர்களுடைய ஆன்மாவை வறுமைக்கு உட்படித்திவிடும். பிச்சைக்காரர்களாக மாறி, பிறர் தரும் தருமத்தால் உயிர்வாழும் பழக்கத்திற்கு அவர்கள் ஆளாகிவிடுவார்கள். பிறர் தருகிற தருமத்தினுல் உயிர்வாழ எண்ணுகிற ஆணையும், பெண்ணையும், அவர்கள் வாழும் தேசத்தையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்! நம்ஏழைச்சகோதரிகள் பசிப்பயமின்றித் தங்கள் தங்கள் வீட்டிலிருந்து வாழும்படி நாம் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். இதுவே நீங்களும் நானும் செய்ய வேண்டுவது. நாம் அவர்களுக்குக் கொடுக்கத் தக்க வேலை, நூற்பதும் நெய்வதும்தான்; அந்த வேலை கௌரவமானது, யோக்கியமானது; அதுவேகூடப் போதுமென்றும் சொல்லலாம். ஒரு அணு என்ருல், உங்களுக்கு அற்பமாகத் தோன்றலாம். நாலைந்து மைல் நடப்பதை விட்டுவிட்டு, ஒரு டிராம் வண்டியில் ஏறி, வேடிக்கையாகப் பொழுது போக்குவதற்காக நீங்கள் கண்டக்டரிடம் ஒரு அணுவை அனுவசியமாக வீசி எறிவீர்கள். ஆனுல், இந்த ஒரு அணு ஏழைப் பெண் ஒருத்திக்குக் கிடைக்கும் போது, அது பலன்தரக் கூடியதாகிவிடுகிறது: அவள் அந்த ஒரு அணுவுக்காக உழைக்கிருள்; உழைத்துத் தன் புனிதமான கைகளினுல் நூற்ற அருமையான நூலை என்னிடம் தருகிருள். அவள் தருகிற நூலில்தான் எவ்வளவு அரிய வரலாறு அடங்கி யிருக்கிறது! இந்த நூலைக்கொண்டு ராஜாக்களுக்கும் பிரபுக்களுக்கும் ஏற்ற உடைகளைநெய்யலாம். மில்லில் இருந்துவருகிற ஒரு வெள்ளை துணிக்கு இந்தச் சரித்திர மகத்துவம் எங்கே யிருக்கிறது? இந்த விஷயம் எனக்கு ரொம்பப் பெரியது? இதிலேயே எனது காலம் முழுவதையும் செலவிட்டுவிடுவேன். ஆயினும், இதையே சொல்லி நான் நேரம் போக்க விரும்பவில்லை. இனிமேல் கதரைத்தான் அணிவோம் என்று ஏற்கனவே நீங்கள் உறுதிகொள்ளாவிட்டால், இப்போதாவது மனப்பூர்வமாக உறுதிசெய்துகொள்ளுங்கள். அவ்விதம் செய்யாதவரை நீங்கள் அளித்த இந்தப் பணமுடிப்பு

எனக்கு உதவியா யிராது ; தடையாகவே இருக்கும்.

பணமுடிப்புத் தருகிறீர்கள், என்னைப் புகழ்ந்து பேசுகிறீர்கள் என்பதற்காக, கதரில் அடங்கிய தத்துவத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிற தென்று நான் மயங்கிவிட மாட்டேன். உங்கள் எண்ணமும் செயலும் ஒன்று போல இருப்பதையே நான் விரும்புவேன். கதரில் நம்பிக்கை யின்றி, கதர் அணிவதிலும் உங்களுக்கு விருப்பம் இன்றி, என்னை ஏமாற்றும் பொருட்டே நீங்கள் பணம் தருகிறீர்கள் என்று, இந்தியாவின் அணிகலனாய் விளங்கும் உங்களை, ஒருவரும் சொல்லாதபடி நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். இதையே நான் விரும்புகிறேன். எனது நண்பரான சிறந்த தமிழர் ஒருவர் சொன்ன சொல்லை நீங்கள்மெய்ப்பித்துவிடாதீர்கள். நான் ''இறந்தபின்பு என் உடலை எரித்துச் சாம்பல் ஆக்குவதற்கு வேறு விறகு தேவையில்லை. இப்போது நான் பரப்பி வருகிற ராட்டினங்களிலுள்ள கட்டையே போதும்'' என்று அவர் சொன்னார். அவருக்குச் சர்க்காவில் நம்பிக்கை யில்லை. 'சர்க்கா, சர்க்கா என்று சொல்லுப்வர்கள் என்னிடத்துள்ள மரியாதையினாலேதான் சர்க்காவைப்போற்றுகிறார்களென்று அவர் எண்ணுகிறார். அவர் மனதிலுள்ளதை ஒளிக்காமல் சொன்னார். கதர் இயக்கம் அவர் சொன்னபடி ஆகிவிட்டால், அது தேசத்திற்கே துன்பகரமான ஒரு நிலையாகும். அந்த விபத்து நிகழ்வதற்கு நீங்கள் நேரடியாக உதவியவர்களாவீர்கள்; அதில் பங்கு கொண்டவர்களும் ஆவீர்கள். தேசமே தற்கொலை செய்துகொள்ளுவதை ஒக்கும் இது. சர்க்காவினிடம் உங்களுக்கு நிலைத்த நம்பிக்கை யில்லாவிட்டால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டாம். அப்போது தான் நீங்கள் என்னிடம் உண்மையான அன்பு காட்டி, என் கண்ணைத் திறந்தவர்கள் ஆவீர்கள். நான் சொல்லுவதைக் கேளாமல் சர்க்காவைத் தள்ளிவிட்டால் '' நீங்கள் சர்க்காவைத் தள்ளிவிட்டீர்கள், ஆதலால் தரித்திர நாராயணனையும் தள்ளிவிட்டீர்கள் '' என்று என் பாட்டிற்குக் கத்திக்கொண்டே போவேன். ஆனால், கதரைப்பற்றி உங்களுக்கு ஏதாவது மயக்கம் இருந்தால், அதைத் தெரிந்துகொள்ள முடியாதபடி வேறெதையும் கொண்டு அதை மறைத்திருந்தால், நமக்கு வரப்போகிற இந்தத்

துன்பத்தி லிருந்தும், இழிவி லிருந்தும், மானக்கேட்டி லிருந்தும் உங்களையும் என்னையும் காப்பாற்றுங்கள். இது ஒரு விஷயம். உங்கள் உபசாரப்பத்திரத்தில் இன்னும் எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன.

இன்றுள்ள பால்ய மணத்தையும் பால்ய விதவைகளை யும்பற்றிக் குறிப்பிட் டிருக்கிறீர்கள். பால்ய விதவைகள் சம்பந்தமாய் மாணவர்களிடையே பேசும்படி ஒரு தமிழறிஞர் எனக்கு எழுதி யிருக்கிறார். மற்ற மாகாணங் களைவிடத் தம்முடைய மாகாணத்தில் பால்ய விதவைகள் படுகிற துன்பம் மிக அதிகம் என்று அவர் சொல்லுகிறார். இது உண்மைதானா என்பதை நான் அறியேன். என் னைவிட உங்களுக்கு இதைப்பற்றி நன்கு தெரிந்திருக் கும். வாலிபர்களே! பெண்ணினத்திற்கு மரியாதைசெய்யும் உணர்ச்சி உங்களுக்கு இருக்க வேண்டும்; இவ்வுணர்ச்சி உங்களிடம் இருந்தால், நான் உங்களுக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். உங்களில் பெரும்பான்மை யோருக்கு இன்னும் மணமாகி இராது. சிலராவது பிரமசாரிகளாய் இருத்தல் கூடும். நான் மாணவர்களை நன்றாக அறிவேன். அதனாலேதான் 'சிலராவது' என்று சொன்னேன். மற்றொரு பெண்ணை, சகோதரிக்கு ஒப் பானவளைக் காமவுணர்ச்சியோடுநோக்குகிறவன் பிரமசாரி யாகமாட்டான். விதவையல்லாதவேறு எந்தப்பெண்ணையும் மணப்பதில்லை என்றும் விதவைப் பெண்ணையே தேடி மணப்பேன் என்றும், விதவைப் பெண் கிடைக்காவிட்டால் மணமே செய்துகொள்ளுவ தில்லை என்றும் புனிதமான தோர் உறுதிமொழியை நீங்கள் செய்துகொள்ள வேண்டும். செய்துகொண்டு, பெற்றோரிடமும், பெற்றோரில்லா விட்டால், சகோதரிகளிடமும் இதைத் தெரியப்படுத்துங் கள். பால்ய-விதவை என்ற தொடரைத் திருத்தி விதவைப்-பெண் என்று நான் சொல்ல எண்ணுகிறேன். ஏனெனில், பத்து அல்லது பதினைந்து வயதுடைய பெண்ணுக்கு மணம் என்கிற பெயரினால் ஏதோ ஒன்றைச் செய்கிறார்கள். அந்த மணமானது பெண்ணினுடைய சம்மதம் பெற்று நடப்ப தில்லை. கணவன் என்று சொல்லப்படுகிறவனோடு அவள் கூடி வாழ்க்கை நடத்தியதுமில்லை. அவளைத் திடீரென்று ஒரு நாள், விதவை என்று சொல்லிவிடுகிறார்கள். அப்படிப்

பட்டபெண்ணை விதவை என்று அழைப்பது தகாது. அவளை விதவை என்று அழைப்பது விதவை என்ற சொல்லின் பொருளையும் பாஷையையுமே இழிவுபடுத்துவ தாகும். புனிதமான சொல்லை புனிதமற்ற முறையில் பயன்படுத்துவதாகும். ஹிந்து மதத்தில் 'விதவை' என்ற சொல் ஒரு புனிதமான தொடர்பு பெற்ற சொல் லாகும். ரானடேயின் மனைவியார் காலம் சென்ற ராமாபாய் போன்ற உண்மையான விதவைகளுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். கைம்மைநிலையை அவர் முற்றிலும் உணர்ந்தவர். ஆனால், ஒன்பது வயதுக் குழந்தைக்கு, கணவனைப்பற்றி ஏதாவது தெரிந்திருக்க முடியுமா? இந்த மாகாணத்தில் இத்தகைய பால்ய விதவை கள் இல்லை யென்றால், நான் சொல்லுவதைக் கேட்காமலே நீங்கள் தள்ளிவிடலாம். இருப்பது உண்மையாயின், 'விதவைப் பெண்ணையே மணப்போம்' என்று உறுதி செய்துகொள்ளுவது உங்கள் கடமையாகிறது. இந்தத் தீமையை ஒழிக்க விரும்பினால், இவ்விதம் நீங்கள் உறுதி கொண்டுதான் ஆகவேண்டும். ஒரு நாட்டினர் செய்த பாவங்களெல்லாம் அவர்களை ஸ்தூலமாக வந்து தாக்கும் என்று நான் மூடத்தனமாக நம்புவதுண்டு. நாம் செய்த இந்தப் பாவங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து திரண்டே, நம்மை இன்று அடிமை நிலையில் ஆழ்த்திவிட்டன. எவ்வ ளவோ அருமையான அரசியல் முறையைக்கூடத் திட ரென்று ஒரு சமயம் பிரிட்டிஷ் பார்லிமெண்டி லிருந்து நீங்கள் பெற்றாலும் பெற்றுவிடலாம். அந்த அரசியல்முறை யைச் சரிவர நடத்தத் தகுதிவாய்ந்த மக்கள் இல்லாவிட்டால் அது கிடைத்தும் பயனற்றதாய்தானே போய்விடும். உட லோடொட்டிய இச்சையைப்பூர்த்திசெய்துகொள்ள வேண்டு மென்ற விருப்பம், மற்றவர்களைப்போல, விதவைகளுக்கும் உண்டு. ஆனால், அந்த விருப்பம் நிறைவேறாதபடி அவர் களைப் பலவந்தமாகத் தடுத்து, அதன் காரணமாக வருந் தும் விதவை ஒருத்தியேனும் நம்மிடையே வாழ நேரும் வரை முப்பது கோடி எண்ணிக்கையுள்ள நாம் நம்மையே ஆண்டுகொள்ள முடியுமா? அல்லது பிறரைத்தான் ஆள முடியுமா? அல்லது இந் நாட்டின் எதிர்காலத்தை உரு வாக்கத் தகுதிவாய்ந்தவர்கள் என்று நம்மை நாமே

சொல்லிக்கொள்ள முடியுமா? இது மதமன்று. ஆனல் மதத்திற்கு முரண்பாடான நிலை. ஹிந்து மத உணர்ச்சியில் பெரிதும் ஊறியிருப்பவனுகிய நான் இதைச் சொல்லத்தான் செய்கிறேன். மேலைநாட்டுத் தொடர்பால் ஏற்பட்ட புதிய மனப்பாங்கே என்னை இப்படிப் பேசத் தூண்டுகிறது என்று தவருக எண்ணிவிடாதீர்கள். மாசற்ற இந்தியப் பண்பு என் உள்ளத்திலே பொங்கி யெழுகின்றதென்று நான் பெருமை கொள்ளுகிறேன். மேலைநாட்டி லிருந்து பல விஷயங்களை நான் கிரகித்துக்கொண்டு கடைப்பிடித்து வருகிறேன். ஆயினும், இந்த விஷயத்தை நான் அங்கிருந்து எடுத்துக்கொள்ள வில்லை. இந்த மாதிரியான கைம்மைக்கு ஹிந்து மதத்தில் ஆதாரமில்லை.

பால்ய விதவைகளைப்பற்றி நான் சொன்னவை யெல்லாம் கட்டாயம் பால்ய மனைவியருக்கும் பொருந்தும். பதினறு வயதுக்குட்பட்ட பெண்ணை மணக்க மாட்டேன், என்று சொல்லுகிற அளவுக்கு, நீங்கள் காம உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். மணம் செய்து கொள்ளும் வயதை நிர்ணயிப்பதானல், இருபது வயதையே நான் குறைந்த அளவு என்று நிர்ணயிப்பேன். இந்தியாவுக்கே இருபது வயதென்பது கொஞ்சம் குறைவுதான். பெண்கள் இயல்பான காலத்திற்கு முன்னரே பக்குவமடைவதற்கு இந்திய சீதோஷ்ண நிலைகூட அவ்வளவு காரணம் என்று சொல்ல முடியாது; நாமே இதற்குக் காரணம். ஏனெனில், இருபது வயதாகியும் தூய ஒழுக்கமுடையவர்களாகவும், குற்றமற்றவர்களாகவும், சுற்றிலும் ஏற்படும் சமூகத் தாக்குதல்களைச் சமாளிக்கும் திறமை வாய்ந்தவர்களாகவும் உள்ள பெண்கள் அனேகரை எனக்குத் தெரியும். பெண்கள் இளமையிலே பக்குவமடைவதைப் பெரிதாக எண்ணி நாம் மகிழ்தல் ஆகாது. பிராமணர்களில் பதினறு வயது நிரம்பிய பெண்களை மனைவியாகப் பெறுவது முடியாதென்றும், பலர் தங்கள் பெண்களை அவ் வயதுவரையில் கலியாணம் செய்யாமல் வைத்துக்கொள்ளுவ தில்லை யென்றும், 10, 12, 13 வயதுக்கு முன்னரே பிராமணப் பெண்களுக்கு மணமாகிவிடுகிறதென்றும், பிராமண மாணவர் சிலர் என்னிடம் சொல்லுகிருர்கள். காம வுணர்ச்சியை அடக்க முடியாவிட்டால்,

நீ பிராமண குலத்தை விட்டுவிடு. குழந்தையா யிருந்த போதே கைம்மை யெய்திய பதினறு வயதுப் பிராமணப் பெண்ணைத் தேர்ந்தெடுத்துக்கொள். அவ்விதம் கைம்மை யடைந்த பிராமண விதவை கிடைக்காவிட்டால், உனக்குப் பிடித்த வேறெந்தப் பெண்ணையாவது மணம் செய்து கொள்' என்றே அவர்களுக்கு நான் கூறுவேன். பன்னிரண்டு வயதுப் பெண்ணைப் பலவந்தமாகப் புணர்வதை விட, வேறு சாதியில் மணம் செய்துகொள்ளத் துணிந்த இளைஞனை ஹிந்து மதக் கடவுள் மன்னித்துவிடுவார் என்று நான் சொல்ல விரும்புகிறேன். இதயம் பரிசுத்த மாக யில்லை யென்ருல், இச்சைகளை உங்களால் கட்டுப் படுத்த முடிய வில்லை யென்ருல், கற்றும் கல்லாதவர்களே ஆவீர்கள். உங்கள் கல்வி நிலையத்தை முதன்மையான ஸ்தாபனம் என்று நீங்கள் கூறி யிருக்கிறீர்கள். முதன்மையான ஸ்தாபனம் என்ற பெயருக்கேற்ப நீங்கள் நடந்து கொள்ள வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். ஒழுக்க மில்லாத கல்வியும் அடிப்படையான பரிசுத்த மில்லாத ஒழுக்கமும் இருந்து என்ன பயன்? பிராமணத்துவத்தை நான் போற்றுகிறேன். வருணுசிரம தர்மத்தை நான் ஆதரிக்கிறேன். ஆனல், தீண்டாமையையும், கன்னிப் பெண்களின் கைம்மைக் கோலத்தையும், கன்னிப் பருவத்துப் புணர்ச்சியையும் சகித்துக்கொண் டிருக்கக் கூடிய பிராமணத்துவம் எனக்கு மிக்க அருவருப்பைத் தருகிறது. அப்படி நடந்துகொள்ளுவது பிராமணத்துவத்தையே கேலி செய்வதாகும். இதில் பிரமத்தை அறிவதற்கு இடமே யில்லை; சாஸ்திரங்களைச் சரியானபடி வியாக்கியானம் செய்வதும் ஆகாது; கலப்பற்ற மிருகத்தனமே யாகும் இது. பிராமணத்துவம் என்பது இதைவிட உறுதியான பண்பு பொருந்த ஆக்கப்பட் டிருக்கிறது. நான் சொன்ன இச் சில சொற்கள் உங்கள் மனதில் பதிய வேண்டுமென்று விரும்புகிறேன். நான் இதைப் பேசுகிறபோது மாணவர் களைக் கவனித்துக்கொண்டே வருகிறேன். உணர்ச்சிகளை அப்படியே கொட்டி வரும்போது, சிறிது நகைக்கக் கண் டாலும், எனக்கு வேதனை யுண்டாகிறது. உங்கள் அறிவுக்குப் பொருத்தமாக, நியாயத்தைச் சொல்ல நான் இங்கு வரவில்லை; உங்களது இதயத்தோடு பேசவே இங்கு வந்தி

ருக்கிறேன். இந் நாடு உங்களையே நம்பி யிருக்கிறது; நான் சொன்ன தெல்லாம் உங்களுக்குப் பெரிதும் முக்கிய மான தாகும்.

சிகரெட் பிடிப்பது, காபி, தேயிலை அருந்துவதுபற்றிச் சில வார்த்தைகள் சொல்லும்படி, கள்ளிக்கோட்டைக் கலாசாலை யாசிரிய ரொருவர் என்னைக் கேட்டுக்கொண்டார். அவர் விருப்பப்படி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சிகரெட்டும் காபியும் தேயிலையும் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் அன்று. சிலர் ஒரு நாளைக்கு எப்படியோ பத்துக் கோப்பை காப்பி அருந்திவிடுகிறார்கள். அவர்களுடைய உடல் ஆரோக்கியமாய் வளர்வதற்கும் கடமைகளைச் செய்வதில் அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கும் இது அவசியமானதுதானா? விழிப் போடிருப்பதற்குக் காப்பியோ, தேயிலையோ அருந்தித் தான் ஆகவேண்டுமென்றால், காப்பியோ, தேயிலையோ குடிக்காமல் தாராளமாக அவர்கள் தூங்கட்டுமே! இந்தப் பொருள்களுக்கு நாம் அடிமைகளாய்விடக் கூடாது. ஆனால், காப்பி, தேயிலை குடிப்போரில் பெரும்பான்மையோர் இவற்றிற்கு அடிமைகளாகவே யிருக்கிறார்கள். சுருட்டும் சிகரெட்டும் உள்நாட்டுச் சரக்காயினும் வெளி நாட்டுச் சரக்காயினும், இவற்றை விலக்கியே தீரவேண்டும். சிகரெட் குடிப்பது, அபின் அருந்துவதற்குச் சமானம்; நீங்கள் குடிக்கும் சுருட்டிலும் அபினியின் இயல்பு இருக்கிறது. இவை நரம்புகளைப் பாதிக்கின்றன. பிறகு உங்களால் இவற்றை விலக்க முடியாது. மாணவன் ஒருவன் தனது நல்ல வாயை நாற்றம் நிறைந்த புகைபோக்கியாக மாற்ற எப்படி இசைதல் கூடும்? சிகரெட் சுருட்டுக் குடிப்பது, காப்பி, தேநீர் அருந்துவது போன்ற கெட்ட பழக்கங்களை நீங்கள் விட்டுவிட்டால், ஏராளமான பணம் மீதமாகிற தென்று உங்களுக்குத் தெரியவரும். டால்ஸ்டாய் எழுதிய கதை ஒன்றில், ஒரு குடிகாரன் வருகிறான். சுருட்டுக் குடிக்கிறவரையில் அவன் கொலையைச் செய்ய பின் வாங்குகிறான். ஆனால், சுருட்டைப் பிடித்து, புகையை ஊதினானோ இல்லையோ, அவன் புன்சிரிப்போடு "நான் இவ்வளவு பயங்கொள்ளியாக இருந்துவிட்டேனே!" என்று சொல்லிக்கொண்டே எழுகிறான். எழுந்து, வாளை

யுருவிக் காரியத்தை முடிக்கிறான். டால்ஸ்டாய் அனுபவத்தில் கண்டதை எழுதினார். அனுபவத்தில் காணாத எதையும் அவர் எழுதியதில்லை. குடியைவிடக்கூட, சிகரெட் சுருட்டுப் பிடிப்பதை, அவர் அதிகமாகக் கண்டிக்கிறார். ஆனால், புகையிலை, குடி என்ற இரண்டில், குறைந்த தீமை பயக்கக்கூடியது குடி என்று தவறாக எண்ணிவிடாதீர்கள். குடியைச் சாத்தான் என்று சொன்னால், சிகரெட்டைக் குட்டிச்சாத்தான் என்று சொல்லலாம்.

ஆத்திரமானதொரு கண்டனம்

"முத்தி பெறுவதற்குப் பிரமசரிய விரத மட்டும் போதாது; வேறு எத்தனையோ வேண்டும். மேலும், பலவந்தமாகப் புகுத்தப்பட்ட பிரமசரியத்தினால் ஒரு பயனு மில்லை. ரகசியமாகத் தீய வழியிலே ஒழுகுவதற்கு அது இடங்கொடுக்கிறது; மறைவான தீய ஒழுக்கமானது ஒரு சமுதாயத்தில் இருந்தால், அந்தச் சமுதாயத்தின் நன்னடத்தையையே அது போக்கி விடுகிறது."

வங்காளப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் ஒருவர் கீழ் வருமாறு எழுதுகிறார்:

"தாங்கள் சென்னை மாணவர்களிடையே பேசியபோது மாணவர்கள் கைம்பெண்களையே மணக்க வேண்டு மென்று அறிவுறுத்தியதைக் கண்டு நாங்கள் அச்சமும் அருவருப்பும் அடைந்தோம். அதை யொட்டி எனது தாழ்மையான, ஆனால் ஆத்திரமான இந்தக் கண்டனத்தைத் தங்களிடம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"வாழ்க்கை முழுதும் காமவின்பத்தைத் துறந்துவிட்டு விதவைகள் பிரமசரிய விரதத்தை அனுஷ்டிக்கிறார்கள். இந்த விரதம் இந்தியப் பெண் குலத்துக்கு உலகத்திலேயே மிக உன்னதமான ஒரு நிலையை அளித்திருக்கிறது. தாங்கள் கூறும் இந்த அறிவுரையால் இவ் உயர்ந்த மனப்பாங்கு அழிந்துவிடத்தான் ஏதுவா யிருக்கும்; தவிர, அவ் விரதத்தை மேற்கொண்டு அதன் மூலம் அவர்கள் ஒரே பிறவியில் முக்தி பெறுவதற்குள்ள சந்தர்ப்பங்களையும் அழிப்பதோடு, உலக இன்ப மென்ற நாற்றம் நிறைந்த படுகுழியில் விதவைகளை இது வீழ்த்திவிடும். எனவே, விதவைகளிடம் காட்டும் இம்மாதிரியான அதிக அனுதாபம் அவர்களுக்கே பெரிய தீமை புரிவதாகும். மேலும், மணமாகாம லிருக்கிற இளம் பெண்களுக்கு மணமுடிப்ப தென்பது, தற்போது ரொம்பக் கஷ்டமானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கிறது; மேற்சொன்னபடி விதவைகளிடம் ஆழ்ந்த அனுதாபம் காட்டுவது மணமாகாத பெண்களுக்கும் அநியாயம் செய்வதாகும். மணம் சம்பந்தமாகத் தாங்கள் கொண்டிருக்கும் கோட்பாடானது, ஆன்மா ஒரு உடம்பைவிட்டு இன்னொரு உடம்பைப் பெறுகிறது என்ற கொள்கை, மறுபிறப்பு, முத்தி ஆகிய ஹிந்து மதக் கோட்பாடுகளை அடியோடு தலைகீழாக்கிவிடுகிறது. சில சமூகங்களின் சமயக் கோட்பாடுகள் நமக்குப் பிடிப்ப தில்லை; தங்களுடைய கோட்பாடானது நமது ஹிந்து சமுதாயத்தையும் இந்தச் சமூகங்களின் நிலைக்குக் கொண்டுவந்துவிடும். நமது சமுதாயமும் கேவலமான நிலைக்கு வந்துவிட்ட தென்பது உண்மைதான். ஆனால், நாம் ஹிந்து மத இலட்சியங்களையே உள்ளத்தில் நிறுத்தி, அவற்றை யடைய இயன்றவரை முயன்று மேன்மையடைய வேண்டுமே யன்றி, இதரசமுதாயங்களையும் அவற்றின் இலட்சியங்களையும் உதாரணமாகக்கொண்டு, அவற்றை நாம் பின்பற்றக் கூடாது. அகல்யா பாய், ராணி பவானி, சீதை, சாவித்திரி, தமயந்தி போன்றோரின் செயல்களே,

ஹிந்து சமுதாயத்திற்கு வழிகாட்டும். அவர்களின் இலட்சியங்களுக்கு ஏற்ப நாம் சமுதாயத்தை நடத்த வேண்டும். ஆகையால், இந்தச் சிக்கலான பிரசினைகளைப்பற்றி அபிப்பிராயம் தெரிவிப்பதை நிறுத்திக் கொண்டு, எப்படி நடப்பது நல்லதென்று சமூகம் கருதுகிறதோ அப்படியே நடந்துகொள்ளும்படி சமூகத்தை விட்டுவிடுமாறு, தங்களை மிகத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.''

ஆத்திரம் நிறைந்த இந்தக் கண்டனமானது எனது அபிப்பிராயத்தை மாற்றவும் இல்லை; நான் செய்த காரியத்திற்காக எனக்கு வருத்தம் விளைவிக்கவும் இல்லை. மன உறுதி உள்ள விதவையையும், பிரமசரியம் என்பது என்ன என்று தெரிந்து அதை அனுஷ்டிப்பதில் கண்ணுங் கருத்துமாயுள்ள விதவையையும் தம் நோக்கத்தி லிருந்து வழுவும்படி எனது அறிவுரை செய்துவிடாது. ஆனல், மணம் என்ருல் இன்னது என்று தெரியாத இள வயதுப் பெண்கள் பலருக்கு மணம் ஆகி இருக்கிறது. நான் கூறிய அறிவுரைப்படி நடப்பார்களாயின், நிச்சயமாக அது அவர்களுக்கு ஒரு பெரிய ஆறுதலை அளிக்கும். மணம் என்ருல் இன்னது என்று அறியாத சிறுமிகளை 'விதவை' என்று அழைப்பது, புனிதமான தொடர்பு அமைந்த அச் சொல்லைப் பலவந்தமாகத் திரித்துக் கெட்ட முறையில் உபயோகிப்பதாகும். மேற்சொன்ன ஆசிரியர் எந்த நோக்கத்தோடு எழுதியிருக்கிருரோ, அதே நோக்கத்திற்குத்தான், இந் நாட்டு இளைஞர்கள் மணந்தால் இந்த விதவைகளை மணக்க வேண்டும், இல்லையெனில் மணம் செய்துகொள்ளாம லிருக்க வேண்டு மென்று நான் அவர்களுக்கு அறிவுறுத்துகிறேன். கைம்மையின் புனிதத் தன்மையைக் காப்பாற்ற விரும்பினுல், குழந்தைப் பருவத்திலேயே கைம்மை நேருவதென்ற தீமையை, சமூகத்தி லிருந்து களைந்துதான் ஆகவேண்டும்.

விதவைகள் பிரமசரிய விரதத்தை அனுஷ்டித்தால் முத்தி பெறுவார்க ளென்று கூறுவதற்கு அனுபவபூர்வமான ஆதாரம் எதுவு மில்லை. முத்தி பெறுவதற்குப் பிரமசரிய விரதம் மட்டும் போதாது; வேறு எத்தனையோ வேண்டும். மேலும், பலவந்தமாகப் புகுத்தப்பட்ட பிரமசரியத்தினுல் ஒரு பயனும் இல்லை. ரகசியமாகத் தீய வழியிலே ஒழுகுவதற்கு அது இடங்கொடுக்கிறது; மறைவான

தீய ஒழுக்கமானது சமுதாயத்தில் இருந்தால், அந்தச் சமுதாயத்தின் நன்னடத்தையையே அது போக்கிவிடுகிறது. எனது சொந்த அனுபவத்திலிருந்தே இதை எழுதுகிறேன் என்பதை இந்த ஆசிரியர் அறிய வேண்டும்.

நான் கூறிய அறிவுரையின் பயனாக, புருஷரோடு கூடி வாழாத விதவைகளுக்கு அடிப்படையான நியாயம் வழங்கப் பெற்றால், அது எனக்கு மிக்க மகிழ்ச்சியுண்டாக்கும். இந்த விதவைகளுக்கு நியாயம் வழங்குவதன் மூலம், சரியான பக்குவமடைவதற்கு முன்னரே, மனிதனுடைய காம வெறிக்கு இரையாகாமலும், நல்ல வயதும் அறிவும் வந்து பக்குவமடைவதற்கான காலம் வரும்வரை மணமாகாத மற்றப் பெண்கள் காத்திருப்பதற்குரிய சந்தர்ப்பத்தையும் அளித்தவர்களாவோம்.

ஓர் உயிர் மற்றொரு உடம்பில் குவது, மறுபிறப்பு, முத்திபோன்ற நம்பிக்கைகளுக்கு முரண்பட்ட மண சம்பந்தமான சித்தாந்தம் ஒன்றையும் நான் போதிக்கவில்லை. கோடிக்கணக்கான ஹிந்துக்கள் விதவா விவாகத்தைத் தடை செய்யவில்லையென்பதை வாசகர்கள் அறிய வேண்டும். இவர்களை யெல்லாம் தாழ்ந்த ரகத்தைச் சேர்ந்தவர்களென்று அவ்வாசிரியர் அகம்பாவத்தோடு வருணிக்கிறார். மனைவியிழந்த கிழவர்கள் மறுமணம் செய்துகொள்ளுவது, அந்த நம்பிக்கைக்கு மாறுபடவில்லையென்றால், 'விதவை' யென்று நாம் தவறாகச் சொல்லுகிற இளம் பெண்கள் செய்துகொள்ளும் உண்மையான மணம் எப்படி இந்த உயர்ந்த நம்பிக்கைக்கு மாறாக இருக்க முடியுமென்பது எனக்கு விளங்கவில்லை. ஓர் உயிர் மற்றோர் உடலில் புகுதலும், மறுபிறப்பும் எனக்கு வெறும் கொள்கைகள் மட்டும் அல்ல; நாள்தோறும் சூரியன் உதிப்பது எவ்வளவு வெளிப்படையான உண்மையோ, அவ்வளவு அக் கொள்கைகளும் எனக்கு உண்மையான விஷயங்கள் ஆகும்; இதை இந்த ஆசிரியர் அறிய வேண்டும். முத்தி என்பது ஓர் உண்மை; அதை உணர்வதற்கு நான் என்னால் இயன்றவரை முயன்று வருகிறேன். முத்தியென்ற உண்மைநிலையைச் சிந்திக்குந்தோறும், கன்னி விதவைகளுக்கு நாம் செய்துவருகிற கேட்டையும் நான் மிகத் தெளிவாக உணர்ந்து வருகிறேன். ஆண்மையற்ற,

இழிந்த நிலையிலிருக்கிற நாம், கொடுமைக்குள்ளான இந்த இளம் விதவைகளை, தெய்வத்தன்மை பொருந்திய சீதை போன்ற உத்தமிகளின் பெயரோடு ஒன்றுசேர்த்துப் பேசலாகாது.

கடைசியாக, ஒரு வார்த்தை. ஹிந்து மதத்தில் உண்மையான கைம்மை பெரிதும் பாராட்டப் பெற்றிருக்கிறது; இது நியாயமே. ஆனால், எனக்குத் தெரிந்தவரையில், விதவை மணத்திற்கு வேத காலத்தில் முற்றும் தடை இருந்ததுஎன்றுசொல்லுவதற்குப் போதியசான்று எதுவும் இல்லை. ஆனால், நான் எதிர்ப்பது உண்மையான கைம்மை நிலையை அன்று; அதனுடைய கோரமான போலி உருவத்தையே நான் எதிர்க்கிறேன். நான் குறிப்பிடுகிற இந்த இளம் பெண்களை, விதவைகள் என்று கருதாமலிருப்பதுதான் மேலானது. பெண்களிடம் மரியாதை காட்டுகிற இயல்பு ஒருசிறிதேனும் அமைந்துள்ள ஒவ்வொரு ஹிந்துவும், இந்தப் பெண்களின்மீது சுமத்தியுள்ள சமுதாயக் கொடுமையை நீக்கக் கடமைப்பட்டவராவர். ஆதலால், ஹிந்துவாய்ப் பிறந்த ஒவ்வொரு இளைஞனும் விதவைகளென்று தவறாகச் சொல்லப்படுகிற மணமாகாத இந்தப் பெண்களைத் தவிர வேறு பெண்களை மணக்க மறுத்துவிட வேண்டும்; இதையே நான் அவர்களுக்குத் தாழ்மையோடு மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

மாணவர் மகாநாடு

"சாது வாஸ்வானி என்ற பெரியார் சிந்துநாட்டில் தோன்றியிருக்கிறார். பெரிய சீர்திருத்தக்காரர்கள் பலரைத் தோற்றுவித்த பெருமையும் இந்த நாட்டுக்குண்டு. எனினும் சிந்து நாட்டுப் பெரியோர்களும், சீர்திருத்தக்காரர்களும் அடைந்த பெருமையை தங்களுடைய பெருமையாக எண்ணி, மாணவர்கள் திருப்தியடைவது பெருங் கேடாகும்."

ஆறாவது சிந்து மாணவர் மகாநாட்டுக் காரியதரிசி, மகாநாட்டுக்குச் செய்தி அனுப்பும்படி வேண்டி, எனக்கு அச்சடித்த ஓர் அறிக்கையை அனுப்பினார். அதற்காக ஒரு தந்தியும் அடித்தார். போக்குவரத்துக்கு எட்டாத இடத்தில் இருந்தபடியால், சுற்றறிக்கையும் தந்தியும் செய்தியனுப்ப வேண்டிய காலத்திற்குப் பின்னர்தான் எனக்குக் கிடைத்தன. மேலும், செய்திகள் வேண்டியும், கட்டுரைகள் வேண்டியும், இன்னும் என்ன வெல்லாமோ வேண்டியும் வரும் வேண்டுகோள்களுக் கெல்லாம் இசைந்து எழுதும் நிலையில் நான் இல்லை. மாணவர்களோடு தொடர்புள்ள விஷயங்களில் எனக்கு ஆர்வமுண்டு; அகில இந்திய மாணவ உலகத்தோடும் தொடர்பு உண்டு. எனவே அந்த அறிக்கைக் கடிதத்தில் காணப்படும் நிகழ்ச்சி நிரலிலுள்ள சில குறைகளை எடுத்துக்காட்டுவது எனது கடமையாகும். சில பகுதியை மாணவர் அறியும்பொருட்டு அந்த அறிக்கைக் கடிதத்தி லிருந்து கீழே தருகிறேன்; இது உபயோகமா யிருக்கு மென்பது என் கருத்து. அந்த அறிக்கைக் கடிதமோ மோசமாக அச்சடிக்கப்பட்டுள்ளது; அதிலுள்ள பிழைகளைப் பார்த்தாலோ மாணவர் சங்கம் இப்படிப் பிழைபட எழுதுவது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

"இயன்றவரை ரசமானதாகவும் அறிவூட்டக்கூடியதாகவும் மகாநாட்டை நடத்த மகாநாட்டைக் கூட்டுகிறவர்கள் முயன்று வருகிறார்கள்... கல்வி சம்பந்தமான பிரசங்கங்களைத் தொடர்ச்சியாக நடத்த நாங்கள் எண்ணி யிருக்கிறோம். அதற்கு உங்கள் உதவியை நாடுகிறோம்......சிந்து மாகாணத்தில், பெண் கல்வி சிறப்பாகக் கவனிக்க வேண்டியதாய் இருக்கிறது...மாணவர்களுக்கு அவசியமான பிற விஷயங்களை நாங்கள் புறக்கணித்துவிட வில்லை. விளையாட்டும் போட்டிகளும் நடத்த ஏற்பாடாகி யிருக்கிறது; பேச்சுப் போட்டியும் உண்டு. இவை காரணமாக மகா

நாடு மிக்க சுவையுடையதாகு மென்று நம்புகிறோம். நாடகம், சங்கீதம் போன்ற கலைகளையும் நீக்கிவிட வில்லை. ஆங்கிலம்,உருது, ஆகிய மொழி களில் சில நாடகப் பகுதிகள் நடித்துக்காட்டப்படும்.''

இந்த மகாநாட்டிலே என்ன என்ன நடைபெறும் என்பதைத் தெரிவிக்கும் முக்கியமான ஒரு வாக்கியத்தைக் கூட நான் நீக்க வில்லை. ஆயினும், மாணவர் உலகத்திற்கு நிலையான நன்மை தரக்கூடியது ஒன்றுகூட இந்தத் திட்டத்தில் இல்லை. நாடகம், சங்கீதம், விளையாட்டுக்கள் மிக 'விரிந்த முறையில்' ஏற்பாடாகி யிருக்கும் என்பதில் சிறிது கூடச் சந்தேகம் இல்லை. 'மிக விரிந்த முறை' என்ற தொடர் அவ் வறிக்கையிலேயே இருக்கிறது. பெண் கல்வி பற்றி, கவர்ச்சி பொருந்திய கட்டுரைகள் இந்த மகாநாட்டில் வாசிக்கப் பெறும்; இதில் சிறிதும் ஐயம் இல்லை. அறிக்கை சம்பந்தப்பட்டவரையில் எதிர்ஜாமின் [சீதனம்]. கேட்கிற கேடானவழக்கத்தைப்பற்றி ஒருவார்த்தையைக் காணோம். மாணவர்கள் இந்த வழக்கத்தை இன்னும் அடியோடு ஒழித்துவிடவில்லை. இந்த வழக்கம், பல வழிகளில், சிந்து நாட்டுப் பெண்களின் வாழ்க்கையை நரகமாக்கிவைத்திருக் கிறது. அவர்களின் பெற்றோரைச் சித்திரவதைக்கு உட் படுத்தி யிருக்கிறது. மாணவர்களின் ஒழுக்கத்தைப்பற்றிய பிரசினையை ஆராய இம் மகாநாடு எண்ணுகிறதா என் பதைப்பற்றியும் மாணவர்கள் இந் நாட்டை உருவாக்கு வதில் அஞ்சாது நின்று தொண்டாற்ற மாணவர்களுக்கு இம் மகாநாடு வழிகாட்டுமா என்பதையும் பற்றியும் இந்த அறிக்கையில் ஒன்றுமே இல்லை. அறிவிற்சிறந்த பல ஆசிரியர்களை அனேக கலாசாலைகளுக்குச் சிந்து மாகாணம் உதவி இருக்கிற தென்பது மிகவும் பெருமை கொள்ளத்தக்க விஷயம்தான். ஆனல், அதிகமாகக் கொடுக்கிறவர்களிடமே எப்போதும் அதிகமாக எதிர் பார்ப்பது வழக்கம். கூர்ஜர வித்தியா பீடத்திற்கு என் னோடு சேர்ந்து உழைப்பதில், சிறந்த துணையாளர்களை நல்கிய சிந்து நாட்டினருக்கு நான் மிகவும் கடமைப்பட் டிருக்கிறேன். ஆனல், பேராசியர்களையும் கதர்த் தொண் டர்களையும் அங்கிருந்து பெறுவதோடு மட்டும் நான் திருப்தியடையப் போவ தில்லை. சாது வாஸ்வானி என்ற பெரியார் சிந்துநாட்டில் தோன்றியிருக்கிறார். பெரிய சீர்

திருத்தக்காரர் பலரைத் தோற்றுவித்த பெருமையும் சிந்து நாட்டுக்குண்டு. எனினும் சிந்துநாட்டுக்குப் பெரியோர்களும் சீர்திருத்தக்காரர்களும் அடைந்த பெருமையை தங்களுடைய பெருமையாக எண்ணி மாணவர்கள் திருப்தி யடைவது பெருங் கேடாகும். அவர்கள் இந் நாட்டை உருவாக்கும் அறிஞர்களாதல் வேண்டும். மேலைநாட்டைக் கண் மூடித்தனமாகப் பின்பற்றுவது, ஆங்கிலத்தைப் பிழையறவும் நாகரிகமான முறையிலும் பேசவும் எழுதவும் திறமைப் பெறுவது போன்ற காரியங்கள் சுதந்திரக் கோயிலை அமைப்பதற்கு ஒரு கல்லைக்கூட உதவியவை ஆகமாட்டா. பசிப்பிணியால் துன்புற்றிருக்கும் இந்தியாவின் சக்திக்கு மீறிய, பெருஞ்செலவுக்கு இடமான ஒரு கல்வி முறையை மாணவர்கள் பெற்று வருகிறார்கள். எக்காலத்திலுமே, இவ்விதமான கல்வியை மிக மிகச் சில மாணவர்களே பெற முடியும். இப்படிப் பெறுகிற கல்வியைக் கொண்டே, மாணவர்கள் தேசத்தின் உயிர்நாடியாக அமைந்துவிட முடியுமா என்பதை நாம் அவர்களது கல்வியின் சிறப்பை மதிப்பிடவேண்டியவர்களாய் இருக்கிறோம். பழமையான பழக்க வழக்கங்களைச் சீர்திருத்தம் செய்வதில் முனைந்து நின்று, சமூகத்தில் நிலவும் நல்ல பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொண்டு, தீயனவாய் உள்ள கணக்கற்ற பழக்க வழக்கங்களை அச்சமின்றி நீக்கவல்ல வழிகாட்டிகளாக மாணவர்கள் அமைதல் வேண்டும்.

உள்ளதை உள்ளவாறே அறிந்துகொள்ளும் முறையில், இத்தகைய மகாநாடுகள் மாணவர்களின் கண்களைத் திறந்துவிட வேண்டும். அவர்கள் பயிலும் கல்வித் திட்டம் அன்னிய முறையைத் தழுவி அமைக்கப்பட் டிருப்பதால், மாணவர்கள் எத்தனையோ விஷயங்களைக் கற்றுக்கொள்ள முடிவ தில்லை. எனவே, இந்த மகாநாடுகள் அத்தகைய விஷயங்களை மாணவர்கள் சிந்திக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். வெறும் அரசியல் பிரசினைகளாக உள்ள விஷயங்களை மாணவர்கள் இந்த மகாநாடுகளில் வாதிக்க இடமிராது. அரசியல் பிரசினை எவ்வளவு முதன்மையானதோ, அது போலவே பொருளாதாரப் பிரசினையும் சமூகப் பிரசினையும் நமது தலைமுறையைச் சார்ந்த மக்களுக்கு முக்கியமான தாகும் அவற்றைப்பற்றி மாணவர்கள்

கலந்து ஆலோசிக்க வேண்டும்; விவாதிக்க வேண்டும். தேசத்தின் சகல அம்சங்களோடும் தொடர்புகொள்ள தக்கவிதத்தில் இம் மகாநாடுகளில் வகுக்கும் தேச நிர்மாணத் திட்டம் அமைய வேண்டும். மாணவர்கள் ஈடுபடுகிற காரியங்களின் பலாபலன்கள் பேச வாயில்லாத பாமர மக்களிடையும் காணத்தக்கதா யிருக்க வேண்டும். மாகாணம், நகரம், வகுப்பு, ஜாதி என்ற சுருங்கிய அளவோடு அவர்களுடையசிந்தனை நின்றுவிடலாகாது. தீண்டத்தகாதவர்கள், குடியர்கள், காலிகள், வேசிகள் உள்பட பலர் நம்மிடையே வாழுகிறார்கள். இவர்கள் இவ்வித இழிந்த நிலையில் இருப்பதற்கு நாமும் பொருப்பாளிகள் ஆவோம்; எனவே, மாணவர்கள் விரிந்த முறையில் சிந்தனை செய்து ஒரு கண்டத்துக்கே தொண்டுபுரியும் வகையில், அவர்கள் ஈடுபட வேண்டும். பழைய காலத்தில் மாணவர்களுக்குப் பிரமசாரிகள் என்று பெயர் வழங்கிற்று; அதாவது கடவுளை உணர்ந்து நடப்பவர்கள் என்பது கருத்து. அரசர்களும் பொரியோர்களும் அவர்களைக் கௌரவித்தார்கள். அவர்களுக்குரிய செலவை அந் நாட்டு மக்களே வலியச் செய்து வந்தார்கள். இதற்குப் பதிலாக, நூறு மடங்கு உறுதியான ஆன்மவலியுடையவர்களையும், சிறந்த அறிஞர்களையும், உடல்வலி பொருந்திய வீரர்களையும் அவர்கள் நாட்டிற்கு வழங்கினார்கள். வீழ்ச்சியுற்று இருக்கும் நாடுகளெல்லாம் இக்காலத்தில் மாணவர்களையே நம்பி யிருக்கின்றன. மாணவர்களே சகல துறைகளிலும் தன்னலமில்லாமல் சீர்திருத்தம் செய்யவல்ல தலைவர்கள் ஆகிறார்கள். இந்தியா இதற்குப் புறம்பானதன்று; சீர்திருத்தம் செய்வதில் முனைந்து நிற்கும் மாணவர்கள் இந்தியாவிலும் உண்டு. ஆனால், இப்படிமுனைந்து ஈடுபடுகிறவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாய் இருக்கிறது. பிரமசாரிகள் என்ற நிலைக்குத் தகுதியாக, இம் மாதிரி உருவான வேலையில், மாணவர் மகாநாடுகள் ஈடுபட வேண்டும். இதுவே நான் சொல்ல விரும்புவது.

இளைஞர்களுக்கு வெட்கக்கேடு

"சீதனம் தந்தாலன்றி மணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லுகிற இளைஞன், தான் கற்ற கல்விக்கும் தனது நாட்டுக்குமே இழிவு தேடியவனாவான்."

செய்திப் பத்திரிகையிலிருந்து ஒரு பகுதியைக் கத்தரித்து எடுத்து ஒரு நிருபர் எனக்கு அனுப்பியிருக்கிறார். சிந்து மாகாணத்திலுள்ள ஹைதராபாத் நகரில் மணமகன் கிடைப்பது மிகவும் அரிதாய் இருக்கிறதாம். அதனால் மணமகனுக்குக் கிராக்கி பயங்கரமான முறையில் அதிகப்பட்டுவிடுகிறதாம். இம்பீரியல் டெலிகிராப் எஞ்சினியரிங் சர்விஸில் வேலைபார்ப்பவர் ஒருவர், நிச்சய தாம்பூலம் செய்துகொண்ட தினத்தன்று, சீதனத்திற்காக இருபதினாயிரம் ரூபாயை ரொக்கமாகப் பெண்ணின் தகப்பனாரிடமிருந்து கறந்துகொண்டாராம்; அதனோடு, மணம் நடைபெறும்போதும் நடைபெற்ற பின்னரும் பெருத்த தொகைகள் தர வேண்டுமென்ற வாக்குறுதியையும் வாங்கிக்கொண்டாராம். சீதனம் தந்தாலன்றி மணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொல்லுகிற இளைஞன், தான் கற்ற கல்விக்கும் தனது நாட்டுக்குமே இழிவு தேடியவனாவான். அன்றியும் பெண் குலத்தையே அவமானப்படுத்தியவனுமாவான். நமது நாட்டில் இளைஞரின் இயக்கங்கள் பல நடைபெறுகின்றன. இம்மாதிரியான பிரசினைகளைத் தீர்ப்பதற்கு இளைஞர் இயக்கங்கள் முயல வேண்டும். இப்போது இருக்கிற இளைஞர் சங்கங்களெல்லாம் தங்களுக்குள்ளே உருப்படியான சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டிய ஸ்தாபனங்களாயிருப்பதற்குப் பதிலாக தற்புகழ்ச்சியில் ஈடுபட்டிருக்கும் சங்கங்களாக அவை மாறிவிட்டன. சில சமயங்களில் இளைஞர் சங்கங்கள் பொது இயக்கங்களுக்கு உதவி புரிந்து வருவது உண்மைதான். பொது ஜனங்களின் பாராட்டுதலே தங்களுக்குத் தக்க பரிசு என்பதை இந்நாட்டு இளைஞர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரி வேலைக்குத் துணையாக, தங்களுக்குள்ளேயே, சீர்திருத்தங்களைச் செய்யச் சங்கங்கள் முயல வேண்டும்; அப்படிச் செய்தாலொழிய, இவ் வேலை

இளைஞர்களிடையே காரணமில்லாத ஒரு மனத்திருப்தியை யளித்து, அவர்களைக் கெடுக்க ஏதுவாகும். சீதனம் வாங்கும் இழிவான வழக்கத்தைக் கண்டிக்கும்படியான மனப்பான்மையைப் பொதுஜனங்களிடையே உண்டாக்க வேண்டும். இப்படிக் கேவலமான முறையில் பணம் வாங்கித் தங்களையே மாசுப்படுத்திக்கொள்ளுகிற இளைஞர்களைச் சமூகத்திலிருந்து விலக்கிவைக்க வேண்டும். பெண்ணின் பெற்றோர் ஆங்கிலப் பட்டங்களைக் கண்டு மயங்கிப் போகிற பழக்கத்தை விட்டுவிட வேண்டும். தங்கள் ஜாதி, தங்கள் மாகாணம் என்ற குறுகிய எல்லைகளைக் கடந்து வேறு ஜாதியிலோ, வேறு மாகாணத்திலோ தேடி, மதிப்புச் செலுத்துகிற வீர இளைஞர்களுக்குத் தங்கள் பெண்களைக் கொடுக்கப் பெற்றோர் முன்வர வேண்டும்.

சிந்து நாட்டுச் சாபக்கேடு

"மணம் செய்துகொள்ளுவதற்குப் பணம்தரவேண்டும் என்று கேட்கிற இளைஞனை மணக்கப் பெண் மறுத்துவிட வேண்டும். தன்னை மணக்க அவன் விதிக்கும் இழிவான நிபந்தனைகளுக்கு உட்படுவதைவிட, ஆயுள் காலம் முழுவதும் கன்னியாய் இருந்து காலம் கழிக்கப் பெண்கள் மன உறுதி கொள்ள வேண்டும். இவ்விதமான மன உறுதியும் மறுப்பு உணர்ச்சியும் ஏற்படும் வகையில் பெண்களுக்குப் பெற்றோர் கல்வி அளிக்க வேண்டும்."

சிந்து மாகாணத்தில் அமில் வர்க்கத்தினரே எதிலும் முன்னணியில் நிற்பவர்கள். முன்னணியில் நின்றும், மோசமான சில சமூகக் கேடுகள் அவர்களுக்கு மட்டுமே சொந்தமா யிருக்கின்றன. அவற்றில், எதிர்ஜாமீன் அல்லது வரதட்சிணை மிக மோசமானது. சிந்து மாகாணத்திற்கு முதன் முறை சென்றிருந்தபோதே இந்தத் தீமையைப்பற்றி நான் கேள்விப்பட்டேன். அமில் சமூகத்தாரிடம் இதைப்பற்றிப் பேசும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். இந்தத் தீமையைக் களைவதற்காகச் சிலர் ஆங்காங்கே முயன்றுவருவது உண்மைதான்; ஆயினும், இதை அடியோடு நீக்கிவிடுவதற்கான ஒருமித்த முயற்சி எதுவும் இதுவரை நடைபெறவில்லை. அமில் வகுப்பினர் அடக்கமான ஒரு சிறிய சமூகத்தினர் ஆவர். மேற் சொன்ன தீமை மிகவும் கேடு பயக்கக்கூடிய தென்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஒரு அமில்கூட, கொடுமையான இந்தத் தீயவழக்கத்திற்குப் பரிந்து பேசியதை நான் இதுவரையில் கண்ட தில்லை. ஆயினும், இந்த வழக்கம் பிடிவாதமாக நிலைத்து நிற்கிறது; இதற்குக் காரணம் அமில்களில் படித்தவராயுள்ள இளைஞர்கள், இந்தப் பழக்கத்தை ஆதரித்துப் பின்பற்றி வருகிறார்கள். நியாயமாகத் தங்கள் தரத்துக்கு எதெது தேவையோ அதற்கும் மேற்பட்ட பல சௌகரியங்களைப் பெற்று, அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். அது காரணமாக, மனச்சாட்சி என்பதையே காற்றில் பறக்கவிட்டுக் கேவலமான தங்கள் சுயநலத்தை நிறைவேற்றும் பொருட்டாய், விவாகமாகிய புனிதச் சடங்கையே பணம்பறிக்கும் விபசாரமாக்கி

விடுவதுடன், தங்களையுமே இழிவுபடுத்திக்கொள்ளுகிறார்கள். தேசத்துக்கு அவர்கள் செய்யும் வேலையையும் இந்தக் கெட்ட பழக்கம் பாதித்திருக்கிறது. இக் கொடிய வழக்கமில்லாவிட்டால், அவர்களுக்கு இருக்கிற அறிவும் கல்வியும் அவர்கள் செய்கிற வேலையை மிகவும் சிறப்புடையதாக்கி விடும். அதனால் நாட்டுக்கு அதிகமான நன்மை ஏற்படும்.

கேடான இப் பழக்கத்திற்கு, நேரடியான பொதுஜன எதிர்ப்பு இல்லாமையினாலேதான், படித்த அமில் இளைஞர்கள், மணம் செய்ய வேண்டிய பெண்களையுடைய ஏழைப் பெற்றோர்களை வருத்திப் பணம் பறிக்க முடிகிறது. இந்தப் பழக்கத்தைப் போக்குவதற்குப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும், பெண்களின் பெற்றோருக்கு இடையிலும் பிரசாரம் செய்ய வேண்டும். மணம் செய்துகொள்ளுவதற்குப் பணம் தர வேண்டுமென்று கேட்கிற இளைஞனை மணக்கப் பெண் மறுத்துவிட வேண்டும். தன்னை மணக்க அவன் விதிக்கும் இழிவான நிபந்தனைகளுக்கு உட்படுவதைவிட, ஆயுள் கால முழுவதும் கன்னியாய் இருந்து, காலம் கழிக்கப் பெண்கள் மனஉறுதிகொள்ள வேண்டும். இவ்விதமான மனஉறுதியும் மறுப்பு உணர்ச்சியும் ஏற்படும் வகையில், பெண்களுக்குப் பெற்றோர் கல்வி அளிக்க வேண்டும். மனமொத்த அன்பு, மனமொத்த உடன்பாடு இவை இரண்டுமே விவாகத்திற்கு உரிய கண்ணியமான நிபந்தனைகளாகும்.

சிந்து மாணவர்களிடையே

"சுயராஜ்யம் கோழைகளுக்கு ஏற்பட்டதன்று; கண்களைக் கூடக் கட்டக் கூடாதென்று மறுத்து, முகத்திலே புன்னகை தவழ, தூக்குமேடையில் ஏறும் வீரர்களுக்கு ஏற்பட்டதாகும் அது."

கராச்சி சட்டக் கல்லூரி, எஞ்சினியரிங் கல்லூரி, கலைக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் ஒன்றுசேர்ந்து, டி. ஜே. சிந்துக் கல்லூரி மண்டபத்தில் காந்திஜிக்கு (ஆங்கிலத்தில்) கூட்டு உபசாரப் பத்திரம் ஒன்று வாசித்து அளித்தார்கள். அதற்குக் காந்திஜி கீழ்வருமாறு பதில் சொன்னார்:

"நல்லது, இளைஞர்களே! 'ஒருவரைப் போற்றுவதற்கு அடையாளம் அவரைப் பின்பற்றி ஒழுகுவது' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. நீங்கள் எனக்கு அளித்த உபசாரப்பத்திரத்தில் என்னைப்பற்றி ஒரே படியாகப் புகழ்ந்திருக்கிறீர்கள். ஆனால், செயல்முறையிலோ எனது கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமாகவே நடந்து வருகிறீர்கள். இதைப் பார்த்தால் 'தாங்கள் விரும்புவதை நாங்கள் அறிவோம்; ஆயினும், தங்கள் விருப்பத்திற்கு மாறாகவே நாங்கள் செய்துகொண்டிருப்போம்' என்று நீங்கள் சொல்லுவதுபோல் இருக்கிறது. வேண்டுமென்றே என்னை அவமானப்படுத்தும் நோக்கம் உங்களுக்கு இராதுதான். ஆகையால் என்னை மகாத்மா என்று சொல்லிப் பனிமயமான இமய மலையின் உச்சிவரை உயர்த்திவிட்டு, இவ்வளவு பெரிய மகாத்மாவின் போதனைகளைப் பின்பற்றுவது நம்மால்இயலுகிற காரியமா என்று சொல்லி என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்களா என்ன? அது எப்படியிருந்தாலும் இருக்கட்டும். நீங்களோ என்னை இங்கு அழைத்துவிட்டீர்கள்; உங்களுடைய குற்றங்களுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்."

ஒருவருமே கேட்டிராத முறையில், அவர்கள் செய்த குற்றங்களுக்கெல்லாம் பதில் சொல்லும்படி மாணவர்களைக் காந்திஜி கேட்டார். ஈட்டிபோல் கூரிய மொழிகளை உபயோகித்து, அவர்களைக் கண்டித்தார்; ஆனால், அவர்களைப்

புண்படுத்தும் நோக்கோடு அவர் இந்த ஈட்டியைப் பிரயோகிக்கவில்லை ; கத்திகொண்டு அறுத்துப் புண்ணைச் சத்திர வைத்தியர் ஆற்றுவதுபோல, காந்திஜியும் தம் கூரிய சொற்களை உபயோகித்தார். உபசாரப்பத்திரத்தை அன்னிய மொழியில் எழுதியதற்காக முதன்முதலில் அவர்களைக் கடிந்துகொண்டார். மரியாதைக்காகவாவது, அதை ஹிந்தி மொழியில் தயாரித் திருக்க வேண்டும் ; அப்படி ஹிந்தியில்தான் தயாரிக்க வில்லையென்றாலும், சிந்தி மொழியிலாவது தயாரித்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், காந்திஜி அவர்களது உணர்வின் நுட்பத்தைப் பாராட்டி யிருப்பார். காந்திஜியைப் பார்க்கவரும் வெளிநாட்டினர்கூட அவரோடு பேசும்போது, தங்களுக்குத் தெரிந்த எல்லா ஹிந்துஸ்தானிச் சொற்களையும் உபயோகிக்க முயல்வார்கள். அவற்றைக் கேட்டுக் காந்திஜி மிகவும் பிரியம் கொள்ளுவார் என்பது அவர்களுக்குத் தெரியும். அப்படி யிருக்கும்போது, இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்து மாணவர்கள் தங்கள் தாய் மொழியைத் தவிர வேறு மொழியில் உபசாரப்பத்திரத்தை எழுதியதற்கு என்ன சமாதானம் கூறப்போகிறார்கள் ? சுயராஜ்யம் பெற்ற பின், ஹிந்துஸ்தானி மொழியை இந்தியாவின் பொது மொழியாகவும், துரைத்தன மொழியாகவும் இருக்க வேண்டுமென்று நேரு கமிட்டியார் தங்கள் அறிக்கையில் சிபார்சு செய்திருக்கிறார்கள். ஆனால், "நாங்கள் சுதந்திரப் பிரியர்களாச்சே" என்று நீங்கள் ஒருவேளை சொன்னாலும் சொல்லிக்கொள்ளலாம் என்று காந்திஜி வேடிக்கையாகச் சொன்னார். "அப்படியானால் ஜெனரல் போதா நடந்துகொண்ட முறையையாவது நீங்கள் பின்பற்றி இருக்க வேண்டும். போயர் யுத்தத்திற்குப் பிறகு, தென் ஆப்பிரிக்காவில் ஆங்கிலேயர் குடியேறிய காலத்தில், ஆங்கில அரசரோடுமே ஆங்கிலத்தில் பேச, ஜெனரல் போதா மறுத்துவிட்டார். ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி கொண்டு, தமது சொந்த மொழியாகிய டச்சு மொழியிலேயே அவர் பேசினார். சுதந்திர வேட்கைகொண்ட மக்களுக்குப் பிரதிநிதியா யிருப்பவர் இப்படித்தானே நடந்து கொள்ள முடியும் ?"

விலையுயர்ந்த அன்னியநாட்டுத் துணிகளால் அலங்

கரித்துக்கொள்ளுவது, மிக்க ஆடம்பரமாக வாழ்வது ஆகிய வற்றைக் குறிப்பிட்டு, காந்திஜி கீழ்வருமாறு பேசினார் :

"உங்கள் கல்விக்காக நீங்கள் செலுத்துகிற கட்டணம், பொது நிதியி லிருந்து கல்விக்காகச் செலவழிக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதிக்குக்கூடப் போதவில்லை யென்பதை, பொருளாதார சாஸ்திரம் கற்கிற மாணவர்கள் என்ற முறையில் நீங்கள் தெரிந்துகொண் டிருப்பீர்கள். ஆனால், அருமைக் குழந்தைகளே ! உங்கள் கல்விக்காக ஏற்படுகிற செலவில், நீங்கள் செலுத்திய கட்டணம் போக, எஞ்சிய பகுதி எங்கிருந்து வருகிறது ? இதை எப்போதாவது நீங்கள் நினைத்துப்பார்த்த துண்டா ? இந்தப் பணம் ஏழை மக்களிட மிருந்தே வருகிறது. ஒரிஸ்ஸாவில் பிரேதம் போல் எலும்பும் தோலுமாய்த் திரியும் அந்த ஏழை மக்களிட மிருந்தே வருகிறது. அந்த ஏழை மக்கள் எப்படியிருக்கிறார்கள் ? அவர்களது கண்கள் ஒளியிழந்திருக்கின்றன ; முகத்தில் அவநம்பிக்கையும் ஏமாற்றமும் அப்படியே தாண்டவமாடுகின்றன; வருஷ ஆரம்பத்தி லிருந்து முடிவுவரையில் போதுமான உணவின்றிப் பசி எப்போதும் வயிற்றைப் பிடுங்கித் தின்கிறது; பணக்காரரான குஜராத்திகளும் மார்வாடிகளும் தாராள சிந்தையில் கொடுப்பதாய் எண்ணிக்கொண்டு, இழிவுபடுத்துகிற முறையில், வீசி எறிகிற கையளவு மடித்துப்போன ஒரு பிடி அரிசியையும் அழுக்குப் பிடித்த உப்பையும் தின்று, இந்த ஏழை மக்கள் எப்படியோ காலம் தள்ளுகிறார்கள். இளைஞர்களே! உங்கள் சகோதரர்களான இந்த ஏழை மக்களுக்கு நீங்கள் இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள் ? உங்களுடைய சகோதரிகள் தங்கள் தூய கைகளால் வீட்டிலிருந்து நூற்கிற கதரினால் ஏதோ இரண்டு காசுகள் அவர்கள் கையில் போய்ச் சேருகிறது. இப்படி அவர்களால் தயாரிக்கப்பட்ட கதரை அணியாதபடி, நீங்கள் அன்னியநாட்டுத் துணியை அணிகிறீர்கள். அதனால் நாட்டிலிருந்து ஆண்டு தோறும் அறுபது கோடி ரூபாயை வெளி நாட்டிற்கு அனுப்பத் துணைசெய்து இந்திய ஏழைகளின் வயிற்றுப் பிழைப்பில் மண்ணைப் போடுகிறீர்கள். இதன் பலனாக நாடு வறுமையிலே சிக்குண்டு துன்புறுகிறது. நமது வர்த்தகம் லாபத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக, நம்மைப் பிறர்

சுரண்டுவதற்கு உதவும் கருவியாய் மாறிவிட்டது. நம் நாட்டு வியாபாரிகள் வியாபாரத்தில் தங்களுக்குக் கிடைக்கிற லாபத்திற்காக, நூற்றுக்கு ஐந்து ரூபாய்க்கும் குறைவான பகுதியைப் பெற்றுக்கொண்டு, லங்காஷயருக்கும் மான்செஸ்டருக்கும் லாபம் தேடிக்கொடுக்கும் தரகர்கள் நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இவர்களுக்குக் கிடைக்கிற இந்த அற்ப லாபத்தைக்கொண்டுதான் பிரமாதமாகத் தோற்றுகிற நமது பெரிய நகரங்களெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன.''

காந்திஜி தொடர்ந்து பேசினர். "சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முக்கியமான கூட்டத்தில் பேசிய போது, ஸாலிஸ்பரி பிரபுவானவர், இந்தியாவின் இரத்தத்தை நாம் உறிஞ்சித்தான் ஆகவேண்டி யிருப்பதால், இரத்தம் எங்கே அதிகமா யிருக்கிறதோ அந்தப் பகுதியில் தான் ஆயுதத்தைப் பிரயோகித்து, இரத்தத்தை வடிக்க வேண்டுமென்று கூறினர். ஸாலிஸ்பரி பிரபு காலத்தில் இரத்தத்தை வடிப்பதன் மூலம் வருமானத்தைப் பெற வேண்டி யிருந்ததென்றல், வருஷக் கணக்காகச் சுரண்டி வந்ததனல், மிக்க வறுமையடைந் திருக்கிற இன்றைய இந்தியாவில், இரத்தத்தைவடிக்கிற அந்த வேலே, எவ்வளவு அதிகமா யிருக்க வேண்டுமென்று எண்ணிப்பாருங்கள். இந்திய ஏழை மக்களின் இரத்தத்தை வடிப்பதன் மூலம் பெருகிற வருமானத்தி லிருந்துதான் தங்கள் கல்விக்கான செலவு செய்யப்படுகிறதென்பதை மாணவர்கள் மறக்கக் கூடாது. இன்னும், தங்கள் கல்விக்காகச் செலவழிக்கிற பணம் கேவலமான மதுபான வருமானத்தி லிருந்தே கிடைக்கிறபடியால், தங்கள் நாட்டு மக்களின் நிலேயை இன்னும் இழிவாக்கித்தான் அவர்கள் கல்வி பெறுகிருர்கள் என்பதை மாணவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆதலால், கடவுளுடைய நீதிமன்றத்தின்முன், 'உனது சகோதரர்களே நீ என்ன செய்திருக்கிருய்?' என்ற பயங்கரமான கேள்விக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டி யிருக்கும்.'' அவர்கள் என்ன பதில் சொல்லுவார்கள் என்று காந்திஜி அவர்களேக் கேட்டார். பிறகு ஹஜரத் ஓமர் நடந்துகொண்ட முறையைக் காந்திஜி அவர்களுக்கு எடுத்துக்காட்டினர். "முஸல்மான் பிரபுக்கள் ஆடம்பர

வாழ்க்கையில் அழுந்தி, உயர்ந்த ஆடையாபரணங்களை அணிய ஆரம்பித்தபோது, தம் முன்னே வரக் கூடாது என்று அவர் அவர்களுக்குச் சொன்னார். முரட்டு மாவினால் செய்த ரொட்டியை உண்டு, முரட்டுத் துணியை உடுத்தத் துணியாவிட்டால், அவர்கள் முகம்மது நபிக்கு உண்மையான சீடர்களாக இருக்க முடியாது என்றும் ஓமர் கூறினார். கடவுளுக்கு அஞ்சி நடந்த காலிபாவின் வாழ்க்கையி லிருந்து இந்தப் படிப்பினையையாவது அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பினார்."

"சிந்து வெள்ளத்தினால் ஏற்பட்ட கஷ்டத்தை நிவாரணம் செய்யும் பொருட்டு நாராயண தாஸ் மால்கானி இளைஞர்களிடம் உதவி கோரியபோது, இளைஞர்களின் உதவி கிடைக்காததால், அவர் கூர்ஜரத்திக்குப் போய் உதவி வேண்டுமென்று பிச்சை கேட்கிற மாதிரி கேட்க நேர்ந்தது. இது சிந்து நாட்டு இளைஞர்களுக்கு வெட்கமாயில்லையா? கடைசியாக, வரதட்சிணை என்ற கொடிய வழக்கத்திற்கு அவர்கள் கூறப்போகும் மறுமொழி என்ன? வீட்டுக்கு அரசிகளாகவும், இதயத்துக்கு அரசிகளாவும் வைத்துப் போற்றவேண்டிய திருக்க, அப்படிச் செய்யாது, அடிமைபோலக் கருதி, மனைவியரை அவர்கள் விற்பனைப் பொருளாக ஆக்கிவிட்டார்கள்! ஆங்கில இலக்கியத்தைப் படித்ததன் மூலம் அவர்கள் மனதில் பதிந்த பாடம் இது தானா? பெண்ணை அர்த்தாங்கனை, அல்லது புருஷனுடைய உடலில் சிறந்த செம்பாதி என்று சொல்லுவது உண்டு. ஆனால், ஆடவர்களோ இன்று பெண்களை அடிமையான நிலையில் வைத்து நடத்துகிறார்கள். அதனால் நாடு, ஒரு பகுதி பலமுடையதாகவும் மற்றொரு பகுதி பலங்குறைந்தும் பக்கவாதங் கண்ட நிலையில் இன்று இருந்து வருகிறது. சுயராஜ்யம் கோழைகளுக்கு ஏற்பட்டதன்று. கண்களைக்கூடக் கட்டக் கூடாது என்று மறுத்து, முகத்திலே புன்னகை தவழ, தூக்குமேடையில் ஏறும் வீரர்களுக்கே ஏற்பட்டதாகும் அது. வரதட்சிணை என்ற கறையைத் துடைப்பதற்கும் சகோதரிகளையும் மனைவிமார்களையும் அவர்களுக்குரிய பூரண அந்தஸ்திற்கும் சுதந்திரத்திற்கும் உரிய நிலையில் வைப்பதற்கும் உயிரையும்விட நாங்

கள் சித்தமாய் இருக்கிறோம் என்று வாக்குறுதி கொடுங்கள். அதன் பிறகுதான், நீங்கள் உங்கள் நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடத் தயாரா யிருக்கிறீர்களென்று உணர்வேன்" என்று காந்திஜி முடிவுரையாகப் பேசினார்.

அதன் பிறகு அங்கிருந்த மாணவிகளைப் பார்த்து, காந்திஜி கீழ்வருமாறு சொன்னார் :

"இளம் பெண்களே ! உங்களுக்கு நான் ஒரு விஷயம் மட்டும் சொல்லுவேன். என் பொருப்பில் ஒரு பெண் இருந்தால், அவளை ஆயுள் முழுதும் மணம் செய்யாமலே வைத்திருந்தாலும் வைத்திருப்பேனே யன்றி, மணம் செய்து கொள்ளுவதற்கு ஒரு பைசாவேனும் வேண்டு மென்று எதிர்பார்க்கிறவனுக்கு அவளை ஒருக்காலும் மணம் செய்து கொடுக்க மாட்டேன்."—பியாரேலால்.

உண்மையா யிருங்கள்

"புகழுரை யொன்றே உண்மையான அன்பைக் காட்டி விடாது. சேவையின் மூலமே அதை நாம் காட்டலாம். ஆத்ம சுத்தியே உண்மையான தொண்டு செய்வதற்கு முதற்படி யாகும்; இன்றியமையாத நிபந்தனையு மாகும்."

ஹைதராபாத் மாணவர்கள் சிந்தி மொழியில் எனக்கு அளித்த சிறப்பானதோர் உபசாரப்பத்திரத்தின் கருத்தை மொழிபெயர்த்துச் சொல்லுவதாக வாக்களித்திருந்தேன். இடையில் வேறு பல வேலைகள் இடையே குறுக்கிட்டுவிட்டபடியால் வாக்களிக்கு முன்னரே அதைச் செய்ய முடியாது போயிற்று. இப்போது கீழே அதை மொழி பெயர்த்துத் தருகிறேன்.

"ஹைதராபாத் மாணவர்களின் சார்பாக, நாங்கள் தங்களை மனப்பூர்வமாக வரவேற்கிறோம். தாங்கள் கூறும் அறிவுரைகளைச் செயல் முறையில் கடைப்பிடியாதபடியால், எங்களுடன் கலந்து உறவாடும்படி தங்களைக் கேட்க, எங்களுக்கு உரிமை யில்லை யென்பதை உணர்வோம்; ஆயினும், தாங்கள் பேசுவதைக் கேட்ட பின்னர், எங்கள் இதயம் அதில் ஈடுபட்டு, அதன்படி செயலில் இறங்கத் தூண்டு மென்று நம்புகிறோம். தங்களை ஏமாற்றும் எண்ணம் எங்களுக்கு இல்லை. ஆதலால், எங்கள் இதயத்திலுள்ள உண்மையை அப்படியே தங்களிடம் சொல்லிவிட விரும்புகிறோம்.

"எங்கள் நகரம் கல்விக்கு நடுநாயகமாக விளங்குகிற இடம். மற்ற நகரங்களோடு ஒப்பிடும்போது, எங்கள் நகரில், ஐ. சி. எஸ். பரீட்சையில் தேறியவர்கள் அதிகமா யிருக்கிறார்கள். இங்கே ஒரு கல்லூரியும், சிறுவர்களுக்காக மூன்று உயர்தரப் பள்ளிகளும், சிறுமிகளுக்காக இரண்டு உயர்தரப் பள்ளிகளும், இன்னும் எத்தனையோ ஆங்கிலப்பள்ளிகளும், சிந்தி மொழிப் பள்ளிகளும் இருக்கின்றன. ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களில் மாத்திரம் 4000 மாணவர்கள் படிக்கிறார்கள். ஆனால் துர்ப்பாக்கிய வசமாக, இவர்களில் சுத்தமான கதர் கட்டுபவர்கள் 22 அல்லது 25 பேருக்கு மேலிருக்க மாட்டார்கள்; உள்நாட்டு மில்த் துணி கட்டுபவர்கள் நூற்றுக்கு 3 அல்லது 4 பேருக்கு மேல் அதிகமில்லை. பாக்கியுள்ள மாணவர்கள் அன்னியத் துணி, உள்நாட்டுத் துணி என்ற வேறுபாடின்றி, எதையும் கட்டுகிறார்கள். பெரும்பாலோர் அன்னியநாட்டுத் துணியைத்தான் கட்டுகிறார்கள் எனலாம். எங்கள் வாழ்க்கை டாம்பீகமான தென்பதைத் தாங்கள் நன்றாக அறிவீர்கள். சொந்த மொழி, சொந்தப் பண்பாடு ஆகியவற்றைவிட ஆங்கில மொழியையும் மேல்நாட்டு நாகரிகத்தையுமே எங்கள் மனம் அதிகமாக நாடுகிறது. நம் நாட்டின் வறிய நிலையை நாங்கள் நன்கு அறிந்திருந்தும்,

சேவை புரிவதோ, எளிய வாழ்க்கை நடத்துவதோ எங்களால் இயல் வில்லை. கதரையும் சுதேசிப் பொருள்களையும் உபயோகிப்பதால் நாட்டிற்கு நன்மை உண்டு என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் வெள்ளத்தில் அடிபட்டுத் துன்புற்ற மக்களின் பரிதாபம் நிறைந்த கதறுதலைக் கேட்டும் எங்கள் மனம் சற்றேனும் இளகவில்லை; இதற்கு நாங்கள் வருத்துகிறோம். எங்களைச் சுற்றிலுமுள்ள மக்கள் படும் துன்பத்தைக் கண்டு அதைத் தீர்க்க ஒன்றும் செய்யாததற்குக் காரணம் 'நமக்கென்ன?' என்ற மனப்பாங்கே யாகும். எங்கள் சங்கம் சென்ற நான்கு வருடங்களாக ஏதோ கொஞ்சம் வேலைசெய்து வருகிறது. ஆனால் நாங்கள் பெருமைகொள்ளத்தக்க முறையில் அந்தச் சங்கம் இதுவரை உருப்படியான பணியொன்றும் செய்யவில்லை.

"வரதட்சிணை வாங்குகிற கொடிய பழக்கத்தைக் குறிப்பிட வேண்டியிருப்பது எங்களுக்கு வெட்கமா யிருக்கிறது. உயர்தரக் கல்வி கற்றவர்களாய் இருந்தும் மனையர்களின் உறவினர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான ரூபாயைக் கசக்கிப் பிழிவதற்கு நாங்கள் சிறிதும் தயங்குவதில்லை. மனைவியின் மூலமாகப் பணம் பெறுவது, எங்கள் பிறப்புரிமை என்று எங்களில் சிலர் கருதுகிறார்கள். அனேகரிடம் சுயமரியாதை உணர்ச்சி இல்லவே யில்லை. உயர்தரக் கல்வி பெற்ற போதிலும், கணவனை விலைக்கு வாங்குவது அவமான மெனக் கருதி, அதைச் சினந்து ஒதுக்குகிற தைரியம், ஐந்து, ஆறு பெண்களிடம்கூட இருக்கக் காணோம். வரதட்சிணை வாங்கும் கொடுமைக்குச் சார்பாக இருப்பவர்களை விலக்கிவைக்க வேண்டும் என்று சமீபத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆயினும் இந்தக் கொடுமையினின்றும் மக்கள் இன்னும் விடுதலை யடையவில்லை.

"ஆனால் எங்களிடம் காணப்படும் கேவலமான பகுதியை மட்டும் உங்களுக்கு நாங்கள் காட்டி நிறுத்த விரும்பவில்லை. எங்கள் வாழ்க்கையில் சிறப்பான மற்றொரு பகுதியும் இருக்கிறது. நன்மை செய்வதற்கான ஆற்றலும் எங்களிடம் அபரிதமாக இருக்கிற தென்பதைத் தாங்கள் நிச்சயமாக நம்பலாம். சிந்து முழுமையும் நாங்கள் சீர்திருத்தத்தில் வழிகாட்டிகளாதல் கூடும்; ஏனென்றால் பெரியார் ஹீராநந்தர், திவான் நவால்ராய், பாய் பாலசந்திரர், திவான் தயாராம் போன்ற இலட்சிய வீரர்கள் இதே நகரில்தான், அரும்பெருஞ் செயல்களை ஆற்றினார்கள். அவர்களுடைய ஆற்றல், அவர்கள் வழிவந்த எங்களிடமும் அமைந்திருக்கிறது. நிர்மாணத் திறமைக்கும், ஒழுங்குமுறைக்கும் புகழ்பெற்றவர்கள் பலர் இந்நகரில் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். அரசியல், சமூகம், கல்வி, இலக்கியம் ஆகிய துறைகளில் தலைவர் என்று போற்றத்தக்க தன்மை வாய்ந்தோர் பலர் எங்களிடையே இன்றும் இருக்கிறார்கள். இவர்கள் நாட்டின்மீது பற்றுக்கொண்டு செய்யும் சகல முயற்சிகளிலும் முன்னணியில்நின்றிருக்கிறார்கள். ஹைதராபாத் வியாபாரிகள் உலகமெங்கும் வியாபாரம் செய்வதைக் காணலாம். இவை யனைத்தையும் எடுத்துச் சொல்லிப் பெருமைபாராட்டிக்கொள்ளுவதுஎங்கள் நோக்கமல்ல; ஆனால் எங்களிடம் வேலைசெய்யும் திறமை இருக்கிற தென்பதைக் காட்டவே

இவற்றைக் கூறுகிறோம். எங்கள் ஆற்றலை யெல்லாம் திரட்டி, நிர்மாண வேலையில் செலுத்தக்கூடுமானால், அதன் பிறகு நல்ல முன்னேற்ற மேற்படுவது சாத்தியமா யிருக்கும். தங்களுடைய கொள்கைப்படி நடவாத காரணத்தால் தங்களுடைய அன்புக்கு நாங்கள் பாத்திரமற்றவர்களாய்ப் போய்விடவில்லை என்றே எண்ணுகிறோம். ஏனெனில், தங்களுடைய அன்பின் மூலமாகத்தான் எங்கள் இதயம் விரிவடையும் என்று நாங்கள் உணர்கிறோம்.''

இந்த உபசாரப்பத்திரத்தின் கருத்தை நான் இங்கே தந்திருக்கிறேன். இதைத் தந்ததற்கு முதற் காரணம் இந்த மாணவர்கள் தாங்கள் செய்துகொடுத்த வாக்குறுதியின் படி நடக்கும்படி செய்வதற்காகும். இரண்டாவது, மற்ற மாணவர்களுக்கும் இந்த உபசாரப்பத்திரம் ஓர் எடுத்துக் காட்டாக இருக்கும் என்பதாகும். எனக்கு இந்த உபசாரப்பத்திரத்தை வாசித்துக் கொடுப்பதற்குமுன், இதில் என்ன எழுதி இருக்கிறதென்பது இந்த மாணவர்களுக்கு அனேகமாய்த் தெரியாது; ஆயினும், இதில் எழுதியவற்றை நீங்கள் ஒப்புக்கொள்ளுகிறீர்களா வென்று நான் அவர்களை வேண்டுமென்றே கேட்டபோது, எல்லோரும் ஏகோபித்து அதிலுள்ள அபிப்பிராயத்தை ஆதரித்தார்கள். அன்றியும் சென்ற காலத்தில் அசிரத்தையாகவும் செயலாற்றத் தவறியும் இருந்ததற்கெல்லாம் சேர்த்து, இப்போது உழைப்பதாகவும் வாக்களித்தார்கள். இப்படி அவர்கள் அளித்த வாக்குறுதியை, அவர்களுக்கு நான் ஞாபகமூட்டுகிறேன். அன்னியத் துணியை முற்றும் பகிஷ்காரம் செய்து, கதரையே அவர்கள் அணிய வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்; அதோடுகூட வரதட்சிணைப் பழக்கத்தையும் இனிமேல் திரும்பத் தலைகாட்ட முடியாதபடி அடியோடு ஒழித்துவிடுவார்களென்றும் நான் எதிர்பார்க்கிறேன்.

மற்ற மாணவர்களுக்கு இந்த உபசாரப்பத்திரம் ஓர் எடுத்துக்காட்டாக இருக்கட்டும். தலைவர்களைப் பற்றிய புகழுரைகள் மட்டும் அடங்கிய உபசாரப்பத்திரங்கள் ஒன்றுக்கும் உதவாதவை. அப்படிப்பட்ட புகழுரையை எதிர்பார்ப்பவர்களுக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கலாகாது. உண்மையில் அன்பும் மரியாதையும் செலுத்துகிற தலைவர்களுக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தால், அதில் தங்களுக்கு உபயோகமான குறிப்புக்கள்

அடங்கி இருக்க வேண்டும். எல்லா உபசாரப்பத்திரங்களும் இந்த முறையிலேயே இருக்க வேண்டு மென்று நான் சொல்ல வரவில்லை. ஆனல், உபசாரப்பத்திரம் என்றால் அது அந்தந்த நகருக்கோ, ஊருக்கோ பொருத்தமா யிருக்க வேண்டும். அதில் அந்த இடத்துக்கு அவசிய மான பிரசினையைக் குறிப்பிட்டிருப்பதோடு, ஏதாவது முக்கியமான விஷயத்தையும் குறிப்பாகக் காட்டியிருக்க வேண்டும். புகழுரை யொன்றே உண்மையான அன் பைக் காட்டிவிடாது. சேவையின் மூலமே அதை நாம் காட்டலாம். ஆத்ம சுத்தியே உண்மையான தொண்டு செய்வதற்கு முதற் படியாகும்; இன்றியமையாத நிபந்த னையு மாகும். ஹைதராபாத் மாணவர் தங்கள் சேவைக்கு முதற் படியாக ஆத்மசுத்தி செய்துகொள்ள மனப் பூர்வமாய் விரும்புகிறார்க ளென்பதற்கு இந்த உபசாரப் பத்திரமே அடையாளம். ஆதலால் இந்த உபசாரப்பத்தி ரத்தை நான் வரவேற்கிறேன். கடவுள் அருளால் எதிர் கால ஆக்கவேலைக்குத் தயார் செய்துகொண் டிருக்கும் இந்த வருஷத்தில், இவ்விதம் ஆத்மசுத்தி பெறுவது, விரும்பிய இலட்சியத்தை அடைவதற்குப் பெரிதும் வேண் டற்பாலதாகும்.

ஐக்கிய மாகாண மாணவர்களிடையே

"படிக்கிறபோதே உங்கள் ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்து, எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் மனத்திண்மை பெருவிட்டால் உங்கள் கல்வியினாலும், ஷேக்ஸ்பியர், வோட்ஸ்வொர்த் போன்ற கவிகளைத் திறமையாகக் கற்பதனாலும் என்ன பயன்?"

ஆக்ரா கல்லூரி, ஆக்ரா செண்ட் ஜான் கல்லூரி ஆகிய இவ்விரு கல்லூரிகளின் மாணவர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு பொதுக் கூட்டத்தில் காந்திஜிக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்து அளித்தார்கள். காந்திஜியின் இலட்சியங்களில் தங்களுக்குத் திடமான நம்பிக்கை யிருந்தும், அவற்றைச் செயலில் கொண்டுவரும் ஆற்றல் தங்களிடம் இல்லை என்று சொல்லி, மனதில் மட்டும் காந்திஜியிடம் தங்களுக்கு அனுதாபம் இருப்பதாக மாணவர்கள் தெரிவித்தார்கள். இதுவே அவர்கள் அளித்த உபசாரப் பத்திரத்தில் கண்டுள்ள விஷயம். மாணவர்கள் நம்பிக்கை யிழந்து, மனமழிந்து, ஒன்றும் செய்ய முடியவில்லை யென்று சொல்லுவதைக் கேட்டுத் துன்புற்று, காந்திஜி கீழ்வருமாறு பேசினர்:

செயலாற்றும் சக்தி தங்களிடம் யில்லை யென்று மாணவர்கள் சொல்லுவதை கேட்க நான் தயாராயில்லை. படிக்கிற போதே ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்து, எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் மனத்திண்மை பெருவிட்டால், உங்கள் கல்வியினாலும், ஷேக்ஸ்பியர், வோட்ஸ்வொர்த் போன்ற கவிகளை நீங்கள் திறமையாகக் கற்பதனாலும் என்ன பயன்? உங்களை நீங்களே வென்று, உங்கள் ஆசைகளையும் அடக்கக் கற்றுக்கொண்டுவிட்டால், இப்படி மனமழிந்து நீங்கள் பேசியிருக்க மாட்டீர்கள். இதயத்தை அர்ப்பணம் செய்த பின்னர், செயலில் ஈடுபட முடிய வில்லை என்பது சரியன்று. இதயத்தைக் கொடுப்பதென்றால், யாவற்றையுமே கொடுப்பது என்றுதான் பொருள். முதலில் அர்ப்பணம் செய்வதற்கு இதயம் வேண்டுமல்லவா? இதயத்தைப் பண்படுத்தி வளர்த்தாலன்றி, நீங்கள் அதை அர்ப்பணம் செய்வது முடியாத காரியம்.

ஆனால், இதற்குப் பதிலாக இன்று நாம் எதைக் காண்கிறோம்? ஐக்கிய மாகாண மாணவர்கள், பெற்றோரின் வற்

புறுத்தலின் பேரில் கலியாணம் செய்துகொள்ளுவதில்லை என்றும், தங்களது சொந்த விருப்பத்தினலேதான் கலியாணம் செய்துகொள்ளுகிறூர்கள் என்றும் நான் அறிகிறேன். மாணவராயுள்ள காலத்தில், பல வழிகளில் சக்தியை விரையமாக்காமல் நீங்கள் சேமித்து வைக்க வேண்டும். உங்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் மணமானவர்களென்று அறிகிறேன். மாணவனு யிருக்கும் காலத்தில் பிரம்மசரிய வாழ்க்கை வாழ்வதே சிறந்தது. உங்களுக்கு மணமாகியிருப்பினும் பாதகமில்லை; படித்துவரும் காலத்தில் ஆசைகளைக் கடுமையான முறையில் கட்டுப்படுத்தி, உண்மையான பிரம்மசரிய வாழ்க்கை நடத்தி வாருங்கள். அப்படி நடத்திவந்தால் மணமான இந்த நிலையிலும் நீங்கள் கூடிய அளவு நன்மை அடையலாம். உடல், மனம், உள்ளம் ஆகிய மூன்றையும் கட்டுப்படுத்தி, வாழ்க்கை நடத்தியதனல் விளையும் நன்மையைப் படிப்பு முடிகிற காலத்தில் உணர்வீர்கள். சாத்தியமாகாத ஒரு காரியத்தை நான் சொல்லுவதாக எந்தக் காரணம் கொண்டும் நினைத்துவிடாதீர்கள். மாணமானவர்களா யிருப்பினும், தங்களைத் தாங்களே முற்றிலும் கட்டுப்படுத்திக்கொண்டு வாழ்க்கை நடத்துபவர்கள் தங்களுக்கும் நன்மை செய்துகொள்ளுகிறூர்கள்; பொதுவாக மனித சமுதாயத்துக்கும் அவர்களால் நன்மை ஏற்படுகிறது. மணமாகாம விருப்பவர்களைச் சிற்றின்ப விஷயத்தில் ஏற்படும் ஆசையை எதிர்த்து நிற்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். இறுதியாகப் பார்த்தால், நாமோ அடிமைப்பட்டிருக்கும் மக்கள்; நம்மைப் பிணித்திருக்கும் தளையை அறுத்தெறியவே நாம் போராடிக்கொண் டிருக்கிறோம். அடிமைப் பிள்ளைகளைப் பெற்று உலகத்துக்குக் கொடுப்பது பாவம் என்பதையாவது நீங்கள் நிச்சயமாக உணர வேண்டும். சபல புத்தியை ஒழிப்பதற்கு ஏதாவது உபாயம் கூறும்படி, பற்பல கல்லூரிகளி லிருந்தும், உங்கள் கல்லூரியி லிருந்துங்கூட, பல இளைஞர்கள் எனக்கு எழுதிக் கேட்கிறூர்கள். அவர்கள் கடிதங்களைப் படிக்கிறபோது பரிதாபகரமா யிருக்கிறது. புராதனமான இந்த உபாயத்தையே பின்பற்றும்படி நான் அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். சபல புத்தி ஏற்படும்போ தெல்லாம் கடவுளுடைய உதவியை

நாடினல், ஒன்றுமே செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் அவர்களுக்கு ஒருபோதும் ஏற்படவே மாட்டாது. மாண வர்கள் தாங்களாகவே வற்புறுத்தி மணம் செய்துகொள்ளு கிற கேவலத்தைப்பற்றி எனக்குச் சொல்லிய நண்பர், கலி யாணச் சடங்குகளில் ஏராளமான பணத்தை விரையமாக் கும்படி பெற்ருேரைப் பிள்ளைகளே தூண்டுகிருர்களென் றும் குறைகூறினர். மணம் என்பது ஒரு புனிதமான சடங்கு. அதற்குச் செலவு என்பதே கூடாது. இது உங்க ளுக்குக் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். பணக்காரர் கள் விருந்திலும் களியாட்டத்திலும் பணத்தைச் செலவு செய்கிற ஆசையைக் கொஞ்சம் அடக்கிக்கொள்ளா விட்டால், ஏழைகள் அவர்களைப் பின்பற்ற ஏதுவாகும். அதனல் அவர்களும் கடனுக்குள்ளாக வேண்டிவரும். உங்களுக்குத் தைரியமிருந்தால், கலியாணம் செய்து கொள்ளும்போது அனுவசியமாய்ப் பணத்தை விரையம் செய்வதை நீங்கள் கட்டாயம் எதிர்த்துநிற்க வேண்டும்.

கலியாணச் சந்தை

"இந்தப் பழக்கம் சாதிப் பிரிவினையோடு நெருங்கிய தொடர்புடையதாயிருக்கிறது..........................இந்தத் தீமையை அடியோடு ஒழித்துவிட வேண்டுமென்றால், பெண்களோ, இளைஞர்களோ, அல்லது பெற்றோரோ சாதி என்கிற பிணிப்பைத் தகர்த்தெறிய வேண்டும்."

இந்தியா முழுவதிலும் பல்வேறு வகுப்பினருடையே வழங்கிவரும் வரதட்சிணைப் பழக்கத்தைப்பற்றி அபிப்பிராயம் சொல்லுவதற்காக **ஸ்டேட்ஸ்மன்** பத்திரிகை, சில மாதங்களுக்கு முன்னர், ஒரு ஏற்பாடு செய்திருந்தது. தலையங்கத்திலும் இதுபற்றி அந்தப் பத்திரிகை எழுதிற்று. **யங் இந்தியா**விலும் அடிக்கடி நான் இந்தக் கொடுமையான பழக்கத்தைப்பற்றி எழுதியதுண்டு. அந்தக் காலத்திலிருந்தே இந்தப் பழக்கம் எவ்வளவு கொடியதென்பதை நடைமுறையில் நான் அறிவேன். அவற்றையெல்லாம் **ஸ்டேட்ஸ்மன்** பத்திரிகையிலிருந்து எடுத்த பகுதிகள் திரும்பவும் நினைவுபடுத்தின. சிந்து மாகாணத்தில் வழக்கத்திலிருந்து வருகிற **தேதீ—லேதீ** என்ற வரதட்சிணைப் பழக்கத்தைக் கண்டித்தே நான் எழுதியிருந்தேன். பெண்களை நல்ல இடத்தில் மணம் செய்துகொடுக்க விரும்பிய பெற்றோர்களிடமிருந்து பெருந் தொகைகளைக் கசக்கிப் பிழிந்தவர்கள் பலர் சிந்து மாகாணத்தில் இருக்கிறார்கள்; இவர்கள் போதுமான அளவு கல்வி அறிவு படைத்தவர்களே யாவர்; இந்தப் பழக்கத்தை எதிர்த்து **ஸ்டேட்ஸ்மன்** பத்திரிகை பொதுவாகப் போராடியிருக்கிறது. இது இரக்கமில்லாத ஒரு பழக்கம் என்பதில் ஐயமில்லை. ஆனால் எனக்குத் தெரிந்தவரை இந்தப் பழக்கம் பாமர மக்களைப் பெரிதும் பாதிக்கவில்லை. இந்திய ஜனசமுதாயம் என்கிற கடலில் ஒரு துளிதான் என்று சொல்லக்கூடிய நடுத்தர வர்க்கத்தாரிடை மட்டுமே இந்தப் பழக்கம் காணப்படுகிறது. தீங்கு பயக்கும் சமூகக் கேடுகளைப்பற்றிப் பேசும்போது நடுத்தர வர்க்கத்தாரை மனதில் வைத்தே நாம்பேசுகிறோம். கிராமங்களில் வசிக்கிற கோடிக்கணக்கான மக்களிடையிலும் பல பழக்கங்களும் துன்பங்களும் இருக்கவே செய்கின்றன. ஆனால், அவற்றைப்பற்றியோ நமக்கு இது

வரை யாதொன்றும் தெரியாது.

இருந்தபோதிலும், வரதட்சிணை வாங்குகிற பழக்கம் இந் நாட்டில் குறைந்த எண்ணிக்கையுடைய மக்களிடையே காணப்படும் ஒரு கேடுதானே என்று அதை நாம் அலட்சியம் செய்வதற்கில்லை. இந்தப் பழக்கம் ஒழிய வேண்டும். மண மென்பது பணத்திற்காகப் பெற்றோர் தங்களுக்கிடையில் செய்துகொள்ளுகிற ஓர் ஏற்பாடு என்பது ஒழிய வேண்டும். இந்தப் பழக்கம் சாதிப் பிரிவினையோடு நெருங்கிய தொடர்புடையதா யிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு சாதியிலுள்ள சில நூறு எண்ணிக்கையுடைய இளைஞர்களுக்குள்ளும் இளம் பெண்களுக்குள்ளும் மணமகனையோ, மணமகளையோ தேர்ந்தெடுக்க நேரும் வரை இந்தப் பழக்கத்தைப்பற்றி என்னதான் சொன்னாலும் இது இருந்தே தீரும். இந்தத் தீமையை அடியோடு ஒழித்துவிட வேண்டு மென்றால், பெண்களோ, இளைஞர்களோ, அல்லது பெற்றோரோ சாதி என்கிற பிணிப்பைத் தகர்த்தெறிய வேண்டும். மேலும், கலியாணம் செய்வதற்குரிய பருவத்தையும் அதிகமாக்க வேண்டும்; அவசியம் ஏற்பட்டால், அதாவது பொருத்தமான வரன் கிடைக்காவிட்டால், மணம் செய்துகொள்ளாமலே இருக்கவும் பெண்கள் துணிய வேண்டும். இளைஞர்கள், பெண்கள் ஆகியோரின் மனப்பான்மையைப் புரட்சிகரமாக மாற்றக்கூடிய இயல்பமைந்த கல்வியைப் போதித்தால்தான் இவை யாவும் சாத்தியமாகும். துர்ப்பாக்கிய வசமாக நாம் பெறுகிற கல்வி நமது சூழ்நிலையுடன் எவ்விதத் தொடர்பும் அற்றதா யிருக்கிறது. மேலும், நமது நாட்டு இளைஞர்களின் எண்ணிக்கையில் மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய சிலரே கல்வி பெறுகிறார்கள். இதனால், நமது சூழ்நிலையில் யாதொரு மாற்றமும் ஏற்படாமல் அது அப்படியே யிருந்து வருகிறது. ஆதலால் இந்தத் தீமையைப் போக்க நம்மால் முடிந்ததை யெல்லாம் செய்ய வேண்டும். இந்தத் தீமையையும், இதைப்போன்ற இன்னும் பல தீமைகளையும் சமூகத்திலிருந்து களைந்தெறிவதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு; அதாவது, மாறிக்கொண்டிருக்கிற நாட்டின் நிலைமைகளுக்குத் தக்கவாறு கல்விமுறையை மாற்றியமைப்பதே யாகும். மணம் என்பது

மணமக்களின் எதிர்கால நன்மையைப் பெரிதும் பாதிக்கிற ஒரு காரியம். அவ்வளவு முக்கியமான ஒரு விஷயத்தில், தீய பழக்கம் புகுந்திருப்பதை வெளிப்படையாகக் கண்ட பிறகுங்கூட, கல்லூரிவரை சென்று கல்விகற்ற பல இளைஞர்களும் பெண்களும் அதை எதிர்த்துநிற்க வல்லமை யற்றவர்களாகவோ, விருப்ப மற்றவர்களாகவோ இருப்பது ஆச்சரியமா யிருக்கிறது. தங்களை ஒருவரும் கலியாணம் செய்துகொள்ளவில்லை என்பதற்காக, படித்த பெண்கள் ஏன் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்? நல்லொழுக்கம் என்ற எண்ணத்திற்கே அருவருப்பை யளிக்கும் ஒரு தீய பழக்கத்தை, ஒருசிறிதும் பரிவுகாட்டத்தகாத ஒரு தீமையை, எதிர்த்து நிற்கவல்ல துணிவு ஏற்படவில்லை என்றால், இந்தப் பெண்கள் கற்ற கல்வியினால் என்ன பயன்? இதற்கு விடை தெளிவாகத் தெரிகிறது. இந்தக் கல்விமுறையிலே ஏதோ வொரு அடிப்படையான குற்றம் இருக்கிறது. சமூகக் கேடுகளையும், மற்றக் கொடுமைகளையும் எதிர்த்துநின்று போராடுவதற்கான வல்லமையை இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் அளிக்க இக் கல்விமுறை தவறிவிட்டது. வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் எழும் பிரசினைகளைச் சரியானபடி தீர்ப்பதற்கு மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் சக்தி ஏற்படும் வகையில், அவர்களிடம் மறைந்துகிடக்கிற பண்புகளையெல்லாம் வெளிப்பட்டு விளங்கச் செய்யவல்ல கல்விமுறை தான் பயனுடைய தாகும்.

தவிர்க்கக் கூடிய துன்பம்

"சாதி, மாகாணம் என்ற இரு தடங்கல்களை உடைத்து எறிய வேண்டும். இந்தியா ஒரே நாடு, அதைப் பிரிக்க முடியாதென்பது உண்மையானால், சமபந்தி போஜனம் கூடாது, கலப்பு மணம் கூடாது என்று செயற்கையாகப் பிரித்து வைத்துள்ள கணக்கற்ற சிறிய சமூகத் தொகுதிகள் நிச்சயமாக இருத்தலாகாது."

ஒருவர் தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப்பற்றி எழுதிய நீண்ட கடிதத்திலிருந்து, கீழ்க்கண்டவற்றை மட்டும் இங்கே தருகிறேன் :

"நான் ஒரு பள்ளிக்கூட ஆசிரியன். எனக்கு வயது 67. 46 ஆண்டுகள் உபாத்தியாயராக இருந்திருக்கிறேன். வங்காளத்தில் ஒரு கௌரவமான ஏழைக் காயஸ்த குடும்பத்தில் பிறந்தேன். எங்கள் குடும்பம் முன்னமே நல்ல நிலைமையிலிருந்து, இப்போது ஏழ்மை நிலைக்கு வந்துவிட்டது. கடவுள் கிருபையால் (?) எனக்கு ஏழு பெண்களும் இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். சென்ற அக்டோபர் மாதம் தனது இருபதாவது வயதில் எனது மூத்த மகன் இறந்து போனான். பெற்றோராகிய எங்களை ஒரு உதவியுமின்றிப் பரிதபிக்க விட்டுவிட்டான். அவன் நல்ல நிலைமைக்கு வரக்கூடியவன்; என் வாழ்க்கைக்கு அவனே பற்றுக்கோடாயிருப்பான் என்று எண்ணினேன். பெண்கள் ஏழு பேரில் ஐந்து பேரை ஏற்கனவே கலியாணம் செய்துகொடுத்துவிட்டேன். 18, 16 வயதுடைய என் ஆறுவது, ஏழாவது பெண்களுக்கு இனித்தான் மணமாக வேண்டும். எனது இளைய புதல்வன் பதினொரு வயதுடைய சிறுவன். எனக்குச் சம்பளம் 60 ரூபாய். இது குடும்பச் செலவுக்கே போதவில்லை. பணமெதுவும் மீத்துவைக்காமையால் என்னிடம் பணமேயில்லை. அதற்குப் பதிலாகக் கடன் இருக்கிறது. எனது ஆறுவது பெண்ணுக்குக் கலியாணம் நிச்சயமாகி யிருக்கிறது. வரதட்சிணை ரூ.300-ம் நகை முதலிய செலவுகளுக்கு 900 ரூபாய்க்குக் குறையாமலும் கலியாணச் செலவு பிடிக்கும். கனடா சன் லைப் அஸ்யூரன்ஸ் கம்பெனியில் 2000 ரூபாய்க்கு ஆயுளை இன்ஸ்யூர் பண்ணி யிருக்கிறேன். அந்தப் பாலிசி 1914 ம் ஆண்டில் ஆரம்பமாயிற்று. கம்பெனியார் 400 ரூபாய் மட்டும் எனக்குக் கடன்தர இசைகிறார்கள். இது எனக்கு வேண்டிய தொகையில் பாதியே யாகும். இன்னொரு பாதித் தொகையைப் பெற வழி தெரியாது தவிக்கின்றேன். இதைத் தாங்கள் தந்து இந்த ஏழைக்கு உதவி புரியலாகாதா?"

இப்படி எத்தனையோ கடிதங்கள் வருகின்றன. அவற்றில் இதுவும் ஒன்று. பெரும்பான்மையான கடிதங்கள் ஹிந்தியில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆங்கிலக் கல்வி

முறையால் பெண்களுடைய பெற்றோருக்கு எவ்வித நன்மையும் இல்லை. சில இடங்களில் தீமைதான் ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலம் படித்த தந்தை, ஆங்கிலக் கல்வி கற்ற தம் பெண்ணுக்கு, பொருத்தமான மணமகனைத் தேடும் போது, அந்த மணமகனுக்குள்ள விலை கலியாணச் சந்தையிலே அதிகமாக ஏறிவிடுகிறது.

இந்த வங்காளித் தந்தைக்கு, அவருக்குத் தேவையான பணத்தைக் கடனாகவோ, இனமாகவோ கொடுப்பது சிறந்த உதவியாகாது. ஆனால், மணமகனை விலைக்கு வாங்க மறுத்து, பணத்தை எதிர்பாராது அவளிடம் அன்புகொண்டு மணம் செய்துகொள்ள விரும்புகிற மாப்பிள்ளையைத் தாமே மகளுக்காக அவர் தேர்ந்தெடுக்க வேண்டும். அல்லது தம் மகளைத் தேர்ந்தெடுக்கச் செய்ய வேண்டும். இதற்கு வேண்டிய திடத்தை அவரிடம் உண்டு பண்ணுவதே நாம் அவருக்குச் செய்யத்தக்க சிறந்த உதவி. இதனால் மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத் தக்க வசதி தானாகவே விரிவடைகிறது.

சாதி, மாகாணம் என்ற இரு தடங்கல்களை உடைத்து எறிய வேண்டும். இந்தியா ஒரே நாடு, அதைப் பிரிக்க முடியாதென்பது உண்மையானால், சமபந்தி போஜனம் கூடாது, கலப்பு மணம் கூடாது என்று செயற்கையாகப் பிரித்து வைத்துள்ள கணக்கற்ற சிறிய சமூகத் தொகுதிகள் நிச்சயமாக இருத்தலாகாது.

இந்தக் கொடிய பழக்கம் மதத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. தனிப்பட்ட மனிதர்கள் இச் சீர்திருத்தங்களைத் தொடங்குவது சரியல்லவென்று வாதாடல் ஆகாது. சீர்திருத்தத்தைச் சமூகம் ஏற்றுக்கொள்ளும்வரை பொறுத்திருக்க வேணும் என்பதும் சரியன்று. மனிதத் தன்மையற்ற பழக்க வழக்கங்களை அஞ்சாத சில தனிமனிதர்கள் ஒழிக்க முயன்றதனாலேயே சீர்திருத்தங்கள் ஏற்பட்டனவேயன்றி, வேறெந்த வழியிலும் இதுவரை எந்தச் சீர்திருத்தமும் ஏற்பட்டதில்லை. மணம் என்பது ஒரு மதச் சடங்கு; இதில் ஒருசிறிதும் ஐயமில்லை. மேற்சொன்ன உபாத்தியாயர் பெண்களின் விவாகத்தைச் சந்தையில் விற்று வாங்கக்கூடிய வியாபார முறையல்லவென்று கருதிவிட்டால், அவருக்கோ அவரு

டைய பெண்களுக்கோ இதனல் என்ன கஷ்டம் நேருதல் கூடும். ஆதலால் பணத்தைக் கடனகவோ கெஞ்சியோ யாரிடமிருந்தாவது பெறுவது என்ற எண்ணத்தை அவர் விட்டுவிட வேண்டும். தன் மகளோடு கலந்துபேசி எந்தச் சாதியைச் சேர்ந்தவனயினுஞ்சரி, எந்த மாகாணத்தைச் சேர்ந்தனயினும் சரி பொருத்தமான ஒரு மணமகனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தம் ஆயுள் இன்ஸூரன்ஸ் பாலிஸியில் கிடைக்கக்கூடிய 400 ரூபாயையும் அவர் செலவு செய்யாது பத்திரமாக வைத்துக்கொள்ளட்டும். இதுவே அவருக்கு நான் சொல்லக்கூடிய யோசனை.

ஒரு பெண்ணுக்கு வேண்டுவது என்ன?

"பெண்ணை மணப்பதற்காக, பெண்ணின் பெற்றோரைக் கசக்கிப் பணம் வாங்குகிற இழிவான குணத்தைக் கண்டு, மணத்தையே நிறுத்திவிடத் துணியாமலிருப்பது நமது துர்ப்பாக்கியமேயாகும். ஆங்கிலக் கல்லூரிப் படிப்பிற்கு முற்றிலும் செயற்கையான மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு படிப்பே எத்தனையோ இதர குற்றங்களை மறைத்துவிடுகிறது."

ஒரு பெண் எழுதுகிறாள் :

"'தவிர்க்கக்கூடிய துன்பம்' என்று தாங்கள் எழுதியுள்ள கட்டுரையில் ஒரு குறை இருக்கிறது. மணம் செய்துகொள்ளும்படி பெண்களைப் பெற்றோர் ஏன் வற்புறுத்த வேண்டும்? அதன் பொருட்டு இல்லாத தொல்லைகளையெல்லாம் அவர்கள் ஏன் அனுபவிக்க வேண்டும்? வாழ்க்கைச் செலவை சுதந்திரமாகத் தாங்களே சம்பாதித்துக்கொள்ளக் கூடிய விதத்தில் பெற்றோர் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள்; அதே போல, பெண்களையும் படிக்கவைத்தால், பெண்களுக்கு மணமகனைத் தேடிப்பிடிக்க வேண்டிய தொல்லை பெற்றோருக்கு இராதல்லவா? அறிவை, கூடியஅளவு அபிவிருத்தி செய்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டு, கௌரவமான முறையில் வாழ்க்கைக்கு வேண்டிய வருமானத்தைப் பெண்கள் தாங்களே பெற முடிகிறபோது, மணம் செய்துகொள்ளக்கூடிய விருப்பம் ஏற்படும் சமயத்தில், பொருத்தமான மணமகனைத் தேர்ந்தெடுப்பதில் பெண்களுக்கு ஒரு கஷ்டமும் இராது. இதுதான் என் சொந்த அனுபவம். இதனால், உயர்தரக் கல்வி என்னும் கல்வியைப் பெண்களுக்கும் அளிக்க வேண்டுமென்று நான் சொல்லவரவில்லை. ஆயிரக்கணக்கான பெண்கள் உயர்தரக் கல்விபெற முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். உபயோகமான அறிவைப் பெறுதற்குப் பெண்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். பெற்றோரையோ, தங்களுக்கு வரப்போகிற நாயகரையோ நம்பியிராமல், உலகத்திலே நம்மால் வாழமுடியும் என்ற நம்பிக்கை ஏற்படும் முறையில் பெண்களுக்கு ஒரு தொழிலைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். கணவர்களால் ஏற்கனவே கைவிடப்பட்ட பெண்கள் சிலர், இப்போது தங்கள் தங்கள் கணவர்களுடன் கௌரவமான முறையில் வாழ்ந்து வருவதை நான் அறிவேன். ஏனெனில், நாயகன் கைவிட்டுச் சென்ற காலத்தில், இப் பெண்கள் தங்களுடைய வாழ்க்கைச் செலவுக்குப் பிறர் தயவை எதிர்பாராமல், தன்னம்பிக்கையோடிருக்கத்தக்க பொதுப்படையான ஒரு பயிற்சி பெற்றிருந்தார்கள். கலியாணம் செய்யக்கூடிய பருவத்திலுள்ள பெண்களையுடைய பெற்றோரின் கஷ்டங்களைப்பற்றிச் சிந்தனை செய்யும்போது இந்தக் கருத்தையும் தாங்கள் வற்புறுத்திச் சொன்னால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன்."

இப் பெண்மணி கூறியிருக்கும் விஷயங்களை நான் மனப்பூர்வமாய் ஆமோதிக்கிறேன். தந்தைக்கு ஏற்படுகிற துன்பம் தன் மகள் அசடு என்பதனாலல்ல; தாமும் ஒரு வேளை தம் மகளுமே தங்கள் குறுகிய சாதிக்குள்ளேயே மாப்பிள்ளையைத் தேடிப்பிடிக்க வேண்டும் என்பதனால் தான் இவர்களுக்குத் துன்பம் நேருகிறது. இப்படித் துன்பமடைகிற தந்தையைப்பற்றி மட்டுமே நான் இங்கே பேசவேண்டி யிருந்தது. பெண் படித்து 'நாகரிகம் பெற்றிருப்பதே' ஒரு தடையா யிருக்கிறது. படியாதவளாயிருந்தால், எந்த இளைஞனையும் மணக்கச் சம்மதிப்பாள். படித்து நாகரிகம் பெற்றவள் இயல்பாகவே தன்னைப்போல் 'நாகரிகம் பெற்ற' மாப்பிள்ளையையே விரும்புகிறாள். பெண்ணை மணப்பதற்காகப் பெண்களின் பெற்றோரிடமிருந்து கசக்கிப் பணம் வாங்குகிற இழிவான குணம் நம்மிடையே இருப்பது நமது துர்ப்பாக்கியமே யாகும். ஆங்கிலக் கல்லூரிப் படிப்புக்கு முற்றிலும் செயற்கையான மதிப்புக் கொடுக்கப்பட் டிருப்பதனால் அது எத்தனையோ இதர குற்றங்களை மறைந்துவிடுகிறது. 'படித்து நாகரிகம் பெறுவது' என்றால் கலியாணம் செய்துகொள்ளுவதற்குப் பெண்ணின் பெற்றோரிடமிருந்து கசக்கிப் பணம் வாங்குவது என்று இளைஞர்களிடையே, பணம் வாங்கிக் கலியாணம் செய்துகொள்ளுகிற வர்க்கத்தாரிடையே, இப்போது ஒரு அர்த்தம் இருந்து வருகிறது. இதைவிட நேர்மையான பொருள் அதற்கு இருக்குமானால், பெண்களுக்குப் பொருத்தமான மணமகனைத் தேடுகிற கஷ்டத்தை போக்கிவிடலாம்; முற்றிலும் போக்க முடியாவிட்டாலும், கூடிய அளவு குறைக்கவாவது செய்யலாம். ஆதலால் பெண்களின் பெற்றோர் இக் கடித மெழுதிய பெண் சொன்ன கருத்தைக் கவனிக்க வேண்டுகிறேன். அன்றியும் மிக்க கேடான சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிவது அவசிய மென்றும் வற்புறுத்திக் கூறுகிறேன். சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிவதனால் மணமக்கள் கிடைக்கக்கூடிய சமூகத் தொகுதி விரியும். எனவே, கசக்கிப் பணம் வாங்குவதும் அடியோடு நின்றேபோகும்.

மாணவருக்கு அவமானம்

"ஆனால், தற்காலத்துப் பெண், பல இளைஞர்களோடு வேடிக்கையாகப் பேசிப் பழக விரும்புகிறாள் என்றே நான் எண்ணுகிறேன். அவள் தொந்திரவும் ஆபத்தும் வரட்டுமே என்றுதான் எண்ணுகிறாள்.........தற்காலத்துப் பெண்ணோ, மழை, வெயில், காற்று இவற்றிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக ஆடை அணியவில்லை; பார்ப்போரின் கவனத்தைத் தன் வசம் ஈர்ப்பதற்காகவே அவள் ஆடை அணிந்துகொள்ளுகிறாள்.

பாஞ்சாலத்தில் கல்லூரியில் படிக்கிற ஒரு பெண்ணிடமிருந்து மிகவும் பரிதாபகரமான கடிதம் ஒன்று வந்திருக்கிறது. சுமார் இரண்டு மாதங்களாக எனது கடிதக் கட்டில் அந்தக் கடிதம் இருந்துவருகிறது. நேரம் கிடைக்க வில்லை யென்று சொல்லுவது, இப் பெண் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லாது தப்ப முயல்வதற்கான போலிச் சமாதான மாகும். பதில் சொல்லத் தெரிந்திருந்தும், எப்படியோ இதுவரை சொல்லாது இருந்துவிட்டேன். இதற்கிடையில், மிக்க அனுபவம்வாய்ந்த மற்றொரு சகோதரியிடமிருந்து வேறு ஒரு கடிதம் எனக்கு வந்தது. இந்தக் கல்லூரிப் பெண்ணின் உண்மையான கஷ்டத்தைப் பற்றிக் கவனிப்பது தவிர்க்க முடியாத ஒரு கடமை என்பதை உணர்ந்தேன். கடிதம், நல்ல சுத்தமான ஹிந்துஸ்தானியில் எழுதப்பட்டிருக்கிறது. அவளுடைய ஆழ்ந்த உணர்ச்சியை அந்தக் கடிதம் அப்படியே பிரதிபலித்துக்காட்டுகிறது. அதில் உள்ள உணர்ச்சி வேகத்தை ஆங்கிலத்தில் கொண்டுவர கூடியவரை முயல்கிறேன்; கடிதத்தின் ஒரு பகுதியை ஆங்கிலத்தில் கீழே தருகிறேன் :

"சிறு பெண்களும், வயதுவந்த பெண்களும் பெரும்பாலும் தனியே போக எண்ணுவ தில்லை. நகரத்தின் ஒரு பகுதியி லிருந்து இன்னொரு பகுதிக்கோ, அல்லது ஒரு நகரிலிருந்து இன்னொரு நகருக்கோ, தனியாகப் போகும்படி எப்படியோ சில சமயங்களில் நேர்ந்துவிடுகிறது. இப்படி அவர்கள் தனியே செல்வதைக் கண்டால், கெட்ட எண்ணமுடைய சிலர், அவர்களைத் தொல்லைப்படுத்துகிறார்கள். பக்கத்தில் போகும்போது ஒழுங்கற்ற, பேசத்தகாத சொற்களைச் சொல்லுகிறார்கள். பயம் என்பது ஒன்றிருந்து அவர்களைத் தடுக்காவிட்டால், அதற்குமேல் கேவலமாகவும் நடக்க அவர்கள் தயங்க மாட்டார்கள். இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் அஹிம்சை என்ன செய்தல் கூடும் என்பதை அறிய விரும்புகி

றேன். ஹிம்சையை உபயோகிப்ப தென்பது இயல்பாக இருக்கவே இருக்கிறது. இளம் பெண்ணுக்கோ, அல்லது வயதுவந்த பெண்ணுக்கோ போதுமான அளவு தைரியமிருந்தால், தன்னுடைய சாமர்த்தியத்தால் அந்தத் துஷ்டனுக்கு நல்ல பாடம் கற்பிப்பாள். வேறொன்றும் செய்ய முடியாவிட்டாலும் சுற்றியிருக்கும் ஜனங்களுடைய கவனத்தை இழுக்கும் படியான முறையிலாவது ஒரு சண்டையைக் கிளப்பி, அவனுக்குச் சவுக்கடி வாங்கிக் கொடுத்தல் கூடும். ஆனால், இப்படி நடத்துவதனால் ஏற்படுகிற பயன் இந்தக் கேவலமான துன்பத்தை நிரந்தரமாகப் போக்குவதா யிராது. அப்போதைக்கு நிறுத்திவைப்பதாகவே இருக்கும். தவறாக நடந்துகொள்ளுகிற ஆடவன் நமக்குத் தெரிந்தவனா யிருந்தால், நியாயத்துக்குச் செவி சாய்ப்பான்; பணிவுக்கும் அன்புக்கும் கட்டுப்படுவான். ஆனால், சைக்கிளில் போகிறபோதே, ஆண் துணையின்றித் தனியாகப் போகிற பெண்களைப் பார்த்துக் கெட்ட வார்த்தை உபயோகிக்கிற ஒருவனை நாம் என்ன செய்வது? அவனிடம் நியாயத்தை எடுத்துச் சொல்ல நமக்குச் சந்தர்ப்பம் இல்லை. திரும்பவும் அவனைச் சந்திப்பதும் மில்லை. அப்படிச் சந்தித்தாலும், இனம் தெரிந்துகொள்ள முடியாது போகலாம். அவனிருக்கிற இடமும் தெரியாது. இந்த நிலையில், பாவம், பெண்கள் என்ன செய்வார்கள்?

"உதாரணமாக, சென்ற இரவு, 1938-ம் வருடம் அக்டோபர் மாதம் 26-ம் தேதி யன்று, எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லுகிறேன். இரவு ஏழரை மணி யிருக்கும். ஒரு விசேஷ அலுவலை முன்னிட்டு நானும் என் தோழியுமாகப் போய்க்கொண் டிருந்தோம். துணைவருவதற்கு ஆடவர் யாரு மில்லை. சென்ற வேலையோ தள்ளிப்போட முடியாதது. நாங்கள் சென்ற பாதையில் ஒரு சீக்கிய இளைஞன் சைக்கிளில் சென்றுகொண் டிருந்தான். அவன் சொல்லுவது காதில் விழக்கூடிய தூரத்தில் நாங்கள் வரும்வரை, வாய்க்குள் ஏதோ முனகிக்கொண்டே வந்தான். எங்களைக் குறிப்பிட்டுத்தான் அவன் இவ்வாறு முனங்குகிறான் என்பது தெரிந்ததும் எங்களுக்கு மிகவும் வேதனையாய் இருந்தது; எங்கள் மன அமைதியை அது குலைத்துவிட்டது. சாலையில் கூட்டம் இல்லை. நாங்கள் கொஞ்ச தூரம் சென்றதும், அச் சைக்கிளோட்டி திரும்பினான். நாங்கள் அவனை உடனே இனம் தெரிந்துகொண்டோம். எங்கள் பக்கமாக வந்து சைக்கிளைத் திருப்பினான். கீழே இறங்கத்தான் அவன் எங்கள் பக்கம் வந்தானா, அல்லது அப்படியே செல்லதான் எண்ணினானா என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம். அபாயகரமான நிலையில் இருப்பதாக உணர்ந்தோம். எங்களது உடல் வலிமையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. எதிர்த்துப் போராட முடியாது என்று எண்ணினோம். மற்ற பெண்களைவிட, நான் பலவீனமானவள். ஆனால், என் கையில் ஒரு பெரிய புத்தகம் இருந்தது. எப்படியோ தெரியவில்லை, எனக்குத் திடீரென்று தைரியம் பிறந்தது. கையிலிருந்த அந்தக் கனத்த புத்தகத்தை அந்தச் சைக்கிளோட்டியைப் பார்த்து எறிந்துவிட்டு, "அடே, இந்த விளையாட்டுக்களைத் திரும்பவும் செய்ய

உனக்குத் தைரியமிருக்கிறதா?'' என்று உரக்கக் கத்தினேன். சைக்கிள் சாய்ந்துவிடாமல் கஷ்டத்தோடு சமாளித்துக்கொண்டு, வேகமாக, எங்கள் முன்னிருந்து சைக்கிளை ஓட்டிக்கொண்டு அவன் போய்விட்டான். அப்போது அவனுடைய சைக்கிள்மீது புத்தகத்தை எறிந்திராவிட்டால், வழி முழுதும் கெட்ட வார்த்தைகளைச் சொல்லி, அவன் எங்களைத் தொந்திரவு செய்திருப்பான். இது சாதாரணமான ஒருவேளை, முக்கிய மில்லாத, சம்பவமா யிருக்கலாம். ஆனால், தாங்கள் லாகூருக்கு வந்து, துர்ப்பாக்கியம் பிடித்த பெண்களாகிய நாங்கள் படும் கஷ்டத்தை ஒரு தரம் கேட்டுவிட்டுப் போனால் நன்று யிருக்கும். முதன்முதலாக, மேலே சொன்னதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஒரு பெண் அஹிம்சையைக் கையாண்டு, தன்னை எப்படிக் காப்பாற்றிக்கொள்ளலா மென்பதை எனக்குச் சொல்லுங்கள். இரண்டாவதாக, பெண்ணினத்தை அவமா னப்படுத்தும் வெறுக்கத்தகுந்த பழக்கம் உடைய இளைஞர்களை அவ் விதம் செய்யாது தடுக்க வழி என்ன? பெண்மக்களுக்கு மரியாதை செய்ய வேண்டும் என்று, இனி ஒரு தலைமுறையினருக்கு இளம்பருவத் திலிருந்தே கற்பித்தாகிறவரை, நாங்கள் காத்திருந்து கஷ்டம் அனுபவிக் கத்தான் வேண்டுமா? அப்படித் தாங்கள் சொல்ல மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். இக் கேட்டை நீக்க அரசாங்கத்தாருக்கு, ஒன்று, முடிய வில்லை யென்று சொல்ல வேண்டும்; அல்லது பிரியமில்லை யென்று சொல்ல வேண்டும். இந்த மாதிரிப் பிரசினைகளைக் கவனிப்பதற்கோ, பெரிய தலைவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. தவறாக நடந்துகொண்ட இளைஞனை யாராவது ஒரு பெண் தைரியமாகத் தண்டனைக்கு உள் ளாக்கிவிட்டால் 'சபாஷ் இப்படித்தான் எல்லாப் பெண்களும் நடந்து கொள்ள வேண்டும்' என்று சொல்லுவார்கள். இவ்விதம் மாணவர்கள் கேவலமாக நடந்துகொள்ளுவதைக் கண்டித்து யாராவது ஒருதலைவர் சில சமயங்களில் சரமாரியாகப் பிரசங்கமாரி பொழிவதைக் காண்கிறோம். ஆனால், இந்தக் கடுமையான பிரசினையைத் தீர்ப்பதற்கோ யாருமே தொடர்ந்து முயன்றதாகத் தெரியவில்லை. தீபாவளி, இன்னும் இது போன்ற விடுமுறை நாட்களில் பெண்கள் வெளிக்கிளம்பக் கூடாது; தீபாலங்காரத்தைப் பார்ப்பதற்காகக்கூட வெளியே செல்லுதல் கூடாது என்று எச்சரித்துப் பத்திரிகைகளில் பத்தி பத்தியாய் எழுதுகிறார்கள் என்பதை யறிய,தாங்கள் ஆச்சரியமடைவதோடு துன்பமும் அடை வீர்கள். இப்பகுதியில் வசிக்கும் பெண்களாகிய நாங்கள் என்னென்ன கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகிறோம் என்பதைக் காட்ட இந்த ஒரு உண்மையே போதுமானது. இத்தகைய எச்சரிக்கைகளை எழுத வேண்டிய திருக்கிறதே, படிக்க வேண்டியதிருக்கிறதே என்று நாணி, எழுதியவர்களோ, படிப்பவர்களோ வெட்கப்படுவதாகத் தெரியவில்லை!''

இந்தக் கடிதத்தைப் படிக்கும்படி இன்னொரு பாஞ்சாலப் பெண்ணிடம் கொடுத்தேன். கல்லூரியில் படித்த காலத்தில், தானும் இம் மாதிரியான கஷ்டங் களுக்கு உள்ளானதாக அவளும் சொன்னாள். இப் பெண்

குறிப்பிடும் விஷயம் பெரும்பாலான பெண்களுக்குப் பொதுப்படையான ஒரு அனுபவம் என்றும் தெரிவித்தாள்.

நல்ல அனுபவம் வாய்ந்த மற்ெறாரு பெண்மணியிடமிருந்து வந்த இன்னொரு கடிதம், லட்சுமணபுரியில் அவளுடைய தோழிகள் பட்டபாட்டைப்பற்றிக் கூறுகிறது. சினிமாக் கொட்டகையில் இளம் பெண்களுக்குப் பின் வரிசையில் உட்கார்ந்திருந்த இளைஞர்கள், பேசத் தகாத - அதை எனக்கு வேறுவிதமாகச் சொல்லத் தெரியவில்லை - பாஷையை யெல்லாம் உபயோகித்து, அவர்களைத் துன்பப்படுத்தினர்களாம். கேவலமான முறையில் கேலி செய்து, கேவலமாக வேறு நடந்துகொண்டார்களாம். அவற்றை யெல்லாம்பற்றி அந்தப் பெண் எனக்கு விரிவாக எழுதி இருக்கிருள். அவற்றை நான் இங்கு தருவது ஒழுங்கல்ல வென்றே விட்டுவிட்டேன்.

தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உடனடியாக ஏற்பட்ட தருணத்தில், தனக்குப் பலமில்லை யென்று கருதிய அந்தப் பெண், தன்னைப் பாதுகாக்கச் செய்த உபாயம் - அதாவது சைக்கிளோட்டியின் மீது புத்தகத்தை வீசி எறிந்தது - மிகவும் சரியானதே; அதுவே பழைய தற்காப்பு உபாயமும் ஆகும். பலத்தைக் கையாள விரும்புகிறவர்கள் அதைப் பயன்படுத்தத்தக்க வகையில் கையாள விரும்பினல் உடல் வலிமைமிக்க எதிரியைக்கூட வென்றுவிடலாம்; இதற்கு, பலவீனம் ஒரு தடையாவ தில்லை என்ற உண்மையை நான் பல தடவை இந்தப் பத்திரிகையில் எழுதி இருக்கிறேன். உடல் வலிமையை உபயோகிப்பதற்குத் தற்காலத்தில் பல வகையான கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதை அறிவோம். இந்தக் கருவிகளின் துணைகொண்டு அறிவு நுணுக்கமுள்ள சின்னஞ்சிறு சிறுமிகூடப் பலரைக் கொல்லவும் அழிக்கவும் கூடும். எனக்குக் கடிதம் எழுதியுள்ள பெண் குறிப்பிட்டுள்ளது போன்ற சந்தர்ப்பங்களில், தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளும் வகையில், பெண்களுக்கு இப்போது பயிற்சி யளிக்கப்பட்டு வருகிறது. இப்படிப் பயிற்சி யளிப்பதை மக்கள் நாகரிகமான தென்று கருதுவதால், பயிற்யளிப்பது

வளர்ச்சி யடைந்துகொண்டு வருகிறது. தன் கையிலிருந்த புத்தகத்தை, சிறிது நேரத்திற்குத் தன் தற்காப்பு ஆயுதமாக்கி, அதைப் பயன் தரத்தக்க முறையில் பயன் படுத்தியபோதிலும், வளர்ந்து வருகிற ஒரு கேட்டைப் போக்க இந்த உபாயம் போதா தென்று அந்தப் பெண்ணே உணர்ந்திருக்கிறாள். ஆண்கள் முரட்டுத்தன மாகக் கேலி செய்தால் அதற்காகப் பெண்கள் மன அமைதியை இழந்துவிடக் கூடாது. அலட்சியமாகவும் இருக்கலாகாது. பொதுஜனங்களுக்குத் தெரியும் வண் ணம் இம்மாதிரியான நிகழ்ச்சிகளைப் பத்திரிகைகளில் வெளியிட வேண்டும். அப்படிக் கேவலமாக நடந்து கொள்ளுபவர்களின் பெயர்கள் தெரிந்துவிட்டால், அவற்றைப் பத்திரிகைகளின் மூலம் தெரியப்படுத்த வேண்டும். இத்தகைய கேட்டை வெளிப்படுத்துவதில் பொய்யான அடக்கம் கூடவே கூடாது. தவறான ஒழுக் கம் உடையவர்களைத் தண்டிப்பதற்குப் பொது ஜன அபிப்பிராயத்தைப்போல் சிறந்த கருவி வேறு எதுவும் இல்லை. இம்மாதிரியான விஷயங்களில் பொதுஜனங் களுக்கு எவ்வித சிரத்தையும் இல்லை என்று இப் பெண் சொல்லுகிறாள். இது உண்மையே. இதுபற்றி பொதுஜனங்களை மட்டும் குறைகூறுவது தவறு. முரட்டுத் தனமாகப் பிறர் நடந்துகொண்ட சம்பவங்களைப் பொது ஜனங்களுக்கு அறிவிப்பது அவசியமாகும். நடந்த திருட் டைப்பற்றி அறிவிக்காமலும், முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுபவனைப்பற்றி அறிவிக்காமலும் விட்டுவிட்டால், அவனைத் தண்டிப்பதும் இயலாத காரியமாகிவிடும். தீய ஒழுக்கமும், கொலைக்கு ஒப்பான கொடிய நிகழ்ச்சிகளும் பொதுவாக இருட்டை நாடியே சுற்றித் திரிகின்றன. அவற்றின்மீது ஒளி பட்டவுடனேயே அவை இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடி விடுகின்றன.

ஆனால், தற்காலத்துப் பெண் பல இளைஞர்களோடு வேடிக்கையாகப் பேசிப் பழகுவதில் அதிகம் விருப்பம் கொள்ளுகிறாள். தொந்திரவும் ஆபத்தும் தனக்கு நேரிடு வதை அவள் பெரிதும் எதிர்பார்க்கிறாள். எனக்குக் கடிதம் எழுதியுள்ள இந்தப் பெண்ணை வழக்கத்திற்கு மாறான ரகத்தைச் சேர்ந்தவளா யிருக்கிறாள். மழை,

வெய்யில், காற்று இவற்றிலிருந்து பாதுகாத்துகொள்ளும் பொருட்டு, தற்காலத்துப் பெண்கள் உடை அணிவதில்லை பார்ப்போரின் கவனத்தைத் தன்வசம் ஈர்ப்பதற்காகவே அவர்கள் ஆடை அணிகிறார்கள். முகத்தில் வர்ணமடித்தால்போல மாவைப் பூசிக்கொண்டும், மிக்க ஆடம்பரமான முறையில் தம்மை அலங்கரித்துக்கொண்டும் தமக்கு இயல்பாயுள்ள அழகைப் பெருக்கிக்கொள்ளுகிறார்கள். இம்மாதிரிப் பெண்களுக்குஅல்ல நான்சொன்ன அஹிம்சா வழி. நம்மிடையே அஹிம்சாஉணர்ச்சியை வளர்ப்பதற்குத் திட்டமான சில நியதிகள் உண்டு என்பதை நான் அடிக்கடி இந்தப் பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறேன். இது ஒரு கடுமையான முயற்சியே. எண்ணம், வாழ்க்கை இரண்டிலுமே இந்த முயற்சி புரட்சியை உண்டாக்கிவிடுகிறது. எனக்குக் கடிதம் எழுதிய இப் பெண்ணும், இன்னும் இவளைப்போன்ற மனப்பாங்கு படைத்தவேறு பெண்களும் திட்டமான முறையில் தங்கள் வாழ்க்கையைப் புரட்சிகரமாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும்; அப்படி மாற்றியமைத்துக்கொண்டால் ,சந்திக்க நேரும் காலத்து இளைஞர்கள் தங்களுக்கு மரியாதை செலுத்தவும், தங்கள் முன்னிலையில் நேரிய முறையில் பழகவும் கற்றுக்கொள்ளுவார்கள் என்பதை அவர்கள் விரைவிலே காணலாம். ஒருவேளை தங்கள் கற்புக்கே ஆபத்து நேருவதாய் இருப்பின் - அவ்விதம் நேருவதைப் பெண்கள் அறிவர் - மனிதனிடமுள்ள மிருகசக்திக்கு இணங்குவதைவிட, அதை எதிர்த்து நின்று உயிரைவிடுவதற்குரிய தைரியத்தைப் பெண்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். போராடுவதற்கே முடியாதபடி கால்களைக் கட்டி, வாயில் துணிவைத்து அடைத்துவிட்டால், அந்த நிலையில்கூட எந்தப் பெண்களும் நான் எண்ணுகிறபடி அவ்வளவு எளிதாகச் சாக முடியாது என்று சொல்லுவார்கள். எதிர்த்துப் போராட வேண்டும் என்று மனஉறுதி கொண்ட பெண்ணுக்குத் தன்னைச் சக்தியற்றவளாய்ச் செய்த எல்லாவிதமான தளைகளையும் அறுத்தெறியும் வல்லமை உண்டு என்று நான் உறுதி கூறுகிறேன். இந்த மனேதிடமே சாவதற்குள்ள பலத்தை அவளுக்கு அளிக்கிறது.

ஆனல் இதற்கெனப் பயிற்சி பெற்ற பெண்களால் மட்டுமே இவ்விதம் வீரமாக நடந்துகொள்ள முடியும். அஹிம்சையில் நிரந்தரமான பற்றுதல் உடையவர்கள் சாதாரணத் தற்பாதுகாப்பு முறையைக் கற்றுக்கொண்டு, பெண்களிடம் அவமரியாதையாக நடந்துகொள்ளுகிற, பரிவு காட்டாத இளைஞர்களிட மிருந்து தங்களைப் பாது காத்துக்கொள்ள வேண்டும்.

இளைஞர்கள் நம்மை மானபங்கப்படுத்திவிடுவார் களோ என்ற அச்சம் மானமரியாதையுள்ள பெண் களுக்குச் சதா ஏற்படும் வகையில் அடிப்படையான நல்லொழுக்கங்களை யெல்லாம்விட்டு, இளைஞர் ஏன் கேவலமாக நடந்துகொள்ள வேண்டும்? இது ஒரு முக்கிய மான கேள்விதான். பெரும்பாலான இளைஞர்கள் பெண் களுக்கு மரியாதை காட்டும் பழக்கத்தை இழந்துவிட்டார் கள் என்றால், அதைக் காண நான் மிகவும் வருத்தமடை வேன். ஒரே கூட்டத்தினர் என்ற முறையில் இளைஞர்கள் தங்கள் நற்பெயரைப் பாதுகாத்துக்கொள்ளுவதில் கண் ணுங் கருத்துமாய் இருப்பதோடு, தங்கள் தோழர்களுக் குள் யாரேனும் பெண்களிடம் அவமரியாதையாக நடந்து கொண்டால், அவர்களையும் தண்டிக்க வேண்டும். தங்கள் சகோதரி, தாய்மார் இவர்களுடைய மானத்தை அவர்கள் எவ்வளவு பெரிதாக மதிக்கிறார்களோ, அதேபோல, மற்றப் பெண்களின் மானத்தையும் அவர்கள் மதிக்க வேண்டும். நல்ல முறையில் பழகத் தெரிந்திராவிட்டால், அவர்கள் பெறுகிற படிப்பெல்லாம் ஒன்றுக்கும் உதவாமல் வீணாய் விடும்.

மேலும், வகுப்புகளுக்கு நியமிக்கப்பட்ட பாடங்களைச் சொல்லிக்கொடுத்து மாணவர்களைத் தயார்செய்வது போல, பெருந்தன்மையாக நடந்துகொள்ளும் பழக்கத்தை யும் தங்கள் மாணவர்களிடம் உண்டுபண்ணுவதும் ஆசிரி யர்களுடைய கடமையல்லவா?

நவநாகரிகப் பெண்

"நவநாகரிகப் பெண் என்று சொன்னாலே அதற்குத் தனியான பொருளுண்டு......ஆங்கிலம் படித்திருக்கிற பெண்கள் அனைவருமே நவநாகரிகப் பெண்கள் அல்லர். நவநாகரிக வாடையே வீசாத பெண்கள் அனேகரை நான் பார்த்திருக்கிறேன். நவநாகரிகப் பெண்களாக மாறிய சில பெண்களையும் எனக்குத் தெரியும்."

பதினொரு பெண்களின் சார்பாக எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அவர்களின் பெயர்களும் விலாசங்களும் அந்தக் கடிதத்தில் இருக்கின்றன. கருத்தில் எவ்வித மாறுதலும் செய்யாமல், படிப்பதற்கு எளிதாகச் சில மாற்றங்களை மட்டும் செய்து, அந்தக் கடிதத்தைக் கீழே தந்திருக்கிறேன்.

"**மாணவருக்கு அவமானம்**" என்ற தலைப்புடன் மாணவி ஒருத்தி எழுதியிருந்த கடிதத்திற்குத் தாங்கள் அபிப்பிராயம் எழுதியிருக்கிறீர்கள். 31-12-46 தேதி 'ஹரிஜன்' பத்திரிகையில் அது வெளியாகியிருக்கிறது. அதைக் கூர்ந்து படிக்க வேண்டியது அவசியம். நவநாகரிகப் பெண்களைத் தங்களுக்குப் பிடிக்கவில்லை போலும். அதனாலேயே, தாங்கள் அவர்களை, 'பலபேரோடு வேடிக்கையாகப் பேசிப் பழக விரும்புபவர்கள்' என்று சொல்லி, ஒரேயடியாய் ஒதுக்கித்தள்ளிவிட்டீர்கள். இவ்வளவு கோபம் தங்களுக்கு வரும்படி நவநாகரிகப் பெண்கள் செய்துவிட்டதாகத் தெரிகிறது. பொதுப்படையாகப் பெண்களைப் பற்றிப் தாங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை இக் குறிப்பு தெரிவிக்கிறது. இது உற்சாகமூட்டுவதா யில்லை.

"வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டநஷ்டங்களில் சமபங்கு பெறுவதற்காகவும், ஆடவர்களுக்கு உதவி செய்வதற்காகவும், வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடவாமல், பெண்கள் வெளியே வந்து, செயலில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆண்கள், பெண்களை அவமதித்து நடத்தியபோதிலும், பெண்களையே இன்னும் பழி சுமத்துவதைக் காண, உண்மையில் விந்தைமா யிருக்கிறது. குற்றம் இரு தரப்பிலும் இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. வேடிக்கையாகப் பல ஆடவருடன் பேசிப் பழக விரும்பும் சில பெண்களும் இருக்கல்ாம். இத்தகைய பெண்ணொருத்தியைத் தெருத் தெருவாய்த் தேடியலையும் ஆடவரும் இருக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. நவநாகரிகப் பெண்கள் அனைவருமே அத்தகைய பெண்க ளென்பதும் நவநாகரிக இளைஞர் அனைவருமே அத்தகைய ஆடவரென்றும் திட்டமாகச் சொல்லுவதற் கில்லை; சொல்லவும் கூடாது. நவநாகரிகப் பெண்கள் பலரைத் தாங்கள் கண்டிருக்கக் கூடும். தியாகம், மனவுறுதி, பெண்மையின் வேறு பல சிறந்த பண்புகள் ஆகியவற்றை அவர்களிடம் தாங்கள் கண்டிருப்பீர்கள்,

" தங்களுக்குக் கடிதமெழுதிய பெண் எடுத்துக்காட்டியுள்ள தீயொழுக்கத்தைக் கண்டிக்கும் முறையில் பொதுஜன உணர்ச்சியை எழுப்ப வேண்டியது அவசியமே. இதைப் பெண்களே செய்ய வேண்டுமென்பதில்லை. வெட்கப்பட்டுக்கொண்டு அவர்களால் செய்ய முடியாதென்பதல்ல; அவர்கள் செய்வதனால் பலன் விளையாது.

" பெண்கள் நரகத்துக்கு வழி" என்ற சொல்லானது கேவலமான கர்நாடகச் சொல். உலகமெல்லாம் போற்றுகின்ற தாங்கள், மேற்சொன்ன விதமாகக் கூறிய அபிப்பிராயமானது அந்தச் சொல்லுக்குப் புதியதோர் ஆக்கம் தருவதா யிருக்கிறது.

" இவற்றை யெல்லாம் நவநாகரிகப் பெண்கள் தங்களை மதிக்கவில்லை என்று தாங்கள் எண்ணிவிட வேண்டாம். இளைஞர்கள் தங்களை எப்படிப் போற்றுகிறார்களோ, அப்படியே, பெண்கள் அனைவரும் தங்களைப் போற்றுகிறார்கள். பிறர் தங்களை வெறுப்பதையும் தங்களிடம் பரிவு காட்டுவதையுமே அவர்கள் விரும்பவில்லை. நடத்தையிலே உண்மையில் குற்றம் இருக்குமாயின், அவற்றைத் திருத்திக்கொள்ளப் பெண்கள் தயாராயிருக்கிறார்கள். குற்றம் குறைகள் ஏதாவது அவர்களிடம் காணப்பட்டால், அவற்றை ஐயமற நிரூபித்த பிறகுதான், அவர்களை இகழ்வது நியாயமாயிருக்கும். "பெண்களினமாகையால் பொறுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி, தங்களைப் பாதுகாத்துக்கொள்ள, பெண்கள் விரும்பவில்லை. இன்னொருவர் தங்கள் நடத்தைபற்றிக் கண்டித்துத் தீர்ப்புக்கூறுவதையும் வாயில்லாப்பூச்சிகள் போலிருந்து அவர்கள் கேட்டுக்கொண் டிருக்கவு மாட்டார்கள். உண்மையை நாம் ஏற்கத் தயாராயிருக்க வேண்டும். தாங்கள் கூறிய மாதிரி, வேடிக்கையாகப் பேசிப் பழக விரும்புகிற நவநாகரிகப் பெண்ணுக்கு, உண்மையை ஏற்றுக்கொள்ளப் போதுமான தைரியம் உண்டு."

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே, தென் ஆப்பிரிக்காவில், நான் இந்தியப் பெண்களுக்குத் தொண்டு செய்ய ஆரம்பித்தேன். இது எனக்குக் கடிதம் எழுதிய இப்பெண்களுக்கு ஒருவேளை தெரியாம லிருக்கலாம். அப்போது இவர்கள் யாருமே பிறந்துகூட இருக்க மாட்டார்கள். பெண்களை இழிவுபடுத்திக் கூறுவது என்னால் இயலாத காரியம். பெண்கள் சமுதாயத்தை மிகவும் உயர்வாகக் கருதுகிறவன் நான்; அவர்களை இழிவாக நினைக்க என்னால் முடியாது. ஆங்கில மொழியில் சொல்லுவது போல் பெண் சமுதாயத்தை மனித வர்க்கத்திலேயே சிறப்பான பகுதி என்று சொல்லலாம். மாணவர்களின் வெட்கக் கேடான நடத்தையை வெளிப்படுத்த எண்ணிக் கட்டுரை எழுதினேனே யன்றி, பெண்களின் தவற்றை விளம்பரப்படுத்தும் நோக்கத்துடன் நான் எழுதவில்லை.

நோய்க்குச் சரியான மருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானால், நோயைப் பரிசீலனை செய்து, அந்த நோய்க்குத் தூண்டுதலாயிருந்த அடிப்படையான காரணங்களை யெல்லாம் எடுத்துக்காட்டியாக வேண்டும்; இப்படிக் காட்டுவது எனது கடமை.

நவநாகரிகப் பெண் என்று சொன்னாலே அதற்குத் தனியான பொருள் உண்டு. எனவே நான் சொல்லிய குறிப்பு சிலரை மட்டும் எண்ணிச் சொல்லியதாகாது. ஆங்கிலம் படித்திருக்கும் அனைவருமே நவநாகரிகப் பெண்கள் அல்லர். நவநாகரிக வாடையே வீசாத பெண்கள் அனேகரை நான் பார்த்திருக்கிறேன். நவநாகரிகப் பெண்களாக மாறிய பெண்கள் சிலரையும் எனக்குத் தெரியும். இந்திய மாணவிகள் நவநாகரிகப் பெண்ணிடத்திலே மோகங்கொண்டு, அவளை முற்றிலும் பின்பற்றலாகாதென்று எச்சரிக்கை செய்தேனே யன்றி வேறில்லை; இந்த மோகம் ஆபத்தான பிரசினையாகி வருகிறது. இந்தக் கடிதம் கிடைத்த அதே சமயத்தில், ஆந்திர மாணவி ஒருத்தியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. ஆந்திர மாணவர்களின் நடத்தையைக் குறித்து அதில் அவள் விரிவாக எழுதியிருக்கிறாள். படித்துப் பார்க்கும்போது, நிலைமை, லாகூர்ப் பெண் எழுதியிருப்பதைக் காட்டிலும் மிகமிக மோசமாகவே இருக்கிறது. பெண்கள் அணியும் எளிய உடை அவர்களுக்குப் பாதுகாப்பாக இல்லையென்றும், படிக்கிற பாடசாலைக்கே கெட்ட பெயரை யுண்டாக்கும் இந்த மாணவர்களின் காட்டுமிராண்டித்தனமான நடத்தையை அம்பலத்துக்குக் கொண்டுவரக்கூடிய தைரியம் தங்களிடம் இல்லை யென்றும், இப் பெண் சொல்லுகிறாள். இந்தக் குற்றச்சாட்டை ஆந்திர சர்வகலாசாலை அதிகாரிகள் கவனிக்க வேண்டும்.

மாணவர்களின் முரட்டுத்தனமான நடத்தையை எதிர்த்து, இந்தப் பதினொரு பெண்களும் சிரத்தையுடன் கிளர்ச்சி செய்ய வேண்டும். தன் கையே தனக்கு உதவி என்ற உணர்ச்சி உடையவர்களுக்குத்தான் கடவுள் உதவி செய்கிறார். ஆடவர் நடந்துகொள்ளும் முரட்டுத்தனமான நடத்தையினின்றும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் பெண்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

இளம் பிள்ளைகளுக்கு

"காதல் உணர்ச்சி மிகவும் உயர்ந்தது; மேன்மையானது. இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், இது, படைத்தல் தொழில் நிறைவேற்றுதற் கென்றே ஏற்பட்டதாகும்; இதற்குப் புறம்பாக அதை உபயோகித்தால், மனித குலத்துக்கும் கடவுளுக்குமே பாபமிழைத்தாகும்."

முதியோர் சொல்லை மதியாது நடப்பது, இப்போது இளைஞரிடையே சில பிரிவினரில் நாகரிகமாய்ப் போய் விட்டது. இந்த நம்பிக்கையோடு இளைஞர்கள் நடப்பது நியாயமான தன்று என்று நான் சொல்ல வரவில்லை. ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி, முதியவர்கள் என்ற காரணத்தைக்கொண்டு மட்டும், அவர்கள் சொல்லுவதை ஒதுக்கித்தள்ளிவிட வேண்டாமென்று, இந்நாட்டு இளைஞர்களுக்கு நான் எச்சரிக்கை செய்கிறேன். குழந்தைகள் வாயிலிருந்தும் சில சமயம் அறிவுநிறைந்த சொற்கள் வெளிப்படுதல்போல, முதியவர்களிட மிருந்தும் சில சமயம் அறிவுநிறைந்த சொற்கள் வெளியாதல் கூடும். யார் சொன்னபோதிலும் சரி, பகுத்தறிவையும் அனுபவத்தையும்கொண்டு அதை உய்த்துணர்வதே சரியான முறையாகும். கருப்பத்தடைக் கருவிகளை உபயோகித்து, கருத்தரியாமல் தடுப்பதுபற்றி நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். வாங்கிய கடனைச் சட்டப்படித் திருப்பிக் கொடுப்பது எப்படி ஒரு கடமையோ, அதேபோல, காம இச்சையைத் தணித்துக்கொள்ளுவதும் பயபக்தியுடன் செய்ய வேண்டிய கடமை யாகும் என்று காதுபுளித்துப்போகும்படி சிலர் சதா சொல்லி வருகிறார்கள். அந்தக் கடமையைச் சரிவர நிறைவேற்றாவிட்டால், தண்டனையாக, அறிவு குன்றிவிடும் என்கிறார்கள். காம இன்பம் வேறு, பிள்ளை வேண்டுமென்ற ஆசை வேறு என்று சொல்லி இரண்டையும் வேறாகக்கொள்ளுகிறார்கள். கருப்பம் தரிப்பது தற்செயலாய் நிகழுகிற ஒரு காரியம்; கணவன் மனைவி இருவருக்கும் விருப்பம் இருந்தா லன்றி, கருப்பத்தடை முறைகளைக் கையாண்டு, கருத்தரியாது தடுத்துவிட வேண்டும் என்று, கருப்பத்தடைப் பிரசாரம் செய்பவர்கள் சொல்லிவருகிறார்கள். இதைப்போன்ற அபாயகரமான

கொள்கையைப் பிரசாரமே செய்யக் கூடாதென்று நான் துணிந்து சொல்லுவேன். இந்தியாவிலே, மத்தியதர வகுப்பைச் சேர்ந்த ஆண்கள், சிருஷ்டிக் கருவிகளைத் துஷ்பிரயோகப்படுத்தி, ஆண்மையற்றவர்களாயும் மதியிழந்தவர்களாயும் ஆகிவிட்டார்கள். இத்தகைய நிலையிலிருக்கும் ஒரு நாட்டில், கருப்பத்தடைக் கொள்கையைப் பிரசாரம் செய்வது இன்னும் ஆபத்தானது. காம இச்சையைத் திருப்தி செய்துகொள்ளுவது கடமையாக இருக்குமானல் இயற்கைக்கு விரோதமான புணர்ச்சியும் [ஆணோடு ஆண் சேர்தல் என்பதும்], காம இச்சையைத் தீர்த்துக்கொள்வதற்கான வேறு பல முறைகளும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாகிவிடும். ஆணோடு ஆண்சேர்தல் என்னும் கொடுமையைப்பற்றி முன்னரே எழுதியிருக்கிறேன். சாதாரணமாக, இயற்கைக்கு மாருன புணர்ச்சி என்று சொல்லப்படும் புணர்ச்சியை, குறிப்பிடத்தக்க பெரிய மனிதர்கள்கூட நல்லதென்று சொல்லி, ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள் என்பதை வாசகர்கள் அறிவது அவசியம். இப்படி நான் சொல்லுவதைக் கேட்டு வாசகர்கள் திடுக்கிடலாம். இயற்கைக்கு மாறுபட்ட புணர்ச்சிக்கு எத்தகைய முறையாவது மதிப்பு ஏற்பட்டுவிட்டால், அந்தப் பழக்கம் சிறுவர் சிறுவரோடும், சிறுமியர் சிறுமியரோடும் கூடி, காம இச்சையைத் தணித்துக்கொள்ளத் தலைப்பட்டுவிடுவார்கள். கருப்பத்தடைக் கருவிகளுக்கும், காம இச்சையைத் தணித்துக்கொள்ளுவதற்காக இதுவரைக் கையாண்ட ஏனைய முறைகளுக்கும், என்னைப் பொறுத்தவரை, அதிக வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை; இவற்ருல் விளைந்துள்ள பலன்களை மிகச் சிலரே அறிவர். ரகசியமான தீயொழுக்கத்தால் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர் சிறுமியர் எவ்வளவு தூரம் பாழாய்ப் போயிருக்கிருர்கள் என்பதை நான் அறிவேன். சயன்ஸின் பெயராலும், சமூகத்தின் தலைவர்கள் என்று கருதப்படுகிறவர்களின் அனுமதியினுலும் கருப்பத்தடை முறைகள் புகுத்தப்பட்டு, சமூகத்தில் சிக்கல்களை மிகவும் அதிகப்படுத்திவிட்டன. இதனுல் சமூக வாழ்வின் தூய்மையைப் பேணிப் பாதுகாக்க விரும்புகிற சீர்திருத்தக்காரர்களுக்கு அப்போதைக்கு வேலை செய்வது சாத்திய மில்லாது போய்

விடுகிறது. கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் படிக்கிற, மனதிலே கருத்துக்கள் பதியத்தக்க வயதுள்ள, மணமாகாத பெண்கள் கருப்பத்தடை சம்பந்தமான புத்தகங்களை மிக்க ஆவலோடு படிக்கிறார்கள் என்றும், கருப்பத்தடைக் கருவிகளையும் அப் பெண்கள் கைவசம் வைத்திருக்கிறார்கள் என்றும், நான் சொல்லுவேனானால் இதிலே ஒன்றும் ரகசிய மில்லை. மணமான பெண்கள் மட்டுமே கருப்பத்தடைக் கருவிகளை உபயோகிக்கலாம் என்று வரையறை செய்வது சாத்திய மன்று. புணர்ச்சியால் ஏற்படும் இயற்கையான விளைவைப்பற்றிய கவலையன்றி, மிருக இயல்பு பொருந்திய காம இச்சையைத் தணித்துக் கொள்ளுவதே திருமணத்தின் தலையாய நோக்கமும் பயனும் என்றால், மணமானது தன்னுடைய புனிதத் தன்மையை இழந்துவிடுகிறது.

கருப்பத்தடைக் கருவிகளை உபயோகிப்பது நல்லதென்று படித்த பெண்களும் ஆடவர்களும் மிக ஆர்வத்தோடும் நம்பிக்கையோடும் பிரசாரம் செய்து வருகிறார்கள். இந்தப் பிரசாரத்தின் பயனாய் விருப்பத்திற்கு மாறாகக் கருப்பம் தரிக்க நேரும் ஏழைப் பெண்களைக் காப்பாற்றுகிறோம் என்று அவர்கள் தவறாக நம்பிவிடுகிறார்கள். இதனால் அவர்கள் இந்நாட்டு இளைஞர்களுக்கு ஈடுசெய்ய முடியாத பெருங்கேடு செய்கிறார்கள் என்பதில் எனக்கு ஒருசிறிதும் ஐயமில்லை. உண்மையிலே யார் யார் பிள்ளைப் பேற்றைக் குறைத்துக்கொள்ள வேண்டியிருக்குமோ, அவர்களிடம் சென்று பிரசாரம் செய்வது இவர்களுக்கு எளிதன்று. மேலைநாட்டுப் பெண்களிடம் காணப்படும் அறிவும் பயிற்சியும் நமது ஏழைப் பெண்களிட மில்லை. மத்தியதர வகுப்பைச் சேர்ந்த பெண்களின் சார்பாக இந்தப் பிரசாரம் நடைபெறவில்லை என்பது நிச்சயம்; ஏனெனில், ஏழை வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு இந்த அறிவு அவசியமாய் இருக்கிறதைப்போல, மத்தியதர வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கு இந்த அறிவு அவ்வளவு அவசியமான தன்று.

புராதன இலட்சியத்தை ஒதுக்கித்தள்ளிவிட்டு, வேறு ஒரு இலட்சியத்தைப் புகுத்துவதுதான் இப் பிரசாரத்தினால் ஏற்படக்கூடிய பெரிய தீங்காகும். இந்த இலட்சியம்

நடைமுறைக்கு வந்தால் சமுதாயத்தின் உடல்வளமும் ஒழுக்க நிலையும் சீர்குலைந்து நாசமாவது திண்ணம். உயிர்ச் சத்துள்ள இந்திரியத்தை வீண்விரையம் செய்வது பயனற்றது, பயங்கரமானது என்று, நமது புராதன இலக்கியங்கள் சொல்லுகின்றன. இது அறியாமையால் வந்த மூட நம்பிக்கை யன்று. தன்னிடமுள்ள நல்ல விதையைக் கட்டாந் தரையில் விதைக்கிற குடியானவனை நாம் என்ன சொல்லுவோம்? நல்ல விதையை, செழிப்பான பூமியில் முளைக்காத பருவத்திலே விதைத்துவைக்கிற வேளாளனைப் பற்றி நாம் என்ன வென்று சொல்லுவது? இவ்வளவு உயர்ந்த விதையை மனிதனிடம் கடவுள் கருணைகூர்ந்து ஒப்படைத்திருக்கிறார். இந்த அகில முழுவதிலுமே காண முடியாத, செழிப்பான நிலங்கள் அனைத்திலும் மிக்க செழிப்பு வாய்ந்த தொரு நிலத்தைப் பெண்களிடம் கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட உயர்ந்த விதையை மனிதன் வீண்விரையம் செய்வானேயானால், அது மன்னிக்க முடியாத கொடிய முட்டாள்த்தன மாகும். தன்னிடமுள்ள மிகவும் விலையுயர்ந்த மணிகளை அவன் எப்படிப் பாதுகாப்பானோ, அதைவிட அருமையாகவே மனிதன் இதைப் பாதுகாக்க வேண்டும். உயிரையே படைத்துத் தருகிற விதையை வீண்விரையம் செய்வதற் கென்றே ஏற்றுக்கொள்ளுகிற பெண்ணும் மன்னிக்க முடியாத தவற்றைச் செய்தவள் ஆவாள். தங்களிடம் கொடுக்கப்பட்ட மேன்மையான பண்புகளைத் துஷ்பிரயோகப் படுத்துகிற ஆணும் பெண்ணும் குற்றவாளிகளாகக் கருதப் படுவார்கள். அவர்களிடம் கொடுக்கப்பட்ட அந்தப் பண்புகளும் அவர்களைவிட்டு நீங்கிவிடும்.

காதல் உணர்ச்சி மிகவும் உயர்ந்தது; மேன்மை யானது. இதில் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால், இது படைத்தல் தொழில் நிறைவேற்றுவதற் கென்றே ஏற்பட்டதாகும். இதற்குப் புறம்பாக அதை உபயோகித் தால், மனிதகுலத்துக்கும் கடவுளுக்குமே பாபம் இழைத் தவர்களே யாவோம். கருப்பத்தடைக் கருவிகள் என்பவை ஒரு வகையிலே முற்காலத்திலும் இருந்தன; பிற்காலத் திலும் இருக்கும். ஆனால், அவற்றை உபயோகிப்பதைப் பாபம் நிறைந்த தென்று முன்னரே கருதி வந்தார்கள்.

தீயொழுக்கத்தையே நல்லொழுக்கம் என்று சொல்லித் தடபுடல் செய்கிற பெருமை நம்முடைய தலைமுறைக்கே உரியதாயிருக்கிறது. கருப்பத்தடைப் பிரசாரம் செய்கிறவர்கள், கருப்பத்தடை என்ற படுமோசமான எண்ணத்தை இந்திய இளைஞர்கள் மனதில் புகுத்தி, இளைஞர்களுக்கு மிகப் பெரிய தீங்கு செய்துவருகிறார்கள். கருப்பத்தடை என்ற கொள்கையைத் தவறானதென்றே நான் கருதுகிறேன். இந்தியாவின் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கப் போகிறவர்களான இந்திய இளைஞர்களும் பெண்களும் பொய்க் கடவுளாகிய இதன் விஷயத்தில் கவனமாயிருப்பார்களாக. கடவுள் கருணைகூர்ந்து அவர்களிடம் ஒப்படைத்த அருந் தனத்தைப் பாதுகாத்து, விருப்பமானால், எந்த நோக்கத்திற்காக அளிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த ஒரே நோக்கத்திற்காகவே அதை அவர்கள் உபயோகிப்பார்களாக.

இளைஞர் ஒருவரது சங்கடம்

"கடவுளிடத்தில் உண்மையான ஜீவன் நிறைந்த பக்தியே சத்தியமாகும்: இது இல்லாமல் பிரமசரிய விரதத்தை அனுஷ்டிப்ப தென்பது இயலாத காரிய மென்றே கருதுகிறேன்."

இளம் பிள்ளைகளுக் கென்று ஹரிஜன் பத்திரிகையில் நான் எழுதியிருந்த கட்டுரை சம்பந்தமாக ஒரு சந்தேகம் ஏற்பட்டதாகவும், அதை நிவர்த்திக்க வேண்டுமென்றும் கேட்டு, ஒருவர் எனக்குக் கடிதம் எழுதியுள்ளார். இவர் தமது பெயரைத் தெரிவிக்க விரும்பவில்லை. பெயரைத் தெரிவிக்காதவர்களுக்குப் பதில் சொல்லாமல் இருப்பதுதான் நியாயம். ஆயினும் விஷயம் முக்கியமானதாயிருக்கும் பட்சத்தில், விதிவிலக்காக, நான் பதில் சொல்லுவதும் உண்டு. இந்த நிருபர் கேட்டுள்ள விஷயமும் முக்கியமான தாகும்.

கடிதம் ஹிந்தி பாஷையில் இருக்கிறது. அதன் சாரம் வருமாறு:

"தாங்கள் எழுதியிருப்பவைகளைக் கவனித்தால், வாலிபர்களின் மனதைத் தாங்கள் ஏதேனும் அறிவீர்களோ என்ற ஐயமுண்டாகிறது. தங்களுக்கு இயலுமான தெல்லாம், இளைஞர் அனைவருக்குமே இயலுமென்று சொல்லுவதற் கில்லை. நான் கலியாணமானவன். இச்சையை அடக்கி வாழ என்னால் முடியும், என் மனைவியால் முடியவில்லை. குழந்தை வேண்டுமென்ற ஆசையும் அவளுக்கு இல்லை. ஆனால், காம இன்பத்தை அனுபவிக்க ஆசைப்படுகிறாள். இந்த நிலையில் நான் என்ன செய்ய வேண்டும்? அவளைத் திருப்தி செய்ய நான் கடமைப்பட்டவன் அல்லவா? வேறு வழிகளில் அவளுடைய இச்சையைத் திருப்தி செய்து கொள்ளும்படி விடக்கூடிய தாராள சிந்தை எனக்கு இன்னும் ஏற்படவில்லை. கலியாணம் செய்துகொள்ளுவதைத் தாங்கள் வெறுக்கவில்லையென்றும், பலருக்கு மணம் செய்வித்து அவர்களை வாழ்த்துகிறீர்கள் என்றும் பத்திரிகைகளின் மூலமாக அறிந்திருக்கிறேன். தாங்கள் சொல்லுகிற உயர்ந்த நோக்கத்துடன் மணம் நடைபெறுவதில்லை என்பதைத் தாங்கள் உண்மையில் அறிந்திருக்கக் கூடும்; இல்லாவிட்டாலும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்."

இந்த நிருபர் சொல்லுவது சரி. கலியாணம் செய்து கொள்ளுவோர் பலரை நான் வாழ்த்தி யிருக்கிறேன். வயது, செல்வநிலை ஆகியவற்றைப் பலவகையிலும் ஆராய்ந்து பார்த்து, எனக்குத் திருப்தி ஏற்பட்ட பிறகே,

நான் வாழ்த்துவது உண்டு. இந்த நாட்டு இளைஞர்களைப் பற்றி ஓரளவு எனக்குத் தெரியும்; ஆகவே அவர்கள் என்னிடம் வந்து வழிகாட்டும்படி கேட்கும்போது, நியாய மான அளவுக்கு நான் வழிகாட்டுவது அவசியமாகும்.

இந்த நிருபரின் நிலைமை ஓர் எடுத்துக்காட்டாய் உள்ளது. அவரிடம் நாம் பரிவுகாட்ட வேண்டும். பிள்ளைப் பேற்றை உத்தேசித்தே உடலுறு புணர்ச்சி வேண்டு மென்பது என்னைப் பொறுத்தவரை, நான் புதிதாகக் கண்டுபிடித்த ஓர் உண்மை. இந்த உண்மையை நான் முன்னரே அறிந்திருந்தபோதிலும் இதை அவ்வளவு மூதன்மை யுடையதாக நான் இதுவரை கருதிய தில்லை. சிறிது காலம் முன்புவரை, நியாயமாக விரும்பத்தக்க விஷய மென்றே நான் இதைக் கருதி வந்தேன். இப் போது, அதுவே மணவாழ்க்கையின் அடிப்படையான நியதிஎன்றும், அதனுடைய நிலையாய முக்கியத்துவத்தைத் தக்கபடி உணர்ந்துவிட்டால், பின்பற்றி நடப்பது மிக எளிதென்றும் கருதுகிறேன். சமூகத்தில் இந்த நியதிக்கு உரிய இடத்தைக் கொடுப்பார்களேயானல், எனது நோக் கம் நிறைவேறிவிடும். இதை நான் உயிர் நிறைந்ததோர் நியதி என்றே கருதுகிறேன். இந்த நியதியை நாம் எப் போதுமே மீறிநடந்து வருகிறோம். அதனல் அளவு கடந்து துன்பப்படுகிறோம். இந்தக் கடிதமெழுதிய நிருபர், இந்த நியதியின் அளவிட முடியாத பெருமையை உணர்ந்து, தம் மனைவியிடம் அன்பு பூண்டு, தம் மன வுறுதியிலே அவருக்கு நம்பிக்கையும் இருக்குமாயின், தம் முடைய கருத்தைத் தம் மனைவியும் ஏற்கும்படி அவரால் செய்துவிட முடியும். இச்சையை அடக்கி வாழ முடியும் என்று அவர் உண்மையாகவே சொல்லுகிறாரா? அவரிட முள்ள காம இச்சையானது, சகோதர வர்க்கத்துக்குத் தொண்டு செய்வதற்கான உயர்ந்ததோர் இச்சையாக மாறிவிட்டதா? தம் மனைவியிடம் காம இச்சையைக் கிளறிவிடத்தக்க செயல்கள் ஒன்றையும் செய்யாது அவர் தம்மை இயல்பாகவே அடக்கிக்கொண் டிருக்கிறாரா? ஹிந்து சமய நூல்களில் எட்டு வகையான புணர்ச்சி முறை கள் சொல்லப்பட்டுள்ளன; இவற்றில் சமிக்கைகளினல் போக இச்சையைக் கிளறிவிடுவதும் ஒன்று என்பதை

அவர் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வித சமிக்கை முறைகளிலிருந்து அவர் விடுபட்டிருக்கிருரா? இவ்வித சமிக்கை முறைகளிலிருந்து விடுதலை பெருதிருந்தும், தம் மனைவியின் காம இச்சையை அவர் உண்மையாகவே மாற்ற விரும்புவரானல், பிள்ளைப் பேற்றை விரும்பாமல், ஆண் பெண் கூடுவதனல் உடலில் ஏற்படும் கெடுதியைப் பற்றி மனைவிக்குத் தெரிவிக்கட்டும். அவளைச் சுற்றி உண்மையான அன்பு பெருக்கெடுத்து ஓடும்படி செய்யட்டும். உயிர்ச்சத்துள்ள இந்திரியம் வீண்விரையமாவதால், என்னென்ன கேடுகள் விளையும் என்பதை அவளுக்கு விளக்கிக்காட்டட்டும். மனைவியின் காம இச்சையை ஒடுக்கு வதற்காக, மனத்துக்கு நன்மையான வேறு வேலைகளில் அவளை ஈடுபடச் செய்து, உணவு, உடற்பயிற்சி முதலிய வற்றையும் அவர் ஒழுங்குபடுத்த வேண்டும். இவை ஒருபுற மிருக்க, மதத்தில் அவர்நம்பிக்கை உடையவராய்இருந்தால், அந்த நம்பிக்கையை அவர் தம் மனைவிக்கும்ஊட்ட முயல வேண்டும். கடவுளிடம் உண்மையான ஜீவன் நிறைந்த பக்தியே சத்தியமாகும்; இந்த நம்பிக்கை இல்லாமல் பிரமசரிய விரதத்தை அனுஷ்டிப்ப தென்பது இயலாத காரியம். கடவுள் தத்துவத்துக்கு இடமே கொடாமலும், உயிர்த் தத்துவம் நிறைந்த கடவுளிடம் உண்மையான நம்பிக்கை இல்லாமலும் மேன்மையான ஒரு உயர்ந்த உத்தம வாழ்க்கையை, நாம் அடைய முடியுமென்று, உறுதியோடு கூறுவதே இந்தக் காலத்தில் ஒரு நாகரிகமாய்ப் போய் விட்டது. தங்களைவிட உயர்ந்ததான ஒரு சக்தி, தங்களுக் குத் தேவை யில்லை; அதனிடம் தங்களுக்கு நம்பிக்கையு மில்லை என்று சொல்லுபவர்களை இந்த நியதியின் உண்மையை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய என்னல் முடியாது; இதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். உயிர்த் தத்துவம் நிறைந்த கடவுளின் கட்டளைப்படி அகில முழு தும் கீழ்ப்படிந்து நடைபெறுகிறது. அதனிடம் அசைக்க முடியாத நம்பிக்கைகொண்டா லன்றி, பரிபூரண வாழ்க்கை என்பது சாத்திய மில்லையென்று என் சொந்த அனுபவத்தில் கண்டிருக்கிறேன். இந்த நம்பிக்கை யில்லாத மனிதன், கடலிலிருந்து வெளியே சிதறிய ஒரு திவலைக்கு ஒப்பாவான்; அந்தத் திவலைபோல, அவனும் அழிந்துபோவது நிச்சயம். கடலிலுள்ள ஒவ்வொரு துளித் தண்ணீரும், கடலின் காம்பீரத்தைத் தானும் பெற்றும் பொலிவதுடன், தமக்கே உயிரளித்த பெருமையையும் அது அடைகிறது.

காமநூற் கல்வி

"காம இச்சையை வெல்வதே ஆண் பெண்களின் வாழ்க்கையில், சிறந்த முயற்சி யாகும். காம இச்சையை வெல்லாமல், தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொள்ளுவ தென்பது இயலாத காரியம்."

இந்தியாவின் ஏனைய பகுதிகளைப்போலவே, ஆண் பெண் சேர்க்கை உணர்வு கூர்ஜரத்திலும் இன்று படிப்படியாக வளர்ந்துகொண்டு வருகிறது. அன்றியும் அவ் உணர்வால் பீடிக்கப்பட்டவர்கள், அதில் ஏதோ ஒரு தனி மதிப்பு இருக்கிறதாகக் கருதுகிருர்கள். தன்னைப் பிணித்துள்ள தளைகளை உயர்ந்த ஆபரண மெனக் கருதி ஆசையோடு அவற்றை அடிமை அணிந்துகொள்ளுவானேயானல், எஜமானன் அவனை அடிமைப்படுத்துவதில் பரிபூரண வெற்றியடைந்துவிடுகிருன். மன்மதன் கொண்ட இந்த வெற்றி, பார்ப்பதற்கு ஆடம்பரமா யிருக்கலாம்; ஆனல், கடைசியில், இதன் நிலைமை அற்பத்தனமானதாயும் சிறிது காலம் வரை நிலைத்திருக்கக் கூடியதாயுமே போய்விடும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு. கொடுக்கிலுள்ள விஷமெல்லாம் செலவாகிப்போன தேளைப்போலவே, இதுவும் முடிவில் ஒன்றுமில்லாமல் போய்விடும். முடிவில் தோல்வியுறும் என்ற நம்பிக்கை காரணமாக, கையைக் கட்டிக்கொண்டு எதுவும் செய்யாமல் நாம் சும்மா இருக்கலாகாது. அவ் உணர்வு தோல்வியடைவது திண்ணம் என்ற காரணம்பற்றி, நமக்கு ஆபத்தில்லை என்ற தவருன எண்ணம் ஏற்படலாகாது. அப்படி ஏற்படுவதற்கு இடம் கொடுக்கவும் கூடாது. ஆடவர் பெண்டிர் இருவர் வாழ்க்கையிலும் காம இச்சையை வெல்வதே, சிறந்த முயற்சியாகும். காம உணர்வை வெல்லாமல் தன்னடக்கம் என்பதும் சாத்தியமில்லை. தன்னடக்கம் இன்றி, சுயராஜ்யமோ அல்லது ராமராஜ்யமோ கிடைப்பது அரிது. தன்னைத்தானே வசப்படுத்திக்கொள்ளாமல் பிறரை வசப்படுத்தச் செய்யும் முயற்சியானது வர்ணம் பூசிய அழகான பொம்மை மாம்பழத்தை ஒக்கும். வெளித் தோற்றம் ரம்மியமா யிருந்தபோதிலும், உள்ளே ஒன்றும்

இராமல் வெறும் கூடுதான் இருக்கும். இதைப்போலவே தன்னடக்கம் இன்மையும் ஏமாற்றம் தருவதாகும். காம இச்சையை வெல்லாத தொண்டன், ஹரிஜன இயக்கம், சமூக ஒற்றுமை, கதர், பசுப் பாதுகாப்பு, கிராமப் புனருத்தாரணம் போன்ற பொது வேலைகளில் ஈடுபட்டு உண்மையான தொண்டு செய்யலாம் என்று எண்ணுவது இயலாத காரியம். இவை போன்ற மகத்தான சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கு அறிவின் துணை மட்டும் போதாது; ஆன்மவலியும் அவசியம் வேண்டும். கடவுளுடைய அருளினலேதான் ஆன்மவலி கிட்டும். காம அந்தகாரத்தில் மூழ்கி யிருப்பவனுக்குக் கடவுளுடைய அருள் கிட்டவே கிட்டாது.

அப்படியானல், நமது கல்வித் துறையில் காம நூல்களைச் சொல்லிக்கொடுப்பதற்கு, எந்த விதமான முறையில் திட்டம் அமைக்கலாம், அல்லது அதற்கு இடமே கிடையாதா என்ற கேள்விகள் எழும். காமநூற் கல்வியை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். காம இச்சையை அடக்குவது, அல்லது வெல்வது ஒரு வகைக் கல்வி; மற்றொரு வகை, அதைக் கிளறிவிட்டு வளர்ப்பது. குழந்தைகளின் பாடத்திட்டத்தில் முதலில் சொன்ன முறை இருப்பது அவசியமாகும். அதைப் போலவே, பின்னே சொன்ன முறை கேடுபயப்பதாயும் அபாயகர்மானதாயும் இருப்பதால் விலக்கத்தக்கதாகும். பெரிய பெரிய சமயங்கள் யாவும் காம இச்சையை மனிதனுடைய பரம விரோதி என்று சரியாகவே சொல்லியிருக்கின்றன. கோபமும் பகைமையும் இதற்கு அடுத்தபடிதான். காம இச்சையே கோபத்திற்கும் பகைமைக்கும் தாயகம் என்று கீதை சொல்லுகிறது. காமம் என்ற சொல்லைப் பாசம், அல்லது ஆசை என்ற விரிந்த பொருளில் கீதை உபயோகித்திருக்கிறது. ஆயினும், அதே கருத்து, நாம் இங்கே சொல்லிவரும் குறுகிய பொருளுக்கும்பொருந்தும்.

இளம் மாணவர்களுக்குப் பிள்ளைப்பேற்றுக் கருவிகளின் தொழிலையும் உபயோகத்தையும்பற்றிப் போதிப்பது விரும்பத்தக்கதா என்பது கேள்வி; மேலே சொல்லியதிலிருந்து இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. ஓரளவிற்காவது அவர்களுக்கு இதைப்பற்றிப் போதிப்

பது அவசியம் ஆகும் என்று நான் கருதுகிறேன். எப்படியோ எவ்வாறோ தங்கள் தங்கள் மனம்போனவாறு இந்த அறிவைப் பெறும் வகையில், இளைஞர்களை நாம் விட்டுவைத்து இருக்கிறோம். அதனால் தவறான வழியில் சென்று அவர்கள் கெட்ட பழக்கங்களை மேற்கொண்டு விடுகிறார்கள். காம இச்சையைப்பற்றிய சிந்தனை எதுவு மின்றி அலட்சியம் செய்து கண்ணை மூடிக்கொள்ளுவத னால், அதைச் சரியானபடி கட்டுப்படுத்தவோ வெல்லவோ முடியாது. ஆண் பெண் உறுப்புக்களின் சரியான உபயோகத்தையும் நோக்கத்தையும்பற்றி, இளம் பிள்ளை களுக்கும் பெண்களுக்கும் சொல்லிக்கொடுப்பதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். என் பொறுப்பில் பயிற்சி பெற்று வருகிற இளம் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இதுபற்றிய கல்வியை நான் எனக்குத் தெரிந்த முறையில் போதித்து வந்திருக்கிறேன்.

நான் குறிக்கோளாகக் கொண்டுள்ள, போதிக்க விரும் புகிற காமநூற் கல்வியின் நோக்கம், காம இச்சையை அடக்குவதாயும், அந்த இச்சையை மேன்மையான உப யோகத்திற்குப் பயன்படுத்துவதாயும் இருக்கும். நாம் போதிக்க விரும்புகிற காமநூற் கல்வியானது, மனித னுக்கும் விலங்கிற்கும் அடிப்படையி லுள்ள வேறு பாட்டைச் சிறுவர் சிறுமியருக்கும் நன்றாக உணர்த்த வேண்டும். மனிதனுடைய சீரும் சிறப்பும் அவனது இதயப்பாங்கிலும் அறிவுத்திறத்திலும் அமைந்து கிடக் கின்றன; 'மனுஷ்யன்' என்ற சொல்லின் பொருளானது இதயப்பாங்கோடுகூட மனிதனுக்குஅறிவுத்திறனும்உண்டு என்பதையே எடுத்துக்காட்டுகிறது; இயற்கை உணர்வு வயப்பட்டு, அதையே வெல்லவல்ல பகுத்தறிவை மனிதன் இழந்துவிடலாகாது. அப்படி இழந்துவிடுவது மனித தன்மையையே இழந்துவிடுவதாகும். நாம் போதிக்க இருக் கும் காமநூற் கல்வி இவற்றை யெல்லாம் சிறுவர் சிறுமி யர்களுக்கு உணர்த்துவதாய் அமைய வேண்டும். மனித னுக்கு உள்ள பகுத்தறிவு, உணர்ச்சியைத் தூண்டி விட்டு அதற்கு வழிகாட்டியாய் நின்று உதவுகிறது. விலங்கினிடமோ ஆன்ம உணர்வு எப்போதுமே மயங்கிய நிலையிலேயே கிடக்கிறது. இதயம் விழிப்படைவதால்

மந்தநிலையி லிருக்கும் ஆன்மா விழிப்படைகிறது; எது நன்மை எது தீமை என்று பாகுபாடு செய்துணரும் அறிவு விழிப்படைகிறது.

உண்மையான காமநூற் பயிற்சியைப் போதிப்பதற்கு யார் தகுதியுடையவர்? தமது இச்சைகளை அடக்கி வென்ற வரே என்பதில் ஐயமில்லை. வான நூலையும் அதைப் போன்ற வேறு பல அறிவியல் நூல்களையும் கற்பிக்கிற ஆசிரியர்கள் அந்தந்தக் கலையில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றிருக்கிறார்கள் காமநூற் கல்விக்கும், அதேபோல, நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். காமநூற் கல்வி என்றாலே காம இச்சையை அடக்குவது என்றுதான் பொருள்; இந்தத் துறையிலே பயின்று இச்சையை அடக்கி, அதில் நிபுணரானவர்களையே நாம் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். எவ்வளவு உயர்தரமான பேச்சா யிருப்பினும் உண்மையும் அனுபவமும் அதற்கு உறுதுணைகளா யிரா விட்டால், அந்தப் பேச்சு உயிரற்ற பேச்சாகவே போய் விடும்; இதயத்தினுள் புகுந்து, அதைத் தூண்டிவிடும் வன்மை, அந்தப் பேச்சுக்கு நிச்சயமாய் இராது. அப்படி யின்றி, ஆன்ம வெற்றியி லிருந்தும், உண்மை அனுபவத் திலிருந்தும் பொங்கிவரும் பேச்சோ, எப்போதுமே பலனுடையதா யிருக்கும்.

இன்று, நமது சூழ்நிலைகள் யாவும்—நமது படிப்பு, சிந்தனை, சமூகப் பழக்க வழக்கங்கள் யாவுமே—பொதுப் படையாக, காம உணர்ச்சியை வளர்த்து அதற்குத் தொண்டு புரிவனவாயுள்ளன. நம்மைப் பிணித்து இருக் கும் காமத் தளைகளை அறுத்தெறிவது எளிதான காரிய மல்ல இருப்பினும் அரும்பாடுபட்டாவது நாம் இந்தத் துறையில் கவனம் செலுத்த வேண்டும். அனுபவம் நிறைந்த ஆசிரியர்கள் சிலரே இருப்பினும் பாதகமில்லை. தன்னடக்கமே மேன்மையான கடமை என்பதை ஒப்புக் கொண்டு, தங்கள் பணியிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்து, அல்லும் பகலும் விழிப்போடும் சுறுசுறுப் போடும் இருப்பார்களானால், அவர்கள் செய்கிற தொண்டு கூர்ஜர நாட்டுச் சிறுவர் சிறுமியருக்கு வாழ்க்கை நெறியை விளக்குவதா யிருக்கும்; கவன மில்லாதவர் களைக் காம வலையில் விழாமல் காக்கும்; ஏற்கனவே அந்தப் படுகுழியில் வீழ்ந்து சிக்குண்டு தத்தளிப்போரை யும் கைதூக்கிவிடும்.

காம வெறி

"பிரமசரிய விரதத்தை அனுஷ்டிக்காத ஆணும் பெண்ணும் சீர்குலைந்து போவார்கள். புலன்களைக் கட்டுப்படுத்தாமல் வாழ்வது பாய்மரமில்லாத கப்பலில் பிரயாணம் செய்வதை ஒக்கும். அந்தக் கப்பல் பாறையில் மோதினதுமே உடைந்து போவது நிச்சயம்."

இளைஞர் ஒருவர் இவ்விதம் எழுதியிருக்கிறார்:

"உலகத்தைத் திருத்தி அமைக்கும் பொருட்டு ஒவ்வொருவரும் ஒழுக்க சீலராக வேண்டு மென்று தாங்கள் சொல்லுகிறீர்கள். ஒழுக்கம் என்ற சொல்லை ஆண் பெண் தொடர்புபற்றிய விஷயங்களுக்கு மட்டும் உபயோகிக்கிறீர்களா, அல்லது மனிதனுடைய நடத்தை யாவற்றிற்குமே உபயோகிக்கிறீர்களா என்பதை என்னால் திட்டமாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. முதலாளிகளும் நிலச்சுவான்தாரர்களும் பலர் தங்களுக்கு நண்பர்களா யிருக்கிறார்கள். குடியானவர்களையும் தொழிலாளர்களையும் கசக்கிப்பிழிந்து, இவர்கள் ஏராளமான லாபத்தைச் சம்பாதிக்கிறார்கள்; அக்கிரமமாகவும் கொடுமையாகவும் நடந்துகொள்ளுகிறார்கள். இவற்றை பற்றி அவர்களிடம் தாங்கள் ஒன்றும் சொல்லுவதாகத் தெரியவில்லை. ஆனால், இளைஞர்கள், இளம் பெண்கள் சம்பந்தப்பட்டவரை யிலோ தாங்கள் அப்படி நடந்துகொள்ளுவதில்லை. பிரமசரியம் என்பது மிகவும் உயர்ந்த தருமம்; அதை இளைஞர்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். சிற்றின்ப விவகாரங்களில் ஒழுங்கீனமாக நடந்துகொள்ள லாகாது என்று சதா இளைஞர்களுக்குச் சொல்லிக்கொண்டு வருகிறீர்கள்; இப்படி இளைஞர்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களைத் தொந்திரவு செய்வதில் தங்களுக்கு அலுப்பே ஏற்படுவதில்லை. எனவே தாங்கள் சொல்லும் ஒழுக்கம் ஆண் பெண் தொடர்புபற்றியதாய்தான் இருக்கும் என்று நான் சந்தேகிக்கிறேன். இந்திய இளைஞர்களின் மனப்போக் கைத் தாங்கள் அறிந்திருப்பதாகச் சொல்லுகிறீர்கள். நான் யாருடைய சார்பாகவும் பேச முன்வரவில்லை. இளைஞன் என்ற முறையில், தனி யாகவே நின்று, தாங்கள் கூறுவது தவறென்று சொல்லத் துணிகி றேன். எந்த விதமான சூழ்நிலையில், மத்தியதர வகுப்பைச் சேர்ந்த இளைஞர்கள் இக்காலத்தில் வாழவேண்டி இருக்கிறது என்பதைத் தாங்கள் தெரிந்துகொள்ள வில்லை; நீண்ட காலத்துக்கு வேலையில்லாத திண்டாட்டம் அவர்களை வாட்டுகிறது; சமூகப் பழக்கவழக்கங்களும் சம்பிராதயங்களும் அவர்களை நசுக்கின்றன; ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து கல்வி பயிலுவது அவர்களுக்கு ஆசை ஊட்டுகிறது. பழைய கொள்கைகளுக்கும் புதுக் கொள்கைகளுக்கு மிடையில், இப்போது ஒரு போராட்டம் நடைபெறுகிறது, இந்தப் போராட்டத்தில் வழக்கம்போல, தோல்வியும் துன்பமும்தான் இளைஞர்களை எதிர்கொண்டு அழைக்கின் றன. இளைஞரிடத்தில் பரிவும் அன்பும் காட்ட வேண்டு மென்றும்,

தங்களுடைய கடுமையான சன்மார்க்க நெறிகளின்படி அவர்கள் நடக்கவில்லையே என்பதற்காக அவர்கள்மீது குறைகூறுதிருக்கும்படியும் தங்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். கலியாணம் செய்துகொண்டால் என்ன, அல்லது கொள்ளாவிட்டால் என்ன, இரு தரப்பிலும் மனஒற்றுமையும் அன்பும் இருந்தால் அதுவே போதுமானதல்லவா? அன்பினாலும் மனஒற்றுமையினாலும் செய்கிற செயல்கள் யாவும் ஒழுங்கானவையே யாகும் என்பது என் கருத்து. கருப்பத்தடைக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, ஆண்பெண் தொடர்பு ஒன்றே கலியாணத்திற்கு அடிப்படை என்ற நிலை ஆட்டம் கண்டுவிட்டது. கலியாணம் என்றால், இப்போது, குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு என்று ஆகிவிட்டது. நான் இவ்விதம் சொல்லுவதைக் கேட்டுத் தாங்கள் ஒருவேளை திடுக்கிட்டாலும் திடுக்கிடக் கூடும். இளம் பிள்ளைகளைக் குறைகூறுகையில், இளம் பிராயத்தில், தாங்கள் எப்படி நடந்துகொண்டீர்கள் என்பதைச் சிறிது நினைவுகூருங்கள். தாங்கள் காமவுணர்ச்சி மிகுதியாக உடையவராயிருந்தீர்கள்; அதிலே மிகுதியும் தோய்ந்திருந்தமையால், அதன்மேல் தங்களுக்கு வெறுப்புத் தோன்றிவிட்டது. இதனாலேதான், தங்களுக்குத் துறவி மனப்பாங்கிலே அதிக மோகமிருக்கிறது; காம இன்பத்தைப் பாபம் என்றும் கூறுகிறீர்கள். தங்களை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இன்றைய இளைஞர்கள், இந்தத் துறையில் தங்களைக் காட்டிலும் எவ்வளவோ நல்லவர்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது."

எனக்கு வரும் பலவகையான கடிதங்களில் இது ஒரு எடுத்துக்காட்டான கடிதம். இந்தக் கடிதம் எழுதியவரை எனக்கு மூன்று மாதங்களாகத் தெரியும். இந்தக் காலத்திற்கிடையிலேயே அவர் பல்வித மாற்றங்களுக்கு உள்ளாகி இருக்கிறார். இன்னும் அவருடைய மனநிலை குழம்பிய நிலையிலேயே இருந்துகொண்டு வருகிறது. மேலே தந்துள்ள சாராம்சம் அவர் எழுதியுள்ள ஒரு நீண்ட கடிதத்திலிருந்து எடுத்த பகுதியாகும். இது போன்று அவர் எனக்கு அனேக கடிதங்கள் எழுதியுள்ளார். அவற்றையெல்லாம் நான் வெளியிடுவதில் அவருக்கு விருப்பம் உண்டு. நான் மேலே எடுத்துக்காட்டியுள்ள பகுதி, பெரும்பாலான இளைஞர்களின் உள்ளக்கிடக்கையை அப்படியே பிரதிபலித்துக் காட்டுகிறது.

இளம் பெண்களிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் எனக்கு அனுதாபம் உண்டு என்பது நிச்சயம். வாலிபத்தில் நான் நடந்துகொண்ட முறை எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. இந்த நாட்டு இளைஞர்களிடத்தில் எனக்கு விஸ்வாசம் இருப்பதனாலேயே, அவர்களுக்கு நேரிடும் பிரசினைக

ளைக் கவனிப்பதில் எனக்கு ஒருபோதும் அலுப்பே தோன்றுவதில்லை.

சன்மார்க்க நெறியிலிருந்து, நீதியும் மதமும் மாறுபட்டதன்று. மதத் தொடர்பின்றி யிருக்கும் சன்மார்க்க நெறி மணலில் கட்டிய வீட்டையே ஒக்கும். சன்மார்க்க நெறியை வேண்டாத மதம், சத்தம் போடுவதற்கும் மண்டையை உடைத்துக்கொள்ளுவதற்கும்தான் உபயோகப்படும். சன்மார்க்க நெறியில் அஹிம்சை, உண்மை, பிரமசரியம் மூன்றும் அடங்கும். மனிதனிடம் அமைந்துள்ள வேறு பல உயர்ந்த பண்புகள் யாவும் இம் மூன்று அடிப்படையான பண்புகளிலிருந்தே தோன்றுகின்றன. இந்த மூன்றினுள் அஹிம்சையும் பிரமசரியமும் சத்தியத்திலிருந்து தோன்றுகின்றன. சத்தியத்தையே நான் தெய்வமெனக் கொள்ளுகிறேன்.

பிரமசரிய விரதத்தை அனுஷ்டிக்காத ஆணும் பெண்ணும் நிலைகுலைந்து போவார்கள். ஐம்புலன்களை அடக்கியாளாது வாழ்வது, பாய்மரமில்லாத கப்பலில் பிரயாணம் செய்வதை ஒக்கும்; அந்தக் கப்பல் ஆரம்பத்திலேயே பாறையில் மோதி சுக்கு நூறுவது நிச்சயம். அதனாலேதான் நான் பிரமசரிய விரதத்தை வற்புறுத்திக் கூறுகிறேன். 'கருப்பத்தடைக் கருவிகள் நடைமுறைக்கு வந்த பிறகு, ஆண் பெண் தொடர்புபற்றிய எண்ணங்களே மாறிவிட்டன என்று இந்த நிருபர் சொல்லுகிறார்; இது உண்மையே. இரு தரப்பினரும் உடன்பட்டால் கலியாணமானாலும் சரி ஆகாவிட்டாலும் சரி புணரலாம் என்பது, இரு தரப்பாரும் உடன்பட்டால் ஆணோடு ஆண் புணரலாம் என்பதையும் நியாயமாக்கிவிடும். அப்படியாகிவிட்டால், ஆண் பெண் தொடர்பு பற்றிய அடிப்படையான நோக்கமே நிலைகுலைந்து போவதுடன், இந் நாட்டு இளைஞர்களைத் துன்பமும் தோல்வியும் தான் எதிர்கொண்டழைக்கும். பரஸ்பர சம்மதம் இருந்தால் புணரலாம் என்ற பிடியிலிருந்து விடுவித்துக்கொள்ளுவதில் மகிழ்ச்சியுள்ள அனேக இளம் பெண்களையும் ஆண்களையும் நாம் இந்தியாவில் காணலாம். மனிதனை அடிமைப்படுத்தி ஆட்டிவைக்கும் கொடிய குடி வகைகளைக் காட்டிலும் பரஸ்பர சம்மதத்தின் பேரில் நடைபெறும் சிற்றின்ப

நுகர்ச்சிக்கு அதிகப் பலமுண்டு. பிள்ளைப்பேற்றை ஒழுங்குசெய்து கட்டுப்படுத்துவதற்கு மட்டுமே கருப்பத் தடைக் கருவிகளைக் கையாளுவார்கள் என்றெண்ணுவது தவறு. விலை மதிக்க முடியாத ஒரு உயிரை உற்பத்தி செய்யும் பொருட்டே ஆண்பெண் தொடர்பு ஏற்பட்டிருப்பதாக எண்ணி, அதை நடைமுறையில் கொண்டுவந்தால் மட்டுமே, மக்கள் மேன்மையான வாழ்க்கை நிலையை அடைய முடியும். இதனால் விபரீதமான முறையில் காம இன்பம் துய்ப்பதும் காம வெறியும் தடைப்பட்டு நின்று விடும். இயற்கையாக விளையும் பலனை வேண்டா மென்று ஒதுக்கிற கலவி இன்பம், பயங்கரமான காம வெறியையும், ஆதரிக்க மனமில்லாதுபோயினும்கூட, இயற்கைக்கு விரோதமான தீயொழுக்கத்தையும் மன்னித்து விடுகிற மனப்பாங்கை உண்டாக்கிவிடும்.

எனது சுய சரிதையைப் படித்திராதவர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். காமம் என்கிற பாபப் படுகுழியில் நான் மூழ்கி இருந்ததாக இந்த நிருபர் முடிவுகட்டிவிட்டார். மற்றவர்களும் அவ்விதம் முடிவு கட்டிவிடக் கூடாது என்பதற்காகவே நான் இதை எழுது கிறேன். ஆண் பெண் தொடர்புபற்றி நான் பெற்ற அனுபவம் பொருத்தமுடையதாகையால் இந்த எச்சரிக்கை செய்ய வேண்டியதாயிற்று.

நான் அதிகப்படியாக அனுபவித்தது எல்லாம் என் மனைவி ஒருத்தியிடமேதான். கூட்டுக் குடும்பத்திலிருந்து வாழ்க்கை நடத்தியபடியால், இரவில் சில மணிநேரம் தவிர, தனிமை கிடைப்பது மிகவும் அரிது. அதன் காரணமாக, காம இன்பம் என்ற அறியாமையிலிருந்து இருபத்தி மூன்று வயதிலேயே நான் விழித்துக்கொண்டேன். 1899-ல் அதாவது எனக்கு முப்பது வயதான போது, பரிபூர்ணமாகப் பிரமசரியம் அனுஷ்டிப்பதென்று முடிவுசெய்தேன். என்னைத் துறவி என்று கூறுவது தவறு. வாழ்க்கையை ஒழுங்குபடுத்த நான் கொண்டுள்ள இலட்சியங்களை, பொதுவாக மனித சமுதாயத்தார் ஏற்றுக்கொள்ளும் பொருட்டே அவற்றை அவர்களிடம் சமர்ப்பிக்கின்றேன். இந்த இலட்சியங்களெல்லாம் படிப் படியாக எனக்கு ஏற்பட்டவையாகும். ஒவ்வொரு விஷய

மும் நான் சிந்தனை செய்து, அலசிப்பார்த்து நன்கு ஆராய்ந்து முடிவுகட்டியதாகும். நான் சொல்லுகிற பிரமசரியம், அஹிம்ஸை இரண்டும் என் சொந்த அனுபவம். பொதுஜன சேவை செய்ய வேண்டிய கடமை எனக்கு ஏற்பட்டபோது, இவை இரண்டும் எனக்குத் தேவையாயின. சீர்திருத்தக்காரனாகவும், அரசியல்வாதியாகவும், வக்கீலாகவும், இல்லறத்தானாகவும் தென் ஆப்பிரிக்காவில் நான் தனியாக வாழ்க்கை நடத்தினேன். இந்தக் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கும், பிற மனிதர்களோடு, ஐரோப்பியர்களுடனே, அல்லது எனது சொந்த நாட்டினருடனே கலந்து பழகுவதற்கும் காம இச்சையைக் கடுமையாகக் கட்டுப்படுத்துவதும், சத்தியத்தையும் அஹிம்சையையும் மேற்கொள்ளுவதும் எனக்கு அவசியமாயிற்று. சாதாரண மனிதனைப் போலவே நானும் ஒரு மனிதன் என்றும், அவர்களுக்குள்ள திறமையைப்போலவே எனக்கும் உண்டென்றும் எண்ணுகிறேன். அது மட்டுமல்ல. பிரமசரியம், அஹிம்சை ஆகிய இரண்டையும் நானே கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்ததாக நான் பெருமை பாராட்டவில்லை. நம்பிக்கையும் உறுதியும்கொண்டு, என்னைப்போல, பிறரும் முயலுவார்களேயானால், நான் அடைந்த பலனை மற்றவர்களும் - ஆண்களும் பெண்களுமே - அடைவார்கள் என்பது திண்ணம். நம்பிக்கையின்றிச் செய்யும் எந்தக் காரியமும் பயனற்றதாகும்; அடியற்ற பாதாளத்தை ஆழங்காண முயல்வதையே ஒக்கும் அது.

மாணவர் ஒருவரது சங்கடம்

''தங்கள் மனதிற்கு ஒவ்வாத எந்தக் காரியத்தையும்-சிறப்பாக-மணஞ்செய்துகொள்ளுவதைக்கூட எவரேனும் வற்புறுத்துவார்களேயானல், அதைத் தனித்து நின்ருகிலும், சட்டபூர்வமான முறையிலாகிலும் எதிர்க்க மாணவர்கள் முன்வர வேண்டும்."

மாணவர் ஒருவர் கேட்கிருர்:

''மெட்ரிகுலேஷன் பரீட்சையிலோ, அல்லது பி. ஏ. க்குக் குறைந்த பரீட்சையிலோ, மாணவன் தேறியிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். துரதிஷ்டவசமாக அந்த மாணவன் இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாகவும் இருக்கிருன் என்று வைத்துக்கொள்ளுவோம். இப்படிப் பட்டநிலையிலுள்ள மாணவன் வாழ்வதற்குப் போதிய வருவாய் தேடிக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? அல்லது இருபத்தைந்து வயது நிறைவதற்கு முன்பே மணம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டால், அதற்கு அவன் என்ன செய்ய வேண்டும்?''

மனைவியையும் குழந்தைகளையும் ஆதரிக்க முடியாதவனும், தனக்கு விருப்பமில்லாதிருந்தும் பிறர் செய்கிற கட்டாயத்திற்காக மணம்புரிந்துகொள்ளுகிறவனும் படித்த படிப்பு பயனற்றது என்று, இந்தக் கேள்விக்கு எளிதாகப் பதில் சொல்லிவிடலாம். நடந்துபோன காரியத்தைப் பற்றி, யோசித்துப் பயனில்லை. குழப்பமடைந்திருக்கிற இந்த மாணவருக்குப் பயன்படும் வகையில் ஏதாவது பதில் சொல்ல வேண்டுவது அவசியம். அவருடைய தேவை என்ன என்பதை அவர் தெரிவிக்கவில்லை. மெட்ரிகுலேஷன் படித்திருப்பதாக இறுமாப்புக்கொள்ளாமல், பிற சாதாரணத் தொழிலாளியைப் போலவே தன்னையும் பாவித்துக்கொண்டு, அவர் உழைத்துப் பாடுபட வேண்டும். இதன் மூலம் வாழ்வதற்கு வேண்டிய வருவாய் அவருக்குக் கிடைத்துவிடும்; யாதொரு கஷ்டமுமிராது. அறிவை அபிவிருத்தி செய்துகொள்ளப் போதிய அவகாசம் இல்லாத தொழிலாளியைக் காட்டிலும் இவர் கைகளையும் கால்களையும் திறம்பட உபயோகித்து, நன்கு பாடுபட இயலும். இதைக்கொண்டு ஆங்கிலப் படிப்பில்லாத தொழிலாளிக்கு அறிவு-குறைவென்று முடிவுகட்டிவிடக் கூடாது. படித்து மனக்கண் திறப்பதற்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளை

துரதிஷ்டவசமாகத் தொழிலாளருக்கு ஒருவரும் செய்யாது இருக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் படித்து அறிவுப் பயிற்சி பெற்றவர்களுக்கோ உலகத்திலே எங்குமேகாணாத ஒரு தண்டை இருந்து வருகிறது. பள்ளிக்கூடத்திலும் கல்லூரிகளிலும் படிக்கிற காலங்களில், கௌரவம் என்ற பெயரினால், தவறான சில எண்ணங்களை மாணவர்கள் மனதில் புகுத்திவிடுகிறார்கள். இதன் காரணமாக, பண்பட்டிருக்கும் மனமும் நிலைகுலைந்து போய்விடுகிறது. எனவே, உடலால் வருந்தி உழைக்காது, மேஜையருகே இருந்தபடியே சம்பாத்தியம் செய்வது தான் கௌரவமான வழி என்று மாணவர்கள் எண்ணி விடுகிறார்கள். இந்தக் கடிதம் எழுதிய மாணவர், உடல் உழைப்பின் மேன்மையை யுணர்ந்து, அந்தத் துறையில் இறங்கி, தமக்கும் தம் குடும்பத்திற்கும் வருவாய் தேடிக்கொள்ள முயல வேண்டும்.

குடும்ப வருவாயை அதிகப்படுத்தும் பொருட்டு, ஒழிவு நேரங்களில், மனைவியும் தொழிலில் ஈடுபடுவது நல்லது. இதனால் வருவாய் அதிகரிக்கும். அதைப்போல, குழந்தைகளும் வேலையில் ஈடுபடத் தகுதியுடையவர்களாய் இருப்பின், பயனுடைய காரியங்களில் அவர்களையும் ஈடுபடச் செய்ய வேண்டும். புத்தகம் படிப்பதால் மட்டுமே, அறிவு விருத்தியடையும் என்ற மிகவும் தவறான ஒரு எண்ணம் நமக்குள் இருந்து வருகிறது. இந்த எண்ணம் நம்மைவிட்டு அகன்று, சாஸ்திரீய முறைப்படி தொழிலாளர் செய்யும் தொழிலை நாமும் செய்தால், அதனால் அறிவு விரைவாக அபிவிருத்தி அடைகிறது என்ற உண்மையை நாம் உணர வேண்டும். கையின் உபயோகம் என்ன, கருவிகளின் உபயோகம் என்ன என்பதை நாம் படிப்படியாக மாணவருக்கு சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தவுடனேயே, மனம் உண்மையான பாதையில் சென்று, சரியானபடி அபிவிருத்தி அடைய ஆரம்பிக்கிறது. தங்களையும் தொழிலாளர்களாகவே பாவித்து, தொழில் முறையில் மாணவர்கள் ஈடுபடுவார்களாயின் அவர்களிடையே காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரசினையை, யாதொரு சிரமமுமின்றி, எளிதில் தீர்த்துவிடலாம்.

கட்டாயப்படுத்திச் செய்கிற மணத்தை உறுதியோடு மாணவர்கள் தடுக்க முன்வர வேண்டும். இதுவே, என் அபிப்பிராயம். தங்கள் மனதிற்கு ஒவ்வாத எந்தக் காரியத்தையும், சிறப்பாக, மணம் செய்துகொள்ளுவதைப் போன்றவற்றை எவரேனும் வற்புறுத்துவார்களேயானால், அதைத் தனித்து நின்றாகிலும், சட்டபூர்வமான முறையிலாகிலும் எதிர்க்க மாணவர்கள் முன்வர வேண்டும்.

மாணவருக்காக

"ஒருவர், தாம் செய்யும் காரியங்களின் பலாபலனை ஏற்றுக் கொள்ள மறுப்பது கோழைத்தனமாகும். கருத்தடைக் கருவிகளை உபயோகிப்பவர்களிடம் தன்னடக்க மென்ற அருங்குணமே இருக்க மாட்டாது. அவர்களுக்குத் தன்னடக்கம் என்பது அவசியமில்லை."

"*மாணவர் ஒருவரது சங்கடம்*" என்ற தலைப்புடன் தாங்கள் ஒரு குறிப்பு எழுதியிருந்தீர்கள். அது சம்பந்தமாய், தங்கள் ஆலோசனைக்காக, கீழே தந்துள்ள விஷயங்களை மிகுந்த தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"கேள்வி கேட்ட மாணவருக்கு நியாயமான முறையில் தாங்கள் பதில் அளிக்கவில்லை. நாம் கட்டும் முடிவுகளை யெல்லாம் இந்தப் பிரசினை தகர்த்து எறிந்துவிடுகிறது. அவருக்குத் தாங்கள் சொல்லியிருக்கிற பதில், தெளிவற்றதாயும் பொதுப்படையானதாயும் இருக்கிறது. கௌரவம் பொருந்தியவர்கள் என்று தவருக எண்ணிக்கொண்டிருப்பதை உதறித்தள்ளிவிடும்படியும், சாதாரணத் தொழிலாளிகளைப் போலவே தங்களைப் பாவித்துக்கொள்ளும்படியும் மாணவருக்குத் தெரிவித்திருக்கிறீர்கள். இப்படிப் பொதுப்படையாகப் பேசிவிடுவது யாதொரு பயனும் தராது. தங்களைப்போன்ற, காரியவாதியான ஒருவருக்கு, நிச்சயமாய் இது சிறப்புத் தருவதன்று.

"தயவுசெய்து இந்தப் பிரசினையை விரிவாக ஆலோசனை செய்து பாருங்கள். இதைத் தீர்ப்பதற்கு, விளக்கமான, காரியசித்தியான, பலன் தரக்கூடிய பதிலைத் தெரிவியுங்கள். முக்கியமாக, கீழே தந்துள்ள உதாரணத்தை மனதில் வைத்துக்கொண்டு, பதில் எழுதும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

"லக்ஷ்மணபுரி சர்வகலாசாலையில், நான் எம். ஏ. படித்துக்கொண்டிருக்கிறேன். (பாடம், புராதன இந்திய சரித்திரம்.) எனக்கு இப்போது வயது 21. படிப்பதில் எனக்கு மிக்க ஆசையுண்டு. வாழ்நாளில் எவ்வளவு படிக்க முடியுமோ அவ்வளவையும் படித்துவிட நான் விரும்புகிறேன். வாழ்க்கை சம்பந்தமாய்த் தாங்கள் கொண்டுள்ள இலட்சியங்கள் எனக்கு உற்சாகமூட்டி இருக்கின்றன. இன்னும் ஒரு மாதத்தில் எம். ஏ. வகுப்புக் கடைசிப் பரீட்சை வருகிறது. அது முடிந்த பிறகு, வாழ்க்கைத் துறையில் இறங்க வேண்டியவனாய் இருக்கிறேன்.

"எனக்கு மனைவி இருக்கிருள். அவளைத் தவிர, நான்கு சகோதரர்களும் (ஒருவனுக்கு மணம் ஆகிவிட்டது.) இரண்டு சகோதரிகளும் இருக்கின்றனர். (இருவருக்கும் வயது 12 க்குள்ளாகவே இருக்கும்.) பெற்றோரும் இருக்கின்றனர். இவர்கள் எல்லோரையுமே காப்பாற்ற வேண்டிய பொறுப்பு என்னைச் சார்ந்திருக்கிறது. எங்களிடம் ரொக்கப் பணம் கிடையாது. நிலபுலன்கள் இருப்பதும் மிகச் சொற்பம்.

"என் சகோதர சகோதரிகளைப் படிக்கவைப்பதற்கு நான் என்ன செய்யலாம்? காலதாமதம் செய்வதைக் காட்டிலும், விரைவாகவே, என் சகோதரிகளுக்கு மணம் முடிக்க வேண்டும். எல்லாவற்றையும்விட, உணவு, உடை, இரண்டிற்கும் என் செய்வது?

"கௌரவமான முறையில் உயர்தர வாழ்க்கை நடத்துவதில் நான் விருப்பமுடையவன். சௌகரியமான முறையில், வாழ்க்கை நடத்தப் பணம் வேண்டும். அவசரத் தேவைகளுக்கு ஒதுக்கிவைக்க வேண்டும். அது மட்டுமின்றி, எனக்கும் என்னைச் சார்ந்திருப்போருக்கும் சௌகரியங்கள் செய்துகொள்ள வேண்டும். சுருக்கமாகச் சொல்லப்போனால், இரண்டு வேளைக்கு நல்ல உணவும் சுத்தமான ஆடையும் கிடைத்தால் போதும்.

"பொருளாதாரத் துறையில் நான் நேர்மையாக நடந்துகொள்ள விரும்புகிறேன். உடம்பை விற்றோ, அல்லது அதிக வட்டி வாங்கியோ வாழ்க்கை நடத்த எனக்கு விருப்பமில்லை. தேச சேவை செய்ய வேண்டுமென்ற ஆசையும் எனக்கு மிகுதியாக இருக்கிறது. தாங்கள் குறிப்பில் காட்டி இருக்கும் நிபந்தனைகளை நிறைவேற்ற, எனது முழுத் திறனையும் உபயோகிக்க, நான் தயாராய் இருக்கிறேன்.

"எனக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை! எப்பொழுது, எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் தவிக்கிறேன். நான் படித்த படிப்பெல்லாம் கேடுதரும் பள்ளிப் படிப்பாயும், அனுபவத்திலன்றி ஆராய்ச்சி நிலைமையில் உள்ளதாயும் இருக்கிறது. எல்லாவற்றினும் சிறப்பாக, தாங்கள் சொல்லுகிற நூல்நூற்றல்-தங்களுக்கு விருப்பமான நூல்நூற்றல் இருக்கிறதே-அதையும் சில சமயங்களில் செய்யலாம் என்றுஎண்ணுவது உண்டு. யாரிடம் போய்க்கற்றுக்கொள்ளுவதென்று தெரியவில்லை. நூற்ற நூலைக்கொண்டு என்ன செய்வதென்றும் விளங்கவில்லை.

"நான் இருக்கிற நிலையில் கருப்பத்தடையைக் கையாளும்படி தாங்கள் சொல்லுவீர்களா? தன்னடக்கத்திலும் பிரமசரிய விரதத்திலும் எனக்கு நம்பிக்கை உண்டு என்று நான் உறுதி கூறுகிறேன். இவ்விதம் பிரமசாரியாவதற்குச் சிறிது காலம் பிடிக்கும்போல்தோன்றுகிறது. ஏனெனில், தன்னடக்கப் பயிற்சி பரிபூரணமாகக் கைகூடி வரும்வரையில் நான் செயற்கைக் கருப்பத்தடை முறையைக் கையாள வேண்டியிருக்கும். இல்லையேல், கருத்தரித்துப் பொருளாதார நிலை இன்னும் சீர்கெட ஏதுவாகும். அது மட்டு மல்ல. என் மனைவி நியாயமான முறையில் உணர்ச்சிவயப்பட்டவள். பரிபூரணமான தன்னடக்கத்தைக் கைகொள்ளும்படி அவளை வற்புறுத்துவது எனக்கு நியாயமாகத் தோன்றவில்லை. மேலும் யோசித்துப்பார்த்தால் காம இன்பம் என்பது ஆண் பெண் இரு பாலார் இடத்திலும் இயல்பாகக் காணப்படும் இயற்கை உணர்வுதானே? ஆதலால், எங்களை அதற்கு விதிவிலக்காகக் கொள்ளுவதற்கில்லை. என்னைப்போல, என் மனைவிக்குப் போதுமான பகுத்தறிவு இல்லை. காமத்தால் ஏற்படும் தீங்குகளைப்பற்றியும் பிரம

சரியத்தைப்பற்றியும் தாங்கள் எழுதி யிருக்கும் சிறந்த கட்டுரைகளைப் படித்து அவள் அறிந்துகொள்ளுவதற்கில்லை.

"இந்தக் கடிதம் சிறிது நீண்டுபோனமைக்காக வருந்துகிறேன். தெளிவு வேண்டும் என்பதற்காகவே, சுருங்கச் சொல்லல் என்பதை நான் கடைப்பிடிக்க வில்லை.

"பிரியம்போல், இந்தக் கடிதத்தைத் தாங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்."

இந்த மாணவருக்குள்ள சிரமங்கள் அனைத்தும் பார்ப்பதற்கு அபாயமானவைபோலத் தோன்றியபோதிலும், அவரே வரவழைத்துக்கொண்டவை யாகும். நமது நாட்டுக் கல்விமுறையும் அவருடைய வாழ்க்கை நிலையும் எவ்வளவு அபத்தமாய் இருக்கின்றன என்பதையே இவை தெரிவிக்கின்றன. இந்த அபத்த நிலை, கல்வியைப் பணம் திரட்டும் வியாபாரச் சரக்காக மாற்றிவிடுகிறது. கல்வியின் நோக்கம் இதைவிட இன்னும் மேம்பாடு உடையதாய் இருக்க வேண்டும் என்று கருதுகிறவன் நான். கோடிக் கணக்கான மக்களில் தம்மையும் ஒருவராக இந்த மாணவர் எண்ணிக்கொள்ளட்டும். தாம் படித்திருக்கிற பட்டத்தைக்கொண்டு இந்த மாணவரால் பல காரியங்களைச் சாதித்துக்கொள்ள முடியும். ஆனால், அந்த வசதி கூட யின்றி, அவரையொத்த வயதுடைய இளைஞர்களும் இளம் பெண்களும் கோடிக்கணக்கில் இருப்பதை அவர் கண்டுகொள்ளுவார். அவர் குறிப்பிட்டுள்ள உறவினர்கள் அனைவரையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை, அவர் ஏன் தன் தலையில் போட்டுக்கொள்ள வேண்டும்? தகுந்த உடல் நலமிருப்பின் வயதுவந்தவர்களும் தங்கள் தங்கள் போஷணைக்காகத் தாங்களே பாடுபட்டு உழைக்கலாம் தானே? அப்படி உழைக்காது இருப்பது ஏன்? சுறுசுறுப்பாக உழைக்கத் தெரிந்த ஆண்பிள்ளை என்பதற்காக எல்லோரையுமே போஷிக்க வேண்டிய பொறுப்பை, தம்மீது அவர் போட்டுக்கொள்ளுவது தவறு.

இதற்குச் சரியான மருந்து படித்த படிப்பில் அனேக விஷயங்களை மறந்துவிடுதலே யாகும். கல்வி சம்பந்தமாய்த் தமக்கு இருந்துவரும் கருத்துகளை மீண்டும் அவர் ஆலோசனை செய்து பார்ப்பது நலம். தாம் கற்ற கல்வியை, அதிக செலவுக்கு இடமான அதே கல்வியை, திரும்ப, தமது சகோதரிகளும் படிப்பதற்கு அவர் இடந்தரலா

காது. சாஸ்திரீய முறைப்படி, சில கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ளுவதனால் தங்கள் அறிவை அவர்கள் அபி விருத்தி செய்துகொள்ளக் கூடும். இப்படிக் கற்றுக் கொள்ள ஆரம்பித்ததுமே, அவர்களுக்கு உடலும் மன மும் ஒருங்கே அபிவிருத்தி அடையும். மனித சமுதாயத் தைச் சுரண்டிப் பிழைக்கும் எண்ணமின்றி, அதனுடைய தொண்டர்கள்தாம் நாம் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுமாயின், அதனால், அவர்களுடைய இதயம்—அதா வது அவர்களுடைய ஆன்மா—அபிவிருத்தி யடையும். தங்கள் சகோதரர்களுக்குச் சமதையாகவே, வயிற்றுப் பிழைப்பிற்கு வேண்டிய அளவு தங்களாலும் சம்பாதிக்க முடியும் என்ற எண்ணமும் அந்தப் பெண்களுக்கு உண்டாகும்.

தமது சகோதரிகள் மணத்தைப்பற்றியும் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். அதை இங்கு பரிசீலனை செய் வோம். "கால தாமதம் செய்வதைக் காட்டிலும், விரைவா கவே, மணம் முடிக்க வேண்டு" மென்று அவர் கூறுவதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. எவ்விதமாயினும் சரியே, இருபது வயது நிறம்புவதற்கு முன்னர், பெண்க ளுக்கு மணம் முடித்தல் கூடாது. எத்தனையோ ஆண்டு களுக்குப் பின்னர், நடக்க வேண்டிய ஒரு காரியத்தைப் பற்றி இப்போதிருந்தே யோசிப்பதில் என்ன பிரயோஜ னம்? வாழ்க்கைமுறை சம்பந்தமாய் தமக்கு இருந்து வரும் கருத்துக்களை அவர் மீண்டும் ஆராய்ந்து பார்ப்பாரானால், வாழ்க்கைத் துணைவர்களைத் தேர்ந் தெடுத்துக்கொள்ளும் உரிமையை, அவர் தமது சகோதரி களுக்கே விட்டுவிடுவார். மணச் சடங்குகள் ஏதேனும் இருந்தாலும், கலியாணத்திற்கு ஐந்து ரூபாய்க்கு அதிக மாகச் செலவு செய்தல் கூடாது. இவ்விதம் குறைந்த செலவில் நடைபெற்ற அனேக மணச் சடங்குகளை நானே நேரில் பார்த்து இருக்கிறேன். மாப்பிள்ளையும் அவருக்கு உறவினரான பெரியவர்களும், பெரும்பாலான கலியா ணங்களில், சர்வகலாசாலைக் கல்வி கற்றவரே யாவர்.

நூல் நூற்க எங்கே சென்று கற்றுக்கொள்ளுவது? எவ்விதம் கற்றுக்கொள்ளுவது என்பதைக்கூட, அறிந்து கொள்ள இயலாத நிலையில், இந்த மாணவர் இருக்கிறாரே

என்று நமக்குப் பரிதாபமாய் இருக்கிறது. நூற்கக் கற்றுக் கொடுக்கக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று, கவனமாக லக்ஷ்மணபுரியில் தேடியலைந்து பார்ப்பாரானால், நூற்கக் கற்றுக் கொடுக்கக் கூடிய இளைஞர்கள் அனேகரை அவர் காண்பார். கிராமிய உணர்ச்சியுள்ள ஆடவர் பெண்டிருக்கு முழுநேர வேலையாகவும், வயிற்றுப் பிழைப்புக்குப் போதிய வருவாய் தரக்கூடிய ஒரு தொழிலாகவும் நூல்நூற்றல் விரைவாக முன்னேறி வருகிறது. இதற்காக, இந்த மாணவரும் நூல் நூற்றலையே தொழிலாகக்கொள்ள வேண்டு மென்பதில்லை. எப்படிச் செய்ய வேண்டும் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை யெல்லாம், அவருக்குப் புரியும் வகையில், நான் விளக்கிச் சொல்லிவிட்டேன் என்றே நம்புகிறேன்.

இனி, கருப்பத்தடை பற்றிக் கவனிக்கலாம். இங்கு கூட, அவர் படுகிற சிரமம் கற்பனையானதே. தமது மனைவியின் அறிவுத் திறனை அவர் குறைவுபடுத்துவது தவறு. சாதாரணப் பெண்குலத்தைச் சேர்ந்தவளாய் இருப்பாளாகின், கணவன் தன்னடக்கமாய் வாழப் பிரியப்படுவதற்கு அவளும் உடனே இணங்குவாள். இதில் எனக்குத் துளிகூட சந்தேகமில்லை. முதலில் அவர் தமக்குத் தாமே உண்மையுடையவராய் நடந்துகொள்ளட்டும். போதுமான அளவு தன்னடக்கம் தம்மிடம் உண்டா என்பதை அவர் தம்மைத் தாமே கேட்டுக்கொள்ளட்டும். எனக்குக் கிடைத்துள்ள ஆதாரங்களைக்கொண்டு பார்த்தால், பெண்களைக் காட்டிலும் ஆண்களிடமே தன்னடக்கம் குறைவு என்று தெரிகிறது. அதற்காக, தன்னடக்கத்தைப் பயிலுவதற்கு வேண்டிய ஆற்றல் தம்மிடம் குறைவு என்று அவர் எண்ணிவிட வேண்டாம். பெரிய குடும்பத்தைக் காப்பாற்றுகிற பொறுப்பைத் தைரியமாக ஏற்றுக்கொண்டு, அதற்குத் தகுந்த வருவாய் கிடைக்கும் வழிகளையும் அவர் கண்டுபிடிக்க வேண்டும். கருப்பத்தடைக் கருவிகளையே அறியாதார் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள் என்பதையும் சில ஆயிரம் பேர்கள் மட்டுமே அந்தக் கருவிகளைப்பற்றி அறிவார்கள் என்பதையும் இந்த மாணவர் தெரிந்துகொள்ளுவாராக. குழந்தைகளை வளர்க்க வேண்டி யிருக்கிறதே என்று இந்தக் கோடிக்

கணக்கான மக்கள் பயப்படுவதில்லை; சில ஆயிரம் பேர்களே இதைக் கண்டு பயந்து சாகிறார்கள். ஒருவர் தாம் செய்யும் காரியங்களின் பலாபலனை ஏற்றுக்கொள்ள மறுப்பது கோழைத்தனமாகும். கருப்பத்தடைக் கருவிகளை உபயோகிப்பவர்களிடம் தன்னடக்கம் என்ற அருங்குணமே இராது. தன்னடக்கம் என்பது அவர்களுக்கு அவசியமில்லை. கருப்பத்தடைக் கருவிகளை உபயோகித்துக் குழந்தைகள் பிறக்காமல் தடுத்துவிடலாமாயினும், அதனால் போக உணர்ச்சி அதிகமாகி, உயிர்ச்சத்தையே அது வீண்விரைய மாக்கிவிடுகிறது. பெண்களைக்காட்டிலும் ஆண்களுக்கே வீண்விரையம் அதிகம். காமப் பேயோடு போராட அஞ்சுவது கோழைத்தனமாகும். குழந்தைகள் தேவையில்லை என்று எனக்கு எழுதியுள்ள நிருபர் கருதினால், நியாயமான, நிச்சயமான முறையாகிய தன்னடக்கத்தையே அவர் மேற்கொள்ள வேண்டும். அவரும் அவர் செய்கிற முயற்சியும் நூறு முறை தவறினாலும் பாதகமில்லை. போரிடுவதில்தான் மகிழ்ச்சி உண்டு; பலாபலன்கள் கடவுளின் கருணையைப் பொறுத்தே ஏற்படுகின்றன.

இலங்கை மாணவருக்கு

"கௌதம புத்தர் அவதரித்த நாட்டு மக்களுக்கு நீங்கள் ஏதாவது உதவி புரிய விரும்பினுல், அவர் உங்களுக்கும் எனக்கும் போதித்துள்ள பண்பாகிய கருணையை நினைத்தாவது, நீங்கள் யாவரும் கதர் அணிவீர்களென்பது நிச்சயம்."

கொழும்பு, ஆனந்தா கல்லூரியில், காந்திஜி பின்வருமாறு பேசினர்:

இலங்கைக்கும் கொழும்புக்கும் வந்து, உங்களுடன் கலந்து பழகும் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். எங்கே போனுலும், பள்ளியில் படிக்கும் குழந்தைகளைக் காண்பதில் எனக்கு மிகுந்த பிரியம் உண்டு.

இலங்கையிலுள்ள பிள்ளைகளில் பெரும்பாலோர் புத்தருடைய போதனையால் தூண்டப்பட்டு இருக்கிறீர்கள். நாம் எல்லோரும் சன்மார்க்க நெறியில் ஒழுக வேண்டுமென்று அந்த மகான் போதித்துள்ளார். சன்மார்க்க நெறி எது என்பதை அறிந்துகொள்ளும் பொருட்டே, சிறுவர்களாகிய நீங்கள் இத்தகைய நிலையங்களுக்கு வருகிறீர்கள். உயர்ந்தனவாயும் இனியனவாயும் இருக்கின்ற அனேக விஷயங்களை உள்ளத்தில் நிரப்பிக்கொள்ளுவது மட்டும் சன்மார்க்க நெறியன்று; அவற்றைச் செயலிலும் கடைப்பிடிப்பதே சன்மார்க்க நெறியாகும்.

உண்மை எண்ணி, உண்மை பேசி, உண்மையாக நடப்பதே சன்மார்க்க நெறியின் முதல் சித்தாந்தமாகும். ஜீவராசிகள் அனைத்தையும் நேசிப்பது, அதன் இரண்டாவது சித்தாந்தம். கௌதம புத்தர் எல்லையற்ற அன்பும் கருணையும் கொண்டவர். அதினுலேதான் மனித சமுதாயத்தைப் போலவே, விலங்கினங்களையும் நாம் நேசிக்க வேண்டுமென்று அவர் நமக்குப் போதனை செய்தார். பரிசுத்தமான சீலம் உடையோராய் ஒவ்வொருவரும் வாழ வேண்டும் எனவும் போதித்தார். ஆகையால், பிள்ளைகளே, உங்களிடம் அன்பு, உண்மை, கருணை யாவும் நிறைந்திருக்க வேண்டும்; பரிசுத்தமான சீலம் உடையோராய் நீங்கள் வாழ்க்கை நடத்த வேண்டும். இல்லையேல் இந்தப் பள்ளியிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளக்

கூடியது எதுவுமே இல்லை என்றுதான் ஏற்படும்.

கௌதம புத்தர் எங்கு பிறந்தார் என்பதை உங்களில் யாராவது சொல்ல முடியுமா? (இந்தியாவில், கபிலவாஸ்து என்னுமிடத்தில் பிறந்தார் என்று, ஒரு பையன் உடனே பதில் சொன்னான்.)

பிள்ளைகளே! கௌதமர் அவதரித்த நாட்டு மக்களுக்கு நீங்கள் அனைவரும் சிறிது கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். நான் சொல்லப்போகும் விஷயம் ஏற்கனவே உங்களுக்குத் தெரியுமோ, என்னவோ அதை நான் அறியேன். இருப்பினும், அதை உங்களிடம் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதை எண்ணி, நான் வருந்துகிறேன். கௌதம புத்தர் பிறந்த நாடு, அவர் வாழ்ந்து போதனை செய்த நாடு, அவருடைய புனிதமான திருவடிகள் தோய்ந்த நாடு, இப்போது வறுமையிலும் கொடிய துன்பத்திலும் மூழ்கிக் கிடக்கிறது.

இந்தியாவில் வசிப்போரில் கோடிக்கணக்கான பேர் மிகவும் ஏழைகளாய் இருக்கிறார்கள். பழமையாயிருந்து வந்த ஒரு தொழிலை - அதாவது ராட்டினத்தை—அவர்கள் கைவிட்டுவிட்டார்கள்; அல்லது கைவிடும்படி பிறர் செய்துவிட்டார்கள். இதுவே இந்த வறிய நிலைக்குக் காரணமாகும். ராட்டினத்தினால் நூற்று, நெய்த ஆடைகளையே இந்தியர்களும் பிறரும் வாங்கி அணிவார்களாயின் ராட்டினத் தொழிலை, மீண்டும் அனுஷ்டானத்துக்குக் கொண்டு வந்துவிடலாம். ராட்டினத்தில் நூற்று நெய்யப்பட்ட துணிக்குக் கதர் என்று பெயர்.

கௌதம புத்தர் அவதரித்த நாட்டினருக்கு நீங்கள் ஏதாவது உதவிபுரிய எண்ணினால், அவர் உங்களுக்கும் எனக்கும் போதித்துள்ள சிறந்த உபதேசமாகிய கருணையை நினைத்தாவது நீங்கள் யாவரும் கதர் அணிய வேண்டுவது அவசியமாகும். சிறுவர்களாகிய நீங்களும் மற்றவர்களும் அணிந்துள்ள ஆடை கொழும்பிலோ, அல்லது இலங்கையிலோ உற்பத்தி செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. கௌதம புத்தர் அவதரித்த நாட்டினரில் கோடிக்கணக்கான பேர் இன்று பசியால் வருந்துகிறார்கள். உடம்பை மூடிக்கொள்ளுவதற்கு உடை

அவசியமாதலால், பசியால் துன்புறும் இந்த மக்கள் நெய்த ஆடையை வாங்குவது உங்கள் முதற் கடமையாகும். நீங்கள் கதர் அணிவீர்களாயின், நான் எடுத்துக்காட்டிய சன்மார்க்க நெறியின் இரண்டாவது சித்தாந்தத்தைச் சரியானபடி கடைப்பிடிப்பது உங்களுக்கு எளிது. இப்போது நான் உங்களுக்குச் சொன்னவற்றை யெல்லாம் இரு மடங்கு பின்பற்ற உங்களின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இயற்கையாகவே கடமைப் பட்டவர்கள் ஆவர்.

நல்லவர்களாயும் புத்திசாலிகளாயும் தைரியசாலி களாயும் இருந்தால், நான் இப்போது சொல்லிய விஷயத்தை உங்கள் பெற்றோரிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் விவாதித்துப் பார்ப்பீர்கள். இந்தியாவிலிருந்து காந்தி என்ற பெயருடைய விநோதமான ஒரு மனிதர் வந்திருந்தாரே, அவர் என்ன சொன்னார் என்று அவர்களிடம் கேட்பீர்கள். நான் சொல்லுவதை அவர்கள் சரியாக உணர்ந்தால், அப்போது, நான் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையும் அவர்கள் கண்டிப்பாய் ஆதரிக்கவே செய்வார்கள். கதர் நிதிக்காக, நீங்கள் இப்போது பண முடிப்பு ஒன்று தந்திருக்கிறீர்கள். இந்தியாவில் பட்டினியால் வாடும் கோடிக்கணக்கான மக்களை எண்ணி, பண உதவி செய்த ஆசிரியர்களுக்கும் உங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கதர் அணிவது நீங்கள் இன்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ஒரு காரியத்தைப் பின்பற்றி நடப்பதே யாகும்.

கடவுள் உங்கள் எல்லோரையும் காப்பாராக!

கொழும்பு, நலந்தா வித்தியாலயத்தில் பேசியபோது, காந்திஜி இதே விஷயத்தைப் பின்வருமாறு சொன்னார்.

நான் செய்கிற தொண்டிற்கு நீங்கள் நன்கொடை தந்திருப்பதற்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தத் தொண்டே, இவ்வழகிய தீவிற்கு என்னை வரும்படி தூண்டிற்று. உங்களுடன் கலந்து பழக நேர்ந்தமைக்காக, நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

சிறிது நேர முன்பு, ஆனந்தா கல்லூரியில் படிக்கிற சிறுவர்களுக்கு என்ன சொன்னேனோ, அதையே

உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். மகான் புத்தர் உலகிற்கு வழங்கிய நெறி எதுவோ, அதை உங்களுக்கு இங்கு போதனை செய்கிறார்கள். சொந்த வாழ்க்கையில் புத்தர் சொன்ன அறநெறியை நீங்கள் கடைப்பிடியா விட்டால் இந்தப் பள்ளிக்கூடத்தில் வந்து படிப்பதனால் யாதொரு பயனுமில்லை; புத்தருடைய போதனைகளுக்கு நீங்கள் உண்மையான பிரதிநிதிகளாகவும் விளங்க முடியாது. புத்தருடைய போதனைகளில் நடுநாயகமாக விளங்கும் உண்மைகளை நீங்கள் வாழ்க்கையில் கடைப் பிடியாவிட்டால் இந்தப் பள்ளிக்கூடத்தில் கற்கும் மற்ற விஷயங்கள் யாவும் முற்றும் பயனற்றனவே யாகும். நன்னடத்தை, நற்சிந்தை, நற்பேச்சு, நல்வழி முதலியனவே அவர் போதித்த அறநெறிகள். மனித சமுதாயமாகிய குடும்பத்திற்கு ஏற்றதான, கலப்பற்ற தொரு சட்டத்தை அவர் நமக்கு அளித்துள்ளார். அவரிடம் காணப்பட்ட அன்பு - எல்லையற்ற அன்பு - மனிதர்களைப்போலவே, கேவலமான புழுக்களிடமும் சென்றது. புனிதமாக வாழ்க்கை நடத்த வேண்டு மென்று அவர் வற்புறுத்தி வந்திருக்கிறார்.

புத்தர் பிறந்த நாட்டு மக்களுக்கு நீங்கள் ஏதாவது செய்ய வேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அன்பு, பரிவு, கருணை இவற்றை ஒருசிறிதாவது அந்நாட்டு மக்களிடம் நீங்கள் காட்டுங்கள்.

புத்தர் ஒரு இந்தியர் என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். இந்திய நாட்டு மக்களுக்கே அவர் முதன் முதலாக உபதேசம் செய்தார். வருத்தம் தருவதாய் இருந்த போதிலும், உண்மையைச் சொல்லியே தீரவேண்டி யிருக் கிறது. துரதிர்ஷ்டவசமாக, புத்தர் பிறந்த நாடு, உலகி லுள்ள நாடுகளி லெல்லாம் மிகவும் ஏழ்மையான நாடாக இன்று இருந்து வருகிறது. கோடிக்கணக்கான மக்கள் அங்கு பட்டினியால் துன்புறுகிறார்கள். நூல்நூற்று வருவார்களேயானால் பட்டினியினால் வருந்த வேண்டிய அவசியமிராது. ராட்டினால் நூற்ற நூலைக்கொண்டு நெய்த கதரை, இலங்கைத் தீவிலுள்ள நீங்களும் இந்தியர்களும் வாங்கி அணிந்தால், இந்தப் பட்டினித் துன்பம் ஏற்பட மாட்டாது.

இலங்கையில், ஆடை உற்பத்தி செய்யப்படவில்லை என்று அறிகிறேன். நீங்கள் அணிகிற துணியில் ஒவ்வொரு முழமும் வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுவதாகத் தெரிகிறது. புத்தர் போதித்த கருணையை நீங்கள் அனுஷ்டானத்தில் கொணர வேண்டும். புத்தருக்குக் காணிக்கையாகச் செலுத்த விரும்புவதை, உங்கள் தேசத்தில் கதர் உற்பத்தியாகும்வரை, இந்தியாவில் செய்யப்பட்ட கதரை நீங்கள் வாங்கி உடுத்த விரும்புகிறேன்.

என் நண்பர், இப்போது மொழிபெயர்த்துச் சொல்லுபவர், ஸ்ரீ ஜயராம்தாஸ் ஜயவரானந்தா அணிந்திருக்கும் துணி, இலங்கையிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகப் பெருமை பாராட்டிச் சொன்னார். உங்களுக்குத் தேவைப்படும் கதரை அவர் உற்பத்தி செய்துதர இயலுமானால், இந்தியாவில் செய்யப்படும் கதரில் ஒரு முழம்கூட, நீங்கள் வாங்க வேண்டாமென்று நான் தடுத்துவிடுவேன். உங்கள் கையினலேயே நூற்று, கதர் உற்பத்தி செய்வீர்களேயானல், புத்தரை நீங்கள் இன்னும் நன்கு பின்பற்றியவர்கள் ஆவீர்கள். அப்படி நீங்கள் உற்பத்தி செய்வீர்களாயின் இந்தியாவிற்கு மட்டுமின்றி, உலகத்திற்கே மேன்மையான வழியைக் காட்டியவர்களும் ஆவீர்கள். நீங்கள் நன்கொடை தந்ததோடுகூட, கதரையும் அணிந்து கொண்டு வருவீர்களேயானல், சரியான காரியத்தைச் செய்தவர்களாவீர்களென்று சொல்லுவேன்.

நீங்கள் தந்த நன்கொடைக்காகவும், இந்தப் பள்ளிக்கூடத்திற்கு என்னை அழைத்ததற்காகவும் ஆசிரியர்களுக்கும் பையன்களுக்கும் எனது நன்றியை மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உங்கள் யாவரையும் ஆசிர்வதிக்க வேண்டுமென்று, நான் கடவுளை வணங்குகிறேன்.

சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு அறிவுரை

"சட்டத்தொழிலைப் புனிதப்படுத்துவது என்பதன் பொருள், பணவருவாயைக் குறைத்துக்கொள்ளுவதன்று. இதை நீங்கள் முதலில் மனதில்கொள்ள வேண்டும். துரதிர்ஷ்டவசமாக நிலைமை பெரும்பாலாக அப்படித்தான் இருந்துவருகிறது. தேசத்தின் நலன் கருதிச் சட்டத்தொழிலைச் செய்வதே அதைப் புனிதப்படுத்துவதாகும்."

கொழும்பு சட்டக் கல்லூரியில், "சட்டத் தொழிலை எப்படிப் புனிதப்படுத்தலாம்" என்ற கேள்விக்கு, காந்திஜி பின்வருமாறு பதில் சொன்னார்:

இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அதிகார தோரணையோடு இதற்கு என்னால் மறுமொழி கூற முடியவில்லை என்றால் வேறு யாராலுமே இதற்கு மறுமொழி கூற முடியாது. சட்டத் தொழிலில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்திய காலத்தில், உண்மை, நேர்மை இரண்டையும்விட்டு நான் அணுவளவுகூட விலகியது கிடையாது.

சட்டத் தொழிலைப் புனிதப்படுத்துவது என்பதன் பொருள், பணவருவாயைக் குறைத்துக்கொள்ளுவதன்று. எப்பொழுதும் இதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ளுவது நல்லது. துரதிர்ஷ்ட வசமாக, நிலைமை பெரும்பாலாக இப்போது அப்படித்தான் இருந்து வருகிறது. தேச நலன் கருதிச் சட்டத் தொழிலைச் செய்வதே அதைப் புனிதப் படுத்துவதாகும். தேச நலன் ஒன்றையே கருதி, தங்கள் நுணுக்கமான சட்டத்திறன் அனைத்தையும் உபயோகித்து, தியாக வாழ்க்கை வாழ்ந்த, புகழ் பெற்ற வழக்கறிஞர்கள் எல்லா நாடுகளிலுமே இருந்திருக்கிறார்கள். அதன் காரணமாக, தரித்திரத்திற்கு ஆளாக நேர்ந்தபோதிலும், அவர்கள் அதற்காக வருந்தியதில்லை. இந்தியாவைப் பொறுத்த வரையில், மனமோகன கோஷ் அவர்களை அப்படிச் சொல்லலாம். அவுரித் தோட்ட முதலாளிக்கு விரோதமாக அவர் வழக்கு நடத்தினார். உடல் நலத்தையும் பொருட்படுத்தாது—ஏன் உயிரையுமே பொருட்படுத்தாது-

ஏழைக் கட்சிக்காரர்களுக்காக அவர் அரும் பாடு பட்டார். தாம் பட்ட சிரமத்திற்காக ஏழைக் கட்சிக்காரர்களிடமிருந்து ஒரு பைசாக்கூட அவர் வாங்கவில்லை. மிகவும் புத்தி நுட்பம் வாய்ந்த வழக்கறிஞர் என்பது மட்டுமல்ல; அவர் மிகப் பெரிய கொடை வள்ளலும் ஆவார். இந்தப் பெரியாரை நீங்கள் உதாரணமாகக்கொள்ள வேண்டும். இதைவிட நல்லதொரு நீதியை ஆசிரியர் ரஸ்கின் 'அன்டு தி லாஸ்டு' என்ற புத்தகத்தில் சொல்லியிருக்கிறார். "ஒரு தச்சனுடைய வேலைக்கு ஒரு ஷில்லிங் கூடக் கிடைப்பதில்லை. அப்படியிருக்கும்போது ஒரு வக்கீல் பதினைந்து ஷில்லிங் வாங்குவது நியாயமா?" என்று அவர் கேட்கிறார். வக்கீல் வாங்கும் பணம் பெரும்பாலும் மிகவும் அதிகமாகவே இருக்கிறது. நானும் அப்படி அதிகமாகவே 'பீஸ்' வாங்கியிருக்கிறேன். அதிகமாகப் 'பீஸ்' வாங்கியபோதிலும் பொதுஜன ஊழியம் செய்வதற்குச் சட்டத் தொழில் எனக்குத் தடையாய் இருந்ததில்லை.

இன்னொரு விஷயத்தையும்பற்றி நான் எச்சரிக்க விரும்புகிறேன். தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களிலும், அனேகமாக, எல்லா இடங்களிலுமே கட்சிக்காரர்களின் நலத்தை எண்ணி, விரும்பியோ விரும்பாமலோ, பொய்யைப் புகுத்தலாம் என்று வக்கீல்கள் கருதுகிறார்கள். கட்சிக்காரர் குற்றவாளியாய் இருப்பினும் அவன் சார்பாக வாதாடுவது வக்கீல்கள் கடமை என்று சொல்லுகிற அளவிற்கு, ஒரு பிரபல ஆங்கில வக்கீல் வந்துவிட்டார். நான் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. நீதிபதிகளின் முன்னர் நடந்தவற்றை எடுத்துக்காட்டி, அவர்கள் உண்மையைத் தெரிந்துகொள்ள உதவி செய்வதே வக்கீல்களின் கடமையாகுமே யன்றி, குற்றம் செய்திருப்பவனைக் குற்றவாளி யல்ல என்று நிரூபிப்பது அன்று. உங்கள் தொழிலின் கண்ணியத்தை நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும். உங்கள் கடமையை நிறைவேற்ற நீங்கள் தவறிவிடுவீர்களேயானல் மற்றத் தொழில்களின் நிலைமை என்னவாகும்? வருங்காலத்தின் தந்தைகளாய் விளங்கப் போகிறவர்கள் என்று பெருமை பாராட்டிக்கொண்ட இளைஞர்களே! உணவிற்கு உப்பு எவ்வளவு அவசியமோ, அதைப்போல, தேசத்திற்கு நீங்களும் முக்கியமானவர்கள். உப்பு தன்னுடைய உவர்ப்புத்தன்மையை இழந்துவிடுமேயானல், மறுபடியும் அதற்கு எதைக்கொண்டு உவர்ப்பு ஊட்டுவது?

தூய வாழ்க்கை நடத்த வேண்டுகோள்

"உங்களுடைய கல்வி தூய்மை, உண்மை என்ற பலமான அஸ்திவாரத்தின்மீது கட்டப்பெறுதல் வேண்டும். அப்படிக் கட்டப்பெறாத கல்வி ஒன்றுக்கும் பயனற்றதாகிவிடும், பிள்ளைகளே! உங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் யாவரும் தூய வாழ்க்கை நடத்த வேண்டும்...... அப்படி நடத்தாவிட்டால் நீங்கள் எவ்வளவுதான் படித்திருந்தபோதிலும் சரி, நீங்கள் சிறந்த படிப்பாளிகளாக விளங்கியபோதிலும் சரி, அதனால் பயனே இல்லை. உங்கள் வாழ்க்கை கெட்டுப் போய்விட்டதாகவே நான் சொல்லுவேன்."

கண்டி, தர்மராஜ் கல்லூரியில் பேசியபோது காந்திஜி சொன்னதாவது :

நான் எவ்வளவோ அதிர்ஷ்டசாலி. உலகத்தின் எந்தப் பகுதிக்குப் போனாலும், சொந்த வீட்டில் இருப்பது போன்ற உணர்ச்சியே எனக்கு ஏற்படுகிறது. அங்கெல்லாம் சொந்த வீட்டில் நடந்துகொள்ளுவதைப் போலவே நான் நடந்துகொள்ளுகிறேன். இந்த உணர்ச்சி இல்லாவிட்டால் தற்கொலை செய்துகொள்ளாமலே இறந்து போக வேண்டிய நிலை வெகுகாலத்திற்கு முன்னரே எனக்கு ஏற்பட்டுஇருக்கும். பார்சி நண்பர்களைக் காணநேரும்போது, இந்த உணர்ச்சி எனக்கு இரட்டித்துவிடுகிறது. இதன் உண்மையை நீங்கள் உணர்வது கடினம். நான் விளையாட்டாகச் சொல்லுகிறேன் என்பதாக நீங்கள் நினைத்தாலும் நினைக்கக்கூடும். விளையாட்டாகச் சொல்லவில்லை. உண்மையாகவே சொல்லுகிறேன். தென் ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் அனேக பார்சிக்காரர்களுடன் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்கள் என்னிடம் காட்டிய அன்புப் பெருக்குக்கு எல்லையே இல்லை. இப்போதுகூட எனக்குப் பார்சி நண்பர்கள் அனேகர் இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். பல பார்சி நண்பர்கள் எனக்கு உண்டு என்பதை நான் உங்களிடம் சொல்ல வேண்டியது அவசியம். இந்தியாவின் முதுபெரும் கிழவரான தாதாபாய் நவுரோஜி அவர்களின் பேத்திமார் மூவரும் என்னுடன் இருந்து, சிறந்த

தொண்டு புரிந்து வருகிறார்களென்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி யடைகிறேன்.

சொந்த விஷயத்தையும் குடும்ப விஷயத்தையும் பற்றிப் பேசியே நான் உங்கள் பொறுமையைச் சோதிக்க லாகாது. பணமுடிப்புத் தந்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இங்கு வந்து கலந்துகொள்ளச் சந்தர்ப்பம் வாய்த்தமைக்கு மகிழ்ச்சி யடைகிறேன்.

டிரினிட்டி கல்லூரியில் படிக்கும் சிறுவர்களுக்கு சமீப காலத்தில் என்ன சொன்னேனே, அந்த விஷயத்தையே உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். உங்களுடைய கல்வி தூய்மை, உண்மை என்ற பலமான அஸ்திவாரத்தின்மீது கட்டப்பெறுதல் வேண்டும். அவ்வித அஸ்திவாரத்தைக்கொண் டிராத கல்வி முற்றும் பயனற்ற தாகிவிடும். பிள்ளைகளே, நீங்கள் யாவரும் தூய வாழ்க்கை வாழ வேண்டும். எண்ணம், பேச்சு, செயல், ஆகிய மூன்றிலும் நீங்கள் பரிசுத்த முடையவர்களாய் விளங்க வேண்டும். இல்லையேல், நீங்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும் சரி, எவ்வளவோ சிறந்த படிப்பாளிகளாக விளங்கியபோதிலும் சரி, அதனால் பயனே இல்லை; உங்கள் வாழ்க்கை பாழடைந்துவிட்டதாகவே நான் சொல்லுவேன்.

ஒரு விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரும்படி என்னைக் கேட்டுக்கொண்டார்கள். பரிசுத்தம் என்ற சொல் யாவற்றையும்விட, முதலில் மனச் சுத்தத்தையே குறிக்கும். மனத்தில் கிடப்பதே செயலாகவும் நடத்தையாகவும் வெளிப்படுகின்றன. வாயைச் சுத்தமாக வைத்துக்கொள்ள விரும்புகிற பையன் ஒருக்காலும் கெட்ட சொற்களைச் சொல்ல மாட்டான். இது தெளிவு. அதோடுகூட, மனம், அறிவு இரண்டையும் கெடுத்துவிடக்கூடிய பொருள்களையோ, அல்லது தம் நண்பர்களுக்குத் தீங்குபயப்பனவாயுள்ள பொருள்களையோ தன் வாயில் திணித்துக்கொள்ள மாட்டான்.

புகைப் பிடிக்கிற பழக்கத்திற்கு ஆளான சிறுவர்களை நான் பார்த்திருக்கிறேன். இந்தக் கெட்ட பழக்கம் பர்மாவில் அதிகம். அதே போல இலங்கையிலும் இந்தப் பழக்கம் அதிகமாக இருக்கிறது. எங்குமே இந்தத் தீய

பழக்கத்திற்கு ஆளாகிப் பையன்கள் கெட்டுப் போகிறார்கள். பார்சிகளை நெருப்பு வழிபாடு செய்பவர்கள் என்று சொல்லுவதுண்டு. பார்சிகளோ நெருப்புத் தெய்வமாகிய சூரியனை, அதனுடைய மகத்தான தோற்றத்தில் வழிபட்டு, அதன் மூலம் கடவுளைக் காண்கிறார்கள். தவறாகவே அவர்களை அவ்விதம் அழைத்துவிட்டார்கள் போலும். உங்களைக் காட்டிலும் நெருப்பு வழிபாடு செய்கிறவர்கள் வேறு யார் இருக்கிறார்கள்?

நல்ல பார்சிகளா யிருப்பவர்கள் பீடி, சிகரெட்டுப் பிடிக்க மாட்டார்கள். உங்கள் மேற்பார்வையில் இருந்து வரும் பிள்ளைகள் இந்தக் கெட்ட பழக்கத்திற்கு ஆளாகித் தங்கள் வாய்களைக் கெடுத்துக்கொள்ளாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

யாராவது புகைப் பிடிப்பவர்கள் இருந்தால், அந்தக் கெட்ட பழக்கத்தை இனி விட்டுவிடுங்கள். புகைப் பிடிப்பது மூச்சைக் கெடுத்துவிடும். அருவறுக்கத் தக்கதொரு பழக்கம் இது. பீடி, சிகரெட்டுப் பிடிப்பவர்கள் ரயிலில் பிரயாணம் செய்யும்போது பக்கத்தில் யார் இருக்கிறார்கள் என்றுகூடக் கவனிப்பதில்லை. பக்கத்தில் இருக்கிறவர்கள், புகைப்பிடித்துப் பழகாதவர்களாய் இருப்பினும் அதைப்பற்றி அவர்கள் கவனிப்பதே யில்லை. அவர்கள் வாயிலிருந்து வரும் புகையின் நாற்றம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு வெறுப்புத் தருவதாய் இருந்தபோதிலும் கவனியாது குடித்துக்கொண்டே இருப்பார்கள்.

பார்வைக்குச் சிகரெட் மிகச் சிறிய பொருளாய்த் தோன்றலாம். ஆனால் வாயில் நுழைந்து வெளிவரும்போது சிகரெட்டுப் புகை நச்சுத்தன்மையுள்ளதாக மாறிவிடுகிறது. இது மட்டு மல்ல; பீடி சிகரெட்டு பிடிப்பவர்கள் கண்ட கண்ட இடங்களி லெல்லாம் எச்சில் வேறு துப்பி விடுகிறார்கள்.

குடியைக் காட்டிலும் புகையிலை உபயோகித்தும் பழக்கத்தால் ஏற்படும் கெடுதல்கள் எவ்வளவு அபாயகரமானவை" என்பதை டால்ஸ்டாய் எழுதிய கதை ஒன்றினால் விளக்கிக்காட்டி, காந்திஜி பின்னர் பேசியதாவது:

புகைப் பிடிப்பது ஒருவனுடைய அறிவை மழுங்கடித்துவிடுகிறது. இது கெட்ட பழக்கம். டாக்டரிடத்தில்

இதைப்பற்றிக் கேட்பீர்களாயின், நல்ல டாக்டர்களாய் இருப்பவர்கள், வயிற்றினுள் வரும் பிளவை நோய்க்கு இது அடிப்படையான காரண மென்றும், அனேக சமயங்களில் தீராத கொடிய நோயை இது உண்டுபண்ணிவிடுகிற தென்றும் சொல்லுவார்கள்.

பீடி சிகரெட்டு பிடிப்பது உணவு வகையைச் சேர்ந்த தன்று. அப்படியிருக்கும்போது அதற்கு அவசிய மென்ன? பிறர் தூண்டிவிட்டதைக் கேட்டு புகைப் பிடிக்க ஆரம்பிப்பதினுல் முதன் முதலில் கொஞ்சம் மகிழ்ச்சியாய் இருக்கும். இதைத் தவிர இதனுல் வேறொரு நலனும் இல்லை.

நல்ல பிள்ளைகளாக இருக்க விரும்பினுல், பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் கீழ்ப்படிந்து நடக்க விரும்பினுல், பிள்ளைகளே! நீங்கள் பீடி சிகரெட்டு பிடிக்கிற பழக்கத்தை நிறுத்திவிடுங்கள். இதனுல் மீதப்படும் பணத்தை தயவு செய்து எனக்கு அனுப்பிவையுங்கள். இந்தியாவில் கோடிக்கணக்கான மக்கள் பட்டினியால் வருந்துகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் மீதப்படுத்துகிற பணம் பயன் படும்.

மாணவர்களும் அறநெறிவாழ்க்கையும்

''புத்தகங்களின் பக்கங்களிலிருந்து ஒழுக்கமென்பதைப் பிரின்சிபால் அவர்களோ அல்லது பேராசிரியர்களோ எடுத்துத் தந்துவிட முடியாது. ஒழுக்கத்தை அமைத்துக் கொள்ளுவது உங்கள் வாழ்க்கையிலேயே அமைந்து கிடக்கிறது; ஏன், உங்களுக்குள்ளேயே அது அமைந்து கிடப்பதாகச் சொல்லிவிடலாம்.''

கொழும்பு ஸர்ஹிரா கல்லூரியில் பேசியபோது, காந்திஜி சொன்னதாவது:

இந்தக் கல்லூரிக்கு வர நேர்ந்தமைக்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

தென் ஆப்பிரிக்காவில் நான் இன்பத்தில் திழைத்திருந்த நாட்களை நீங்கள் நினைப்பூட்டினீர்கள். எனது வாழ்க்கையிலே எனது நாட்டு முஸ்லிம் நண்பர்களுடன் நெருங்கித் தொடர்புகொண்டு வாழ்ந்த காலம் என்று அந்த நாட்களைச் சொல்லிவிடலாம். 1893-ஆம் வருஷ ஆரம்பத்தில், மிகவும் உயர்ந்த, பண்பட்ட முஸல்மான்கள் சிலரோடு பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர்களிடையே எனக்குச் செல்வாக்கும் உண்டு. எனவே, உங்களோடு கலந்து பழகும் பொருட்டு, நீங்கள் என்னை அழைத்ததைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை.

இலங்கையிலிருந்து திரும்பியதும், மௌலானா ஷவுக்கத்தலி இலங்கை முஸல்மான்கள் கூடிய விரைவில் என்னைக் காண விரும்புவதாகத் தெரிவித்தார். அவரும் நானும் ஈடுபட்டிருந்த வேலை, அந்தச் சமயத்தில் என்னை இங்கு வரவொட்டாதபடி தடுத்துவிட்டது.

நான் கொழும்புக்குக் கப்பலேறுமுன், டெல்லியிலுள்ள ஜமியா கல்லூரிப் பேராசியர்களோடும் பையன்களோடும் கலந்து பழகியதை, இந்தியச் செய்திப் பத்திரிகையைப் படிக்கும் பழக்க முடையவர்கள் படித்திருப்பீர்கள். இன்னும் வேறுபல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டியதிருப்பதால், பிரசங்கம் புரிவதற்குப் போதிய அவகாசமில்லை. எனவே டெல்லியிலுள்ள பையன்களுக்குச் சொன்னவற்றையே உங்களுக்கு நான் இங்கு சுருக்கமாகச் சொல்லப் போகிறேன்.

இந்தப் பெரிய கல்லூரியில் நீங்கள் படிக்கிற படிப்பெல்லாம், பரிசுத்தமான ஒழுக்கம் என்ற அஸ்திவாரத்தின்மீது கட்டப்பட வேண்டும். இல்லையேல், அதனல் யாதொரு நலனும் இல்லை.

சில வருஷங்களுக்குள்ளேயே நீங்கள் அடைந்திருக்கிற முன்னேற்றத்தின் அதிசயத்தையும், உணர்ச்சியோடும் உற்சாகத்தோடும் இங்கு காரியங்கள் நடைபெறுவதையும் நீங்கள் வெளியிடுகிற பத்திரிகைகளின் மூலமாக நான் தெரிந்துகொண்டேன். இவற்றைக் கண்டு என்னல் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை. அஸ்திவாரக் கல்நாட்டு வைபவத்தின்போது, கவர்னருக்கு வாசித்துக் கொடுத்த ரிப்போர்ட்டை இப்போதுதான் படித்தேன். நல்லொழுக்கம் என்ற அஸ்திவாரக் கல்லை நாட்டி, அதன்மீது கற்கள் கற்களாக அடுக்கி, இந்தக் கட்டிடத்தை நாம் கட்டிவருவோமேயானல், எவ்வளவு நன்மையான காரியம் ஆகும் அது என்று நான் எண்ணினேன். அந்த அஸ்திவாரத்தின்மீது நாம் கட்டிடத்தைக் கட்டுவோமேயானல், பிற்காலத்தில் இந்தக் கட்டிடத்தைப் பார்க்கும்போது நமக்கு உவகையும் பெருமிதமும் உண்டாகும். ஒழுக்கம் என்பது சுண்ணும்பினலும் கல்லினலும் கட்டக்கூடிய பொருளன்று. ஒழுக்க மென்பதைச் சொந்த முயற்சியினலேயே கட்ட வேண்டும். பிறருடைய உதவி கொண்டு கட்டிவிடலாம் என்பது இயலாத காரியம். புத்தகங்களின் பக்கங்களிலிருந்து ஒழுக்க மென்பதை, பிரின்சிபாலோ அல்லது பேராசிரியர்களோ எடுத்து வழங்க முடியாது. உங்கள் வாழ்க்கையிலேயே ஒழுக்கம் என்பது அமைந்து கிடக்கிறது; உண்மையைக் கூறினல் உங்களுக்குள்ளேயே அது அமைந்து கிடக்கிறது என்று கூடச் சொல்லிவிடலாம்.

ஹிந்து மதம், கிறிஸ்தவ மதம் இன்னும் உலகிலுள்ள வேறுபல மதங்களையும் நான் படித்து வந்தேன். அப்போது வேறுபாடுகள் பல இருப்பினும், அடிப்படையில் சகல மதங்களிலும் ஒற்றுமை நிலவியதைக் கண்டேன். உண்மையும் குற்றமற்றதன்மையும் அனைத்துக்கும் பொதுவானதாய் அமைந்து இருக்கின்றன. பலாத்காரம் செய்யாமை, கொலை செய்யாமை ஆகிய இரண்டையுமே நான்

குற்றமற்றதன்மை என்று சொல்லுகிறேன். பிள்ளைகளே! உண்மையையும் குற்றமற்றதன்மையையும் பாதுகாக்க நீங்கள் முன்வருவீர்களாயின், பலமான அஸ்திவாரத்தின் மீதே உங்கள் வாழ்க்கை நடைபெறுகிறது என்ற உணர்ச்சி உங்களுக்கு ஏற்படும்.

தாராளமாகப் பணமுடிப்புத் தந்ததற்காக உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். இந்தியாவில், கோடிக் கணக்கான மக்கள் பசியால் வருந்துகிறார்கள். அவர்களுக்கு வேலை தேடிக்கொடுக்கும் பொருட்டு இந்தத் தொகை பயன்படுத்தப்படும். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய எல்லோரிலுமே வேலையில்லாது தவிப்பவர்கள் உண்டு. இந்த நன்கொடையைத் தந்து, பசியால் வருந்தும் கோடிக்கணக்கான மக்களுடன் நீங்கள் ஒருவாறு தொடர்பு கொண்டுவிட்டீர்களெனலாம். இதைக் கண்டு கடவுள் மகிழ்ச்சி அடைவார். நீங்கள் தந்த இந்தப் பணம் எதற்காக உபயோகப்படுத்தப்படும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளாவிட்டால், நீங்கள் கொண்டுள்ள தொடர்பு வலிமையற்ற தொடர்பாகவே ஆகிவிடும். என் உடல்மீது கிடக்கிற துணியைப் போன்ற துணிகளை உற்பத்தி செய்யும் பொருட்டே, இந்தப் பணம் உபயோகிக்கப்படும். இதனால் வேலையில்லாது தவிக்கும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேலை கிடைக்கும். இப்படி உற்பத்தி செய்த துணிக்குக் கதர் என்று பெயர். இதை வாங்கி அணிபவர்களை நீங்கள் காண இயலாவிட்டால் இந்தப் பணத்தினால் எவ்வித பிரயோஜனமும் இல்லை.

நமது நாகரிக வாழ்க்கையையும், நாகரிக மோகத்தையும் திருப்திசெய்துகொள்ளுவதற்கு ஏற்ற காலம் இது. இந்தியாவில் வசிக்கும் கோடிக்கணக்கான மக்களுடன் ஒரு நிரந்தரமான தொடர்பை நீங்கள் வைத்துக்கொள்ள விரும்பினால், இனி, நீங்கள் கதர் அணிவீர்கள் என்பது நிச்சயம்.

மகிந்தா கல்லூரியில்

"ஆசிரியர்களின் சொந்த வாழ்க்கையிலிருந்து அதிகமாகக் கிரகித்துக்கொள்ளுகிறார்களேயன்றி, ஆசிரியர்கள் படித்துக் காட்டும் புத்தகங்களிலிருந்தோ அல்லது அவர்கள் புரிகிற பிரசங்கங்களிலிருந்தோ பிள்ளைகள் அதிகமாகக் கிரகித்துக் கொள்ளுவதில்லை..........வாயினால் ஒன்றைச் சொல்லிக் கொடுத்து மனதில் ஒன்றை நினைத்துக்கொண்டிருக்கிற ஆசிரியர் ஒரு நாளும் உருப்பட மாட்டார்."

காலியிலுள்ள மகிந்தா கல்லூரியில், பரிசு வழங்கும் வைபவத்தின் போது, காந்திஜி கீழ்வருமாறு கூறினார் :

மனதிற்கினிய இந்த வைபவத்தில் கலந்துகொள்ள நேர்ந்தமைக்காக, நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். அனேக பையன்களுடன் கலந்து பழகவும் இங்கே நடக்கிற நிகழ்ச்சி முறைகளைக் கண்டு களிக்கவும் அனுமதி தந்து, நீங்கள் என்னை மிகவும் கௌரவப்படுத்திவிட்டீர்கள். உண்மையில் இது எனக்கு மிகவும் உயர்ந்த புகழுரையாகும்.

இந்த நிலையமானது படிப்படியாக முன்னேறி, விரிவடைய விரும்புகிறேன். அவ்விதம் விரிவடைவதற்கு இந்த நிலையம் தகுதியுடையதே யாகும். இந்த அழகிய தீவிற்கு வந்து, இந்தத் தீவைப்பற்றியும் இங்குள்ள மக்களைப்பற்றியும் நான் போதுமான அளவு தெரிந்து கொண்டுள்ளேன் எனலாம். இந்த நிலையத்தை மட்டு மல்ல, இதைப்போன்ற இன்னும் பல நிலையங்களையும் ஆதரிப்பதற்குப் போதுமான பௌத்தர்கள் இந்தத் தீவில் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். எனவே, இந்தப் பள்ளிக்கூடத்திற்குப் பணத்தைப்பற்றிய கவலை இராதென்றே நம்புகிறேன். தென் ஆப்பிரிக்கா, இந்தியா இரண்டிலுமே கல்விநிலையங்கள் சம்பந்தமாய் எனக்குச் சிறிது அனுபவமுண்டு. கல்லும் சாந்தும்கொண்டு கட்டிய கட்டிடங்கள் மட்டும் கல்விநிலையங்கள் ஆகா. உண்மையான சிறுவர் சிறுமியரே நாள்தோறும் இத்தகைய நிலயங்களைக் கட்டுபவர்கள் ஆவர். பள்ளிக்கூடங்கள் எனும் பெயரால் மிகப் பெரிதாகவும் சிற்பநூல் முறைப் படியும் கட்டப்பட்ட அனேக கட்டிடங்களை நான் பார்த்

திருக்கிறேன். அவை யாவும் சுண்ணம்படித்த வெறும் கல்லறைகளே யன்றி வேறில்லை. இதற்கு நேர்மாறாக வுள்ள சில பள்ளிக்கூடங்களும் உண்டு. அவை தினந் தோறும் பணமின்றிக் கஷ்டப்படுவதைக் காணலாம். பணத் தேவை இருப்பதன் காரணமாகவே அந்த நிலயங் கள் நாள்தோறும் ஆன்மநெறியில் முன்னேறிச் செல் கின்றன. எவரை நீங்கள் இதய கமலத்தில் வைத்துப் பேரரசர் என்று போற்றுகிறீர்களோ, எவரை உலகத்து மக்கள் பெரிய மகான்களில் ஒருவராக மதிக்கிறார்களோ, அவர், தாம் செய்த உபதேசங்களை யெல்லாம் மனிதனால் கட்டப்பட்ட மாளிகையிலிருந்து செய்யவில்லை; மகிமை பொருந்திய மரத்தின் நிழலில் இருந்துகொண்டுதான் உபதேசித்தார். இலங்கையிலுள்ள எந்தப் பையனும் எந்தச் சிறுமியும் வந்து படிப்பதற்குத் தகுந்த விதமாக வும் ஏற்ற விதமாகவும் இதைப் போன்ற கல்விநிலையங் களின் குறிக்கோள் அமைய வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

மிகவும் ஏழைகளாயுள்ள குழந்தைகள் வந்து படிக்க இயலாதவாறு பள்ளிக்கூடச் செலவுகள் நாள்தோறும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. இந்தியாவிலோ, செலவு ஏற்கனவே அதிகமாகிவிட்டது. இந்த நாட்டிலும் அப்படியே செலவு அதிகமாகி வருவதைக் காண்கிறேன். பயங்கரமான இத்தகைய தவறு நேராதவாறு நாம் எல் லோரும் கவனம் செலுத்த வேண்டும். இல்லையேல், வருங்கால சந்ததியாரின் நியாயமான வெறுப்புக்கு நாம் ஆளாக நேரும். அவ்விதம் நேராதவாறு செய்ய விரும்பி னல் ஆரம்பமுதல் கடைசிவரை யாவற்றையுமே பிள்ளை களுக்குச் சிங்கள மொழி மூலம் கற்பிக்க வேண்டும். இதை நான் வற்புறுத்திக் கூறுகிறேன். ஒரு நாட்டைச் சேர்ந்த குழந்தைகள் அந்த நாட்டுக்குரிய தாய்மொழியில் கல்வி பயிலாமல், வேறு ஓர் அன்னிய மொழியில் கல்வி பயிலு வார்களேயானல், கல்வியைப்பற்றியவரையிலே நிச்சய மாக, அது தற்கொலைக்கு ஒப்பாகும். அன்னிய மொழி யில் கல்வி கற்பது, பிறப்புரிமையையே பறித்துவிடுகிறது. இளம் பிள்ளைகளுக்கு அளவில்லாத வருத்தத்தைக் கொடுப்பதோடு அவர்களிடம் காணப்படும் நூதன இயல்பு

களை எல்லாம் பாழாக்கிவிடுகிறது; அவர்களுடைய வளர்ச்சியைக் குன்றச் செய்துவிடுகிறது; குடும்ப வாழ்க்கையோடு தொடர்பு அற்றதாய் ஆக்கிவிடுகிறது. இப்படிப்பட்ட போக்கினால், நாட்டுக்கு முதல்தரமான பெருத்த கேடு விளையும் என்று நான் கருதுகிறேன். இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். சம்ஸ்கிருதத்தை இந்தியாவின் தாய் மொழியாக நான் கருதுகிறேன். உங்களுடைய சமயக் கல்வி யெல்லாம், இந்தியர்களுக்குள்ளே இந்தியராய் விளங்கிய ஒருவர் மூலம், நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அவருடைய உணர்ச்சிக்குத் தூண்டுகோலாய் இருந்தவை சம்ஸ்கிருத நூல்களே யாகும். ஆகையால் சம்ஸ்கிருத பாஷைக்கும் இங்கு இடங்கொடுத்து, உற்சாகத்துடன் படிப்பதற்கு ஏற்பாடு செய்வது உங்கள் கடமை. இலங்கையில் வாழும் பௌத்த சமூகத்தினருக்குத் தேவைப்படும் பாடப் புத்தகங்கள் அனைத்தையும் சிங்கள மொழியில் வழங்க இத்தகைய ஸ்தாபனங்கள் முன்வர வேண்டும்; அதோடுகூட, புராதன நூல்களில் காணப்படும் சிறந்த அம்சங்களையும் எடுத்து வழங்க முன்வர வேண்டும்.

ஏதோ, அடைய முடியாத ஒரு இலட்சியத்தை நான் குறிப்பிடுவதாக நீங்கள் எண்ண மாட்டீர்களென நம்புகிறேன். தாய் மொழியின் சிறப்பையும், மறந்து போகும் தருவாயிலிருந்துவந்த புராதன அரிய நூற்களுலங்களையும் திருப்பி நடைமுறைக்குக் கொண்டுவந்து, அவற்றின் கண்ணியத்தைக் காப்பாற்ற அனேக ஆசிரியர்கள் அரும் பாடுபட்டு முயன்றிருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். சரித்திரத்திலிருந்தே, இதற்குச் சான்று நான் காட்ட முடியும்.

உடற்பயிற்சி விஷயத்திலும் நீங்கள் போதிய கவனம் செலுத்தி இருப்பதைக் கண்டு உண்மையில் எனக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. விளையாட்டுக்களிலும் கலந்து கொண்டு அதில் புகழ் அடைந்திருப்பதற்காக நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் நாட்டில் சுதேச விளையாட்டுகள் இருக்கின்றனவோ என்னவோ அதை நான் அறியேன். கிரிக்கெட், புட்பால் போன்ற விளையாட்டுகள் இந்தப் புனித பூமியிலே காலெடுத்து வைப்பதற்கு முன்,

பிள்ளைகள் விளையாடத் தகுந்த விளையாட்டுகள் வேறு எதுவும் இந்த நாட்டில் இருந்ததில்லை எனச் சொல்லுவீர் களாயின், அதைக் கேட்டு நான் மிகவும் ஆச்சரியமடை வேன்; அந்த ஆச்சரியம், வருத்தம் தரத்தக்கதாகவே இருக்கும். இங்கே சுதேச விளையாட்டுகள் இருந்தன வென்றே வைத்துக்கொள்ளுவோம். அப்படியாயின் அவற்றை மீண்டும் புதுப்பித்து வழிகாட்ட வேண்டிய பொறுப்பு இந்த நிலையத்தைச் சார்ந்தது. எங்கள் நாட்டி லும் உயர்ந்த சுதேச விளையாட்டுகள் உண்டு. புட்பால், கிரிக்கெட்டு ஆகிய விளையாட்டுகளைப் போன்று, உற்சாகம் ஊட்டுவனவாயும் விநோதமானவையாவும் அவை இருக்கும். புட்பால் விளையாட்டைப் போன்று, இவற்றி லும் அபாயம் நேருவதற்கு இடமுண்டு. மேலும் வேறு தனியான சிறப்புஇயல்பும் எங்கள் நாட்டு விளையாட்டு களுக்கு உண்டு, அவற்றினால் செலவு அதிகமாவதில்லை; செலவே இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம்.

புராதனம் என்பதற்காக அனைத்தையுமே நான் வேறுபாடின்றிக் கண்மூடித்தனமாய்க் கொண்டாடு கிறவன் அல்லன்! எவ்வளவு புராதன முடையனவாய் இருப்பினும், நல்லொழுக்கத்திற்குப் புறம்பானவையாயும் தீயனவாயும் இருக்கின்றவற்றை அழிக்க முயல்வதில் நான் சிறிதும் தயங்குவதே யில்லை. புராதனமாய் உள்ள நிலையங்களைக் கொண்டாடுகிறவன்தான் நான். சிலர் அவ்விதம் கொண்டாடாது இருப்பது எனக்கு வருத்தத் தைக் கொடுக்கிறது. நவீன நாகரிகம் என்னும் மோகத் திலே மயங்கி, புராதனப் பழக்கவழக்கங்கள் யாவற்றை யுமே அவர்கள் இகழ்ந்து ஒதுக்குகிறார்கள்; வாழ்க்கை முறையிலும் கடைப்பிடிக்காது தள்ளிவிடுகிறார்கள்.

நமது முன்னோரின் நடையுடை பாவனைகள் யாவும் மூடப் பழக்கவழக்கங்களின் குவியல்களைத் தவிர வேறில்லை என, கீழை நாட்டினராகிய நாம் அவசரப்பட்டு எண்ணிவிடுகிறோம். கீழை நாட்டில் மதிப்பிடமுடியாத பொக்கிஷங்கள் இருக்கின்றன. அவற்றிலே மூடப்பழக்க வழக்கங்களும் இருக்கலாம். அளவிடமுடியாத சிறந்த அம்சங்களும் உண்டு. மூடப்பழக்கங்கள் அல்லாதவற்றை நன்கு புரிந்துகொண்டு, அவற்றை நடைமுறையில்

அனுஷ்டிப்போமேயானல், அவை ஒருவனுக்கு நல்வாழ்வைத் தந்து, அவனை மேன்மைப்படுத்துகின்றன. நீண்ட காலமாக எனக்குள்ள சொந்த அனுபவத்தினல் ஏற்பட்ட முடிவு ஆகும் இது. மயக்கந் தருகிற மேலைநாட்டு வெளிப் பகட்டைக் கண்டு நாம் ஏமாந்து போகாமல் இருப்போமாக!

மறுபடியும் இன்னெரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். மேலைநாட்டில் இருந்து வருபவை யாவற்றையுமே பகுத்துணர்ந்து பாராது வெறுத்து ஒதுக்குகிற பேர்வழி என்று நீங்கள் என்னை எண்ணிவிட வேண்டாம். மேலை நாட்டிலிருந்து அனேக விஷயங்களை என் வாழ்க்கையிலே நான் ஏற்றுக்கொண் டிருக்கிறேன். எது விரும்பத்தக்கது, எது விரும்பத்தகாதது, எது சரி, எது தப்பு என்று மனிதன் வேறுபடுத்திப்பார்க்கும் தன்மையை அழுத்தமாகக் குறிப்பிடுவதற்குச் சம்ஸ்கிருத மொழியில் ஒரு சொல் உண்டு: விவேகம் என்பதே அந்தச் சொல்லாகும். இந்தச் சொல்லுக்குச் சரியான ஆங்கிலச் சொல் டிஸ்கிரிமினேஷன் என்பது. இந்தச் சொல்லைப் பாலி மொழியிலும் சிங்கள மொழியிலும் நீங்கள் சேர்த்துக்கொள்ளுவீர்களென நம்புகிறேன்.

உங்கள் பாடத் திட்டம் சம்பந்தமாகச் சிறிது சொல்ல விரும்புகிறேன். அந்தத் திட்டத்தில் கைத்தொழிலுக்கு இடம் இருக்குமென நினைத்தேன். உங்களுடைய மேற்பார்வையில் இருக்கிற பிள்ளைகளுக்குக் கைத்தொழில் கற்பிக்கப்படவில்லை என்ருல், காலதாமதமின்றி விரைவிலேயே, இந்தத் தீவிற்கு ஏற்றதான ஒரு கைத்தொழிலைக் கற்பிப்பது அவசியம் ஆகும். இந்த நிலையத்தில் கல்வி கற்று வெளியேறிய சிறுவர்கள் அனைவருமே அரசாங்க உத்தியோகத்தில் குமாஸ்தாக்களாகவோ, வேலைக்காரர்களாகவோ ஆவதை விரும்ப மாட்டார்கள் என்பது நிச்சயம்; இதை எதிர்பார்த்தே படித்திருக்கவும் மாட்டார்கள். அவர்களுக்கு இந்த நாட்டின் பலத்தைப் பெருக்க விருப்பம் இருப்பின் சகல சுதேசக் கைத்தொழில்களையும் மிகத் தேர்ச்சியோடு அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஏழைகளுக்கு ஏழைகளா யிருப்பவர்களுடன் ஒன்றிக் கலப்பதற்கு ஒரு அடையாளம் ஆகவும், அதோடன்றி, கலைப் பயிற்சி ஆகவும் உள்ள தொழில் என்னைப் பொறுத்தவரை,

நூல் நூற்பதைத் தவிர சிறந்தது வேறு எதுவும் இல்லை. நூல் நூற்பது எளிதான தொழில்; எனவே அதைக் கற்றுக் கொள்ளுவதும் எளிது. தம் தேவையின் பொருட்டாய் நூல் நூற்கிறோம் என்ற எண்ணமின்றி, நாட்டின் ஏழை எளியவர்களுடன் ஒன்றிக் கலப்பதற்காகவே நூல் நூற்கிறோம் என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டுவிட்டால், சிறப்புடைய, புனிதமான ஒரு தொழிலாக நூல்நூற்பது ஆகிவிடுகிறது. இந்தப் புனிதமான தொழிலோடு வேறு ஏதாவது ஒரு தொழிலைச் சிறுவன் கற்றுக்கொண்டுவிடுவானேயானால், அதைக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியும் என்ற எண்ணம் பையனுக்கு உதிக்கும் வகையில் அந்தத் தொழில் அமைவது அவசியம்.

உங்கள் பாடத் திட்டத்தில் சமயக் கல்விக்கும் இடம் இருக்கிறது. இது சரியான காரியமே. சமயக் கல்வியைச் சிறுவர்களுக்குச் சிறந்த முறையில் போதிப்பது சம்பந்தமாகப் பல பையன்களை வைத்து நான் ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். புத்தகத்தின் மூலம் போதிப்பது சிறிது உதவியாய் இருக்கிறது; எனினும் அது ஒன்றினால் மட்டும் பயனில்லை என்பதை நான் கண்டேன். ஆசிரியர்களும் சமய வாழ்க்கை வாழ்ந்து சமயத்தைப் போதிப்பதே சரியான நெறி என்று கண்டேன். ஆசிரியர்களின் சொந்த வாழ்க்கையிலிருந்து அதிகமாகக் கிரகித்துக் கொள்ளுகிறார்களே யன்றி, ஆசிரியர்கள் படித்துக் காட்டும் புத்தகங்களிலிருந்தோ, அல்லது அவர்கள் புரிகிற பிரசங்கங்களிலிருந்தோ சிறுவர்கள் அதிகமாகக் கிரகித்துக் கொள்ளுவதில்லை. தம்மை அறியாமலே கூர்ந்து கவனிக்கும் சக்தி, சிறுவர் சிறுமியரிடம் உண்டு. இதன் உதவிகொண்டு, அவர்கள் தமது ஆசிரியர்களின் எண்ணங்களை எல்லாம் அறிந்துகொண்டுவிடுகிறார்கள். இந்த உண்மையைக் கண்டபோது நான் அடைந்த ஆனந்தத்திற்கு ஒரு எல்லையே இல்லை. வாயினால் ஒன்றைப் போதித்து, மனதில் ஒன்றை வைத்துக்கொண் டிருக்கிற ஆசிரியர் ஒரு நாளும் உருப்பட மாட்டார்.

பையன்களுக்கு மட்டும் இரண்டொரு வார்த்தை சொல்லி, எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

சிறுவர் சிறுமியர் பலருக்கு - ஏன் நீங்கள் சொல்ல

விரும்புவதைப்போல-ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியருக்குத் தந்தை என்ற முறையில், சிறுவர்களே! நான் உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். உங்கள் தலை எழுத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு உங்கள் கைவசம்தான் இருக்கிறது. இரண்டு நிபந்தனைகளை மட்டும் அனுசரித்து நீங்கள் வாழ்க்கை நடத்திவந்தால், பள்ளிக்கூடத்தில் எதைப் படிக்கிறீர்கள்; எதைப் படிக்கவில்லை என்பது பற்றி நான் ஆராய மாட்டேன். எவ்விதக் கொடிய சோதனைகளுக்கு நீங்கள் உட்பட நேரினும் சரி, சகல சந்தர்ப்பங்களிலும் ஒருசிறிதும் அச்சமின்றி, உண்மையே பேச வேண்டும். இது ஒரு நிபந்தனை. உண்மையான பையன், தைரியமுள்ள பையன், புழுவிற்குக்கூடத் தீங்கு செய்ய எப்போதுமே எண்ண மாட்டான். தான் படிக்கிற பள்ளிக்கூடத்திலும் மெலிந்த பையன்களைப் பாதுகாக்க முன்வருவான். பள்ளிக்கூடத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அவனுடைய உதவியை நாடி இருப்பவர்களுக்கு உதவி செய்வான். இதயம், உடல், செயல் ஆகிய மூன்றிலும் பரிசுத்தமாய் இராத பையனை எந்தப் பள்ளிக்கூடத்திலிருந்தும் துரத்தியடிக்க வேண்டியது அவசியம். பிறருக்கு உதவ விருப்பமுள்ளவனது மனம் எப்பொழுதுமே பரிசுத்த முடையதா யிருக்கும்; பார்வை நேரானதா யிருக்கும்; அவனுடைய கைகள் கெட்ட காரியங்களைச் செய்யா; வாழ்க்கையின் அடிப்படையான நல்லொழுக்கங்களையும் நியதிகளையும் கற்பதற்குப் பள்ளிக்கூடப் படிப்பு அவசியமன்று. மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றிலும் நீங்கள் பரிசுத்தமுடையோராக விளங்கினால், உங்களது வாழ்க்கை பலமான ஒரு அடிப்படையின்மீதே நடைபெறுகிறது என்று எண்ண இடமுண்டு.

உண்மையான அஹிம்சையும் தூய்மையும் உங்கள் வாழ்க்கையைப் பாதுகாக்கும் கேடயங்களாக விளங்கட்டும்! உங்களது மேன்மையான உயர்ந்த எண்ணங்களும் ஆசைகளும் நிறைவேறக் கடவுள் உதவி செய்வாராக! இந்த வைபவத்தில் கலந்துகொள்ளும்படி என்னை அழைத்ததற்காக மீண்டும் உங்களுக்கு எனது நன்றி உரியது.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ்

"ராட்டினத்திலே கடவுளின் கைகள் இருந்து வேலை செய்வதாக எண்ணுகிறேன். நான் அப்படி எண்ணுகிறதற்குக் காரணமாய் இருப்பது, மனித சமுதாயத்தில் மிகவும் கீழான நிலையில் உள்ளவர்களுக்கு வேண்டியவற்றை அது தருகிறது என்பதேயாகும். அதனாலேதான் எந்த நேரத்தில் பேச வேண்டும், எந்த நேரத்தில் பேசக் கூடாது என்பதைக் கவனியாமல், எப்போதுமே அதைப்பற்றிப் பேசுகிறேன், எண்ணுகிறேன், நூல் நூற்கிறேன், வணங்குகிறேன்."

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸில் காந்திஜி கீழ்வருமாறு பேசினார்:

இன்று மாலை அழகானதொரு வரவேற்புரையை நல்கியதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த அழகிய தீவிற்கு என்னை வரவழைத்த பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள்; அதற்குரிய பெருமை நியாயமாக உங்களைச் சார்ந்ததே. ஒரு காரியத்தை ஏற்றுநடத்தும்போது பெருமை வருவதுடன், இடையூறு நேர்ந்துவிட்டால், அவதூறும் வரும் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

போதுமான அளவிற்கு உங்கள் காங்கிரஸைப்பற்றி எனக்குத் தெரியாது; அது மட்டுமல்ல. இங்கு என் பிரசங்கத்தைக் கேட்க வந்திருப்பவர்கள் எத்தகைய நிலையைச் சேர்ந்தவர்கள் என்பதையும் நான் அறியேன். எனவே, இன்று மாலை, விசேஷமான செய்தி எதையும் தெரிவிப்பது எனக்கு மிகவும் சங்கடம் தருவதாய் இருக்கிறது. இருந்தபோதிலும், உங்கள் சிறப்புவாய்ந்த தலைவர் அவர்கள், உங்கள் காங்கிரஸின் இலட்சியத்தைப்பற்றி என்னிடம் தெரிவித்தார்கள். அந்த இலட்சியங்கள் சம்பந்தமாய், என் மனத்தில் தோன்றிய சில எண்ணங்களைத் தெரிவிக்க முயல்கிறேன்.

அவர் சொல்லியதை நான் சரியாகப் புரிந்துகொண்டிருப்பேனாயின், உங்கள் முதல் இலட்சியம் புராதனப் பண்பாட்டைப் புதுப்பித்துச் சீர்ப்படுத்துவதாகும். அப்படியாயின், புராதனப் பண்பாடு எது என்பதை, நீங்கள்

தெரிந்துகொள்ள வேண்டும். புராதனப் பண்பாட்டைப் புதுப்பிக்கும்போது, ஹிந்துக்கள், பௌத்தர், கிறிஸ்தவர் ஆகியோரும் வேறு சமயத்தைச் சார்ந்தவர்களும் உற்சாக மாக அதில் கலந்துகொள்ள இடம் இருத்தல் வேண்டும். புராதனப் பண்பாடு என்பதை ஹிந்து மாணவர்களுக்கு மட்டும் உரியதாக ஒதுக்கிவைக்க மாட்டீர்கள் என்று எண்ணியே நான் இவ்விதம் சொல்லுகிறேன்.

பௌத்த, கிறிஸ்தவ, முகம்மதிய, ஹிந்து மதங்களைச் சார்ந்த சகல மாணவர்களுக்குமே இந்த மாணவர் காங்கிரஸில் இடம் உண்டு என எண்ணுகிறேன். இதனுடைய உறுப்பினர் பட்டியலில், இன்று, முஸ்லிம் மாணவர்களும் பௌத்த மாணவர்களும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே நான் கூறும் விவாதம் இங்கு பொருத்தமில்லை என்று சொல்ல இயலாது. காரணம்: உங்களது முடிவான இலட்சியம் சுயராஜ்யம் அடைவதாகும். நீங்கள் அடையவிருக்கும் சுயராஜ்யம் இலங்கையில் ஒரு பகுதியாகிய யாழ்ப்பாண வாசிகளான ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய இரு மதத்தினருக்கு மட்டும் உரியதாய் இராமல், இந்தத் தீவில் வசிப்பவர்கள் அனைவருக்குமே பொதுவானதாய் இருக்கப் போகிறது. அப்படியாயின் பௌத்த, முகம்மதிய மாணவர்களுக்கும் காங்கிரஸில் இடமுண்டு என நான் குறிப்பிட்டது பொருத்தமேயாகும். பொருத்தமானதே என்றால் எத்தகைய புராதனப் பண்பாட்டை நாம் புதுப்பிக்க வேண்டும் என்ற கேள்வி மீண்டும் நம் முன்னே வந்து நிற்கிறது. நாம் புதுப்பிக்க விரும்பும் பண்பாடு சகல மதத்தினருக்கும் பொதுவானதாய் அமைய வேண்டும். நாம் புதுப்பிக்க விரும்பும் பண்பாட்டில் சந்தேகத்திற்கு இடமின்றி ஹிந்துக்களின் போக்கே மிகுதியாகக் காணப்படலாம். இருப்பினும், ஹிந்துக்களுக்கு மட்டும் உரிய ஒரு பண்பாடாக அதைச் செய்துவிட லாகாது. புராதனப் பண்பாட்டைப் புதுப்பிக்க எண்ணமுடையவர்களில் பெரும்பாலோர் ஹிந்துக்களாய் இருக்கிறபடியாலேதான், புதுப்பிப்பது ஹிந்துக்களின் போக்கை அனுசரித்ததாய் இருக்குமென்று சொன்னேன். ஹிந்துக்கள் வாழும் தேசத்தை நீங்கள் உங்கள் தாய்நாடாக எண்ணிப் பெருமை கொள்ளு

கிறீர்கள். அப்படிப் பெருமை கொண்டு மகிழ்ச்சி யடைவது நியாயமானதே யாகும்.

ஹிந்து சமயப் பண்பாட்டில் பௌத்த சமயப் பண்பாட்டுக்கும் கட்டாயம் இடம் உண்டு என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். புத்தர் இந்தியருக்குள் இந்தியராயும், ஹிந்துக்களுக்குள் ஹிந்துவாயும் விளங்கினர். அதனுலேதான் அப்படிச் சொல்ல எனக்குத் தைரியம் உண்டாகிறது. ஹிந்து சமயத்தை வெறுத்து ஒதுக்கிவிட்டு, புதிய சமயம் ஒன்றை நிறுவினர் என்ற நம்பிக்கைக்குச் சான்று அவருடைய வாழ்க்கையில் எதுவுமே இல்லையென்று நான் கருதுகிறேன். ஏசு கிறிஸ்துவையும் ஆசியாக்காரர் என்று கொண்டுவிட்டால் எனது வேலை இன்னும் எளிதாய்விடுகிறது. முகமது நபியும் ஒரு ஆசியாக்காரர்தான். எனவே, நாம் இப்போது ஆசியப் பண்பாடு, அல்லது புராதன ஆசியப் பண்பாடு எது என்று ஆராய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

புராதனப் பண்பாட்டில் எவை நிலைபேறுடையனவாய் விளங்கினவோ, எவை மேம்பாடுடையனவோ, அவற்றையே புதுப்பிக்கும் விருப்பம் உங்களுக்கு இருப்பின், உங்களது போக்கு மேலே கூறிய சமய நெறிகளுக்கு முரண்பட்டதாய் இருத்தல் கூடாது. எனவே, மகத்தான, இந்தச் சமய நெறிகளுக்குப் பொதுப்படையாக உள்ள, மிகவும் பொதுப்படையாக விளங்கும் ஒரு உண்மை எது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். எது மகத்தானது, எது மேம்பாடானது என ஆராய்ந்து பார்க்கும்போது, உண்மையும் அஹிம்சையும் தான் அத்தகையவை என்று எனக்குத் தோன்றுகின்றன; மகத்தான இந்த மதங்களுக்கு எல்லாம் பொதுவான அளவுகோலாய் இவையே விளங்குகின்றன. நீங்களும் ஆராய்ந்து பார்த்தால், கடைசி முடிவில், என்னைப் போலவே மகத்தான இந்த மதங்களுக்கெல்லாம் பொதுவானதாய் விளங்கும் உண்மையையும் அஹிம்சையையும் கடைப்பிடிக்க ஆசைகொள்ளுவீர்கள்.

ஒரு காலத்தில் ஹிந்து மதத்தின் பகுதிகளாக, சில பழக்க வழக்கங்கள் இருந்து வந்திருக்கின்றன. அவற்றை நீங்களும் நானும் மறந்தே போயிருப்போம். மறுபடியும்

அவற்றில் பலவற்றை நீங்கள் புதுப்பிக்க விரும்ப மாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

காலஞ் சென்ற நீதிபதி ரானடே அவர்கள் சொன்ன ஒரு பெரிய விஷயம், இப்போது என் நினைவிற்கு வருகிறது. புராதனப் பண்பாட்டின் மறுமலர்ச்சியைப்பற்றிப் பேசநேர்ந்த சமயத்தில், அவர் இவ் விஷயத்தைச் சொன்னார். கூட்டத்துக்கு வந்திருப்பவர்களில் எவராலுமே தமது புராதனப் பண்பாடு எது என்று திட்டமாகச் சொல்ல முடியாதென்றார். ஒரு பண்பாடு தனது புராதனத்தன்மையை எப்போது இழந்ததென்பதையும் நவீனத்தன்மையை எப்போது பெற்றதென்பதையும் கூற முடியாதென்றார். அது மட்டுமல்ல; புராதனம் என்பதற்காக அறிவுள்ள மனிதன் எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டான் என்றும் சொன்னார். புராதனப் பண்பாடாயினும் சரி, அல்லது நவீனப் பண்பாடாயினும் சரி அறிவிற்கும் அனுபவத்திற்கும் அது பொருந்தி வருகிறதா என்று ஆராய்ந்துபார்க்க வேண்டும் என்று சபையோரிடம் தெரிவித்தார்.

இந்தத் தீவில் மட்டுமன்று, உலகம் முழுவதிலுமே பிற்போக்குச் சக்திகள் நம்மைச் சுற்றி உலவுகின்றன. எனவே, இந்தத் தீவின் தலையெழுத்தை நிர்ணயிப்பவர்களான மாணவர்களுக்கு—அதாவது மாணவர்களின் காங்கிரஸிற்கு—நான் ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். புராதனப் பண்பாட்டைப், 'புதுப்பிக்கிறோம் புதுப்பிக்கிறோம்' என்று சொல்லி, அனேகர் பழைய காலத்து மூடநம்பிக்கைகளையும் மூடப் பழக்கவழக்கங்களையும் சிறிதும் தயக்கம் இன்றிப் புதுப்பித்துவிடுகிறார்கள். இந்தியாவில் எனக்கு ஏற்பட்ட சொந்த அனுபவத்தினால் கண்ட உண்மை இது.

தீண்டாமை எனும் பயங்கரமான கொள்கையை நியாயம் என்று சொல்லி நிலைநிறுத்த, செத்துப்போன புராதன சாஸ்திரங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் உயிர்ப்பிச்சை கொடுத்து உதவி, அவற்றைச் சான்றுகளாக முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார்கள். தேவதாசி முறையையும் நியாயம் என்று கூறி நிலைநிறுத்த, இதேபோன்று, இப்போது முயன்றுவருகிறார்கள்

என்பதை உங்களில் சிலர் அறிவீர்கள்.

புராதனப் பண்பாட்டை புதுப்பிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, தவறான நெறிகளில் சென்றுவிடலாகாது என்பதற்காகவே, நான் இந்த எச்சரிக்கை செய்ய வேண்டியதாயிற்று. ஏதோ வருந்தி முயன்று நான் இவ்விதம் எச்சரிப்பதாக எண்ணிவிட வேண்டாம். புராதனப் பண்பாட்டில் நான் மிகுந்த பற்றுதல் உடையவன். அது மட்டுமா? புராதனப் பண்பாட்டில் எவை நிலைபேறுடையனவாயும் எவை மேம்பட்டனவாயும் இருக்கின்றனவோ, அவற்றை யெல்லாம் சொந்த வாழ்க்கையில் கடைப்பிடித்தொழுக நான் பெரிதும் முயன்றிருக்கிறேன். இதிலிருந்தே இந்த எச்சரிக்கையின் உட்கருத்தை நீங்கள் உணர்ந்திருக்கக் கூடும்.

புராதனப் பண்பாட்டில் புதைந்து கிடக்கிற பொக்கிஷங்களை நான் தேடியலைந்தபோது, புராதன ஹிந்து மதத்தில் எவை நிலைபேறுடையனவா யிருக்கின்றனவோ, அவை அனைத்தும் புத்தர், முகமது நபி, கிறிஸ்து, சோராஸ்டர் ஆகியோர் போதித்தவற்றிலும் இருப்பதைக் கண்டேன். இவ்வாறு நான் காண நேர்ந்தது ஒரு மதிப்பிட முடியாத பேறே யாகும். எனவே இவற்றை நடைமுறைப்படுத்தி, வாழ்க்கையில் கடைப்பிடிப்பது எளிதாயிற்று. புராதனமான ஹிந்து சமயக் கொள்கை ஒன்று, முஸ்லிம், அல்லது கிறிஸ்தவ சகோதரர்களுக்கு வெறுப்பு ஊட்டக்கூடியதாய் இருப்பின், உடனே என் மனதில் ஒருவித பரபரப்பு உண்டாகி, அந்தக் கொள்கை புராதனமுடையதா என்பதில் சந்தேகம் தோன்றிவிடும். இந்த ஆராய்ச்சியின் பயனாய் உண்மை, அஹிம்சை இரண்டுமே சிறந்தவை, மிகவும் புராதனமானவை என்ற மாறுபட முடியாத ஒரு முடிவிற்கு நான் வந்துளேன். அஹிம்சை, உண்மை என்ற இரு துறைகளிலும் வேலை செய்ததன் பயனாய், இன்னொன்றையும் நான் கண்டேன். நவீன வாழ்வுக்கு உகந்ததாய் இராமல், அதற்கு மாறுபட்டு இருக்கும் பழைய சம்பிரதாயங்களையும் புதுப்பிக்கலாகாது என்பதே அந்த உண்மை. சில சம்பிரதாயங்கள் முற்றும் நல்லனவா யிருக்கலாம்; அந்தக் காலத்து வாழ்க்கைக்கு ஒருக்கால் அவை முற்றும் அவசியமானவையாக இருந்

திருக்கலாம்; ஆனால் தற்காலத் தேவைகளுக்கோ அவை முற்றும் முரண்பட்டனவாக இருத்தல் கூடும்; உண்மைக்கும் அஹிம்சைக்கும் மாறுபட்டிராமலும் இருத்தல் கூடும்.

தேவதாசி முறை, குடி, தீண்டாமை போன்ற பழக்க வழக்கங்களையும், கருணை வடிவானவர், அன்புள்ளவர், மன்னிக்கும் இயல்புடையவர் என்று நாம் சொல்லுகிற கடவுளுக்கு ஆடுகோழிகளைப் பலியிடல் போன்றவற்றையும் தயவு தாட்சண்ணியமின்றி நாம் ஒதுக்கித்தள்ளிவிடுவோமேயானல், இலட்சியத்தை அடைவதற்கு உங்களுக்கும் எனக்கும் திறந்துவிடப்பட்டிருக்கும் பாதை எவ்வளவு எளிதாகிவிடுகிறது என்பதைக் காண்பீர்கள். அறநெறி உணர்ச்சிக்கு இவை அனைத்தும் பொருந்தவில்லையாதலால், வருத்தமும் தயக்கமும் ஒருசிறிதுமின்றி, இவற்றை நாம் விலக்கிவிடலாம்; இவை யாவும் அழித்தல் வேலைத் திட்டம்; இதே போல ஆக்கல் வேலைத்திட்டமும் உண்டு. அழித்தல் வேலைத் திட்டத்தைப்போல, ஆக்கல் வேலைத் திட்டமும் முக்கியமானதாகும்.

ஆக்கல் வேலைப் பகுதியைப் பற்றிக் குறிப்பிடுமுன் அஹிம்சை என்ற கொள்கைக்கு அனுசரணையான, அத்தியாவசியமான ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த விஷயத்தைச் செட்டிநாட்டிலிருக்கிற, தீவிர மனப் போக்குடன் சேவை செய்வதில் ஈடுபட்டுவருகிற, மிகவும் சிறியதொரு கூட்டத்தினரும் எனக்கு நெருங்கிய நண்பர்களுமான சீர்திருத்தக்காரர்களுக்கு எடுத்துச்சொன்னேன்: இந்தப் பூமியிலே, எத்தனையோ ஏழை எளியவர்களும் தாழ்மையானவர்களும் உண்டு. உண்மையான பலாத்காரமின்மையைக் கடைப்பிடித்தொழுக வேண்டுமானல், அவர்களுக்குக் கிட்டாத பொருள்களை வைத்துக் கொள்ள நாம் ஆசைப்படலாகாது என்பதாகும் அது. இதை ஒரு நல்ல கொள்கையாகக் கொள்ளுவோமேயானல், அஹிம்சைக் கொள்கைக்கு இது அவசியம் என்றே கருதுகிறேன். நீங்களும் இதை ஏற்றுக்கொண்டால், புராதன காலத்தில் நம்மவர்களிடம் காணப்பட்ட எளிமையை இந்த உலகத்திலுள்ள வேறெதற்காகவும் நாம் விட்டுக்கொடுக்கலாகாது. தற்காலத்தில் ஒருவித வேகமும் வெளிப்பகட்டும் காணப்படுகின்றன. இவை நம்மை ஏறக்குறையத்

தோற்கடித்து வெற்றிகொண்டுவிட்டன. மேலைநாட்டிலிருந்து வந்து இந்த வேகமும் வெளிப்பகட்டும் நம்மைக் கடுமையாகத் தாக்குகின்றன. அதனாலேதான் நான் அவற்றை உறுதியோடு நின்று எதிர்க்கிறேன்

கிறிஸ்து நாதர் செய்த மலைப்பிரசங்கத்தின் சாராம் சத்திற்கும் தற்காலத்தில் மேலைநாட்டினர் கையாளும் முறைகளுக்கும்-அதாவதுதேவையைப்பெருக்கிக்கொள்ளுவது, வசதிகள் செய்துகொள்ளுவது-என்பவற்றிற்குமுள்ள வேறுபாட்டைக் காட்ட எழுத்தாலும் பேச்சாலும் நான் பெரிதும் முயன்றிருக்கிறேன். ஆகையாலேதான், பேச்சின் ஆரம்பத்திலே ஏசு கிறிஸ்து ஆசியாக்காரர், முகமது நபி ஆசியாக்காரர் என்று சூசகமாகக் குறிப்பிட்டேன். ஏசு கிறிஸ்து போதனை செய்ததற்கும், இன்று, அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் மேலைநாட்டில் ஏனைய பகுதிகளிலும் நடப்பதற்குள்ள வேற்றுமையை அறிந்து வேறுபடுத்திக் காட்டி, வாழ்க்கை நடத்த முயன்றதனாலே தான் நான் தென்ஆப்பிரிக்காவில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ நண்பர்களுடன் அமைதியாகக் காலங்கழிக்க முடிந்தது. இன்றும் அமைதியோடு காலங் கழிக்க முடிகிறது. வரவர இந்த மனப்போக்குடையவர்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது.

இங்கு வாழ்கிற பௌத்தர்களும் ஹிந்துக்களுமாகிய நீங்கள்-பௌத்தர்களின் எண்ணிக்கை குறைவாய் இருந்த போதிலும் பாதகமில்லை - உங்கள் புராதனப் பண்பாட்டிற்கு உண்மையாக நடந்துகொண்டால், வெளிப்பகட்டுடன் விளங்குகிற எதையும் ஒதுக்கித் தள்ளிவிடுவீர்களென்பதும், அது கிறிஸ்தவ உடையில் வந்தபோதிலும் சரி, அதைக் கவனிக்க மாட்டீர்கள் என்பதும் நிச்சயம்.

உங்களிடத்திலே உங்களுக்கு அசையாத நம்பிக்கை இருந்து, அதோடுகூட, குறைவுபடாத பொறுமையும் உங்களுக்கு ஏற்பட்டுவிடுமாயின், மேலைநாட்டு வெளிப் பகட்டில் மயங்கியிருக்கும் கிறிஸ்தவ நண்பர்கள்கூட, அந்த வெளிப்பகட்டைக் கைவிட்டு, மனம் ஒப்பி, எளிய வாழ்க்கையை மேற்கொள்ளுவார்கள். இது ஒன்றே நான் சபையோர் முன், முன்னர் எடுத்துக் காட்டிய அனுசரணையைச் சோதனைச் செய்யப் போதிய கருவியாக இருக்கும்.

நான் கூறிவந்த விவாதத்தைக் கூர்ந்து நீங்கள் கேட்டிருப்பின், நான் கூறும் செய்தியை - அழிக்க முடியாத ராட்டினம் கூறும் செய்தியை - உடனே தெரிந்து கொள்ளுவீர்கள். ராட்டினத்தில் கடவுளின் கைகள் வேலை செய்கின்றன. மனித சமுதாயத்தில் மிகவும் கீழான நிலையில் உள்ளவர்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் ராட்டினம் தருகிறது' என்பதனாலேதான் நான் அப்படி எண்ணுகிறேன். அதனாலேதான் எந்த நேரத்தில் பேசலாம், எந்த நேரத்தில் பேசக் கூடாது என்பதைக் கவனியாமல், எப்போதுமே அதைப்பற்றிப் பேசுகிறேன்; எண்ணுகிறேன்; நூல் நூற்கிறேன்; வணங்குகிறேன்.

உலகில், முக்கியமாக, இந்தியாவில் பசியால் வாடி வதங்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு அருகில் நம்மைக் கொண்டு நிறுத்தி, தோட்டிக்குச் சமதையாக நம்மையும் ஆக்கக்கூடியது வேறு ஏதாவது ஒன்று இருக்குமாயின், ராட்டினத்தைக் கைவிட்டு, அந்தக் கணமே அதைப் பற்றிக்கொள்ள நான் சித்தமாயிருக்கிறேன். வெட்கமில்லாது பிச்சைப் பாத்திரத்தை ஏந்தி, வீடு வீடாய்ச் சென்று, உங்களுக்கு, "மனமிருந்தால் ஏதாவது பாத்திரத்தில் போடுங்கள்" என்று நான் பிச்சைக் கேட்டுத் திரிவதன் கருத்து யாது என்பதை நீங்கள் இதன் மூலம் அறிந்திருக்கக் கூடும்.

அதிக நேரம் பேசிவிட்டேன். இன்னும் பேசி, உங்களது பொறுமையை நான் சோதிக்கலாகாது. பேசிய பேச்சில் ஏதாவது பூர்த்தி செய்ய வேண்டியவை இருந்தால், அதைப் பூர்த்திசெய்துகொள்ளுங்கள். மாணவர் உலகம், நான் சொல்லுவதை நம்பிக்கையோடு கேட்குமாதலால், இன்னும் எவ்வளவோ விஷயங்களைப்பற்றி மாணவருடன் பேச வேண்டும். ஆனால், இன்று இதைவிட இன்னும் அதிகமாக நான் பேசுதல் கூடாது.

நீங்கள் இதுவரை செய்த காரியங்களுக்கும், இப்போது செய்துவருகிற காரியங்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றி. நான் கொளும்பில் இருந்த சமயத்தில், உங்களில் சிலர் சேர்ந்து எனக்குக் குறிப்பு அனுப்பி வைத்திருந்ததற்கு ஒப்பச் சேவை செய்வதில் ஈடுபடுவீர்களாயின், நிச்சயமாக, நீங்கள் மகத்தான காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர்கள்.

யாழ்ப்பாண மாணவர்களுடன்

" இளம் பிராயமுடைய நீங்கள் இன்னும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது உங்களை மட்டும் எண்ணிக்கொண்டிராமல் உங்களைவிடக் கேவலமான நிலையில் இருப்பவர்களையும் ஏழைகளாய் இருப்பவர்களையும் எண்ணி உதவி செய்திருக்கிறீர்கள். இதைவிட நன்மை தருவது, மேன்மை பொருந்தியது வேறு எது இருக்கக் கூடும்?"

யாழ்ப்பாண செயின்ட் ஜான் கல்லூரியில், காந்திஜி கீழ்வருமாறு பேசினார்:

என்னைக் காண வேணுமென்று நீங்கள் எவ்வளவு ஆவலோடு இருந்தீர்களோ, அவ்வளவு நானும் உங்களைக் காண ஆவலோடு இருந்தேன். கோடீஸ்வரர்கள் தரும் பொருளை நான் நன்றியறிதலோடு பெற்றுக்கொண்ட போதிலும் வாழ்க்கைத் துறையில் காலெடுத்து வைப்பதற்கு முயன்று வருகிற சிறுவர் சிறுமியரிடமிருந்து கிடைக்கும் பணமே எனக்கு அதிக மகிழ்ச்சியைத் தருவதுண்டு. அவர்கள் தருகிற நன்கொடை மிகச் சிறிய அளவினதாய் இருப்பினும் அதுதான் எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தருகிறது. இவ்விதம் நான் பெரு மகிழ்ச்சி கொள்ளுவதற்கு இரு காரணங்கள் உண்டு. குழந்தை உள்ளம்படைத்தசிறுவர்சிறுமியர்கொடுக்கும் நன்கொடை உலக அனுபவமுள்ள அறிவாளிகள் என்று கருதப்படுகிறவர்கள் கொடுக்கிற நன்கொடையைக் காட்டிலும் அதிக நற்பயனைத் தரும் என்பது ஒன்று. இரண்டாவது காரணம், உங்களைப்போன்றோர் கொடுக்கிற நன்கொடை எனது பொறுப்பை மேலும் அதிகமாக்கிவிடுகிறது.

இந்தப் பணமுடிப்பில் அடங்கியுள்ள ஒவ்வொரு ரூபாயும், வெளியுலகத்துடன் தொடர்பில்லாத எத்தனையோ கிராமங்களில் வசிக்கும் பெண்களுக்கு, கால் வயிற்றுக்குக் கூட உணவின்றித் திண்டாடும் அந்தப் பெண்களுக்கு வேலை தேடிக்கொடுக்க உபயோகிக்கப்படும். அவ்விதம் வேலை செய்கிறவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் கிடைக்கும். அவர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் ஒரு நாளாவது, இரண்டு வேளைக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை. இந்தியாவில் நூற்றுக்கணக்கான

கிராமங்களில் நேரில் நான் கண்ட அனுபவத்திலிருந்தே இதைச் சொல்லுகிறேன். உண்மையான ஒரு தர்ம காரியத்திற்கே நீங்கள் இந்த நன்கொடையைத் தந்திருக்கிறீர்கள். இளம் பிராயமுடைய நீங்கள் இன்னும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி இருக்கும்போது உங்களை மட்டும் எண்ணிக்கொண் டிராமல், உங்களைவிடக் கேவலமான நிலையில் இருப்பவர்களையும் ஏழைகளாய் இருப்பவர்களையும் எண்ணி உதவி செய்திருக்கிறீர்கள். இதைவிட நன்மை தருவது, மேன்மை பொருந்தியது வேறு என்ன இருக்க முடியும்?

உங்கள் பள்ளிக்கூடத்தில் வேற்றுமை பாராட்டப் படுவதில்லை என்பதும், ஒருவரையும் தீண்டத்தகாதார் என்று நீங்கள் கருதுவதில்லை என்பதும் சந்தேகத்திற்கிடமின்றிப் பெரிய காரியங்களே. நீங்கள் சென்று கொண்டிருக்கிற மார்க்கத்தைப் பின்பற்றியே நீங்கள் தாராளமாக நல்கிய இந்தப் பணமுடிப்பும் உபயோகிக்கப்படும். தீண்டத்தகாதவர் என்று சொல்லப்படுகிற, உங்களைவிட மிக்க கேவலமான நிலையிலிருக்கிற கிராமத்துப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இந்தப் பணம் போய்ச் சேரும். உங்கள் அன்பிற்கும் தாராள மனப்பான்மைக்கும் பிரதியுபகாரம் செய்யும் ஆற்றல் என்னிடம் இல்லை. வாழ்க்கையில் நீங்கள் செய்யும் நல்ல காரியங்களையெல்லாம் அனுக்கிரகிக்க வேண்டுமென்று கடவுளை வணங்குவதைத் தவிர, நான் செய்யக்கூடியது வேறு என்ன இருக்கிறது? உண்மையான இதயப் பயிற்சி இன்றேல், அறிவுப் பயிற்சி எவ்வளவுதான் இருந்தாலும் அதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்பதை நான் அறிவேன். உங்கள் மனம் விரும்புகிறபடி இதயம் விரிந்து கொடுக்கட்டும்.

ஏசுநாதருக்குரிய ஸ்தானம்

"மனித சமுதாயத்திற்கு வழிகாட்டிய பெரியவர்களுக்குரிய ஸ்தானங்கள் பிறர் கொடுப்பதனால் ஏற்படுபவையன்று; அவர்கள் செய்துள்ள தொண்டிற்கு ஏற்றவாறாகவும் நியாயமாகக் கிடைக்க வேண்டிய முறைப்படியும் தாமாகவே அவர்களுக்கு ஸ்தானங்கள் கிடைத்துவிடுகின்றன."

யாழ்ப்பாண மத்தியக் கல்லூரி மாணவர்களிடையே காந்திஜி பேசிய பேச்சு :

கால் வயிற்றுக் கஞ்சிக்குக்கூடக் கதியின்றி வாடும் கோடிக்கணக்கான இந்திய மக்களின் பொருட்டு, நீங்கள் தாராளமாகத் தந்த இந்தப் பணமுடிப்பிற்காக எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஒரு முக்கியமான கேள்வியைப்பற்றி, - அதாவது உலகத்தில் தோன்றிய பெரிய பெரிய மதாச்சாரியர்களில் ஏசுநாதருக்குரிய ஸ்தானம் எது என்பதுபற்றி,-நேற்று எனக்கு ஒரு குறிப்பு அனுப்பிவைத்தீர்கள். இன்று காலையிலும் அதே கேள்வியை கேட்டு இருக்கிறீர்கள். இப்போதிருந்து பத்தரை மணிக்கிடையில், நான் அனேக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதோடு, இன்னொரு காரணத்தினாலும் இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. ஆயினும், பதில் சொல்லும் பொருட்டுச் சில நிமிஷங்கள் செலவிட எண்ணுகிறேன். காரணம், எனது வாழ்க்கையை நெறிப்படுத்திய கொள்கையின் பிரகாரம்,-அதாவது என்னால் முற்றும் சரிக்கட்ட இயலாதவை நீங்கலாக, ஏனையவற்றை எனக்கு நேருகிறபடியே ஏற்று வாழ்க்கை நடத்தியிருக்கிறேன்; இந்த நியதியின் பிரகாரம் அக் கேள்விக்கு விடை கூறுகிறேன்.

உலகத்தில், தோன்றிய பெரிய மதாச்சாரியர்களில். ஒருவராக, நாஸ்ரத்தில் பிறந்த ஏசுநாதரை பல ஆண்டுகளாகவே நான் எண்ணி வருகிறேன் என்பதை, ஒரு வாக்கியத்தில் மிகவும் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதயத்தில் உணருவதை நான் அப்படியே இந்த எளிய வாக்கியத்தில் ,தெரிவித்துவிட்டேன் என்பதை காட்டவே, மிகவும் தாழ்மையோடு என்ற சொற்றொடரை

உபயோகித்தேன். ஹிந்து என்ற முறையில்-கிறிஸ்தவன் அல்லாதவன் என்ற முறையில்-நான் உணருவதைக் காட்டிலும் கிறிஸ்தவராய் உள்ளவர்கள், ஏசுநாதருக்கு இன்னும் உயர்ந்த ஸ்தானத்தை கொடுப்பார்கள் என்பது உண்மை. கொடுத்தல் என்ற சொல்லை உபயோகப்படுத்தாது, 'உணர்தல்' என்ற சொல்லை வேண்டுமென்றேதான் நான் உபயோகப்படுத்தி யிருக்கிறேன். மகான்களுக்குரிய இடம் இதுதான் என்று குறிப்பிட்டுச் சொல்லத்தக்க இறுமாப்பு, எனக்கோ, அல்லது வேறு யாருக்குமோ இருப்பதற்கில்லை. மனித சமுதாயத்திற்கு வழிகாட்டிய மகான்களுக்குரிய ஸ்தானங்கள் பிறர் வழங்குவதனுல் ஏற்படுபவை யன்று; அவர்கள் செய்துள்ள தொண்டைப் பொருத்தும் உரிமையைப் பொருத்தும் அந்த ஸ்தானங்கள் தாமாகவே அவர்களுக்குக் கிடைத்துவிடுகின்றன. ஆனல் நம்மில் எளியவர்களும் தாழ்மையானவர்களும் சிலரைப்பற்றி சிலவிதமான அபிப்பிராயம் கொண்டிருப்பார்கள். அவ்விதம் கொள்ளுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு.

மனித சமுதாயத்திற்கு உபதேசம் செய்த பெரியவர்களுக்கும் நமக்கும் இடையில் உள்ள தொடர்பு, கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. எனது இதயத்திலே, என் மனைவிக்கு எத்தகைய ஸ்தானத்தைக் கொடுக்க வேண்டும் என்பதைத் தர்க்கரீதியாக விவர்திக்க முயலுவேனுயின், அதைவிடப் பயங்கரமான, உயிர்க்கொலையான செயல் வேறொன்றுமில்லை. அவளுக்கு உரிய ஸ்தானத்தை நான் கொடுப்பதில்லை; தமக்குள்ள உரிமையின் காரணமாக, அவளே எனது இதயத்தில் ஒரு ஸ்தானத்தைப் பெற்றுவிடுகிறுள். இது முற்றும் உணர்ச்சியைப் பொருத்த விஷயம். எனவே, ஏசுநாதரை, நான் உலகத்தில் தோன்றிய பெரிய மதாச்சாரியார்களில் ஒருவராக எண்ணுகிறேன்; எனது வாழ்க்கையில், பல முறை, எனக்கு அவர் வழிகாட்டியாய் இருந்திருக்கிறுர்.

கொஞ்ச நேரத்திற்கு மட்டும் கிறிஸ்தவர்களை அப்படி விட்டுவிடுவோம். இந்தக் கல்லூரியில் படிப்பவர்களில் முக்கால்வாசிப் பேர் ஹிந்துக்கள் ஆவார்கள்; அவர்கள் அனைவரும் கிறிஸ்துநாதரின் போதனைகளை மரியாதை

யுடன் படிக்க வேண்டும். அப்படிப் படிக்காவிட்டால், அவர்கள் வாழ்க்கை பரிபூரணமற்றதென்றே சொல்லு வேன். எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி, எல்லோருமே பிற சமயத்தார் போதிக்கின்றவற்றை மரியாதையுடன் ஆழ்ந்து படிக்க வேண்டும்; அப்படிப் படித்துக் குறுகவிடாமல் உள்ளத்தை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். சொந்த அனுபவத்தால் ஏற்பட்ட முடிவு இது. என்னைப் பொருத்தவரை உலகிலுள்ள பெரிய மதங்களையெல்லாம் நான் பொய்யானவை என்று எண்ணவில்லை. அவை யாவும் மனித சமுதாயத்தை வளப் படுத்தியிருக்கின்றன; இப்போதும் வளப்படுத்தி வருகின் றன. விரிந்த கல்வித் திட்டத்தில், எல்லோருக்கும் மற்ற சமயங்களை அறிந்துகொள்ள-நான்சொல்லுவதைப்போல், மரியாதையுடன் அறிந்துகொள்ள-இடம் இருக்க வேண்டும். இந்த விஷயத்தைப்பற்றி நான் சிரமப்பட்டு விவாதிக்க விரும்பவில்லை; எனக்கு அவகாசமும் இல்லை.

உங்களுக்கு இதைச் சொல்லி வரும்போதே, என் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. பைபிளைப் படிக்கத் தொடங்கிய அந்த ஆரம்ப காலத்தில் என் மனதில் உதித்த எண்ணம் ஆகும் அது. பைபிளில் ஒரு வாக்கியம் என் மனதை அப்படியே பற்றிக்கொண்டது. "இந்த உலகத் தைக் கடவுளின் ராஜ்யமாகவும் அவருடைய நீதிக்கு உறைவிடமாகவும் செய்யுங்கள். எல்லாம் உங்களுக்குத் தாமே கிடைக்கும்." இந்த வாக்கியத்தில் பொதிந்துகிடக் கும் உணர்ச்சியை அறிந்து, போற்றி, அதன்படி நீங்கள் செயல்முறையில் ஈடுபடுவீர்களாயின், கிறிஸ்து பெருமா னுக்கும் வேறு எந்த மதாச்சாரியர்களுக்கும் உரிய இடம் எது என்று அறிய வேண்டிய அவசியமே இல்லை. தோட்டிக்கு நிகராக நீங்களும் வேலைசெய்து, இதயத் தைப் பரிசுத்தப்படுத்தித் தயாராக வைத்துக்கொண்டால், அழைப்பு அனுப்பாமலே, பெரிய பெரிய மதாச்சாரியர்கள் அனைவரும் உங்கள் இதயத்தில் வந்துஅமர்ந்துகொள்ளு வதை நீங்கள் காணலாம். இதுதான் சரியான கல்வி முறைக்கு ஏற்ற அடிப்படை என்று என் மனதில் படுகி றது. இதயப் பண்புகளுக்கு மனப் பண்புகள் இசைந்தன வாய் அமைய வேண்டும். நீங்கள் பரிசுத்தமுடையவர்க ளாவதற்குக் கடவுள் அருள் புரிவாராக.

மாணவிகளுக்கு-க

" விளையாட்டுப் பொம்மைகள் ஆவதற்காகப் பெற்றோர்கள் உங்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவில்லை. அதற்கு மாறாக, கருணை மிகுந்த சகோதரிகளாக வரவேண்டுமென்று கருதியே உங்களை இங்கு அவர்கள் அனுப்பிவைத்திருக்கிறார்கள்... எவள் தன்னை அதிகப்படுத்தி எண்ணிக்கொள்ளாமலும் தன்னைக்காட்டிலும் ஏழைகளாயும் துரதிர்ஷ்டம் பிடித்தவர்களாயு மிருப்பவர்களைப்பற்றி அதிகமாகவும் நினைக்கிறாளோ, அவளே கருணையுடைய சகோதரி ஆவாள்."

யாழ்ப்பாணத்தி லிருக்கும் உடுவில் பெண்கள் கல்லூரியில் காந்திஜி பின்வருமாறு பேசினார் :

இன்று காலை உங்களைச் சந்தித்ததற்கு, நான் உண்மையில் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

உங்கள் இதயத்தில் பொங்கி யெழுந்த உணர்ச்சி காரணமாக, ஒரு சிறு தொகையை நன்கொடையாக அளித்து, அதைப் பொதுப் பணமுடிப்பில் நீங்கள் சேர்த்துவிட்டீர்கள். நீங்கள் தந்த இந்த நன்கொடைக்காக உங்களை பாராட்டாது, உங்கள் நன்கொடையைப் பொதுப் பணமுடிப்பில் சேர்த்துவிட்ட பெருந்தன்மைக்காக, நான் உங்களைப் பாராட்டுகிறேன். பையன்களைக் காட்டிலும் பெண்கள் அடக்கமுடையவர்கள்; அதனாலே தான் நன்கொடை தந்ததைக்கூட என்னிடம் தெரிவிக்க நீங்கள் விரும்பவில்லை. இந்தியாவில் ஆயிரக்கணக்கில், பதினாயிரக்கணக்கில், நான் பெண்களைச் சந்திப்பதுண்டு. தாங்கள் செய்கின்ற நல்ல காரியங்களை அவர்கள் மறைத்து வைக்க முயன்றாலும், அப்படி மறைத்து வைக்க அவர்களால் முடியாது.

இது மட்டுமா? தாங்கள் செய்துள்ள கெட்ட காரியங்களைப்பற்றியும்என்னிடம்கூறுவதற்குப்பெண்கள் தயங்குவதில்லை. என் முன்னே இங்கு கூடியிருக்கிற பெண்களில், கெட்டகாரியங்களைச்செய்கிறவள் ஒருத்திகூட இல்லை என்ற நம்பிக்கை, எனக்கு உண்டாகட்டும். குறுக்குவிசாரணை செய்ய அவகாசமின்மையால் பல கேள்விகளைக் கேட்டு உங்களைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. இங்கு நம் மத்தியில் உள்ள பெண்களில் யாராவது கெட்ட காரியங்

களைச் செய்திருந்தால், அவர்கள் படித்த படிப்பு பயனற்றதே யாகும் என்று நான் கூற விரும்புகிறேன்.

விளையாட்டுப் பொம்மைகள் ஆவதற்காகப் பெற்றோர் உங்களைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பவில்லை; அதற்கு மாறாக, கருணைமிகுந்த சகோதரிகளாக நீங்கள் ஆக வேண்டும் என்று எதிர்பார்த்தே, அவர்கள் இங்கு உங்களைக் கல்வி கற்க அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஒரு வித உடை அணிந்துகொள்ளுபவர்களே கருணை உடைய சகோதரிகள் ஆவர் என்று தவறுதலாக எண்ணிவிடாதீர்கள். தன்னைப் பற்றிய சிந்தனை அதிகமின்றி, தன்னைவிட ஏழ்மை நிலையிலும் துரதிர்ஷ்டம் பிடித்த நிலையிலும் இருப்பவர்களைப்பற்றி எவள் அதிகமாக நினைக்கிறாளோ, அவளே கருணையுடைய சகோதரி ஆவாள். எனக்கு அளித்த பணமுடிப்பில் நீங்களும் ஒரு தொகையைச் சேர்த்து, கருணையுடைய சகோதரிகள் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து காட்டிவிட்டீர்கள். உங்களைவிடத் துரதிர்ஷ்ட நிலையுள்ள ஏழை எளியவர்களுக்குப் பயன்படும் பொருட்டே இந்தப் பணம் உபயோகிக்கப்படும்.

கொஞ்சம் பணத்தைக் கொடுத்துவிடுவது எளிது; ஆனால் தாமே ஒரு காரியத்தில் இறங்கி அதைச் செய்து முடிப்பது கடினமானது. எந்த மக்களை நினைந்து நீங்கள் இந்தப் பண முடிப்பைத் தந்தீர்களோ, அந்த மக்களைப் பற்றிய சிந்தனை உங்களுக்கு இருப்பது உண்மையாயின், நீங்கள் இன்னும் ஒரு படி மேலே செல்ல வேண்டும். அந்த மக்கள் உற்பத்தி செய்யும் துணியான கதரையே நீங்கள் வாங்கி உடுத்த வேண்டும். கதர் விற்பனைக்கு உங்களிடம் வரும்போது, "கதர் முரடா யிருக்கிறது. அதை நாங்கள் உடுத்த முடியாது" என்று சொல்லுவீர்களாயின், உங்களிடம் தியாக உணர்ச்சியே இல்லை என்று தான் நான் சொல்ல நேரும்.

உயர்ந்த வகுப்பார், தாழ்ந்த வகுப்பார், தீண்டத் தகுந்தவர், தீண்டத்தகாதவர் என்ற பாகுபாட்டை நீங்கள் காட்டாமல் இருப்பது மிகவும் உயர்ந்த காரியம். உங்கள் இதயமானது இதே துறையில் செல்வதோடுகூட, மற்ற பெண்களைவிட உயர்ந்தவர்கள் என்ற மனப்பாங்கையும் நீங்கள் அகற்றி விடுவீர்களாயின், உண்மையிலே அதுவும் மிக உயர்ந்ததே.

கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக!

மாணவிகளுக்கு-உ

"ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு இந்தியப் பெண்ணும் கலியாணம் செய்துகொள்ளுவதற்காகவே பிறக்கிருள் என்று எண்ணுவது சரியன்று. தனி மனிதனுக்குச் சேவை செய்துகொண்டிருப்பதற்குப் பதிலாக, பொது வாழ்வில் ஈடுபட்டு, பொதுச் சேவைக்கென்றே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிற பெண்கள் அனேகரை நான் உங்களுக்குக் காட்ட முடியும். சீதையைப்போல், பார்வதியைப்போல் உயர்ந்த பெண்கள் ஹிந்துப் பெண்களிடையே தோன்ற வேண்டும். கூடுமானுல் சீதையையும் பார்வதியையும்போல் பெரும் புகழ்படைத்த பெண்கள் தோன்ற வேண்டும். அதற்கு இதுவே ஏற்ற காலம்."

யாழ்ப்பாணத்திலுள்ள ராமநாதன் பெண்கள் கல்லூரியில் காந்திஜி பேசிய பேச்சு:

யாழ்ப்பாணத்திலுள்ள பலவிதமான கல்வி ஸ்தாபனங்களைப் பார்வையிட்டுவிட்டு, கடைசியாக, இன்று காலை இங்கு வந்து கலந்துகொள்ள இயன்றமைக்கு, உண்மையில் நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

நீங்கள் வாசித்தளித்த வரவேற்புரையில், இன்றையத் தினத்தை, ஆண்டுவிழாவாகக் கொண்டாடி, கதருக்காக இன்று நிதிதிரட்டப் போவதாக வாக்களித்திருப்பது என் இதயத்தை உருக்கிவிட்டது. இது சோம்பேறிகளால் சொல்லப்பட்ட வாக்குறுதி யல்ல வென்றும், தெய்வத் தொண்டுபோல் பாவித்து, இதை நீங்கள் நிறைவேற்றிவிடுவீர்கள் என்றும் நான் அறிவேன். பசியாலும் பட்டினியாலும் வாடி வதங்கும் கோடிக்கணக்கான மக்கள், இந்தச் சகோதரிகள் கொண்டுள்ள உறுதியை அறிய நேர்ந்தால், அவர்கள் இதயம் விம்மிதம் உற்று மகிழ்ச்சி யடையும் என்பதை நான் அறிவேன். ஆனுல் எந்த மக்களை எண்ணி நீங்கள் இந்தப் பணமுடிப்பைத் தந்திருக்கிறீர்களோ, அந்த வாயில்லாப்பூச்சிகளான மக்களைப்பற்றி ஒரு விஷயத்தைத் தெரிவிக்க நான் மிகவும் வருந்துகிறேன். இலங்கையில், பற்பல இடங்களில் அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு, 'பணமுடிப்புத் தந்திருக்கிருர்கள்; நீங்களும் தந்திருக்கிறீர்கள். இவற்றைப்பற்றியெல்லாம் அவர்கள் யாதொன்றும் அறியார்கள்,

நான் எடுத்து விளக்கிக்காட்டியபோதிலும் அதை அவர்கள் புரிந்துகொள்ள மாட்டார்கள். அவர்களுடைய துயரம் நிறைந்த கேவலமான நிலைமையை அப்படியே நீங்கள் அறியுமாறு உங்களுக்கு வருணித்துச் சொல்லுவதும் என்னால் சாத்திய மன்று.

இவர்களுக்கும் இவர்களைப்போன்ற ஏனைய மக்களுக்கும் நீங்கள் செய்யப்போவது யாது? இந்தக் கேள்வியே இதை நினைத்ததும் என் முன்னே வந்து நிற்கிறது. நாமெல்லோரும் எளிமையை மேற்கொண்டு, சிறிது கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்தி வந்தாலே, இந்தக் கேவலமான நிலைமையைச் சரிக்கட்டிவிடலாம் என்று எளிதாகச் சொல்லிவிடுவார்கள். ஆனால் இது, இந்தக் கேவலமான நிலையோடு விளையாண்டு பார்க்கும் ஒரு கேலிக்கூத்தாகவே முடியும்.

இதைப்பற்றிச் சிந்தனை செய்யச் செய்ய, ராட்டினமே சிறந்தது என்ற முடிவுக்கு நான் வரலானேன். பட்டினியால் வாடும் கோடிக்கணக்கான இந்த மக்களுடன் ஒருவித உயிர்த்தொடர்பை ராட்டினமூலம் நாம் ஏற்படுத்திக் கொண்டால்தான், நமக்கும் அவர்களுக்கும் உலகுக்கும் அதனால் நன்மை யுண்டு என நான் எனக்குள்ளேயே சொல்லிக்கொள்ளுவேன். உங்களுக்கும் இப்போது அதையே சொல்லுகிறேன்.

இந்தக் கல்லூரியில் சமயக் கல்வி சரியான முறையில் போதிக்கிறார்கள்; அழகான கோயிலும் இருக்கிறது. உங்கள் பாடத்திட்டத்திலிருந்து வழிபாடு செய்த பின்னரே, பாடங்கள் ஆரம்பமாகின்றன என்பதைக் காண்கிறேன். உண்மையில் இவை யாவும் நல்லவை; மனிதனை மேன்மைப் படுத்தக் கூடியவை. நீங்கள் செய்கிற இந்த வழிபாடு தினசரி வாழ்க்கையில் ஏதாவது சில அனுபவபூர்வமான காரியங்களைச் செய்யும்படி தூண்டவில்லையானால் இந்த வழிபாடு எளிதில் அழகான வெறும் சடங்காக மாறுவதைத் தவிர வேறு வழியில்லை. உங்கள் வழிபாட்டைத் தொடர்ந்து, ராட்டினத்தில் ஒரு நாளைக்கு அரைமணி நேரமாவது நூல் நூற்று வாருங்கள். இப்போது நான் வருணித்துச் சொல்லிய கோடிக்கணக்கான மக்களை எண்ணிக் கடவுள் பெயரால் சொல்லுங்கள்: “நான் இந்த ஏழை மக்களை எண்ணி

நூல்நூற்கிறேன்" என்பதாக. இதயபூர்வமாக இதைச் சொல்லுவீர்களாயின், பக்தி மேலிட்டுச் செய்யும் உண்மையான தொண்டு பணிவையும் மேன்மையும் தரும் என்ற கருத்தோடு இதில் ஈடுபடுவீர்களாயின், வெளிப்பகட்டிற்காக உடை அணியாது, உடலை மூடிக்கொள்ளும் பொருட்டே உடை அணிவீர்களாயின், கதர் உடுத்துவதற்கு ஒரு நிமிஷங்கூட நீங்கள் தயங்க மாட்டீர்கள்; கதர் உடுத்தினால் உங்களுக்கும் கோடிக்கணக்கான அவ் வேழை மக்களுக்கும் இடையில் ஒருவிதத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுவிடுவீர்கள்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண்களுக்கு இவற்றை மட்டுமே நான் சொல்ல எண்ணவில்லை.

சர். ராமநாதன் உங்களிடம் காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும், இன்று லேடி ராமநாதனும் கல்லூரியில் அவருடைய மேற்பார்வையிலிருக்கிற மற்ற நிர்வாகிகளும் உங்களிடம் காட்டும் அன்புக்கும் ஆதரவுக்கும் நீங்கள் தகுதியுடையவர்களாக விளங்க வேண்டுமானால், இன்னும் அனேக காரியங்களை நீங்கள் செய்தாக வேண்டும். இந்தப் பள்ளிக்கூடத்தில் கல்விகற்ற பழைய மாணவிகள் என்ன என்ன செய்து வருகிறார்கள் என்பதை உங்கள் பள்ளிக்கூடப் பத்திரிகையில் சிறிது பெருமை பாராட்டிச் சொல்லியிருக்கிறீர்கள். இப்படிப் பெருமை பாராட்டுவது சில சமயங்களில் நியாயமாக இருக்கலாம். நான் அதில் கண்ட குறிப்புகள் இவ்விதமிருந்தன. இன்னார் இன்னார், இன்னார் இன்னாரைக் கலியாணம் செய்துகொண்டார் என்ற நாலைந்து குறிப்புகளை நான் அதிலே படித்தேன். வயதுவந்த பெண்-அதாவது 22, அல்லது 25 வயது நிரம்பிய பெண்-கலியாணம் செய்து கொள்ளுவதில் தவறு ஒன்றுமில்லை. இதை நான் அறிவேன். ஒரு பெண்ணினுடைய பெயரையாவது குறிப்பிட்டு, சேவை செய்வதற்கென்றே அவள் தன் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறாள் என்ற குறிப்பை நான் அதிலே காண இயலவில்லை. பெங்களூரில் மேன்மை தங்கிய மகாராஜா பெண்கள் கல்லூரியில் கல்விகற்கும் பெண்களுக்கு என்ன சொன்னேனோ, அதையே உங்களுக்கும் சொல்ல விரும்புகிறேன். தாராளமான நன்கொடையினாலும் கல்வித் துறையினர்களின்

மகத்தான முயற்சியின் பயனாகவும் நாம் கல்வி பயின்று வருகிறோம். கல்வி கற்றுப் பள்ளிக்கூடத்திலிருந்து வெளி வந்ததுமே, பொம்மைகள்போல் ஆகி, வாழ்க்கைத் துறையி லிருந்து அனைவரும் மறைந்துவிட்டால் அவர்களின் அரிய முயற்சியும் நன்கொடையும் விழலுக்கு இறைத்த நீரே போல வீணாகிவிடும்.

பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும்விட்டு வெளி வந்ததுமே, பெரும்பாலான பெண்கள் பொது வாழ்க்கை யில் ஈடுபடாமல் மறைந்துவிடுகிறார்கள். இந்தப் பள்ளிக் கூடத்தைச் சேர்ந்தவர்கள் அப்படிச் செய்ய மாட்டீர்கள். மிஸ் எமெரி உங்களுக்கெல்லாம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறார். உங்களுக்கு மேற்பார்ப்பவர்களாக இருந்து வருகிற அவரும் வேறு பலரும் கன்னிப் பெண்களாகவே இருந்து சேவை செய்துவருகிறார்கள். இப்படி நான் சொல்லு வதில் தப்பிதம் ஏதும் இருக்க மாட்டாது என்று நம்பு கிறேன்.

ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு இந்தியப் பெண்ணும், கலியாணம் செய்துகொள்ளுவதற்காகவே பிறக்கிறாள் என்று எண்ணுவது சரியன்று. தனி மனிதனுக்குச் சேவை செய்துகொண் டிருப்பதற்குப் பதிலாக, பொது வாழ்வில் ஈடுபட்டு, பொதுச் சேவைக்கென்றே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிற பெண்கள் அனேகரை நான் உங்களுக்குக் காட்ட முடியும். சீதையைப்போல், பார்வதி யைப்போல் உயர்ந்த பெண்கள் ஹிந்துப் பெண்க ளிடையே தோன்ற வேண்டும். கூடுமானால் சீதையையும் பார்வதியையும்போல் பெரும் புகழ்படைத்த பெண்கள் தோன்ற வேண்டும். அதற்கு இதுவே ஏற்ற காலம்.

சைவர்கள் என்று உங்களைச் சொல்லிக்கொள்ளுகிறீர் கள். பார்வதி அம்மை என்ன செய்தாள் என்று உங்க ளுக்குத் தெரியும். கணவன் பொருட்டு அவள் பணம் செலவு செய்யவில்லை; தன்னை விலைக்கு விற்கவும் அவள் சம்மதிக்கவில்லை. ஏழு சதிமார்களில் ஒருத்தியாக இன்று ஹிந்து சமூகம் அவளைக் கொண்டாடுகிறது. பள்ளிக்கூடப் படிப்பில் பெற்ற பட்டத்தினால் அவளுக்கு இந்தப் புகழ் கிட்டவில்லை. நாம் கேள்விப்படாத முறையில் தவ மிருந்ததின் காரணமாகவே அவளுக்கு இந்தப் புகழ்

கிட்டியது.

சீதனம் என்ற வெறுக்கத்தகுந்த ஒரு பழக்கம் இங்கு இருந்து வருவதாகக் கேள்விப்பட்டேன். இதனால், இளம் பெண்களுக்குத் தகுந்த வரன் கிடைப்பது மிகவும் சிரமமாய் இருக்கிறதாம். வயதுவந்த பெண்கள்-சிலர் வயதானவர்களாகவே காணப்படுகிறீர்கள் - ஆசை காட்டும் இந்தப் பழக்கத்தை எதிர்த்துநிற்க வேண்டும். இந்தக் கொடிய பழக்கத்தை எதிர்க்க நேரும் காரணத்தால் உங்களில் சிலர் சில வருஷங்கள்வரை, அல்லது ஆயுள் முழுவதுமே கன்னிப் பெண்களாக இருக்க நேரிட்டாலும் நேரிடலாம். கலியாணம் செய்துகொள்ளும் பருவம் வரும்போது, - அதாவது வாழ்க்கையில் துணைவன் ஒருவன் வேண்டும் என்ற உணர்ச்சி உங்களுக்கு ஏற்படும்போது—பணம், புகழ், அழகு இவற்றைத் தேடியலையாமல், நல்லொழுக்கத்திற்கு உறுதுணையான ஒப்பற்ற குணங்கள் படைத்த ஒருவனையே நீங்கள் தேட வேண்டும். பார்வதி அம்மையும் அப்படித்தான் செய்தாள். பார்வதிக்குச் சிவனைப்பற்றி நாரதர் எப்படி வருணித்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். 'உடல் முழுதும் நீறணிந்த ஆண்டி. அழகில்லாதவன், பிரமசாரி' என்று சொன்னார். 'ஓ அப்படியா! அவர் தான் என் கணவர்' என்றாள் பார்வதி. பார்வதி தவமிருந்ததைப்போல் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உங்களால் தவமிருக்க முடியாதுதான். பார்வதியைப்போல் நீங்கள் தவமியற்றுவிட்டால், சிவனைப்போல அனேக ஆடவர்களைத் தோற்றுவிப்பது இயலாத காரியம். மனவலியற்ற மனிதர்களாகிய நாம் பார்வதிதேவியைப்போல நீண்ட காலம் தவமிருக்க முடியாது போயினும், ஆயுள் பரியந்தமாவது தவம் இருக்கக் கூடும்.

இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால், பொம்மைக் கொலுவிலே ஒளிந்துகொள்ளுவதற்கு நீங்கள் மறுத்து விடுவீர்கள். சாவித்திரி, சீதை, தமயந்தி, பார்வதியைப் போல நீங்கள் சதிமார் என்ற இலட்சியத்தை அடைவீர்கள். அப்பொழுதுதான், அந்த இலட்சியத்தை அடையும்போதுதான், இந்தக் கல்லூரியில் படித்ததன் தகுதி உங்களுக்குக் கிட்டும் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

இந்த ஆர்வத்தைக் கடவுள் உங்களுக்கு ஊட்டுவதாக! உங்களுக்கு அதனால் உணர்ச்சி ஏற்படுமாயின், உங்கள் ஆர்வத்தைப் பூர்த்தி செய்ய அவர் உதவி செய்வார்.

பர்மிய மாணவருக்கு

"தேசபக்தர்களாக இருக்க விரும்பினால், உண்மையான தேசபக்தர்களாயும் வலியிழந்தவர்களைப் பாதுகாப்பவர்களாயும் இருக்க விரும்பினால், படிக்க வசதியில்லாத ஏழை எளியவர்களுக்காக நீங்கள் பரிந்துபேச விரும்பினால், பர்மாவிலிருக்கும் ஒவ்வொரு பெண்ணினது, ஒவ்வொரு சிறுமியினது தூய்மைக்கு நீங்கள் பாதுகாப்பாளராக இருக்க விரும்பினால், முதலில் உங்கள் இதயத்தைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளுங்கள்."

ரங்கூன் ஜூபிளி ஹாலில் நடந்த மாணவர் கூட்டத்தில், காந்திஜிக்குப் பணமுடிப்புக் கொடுத்து, அதனோடு ஒரு வரவேற்புரையும் வாசித்து அளித்தார்கள். "இந்திய, பர்மிய இளைஞர்களின் மகத்தான குடியரசிற்கு ஒப்பற்ற தலைவர் எனவும், கீழைநாட்டினருக்கே, ஏன் அகில உலகிற்குமே தலைவர்" எனவும் சொல்லிப் பட்டம் வழங்கி, அவரைக் கௌரவித்தார்கள். இளைஞர்கள் தாங்கள் கொண்ட கொள்கையை வலியுறுத்தும் இயல்பினர் என்றும், தங்களுக்குள்ள அளவிலே பொறுப்பில்லாது நடந்துகொள்ளும் இயல்புடையவர்கள் என்றும் தெரிவித்து, புத்திமதி கூறித் தங்களை ஆசீர்வதிக்கும்படி காந்திஜியைக் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் பேசியதன் மூலமாக, காந்திஜி உலக இளைஞர்கள் அனைவருக்குமே தமது செய்தியை விடுத்துள்ளார் எனலாம்.

மாணவ நண்பர்களே, அன்பர்களே!

நீங்கள் வாசித்தளித்த வரவேற்புரைக்காகவும் தரித்திர நாராயணனுக்காகத் தாராள மனத்துடன் கொடுத்திருப்பதாக நான் கருதுகிற இந்தப் பணமுடிப்பிற்காகவும் எனது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்திய மாணவர்களுக்குத் தரித்திர நாராயணன் என்ற சொல்லின் பொருள் தெரியாமல் இராது. ஆனால், பர்மிய மாணவர்களுக்கோ ஒருவேளை அதனுடைய சிறப்புத் தெரியாமல் இருந்தாலும் இருக்கக் கூடும்.

எவருக்கு மனிதனுடைய அறிவினால் பெயரிட முடியாதோ, எவரை மனித அறிவினால் ஆழம்காண முடியாதோ, அந்தக் கடவுளுக்குக் கோடிக்கணக்கான பெயர்கள் உண்டு. அவற்றில், தரித்திர நாராயணன் என்பதும் ஒன்று. அதற்கு ஏழை பங்காளன், ஏழைகளின் இதயத்

தில் வசிப்பவன் என்பது பொருள். புனிதம் நிறைந்து, உணர்ச்சி வயப்பட்டு இருந்த பல தடவைகளில், ஒரு தடவை, காலஞ்சென்ற தேசபந்து தாஸ், இந்தப் பெயரை உபயோகப்படுத்தினர். எனது சொந்த அனுபவத்தினல் நான் இந்தப் பெயரைக் கையாளவில்லை; எனக்குத் தேச பந்து அவர்களிடமிருந்து கிடைத்த சொத்து இது. எதற் காக நானும் இன்னும் வேறு பலரும் எங்கள் வாழ்க் கையை அர்ப்பணம் செய்திருக்கிறேமோ, அந்த ராட்டி னத்தைப்பற்றிக் குறிப்பிட நேர்ந்த சமயத்தில், இந்தப் பெயரை அவர் சொன்னர். இந்தச் சிறிய ராட்டினத் தைப் பார்த்து அனேகர் சிரிக்கிறார்க ளென்பதை நான் அறிவேன். நான் செய்யும் குறிப்பிட்ட இந்தச் செயல் மூளைக் கோளறினல் ஏற்பட்ட தென்றும் பலர் கருதுகிறார் கள். எவ்வளவு பேர் இதை எதிர்த்தபோதிலும், கேலி செய்தபோதிலும் சரி, அதைக் கவனியாது, ராட்டினத்தில் நூற்பதை மிகவும் முக்கியமான எனது அலுவல்களில் ஒன்றாக நான் கருதி வருகிறேன். இந்தியாவில், கோடிக் கணக்கான மக்கள், போதிய உணவின்றிப் பசியால் வாடு கின்றனர். அவர்களுடைய பாழடைந்த வீடுகளில் ராட்டி னத்திற்கு ஓர் நிலையான இடம் ஏற்படப் போகிறது. அப் போது, இவ்வாறு கேலி செய்வதெல்லாம் நின்று, அவர் களும் என்னுடன் சேர்ந்து, ராட்டினத்திற்கு வணக்கம் செலுத்துவதைக் காணப்போகிறீர்கள். நான் உங்க ளுடன் பேசிக்கொண் டிருப்பது எவ்வளவு நிச்சயமோ, அதைப்போல இதுவும் நிச்சயமாய் நடக்கு மென்று நான் உணருகிறேன். இங்கு வாழும் இந்தியர்களுக்கு நான் செய்தி கொண்டுவரத் தயங்கவில்லை. பர்மியர்களிடம் சென்று, கதர் இயக்கத்திற்காகப் பொருள் உதவி செய்யுங்கள் என்று கேட்க எனக்கு உரிமையில்லை. வாழ்வை நாடி, உங்கள் தேசத்திற்கு வந்துள்ள இந்தியர்களை, அவர்கள் சம்பாதிப்பதில், தரித்திர நாராயணனுக்கு உணவளிக்கும் பொருட்டு, பொருள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்க, எனக்கு உரிமை உண்டு.

கதருக்காகப் பர்மாவில் சேகரிக்கும் பணத்தை, பர் மாவிலேயே, பர் யர்களுக்காகச் சிறிதாவது செலவு செய்ய

வேண்டும்; இல்லையேல் பணம் கேட்பது பொருத்த மற்ற காரியம் என, மாணவரிடையே ஒரு பேச்சு உலவுவதாக நண்பரொருவர் என்னிடம் சொன்னார். இது எவ்வளவு தூரம் உண்மையோ அதை நான் அறியேன். பர்மாவில் செய்யும் வேலைகளுக்குப் பணம் கொடுக்க எனக்கு உரிமை இல்லை என்பதை, இங்கு வந்துள்ள பர்மியர் ஒவ்வொருவருமே அறிவர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனக்கு உரிமை உண்டென அவர்கள் எண்ணுவார்களாயின், கூட்ட முடிவில், அந்த எண்ணம் சரியல்ல என்பதை அவர்கள் உணர்வர். பர்மாவில் நடைபெற வேண்டிய அலுவல்களுக்காகப் பணம் சேகரிக்கும் பொருட்டு, சபர்மதியிலிருந்து ஒருவனை இவ்வளவு தூரம் வரச்செய்வது உங்களுடைய கௌரவத்திற்கும் சுயமரியாதைக்கும் குறைவு தருவதாகும். உங்களுக்கு வேண்டிய பணத்தை நீங்களே ஆங்காங்கு சேகரித்துக்கொள்ள வேண்டும். இந்தியாவில் பசியால் வருந்தும் கோடிக்கணக்கான மக்களின் பொருட்டு நான் சேகரிக்கும் பணத்தை எனது நோக்கம் போல் செலவிட என்னை விட்டுவிட வேண்டும்.

மாணவர் உலகில் மதிப்பு இருக்கிறதாகச் சொல்லி, எனக்கு ஒரு பட்டத்தையும் வழங்கினீர்கள். அதை மறுக்க எனக்குத் தெரியவில்லை. ஆனால், இன்னொரு பட்டத்தை—அதாவது மாணவர் உலகத்திற்குத் தொண்டன் என்ற பட்டத்தை—எனக்கு நானே சூட்டிக்கொள்ள முயன்று வருகிறேன். இந்திய, பர்மிய மாணவர்களுக்கு மட்டு மன்று, அகில மெங்குமுள்ள மாணவர் உலகிற்கே நான் தொண்டனாயிருப்பதில் குறைவு ஒன்றுமில்லாவிட்டால், எல்லா நாட்டு மாணவர் உலகுக்குமே நான் தொண்டனாயிருக்க விரும்புகிறேன். உலகின் மூலைமுடுக்குகளிலுள்ள மாணவர்களுக்கும் எனக்கும் ஒருவிதத் தொடர்பு இருந்து வருகிறது. அதிகமான வாழ்நாளை, கடவுள் எனக்கு அளிப்பாரேயானால், இன்னும் சிறந்ததொரு முறையில், இந்த உரிமையை நான் பாராட்டிக்கொள்ள முடியும். இந்தியாவில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கும் எனக்கும் இடையில் ஒருவித உயிர்த் தொடர்பு இருந்து வருகிறது. இங்கு கூடியிருப்பவர்களில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை அதிகமா, அல்லது,

பர்மிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாவென்பதில் எனக்கு ஒரே ஆச்சரியம். நூற்றுக்கு எத்தனை இந்திய மாணவர்கள் இங்கு படிக்கிறார்கள் என்பதையும், அவர்களது வாழ்க்கை எப்படி உள்ளது என்பதையும் அறிய நான் ஆசைப்படுகிறேன். இந்தியர்களாய் இருந்தாலென்ன, பர்மியர்களாய் இருந்தாலென்ன, உலகிலுள்ள மாணவர் அனைவருக்குமே பொருந்துவதான ஒரு வார்த்தையை—மாணவர்களின் குடியரசு—என்ற வார்த்தையை உபயோகப்படுத்திவிட்டீர்கள்.

பொறுப்பில்லாது நடந்துகொள்ளுகிற பழக்கம் மாணவர்களுக்கு உரியது என்று சொல்லியிருக்கிறீர்கள். அளவிற்குள் அடங்கியதாக இருக்குமானால் அதிலே குற்றமில்லை; எல்லை மீறிவிட்டால், மாணவன் என்ற சொல் பொருளற்றதாகிவிடும். பள்ளிக்கூடப் படிப்பு இருக்கும் வரையில் மாணவன், அது முடிந்துவிட்டபின் மாணவன் அல்லன் என்று எண்ணுவது சரியன்று. நாற்பது ஆண்டுகளுக்கு முன், அதாவது நான் பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்திய பின்னரே, மாணவன் என்ற வாசற்படியில் ஏற ஆரம்பித்தேன் எனலாம். சிறிது வாழ்க்கை அனுபவமுள்ள என்னிடமிருந்து, புத்தகப் படிப்பினால் மட்டும் பிற்கால வாழ்வில் ஒரு பயனும் இல்லை என்பதை, நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். வண்டி நிறையப் புத்தகங்களைப் படித்து விஷயங்களைமூளையில் திணித்துக்கொள்ளுவதனால், என்ன என்ன கஷ்டங்களை மாணவர்கள் அனுபவிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள் எனக்கு எழுதியுள்ள கடிதங்களிலிருந்தே இதைத் தெரிந்துகொண்டேன். சிலர் வழிகாட்டுவாரற்றுத் தீய வாழ்க்கையிலே இறங்கிவிட்டார்கள். சிலர் நிலையான ஸ்தானமின்றித் தடுமாறுகிறார்கள்; சிலருக்குப் பைத்தியமே பிடித்துவிட்டது. "நாங்கள் எவ்வளவுதான் அரும்பாடுபட்டு முயன்றாலும் முன்உள்ளதைப் போலவே, இப்பொழுதும் இருக்கிறோம். என்ன செய்வது? பிசாசை எங்களால் வெற்றிகொள்ள முடியவில்லையே?" என்று அவர்கள் சொல்லுகிறபோது, என் இதயம் அவர்களை எண்ணி உருகுகிறது. "பிசாசை எப்படி வெற்றிகொள்ளுவது? எங்களைப் பிடித்தாட்டும் தீய வாழ்க்கையிலிருந்து எவ்வாறு விடுபடுவது?"

என்று வெளிப்படையாகவே என்னைக் கேட்கிறார்கள். "ராம நாமத்தை உச்சரியுங்கள்; கடவுளை வணங்கி, அவருடைய உதவியை நாடுங்கள்" என்று நான் சொன்னால், "கடவுள் எங்கே யிருக்கிறார் என்பதை நாங்கள் அறியோம். பிரார்த்தனை செய்வதால் நலன் ஏற்படுமா என்பதையும் நாங்கள் அறியோம்" என்கிறார்கள். இவ்விதம் சொல்லும் நிலைமைக்கு, அவர்களை நாம் கொண்டுவந்துவிட்டோம்.

எனவே, மாணவர்கள் பாதுகாப்பாய் இருந்து கொள்ள வேண்டுமென்றும், அவர்களுக்குக் கிடைக்கிற சகல நூல்களையுமே அவர்கள் படிக்கக் கூடாதென்றும் சொல்லி வருகிறேன். ஆசிரியர்களிடத்திலும், "மாணவர்களின் இதயத்தைப் பண்படுத்திவிடுங்கள். அவர்களிடத்தில் இதயபூர்வமாகவே தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி வருகிறேன். பள்ளிக்கூடத்தை விட வெளியிலேதான் ஆசிரியர்களுக்கு வேலை அதிகமாய் இருக்க வேண்டுமென்பதை நான் உணருகிறேன். ஆசிரியர்களும் பேராசிரியர்களும் தாங்கள் வாங்குகிற சம்பளத்திற்காக வேலைசெய்து வருகிற காலம் இது. பள்ளிக்கூடத்திற்கு வெளியே மாணவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க அவர்களுக்குப் போதிய அவகாசமில்லை. வாழ்க்கையையும் சீலத்தையும் மாணவர்கள் அபிவிருத்தி செய்துகொள்ளப் பெரும் தடையாய் இன்று இருப்பது இதுவே யாகும். பள்ளிக்கூடத்திற்கு வெளியேயும் தங்கள் நேரம் அனைத்தையும் மாணவர்களுக்கெனச் செலவிட ஆசிரியர்கள் முன்வராதவரை, அதிகமாக ஒன்றையும் செய்ய இயலாது. மாணவர்களின் அறிவைக் கூர்மைப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களுடைய இதயங்களை ஆசிரியர்கள் பண்படுத்திவிடட்டும். ஏமாற்றம், ஏக்கம் என்ற இரண்டு வார்த்தைகளையும் அகராதியில் இருந்து துடைத்துவிட மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உதவி புரியட்டும். [கைதட்டு]

எனது இதயத்திலே பொங்கிவருபவை யனைத்தையும் நான் உங்களிடம் சொல்ல முயலும்போது, தயவுசெய்து கைதட்டி அதைத் தடைப்படுத்த வேண்டாம். உங்களுக்கும் உங்கள் இதயத்திற்கும் இடையில் அது நின்றுகொள்ளும்.

புனிதமான காரியங்கள் தோல்வியடைதல் கூடாது. இன்று முதல் தூயவாழ்க்கை நடத்துவதாக உறுதி செய்து கொள்ளுங்கள். அதனுல் நிச்சயமாகக் கடவுள் உங்களுக்குச் செவிசாய்ப்பதைக் காண்பீர்கள். அகம்பாவி செய்யும் வணக்கத்திற்கோ, அல்லது வியாபாரம் போன்று அவருடன் பேரம்பேசி வணக்கம் செய்பவனுக்கோ, கடவுள் மறுமொழி கூறுவதில்லை.

கஜேந்திர மோட்சம் என்ற கதையை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? மிக உயர்ந்த கவிதைகளில் இதுவும் ஒன்று; உலகத்திலே மிகவும் தெய்வத்தன்மை பொருந்தியவைகளில் இதுவும் ஒன்று. இந்தக் கதையைத் தெரிந்திராத பர்மிய மாணவர்கள், இந்திய நண்பர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். எனது நினைவிலே எப்போதுமே ஒரு தமிழ்ப் பழமொழி பதிந்து கிடப்பதுண்டு. 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை' என்பது அதன் பொருள். தெய்வத்தின் உதவியை நீங்கள் நாடினுல், யாதொரு ஒளிவுமறைவு இன்றி நீங்கள் அவரிடம் செல்ல வேண்டும்; அச்சமோ, சந்தேகமோ இருத்தல் கூடாது; இப்படி நீங்கள் கடவுளை நாடினுல் நிலைகெட்ட தன்மையில் கிடக்கிற உங்களுக்கும் அவர் உதவி செய்வார். தம் தயவை நாடிய கோடிக்கணக்கான மக்களுக்கு உதவி செய்த அவர், உங்களைக் கைவிட்டு விடுவாரா? எதையும் அவர் விதிவிலக்காகக் கொள்ளுவதில்லை. நீங்கள் செய்கிற ஒவ்வொரு பிரார்த்தனைக்கும் அவர் செவிசாய்ப்பதை நீங்கள் காண்பீர்கள். தூய்மை ஒருசிறிதும் இல்லாதவனுடைய பிரார்த்தனைக்குக்கூட அவர் செவிசாய்ப்பதை நீங்கள் காணலாம். என் சொந்த அனுபவத்திலிருந்து நான் இதை உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் நரகவேதனைப்பட் டிருக்கிறேன். வானுலக அரசரை முதலில் நீங்கள் நாடுங்கள். சகலமும் உங்களுக்குத் தாமே வந்து கிட்டும். பரிசுத்தமில்லாத இதயத்துடன் நீங்கள் ஆசிரியர்களை அணுகலாகாது. புத்தகங்களைப் படிக்கக் கூடாது. தூய உள்ளத்துடன் அவற்றை நாடுங்கள். வேண்டிய மட்டும் உங்களுக்குக் கிடைக்கும். தேசபக்தர்களாக விரும்பினுல் - உண்மையான தேசபக்தர்களாயும் வலியிழந்தவர்களை பாதுகாப்பவர்க

ளாயும் இருக்க விரும்பினல், படிக்க வசதியில்லாத, ஏழை எளியவர்களுக்காக நீங்கள் பரிந்து பேச விரும்பினல், பர்மாவிலிருக்கும் ஒவ்வொரு பெண்ணினது, ஒவ்வொரு சிறுமியினது கற்புக்கு நீங்கள் பாதுகாப்பாளராக விரும்பினல், முதலில் உங்கள் இதயங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். இந்த உணர்ச்சியோடு, வாழ்க்கையில் செய்ய வேண்டிய காரியங்களை நீங்கள் செய்துவந்தால், எல்லோருக்குமே அதனல் நன்மை யுண்டு.

ஆங்கில மாணவருக்கு

"உங்கள் நாட்டினர் எங்களை ஆளுகிறார்கள் என்று எண்ணி நீங்கள் கர்வம்கொள்ள வேண்டாம். ஒருவரும் தங்களைத் தாங்களே அடிமைப்படுத்திக்கொள்ளுவ தில்லை. தாமே அடிமை நாட்டினராகாமல் இன்னொரு தேசத்தை அடிமை நாடாக அடக்கி ஆள்வது எந்த தேசத்திற்கும் இயலாத காரியம்."

1931-ம் வருஷம் வட்டமேஜை மகாநாடு சம்பந்தமாய்க் கடைசியாகக் காந்திஜி இங்கிலாந்திற்குச் சென்றபோது, ஈட்டன் கல்லூரி மாணவர்கள் "ஹிந்துக்களின் விருப்பம்" என்பதுபற்றிக் காந்திஜியைப் பேசச் சொன்னார்கள். மௌலானா ஷௌகத்தலியை "முஸ்லிம்களின் விருப்பம்" என்பதுபற்றிப் பேசச் சொன்னார்கள். காந்திஜி அந்த பே[illegible]யதின் சுருக்கம்:

இங்கிலாந்தில் உங்களுக்கும் பெரியதொரு ஸ்தானமுண்டு. பிற்காலத்தில், உங்களில் சிலர் பிரதம மந்திரிகளாகவோ, அல்லது படைத்தலைவர்களாகவோ வரப் போகிறீர்கள். உங்களுடைய குணங்கள் உருவாகி வரும் இந்தச் சமயத்தில், நான் உங்களின் இயத்திற்குள்ளே புகுந்துவிடப் பெரிதும் விரும்புகிறேன். இந்தச் சமயத்தில் உங்கள் இதயங்களில் இடம்பெறுதல் எளிது. பரம்பரையாகவே பொய்யானதொரு சரித்திரத்தை உங்களுக்குச் சொல்லி வந்திருக்கிறார்கள். அதற்கு மாறுபட்ட உண்மைகளை நான் உங்களிடம் தெரிவிக்கப் போகிறேன். பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களிடம் பேதைமை குடிகொண் டிருப்பதை நான் காண்கிறேன். அறிவுக் குறைவினால் ஏற்பட்ட பேதைமை யன்று இது; அறிவு தவறான உண்மைகளை நம்புவதனால் ஏற்பட்ட பேதைமை யாகும் இது. சாம்ராஜ்ய ஆசை உடையவர்களாக நான் உங்களை எண்ணவில்லை. ஆனால், வேறுபல சமுதாயங்களைச் சுரண்டி அதனால் வாழ்க்கை நடத்தும் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவென்றும், உல்கத்தின் அமைதியை வாள்கொண்டு பாதுகாவாமல், ஒழுக்கத்தின் வலியினால் பாதுகாப்பவர்கள் என்றும் எண்ணி, உண்மையான நிகழ்ச்சிகளை உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். ஹிந்துக்களின் விருப்பம் என ஒன்றில்லை. எனது நாட்

டின் விடுதலையைப் பொருத்தவரை, உங்களைப்போலவே நானும் ஒரு ஹிந்து அல்லன். ஹிந்துக்களின் அபிப் பிராயத்தைத் தாங்கள் பிரதிபலிப்பதாகச் சொல்லிக் கொண்டு, ஹிந்து மகாசபைப் பிரதிநிதிகள் ஹிந்துக்களின் விருப்பம் என்பதாக ஏதோ சொல்லி வருகிறார்கள். அவர் கள் கூறும் கூற்றை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. தேசியவாதிகளாக இருந்துகொண்டு அவர்கள் தேசியப் பிரசினைகளுக்கு முடிவுதேட விரும்பவில்லை. அப் பிரசினை கள் அவர்களுக்கு ஏற்றனவாய் இருக்கின்றமையாலே தான் அவர்கள் அவற்றை விரும்புகிறார்கள். இதை அழிவுதரும் செயல்முறை என்று நான் சொல்லுகிறேன். பெரும்பான்மையினர் ஹிந்து மகாசபையினரைப் பின் பற்றுகிறபடியால் சிறுபான்மையினரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்துவைக்க முன்வரும்படி, ஹிந்து மகாசபை யினருடன் நான் மன்றாடி வருகிறேன். அதற்கு அவர்கள் இசைந்தால், திடீரென்று மந்திர சக்தியினால் ஏற்படுவது போல, நிலைமை தெளிவடைந்து வழிகாண ஏதுவாகும். பெரும்பான்மையினரான ஹிந்துக்களின் விருப்பம் எது, உணர்ச்சி எது என்பதை ஒருவருமே அறியார். அவர் களுடன் பல ஆண்டுகள் நான் கலந்து பழகியிருக்கிறேன். ஆகையால், அவர்களின் உள்ளக்கிடையை நான் நன்கு அறிவேன் என்று என்னால் உரிமை பாராட்டிச்சொல்ல முடியும். உத்தியோகத்தில் இவ்வளவு வேண்டும்; தேர்தலில் இவ்வளவு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்ற சில்லறை விவகாரங்களில் அவர்கள் அக்கறை கொள்ளுவதில்லை. பெரிய பெரிய நகரங்களில்தான்-அவை மட்டுமே இந்தியா வன்று-வகுப்புவாதத்தின் உருட்டல் மிரட்டல் அதிகம். அவற்றை லண்டன், அல்லது மேலை நாட்டுப் பட்டிணங்களின் கையாட்கள் எனலாம். இந்திய நகரங்கள் யாவும் இங்கிலாந்திற்குக் கமிஷன் ஏஜண்டு களாக இருந்துகொண்டு, உங்களுடன் சேர்ந்து மனமார இந்தியக் கிராமங்களைச் சுரண்டிக் கொள்ளையடிக்கின் றன. இந்தியாவின் விடுதலையாகிய பெரிய விஷயத்தை எண்ணும்போது, வகுப்புவாதம் அவ்வளவு முக்கியமன்று. இந்திய சுதந்திரத்தைப் பிரிட்டிஷ் மந்திரிகள் வேண்டா வெறுப்பாய் ஒதுக்கித் தள்ளிவிடுகிறார்கள். கலகம் செய்

யும் இயல்புடனும் அதிருப்தியுடனும் இருந்துவரும் இந்தியாவோடு நீண்ட நாள் ஒத்துவாழ முடியாதென்பதை, பிரிட்டிஷ் மந்திரிகள் மறந்துவிடலாகாது. நாங்கள் கலகம் செய்கிறோம் என்பது என்னவோ உண்மைதான்; ஆனால் அது பலாத்காரமற்ற கலகம்; அப்படியிருப்பினும் அது கலகமே யாகும். வகுப்புவாதம் என்ற நோய் சமூகத்தின் சில பகுதிகளை அரித்து வருவது உண்மையே யாயினும், அதைவிட இந்திய விடுதலை இன்னும் முக்கியமானது ஆகும். அரசியல் திட்ட அமைப்பைத் திருப்திகரமான முறையில் சரிப்படுத்திவிட்டால், சமூக வெறுப்புகள் உடனே தாமாகவே மறைந்தோடிவிடும். பிளவுபடுத்தி வைக்கும் அன்னியரின் வாள் நடுவிலிருந்து விலகிவிட்டால், பிரிந்திருக்கும் சமூகத்தினர் ஒன்றுபட்டுவிடுவார்கள். எனவே, ஹிந்துக்களின் விருப்பம் என ஒன்றில்லை; அப்படி ஒன்று இருக்குமாயின் அதைக் கடலில் தள்ளிவிட வேண்டியது அவசியம். அந்தப் பிரசினையை நீங்கள் ஆராய்வதால் உங்களுக்கு யாதொரு நலனுமில்லை. அதனுடைய நுணுக்கங்களை எல்லாம் மிகைப்படுத்திச் சொல்ல நீங்கள் முனைந்துவிட்டால்,—நிச்சயமாக முனைவீர்கள்—நாங்கள் தேம்ஸ் நதியில் மூழ்கி நாசமாவதை நீங்கள் விரும்புவதாகவே முடியும்.

வகுப்புப் பிரசினை முக்கியமன்று; அதைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டியதில்லை என்று நான் சொல்லும்போது, நான் சொல்லுவது கடவுளின் பெயரினால் உண்மையாகும். கோடிக்கணக்கான மக்கள் பலாத்காரமின்மையை எப்படி ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதையும், அவர்கள் எப்படி அதைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும், சரித்திரம் படிக்க விரும்பும்போது, படித்துப்பாருங்கள். காட்டில் வாழும் விலங்குகளைப் போல,மனிதன் முரட்டுத்தனமாய் நடந்துகொள்ளுவதைப் படியாது, மனிதனிடம் காணப்படும் சிறப்பியல்புகளை எல்லாம் ஆராய்ந்து பாருங்கள். வகுப்புத் தகராறுகளில் கலந்துகொள்ளுகிறவர்களை,பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருப்பவர்களுக்குச் சரியான எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். அவைகளை நீங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டாம். யாருக்குமே தீங்கு செய்யாமல், நாட்டின் விடுதலைக்காக

உயிரையே அர்ப்பணம் செய்யும் மனிதர்களை ஆராய்ந்து பாருங்கள். உயர்ந்த இயல்புடைய மனிதனை-அதாவது அன்பு கனிந்த மனிதனை-நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். அப்படிச் செய்வதனால் வயது ஆக ஆக உங்களது பரம்பரை சீர்பட ஏதுவாகும். உங்கள் நாட்டினர் எங்களை ஆண்டு வருகிறார்கள் என்பதற்காக நீங்கள் கர்வங்கொள்ள வேண்டாம். எவரும் தம்மை தாமே அடிமைப்படுத்திக் கொள்ளுவதில்லை. தாமே அடிமை நாட்டினராகாமல், இன்னொரு நாட்டினரை அடிமைப்படுத்தி அடக்கிஆள்வது எந்த நாட்டினருக்கும் இயலாத காரியம். இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்குமிடையில் இருந்துவரும் தொடர்பு, பாவம் நிறைந்த ஒரு தொடர்பாக இருந்துவருகிறது; இயற்கைக்கு மிகவும் முரண்பட்ட தொடர்பாக இருந்து வருகிறது. சுதந்திரம் எங்களது பிறப்புரிமை; நாங்கள் அதை அடைய இயல்பாகவே எங்களுக்கும் பாத்தியதை உண்டு. அதற்காக நாங்கள் பட்டிருக்கும் கஷ்டமும் இயற்றியிருக்கும் தவமும் கொஞ்சநஞ்சமல்ல. சுதந்திரத்தை அடைய வேண்டும் என்ற ஆசையோடு நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். வந்த காரியம் கைகூடி வர நீங்கள் எல்லோரும் ஆசீர்வதிக்க வேண்டும். சுரண்டுகிற பாவத்திலிருந்து உங்கள் நாட்டினரை விடுதலை செய்து, ஒப்பற்றதொரு புகழை, வயதுவந்ததும், உங்கள் நாட்டினருக்கு நீங்கள் தேடிக்கொடுக்க வேண்டும் என்பது என் விருப்பம். அதனால் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு உதவியவர்கள் ஆவீர்கள்.

ஆங்கில மாணவருக்கு - உ

"நாமெல்லோரும் ஒரே கடவுளின் பிள்ளைகளாயின், ஒரே தெய்விகப் பண்பு நமது உடம்பில் கலந்திருக்குமாயின், ஒவ்வொருவன் செய்த, செய்கிற பாபத்திலும் அவன் நம்மைச் சேர்ந்தவனுயினும் சரி, அல்லது வேறு இனத்தைச் சேர்ந்தவனுயினும் சரி, அதிலே நமக்கும் பங்கு உண்டு."

லண்டனில், மாணவர்கள் கூட்டமொன்றில் காந்திஜி பேசினார். கோல்டுகோஸ்டிலிருந்து வந்திருந்த நீக்ரோ மாணவர் ஒருவர், ரஷ்ய மாணவர் ஒருவர், கொரியாவைச் சேர்ந்த மாணவர் ஒருவர், ஆங்கில மாணவர் ஒருவர் ஆகியோர், அவரைக் கேள்விகள் கேட்டனர். மகாநாட்டுக்கு வெளியே தாம் செய்துகொண் டிருப்பதைப்பற்றித் தெரிவித்துவிட்டு, காந்திஜி பேசியதாவது:

இப்போது விதைக்கப்பட்டுள்ள இந்த விதை பிரிட்டிஷாரின் உணர்ச்சியைச் சாந்தப்படுத்தினாலும் படுத்தலாம்; அதன் விளைவால் மனிதர்கள் மிருகப்பாங்கு அடைந்து வருவது தடுக்கப்பட்டு நின்றுபோயினும் போகலாம்; ஆங்கிலேயருக்குக் கோபம் வந்துவிட்டால், அது எவ்வளவு கொடுமையானதாய் இருக்கும் என்பதை பஞ்சாபிலே கண்டேன். எனக்குள்ள பதினைந்து வருஷ அனுபவத்தினாலும், சரித்திர வாயிலாகவும் அவர்கள் பல்வேறு இடங்களில் இழைத்துள்ள அட்டூழியங்களையும் அறிந்திருக்கிறேன். எங்கும் ஒரே மாதிரிதான். என்னால் கூடியவரை சகல சக்திகளையும் ஒன்றுதிரட்டி, இதைப் போன்ற காட்டுமிராண்டித்தனம் இனிமேல் நடவாது தடுப்பதே, எனது வேலை. எனது தேசத்தினர் படுகிற கஷ்டத்தைத் தடுப்பதைக் காட்டிலும், மனிதர்கள் காட்டுமிராண்டிகளாக மாறி வருவதைத் தடுப்பதிலே, எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. எங்கள் நாட்டினர் படும் அல்லல்களைப் போக்கவே நான் *நாட்டம் செலுத்துவதாகச் சொல்லப்படுகிறது. கஷ்டப்படுவதற்குத் தாங்களே முனைந்து நிற்கும் மக்கள், தங்களை உயர்த்திக்கொள்ளுவதுடன், மனித சமுதாயத்தையுமே உயர்த்துகிறார்கள் என்பதை நான் அறிவேன். எதிரிகளை வெற்றிகொள்ளும் முயற்சிகளில் காட்டுமிராண்டித்தனமாய் நடந்து

கொள்ளுகிறவர்களும், தங்களைவிட தொய்ந்த நிலையிலுள்ள மனிதர்களையும் தேசங்களையும் சுரண்ட முயல்கிறவர்களும், தங்களை மட்டுமின்றி, மனித சமுதாயத்தையுமே கீழான நிலைக்குக் கொண்டுவந்துவிடுகிறார்கள். மனித இயல்பை, கேவலமான இழிந்த நிலைக்கு உட்படுத்துவது எனக்கோ, அல்லது வேறு யாருக்குமோ பிரியமானதன்று. நாமெல்லோரும் ஒரே கடவுளின் பிள்ளைகளாயின், ஒரே தெய்விகப் பண்பு நமது உடல்களில் கலந்திருக்குமாயின், ஒவ்வொருவன் செய்த, செய்கிற பாபத்திலும்-அவன் நம்மைச் சேர்ந்தவனாயினும் சரி, அல்லது வேறு இனத்தைச் சேர்ந்தவனாயினும் சரி-அதிலே நமக்கும் பங்குண்டு. மனிதனிடம் மிருகத்தன்மையைக் கிளறிவிடுதல் எவ்வளவு அருவருக்கத் தகுந்த செயல் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆங்கிலேயரில் எனக்குப் பல நண்பர்கள் உண்டு. இத்தகைய மிருக இயல்பை அவர்களிடம் காண நேரும் போது, நான் அடையும் அருவருப்புக் கொஞ்ச நஞ்சமன்று. இந்தக் காட்டுமிராண்டித்தனத்தைப் போக்க நான் செய்து வரும் முயற்சியில், கூடுமானவரை உதவி செய்யவேணுமாய் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தப் பிரசினையை நன்கு அலசி ஆராய்ந்து பார்க்கும்படியும், உண்மை, பலாத்காரமின்மை இவற்றின் ஆற்றல்மீது உண்மையாகவே நம்பிக்கை இருக்குமாயின், கடவுளுக்குப் பயந்து இந்த இரண்டையும் தினசரி வாழ்க்கையில்-அரசியல் துறையில் மட்டுமன்றி, சகல துறைகளிலுமே-கடைப்பிடிக்கும்படியும், இந்திய மாணவர்களை நான் வேண்டிக்கொள்ளுகிறேன். இந்தத் துறையில் இறங்கி நீங்கள் செய்கிற எதுவும் நான் நடத்தும் போராட்டத்திற்கு உதவியாய் இருக்கும். இந்திய மாணவர்களைப் போல, உண்மையானவர்களை, நல்லவர்களைக் கண்டதில்லை என்று, உங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு பழகும் ஆங்கிலேயர்களும் ஆங்கிலப் பெண்மணிகளும் சொல்லும் படியாக நீங்கள் நடந்துகொள்ளவேண்டும். நமது தேசத்தார் செல்வது சரியான பாதை என்பதை எடுத்துக்காட்டுவதற்கு இது ஒரு கஷ்டமான காரியமா? 1920-ம் வருஷம் செய்யப்பட்ட காங்கிரஸ் தீர்மானத்தில் 'தற்சுத்தம்' என்ற சொல் காணப்படுகிறது. அந்த நிமிஷ முதலே

நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் காங்கிரஸ் கண்டது. சுயமாகத் தியாகம் செய்து, நம்மை நாமே பரிசுத்தப்படுத்திக்கொண்டால் நாம் விடுதலையடையத் தகுதியுடையவர்களாவோம்; கடவுளும் நம் பக்கமிருப்பார். இதுவே உண்மையாயின், வேறு எது செய்யாவிட்டாலும், பரிசுத்த மனத்தோடு சுயமாகத் தியாகம் செய்ய முன்வருகிற ஒவ்வொரு இந்தியனும் பிறந்த தேசத்திற்கு உதவுகிறவன் ஆவான். தன்னைப் பலப்படுத்திக் கொள்ளக் காங்கிரஸ் இந்த வழிகளைக் கையாண்டிருப்பதாக நான் அபிப்பிராயப்படுகிறேன். எனவே சுதந்திரத்திற்காகப் போராட விரும்பும் ஒவ்வொரு மாணவனும் பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தால் போதும். இதைத் தவிர அதிகமாக வேறு ஒன்றும் வேண்டியதில்லை. தேசத் தொண்டு செய்கிறவர்களின் சீலம், வெறுப்பு, சந்தேகம் இவற்றைக் கடந்ததாய் அமைந்திருக்க வேண்டும்.

இங்கிலாந்தில் இந்திய மாணவர்களுடன்

"இரத்த ஆறினாலும் யுத்தத்தினாலும் களைப்படைந்திருக்கும் உலகத்திற்கு, சுதந்திரமான பங்காளியாக இருந்து இந்தியா சிறப்பானதோர் செய்தியை அளிக்கப்போகிறது. யுத்தம் பீறிக்கொண்டு வருமாயின், இந்தியாவும் பிரிட்டனும் பொதுவாக முயன்று அதைத் தடுக்கும். ஆயுதபலம்கொண்டு தடுக்க முயலாது உதாரணமாக எடுத்துக்காட்டக்கூடிய சிறந்ததொரு சக்தியைக்கொண்டு தடுக்க முயலும்."

லண்டனிலிருக்கும் இந்திய மாணவர்களின் மத்திய சங்கச் சார்பாகக் கூட்டம் நடந்தபோது, மாணவர் ஒருவர் ஒரு கேள்வி கேட்டார். பரிபூரண சுயேச்சையைக் கோரி, காங்கிரஸ் தீர்மானித்து இருப்பதை விளக்கி, காந்திஜி பேசினர்.

கராச்சித் தீர்மானமும் லாகூர் தீர்மானமும் ஒன்றே. கராச்சித் தீர்மானம் லாகூர் தீர்மானத்தையே குறிப்பிட்டு, வலியுறுத்துகிறது. கிரேட் பிரிட்டனுடன் கண்ணிப்மான முறையில் தொடர்பிருந்தால், அந்தத் தொடர்பு, பரிபூரண சுயேச்சைக்கு முரண்பட்டதன்று என்பதைக் கராச்சித் திர்மானம் தெளிவுபடுத்துகிறது. அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையில் இருந்து வருகிற தொடர்பைப் போன்று இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் தொடர்பு இருக்கலாம். சாம்ராஜ்யத்தில் பங்காளியாக இருக்க விரும்பாததால் கராச்சித் தீர்மானத்தில் பிரிவினை நோக்கம் அடங்கியே உள்ளது. கிரேட் பிரிட்டனுடன் இந்தியா பங்காளியாக இருப்பது இயலாத காரியமன்று; எளிதானதே........

குடியேற்ற நாட்டு அந்தஸ்தில் எனக்கு ஒரு காலம் மோகம் இருந்தது. குடியேற்ற நாட்டு அந்தஸ்து என்பது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆஸ்ட்ரேலியா, கானடா, தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து ஆகிய தேசங்களுக்குப் பொதுவாக இருந்துவரும் ஒரு அந்தஸ்து ஆகும். இவைகளுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள தொடர்பு தாய்க்கும் மகளுக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. இந்த நாடுகளில் இருப்பவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலம் பேசுபவர்கள். அவர்களுக்கும் பிரிட்டனுக்கும் உள்ள

தொடர்பு ஒருவித உறவுமுறை போன்றது. இந்தியாவுடன் இருந்துவரும் தொடர்பு அப்படிப்பட்டதன்று. சாம் ராஜ்யம் என்ற எண்ணத்தை இந்தியர்களின் மனதி லிருந்து அகற்றிவிட்டு, லாகூர் காங்கிரஸ் அதற்குப் பதிலாக, பூரண சுயேச்சை என்ற எண்ணத்தை இந்தியர் கள் முன் சமர்ப்பித்து இருக்கிறது. சுதந்திரம் அடைந்த பின்கூட, விரும்பினால் அதேவகையில் பிரிட்டனுடன் தொடர்பு கொண்டு வாழலாம் என்று கராச்சித் தீர்மானம் வியாக்கியானம் செய்கிறது. சாம்ராஜ்ய எண்ணம் நீடிக்கும் வரை ஆட்சி செய்யும் மத்திய இடம் டௌனிங் தெருவாக இருக்கும்; இந்தியா விடுதலை பெற்று, பிரிட்டனும் பங்காளியாக இருக்க விரும்பினால் ஆட்சி புரியும் மத்திய இடம் டௌனிங் தெருவிலிருந்து டெல்லிக்கு மாறிவிடும். இரத்த ஆறினாலும் யுத்தத்தினாலும் களைப்படைந்துவரும் உலகத்திற்குச் சுதந்திரமான பங்காளியாக இருந்து, இந்தியா சிறப்பானதொரு செய்தியை அளிக்கப்போ கிறது. யுத்தம் பீறிக்கொண்டு வருமாயின், இந்தியாவும் கிரேட் பிரிட்டனும் சேர்ந்து, பொதுவாக முயன்று, அதைத் தடுக்கும்; ஆயுத பலம்கொண்டு தடுக்க முயலாது உதாரணமாக எடுத்துக்காட்டக் கூடிய, வெல்ல முடியாத ஒரு சக்தியைக் கொண்டு தடுக்க முயலும். இதைக் கேட்டு நீங்கள் சிரித்தாலும் சிரிக்கலாம். இது தடபுடலாகப் பாராட்டிக்கொள்ளுகிற காரியம் என்று தோன்றினாலும் தோன்றலாம். ஒரு தேசத்தின் பிரதிநிதியாக விளங் கும் ஒருவர் அதிகார தோரணையோடு இவ்விதம் சொல்லு கிறார் என்பதை நீங்கள் மறந்துவிடலாகாது. இதற்குக் குறைந்ததாக உள்ளதை அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். இதை அடையாது தோல்வியுற்றுப் போனாலும் போவே னேயன்றி, கேவலப்படுத்தும் நிலைக்கு நான் இடம் கொடேன். நமது கோரிக்கைக்குக் குறைந்து இருந்தால் அதை நான் வாங்கிக்கொள்ளச் சம்மதியேன். நமது கோரிக்கை நிறைவேறாவிட்டால், நமது தேசத்தினரை இன்னும் அதிகக் கஷ்டத்துக்கு ஆளாகும்படி வேண்டிக் கொள்ளுவேன்; உங்களுக்கும் எழுதுவேன். பூரண மன துடன் நீங்களும் ஒத்துழைக்க வேண்டும்.

ராலே கிளப்பில்

"இந்தியா இருப்பதனாலேயே பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒரு சாம்ராஜ்யமாக விளங்குகிறது. இந்த சாம்ராஜ்ய எண்ணம் போய்விட வேண்டும். அப்போது பிரிட்டனுடன் சரி நிகர் சமானமான பங்காளியாக இருந்து அதனுடைய இன்ப துன்பங்களில் பங்குகொள்ளச் சித்தமாயிருக்கிறேன். மற்ற குடியேற்ற நாடுகளுடனும் சம பங்காளியாக இருக்க விரும்புகிறேன்."

ஆக்ஸ்போர்டிலிருக்கும் ராலே கிளப்பில், குடியேற்ற நாடுகளிலிருந்து வந்து மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் சாம்ராஜ்ய எண்ணத்திலே ஊறித்திளைத் திருப்பவர்கள்; அரசியல் விவகாரங்களை துருவிப்பார்க்கும் இயல்புடையவர்கள். அவர்களுடன் காந்திஜி சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தார். காந்திஜியை அவர்கள் அனேக கேள்விகள் கேட்டார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் நேரடியாகவும் குறிப்பாகவும் காந்திஜி பதில் சொன்னார்; அந்தக் கேள்விகளில் சில:

சாம்ராஜ்யமும் பங்காளிமுறையும்

கேள்வி: சாம்ராஜ்யத்திலிருந்து இந்தியாவை எந்த அளவுக்குத் துண்டிக்க எண்ணுகிறீர்கள்?

பதில்: சாம்ராஜ்யத்திலிருந்து அடியோடு துண்டித்துவிட எண்ணுகிறேன். துன்பமின்றி இன்பமாக இந்தியா வாழ விரும்பினால் பிரிட்டிஷ் மக்களோடு உள்ள தொடர்பை இந்தியா வெட்டிக்கொள்ளலாகாது. இந்தியாவினாலேதான் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒரு சாம்ராஜ்யமாக விளங்குகிறது. இந்தச் சாம்ராஜ்ய எண்ணம் போய்விட வேண்டும். அப்போது பிரிட்டனுடன் சரிநிகர் சமானமான பங்காளியாக இருந்து, மற்ற குடியேற்ற நாடுகளைப் போல் அதனுடைய இன்ப துன்பங்களில் பங்குகொள்ளச் நான் சித்தமாயிருக்கிறேன். சரிநிகர் சமானமான பங்காளித்துவம்தான் தேவை.

கேள்வி: இங்கிலாந்திற்கு ஏற்படும் துன்பங்களை இந்தியா எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளும்?

பதில்: பூரணமான அளவுக்கு.

கேள்வி: தன்னிடமுள்ள செல்வங்களை, இங்கிலாந்திற்கு, இந்தியா ஐக்கியத்துடன் பகிர்ந்துகொடுக்குமா?

பதில்: பங்காளித்துவம் நீடித்து இருக்கும்வரையில்

இந்தியா பகிர்ந்தளிக்கும். யானைக்கும் பூனைக்கும் உள்ள தொடர்பாக இராமலும் உலகிலுள்ள பிற இனத்தாரைச் சுரண்டுவதற்குப் பயன்படுத்தப்படாமலும் இருக்கிற வரை, இந்தப் பங்காளித்துவ உறவு இருந்து வரும். இவற்றுள் முரண்பாடு ஏற்படின், இந்தியா பிரிந்துகொள்ளும். உலகிலுள்ள சகல நாடுகளும் சுபிட்சமாக வாழ வேணுமென்பதே பொது இலட்சியமாக இருக்க வேண்டும். அந்த இலட்சியம் கைகூடி வராவிடில், அதுவரை பொறுத்துக் கொண்டிருப்பதற்கு எனக்குப் போதிய பொறுமை உண்டு. அவசரப்பட்டு உண்மையற்ற ஒரு பங்காளித்துவத்தை உண்டாக்கிக்கொள்ள எனக்கு விருப்பம் இல்லை.

சுரண்டுதலா? வியாபாரமா?

கேள்வி : ஒரு நாட்டுடன் இன்னொரு நாடு வியாபாரம் செய்கிறதையும், ஒரு நாடு இன்னொரு நாட்டைச் சுரண்டுகிறதையும் தாங்கள் எப்படி வேறுபடுத்துகிறீர்கள்?

பதில் : அதைச் சோதிப்பதற்கு இரு வழிகள் உண்டு.

1. நமது சரக்குகளை வாங்க விரும்பாத நாட்டின்மீது அவற்றை வலிந்து திணித்தல் கூடாது.

2. வியாபாரத்துக்குப் பக்க பலமாக அதைத் தொடர்ந்து கடற்படை போதல் கூடாது.

இந்தச் சமயத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்திய நாட்டினருக்கு நீங்கள் எவ்விதம் தீங்கு இழைத்து வருகிறீர்கள் என்பதை உணர்ந்திருந்தால், 'பிரித்தானியா அரசி கடலை ஆதிக்கம் செலுத்துகிறாள்' என்று பாட்டுப் பாட மாட்டீர்கள். அதற்காகப் பெருமையும் கொள்ள மாட்டீர்கள். ஆங்கிலேயருக்கு இன்று பெருமை தரும் அதே விஷயங்கள் வெட்கப்படத்தக்கனவாக மாறக் கூடிய காலமும் வரும். மற்ற தேசங்கள் கேவலமான நிலைமையில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டோ, மற்ற தேசங்கள் தோல்வியடைந்திருப்பதைக் கண்டோ நீங்கள் பெருமைகொள்ளுவது நின்றுபோய்விடும்.

வகுப்புப் பிரசினை

கேள்வி : தாங்கள் சொல்லுகிற பாதைக்குத் தடையாக, பிரிட்டிஷாரின் போக்கு, வகுப்புப் பிரசினைப் பொறுத்தவரை எவ்வளவு தூரம் இருந்து வருகிறது?

பதில் : அதிக மெனலாம்; இல்லையேல் பாதியாதி

என்று சொல்லலாம். உணர்ந்தோ, உணராமலோ பிரித்தாளும் முறை இங்கு இருப்பதைப்போல, இந்தியாவிலும் இருந்து வருகிறது. பிரிட்டிஷ் அதிகாரிகள் சில சமயங்களில் சில கட்சிகளோடும் வேறு சில சமயங்களில் வேறு சில கட்சிகளோடும் பிரியமாக நடந்துகொள்ளுவார்கள். நானும் ஒரு பிரிட்டிஷ் அதிகாரியாக இருந்திருப்பேனாயின், கட்சிகளுக்கு இடையில் காணப்படும் மனஸ்தாபங்களைப் பயன்படுத்திக்கொண்டு, ஆட்சியை பலப்படுத்தி நிலை நிறுத்துவதற்கு, இவ்விதமே நடந்துகொண்டிருக்கக் கூடும் என்பது உண்மை. பிறர் வீசும் வலையில் நாங்கள் எளிதாகச் சிக்கிக்கொண்டுவிடுகிறோம். ஆட்சிமுறையில் எங்களுக்கு இருந்து வரும் பொறுப்பு இப்போது இதுதான்.

கேள்வி : வகுப்புப் பிரசினையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்த்து வைத்துவிடும் என்று தாங்கள் கருதுகிறீர்களா ?

பதில் : நான் அப்படிக் கருதவில்லை. இவ்வாறு மறுத்துச் சொல்லுபவன் நான் ஒருவனே. வகுப்புப் பிரசினை ஒரு வெட்கக்கேடான விஷயந்தான். இந்தப் பிரசினையைத் தீர்த்து வைக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் நானுமல்ல; காங்கிரஸுமல்ல. எனினும் வகுப்புப் பிரசினைக்கு ஒரு முடிவு காண, ஒரு நீதி சபையை நிறுவ வேண்டுமென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இந்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கங்களும் தவறு செய்கின்றன. தாங்கள் அனுப்பும் அபிப்பிராயங்களில் அரசியலையும் புகுத்தி, வகுப்புப் பிரசினைக்கு முடிவு தேடுகின்றன. ஒவ்வொரு கட்சியும் நீதியைப்பற்றிப் பேசியபோதிலும் பஞ்சாயத்தின் மூலமாக முடிவு செய்வதை விரும்பவில்லை. இதிலிருந்தே தந்திர முறையை அதிகமாகக் கையாளப்படுகிற தென்பதைத் தெரிந்துகொள்ளலாம். எனவே இந்தப் பிரசினையில் தவறு எல்லோரிடமும் இருக்கிறது; தவறில் அளவுதான் வித்தியாசம். பாத்தியதைகளைப் பற்றிய விவகாரங்களை நீதி சபையின் முடிவுக்கு விட்டுவிடலாம்.

கேள்வி : நீதி சபையில் யார் யார் இருக்க வேண்டும் ?

பதில் : இந்தியன் ஹைகோர்ட்டைச் சார்ந்த நீதிபதிகள் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அல்லாதவர்கள் இருக்கலாம், அல்லது பிரிவிக் கவுன்சில் நீதிபதிக் கமிட்டியி

லுள்ள நீதிபதிகள் இருக்கலாம்.

கேள்வி : அவர்கள் கூறும் தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்படுமா?

பதில் : கோர்ட்டின் முடிவை ஏற்றுக்கொள்ளுவது என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை. நான் சொல்லியதற்கு அனுசரணையாகச் சூழ்ச்சிகளும் நடக்கலாம். அரசாங்கமே நான் சொல்லுகிறபடி நடந்துகொள்ளத் தயாராய் இருக்கும் பட்சத்தில், நீதிசபை நிறுவப்படுவதற்கு முன்பே, நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படக்கூடும். ஒவ்வொரு வகுப்பினரும் தாங்களே முன்வந்து பிரசினைக்கு முடிவு காண முயலுவார்கள். அரசியல் உணர்ச்சி உடையவர்கள் திருப்திகொள்ளும் அளவிற்கு, ஏற்கெனவே அனைத்தும் தயாராய் இருக்கின்றன. தாம் கொண்டாடும் பாத்தியதைகளில் உள்ள குறைபாடுகளை ஒவ்வொரு வகுப்பாரும் தாமே அறிவர்.

சில ரசமான கேள்விகள்

"இங்கிலாந்திற்கும் மேலை நாடுகளுக்கும் இசைந்திருப்பது நமக்கு இசைந்து வராமலிருக்கலாம். மேலை நாட்டினரை நாம் ஏன் ஈ அடித்தான் காப்பி அடிக்க வேண்டும். நமது நாட்டின் நிலைமை முற்றிலும் வேறானது. அப்படி இருக்கும் போது தனி ரகமான முறையில் நாம் ஏன் தேர்தல் நடத்தக் கூடாது."

லண்டனில் நடந்த கூட்டத்தில், இந்திய மாணவர்கள் சில ரசமான கேள்விகள் கேட்டார்கள். அவற்றையும் அவற்றிற்குக் காந்திஜி சொன்ன மறுமொழியையும் கீழே தந்திருக்கிறோம் :

வகுப்புப் பிரசினை

கேள்வி : நம்மை ஒற்றுமையாய் இருக்கும்படி அரசாங்கத்தார் கோருவது எவ்வளவு பைத்தியகாரத்தனமோ, அதைப்போலவே, முஸ்லிம்கள் ஐக்கியமாக இருக்க வேண்டுமென்று நாம் கோருவது பைத்தியகாரத்தனம் அல்லவா? எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து, இதைப் போன்ற ஒரு பெரிய பிரசினைக்கு முடிவு காண்பது எவ்வளவோ நல்லதில்லையா?

பதில் : நீங்கள் இரு விதத்தில் தவறு செய்கிறீர்கள். அரசாங்கம் நமக்குச் சொல்லுவதையும், முஸ்லிம்களுக்கு நான் சொல்லுவதையும் ஒப்புநோக்குவது முதல் தவறு. வெளிப்பார்வைக்கு இந்த ஒப்புநோக்கு ஒரு மாதிரியே தோன்றும். ஆழ்ந்து கவனித்தால் ஒப்புநோக்குவதற்கே இடமில்லை என்பது தெரியவரும். பிரிட்டிஷாருடைய நோக்கத்திற்குப் பக்கபலமாய் இருப்பது வாள். எனக்குப் பக்கபலமாய் இருப்பது எனது இதயத்திலிருக்கும் அன்பு ஒன்றுதான்; அதைத் தவிர வேறு எதுவும் என்னிடம் இல்லை. கொலைஞனும் சத்திர வைத்தியனும் ஒரேவிதமான கருவிகளைத்தான் உபயோகிக்கிறார்கள்; ஆனால் அதனால் ஏற்படும் பலனோ முற்றும் எதிர்மாறானதாய் இருக்கிறது. சகல முஸ்லிம் கட்சிகளின் உதவியின்றி எனது கோரிக்கையை நடைமுறைப்படுத்துவது சாத்தியமன்று என நான் சொல்லி வந்திருக்கிறேன். மெஜாரிட்டி என்பதை மட்டும் கொண்டு, என்னால் என்ன செய்ய முடியும்? ஆழ்ந்து நோக்கினால் நிலைமை வேறுபட்டுவிடுகிறது. ஒருசில நண்பர்கள் ஒரு காரியத்தைச் செய்ய விரும்பும்போது, உடன் இருந்து இதே துறையில் என்னோடு

கலந்து ஈடுபட்டு வேலை செய்து வரும் இன்னும் சில நண்பர்கள் அவ்விதம் செய்யக் கூடாது என்கிறார்கள். ஏற்கனவே குறிப்பிட்ட நண்பர்களே மதிக்கத்தகுந்த முறையில் உங்களோடு ஒத்துழைப்பார்கள் என்று ''இந்த'' நண்பர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர்கள். அவர்களுக்குத் துரோகம் செய்கிறேன் என்ற குற்றத்திற்கு நான் ஆளாகலாமா?

கொடுப்பதற்கு எனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரே மனதுடன் ஒரே முகமாக எல்லோரும் என்னை ஆதரிப்பார்களாயின் அவர்களின் கோரிக்கைக்காக, நான் போராடுவதாகச் சொன்னேன். வாழ்க்கையில் நான் அடைந்த நம்பிக்கையின் காரணமாகவே, உரிமை நாடி நிற்பவர்களுக்கு, நான் அடைக்கல மாகிவிடுகிறேன். ஹிந்துக்கள் யாவரையுமே என் மனப்போக்கிற்கு இசையும்படி செய்ய முடியுமானல்,-மிக மிகக் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும்—இந்தப் பிரசினைக்கு விரைவிலே ஒரு முடிவு காண்பது எளிது. நீங்கள் எண்ணுவதுபோல், நான் சொல்லுவது அவ்வளவு முட்டாள்த்தனமானதன்று. இதைத் தீர்த்து வைப்பதற்குரிய ஆற்றல் ஏதாவது எனக்கு இருப்பின், இந்தக் கேவலமான பிரசினை இது வரை நீடித்துக்கொண்டு போகவிட்டிருக்க மாட்டேன்; உலகத்தின் அவமரியாதைக்கும் நாம் ஆளாகி இரோம்.

கடைசியாக, இந்தப் பிரசினையைப் பொருத்தவரையில் நான் எந்த மதத்தையும் சார்ந்தவன் அல்லன். இதனுல் என்னை ஹிந்துவல்ல என்று எண்ணிவிட வேண்டாம். நான் கூறும் ஆலோசனைப்படி விட்டுக்கொடுப்பதால் எனது ஹிந்து மதம் கறைபட்டுவிடாது; கெட்டுப்போய் விடாது. நான் காங்கிரஸின் ஏகப்பிரதிநிதியாக இங்கு வர எண்ணியபோது, இந்தப் பிரசினையை ஹிந்து என்ற முறையில் கவனிக்கக் கூடாது என்றும், தேசியவாதி என்ற முறையில் இந்தியர் அனைவருடைய உரிமைகளையும் விருப்பங்களையும் பாதுகாக்கும் முறையில் நான் ஆராய வேண்டும் என்றும் எனக்குள்ளேயே நான் சொல்லிக் கொண்டேன். ஆகையினுலேதான், காங்கிரஸ் எல்லோருடைய பாத்தியதைகளையும் பாதுகாத்து வருகிறது என்று

கூற நான் தயங்கியதில்லை. வாயில்லாப்பூச்சிகளான கோடிக்கணக்கான மக்களின் உரிமைகளுக்கு மாறுபடாமல் இந்தியாவைத் தமது சொந்த நாடாக எண்ணி, ஆங்கிலேயர்களும் நடந்துகொள்ளுவார்களாயின், அவர்களது உரிமைகளையும் பாதுகாக்க, காங்கிரஸ் மகாசபை நிச்சயமாக முன்வரும்.

சமஸ்தானக் குடிமக்களும் வட்டமேஜையும்

கேள்வி: *சமஸ்தானக் குடிமக்களைப்பற்றி மகாநாட்டில் தாங்கள் ஒன்றுமே பிரஸ்தாபிக்கவில்லையே? ஏன்? அவர்களுடைய நலன்களைத் தாங்கள் பலிகொடுத்துவிட்டதாகவே எண்ணலாமா?*

பதில்: வட்டமேஜை மகாநாட்டில், அடுக்கு அடுக்காக நான் பிரசங்கங்கள் புரிய வேண்டுமென்று, சமஸ்தானக் குடிமக்கள் எதிர்பார்க்க மாட்டார்கள். ஆனால், சமஸ்தானபதிகளிடம் நான் மன்றாடுவதை அவர்கள் விரும்புவார்கள்; நான் அவ்விதம் செய்துமிருக்கிறேன். நான் செய்யும் காரியங்கள் பலனளிக்காவிட்டால் அப்போது என்னைக் கண்டிக்க அவகாசம் இருக்கவே செய்கிறது. என் விருப்பப்படியே காரியாதிகளை நடத்த எனக்கு உரிமை வேண்டும். சமஸ்தானக் குடிமக்களுக்கு என நான் கோருகின்றவற்றை, வட்டமேஜை மாநாடு தந்துவிடப் போவதில்லை; அவற்றைச் சமஸ்தானபதிகளிடமிருந்தே பெற வேண்டும். ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையும் இதைப் போன்றதே யாகும். எனக்குத் தேவைப்படுகின்றவற்றைப் பெற, நான் முஸ்லிம்களிடம் மண்டியிட்டுக் கூடக் கேட்கலாம்; ஆனால் வட்டமேஜை மகாநாட்டில், நான் அப்படிக் கேட்பதற்கில்லை. நான் ஒரு தந்திரமுள்ள வக்கீல் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் தோல்வியடைவது திண்ணம் என்று உங்களுக்குத் தோன்றினால், என்னிடம் தந்துள்ள அதிகாரத்தைப் பிடுங்கிவிட உங்களுக்கு உரிமை இருக்கவே செய்கிறது.

மறைமுகமான தேர்தல்

கேள்வி: *தாங்கள் ஏன் மறைமுகமான தேர்தலை விரும்புகிறீர்கள்? அதை, நேரு அறிக்கை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தங்களுக்குத் தெரியாதா?*

பதில்: நீங்கள் கேட்கிற கேள்வி சரியான கேள்விதான். இருந்தபோதிலும், தர்க்க சாஸ்திரத்தில் கூறுவது

போல், அதில் இரண்டுங் கெட்டதன்மை காணப்படுகிறது. நேரு அறிக்கையில் சொல்லியுள்ள மறைமுகமான தேர்தலை அப்படியே விட்டுவிடுவோம். அந்த முறை வேறு; நான் கூறும் முறை வேறு. நான் கூறும் முறையில் எனக்குள்ள நம்பிக்கை நாள்தோறும் பெருகி வருகிறது. இதற்கும் வயதுவந்தவர்களின் ஓட்டுரிமைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இந்த முறையாலன்றி, எந்த முறையாலும் வயதுவந்தவர்களின் ஓட்டுரிமையைப் பலன் கிட்டும் முறையில் நடைமுறைப்படுத்த இயலாது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். இந்தியாவில் வயதுவந்தவர்களின் ஓட்டுரிமையால் ஏழு லட்சம் ஓட்டர்கள் இருக்கப் போகிறார்கள். நான் சொல்லும் முறையைப் பின்பற்றாவிட்டால் தேர்தல்கள் கட்டுக்கு அடங்காதனவாயும் அதிகச் செலவுக்கு இடமானதாயும் ஆகிவிடும். மெயின் கூறுவதுபோல், தேசத்தின் பெரிய சட்டசபைக்கு வக்கீல் மூலமாக, ஒவ்வொரு கிராமக் குடியரசும் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்பும்.

இங்கிலாந்திற்கும் மேலைநாடுகளுக்கும் பொருந்தி வருவது, ஒருவேளை நமக்குப் பொருந்தி வராது போகலாம். மேலைநாட்டு நாகரிகத்தை நாம் ஏன் ஈ அடித்தான் காப்பி அடிக்க வேண்டும். நமது நாட்டின் நிலைமைகள் முற்றுமே வேறானவை. அப்படியிருக்கும்போது, ஒரு தனிப்பட்ட முறையைப் பின்பற்றி, நாம் தேர்தல் நடத்தினால் என்ன?

இன்னும் சில கேள்விகள்

''மக்களிடத்தில் ஒன்றுசேர்த்துப் பிணைக்கும் சக்தி அதிகமாகக் காணப்படுகிறதேயன்றி, பிளவுபடுத்தக்கூடிய சக்தி அதிகமன்று. தனித்தனியே பிரிந்து போவதைவிட ஒன்றுசேர்க்கும் இயல்பு அதிகம். அன்பு என்பதில் எனக்கு அதிக நம்பிக்கை உண்டு. எனவே நான் ஆங்கிலேயர்களிடம் நம்பிக்கை வைப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை.''

ஆக்ஸ்போர்டில், பெரும்பாலும் மாணவர்களே அடங்கிய கூட்டமொன்று நடந்தது. அப்போது, பல தினுசுகளில் மாணவர்கள் காந்திஜியைக் கேள்வி கேட்டார்கள். அவர்கள் கேட்ட கேள்விகள் இங்கிலாந்திலிருக்கும் இந்திய மாணவர்களின் மனப்போக்கைப் பிரதிபலிப்பனவாய் இருந்தன. அவற்றில் சில:

இங்கிலாந்தினிடம் நம்பிக்கை

கேள்வி: இங்கிலாந்தினிடத்தில் உங்களுக்கு இன்னுமா நம்பிக்கை இருக்கிறது?

பதில்: மனிதருடைய நல்லியல்பில் எனக்கு எவ்வளவு நம்பிக்கை உண்டோ அவ்வளவு இங்கிலாந்தினிடமும் எனக்கு நம்பிக்கை உண்டு. மொத்தமாகப் பார்த்தால், மனிதனுடைய முயற்சிகள் யாவும் நம்மை உயர்த்துவனவாய் இருக்குமேயன்றி, கீழே தள்ளுவனவாய் இரா. அன்பு நடத்துகிற சட்டத்தின் விளைவுதான் இது. இப்படி நடப்பது தமக்கே தெரியாது போயினும் போகலாம். மக்களிடத்தில் ஒன்றுசேர்த்துப் பிணைக்கும் சக்தி அதிகமாகக் காணப்படுகிறதே யன்றி, பிளவுபடுத்தக் கூடிய சக்தி அதிக மன்று. தனித்தனியே பிரிந்துபோவதைவிட ஒன்றுசேர்க்கும் இயல்பு அதிகம். மனித சமுதாயம் உயிருடன் நிலைத்து நிற்பதே, இதற்குத் தக்க சான்று; வேறு சான்று வேண்டியதில்லை. அன்பைத் தவிர்த்து, வேறொன்றையும் நான் அறியாதவனாகையால், ஆங்கிலேயர்களிடம் நம்பிக்கை வைப்பதைக் கண்டு நீங்கள் ஆச்சரியம்கொள்ள வேண்டாம். இந்த நிலைமையைக் கண்டு கசப்படைந்து, எனக்குள்ளேயே நான் இவ்விதம் சொல்லிக் கொள்ளுவதுண்டு: இந்தச் சண்டைகளை எல்லாம்எப்போது ஆங்கிலேயர் விட்டொழிப்பார்களோ? ஏழை எளியவர்களைச் சுரண்டுவதை எப்போது நிறுத்துவார்களோ? என்று.

'ரோம புரியிலிருந்து இதை வார்சு பரம்பரையாய்' பெற்றிருக்கிறார்கள் என்று என் உணர்வு மறுமொழி கூறுகிறது. நாளானபோதிலும், ஆங்கிலேயர்களின் இயல்பில் மாறுதல் ஏற்படும் என்ற நம்பிக்கையோடு, அன்பு இடுகிற கட்டளைப்படியே நான் நடக்க வேண்டியது அவசியம்.

ஆலைத்தொழில்

கேள்வி : இந்தியா பூராவும் ஆலை மயமாக்கி, பொருள் உற்பத்தி செய்வதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன ?

பதில் : ஆலை மயமாக்கிப் பொருள் உற்பத்தி செய்வதனால், மனித சமுதாயத்திற்குப் பெரும் தீங்குதான் நேரும் என்று நான் பயப்படுகிறேன். ஒரு தேசம் இன்னொரு தேசத்தை எந்தக் காலத்திலுமே சுரண்டிக்கொண்டிருக்க முடியாது. பிற நாட்டினரைச் சுரண்டுவதற்குரிய திறமை, அன்னிய நாட்டு மார்க்கெட்டு வசதி, போட்டியிடுவோர் இன்மை ஆகிய மூன்றையும் பொருத்தே ஆலைத்தொழில் நடைபெறுகிறது. மேலே சொன்ன வசதிகள் வரவரக் குறைந்துவருகின்றமையாலேதான் இங்கிலாந்தில் வேலையில்லாது திண்டாடுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது. இந்தியர்களின் பகிஷ்காரத்தால் ஏற்பட்ட நஷ்டம் மிகச் சொற்பமே. இங்கிலாந்து போன்ற சிறு தேசத்திலேயே நிலைமை இப்படியானால், இந்தியா போன்ற பெரிய தேசத்தில், ஆலைத் தொழில் உற்பத்தியால் நாம் நற்பயனை எதிர்பார்க்க முடியுமா என்ன? இந்தியா பிற நாடுகளைச் சுரண்டி வாழ நேரிட்டால் - ஆலைமயமாக்குவதால் அந்த நிலை ஏற்பட்டே தீரும் - மற்ற நாடுகளுக்கும் உலகத்திற்குமே கெட்ட காலம் நெருங்கி வந்துவிட்டது என்றுதான் சொல்லநேரும். பிற நாடுகளைச் சுரண்டுவதற்காக இந்தியாவில் ஆலைத் தொழிலை நாம் பெருக்க எண்ணலாமா? வேலையில்லாது இருக்கும் 30 கோடி மக்களுக்கு நாமோ வேலை தேடிக் கொடுக்க முயன்று வருகிறோம். இந்தத் தருணத்தில் இங்கிலாந்திலோ 3 கோடி மக்களுக்கு வேலை தேடிக் கொடுக்க வகையின்றி, அங்குள்ள அறிவாளிகளே திணறுகிறார்கள். இதுதான் ஆலைத் தொழிலால் ஏற்படும் தொல்லை. ஆலைத் தொழிலால்பிற்கால வாழ்வு எந்த ரீதியில் அமையும் என்பதை நாம் அறியோம். ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா,

ஜப்பான் முதலிய நாடுகளில், இங்கிலாந்துடன் வெற்றி யோடு போட்டியிடத் தக்கவர்கள் இருக்கிறார்கள். இந்தியா விழிப்படைந்து வருகிறபடியால், இங்கும் விரல்விட்டு எண்ணத்தகுந்த அளவிற்கு ஆலைகள் இருந்து, இங்கிலாந் துடன் ஏதோ ஒருசிறிது போட்டியிடுகின்றன. இயற்கை வளத்துடன், மனிதர்களும் எண்ணெய் வளமும் நிரம்பியது தென் ஆப்பிரிக்கா. அதுவும் ஒரு காலத்தில் விழிப்படை வது நிச்சயம். அப்போது வலிமை மிக்க ஆப்பிரிக்க இனத்தாரின் முன்னே வலிமை மிக்க ஆங்கிலேயர் இனம் குள்ளர்கள் இனம் போலக் காணப்படும். இருந்தாலும் அவர்களைக் கண்ணியமான காட்டுமிராண்டிகள் என்று நீங்கள் சொன்னாலும் சொல்லக் கூடும். உண்மையில் அவர்கள் கண்ணியமானவர்களே யன்றி, காட்டுமிராண்டி கள் அல்லர்; மேலை நாடுகள் தமது சாமான்களை ஆப்பி ரிக்காவில் திணிப்பது சில ஆண்டுகளுக்கிடையில் நின்று விடப் போகிறது. ஆலைத்தொழிலின் பிற்காலம் எப்படிப் பட்டதாய் இருக்கும் என்பதை இன்னும் மேலை நாட்டின ராலேயே அறிய முடியவில்லை. இந்தியாவைப்பற்றிக் கேட்பானேன்?

ஐ. சி. எஸ்.

கேள்வி: ஐ. சி. எஸ். காரர்களைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

பதில்: ஐ. சி. எஸ். முறையை இந்தியன் சிவில் சர்வீஸ் என்று சொல்லக் கூடாது; ஆங்கில சிவில் சர்வீஸ் என்று தான் சொல்ல வேண்டும். அதிலே இந்தியர்களும் இருக் கிறார்கள் என்பதை அறிந்தும் இப்படித்தான் சொல்ல வேண்டி யிருக்கிறது. இந்தியா அடிமை நாடாய் இருக்கும் வரை இங்கிலாந்தின் நலத்தைத் தவிர வேறொன்றையும் ஐ. சி. எஸ். காரர்கள் கவனிக்க மாட்டார்கள். இந்தியா சுயராஜ்யம் அடைந்தபின் திறமைசாலிகளாயுள்ள ஆங்கிலேயர் இந்தியாவில் வேலைக்கு இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்போது அவர்கள் உண்மை யில் தேசத் தொண்டர்களே ஆவர். இப்போதோ ஐ. சி. எஸ். என்ற பெயரால் சுரண்டல் வேலை செய்யும் சர்க்காருக்கு அவர்கள் உதவி புரிந்து வருகிறார்கள். இந்தியா சுதந்திர நாடாய் விளங்கும்பொழுது ஆங்கிலே யர்கள் தவம் செய்யும் நோக்கத்துடனோ, அல்லது ஊர்

சுற்றிப்பார்க்கும் நோக்கத்துடனேதான் இங்கு வருவார்கள். ஏழை இந்தியாவிற்கு ஒரு சுமையாய் இருந்து கொண்டு, அதிகச் சம்பளம் வாங்கி, ஆடம்பரமான முறையில் ஆங்கிலேயரைப்போல் வாழ்ந்து, அந்தக் கால நிலையை இங்கும் கொணர எண்ண மாட்டார்கள். சிறிது சம்பளம்பெற்றுக்கொண்டு, சங்கடமான இந்த சீதோஷ்ண நிலையைச் சகித்துக்கொள்ளப் பிரியமுள்ள ஆங்கிலேயர் மட்டுமே இங்கு வருவார்கள். அப்படி வருகிறவர்களை நாம் நமது தோழர்களாக மதிக்கத் தயாராய் இருக்கிறோம். அப்படியின்றி, அதிகாரம் செலுத்தி, ஆட்சி செய்யும் ஆசை ஒருசிறிதாவது இருக்குமாயின், நம்மைவிட உயர்ந்த இனத்தவர்கள் என்ற எண்ணமும் அவர்களுக்கு இருக்குமாயின், அவர்களுடைய உதவி நமக்குத் தேவை யில்லை.

குடியேற்ற நாட்டு அந்தஸ்தும் விடுதலையும்

கேள்வி: சுதந்திரம் அடைய முற்றும் தகுதியாய்விட்டதாக நீங்கள் எண்ணுகிறீர்களா?

பதில்: தகுதியடையாவிட்டால் இனிமேல் தகுதியடைவோம் என்பது நிச்சயம். பறிகொடுத்து நிற்கும் சுதந்திரத்தைத் திரும்பப் பெறத் தகுதி உண்டா இல்லையா என்ற ஆராய்ச்சி வேண்டியதில்லை. உங்கள் நடத்தைக்காக நீங்கள் பச்சாத்தாபப்பட விரும்பினால், அதற்கு அறிகுறியாக, நீங்கள் எங்களைச் சும்மா விட்டுவிட்டாலே போதும்.

கேள்வி: குடியேற்ற நாட்டு அந்தஸ்தை ஏற்றுக்கொண்டால் என்ன? குடியேற்ற நாட்டு அந்தஸ்தின் பொருளை ஆங்கிலேயர் அறிவர். நீங்கள் சொல்லும் கூட்டுறவு முறை அவர்களுக்குப் பழக்கமில்லை. தாங்கள் விரும்புவதும் குடியேற்ற நாட்டந்தஸ்தும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. தருகிறோம் என்று சொல்லும்போது அதை ஏற்றுக்கொண்டால் என்ன? ஐரிஷ்காரர்களும் அவர்கள் எண்ணப்படியே சுதந்திர அரசு அந்தஸ்தை ஏற்றுக்கொண்டார்கள். தாங்கள் சொல்லுகிற கூட்டுறவுமுறை இதைவிட இன்னும் அதிகமானதா?

பதில்: எதைக் கொடுக்க விருப்பமோ அதை முன்னர் தெரிவிக்கட்டும்; நான் அதை ஆராய்ந்து பார்க்கிறேன். நீங்கள் கொடுக்க விரும்புகிற குடியேற்ற நாட்டு அந்தஸ்து சுதந்திரத்திற்குச் சமதையாய் இருப்பின், நான் அதை உடனே ஏற்றுக்கொள்ளுகிறேன். சுதந்திரமும் குடியேற்ற நாட்டு அந்தஸ்தும் ஒன்றுதான் எனச் சொல்லிக்கொண்டிருப்பவர்களுக்கு நான் அதை நிரூபிக்க வேண்டும்.

தீண்டத்தகாதவருடைய விஷயம்

''முஸல்மான்களுக்கும் சீக்கியர்களுக்கும் தனித்தனியாகப் பிரதிநிதித்துவம் கொடுப்பதை அவசியமான தீமை என்று கருதியே நான் விட்டுக்கொடுக்கிறேன் என்பதை நீங்கள் உணரவேண்டும். தீண்டத்தகாதவர்களுக்குத் தனித்தொகுதி கொடுப்பதால் அவர்களுக்கே அதனால் கேடுவிளைவது நிச்சயம். தனித்தொகுதியை நவீன பைசாச அரசாங்கத்தின் சிருஷ்டி என்றே நான் உறுதியாகச் சொல்லுவேன்.''

தீண்டத்தகாதவர்களுக்குத் தனித்தொகுதி கொடுப்பதை, காந்திஜி பலமாக எதிர்த்தார். வட்டமேஜை மகாநாடு சம்பந்தமாய் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தபோது, அவர் பேசிய கூட்டங்களில் எல்லாம் இது ஒரு சிறு அங்கம் வகித்தது எனலாம். ஆக்ஸ்போர்டிலுள்ள இந்திய மாணவர் சபையில் (மஜ்லிஸ்) காந்திஜி பேசியதன் சாரத்தை, மகாதேவ தேசாய் எழுதியுள்ளபடி, கீழே தந்திருக்கிறோம்.

முஸ்லிம்களிடத்திலும் சீக்கியர்களிடத்திலும் நிர்வாகத் திறன் உண்டு. தீண்டத்தகாதவர்களுக்கு நிர்வாகத் திறன் இல்லை. அரசியல் உணர்ச்சியும் ஒருசிறிதும் இல்லை. அதனால், அவர்களை எல்லோரும் கேவலமாக நடத்துகிறார்கள். அவர்கள் விரும்பாவிடினும் நான் அவர்களைக் காப்பாற்ற விரும்புகிறேன். கிராமங்கள் வைதீக ஹிந்துக்களின் கோட்டைகளாய் இருக்கின்றன. தனித்தொகுதி கொடுக்கப்படுமாயின், அதனால் தீண்டத்தகாதவரின் வாழ்க்கை கிராமங்களில் இன்னும் மோசமானதாகிவிடும். எவ்வளவோ காலமாகத் தீண்டத்தகாதவர்களை உயர் ஜாதி ஹிந்துக்கள் அலட்சியமாக நடத்திவந்திருக்கிறார்கள். எனவே பச்சாதாபப்பட்டுப் பிரார்த்தனை செய்யவேண்டியவர்கள் அவர்களே. சமூக சீர்திருத்தங்களை விரைந்து செய்தும்வசதிகள்செய்துகொடுத்து,தீண்டத்தகாதோருக்குவாழ்க்கையைச் சகிக்கத் தகுந்ததாய் செய்தும் தொண்டு புரிந்து உயர் ஜாதி ஹிந்துக்களே தங்களைப் பரிசுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். தனித் தொகுதியினால் இது நிவர்த்தியாகாது. தனித் தொகுதி கொடுப்பதால் வைதீகர்களுக்கும் தீண்டத்தகாதாருக்கும் இடையில், வெறுப்பு வளரும். முஸல்மான்களுக்கும் சீக்கியர்களுக்கும் தனித் தொகுதி கொடுப்பதை, அவசியமான தீமை என்று கருதியே நான்

விட்டுக்கொடுக்கிறேன். தனித் தொகுதியால் தீண்டத்தகாதாருக்குக் கேடுசூழ்வது நிச்சயம். தனித் தொகுதி என்பது நவீன பைசாச அரசாங்கத்தின் சிருஷ்டி யாகும். தீண்டத்தகாதவர்களின் பெயரை ஓட்டர்கள் ஜாபிதாவில் சேர்த்து, அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள, அரசியல் அமைப்பிலேயே வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். அநீதியாக நடத்தப்படலா மென்றும், அவர்களின் பிரதிநிதிகளை வேண்டு மென்றே நீக்கிவிடுவார்கள் என்றும் தோன்றினால், அவர்களுக்குப் பாதுகாப்பாய் இருக்க, தனியே ஒரு தேர்தல் நீதிசபையை ஏற்படுத்திவிடலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட ஓட்டரை நீக்கிவிடவும், நீக்கப்பட்ட ஓட்டரைத் தேர்ந்தெடுக்கவும் கூடிய உரிமை இந்தச் சபைகளுக்கு இருக்க வேண்டும்.

தனித் தொகுதியினால் தீண்டத்தகாதவர்களின் அடிமைத்தனம் எப்போதுமே நிலைத்துநிற்க ஏதுவாகும். தனித் தொகுதி முறையால் முஸல்மான்கள், முஸல்மான்களாகவே இருப்பார்கள். 'தீண்டத்தகாதவரும்' தீண்டத்தகாதவராகவே எப்போதும் இருந்துவர வேண்டுமா ? தனித்தொகுதி, தீண்டாமை என்ற தொல்லையை நிலைக்கப் பண்ணிவிடும். தீண்டாமையை நாம் அவசியம் தொலைத்தாக வேண்டும். தொலைப்பதில் வெற்றிபெற்றுவிட்டால் மதம்பிடித்த உயர் வகுப்பார் தாழ்ந்த வகுப்பார்மீது திணித்துள்ள தடை நீங்கிவிடும். திணித்துள்ள தடை எடுபட்டுவிட்டால், அதன் பிறகு நீங்கள் யாருக்கு இந்தத் தனித் தொகுதியைக் கொடுப்பீர்கள். ஐரோப்பாவின் சரித்திரத்தைப் பாருங்கள் ; அங்கு பெண்களுக்கெனவும் தொழிலாளர்களுக்கெனவும் தனித்தொகுதி இருக்கிறதா? வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை கொடுத்துவிட்டால், தீண்டத்தகாதவருக்குச் சரியான பாதுகாப்பு ஏற்பட்டுவிடும். அப்போது வாக்குரிமையைப் பெறுவதற்காக, வைதீக ஹிந்துக்கள்கூட, தீண்டத்தகாதவர்களிடம் அணுக வேண்டிய நிலை ஏற்பட்டே தீரும்.

அப்படியாயின், அவர்களின் பிரதிநிதியாய் விளங்கும் டாக்டர் அம்பேத்கார் ஏன் தனித் தொகுதி வேண்டுமென வற்புறுத்துகிறார் என்று நீங்கள் கேட்கலாம். டாக்டர் அம்பேத்காரை நான் மிகவும் மதிக்கிறேன். அவர்

கசப்போடு இருப்பதற்குப் பூரண உரிமை உண்டு. தன்னடக்கம் உடையவராய் இருப்பதனுலேயே, இதுவரை அவர் நமது மண்டையை உடைத்தெறியவில்லை. இன்று அவருடைய மனத்தில் சந்தேகம் குடிகொண்டு இருக்கிறது. எனவே, அவர் எதைப் பார்த்தாலும் சந்தேகப்படுகிருர். ஒவ்வொரு ஹிந்துவையும் தீண்டத்தகாதாருக்குத் தீர்மானமான எதிரி என அவர் எண்ணுகிருர்; அவர் அப்படி எண்ணுவது இயற்கையே. நான் தென் ஆப்பிரிக்காவிற்குப் போயிருந்த ஆரம்பத்தில் ஐரோப்பியர்கள் என்னை இப்படியே எண்ணினுர்கள். நான் எங்கே போனுலும் என்னைத் துரத்திக்கொண்டே வந்தார்கள். தமது கோபத்தை அம்பேத்கார் வெளியிடுவது இயற்கையே. அவர் விரும்புகிற தனித் தொகுதியைக்கொண்டு, சீர்திருத்தங்கள்செய்ய இயலாது. அவருக்கு வேணுமானுல் அதிகாரமும் அந்தஸ்தும் கிடைக்கலாமே ஒழிய, தீண்டத்தகாதவர்களுக்கு அதனுல் யாதொரு நலனும் இல்லை. இந்த வார்த்தையை நான் அதிகார தோரணையோடு சொல்லுகிறேன். இவ்வவளவு காலமாக நான் தீண்டாதவர்களின் மத்தியில் வாழ்ந்து, அவர்களது இன்ப துன்பங்களில் பங்கு பெற்றவன்; எனவே இவ்விதம் கூற எனக்கு உரிமை உண்டு.

மாணவரும் விடுமுறையும்

"சுவையுள்ள பதார்த்தங்களின் எண்ணிக்கையையும் மாணவர்கள் அதிகமாக்கிக்கொண்டே போகக் கூடாது. எல்லாத் துறைகளிலும் தன்னடக்கத்தைப் பயிலவே மாணவ வாழ்க்கை ஏற்பட்டுள்ளது."

டெஹராடனி லிருக்கும் மாணவ ரொருவர், ஹிந்தியில் எழுதியிருக்கும் கடிதத்தின் சாராம்சத்தை, மொழி பெயர்த்துக் கீழே கொடுத்திருக்கிறது :

"எங்கள் கல்லூரி மாணவர் - விடுதியில் போடும் எச்சிலைப் பங்கிகள் எடுத்துப் புசித்துவந்தார்கள். விழிப்பு ஏற்பட்ட பிறகு, இந்தப் பழக்கத்தை நிறுத்திவிட்டு, சுத்தமான சப்பாத்தியும் பருப்பும் அவர்களுக்குக் கொடுத்து வந்தோம்.

"ஹரிஜனங்களுக்கு இது பிடிக்கவில்லை; எச்சிலில் செய்யும் வேறு சில சுவையான பதார்த்தங்களும் கிடைக்கும். இந்தப் பொருள்களை ஹரிஜனங்களுக் கென வேறுபடுத்திக்கொடுப்பது மாணவர்களுக்கு இயலாத காரியம். நாங்கள் புதிய முறையைப் பின்பற்ற எண்ணிப்போதிலும் ஹரிஜனங்கள் உயர்ந்த சாதி ஹிந்துக்களின் எச்சிலை வாங்கிக்கொள்ளத் தான் செய்கிறார்கள். இது சங்கடம் தருவதா யிருக்கிறது. இந்த நிலையில் செய்ய வேண்டுவது என்ன? இந்தக் கேள்விக்குத் தாங்கள் பதில் அளிக்கும் போது, விடுமுறையை நாங்கள் எப்படி நல்ல முறையில் செலவிடலாம் மென்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். சமீபத்தில் எங்களுக்கு விடுமுறை வருகிறது."

இந்த நிருபர் கிளப்பி இருக்கும் சங்கடம் ஒரு உண்மையான சங்கடம்தான். நீண்ட நாட் பழக்கத்தினாலேயே ஹரிஜனங்கள் எச்சிலை விரும்பி உண்கிறார்கள். அதை எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறார்கள். அது மட்டுமா? எச்சில் கிடைக்காவிட்டால், அதைத் தங்களிடமிருந்து பறித்துக்கொண்டதாகவும் கருதுகிறார்கள். இது ஹரிஜனங்களுக்கும் உயர் சாதி ஹிந்துக்களுக்குமே அவமானம் தரக்கூடிய உண்மையாகும். மற்ற இடங்களில் நடப்பதைப் பற்றி மாணவர்கள் கவலையடைய வேண்டாம். நியாயமான முறையில் நடந்துகொள்ளுவதே அவர்கள் முதலாவதாகச் செய்ய வேண்டிய காரியம். தங்களுக்கெனச் சமையல் செய்யப்பெறும் உணவில் ஒரு பகுதியைத் தாராள மனப்பான்மையோடு தோட்டிகளுக்கு என மாணவர்கள் ஒதுக்கிவைக்க வேண்டும்; டெஹராட

னிலுள்ள இந்த மாணவர் செலவுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்தியா முழுவதுமே, மாணவர் விடுதிகளில் என்னென்ன நடக்கிறது என்பது பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். பெரும்பாலான மாணவர்கள் தேவைக்கு அதிகமான ஆடம்பரச் செலவுகளும் சுகபோகச் செலவுகளும் செய்கிறார்கள் என்பது நான் கொண்ட முடிபு. உண்ணும் உணவில் மீதம் வைக்காமல் முழுவதையும் சாப்பிடுவது, அகௌரவம் என்று எண்ணுகிற மாணவர்களும் உண்டு. உணவில் மீதம் வைப்பது தான் அகௌரவம் என்றும் இதனால் ஏழைகள் அவமதிக்கப்படுகிறார்கள் என்றும் நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். போதுமான அளவைக்காட்டிலும் அதிக உணவைப் பரிமாறச் செய்வதற்கு எந்த மாணவருக்கும் உரிமை யில்லை. சுவையுள்ள பதார்த்தங்களின் எண்ணிக்கையையும் மாணவர்கள் அதிகமாக்கிக் கொண்டே போதல் கூடாது. எல்லாத் துறைகளிலும் தன்னடக்கத்தைப் பயிலவே மாணவ வாழ்க்கை ஏற்பட்டுள்ளது. தன்னடக்கமாக இருந்து, இலையில் மீதமும் வையாமல் உண்ணும் பழக்கத்தை மாணவர்கள் கைக்கொள்ள வேண்டும். இதனால் அவர்களுக்குச் செலவில் மீதம் ஏற்படும்; தங்களுக்கு எனச் சமையல் செய்யப்பெறும் உணவில் ஒரு பகுதியைத் தோட்டிகளுக்கென ஒதுக்கிவைத்தபோதிலும், செலவில் மீதம் ஏற்படுவதைக் காண்பர்.

இவற்றை யெல்லாம் செய்து முடிப்பதோடு, மாணவர்கள் ஹரிஜனங்களை உடன்பிறந்த சகோதரர்களைப் போல நடத்த வேண்டும். அவர்களுடன் அன்போடு பேச வேண்டும். மற்றவர்களுடைய எச்சிலைப் புசிப்பது நல்ல பழக்கமில்லை என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். இன்னும் வேறு பல சீர்திருத்தங்களையும் செய்ய முன்வர வேண்டும். விடுமுறை நாட்களை நல்ல முறையில் செலவிட விரும்பினால், மாணவர்கள் அனேக காரியங்களைச் செய்யலாம். அவற்றில் சிலவற்றைக் கீழே கொடுத்திருக்கிறேன்:

1. நல்லதொரு திட்டம் போட்டு, விடுமுறை கழியும்வரை இரவும் பகலும் சிறிது நேரம் பாடம் சொல்லிக்கொடுக்கலாம்.

2. ஹரிஜனங்கள் வசிக்கும் பகுதிகளைப் பெருக்கிச் சுத்தம் செய்யலாம். ஹரிஜனங்கள் கலந்துகொள்ள விரும்பினால், அவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம்.

3. ஹரிஜனக் குழந்தைகளை, உல்லாசமாக அழைத்துக்கொண்டு போய்க் கிராமங்களை அடுத்துள்ள காட்சிகளைக் காட்டலாம். இயற்கையை எப்படி ஆராயலாம் என்பதைச் சொல்லிக்கொடுத்து, சூழ்நிலையிலிருக்கிற விநோதங்களையும் காண்பிக்கலாம். இதனால் அவர்களுக்குத் தரைநூல், வரலாறு ஆகியவற்றில் பயிற்சி ஏற்படும்.

4. இராமாயணத்திலிருந்தும் மகா பாரதத்திலிருந்தும் சிறு சிறு கதைகளைப் படித்துக் காட்டலாம்.

5. பஜனை செய்யக் கற்றுக்கொடுக்கலாம்.

6 ஹரிஜனப் பிள்ளைகளின் உடம்பில் காணப்படும் அழுக்கைப் போக்கி, குளிப்பாட்டலாம். வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் சுகாதார சம்பந்தமான பாடங்களைச் சொல்லிக்கொடுக்கலாம்.

7. குறிப்பிட்ட பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்குள்ளவர்களின் ஜனசங்கியைக் கணக்கு எடுக்கலாம். அங்கு ஹரிஜனங்களின் நிலை எப்படி இருக்கிறது என்பதை ஆராயலாம்.

8. நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் ஹரிஜனங்களுக்கு உதவி செய்யலாம்.

ஹரிஜனங்களிடை என்னென்ன செய்யலாம் என்பதற்கு இவை உதாரணங்களாகும். அவசரஅவசரமாகக் குறித்தனுப்பியவை யாகும் இவை. சிந்தனைசக்தியுள்ள மாணவன் இன்னும் அனேக விஷயங்களையும் இதோடு சேர்த்துக்கொள்ளுவான் என்பதில் ஐயமில்லை.

இதுவரை ஹரிஜனங்களுக்கு என்னென்ன செய்யலாம் என்பதைச் சொல்லிவந்தேன். உயர்ந்த சாதி ஹிந்துக்களுக்கும் சேவை செய்ய வேண்டியது இதைப் போலவே அவசியமாகும். தீண்டாமை விலக்கு சம்பந்தமான செய்தியை மாணவர்கள் உயந்த சாதி ஹிந்துக்களிடைப் பரப்பலாம். சரியான, நம்பிக்கையூட்டும் பிரசுரங்களைக் கொண்டு அறியாமையைப் போக்குவது எளிது. யார் யார் தீண்டாமை விலக்குக்கு ஆதரவாய் இருக்கிறார்கள்; யார் யார் எதிர்க்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்துப் பார்க்கலாம். அதோடு எந்த எந்தப் பள்ளிக்கூடம், கிணறு, குளம், கோயில் ஹரிஜனங்களுக்கு திறந்துவிடப்பட்டிருக்கிறது என்பதையும், எது எது மூடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

இந்த முறையைப் பின்பற்றி உறுதியுடன் அவர்கள்

வேலை செய்துவந்தால் அதனால் ஏற்படும் பலாபலன்கள் ஆச்சரியப்படத்தக்கனவாக இருக்கும். விடுமுறை காலத்தில் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை ஒரு புத்தகத்தில் குறித்து வைத்துக்கொண்டு, விடுமுறை முடிந்ததும் இதைப் பற்றிய சிறிய அறிக்கை ஒன்று தயார் செய்து, மாகாண ஹரிஜன சேவா சங்கத்திற்கு மாணவர்கள் அனுப்பி வைக்கலாம். இங்கே சொல்லி இருக்கின்றவற்றை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளுவார்களா, அல்லது மாட்டார்களா என்பது வேறு விஷயம். எனக்குக் கடிதம் எழுதியுள்ள நிருபரும் அவருடைய தோழர்களும் இந்தத் துறையில் என்ன என்ன செய்திருக்கிறார்கள் என்பதை எனக்குத் தெரியப்படுத்துவார்களென எதிர்பார்க்கிறேன்.

மாணவர்களும் ஹரிஜனத் தொண்டும்

"ஹிந்துக்களின் மனதில் தீண்டாமை என்கிற உணர்ச்சி இல்லாவிட்டால், ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி என்று இருந்தபோதிலும் நாம் எல்லோரும் ஒரே மனிதரினத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை உடனே கண்டுகொள்ளுவோம்."

நாகப்பூர் மாணவர் கூட்டத்தில் பேசும்போது காந்திஜி சொன்னதாவது :

நீங்கள் என்னை எவ்வளவோ புகழ்ந்து பேசி இருக்கிறீர்கள். அவ்வளவையும் உண்மை என்று எண்ணிவிடுவேனாயின், நான் இப்போது எந்த நிலையில் இருப்பேன் என்று கூற முடியாது. எனக்குரிய ஸ்தானம் எது என்பதை நான் அறிவேன். இந்தியாவின் தாழ்மையான தொண்டன் என்றே என்னை எண்ணிக்கொண் டிருக்கிறேன். இந்தியாவிற்குத் தொண்டு செய்வதன்மூலம், பொதுப்படையாக, மனித சமுதாயத்திற்குமே தொண்டு செய்கிறேன் என்று சொல்லிவிடலாம். இந்தியாவிற்குத் தொண்டாற்றுவது மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றுவதி லிருந்து மாறுபடாது என்பதை நான் இளமையிலேயே கண்டுகொண்டேன். வயது ஆக ஆக, அறிவு முதிர்ச்சி ஏற்பட ஏற்பட, நான் ஆரம்பத்தில் கண்டு பிடித்த இந்த உண்மை சரியென்று என் மனதில் படுகிறது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கிறேன். இந்த அனுபவத்திலிருந்து ஒரு நாட்டினருக்குச் செய்யும் தொண்டிற்கும் உலகத்திற்கே செய்யும் தொண்டிற்கு மிடையில் மாறுபாடு ஒன்றுமில்லை என்பதை இன்றும் நான் சொல்லக் கூடும். இந்த சித்தாந்தில் உள்ள நம்பிக்கை எனக்கு நாள்தோறும் வளர்ந்து கொண்டே வருகிறது.

இது ஒரு நல்ல சித்தாந்தம். இதை உலகம் ஏற்றுக் கொள்ளுவதனால் நிலைமை எளிதாகி, தேசங்களிடையே காணப்படும் பரஸ்பரப் பொறாமை நின்றுபோய்விடும். தீண்டாமையை எதிர்த்து நான் போராடி வருகிற காரியத்தை நீங்கள் ஹிந்து மதத்திற்கு மட்டும் உரிய

தன்று என்று குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இது முற்றும் உண்மை. தீண்டாமை என்கிற எண்ணத்தை ஹிந்துக்கள் தங்கள் இதயத்தி லிருந்து அடியோடு அகற்றிவிடுவார்களாயின், அதனல் ஏற்படக்கூடிய பலாபலன் மிக மிக விரிவானதாய் இருக்கு மென்பதை ஒரு முறை யல்ல, பல முறை நான் சொல்லி யிருக்கிறேன். ஏனெனில், கோடிக்கணக்கானவர்களின் வாழ்க்கையில் மாறுதலை உண்டாக்கத்தக்க காரியம் ஆகும் இது. சென்ற இரவு நடந்த பெரிய பொதுக் கூட்டத்திலும் இதையே நான் எடுத்துக் கூறினேன். தீண்டாமை என்கிற உணர்ச்சியை ஹிந்துக்கள் உண்மையாகவே அகற்றிவிடுவார்களாயின், தங்களிடம் காணப்படும் பயங்கரமான இந்தக் களங்கத்தை உயர் சாதி ஹிந்துக்கள் போக்கிவிட்டால்—ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி என்று நம்மை நாம் வெவ்வேறு பெயரினல் அழைத்துக்கொண்டபோதிலும் நாம் எல்லோரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவோம் என்பதைக் கண்டு கொள்ளுவோம். தீண்டாமை என்கிற தடை அகன்று விடுமாயின் நமக்குள் ஒற்றுமை ஏற்பட்டுவிடும். பலவித உருவங்களில் காட்சியளிக்கும் பூதம் என்று நான் தீண்டாமையை அடிக்கடி சொல்லுவதுண்டு. அவற்றில் சில, மிகவும் நுட்பமான முறையில் காட்சியளிக்கும். தனிப்பட்ட மனிதனிடத்தில் நான் பொறுமை கொண்டால், அதைக்கூடத் தீண்டாமையில் ஒரு ரகமாகத்தான் கொள்ள வேண்டும். என் வாழ் நாளிலேயே, தீண்டாமை என்கிற இந்தப் பழக்கத்தை முற்றும் அகற்றிவிட நான் கனவுகண்டுகொண் டிருக்கிறேன். இந்தக் கனவு நனவு ஆகுமோ, ஆகாதோ, அதை நான் அறியேன். பெரும்பாலான மக்களின் வாழ்க்கையைப் பாழாக்கி வரும் இந்த நுட்பமான தீண்டாமையை அகற்ற வேண்டும் என்ற நம்பிக்கை மதப்பற்றுதலுள்ள அனைவருக்கும் இருந்தே தீரும். வெளிப்பகட்டான காரியாதிகளில் பற்றுதலின்றி, உண்மையான சமயசாரம்சத்தில் பற்றுதல் உங்கள் அனைவருக்கும் நிச்சயமாக இருந்தே தீரும். ஹிந்துக்கள் தங்கள் இதயத்திலிருந்து இந்தத் தீமையை அகற்றிவிடுவார்களே யானல், கண் திறக்கப்பட்டு விஷயங்களை

அறிந்துகொள்ளுகிற சக்தி விரிவடைந்துகொண்டே போகும். தீண்டாமையை உண்மையாகவே அகற்றி விடுவோமாயின், அதனுல் மனித சமூதாயத்திற்கு ஏற்படக் கூடிய நலன்கள் அளவிட முடியாதனவாகும். இதி லிருந்து நான் ஏன் இந்த ஒரு காரியத்திற்காகவே என் உயிரையும் பணயம் வைத்து ஈடுபட்டு வருகிறேன் என் பதை அறிந்துகொள்ளுவதில் உங்களுக்குச் சிரமம் இருக் காது என்று எண்ணுகிறேன்.

நான் செய்துவருகிற இந்தப் பணியில் உள்ள சிக்கல் களை இங்கு கூடியிருக்கிற மாணவர்களாகிய நீங்கள் உணர்வீர்களாயின், நான் வேண்டும் உதவியை நீங்கள் உடனே செய்ய முன்வருவீர்கள். இந்த இயக்கத்தில் மாணவர்கள் எவ்வாறு உதவலாம் என்பதைப்பற்றி எழுதும்படியாக அனேக மாணவர்கள் எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறார்கள். இப்படி அவர்கள் கேள்வி கேட்ப தைக் கண்டு நான் வியப்படைகிறேன். இந்தப் பணியை ஆற்றுவதற்குரிய இடம் சமீபத்திலும் இருக்கிறது. பரவியுமிருக்கிறது. எனவே, எதைச் செய்யலாம் எதைச் செய்யக் கூடாது என்று கேள்விகளே எழ இடமில்லை. இது அரசியல் பிரசினை யன்று. ஒரு காலத்தில் இது அரசியல் பிரசினையாக மாறினாலும் மாறலாம். ஆனல், இப்போதோ உங்களுக்கும் எனக்கும் இது அரசியல் பிரசினையாக இருக்கலாம். சமயப் பற்றே எனது வாழ்க்கை நடத்தி வைக்கிறது. மத வாழ்க்கையிலிருந்தே எனது அரசியல் வாழ்க்கை ஏற்பட்டுள்ளதாக நான் சொல்லியிருக்கிறேன். அரசியல் விவகாரங்களில் நான் எவ்வளவோ தலையிட்டபோதிலும், எனது வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி வரும் சமய உணர்ச்சியை ஒருபோதும் நான் மறந்ததில்லை.

முழு நேரத்தையும் செலவிட முடியாவிட்டாலும், ஒழிந்த நேரங்களிலாவது, மாணவர் ஹரிஜனங்களுக்குத் தொண்டு செய்ய முன்வர வேண்டும். மனிதர்களுக்காக-ஆயிரக்கணக்கான ஹரிஜனங்களுக்காக - மனமிரங்கிச் செய்யும் கைங்கரியம் இது. இந்தியா முழுவதுமே சுற்றி, மாணவர் கூட்டங்கள் பலவற்றில் நான் இதைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தி இருக்கிறேன். இவ்வளவு பெரிய

பணமுடிப்பைத் தந்து, நீங்களும் உங்கள் கூட்டத்தை மிகப்பெரிய கூட்டங்களோடு ஒப்பிட்டுச் சொல்லும் வகையில் நடந்துகொண்டுவிட்டீர்கள். இதைவிட அதிகமாக உங்களிடம் இன்னும் வேண்டுகிறேன். தங்களுக்கு ஒழிவு நேரங்களில், உதவி செய்யப் பலர் முன்வருவார்களாயின், இன்னும் விரிவாகக் காரியங்களைச் செய்ய முடியும் என்பதை நான் கண்டிருக்கிறேன். கூலி கொடுத்து வேலை வாங்கலாம். ஆனால் கூலிக்கு வேலை செய்பவர்களைக் கொண்டு, நாம் ஹரிஜனங்கள் வசிக்கும் இடங்களைச் சுத்தம் செய்ய முடியாது; வீதிகளைப் பெருக்க முடியாது; ஹரிஜனங்களின் வீட்டிற்குள் செல்ல முடியாது; அவர்களின் குழந்தைகளைக் குளிப்பாட்ட முடியாது.

மாணவர்கள் என்னென்ன செய்யலாம் என்பதைப் பற்றி நான் 'ஹரிஜன்' பத்திரிகையில் விளக்கமாக எழுதியிருக்கிறேன். இந்தப் பணியிலுள்ள கஷ்டத்தை, ஹரிஜன் ஆசிரியர் ஒருவர் எனக்கு எடுத்துக் காட்டினார். ஹரிஜனக் குழந்தைகளைக் காட்டிலும் முரட்டுச் சுபாவமுடைய குழந்தைகள் எவ்வளவோ நன்றாயிருக்கிறார்கள். காரணம் ஹரிஜனக் குழந்தைகளைப்போலக் கேவலமான தாழ்ந்த நிலையில் முரட்டுக் குழந்தைகள் இல்லை; அவர்களுடைய சூழ்நிலையும் குப்பை கூளம் நிறைந்ததாய் இல்லை. எனவே கூலிக்கு வேலை செய்பவர்களைக் கொண்டு இந்தத்தொண்டைச் செம்மைப்படுத்த முடியாது. பணத்தினுடைய உதவியினால் மட்டும் நம்மால் ஹரிஜன சேவை செய்ய முடியாது. ஹரிஜன சேவை செய்வதற்கு இதயம் ஒன்றிய மனப்பாங்கு வேண்டும். பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் நீங்கள் படித்த படிப்பை மதிப்பிடுவதற்குரிய சரியான அளவுகோல் இந்த மனப்பாங்கே யாகும்.

குற்றமற்ற முறையில், நீங்கள் ஆங்கிலச் சொற்பொழிவுகள் செய்வதைக்கொண்டு உங்களின் திறமையை மதிப்பிட மாட்டார்கள். அறுபது ரூபாய், அல்லது 600 ரூபாய் சம்பளம் வாங்கி, நீங்கள் அரசாங்க உத்தியோகம் பார்த்தபோதிலும் அதைக்கொண்டும் உங்களை மதிக்க மாட்டார்கள். ஏழை எளியவர்களுக்கு நீங்கள் செய்யும் சேவையின் அளவைக்கொண்டே உங்களை மதிப்பிடு

வார்கள். நான் எந்த உணர்ச்சியோடு பேசுகிறேனே அதே உணர்ச்சியோடு நீங்களும் தொண்டு செய்வதில் ஈடுபட வேண்டும். ஒரு மணி நேர அவகாசங்கூட எனக்கு ஒரு நாளும் ஓய்வு கிடைப்பதில்லை என்று சொல்லுகிற மாணவர்களை பார்த்ததே இல்லை. தினந்தோறும் நீங்கள் நாட்குறிப்பு எழுதிக்கொண்டு வருவீர்களாயின், 365 நாட்கள் கொண்ட வருஷத்தில், அறிய காலத்தை எவ்வளவு தூரம் நீங்கள் வீணேபோக்கி இருக்கிறீர்கள் என்பது தெரியவரும். இந்த இயக்கம் வாயுவேக மனோவேகமாக போய்க்கொண் டிருக்கிறது. நீங்கள் கற்ற கல்வியைப் பயனுடையதாகச் செய்துகொள்ள விரும்பினால், இந்த இயக்கம் முடிவடைவதற்குள் நிச்சயமாக நீங்கள் இயக்கத்தில் கலந்துகொள்ளுவீர்கள்.

வார்தாவை ஒட்டி ஐந்து மைல் சுற்றளவிற்கு மாணவர்கள் ஹரிஜனங்களுக்குச் சேவை சிறிது காலமாகச் செய்து வருகிறார்கள். நல்ல முறையிலும் மௌனமான முறையிலும் அவர்கள் சேவை செய்து வருவதால் அவர்களைப்பற்றி நீங்கள் தெரிந்துகொண் டிருக்க முடியாது. அங்கு வந்து அவர்கள் செய்து வரும் சேவையை கவனிக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் செய்வது கடினமான சேவைதான்; இருந்தாலும் அது இன்பந் தரும் சேவையாகும். டென்னிஸ், கிரிக்கெட்டு விளையாட்டுகளைக் காட்டிலும் இந்தச் சேவை உங்களுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கும். உண்மையான, திறமையான, நேர்மையுள்ள தொண்டர்கள் இருப்பார்களாயின், பணம் தானே வரும் என்பதை நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். நான் 18 வயதுச் சிறுவனாக இருந்த போது, பிச்சை வாங்கியே கல்வி கற்றேன். நல்ல முறையில் சேவை செய்யும் தொண்டர்கள் அகப்படுவார்களாயின், பணம் தானே எளிதாய்க் கிடைத்துவிடும். பணத்தைக்கொண்டு மட்டும் நான் திருப்தியடைவதில்லை. ஹரிஜனத் தொண்டிற்காக ஓய்வு நேரத்தில் சில மணி நேர அவகாசத்தை ஒதுக்கிவைக்க உறுதிகொள்ளுமாறு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். தலைவர் அவர்களே! நீங்கள் என்னைக் கனவு காண்பவன் என்று குறிப்பிட்டீர்கள். ஆம்; நான் உண்மையில் கனவு காண்பவன்தான்,

ஆனால், நான் காணும் கனவு அனுபவத்தை ஒட்டியதாக யிருக்குமே யன்றி மனக்கோட்டையாய் இராது. கூடுமான வரை நான் கனவை நனவாக்க முயல்வதுண்டு. ஆகை யால், நான் ஒன்று செய்ய விரும்புகிறேன். அதாவது இப்போது எனக்குத் தந்த நன்கொடைகளை ஏலம் போடப் போகிறேன்.

விரிவானதொரு உபதேசம்

"தீண்டாமை என்பது நுட்பமான பல ரூபங்களில் நம்மைப் பிரித்து வைத்திருக்கிறது. அதனால் வாழ்க்கை இன்பமற்றதாயும் கஷ்டமுடையதாயும் இருந்து வருகிறது."

மலபார், ஆல்வாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் சங்கத்தில் காந்திஜி இவ்விதம் பேசினர்:

நான் சொல்லப்போகும் செய்தி மிகவும் எளிதானது. ஏதோ ஒரு புதிய உண்மையைக் கண்டுபிடித்து, அதை நான் இன்று உங்களிடம் சொல்ல வரவில்லை. என்னல் இயன்றவரை சென்ற ஐம்பது வருஷ காலமாக, நான் இந்தக் கொள்கைப்படி வாழ்க்கை நடத்தி வந்திருக்கிறேன் இந்தக் கொள்கையைப் பின்பற்றி நடக்க நடக்க, எனக்கு மன மகிழ்ச்சி அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்தியாவில், இந்தக் கொள்கையை இப்போதுதான் முதன் முதலாகப் பிரசாரம் செய்கிறேன் என்பதில்லை. சமீபத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளைக் கொண்டு, மக்கள் இதைப் புதிது என்று எண்ணுகிறார்கள். நான் சொல்லப்போகும் செய்தி இதுதான்: அவர்ண ஹிந்துக்களை, தீண்டத்தகாதவர்கள், பார்க்கத்தகாதவர்கள், நெருங்கத்தகாதவர்கள் என்று உயர்ந்த ஜாதி ஹிந்துக்கள்-அதாவது சவர்ண ஹிந்துக்கள்-வீண் கர்வம் கொள்ளுகிறார்கள். இப்படி வீண் கர்வம்கொள்ளுவதற்கு சாஸ்திர சம்மதம் எதுவுமில்லை. வேதம், உபநிஷத், பகவத்கீதை, ஸ்மிருதி போன்ற நூல்கள் தீண்டாமையை ஆதரிக்கின்றன என்பதை-அதாவது, இப்போது நான் உங்களுக்கு விளக்கிய பிரகாரம் தீண்டாமையை அவை ஆதரிப்பது உண்மையானல், உலகத்திலுள்ள சகல சக்திகளும் ஒருங்கு சேர்ந்தபோதிலும் சரி, என்னை நான் ஒரு ஹிந்து என்று சொல்லிக் கொள்ள மாட்டேன். அழுகிய ஆப்பிள் பழத்தை வீசி எறிவதுபோல, ஹிந்து என்பதையும் நான் உதறித்தள்ளி விடுவேன். சவர்ண ஹிந்துக்களையும் அவர்ண ஹிந்துக்களையும் படைத்து, அவருடைய குழந்தைகளிடையே இப்படிப்பட்டதொரு கபடமான தடையையும் கடவுள் விதித்துள்ளார் என்று எண்ணுவதற்கு என் அறிவு கலங்கு

கிறது; எனது இதயம் புண்பட்டுவிடுகிறது. தாங்கள் உபதேசித்த ஒவ்வொரு மந்திரத்திலும் கடவுளின் ஐக்கிய பாவத்தைப் போதித்தவர்களும் வேதங்கள், உபநிஷத்துக் கள் ஆகியவற்றைத் தந்தருளியவர்களுமான அந்த ரிஷிகளே, இன்று ஹிந்து சமூகத்தின் நடைமுறையில் நிலவிவரும் தீண்டாமையை ஆதரித்தார்கள் என்று எண்ணுவதே ஒரு அசம்பாவிதமான எண்ணமாகும். அப்படி எண்ணுவது அறிவுள்ள எவனுக்கும் அருவருப் பைத் தருவதாகும். மூடநம்பிக்கையும் ஒருதலைச்சார்பான மனப்போக்கும் எளிதில் மாறிவிடா. அவற்றைச் சிரமப் பட்டே போக்க வேண்டும். அவை அறிவை மங்கடித்து விடும்; இதயத்தைக் கடினமாக்கிவிடும். இதன் காரண மாகவே படித்த அறிவாளிகள்கூட, தீண்டாமையை ஆதரிப்பதைப் பார்க்கிறோம்.

நான் சொன்ன செய்தியோடு, இன்னொரு பெரிய செய்தியும் தொற்றிக்கொண் டிருப்பதை மாணவர்களாகிய நீங்கள் உணர வேண்டும். இந்தியாவி லிருக்கும் ஒவ்வொரு சமூகத்தையும் தீண்டாமை என்கிற இந்தப் பிசாசு படை எடுக்கிறது. ஹிந்துக்களுக்குள்ளே காணப்படும் தீண்டா மையை ஒழிப்பதோடு, முஸ்லிம், கிறிஸ்தவர், பார்சி முதலி யோரிடம் காணப்படும் தீண்டாமையையும் போக்கிவிட வேண்டும்; இதுவே நான் சொல்லவந்த செய்தியாகும். கோடிக்கணக்கான உயர்ஜாதி ஹிந்துக்களிடையே, ஒரு மனமாற்றம் ஏற்பட்டு, அதனால் அவர்களுடைய இதயம் பரிசுத்தமடையுமானால்-பரிசுத்தம் அடைவது நிச்சயம்- இந்தியாவில் எல்லோரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர் களாக வாழ்வோம். நம்மிடையே பரஸ்பரம் காணப்படும் அவநம்பிக்கையும் சந்தேகமும் நிச்சயமாக ஒழிந்துவிடும். இது திண்ணம். பல நுட்பமான ரூபங்களில் ஒருவரோடு ஒருவர் அணுகவிடாதபடி தீண்டாமை நம்மைப் பிரித்து வைத்திருக்கிறது. இதன் காரணமாகவே வாழ்க்கை இன்பமற்றதாயும் கஷ்டமுடையதாயும் இருந்து வருகிறது.

அதனாலேதான், இந்தியர்கள் அனைவரிடமுமே- அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருப்பினும் சரி-உதவி செய்ய வேண்டும், ஆதரவு காட்ட வேண்டும் என்று நான் சொல்லி வருகிறேன். உதவி செய்ய

வேண்டுமென்று உலகத்தாரையே கேட்க நான் தயங்கிய தில்லை. நான் பண உதவியை நாடவில்லை; ஆனல் அவர் களின் அன்பு, அனுதாபம், பிரார்த்தனை ஆகியவற்றை நாடுவதோடு, இந்தப் பிரசினையிலுள்ள சிக்கல்களை எல்லாம் அலசி ஆராயும்படியும் கோருகிறேன். பணத்தைக் காட்டி லும் மனப்பூர்வமான அனுதாபமே மிகவும் மேன்மை யானது. ஹரிஜனங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று பிற மதத்தினரிடம் பணத்திற்காக நான் கையை நீட்டுவ தில்லை. அவர்கள் ஹரிஜனங்களுக்கு கடன்பட்டவர்கள் அன்று. உயர் ஜாதி ஹிந்துக்களே ஹரிஜனங்களுக்குக் கடன்பட்டவர்கள் ஆவர். எனவே அவர்கள்தான் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

கடைசியாக ஒரு வார்த்தை. இந்த இயக்கத்தில் அவ நம்பிக்கை இல்லாதிருக்குமாயின், இந்த இயக்கம் மனதை புனிதப்படுத்துவதற்கான இயக்கம் என்றும், ஆழ்ந்த மத வுணர்ச்சியை அடிப்படையாகக்கொண்ட இயக்கமென்றும், இதை ஹிந்துக்கள் அல்லாதவர்கள் கருதுவார்களாயின் இதயபூர்வமான ஆதரவையும் அனுதாபத்தையும் அவர்கள் கொடுக்கட்டும். இது என் இதயத்திலிருந்தே பொங்கி வரும் செய்தியாகும். ஏதோ சோம்பேறித்தனமாய்ச் சொல்லும் வார்த்தை என்று நினைத்துவிட வேண்டாம். மன எழுச்சியின் காரணமாக நீங்கள் பணமுடிப்பு ஒன்று தந்திருக்கிறீர்கள். அதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறேன். உங்களுக்கும் எனக்கும் இடையிலுள்ள தொடர்புக்கு ஒரு அறிகுறியாகவும் உங்களான ஆனவரை முயன்று, எனக்கு உதவிசெய்ய நீங்கள் கொண்டுள்ள உறுதிக்கு ஓர் அடையாளமாகவும் இந்தப் பணமுடிப்பை ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் ஒரு சரியான கணக்குப் பிள்ளை. எவ்வெப்போது, எந்தெந்த விதமாக, இந்த இயக் கத்தில் நீங்கள் பங்குகொள்ளுகிறீர்கள் என்பதை நான் உங்களிடமிருந்து கணக்குக் கேட்க விரும்புகிறேன்.

நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் என்பதை நிரூபிக்கவும்

"ஒழுக்கத்தினால் மட்டும்தான் நாம் பொதுஜனங்களிடம் பலனை எதிர்பார்க்க முடியும், பொதுஜனங்கள் விவாதம் செய்ய மாட்டார்கள். எப்படிப்பட்ட மனிதர்கள் தங்களிடம் வருகிறார்கள் என்பதையே அவர் தெரிந்துகொள்ள விரும்புவார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமுடையவர்களா யிருந்தால், அவர்களை நம்புவார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமல்லாதவர்களா யிருப்பின் அவர்கள் சொல்லுவதைப் பொது ஜனங்கள் கேட்க மாட்டார்கள்."

துடைப்பமும் வாளியும் எடுத்துக்கொண்டு, சேரிகளுக்குச் சென்று, குப்பை கூளங்களைச் சுத்தம் செய்யும்படியாக, சென்னை மாணவர்களுக்குக் காந்திஜி புத்திமதி கூறினார். ஹரிஜனங்களுக்குப் பல விதமான வழிகளில் தொண்டு செய்யலாம் என்று சொல்லிவிட்டு, காந்திஜி பேசியதாவது :

தீண்டாமை என்பது சமயச் சார்புடையதன்று என்பதையும், அது ஒரு கொடிய தீமை என்பதையும், ஹிந்து சமூகத்தினருக்கு எடுத்துக்காட்டி, அவர்கள் மனதைத் திருத்த விரும்பினால், நீங்கள் ஒழுக்கசீலர்களாக விளங்க வேண்டும். சிலரைத் தீண்டலாம் சிலரைத் தீண்டக்கூடாது என்பது மதத்தின் பகுதி யன்று, அதற்கு மாறுபட்டது என்பதை, உங்கள் வாழ்க்கையிலே ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்துகொண்டு நீங்கள் நடத்திக்காட்ட வேண்டும். ஒழுக்கத்திற்கு இழுக்கு ஏற்படக்கூடிய முறையில் நீங்கள் நடந்துகொண்டால் உங்களைப் பொதுஜனங்கள் நம்ப மாட்டார்கள். நீங்களோ பொதுஜனங்களோடு கலந்து பழக வேண்டியவர்கள்; அவர்கள் இதயத்திலே மாறுதல்கள் ஏற்படும்படி செய்ய வேண்டியவர்கள். வைதீகர்கள் என்பவர்கள் பொதுஜனங்களின் பிரதிநிதிகள் அல்லர்; மதநூல்களைச் சரியானபடி அவர்கள் வியாக்கியானம் செய்யவு மில்லை. பொதுஜனங்களிடை வைதீகர்களுக்கு எதிர்ப்பு இருக்கும்; ஒழுக்கத்தினால் மட்டுமே நாம் பொதுஜனங்களிடம் பலனை எதிர்பார்க்க முடியும். பொதுஜனங்கள் விவாதம் செய்ய மாட்டார்கள். எப்படிப்பட்ட மனிதர்கள் தங்களிடம் வருகிறார்கள் என்பதையே அவர்

கள் தெரிந்துகொள்ள விரும்புவார்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமுடையவர்களா யிருப்பின் நம்புவார்கள்; பாத்திர மல்லாதவர்களா யிருப்பின், அவர்கள் சொல்லுவதைப் பொதுஜனங்கள் கேட்க மாட்டார்கள். நீங்களோ பொது ஜனங்களிடையே கலந்து பழக வேண்டியவர்கள்; அவர்களுக்கு நம்பிக்கையையும் அறிவையும் ஊட்டவேண்டியவர்கள். அவர்களிடையே சென்று உடல் வணங்கி வேலை செய்வதோடு, கீழான எண்ணமோ நோக்கமோ தங்களிடம் இல்லை என்பதையும், நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். அவர்களுக்குத் தொண்டு செய்யும் பொருட்டே வந்திருக்கிறீர்கள் என்பதையும், அன்பையும் அமைதியும் அவர்களிடை உண்டாக்கவே வந்திருக்கிறீர்கள் என்பதையும் காட்ட வேண்டும். அப்படிச் செய்வீர்களானல், உங்கள் சொல்லுக்கு அவர்கள் நிச்சயமாகச் செவிசாய்ப்பார்கள்.

ஜாதியும் வகுப்புப் பிரசினையும்

"இப்போது இருந்துவரும் ஜாதிப் பாகுபாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை என்பதை நான் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன். இது முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கிறது; மல மூத்திரத்தைப் போலவே இதையும் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும். மனிதர்களுக் கிடையில் வேற்றுமைகள் உண்டு என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. நாம் எல்லோரும் சரிநிகர் சமானமானவர்களே. நான் சொல்லுகிற சமத்துவம் ஆன்மாவைப் பற்றியது; உடம்பைப் பற்றியதன்று."

தனது பெயரைத் தெரிவித்து, மாணவ ரொருவர் எழுதியிருப்பதாவது :

"இந்தியாவில் காணப்படும் வகுப்புப் பிரசினைபற்றி, தாங்கள் இரவும் பகலும் சிந்தித்து வருகிறீர்கள் என்பதை நான் அறிவேன். அடுத்து நடக்கப்போகும் வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ளுவதற்குரிய இரண்டு நிபந்தனைகளில், வகுப்புப் பிரசினைக்கு முடிவு காண்பதையும் ஒரு நிபந்தனை யாகத் தாங்கள் சொல்லி இருக்கிறீர்கள். முக்கியமாக, அந்தந்த சமூகத்தின் தலைவர்களைப் பொறுத்தே, இப்போது, சிறுபான்மையினரின் பிரசினையைத் தீர்க்கவேண்டி யிருக்கிறது. வகுப்புகளுக்கிடையே காணப்படும் மனப்பூசல்களை, அடியோடு போக்குவதற்குத் தற்காலிகமான ஏற்பாட்டினால் யாதொரு நலனுமில்லை.

"வகுப்பு வேற்றுமைகளை அடியோடு ஒழிக்க விரும்பினால் சமூகத்தோடு சமூகம் நெருங்கிப் பழகவேண்டியது அவசியமாகும். இப்போதோ நிலைமை அப்படியில்லை. ஒவ்வொரு சமூகமும் தனித்தனியே பிரிந்திருந்து வாழ்க்கை நடத்துகிறது. உதாரணமாக ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் பார்ப்போம். முக்கியமான விழாக்கள் கொண்டாடும்போது ஹிந்துக்கள் முஸ்லிம் சகோதரர்களை வரவேற்று வாழ்த்துக் கூறுவதில்லை. அதைப்போலவே, முஸ்லிம்களும் ஹிந்து சகோதரர்களை வரவேற்பதில்லை. சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டிருப்பதுதான் இதனால் கண்ட பலன்; தேச நலனுக்கு இது பாதகமாக இருக்கிறது.

"அடுத்தபடியாக, கலப்பு மணங்கள் நடைபெற்றால் இந்த வேற்றுமைகள் மறைந்துவிடும் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஜாதிப் பாகுபாடுகள் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை உடையவர்களாக நான் தங்களைக் கருதுகிறேன். இதன்படி பார்த்தால் தங்கள் நோக்கப்படி கலப்பு மணம் செய்துகொள்ளுவதினால் இந்தியாவிற்குக் காலக்கிரமத்தில் தீமைதான் ஏற்படுமென்பது தெளிவு. இந்த இரு சமூகங்களுக்கிடையே பாகுபாடுகள் இருக்கும்வரை, சமூக வேற்றுமைகளே இல்லாது ஒழிப்பது இயலாத காரியம்.

"தர்ம ராஜ்யம் நடக்கப்போகிற 'புதிய இந்தியாவில்' பல விதமான சமூகங்களுக் கிடையில் உள்ள தொடர்பு எப்படிப்பட்டதாக இருக்கும்

என்று தாங்கள் கருதுகிறீர்கள்? ஒவ்வொரு சமூகமும் தனித்தனியே பிரிந்துதான் இருக்குமா? என்னைப் பொறுத்தவரையில், இந்தியாவின் பிற்காலம் இந்தப் பிரசினையைத் தீர்ப்பதைப் பொறுத்தே இருக்கிறது என நம்புகிறேன்.

"இன்னெரு விஷயம். ஜாதி வித்தியாசத்தில் நாம் நம்பிக்கை வைப்போமாயின், தீண்டத்தகாதவர்களின் நிலை மிகவும் சிக்கல் உடையதாகிவிடும். 'தீண்டத்தகாதவர்களை' நாம் உயர்த்த வேண்டுமானால், ஜாதிப் பாகுபாடுகளை வைத்துக்கொண்டே உயர்த்த முடியாது. மத வேற்றுமையும், ஜாதி வேற்றுமையும் பிளவை உண்டாக்கிவிடுகின்றன. உலகில் சகோதர மனப்பான்மை வளருவதற்கு இவை சாபக்கேடாக இருந்து வருகின்றன. ஜாதி வித்தியாசம் சிலரை உயர்ந்தவர்கள் என்று தவருக எண்ணும்படி செய்துவிடுகிறது. துரதிர்ஷ்டமான பலாபலன் தான் அதனல் ஏற்பட்ட பலன். அப்படி இருக்கும்போது, புராதனமாக இருந்துவரும் ஜாதிக் கட்டுப்பாட்டில் நியாயமுண்டு என்று சொல்ல முடியுமா?

"இந்தப் பிரசினைகள் சில மாதங்களாக என் மனதை வாட்டி வருகின்றன. தங்கள் அபிப்பிராயத்தை என்னல் தெரிந்துகொள்ள இயலவில்லை. எனக்கு இருந்துவரும் சிரமங்களைப் போக்கி, இந்தப் பிரசினைக்கு முடிவுகாண வேண்டியே, தங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

"அலஹாபாத் சர்வகலாசாலையில் நான் பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிறேன். கூடுமானவரை உள்ளன்போடு முயன்று ஹிந்து-முஸ்லிம்களிடை சகோதர உணர்ச்சியை வளர்த்துவிட வேண்டுமென்பதே என் விருப்பம். ஆனல், அதற்கு ஏற்படும் தடைகளோ அனேகம். அதில் ஜாதி வித்தியாசம் ஒன்று என்பதை முன்னரே தெரிவித்துள்ளேன். இரண்டாவது, மாமிசம் உண்பது. முஸ்லிம்கள் வீட்டில் மாமிச உணவு பரிமாறுகிறர்கள். எவ்விதமாக அதில் கலந்துகொள்ள முடியும்? எனக்கு வழிகாட்டுவதற்குத் தங்களைத் தவிர சிறந்தவர்கள் வேறு யாருமில்லை. இந்தக் கடிதம் மூலம் நான் தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்."

பண்டிகை தினங்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரை ஒருவர் வரவேற்று உபசரிப்பதில்லை என்பது சரியன்று. ஆனல், ஒருவரை ஒருவர் அவ்விதம் வரவேற்பது அதிகமாகவும், அடிக்கடியும் ஏற்பட வேணுமென்பதை அனைவரும் நிச்சயமாக விரும்புவார்கள்.

இப்போது இருந்துவரும் ஜாதிப் பாகுபாட்டில் எனக்கு நம்பிக்கை கிடையாது என்பதை நான் அடிக்கடி சொல்லிவந்திருக்கிறேன். இந்தச் ஜாதி வேற்றுமை முன்னேற்றத்திற்குத் தடையாய் நிற்கிறது. மல மூத்திரத்தைப்போலவே, இதையும் நாம் ஒதுக்கித்தள்ள வேண்டும். மேலும் மனிதர்களுக்கிடையில் வேற்றுமை உண்டு

என்பதிலும் எனக்கு நம்பிக்கை கிடையாது. நாம் எல்லோரும் சரிநிகர் சமானமானவர்களே. நான் சொல்லு கிற சமத்துவம் ஆத்மாவைப்பற்றியது; உடம்பைப்பற்றிய தன்று. எனவே மனத்தைப்பற்றிய சமத்துவத்தையே நான் சொல்லுகிறேன் எனலாம். மக்களுக்கிடையில் உடல் அமைப்பில் அதிக வேறுபாடுகள் இருப்பதைக் காண்கிறோம்; எனவே மன சமத்துவத்தையே நாம் வற்புறுத்திப் பேச வேண்டும். வெளிப்படையாகக் காணப் படும் சமத்துவமின்மைக்கு மத்தியிலேதான், நாம் சமத்து வத்தைக் காண முயல வேண்டும். ஒருவனைவிட ஒருவன் உயர்ந்தவன் என்று எண்ணுவது பாபமாகும்; கடவு ளுக்கும் மனிதனுக்குமே இழைத்த பாபமாகும். அந்தஸ் திலே தாரதம்மியத்தை உண்டாக்குகிற ஜாதி வித்தியாசம் மிகவும் தீயது.

பரம்பரையாக இருந்துவரும் தொழில்களை அடிப் படையாக வைத்து, ஜாதிகள் உண்டு என நான் நம்பு கிறேன். இந்த நான்கு ஜாதிகளும் உலக மெங்குமே வியாபித்துள்ள நான்கு தொழில்களைப்பற்றி நிற்கின்றன. அதாவது கல்வி புகட்டுவது, பாதுகாப்பில்லாம லிருக்கிற வர்களைப் பாதுகாப்பது, விவசாயம், வியாபாரம் நடத்து வது, உடல் உழைப்பினால் ஊழியம் செய்வது. இந்த நான்கு தொழில்களும் மனிதவர்க்கத்திற்குப் பொதுவாய் இருப்பனவாகும். பொதுவாய் அமைந்துள்ள இந்த உண் மையை உணர்ந்து, உபயோகப்படுத்தி, நமது தொடர்பு களையும் நடத்தையையும் ஒழுங்குபடுத்த ஹிந்து மதம் முயன்றிருக்கிறது. தெரிந்தாலும் சரி தெரியாவிட்டாலும் சரி, பூமியின் கவர்ச்சித்தன்மை எல்லோரையுமே பாதிக் கத்தான் செய்கிறது. அதைச் சயன்டிஸ்டுகள் கண்டு பிடித்து, வாழ்க்கையில் பயன்படுத்த முயன்றார்கள். அத னால் ஏற்பட்ட பலாபலன்களோ உலகையே திகைக்கும்படி செய்துவிட்டது. அதைப்போலவே, ஹிந்து சமயமும் ஜாதிப் பாகுபாட்டைக் கண்டுபிடித்து அதை வாழ்க்கையில் புகுத்தி, உலகையே திகைக்கப்பண்ணி யிருக்கிறது. ஹிந்துக்களைச் சோம்பேறித்தனம் வந்து பற்றிக்கொண்ட பொழுது, ஜாதிக் குழப்பம் ஏற்பட்டு, பல ஜாதிகள் தோன்றி விட்டன. கலப்பு மணம், கலப்பு உணவு ஆகியவை

சம்பந்தமாகவும் தேவைக்கு அதிகமான கட்டுப்பாடுகளும் தீமைபயக்கும் கட்டுப்பாடுகளும் தோன்றலாயின. இந்த விதமான கட்டுப்பாடுகளுக்கும் ஜாதிப் பாகுபாட்டிற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. ஜாதிகள் வெவ்வேருய் இருப்பினும் கலப்பு மணம் செய்துகொள்ளலாம்; கலந்து உணவு உட்கொள்ளலாம். கற்பு, சுகாதாரம் ஆகிய இவற்றை உத்தேசிக்கும்போது, இந்தக் கட்டுப்பாடுகள் தேவையாய் இருக்கலாம். அதற்காகக் கலப்பு மணம் கூடாதென்பதில்லை. சூத்திரப் பெண்ணை மணந்து கொள்ளுகிற பிராமணனும் பிராமணப் பெண்ணை மணந்து கொள்ளுகிற சூத்திரனும் ஜாதி பாகுபாட்டுச் சட்டத்தை மீறியவர்கள் ஆகமாட்டார்கள்.

பிற மதத்தினரைக் கலியாணம் செய்துகொள்ளுவதை வேறு விதமாகப் பார்க்க வேண்டும். கலப்பு மத விவாகம் செய்துகொள்ளுகிறவர்கள், அவரவர்களுக்கு உரிய சமயத்தைப் பின்பற்றலாம்; நீதி முறைப்படிப் பார்த்தால் இப்படி நடைபெறுகிற மணங்கள் ஒழுக்கத்திற்குப் புறம்பானவையன்று. எனினும் இவ்விதம் மணந்துகொள்ளுகிறவர்களிடையே அமைதி நிலவுமா என்பதில் எனக்குச் சந்தேகம் உண்டு. சில சமயங்களில் அமைதியும் நிலவலாம். இதைச் சாக்காக வைத்துக் கொண்டு ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கலப்பு விவாகம் செய்துகொள்ளலாமென்று பிரசாரம் செய்தல் கூடாது. அதனல் தீமைதான் ஏற்படும். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் இப்போது நெறிசல் இருந்து வருகிறது. அது தணிகிறவரையில் கலப்பு மத விவாகம் கூடவே கூடாது. சில சில சமயங்களில் இவ்விதம் கலியாணம் செய்துகொள்ளும் தம்பதிகள் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தலாம். அதைக் காரணமாக வைத்துக்கொண்டு, பொதுவாக இதைப் பரப்ப முயலுதல் கூடாது. கலப்பாக உணவு உண்ணும் பழக்கம், இப்போது, ஹிந்து-முஸ்லிம்களிடையே அதிகமாக இருந்துவருகிறது; இருந்தும் அமைதி நிலவவில்லை. வகுப்பு ஒற்றுமை ஏற்படுவதற்குக் கலப்பு மணம், கலப்பு உணவு அவசியமல்ல; நான் ஆலோசித்து முடிவுகட்டிய நம்பிக்கையாகும் இது. பொருளாதாரமும் அரசியலும்தான் நெறிசலுக்குக் கார

ணங்கள். வகுப்பு ஒற்றுமை ஏற்படுவதற்கு அவற்றை நாம் நீக்கியாக வேண்டும். ஐரோப்பாவிலே கலப்பு மணம் செய்துகொள்ளுகிறார்கள்; கலப்பு உணவுமுறை இருக்கிறது. இருந்தாலும், ஐரோப்பியர்களிடையே பலத்த சண்டைகள் இல்லாமல் இல்லை. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் அப்படிச் சண்டை போட்டுக்கொண்டது கிடையவே கிடையாது. இதைச் சரித்திரத்தில் பார்க்கலாம். பொது மக்கள் விலகியே நிற்பார்கள்.

தீண்டத்தகாதார் என ஒரு வகுப்பைப் பிரித்துவைத்திருக்கிறோம். இது ஹிந்து மதத்திற்கு அவமானமாகும். ஜாதிப் பிரிவினைகள் நம்மைத் தடைசெய்கின்றன. ஆனால் அது பாபமானதன்று; தீண்டாமையோ அப்படியன்று; அது பாபம் நிறைந்த செயல்; கொலை செய்வதை ஒக்குமிது. இந்தப் பாம்பைக் காலாகாலத்தில் கொல்லாவிட்டால், அது ஹிந்து மதத்தையே விழுங்கிவிடும். இனிமேலும் தீண்டத்தகாதவர்களை ஹிந்து சமயத்திலிருந்து நாம் பிரித்துவைத்தல் கூடாது. ஹிந்துக்களாகவே மதித்து அவர்களை நாம் கௌரவிக்க வேண்டும். எந்த எந்தத் தொழிலுக்கு ஏற்றவர்களாய் இருக்கிறார்களோ, அந்தந்த ஜாதியைச் சேர்ந்தவர்களாக நாம் தீண்டத்தகாதவர்களைக் கருத வேண்டும்.

நான் சொல்லுகிற முறைப்படி ஜாதிப் பாகுபாடுகள் இன்று ஹிந்து சமயத்தில் நிலவவில்லை. பிராமணர் என்போர் கல்வி கற்றுக்கொடுப்பதை நிறுத்திவிட்டு, வேறு பல தொழில்களில் ஈடுபட்டு இருக்கிறார்கள். மற்ற ஜாதிகளுக்கும் இது பொருந்தும். உண்மையைப் பார்க்கப் போனால், அன்னிய ஆட்சியின்கீழ் இருக்கும் வரை நாமெல்லோரும் அடிமைகளே. ஏன், சூத்திரர்களைவிடக் கீழான அடிமைகள் என்று சொன்னாலும் பாதகமில்லை. ஏனெனில் நாம் எல்லோரும் மேலைநாட்டினருக்குத் தீண்டத்தகாதவர்களாய் இருந்து வருகிறோம்.

கடிதம் எழுதி இருக்கும் நிருபர் சைவ உணவு உண்பவர். எனவே மாமிசம் சாப்பிடும் முஸ்லிம்களோடு சாப்பிடுவது தமக்குக் கஷ்டமாய் இருப்பதாகச் சொல்லுகிறார். ஹிந்துக்களிலும் முஸ்லிம்களைக் காட்டிலும் அதிகமான பேர் மாமிசம் உண்கிறார்கள் என்பதை அவர் நினைவுகூர

வேண்டும். காய்கறி உண்ணும் பழக்கமுள்ளவர்கள் மாமிசம் உண்பவர்களோடு இருந்து சாப்பிடலாம். ஹிந்துக்களாய் இருந்தாலும் சரி, அல்லது வேறு யாராய் இருந்தாலும் சரி அதனால் பாதகமில்லை. தங்களுக்குப் பரிமாறும் உணவு சுத்தமாகத் தயாரிக்கப்பட்டதா, மாமிசக் கலப்பற்றதா என்பதை மட்டும் அவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். பாலும் பழங்களும் எந்த இடத்திலும் கிடைக்கும் ; எப்போதும் கிடைக்கும்.

சயன்ஸும் தொழில் வளர்ச்சியும்

"சயன்ஸின் முற்போக்கை நான் கண்டிக்கிறவன் அல்லன். அதற்கு மாறாக மேலைநாட்டினரின் சயன்ஸ் உணர்ச்சியைக் கண்டு நான் வியப்படைவதுண்டு. இந்த வியப்போடு வெறுப்பும் கலப்பதுண்டு. கடவுளது படைப்பில் தாழ்ந்த நிலையிலிருக்கிற உயிர்களை மேலைநாட்டுச் சயன்டிஸ்டுகள் அலட்சியம் செய்கிறார்கள்."

பி. ஏ. பரீட்சை தேறிய பிறகு, ஒரு மாணவர் அமெரிக்கா சென்று, அங்கு படித்துக்கொண் டிருக்கிறார். அவர் எழுதியிருப்பது :

" இந்தியாவில் காணப்படும் வறுமையைப் போக்குவதற்குப் பல வழிகள் உண்டு. அவற்றில், மூலப்பொருள்களைச் சேகரித்து, பயன்தரத் தக்க முறையில் உபயோகிப்பதும் ஒன்று எனச் சிலர் நிச்சயமாக நம்புகிறார்கள். அப்படி நம்புகிறவர்களில் நானும் ஒருவன். நான் இந்த நாட்டிற்கு வந்து ஆறு வருஷங்கள் ஆகின்றன. மர-ரசாயனத்தில் தேர்ச்சி பெற்று வருகிறேன். அரசாங்க உத்தியோகத்திலோ, அல்லது வைத்தியத் துறையிலோ நான் புகுந்து இருக்கலாம். அப்படிச் செய்ய எனக்கு விருப்பமில்லை. காரணம்: இந்தியாவில் தொழில் அபிவிருத்தி செய்வதின் அவசியத்தை நான் மிகவும் உணர்ந்திருக்கிறேன்.....காகிதத் தொழில் போன்ற தொழிலைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு நான் இங்கு வந்துள்ளேன். இது சரியென்று தாங்கள் ஒப்புக்கொள்ளுவீர்களா? பயன்தரத்தக்க முறையில், சமுதாய நலன் கருதி, இந்தியாவில் தொழிற்சாலைகள் வைத்து நடத்துவதைக் குறித்து, பொதுவாக தாங்கள் என்ன அபிப்பிராயம்கொண் டிருக்கிறீர்கள்? சயன்ஸின் முன்னேற்றத்தில் தங்களுக்குப் பிடித்த முண்டா ? அதாவது மனித சமுதாயத்தின் நலன் கருதி ஏற்படுகிற முன்னேற்றத்தில், உதாரணமாக, பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த பாஸ்டியூர் என்பவரையும், டோரன்டோவிலுள்ள டாக்டர் பெண்டிங்கைப்போலவும் உள்ளவர்கள் கண்டுபிடிக்கிறதைப் போன்ற முன்னேற்றத்தில், தங்களுக்குப் பிடித்த முண்டா ?"

இந்தக் கேள்விக்கு நான் பகிரங்கமாகப் பதில் சொல்ல விரும்புகிறேன். பல இடங்களிலிருந்தும் மாணவர்கள் இதைப்பற்றி என்னைக் கேட்டிருக்கிறார்கள். சயன்ஸ் சம்பந்தமாய் நான் கொண்டிருக்கும் கருத்துக்களை எல்லோருமே தவறான முறையில் அறிந்துகொண் டிருக்கிறார்கள். மேலே சொன்ன மாணவர் கொண்டுள்ள அபிப்பிராயப்படி தேசத்தில் தொழில்களை அபிவிருத்தி செய்கிறதில், எனக்கு எவ்வித ஆட்சேபனையு மில்லை.

மனித சமுதாயத்தின் நலன் கருதி என்பதை மட்டும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. என்னைப் பொருத்த வரை, சிறப்புடைய ராட்டினத்தையே மீண்டும் நடைமுறையில் கொண்டுவந்து, எல்லோரும் அதனில் நூற்பதையே இந்தியாவின் தொழிற் முறைப்போக்காக நான் எண்ணியுள்ளேன். அதன் மூலமாகவே, அதனால் மட்டுமே, இந்த நாட்டில் குடிசைகளில் வசித்து வரும் கோடிக்கணக்கான மக்களின் துயரம் நிறைந்த ஏழ்மையை உடனே போக்க முடியும். தேசத்தின் செல்வ நிலையைப் பெருக்க, பிறகு ஒவ்வொரு தொழிலையும் கவனிக்கலாம். எனவே சயன்ஸ் நுணுக்கமறிந்த இளைஞர் யாவரையும், தங்கள் தங்கள் அறிவைப் பயன்படுத்தி, கூடுமானால் ராட்டினத்தை இன்னும் சிறந்த முறையில் இந்தியாவின் குடிசைத் தொழிலுக்கு ஏற்ற உற்பத்திக் கருவியாக ஆக்கித் தரும்படி சொல்லுவேன். சயன்ஸின் முற்போக்கை நான் கண்டிக்கிறவன் அல்லன்; அதற்கு மாறாக மேலை நாட்டினரின் சயன்ஸ் உணர்ச்சியைக் கண்டு நான் வியப்படைவது உண்டு. வியப்போடு கூடவே, வெறுப்பும் ஏற்படுவதுண்டு. ஏனெனில் கடவுளின் படைப்பில் தாழ்ந்த நிலையில் இருக்கும் உயிர்களை மேலைநாட்டு சயன்டிஸ்டுகள் அலட்சியம் செய்கிறார்கள். உயிர்களைக் கொன்று, அறுத்துப் பரிசோதிப்பதை, நான் மிகவும் வெறுக்கிறேன். சயன்ஸின் பெயரினாலும், மனித சமுதாயத்தின் பெயரினாலும், தாழ்ந்த உயிர்களைக் கொலை செய்வது மன்னிக்க முடியாத செயலாகும். இதை நான் அடியோடு வெறுக்கிறேன். சயன்ஸ் நிபுணர்கள் கண்டுபிடித்த ஒவ்வொரு உண்மையிலும் ரத்தக் கறை தோய்ந்திருக்கிறது. அறுத்துப் பார்க்காமல் ரத்த ஓட்டம் என்பதைக் கண்டுபிடிக்க முடியாதென்றால், அதில்லாமலே மனித சமுதாயம் உயிருடன் வாழ முடியும் என்பது என் நம்பிக்கை. இப்போது காணப்படும் முறைகளுக்கு ஒரு எல்லை ஏற்பட்டு, அந்த எல்லைக்குள் நின்று அறிவு நாட்டத்தில் கவனம் செலுத்துகிற ஒரு காலம் நிச்சயமாய் வரும். அப்போது நேர்மையான மேலைநாட்டுச் சயன்டிஸ்டுகள், சில கட்டுப்பாடுகளைத் தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக்கொள்ளுவார்கள் என்பது திண்ணம். பிற்

காலத்தில் மனிதர்களை மட்டுமன்றி, பிற உயிர்களையுமே பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்படும். ஹிந்து சமுதாயம் வளர்ச்சியடைய, ஐந்தில் ஒரு பகுதியினரைக் கீழ்மைப்படுத்துவது அவசியம் என்று எண்ணினோம். கீழை நாட்டினரையும் ஆப்பிரிக்க தேசத்தினரையும் கீழ்மைப்படுத்தி, அவர்களைச் சுரண்டினாலன்றி வாழ்க்கை நடத்த முடியாது; உயர்ந்த நிலையில் இருக்க முடியாது என்று மேலைநாட்டினர் எண்ணினார்கள். இதெல்லாம் தவறு என்பதைப் படிப்படியாகத் தெளிவுபெற உணர்ந்து வருகிறோம். இதைப்போலவே, அடக்கியாளும் பொருட்டு—அதாவது கொலை செய்யும் பொருட்டு—எளிய உயிர்களைக் கடவுள் படைக்கவில்லை என்பதையும், நம்மைப்போல, உயிர் வாழவே அவற்றையும் கடவுள் படைத்துள்ளார் என்பதையும் காலக்கிரமத்தில் நாம் உணரப்போகிறோம். என்னைப்போலவே அவற்றுக்கும் உயிர் உண்டு என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

எதைச் செய்யலாம்?

"விடுமுறை நாட்களில் பாடங்களைப் படிக்கும்படி பெண்களையும் பிள்ளைகளையும் பேராசிரியர்கள் தொந்தரவு செய்யாதிருந்தால் நல்லது. அதற்குப் பதிலாக, கிராமங்களுக்கு அனுப்பி, அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்து வரும்படி செய்யலாம். விடுமுறை நாட்களை விளையாட்டில் போக்க வேணுமேயன்றி, புத்தகங்களை மனப்பாடம் செய்வதில் செலவிடக் கூடாது."

ஆக்ரா யூத் லீக் சார்பாக, சில தினங்களுக்கு முன், எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் கீழே தந்துள்ள கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள்.

"எங்களது செயல்முறைகளின் உருப்படியான போக்கு எதிர்காலத்தில் எத்தன்மையதாய் இருக்க வேண்டும் என்பதுபற்றி எங்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. எங்கள் சூழ்நிலையில் வசிக்கும் குடியானவர்களோடும், அக்கம்பக்கத்தினரோடும் நாங்கள் ஒத்துழைக்க விரும்புகிறோம். ஆனால், அனுபவசாத்தியமான முறை ஒன்றும் எங்களுக்குப் புலப்படவில்லை. எனவே, சில அனுபவசாத்தியமான முறைகளைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இந்த விதமான, சிரமம் எங்கள் சங்கத்திற்கு மட்டு மில்லை; இன்னும் எங்களைப்போல அனேக சங்கங்களுக்கும் இருக்கிறதென்பதை அறிவோம். எனவே இந்தப் பிரசினைக்குத் திட்டமானதொரு முடிவுகண்டு, அதை 'நவஜீவனிலும்' 'யங் இந்தியா'விலும் தாங்கள் வெளியிடுவதைப் பெரிதும் விரும்புகிறோம்."

எனக்கு அளித்த உபசாரப் பத்திரத்தில் கோரக்பூர் யூத் லீக்கினரும் இதே உணர்ச்சியை வெளியிட்டார்கள். உணவுப் பிரசினை இளைஞர்களை வாட்டுகிறபடியால், அதை எப்படிச் சமாளிப்பது என்றும் கேட்டார்கள். இந்தக் கேள்வியில் இரண்டு பிரசினைகள் பின்னிக் கிடக்கின்றன என்பது என் அபிப்பிராயம். நகர வாழ்க்கையைக் கைவிட்டு, கிராம வாழ்க்கையை நமது இளைஞர்கள் ஏற்றுக்கொண்டால், இந்த இரண்டு பிரசினைகளுக்கும் ஒரு முடிவு காணலாம். நமது நாகரிகம் கிராமிய நாகரிகமாகும். நமது தேசத்தின் பரப்பு, ஜனத்தொகை நெருக்கம், தேச அமைப்பு, காலநிலை யாவும் கிராமிய நாகரிகத்திற்கு ஏற்றனவாகவே அமைந்துள்ளன. கிராமிய நாகரிகத்தில் அனேகம் குறைபாடுகள் உண்டு; ஆயினும் அவை சரிக்கட்ட இயலாத குறைபாடுகள் அன்று. கிராமிய நாகரிகத்தைக் கல்லி எறிந்துவிட்டு, அதற்குப் பதிலாக

நகர நாகரிகத்தை நிலைநாட்ட முயல்வது, சாத்தியமற்ற ஒரு காரியம் ஆகும் என நான் எண்ணுகிறேன். நகர நாகரிகத்தைச் சாத்தியமாகும்படி செய்ய விரும்பினல், நாம் நமது ஜனத்தொகையை முப்பது கோடியிலிருந்து, முப்பது லக்ஷத்திற்கோ, அல்லது மூன்று கோடிக்கோ குறைத்துக்கொள்ள நாம் தயாராய் இருக்க வேண்டும். எனவே, தற்போது இருந்துவரும் கிராமிய நாகரிகத்வையே நிலைநிறுத்த விரும்புவதாக எண்ணி, அதில் காணப்படும் குறைபாடுகளைப் போக்குவதற்கான மார்க்கத்தைச் சொல்லப் போகிறேன். நமது இளைஞர்கள் கிராமங்களில் குடியேறி வசித்தால்தான் இது சாத்தியமாகும். இதை அவர்கள் ஏற்றுக்கொண்டால், பள்ளிக்கூடத்திலும் கல் லூரிகளிலும் படிக்கிற மாணவர்கள், விடுமுறை நாட்களில் அருகாமையிலுள்ள கிராமங்களுக்குச் சென்று அங்கு தங்குவதோடு, தங்கள் வாழ்க்கையையும் திருத்தி யமைத் துக்கொள்ள வேண்டும். படிப்பை முடித்தவர்களும், படிப்பை நிறுத்திவிட்டவர்களும் கிராமங்களிலேயே குடி யேறிவிட எண்ணங்கொள்ள வேண்டும். கௌரவமான வாழ்க்கை வாழ விரும்புகிறவர்களுக்கும், கிராம வாழ்க் கையை மேற்கொண்டு எளிய வாழ்க்கைவாழவிரும்புகிறவர் களுக்கும் அகில இந்திய நூல் நூற்போர் சங்கத்தில் வேலை கிடைக்கும். அதற்கு அனேக கிளைகள் இருக்கின்றன; அதன் ஆதரவிலும் பல நிலையங்கள் உண்டு. தொண்டு செய்ய விருப்பமுள்ள மாணவர்களுக்கு அங்கு வேலை எளிதாகக் கிடைக்கும். இந்த ஸ்தாபனத்தில் 1500 இளை ஞர்கள் நமது நாட்டினர் வேலை பார்க்கிறார்கள். 15 ரூபா யிலிருந்து 150 ரூபாய்வரைச் சம்பளம் கொடுக்கப்படுகி கிறது. உடல் வருந்தி உழைக்க வெட்கப்படாத இளைஞர் களுக்கு—நேர்மையாகவும் சுறுசுறுப்பாகவும் உள்ளன் போடும் வேலை பார்க்க விரும்பும் இளைஞர்களுக்கு—எவ் வளவு பேருக்கு வேணுமானலும் அங்கு வேலை கிடைக்கும். இவற்றைத் தவிர்த்து, தேசியக் கல்வி ஸ்தாபனங்களிலும் வேலை கிடைக்கக் கூடும். ஆனல் சொற்ப மாணவர்களுக்கே அங்கு வேலை கிடைக்கலாம். ஏனெனில் தேசியக் கல்வி முறையை ஒரு நாகரிகமான போக்காக மக்கள் இன்னும் கருத வில்லை. சூழ்நிலையிலும் மனப்போக்கிலும் வெறுப்

புத்தட்டி இருக்கும் இளைஞர்களுக்கு, அவர்களுடைய வெறுப்பு உண்மையானால், இந்த இரண்டு பெரிய தேசிய ஸ்தாபனங்களின் செயல்முறையைக் கவனித்து வரும்படியாக நான் சிபார்சு செய்கிறேன். இந்த இரண்டு ஸ்தாபனங்களும் அமைதியான ஆனால் பயனுள்ளதான ஆக்க வேலைகளைச் செய்து வருகின்றன. நமது நாட்டு இளைஞர்கள் கௌரவமாக வாழ்க்கை நடத்தவும் தொண்டு செய்யவும் இவை இடங் கொடுக்கின்றன. பெரிய தேசிய ஸ்தாபனங்களான இவற்றில் அவர்கள் கலந்துகொண்டாலும் சரி, கொள்ளாவிட்டாலும் சரி, இளைஞர்கள் கிராமங்களுக்குச் சென்று, அங்கு குடியேறி வாழ்க்கை நடத்தட்டும். ஆராய்ச்சி செய்ய, தொண்டு செய்ய, உண்மையான அறிவு தேட, அங்கு ஏராளமான வசதிகள் இருப்பதை அவர்கள் காண்பர். விடுமுறை நாட்களில் பாடங்களை படிக்கும்படி பெண்களையும் பிள்ளைகளையும் பேராசிரியர்கள் தொந்தரவு செய்யாதிருப்பது நல்லது. அதற்குப் பதிலாக, கிராமங்களுக்கு அனுப்பி, அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிந்து வரும்படி செய்யலாம். விடுமுறை நாட்களை விளையாட்டில் செலவிட வேணுமேயன்றி, புத்தகங்களை மனப்பாடம் செய்வதில் செலவிடக் கூடாது.

வரையறையான சில குறிப்புகள்

"தேசத் தொண்டில் தன்னலத்தின் அளவு கட்டுப்பட்டுக் கிடக்கிறது. நமது நாடு மிகவும் ஏழ்மையான நாடு. அந்த அளவை வைத்தே சம்பளம்கொடுக்கப்படும். கிராமங்களில் குடியேறித் தொண்டுசெய்வது, சுயராஜ்யத்தை நிறுவிய தற்கு ஒப்பாகும். மற்றவை எல்லாம் வீண்கனவே யன்றி வேறில்லை."

ஐக்கிய மாகாணத்தில் நான் பிரயாணம் செய்துகொண் டிருந்த காலத்தில், அலஹாபாத் மாணவர்களிடமிருந்து, எனக்குக் கீழ்க்கண்ட கடிதம் வந்தது.

"சமீபத்தில் வெளிவந்த 'யங் இந்தியா' இதழ் ஒன்றில், தாங்கள் கிராமிய நாகரிகத்தைப்பற்றி எழுதி இருக்கிறீர்கள். படிப்பு முடிந்ததும், மாணவர்கள் கிராமங்களில் குடியேற வேணும் என்று தாங்கள் சொல்லு வதை, நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். கிராமங்களில் குடியேற வேணு மென்பது விளக்கந்தருவதா யில்லை. என்னென்ன காரியங்களை மாண வர்கள் செய்ய வேண்டு மென்பதைத் தெளிவுபட வரையறுத்துச் சொல்ல வேண்டுகிறோம். வரையறையற்ற, தெளிவற்ற திட்டங்களைக் கேட்டு கேட்டு நாங்கள் அலுத்துப்போனோம். நமது நாட்டினருக்குத் தொண்டு செய்வதில் எங்களுக்கு எவ்வளவோ ஆசை உண்டு. ஆனால் திட்டமாக எதைச் செய்வ தென்று விளங்கவில்லை. பாடுபடுவதால், ஏதா வது பலன் கிடைக்குமா? வருவாய்க்கு இடமுண்டா? 15 ரூபாய் முதல் 150 வரைக் கிடைக்கு மென்று, தாங்கள் தெரிவித்து இருக்கிறீர்கள். எந் தெந்தத் துறைகளில் அந்த வருவாய் கிடைக்கும்? இந்த விஷயங்களை மாணவர்களிடையே பேசும்போதாவது, அல்லது தங்களின் மதிப்பு வாய்ந்த பத்திரிகையிலாவது தெளிவுபடுத்துவீர்க ளென நம்புகிறோம்."

இதே விஷயத்தைப்பற்றி மாணவர் கூட்டம் ஒன்றில் நான் பேசி இருக்கிறேன்; இதே பத்திரிகையிலும் அது பற்றி வரையறையான திட்டம் ஒன்றை எழுதி இருக் கிறேன். இருந்தபோதிலும், மறுபடியும் அதை அழுத்த மாய் சொல்லுவதில் குற்றமில்லை. முன்பு குறிப்பாக எழுதி யிருந்த திட்டங்களை, இப்போது தெளிவுபடுத்தி விளக்கிக் காட்டுகிறேன்.

படிப்பு முடிந்ததும், என்ன செய்ய வேண்டும் என் பதை, கடிதம் எழுதி இருப்பவர்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். வயதுவந்த மாணவர்கள்—அதாவது கல்லூரிகளில் படித்துக்கொண் டிருக்கிற மாணவர்கள் அனைவருமே - படித்துக்கொண் டிருக்கும்போதே, கிராம

சேவையில் ஈடுபட வேண்டும் என்பது என் விருப்பம். கொஞ்ச நேர மட்டும் தொண்டு செய்கிறவர்களுக்குரிய திட்டத்தை இங்கு தந்திருக்கிறேன்.

விடுமுறை நாட்கள் அனைத்தையுமே மாணவர்கள் கிராமத் தொண்டில் செலவிட வேண்டும். எல்லோரும் சென்ற பழைய பாதையிலே செல்லாது, வேறு வேறு முறைகளை கைக்கொள்ளுவது நல்லது. தாங்கள் படிக்கிற நிலையங்களுக்கு அண்மையிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள கிராமவாசிகளின் நிலைமைகளை ஆராய வேண்டும். அவர்களைச் சிநேகமாக்கிக்கொள்ள வேண்டும். இப்படிப் போய்வருகிற பழக்கத்தினால் கிராம வாசிகளுக்கும் மாணவர்களுக்கு மிடையில் ஒரு தொடர்பு ஏற்பட்டுவிடும். பின்னர் அவர்களிடையே வசிக்க நேரும் போது, முன்பு பழகிய காரணத்தால், மாணவர்களைக் கிராமவாசிகள் சந்தேகிக்க மாட்டார்கள்; நண்பர்களாகவே கருதி வரவேற்பார்கள். கோடை விடுமுறையின் போது, மாணவர்கள் கிராமங்களிலே தங்கிவிட வேண்டும். தங்கி, வயதுவந்தவர்களுக்குக் கல்வி போதிக்க முயல வேண்டும். சுகாதார முறைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்; சாதாரண நோய்களுக்கு வைத்தியம் செய்ய வேண்டும்; ராட்டினத்தில் நூல் நூற்கக் கற்றுக் கொடுக்கலாம். ஒழிவு நேரங்களை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைப்பற்றியும் சொல்லலாம். இந்த முறைகளைப் பின்பற்றுவதற்கு, மாணவர்களும் ஆசிரியர்களும் தங்களின் மனப்போக்கைப் புதிய முறையில் மாற்றிக் கொள்ள வேண்டும். சிந்தனைசக்தி யில்லாத ஆசிரியர்கள் தான், விடுமுறை நாட்களிலும், பாடம் படிக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். எந்த வழியிலும் இது கேடான பழக்கம் என்று நான் கருதுகிறேன். எப்பொழுதும் செய்கிற காரியங்களிலிருந்து விடுபட்டு, மனதிற்கு உவந்த காரியங்களைத் தாமாகவே செய்து, அறிவை அபிவிருத்திசெய்து கொள்ளும் பொருட்டே விடுமுறைகள் ஏற்பட்டுள்ளன. நான் சொல்லியதைப் போன்ற கிராம சேவை, விளையாட்டுக்கு விளையாட்டாகவும், சிறிதளவு அறிவு புகட்டுவதாயும் இருக்கும். படிப்பு முடிந்ததும் கிராம சேவை செய்ய விரும்புகிறவர்களுக்கு—கிராம சேவைக்கே தம்மை அர்ப்

பணம் செய்துகொள்ள விரும்புகிறவர்களுக்கு—இது ஒரு சிறந்த பயிற்சியாக இருக்கும்.

கிராம சேவையின் விரிவான முழு விபரம் இப்போது தேவையில்லை. விடுமுறை காலத்தில் செய்த வேலைகளை நிலைபேறுடையனவாய்ச் செய்வதே இப்போது செய்ய வேண்டிய காரியம். கிராமவாசிகளும் பூரண மனதுடன் ஒத்துழைக்கத் தயாராய் இருப்பார்கள். கிராம வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் - அரசியல், பொருளாதாரம், சுகாதாரம், சமூகம் ஆகிய சகல துறைகளிலும் - கவனம் செலுத்த வேண்டும். உடனடியாகக் கவனிக்க வேண்டிய பிரசினை, பெரும்பாலான கிராமங்களில் பொருளாதாரத்தைப்பற்றியதாக இருக்கும். சந்தேகமின்றி, இந்தத் தொல்லையை ராட்டின மூலமாகத் தீர்த்துவிடலாம். இதனால் கிராமவாசிகளின் வருவாய் சிறிது கூடும்; குறும்புத்தனமும் குறையும். வீடுவாசல்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாமையும் நோயும்சுகாதாரசம்பந்தமாய்க் கவனிக்க வேண்டிய காரியம். இந்தக் காரியத்தில் மாணவர்கள் தாமே உடல் வருந்தி உழைக்க வேண்டும். மலங்களையும் குப்பைகளையும் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். பிற்காலத்தில் இது உரமாகப் பயன்படும். கிணறு, குளம், ஆகியவற்றைச் சுத்தம்செய்து, சிறு சிறு மராமத்து வேலைகளையும் பார்க்க வேண்டும். குப்பை கூளங்களை அப்புறப்படுத்த வேண்டும். பொதுவாகச் சொன்னால் கிராமத்தை வசிக்க மிகவும் ஏற்றதொரு இடமாகச் செய்ய வேண்டும். கிராம சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் சமூகத் துறையிலும் கவனம் செலுத்த வேண்டும். தீய சமூகப் பழக்க வழக்கங்களையும், கெட்ட நடையுடை பாவனைகளையும் நாசப்படுத்த வேண்டும். தீண்டாமை, குழந்தைமணம், பொருத்தமற்ற விவாகம், குடி, அபின் கஞ்சா சாப்பிடுதல் இன்னும் அக்கம் பக்கத்திலுள்ள மூடப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை விட்டுவிடும்படி எடுத்துச் சொல்லி, கடைசியாக, மெல்ல மெல்ல அவர்களை அரசியல் துறையில் கவனம் செலுத்தும்படி செய்ய வேண்டும். அரசியல் சம்பந்தமாய்க் கிராமவாசிகளுக்கு இருந்துவரும் மனக் குறைகளை ஆராய்ந்து அறியவேண்டும். சுதந்திரம், தன்னம்பிக்கை, சுய உதவி ஆகியவற்றின் சிறப்பை அவர்களுக்கு

எடுத்துக்காட்ட வேண்டும். இப்படிச் சொல்லிக்கொடுப்ப தையே முதியோர் கல்வி என நான் கருதுகிறேன். கிராமத் தொண்டரின் வேலை இத்துடன் நின்றுபோகவில்லை. குழந்தை வளர்ப்பில் அவர் கவனம் செலுத்த வேண்டும். அவைகளுக்குக் கல்வி போதிக்க ஆரம்பிக்க வேண்டும். வயது வந்தவர்களுக்கு இரவு நேரங்களில் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும். இப்படிச் சொல்லிக் கொடுக்கிற இலக்கியப் பயிற்சி, கல்வித் துறையில் ஒரு பகுதியே யாகும். மேலே சொன்ன பெரிய இலட்சியத்தை அடைவதற்கு, அடிகோலியது போலாகும்.

தொண்டு செய்வதற்குத் தேவைப்படும் கருவிகள் இரண்டு: விரிந்த இதயம்; நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒழுக்கம். இந்த இரண்டு குணங்களும் இருந்துவிடின், மற்றவை யாவும் தாமே தொடர்ந்து வரும். இது திண்ணம்.

உணவிற்கு என்ன செய்வது என்பதே கடைசியான கேள்வி. உழைப்புக்குத் தக்க கூலி கொடுக்க வேண்டுவது அவசியம். வரப்போகிற தலைவர், தேசிய மாகாண சர்வீஸை நிறுவிக்கொண் டிருக்கிறார். அகில இந்திய நூல் நூற்போர் சங்கம் வளர்ச்சி யடைந்துவரும் ஒரு ஸ்தாபனம் ஆகும். நிலைபேறுடைய ஸ்தாபனமு மாகும். ஒழுக்கமுள்ள இளைஞர்கள் அங்கு தொண்டு செய்வதற்கு ஏராளமான வசதியுண்டு. வாழ்க்கைத் தேவைக்குப் போதிய சம்பளம் நிச்சயமாய் அங்கு கிடைக்கும். அதற்குமேல் அதிகமாகக் கொடுப்பதற்கு அங்கு பணமில்லை. தன்னலத்தையும் தேசத் தொண்டையும் நீங்கள் ஒரே காலத்தில் செய்வதென்பது சாத்தியமில்லை. தேசத் தொண்டில் தன்னலத்தின் அளவு கட்டுப்பட்டிருக்கிறது. நமது நாடு மிகவும் ஏழ்மையான நாடு. அந்த அளவை வைத்தே சம்பளம் கொடுக்கப்படும். கிராமங்களில் குடியேறித் தொண்டு செய்வது, சுயராஜ்யத்தை நிறுவியதற்கு ஒப்பாகும் மற்றவை எல்லாம் வீண் கனவே யன்றி வேறில்லை.

மாணவர்கள் எவ்வாறு உதவலாம்?

"நீங்கள் தினந்தோறும் நூல் நூற்பதன் மூலம் தேசத் தொண்டு செய்யலாம்............தினந்தோறும் கதர் விற்பனை செய்யலாம்........அப்படி விற்பனை செய்து குறைந்த அளவு நாள் ஒன்றுக்கு ஒரு தம்பிடியாவது மீதப்படுத்தவேண்டும். நான் கேட்கும்போது மீதப்படுத்தியதை என்னிடம் தர வேண்டும்......சேரிகளுக்குச் சென்று தொண்டு செய்யலாம்."

படிப்புக்குத் தடங்கல் ஏற்படாதபடி, ஓய்வு நேரங்களில், தான் தொண்டு செய்ய விரும்புவதாகத் தெரிவித்து, சர்வகலாசாலை மாணவர் ஒருவர், காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அவருக்கு, காந்திஜி விரிவான முறையில் சில அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்:

நீங்கள் தேசத் தொண்டு செய்வதற்கான வழிகள்:

1. தரித்திர நாராயணனை நினைந்து-ஏழை இந்திய மக்களை எண்ணி-தினந்தோறும் நூல் நூற்க வேண்டும். கனமானதாயும் மெல்லியதாயும் நூற்கலாம். எவ்வளவு நேரம் நூற்று இருக்கிறீர்கள் என்பதை டைரியில் குறிப்பு எழுதி வைக்க வேண்டும். அளவு, கனம், எண்ணிக்கை இவற்றை எல்லாம் குறித்து வைத்துக்கொண்டு ஒவ்வொரு மாதமும் எனக்கு ரிப்போர்ட்டு அனுப்ப வேண்டும். நூலைப் பதனமாகக் காப்பாற்றி வைத்து, நான் கேட்கும்போது அதை என்னிடம் தந்துவிட வேண்டும்.

2. உள்ளூரில் உள்ள அட்தாட்சி பெற்ற கதர்க் கடையின் சார்பாக, தினந்தோறும் கதர் விற்பனை செய்யலாம். தினந்தோறும் விற்ற விற்பனைக்குக் கணக்கு வைத்திருக்க வேண்டும்.

3. குறைந்த அளவு நாள் ஒன்றுக்கு ஒரு தம்பிடியாவது மீதப் படுத்த வேண்டும்.

4. அப்படி மீதப்படுத்தியதை நான் கேட்கும்போது என்னிடம் தந்துவிட வேண்டும். 'குறைந்த அளவு' என்ற அடைமொழியைக் கணக்கில் வைத்துக்கொள்ளக் கூடாது. கூடுமானால், அதிகமாகவே தரித்திர நாராயணனுக்கு மீதப்படுத்தலாம்.

5. மற்ற மாணவர்களையும் சேர்த்துக்கொண்டு சேரிகளுக்குச் சென்று தொண்டு செய்யலாம். தானும் தோழர்களுமாகச் சேரிகளைப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். ஹரிஜனக் குழந்தைகளோடு சிநேக முறையில் பழக வேண்டும். உடல் நலம், சுகாதாரம் ஆகியவற்றைப் பயன் கிட்டும் முறையில், அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

இவற்றை யெல்லாம் செய்து முடித்த பின்னரும் அவகாசம் இருக்குமேயானால், சில கிராமக் கைத் தொழில்களை நீங்கள் கற்றுக்கொள்ளலாம். படிப்பு முடிந்த பிறகு

கிராமங்களுக்குச் சென்று தொண்டு செய்வதற்கு இவை பயன்படும். இவற்றையெல்லாம் செய்து முடித்த பிறகும், நேரமும் ஆசையும் மீதம் இருக்குமானால், எனக்குத் தெரியப்படுத்துங்கள். உங்கள் படிப்பிற்குக் குந்தகம் ஏற்படாதவாறு இன்னும் அனேக குறிப்புகளைத் தெரிவிக்கிறேன்.

கேள்வியும் பதிலும்

விடுமுறையை எப்படிச் செலவிடுவது?

கேள்வி : விடுமுறை காலத்தில் மாணவர்கள் எதைதைச் செய்ய லாம்? படிப்பதில் மனம் செல்லவில்லை; நூல்நூற்றுக்கொண்டே யிருந்தால் சலிப்பு ஏற்படுகிறது.

பதில் : நூல்நூற்பதில் இயல்பாகவே ஒரு கவர்ச்சி இருக்கிறது; அதோடுகூட உயிரையே கொடுக்கும் தன்மை யும் இருக்கிறது. நூல்நூற்பதினால் சலிப்பு ஏற்படுகிறது என்றால் இந்த இரு தன்மைகளையும் அவர்களால் உணர முடியவில்லை போலும். நூற்கும் ஒவ்வொரு கெஜ நூலும் தேசியச் செல்வத்தை அதிகப்படுத்துகிறது என்பதை அறி வதில் கஷ்ட முண்டா? ஒரு கெஜ நூல் அதிக மில்லாதது போலத் தோன்றலாம். உழைப்பை அதிகப்படுத்திக் கொண்டே போவதற்கு இதைவிட எளிதான தொழில் வேறு கிடையாது. எனவே நூல் நூற்பதனால் உள்ளீ டான மதிப்பு அதிகமாகும். மாணவர்கள் ராட்டினத்தின் அமைப்பைத் தெரிந்துகொண்டு அதை நல்ல நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி வைத்துக்கொள் ளப் பழகியவர்கள், நூற்பதில் ஒரு விதமான கவர்ச்சி இருப்பதைக் காண்பார்கள். ஆகவே வேறு எந்தத் தொழி லையும் குறிப்பிட எனக்கு விருப்ப மில்லை. நூல் நூற்ப தைவிட அவசரத் தேவையான வேலைகளையும் மாண வர்கள் பார்க்கலாம். அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களுக் குச் சென்று, அவற்றை நல்ல முறையில் சுகாதாரமாய் வைத்துக்கொள்ள அவர்கள் உதவி புரியலாம்; நோய் வாய்ப்பட்டு இருப்பவர்களுக்குச் சிகிச்சை செய்யலாம்; அல்லது ஹரிஜனக் குழந்தைகளுக்குக்கல்விகற்பிக்கலாம்.

மாணவரும் வரப்போகிற போராட்டமும்

கேள்வி : கல்லூரியில் படிக்கும் மாணவனாய் இருந்தும், நான்கு அணாக் கொடுத்து நான் காங்கிரஸில் அங்கத்தினனாக இருக்கிறேன். படித் துக்கொண் டிருக்கிறபடியால், வரப்போகிற போராட்டத்தில் நான் கலந்து கொள்ளக் கூடாது என்று தாங்கள் சொல்லுகிறீர்கள். விடுதலை இயக்கத்தில் மாணவர்களிடமிருந்து எத்தகைய போக்கைத் தாங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

பதில் : இந்தக் கேள்வியில் கருத்து சம்பந்தமான

குழப்பம் இருக்கிறது. போராட்டம் இப்போது நடைபெற்று கிறது. நமது தேசம் பிறப்புரிமையாகிய சுதந்திரத்தை அடையும்வரை போராட்டம் தொடர்பாய் நடைபெற்றுக் கொண்டுதா னிருக்கும். பலவிதமான போராட்ட முறை களில் சட்டமறுப்பும் ஒன்று. இன்றைய நிலையைச் சீர் தூக்கிப் பார்க்கும்போது, மாணவர்களைப் போராட்டத்தில் கலந்துகொள்ளச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. கோடிக் கணக்கான பேருக்குச் சட்டமறுப்பு இயக்கத்தில் கலந்துகொள்ள முடியாமல் போகலாம். ஆயினும் அவர்கள் வேறு பல துறைகளில் ஒத்தாசையாய் இருந்து உதவலாம் :

1. மாணவர்கள் சுயமான முறையில் கட்டுப்பாடுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். தேசிய வேலைத் திட்டத்தில் எவ்வளவோ கிளைகள் இருக்கின்றன. அவற்றைத் தலைமை தாங்கி நடத்த அவர்கள் தங்களைத் தகுதியாக்கிக்கொள்ளலாம்.

2. படிப்பு முடிந்ததும், வருவாயை நாடி உத்தியோக ஆசை கொள்ளாது, தேசத் தொண்டர்களாக இருந்து சேவை புரியலாம்.

3. தங்களுக்குக் கிடைக்கும் பணத்திலிருந்து, தேச சேவையின் பொருட்டு ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கலாம்.

4. சமூகக் கலப்பு, ஜாதிக் கலப்பு, மாகாணக் கலப்பு, இவை தோன்றும்படி செய்து, ஐக்கிய பாவத்தை வளர்க்கலாம். ஹரிஜனங் களுடன் கலந்து உறவாடி, சொந்த வாழ்க்கையில் தீண்டாமை என்ற பழக்கத்தையாவது போக்க முயலலாம்.

5. ஒழுங்காக நூல்நூற்று வரலாம். வேறு துணிகளை விலக்கி விட்டு, அத்தாட்சி பெற்ற கதரையே வாங்க வேண்டும். அதோடு கதர் விற்பனையும் செய்யலாம்.

6. நாள்தோறும் செய்ய முடியாவிட்டாலும் வாரத்தில் சில மணி நேரமாவது, ஏதாவது ஒரு கிராமத்துக்குச் சென்று சேவை செய்ய வேண்டும். பள்ளிக்கூடங்களுக்கு அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்றும் தொண்டு செய்யலாம். விடுமுறைக் காலத்தில் நாள்தோறும் சிலமணி நேரமாவது தேச சேவையில் ஈடுபடலாம்.

மாணவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்கிற சந்தர்ப்பம் நிச்சயமாக ஏற்படும். அப்படிப்பட்ட காலத் தில் நான் முன்பு அவர்களை அழைத்திருக்கிறேன். பெரும் பாலும் மாணவர்கள் கலந்துகொள்ளக் கூடிய சந்தர்ப் பங்கள் வாய்ப்பது அரிது. எனினும் மேலே சொல்லிய முறைப்படி மாணவர்கள் தங்களைத் தகுதியுடையவர்கள் ஆக்கிக்கொள்ள வேண்டும். அவ்விதம் தகுதியடையாத மாணவர்களைச் சந்தர்ப்பம் வாய்ப்பினும் எனக்கு

அதிகாரம் இருக்கும் பட்சத்தில், நான் போராடத்தில் கலந்துகொள்ளவிட மாட்டேன்.

சங்கடமான கேள்வி

கேள்வி: நான் ஒரு ஹிந்து மாணவன். எனக்கு ஒரு முஸ்லிமோடு நெருங்கிய பழக்கமுண்டு. எனக்கும் அவருக்கும் உருவ வழிபாட்டைப் பற்றி எப்பொழுதுமே தகராறுதான். உருவ வழிபாட்டால் நான் நிம்மதியடைகிறேன். ஆனல், எனது முஸ்லிம் நண்பர் திருப்திகொள்ளும் முறையில் என்னல் பதில் சொல்ல முடியவில்லை. '**ஹரிஜன்**' பத்திரிகையில் உருவ வழிபாட்டைப்பற்றி ஏதாவது தாங்கள் சொல்ல முடியுமா?

பதில்: உங்கள் உணர்ச்சியிலும் உங்கள் முஸ்லிம் நண்பர் உணர்ச்சியிலும் எனக்கு அனுதாபம் உண்டு. '**யங் இந்தியா**'வில் நான் உருவ வழிபாட்டைப்பற்றி எழுதி இருக்கிறேன். அதைப் படித்துப் பாருங்கள்; திருப்தி ஏற்பட்டால், உங்கள் முஸ்லிம் நண்பரையும் அதைப் படித்துப் பார்க்கும்படி சொல்லுங்கள். நண்பருக்கு உங்களிடம் உண்மையான அன்பு இருக்குமாயின், உருவ வழிபாட்டின்மீது கொண்டுள்ள வெறுப்பை அவர் போக்கிவிடுவார். கொள்கையும் நடத்தையும் தம்மைப்போலவே இருக்க வேண்டுமென்று சொல்லுகிற நட்பு, நல்ல நட்பு அன்று. வாழ்க்கைத் துறையிலும் சிந்தனைத் துறையிலும் காணப்படும் வேற்றுமைகளைச் சினேகிதர்கள் சகித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அடிப்படையான விஷயத்தில் வேற்றுமை இருக்குமாயின் அதற்கு இணங்கிப்போக வேண்டுமென்பதில்லை. உருவ வழிபாட்டில் பக்தி கொண்டுள்ளவரோடு தொடர்பு கொள்வது பாபம் என்று உங்கள் சினேகிதர் எண்ணக்கூடும். உருவ வழிபாட்டு முறையில் பக்தி கொள்ளுவது கெட்டதேயன்றி, உருவ வழிபாடு கெட்டதன்று. உருவ வழிபாட்டில் பக்தி கொண்டுள்ளவன் உருவத்தை மிகவும் தடபுடல் படுத்திவிடுகிறுன். உருவ வழிபாடு செய்வோன் அப்படியல்லன். அவன் கடவுளைக் கல்லின் மூலமாகக்கூடக் காண்கிறுன். தனக்கும் கடவுளுக்கும் ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள, அவன் உருவத்தின் உதவியை நாடுகிறுன். காசியிலிருக்கும் பிரபலமான கோயிலில் உள்ள கல், காசி விஸ்வநாதர் அன்று என்பது ஹிந்துக் குழந்தை ஒவ்வொன்றுக்கும் தெரிந்த விஷயந்தான். ஆனலும், அகில உலகிற்கும் நாயகனுக விளங்கும் கடவுள்

சிறப்பாக, அந்தக் கல்லில் உறைவதாக நம்புகிறார்கள். இதைப் போன்ற கற்பனை விளையாட்டுகள் அவசியமாகும்; இவற்றால் நன்மை உண்டு. புத்தகக் கடைகள் தோறும் கீதைப் புத்தகங்கள் இருக்கின்றன. இருந்தாலும் என்னிடம் வைத்திருக்கும் கீதைப் புத்தகத்தைப் போல அவற்றை நான் புனிதமானவையாக எண்ணுவதில்லை. தர்க்க ரீதியாகப் பார்த்தால், மற்ற கீதைகளை விட நான் வைத்திருக்கும் கீதைப் புத்தகம் அதிகப் புனிதத் தன்மை வாய்ந்தது அல்ல என்பதை நான் அறிவேன். புனித மென்பது என் கற்பனைக்குள் அடங்கி யிருக்கிறது. கற்பனாசக்தியால் அதிசயிக்கத்தக்க முறையில் திட்டமான பலன்கள் ஏற்படும். வாழ்க்கையையே மாற்றிவிடும் சக்தி கற்பனாசக்திக்கு உண்டு. உருவ வழிபாடு, உருவ வழிபாட்டில் பக்தி என்று இரண்டாக நான் வேறுபடுத்திச் சொன்னேன். அதை ஏற்றுக்கொண்டாலும் சரி, கொள்ளாவிட்டாலும் சரி, நாமெல்லோரும் ஒரு வகையில் உருவ வழிபாடு செய்கிறவர்களோ, அல்லது உருவ வழிபாட்டில் பக்தி செலுத்துகிறவர்களோ ஆவோம். புத்தகம் கட்டிடம், படம், செதுக்குவேலை, மற்ற எல்லா உருவங்களிலுமே உண்மையாகக் கடவுள் வசிக்கிறார்: ஆனால், அவை கடவுளாக மாட்டா. எவன் அவற்றைக் கடவுள் என்று சொல்லுகிறானோ, அவனைத் தவறு செய்கிறவன் என்றே சொல்ல வேண்டும்.

கற்றவர்களின் வேலையில்லாத் திண்டாட்டம்

கேள்வி: வேலையில்லாத் திண்டாட்டப் பிரசினை படித்தவர்களிடையே கணக்கு வழக்கின்றிப் பெருகி வருகிறது. தாங்கள் உயர் தரக் கல்வியைக் கண்டிக்கிறீர்கள். ஆனால், சர்வகலாசாலையில் படிப்பவர்களுக்கு அந்த எண்ணமில்லை. அங்கு தங்களின் அறிவு விரிவடைகிறது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். படிக்கிறவர்களை அதைரியப் படுத்துவது தங்களின் எண்ணமா? பி. ஏ. படித்துவிட்டு வேலையில்லாது திண்டாடும் மாணவர்கள் கிராமங்களுக்குச் சென்று, கிராம வாசிகளிடம் பிரதியுபகாரமாக உணவுக்கு மட்டும் பெற்றுக்கொண்டு, பொது ஜனங்களுக்குக் கல்வி கற்பிப்பது எவ்வளவோ நல்லதில்லையா? மாகாண சர்க்கார்கள் இவர்களுக்கு உதவி செய்ய முன்வந்து பணமும் துணியும் கொடுத்து உதவி செய்யக் கூடாதா?

பதில்: நான் உயர்தரக் கல்வி வேண்டா மென்று சொல்லுபவன் அல்லன். ஏழை வரி கொடுப்போருக்குச்

சுமையாக இருந்துகொண்டு, படிக்கிற சில லட்சம் சிறுவர் சிறுமியர்களையே நான் கண்டிருக்கிறேன். அதோடு, இப்போது போதிக்கப்படும் உயர்தரக் கல்வியை நான் எதிர்க்கிறேன். அதிலே சௌடால்தனம்தான் அதிகம்; அதனால் ஏற்படும் பலனே வெகு 'சொற்பம். உயர்தரக் கல்வி முறையையும் மற்ற கல்வி முறைகளையும் அடிப்படையிலே சீர்ப்படுத்த வேண்டி யிருக்கிறது. உங்களுக்கு இருந்துவரும் சிரமம் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றிய தாகும். இதற்கு எனது ஒத்துழைப்பும் அனுதாபமும் உங்களுக்குக் கிடைக்கும். கூலிக்குத் தக்க சம்பளம் கொடுக்க வேண்டியது அவசியம். எனவே பி. ஏ படித்து விட்டுக் கிராமங்களுக்குச் சென்று தொண்டு செய்கிற ஒவ்வொரு மாணவனுக்கும் வீடு, உடை, உணவு யாவற்றையும் கிராமவாசிகள் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அவ்விதம் கொடுத்தும் வருகிறார்கள். ஆனால் மாணவர்கள் படேபடே ஆசாமிகளைப் போல வாழ்க்கை நடத்தி, செலவை பத்து மடங்காகப் பெருக்கிவிடுவார்களாயின், கிராமவாசிகள் கொடுக்க மாட்டார்கள். அந்த அந்தக் கிராமத்து மக்களின் வாழ்க்கையை ஒட்டியதாக மாணவர்கள் கூடுமானவரையில் வாழ்க்கை நடத்த வேண்டும். அவர்கள் செய்கிற காரியம் கிராமவாசிகளைத் திருப்தி செய்விப்பதா யிருக்க வேண்டும்.

பொதுஉடைமை

• **கேள்வி:** சமூகப் பொருளாதார அமைப்பான பொதுஉடைமையைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? எந்த அளவிற்கு நம் நாட்டில் நாம் அதைப் பின்பற்றலாம்?

பதில்: பொதுஉடைமை என்ற சொல்லின் பொருளை, நான் இன்னும் சரியாக அறியேன். தனிஉடைமையைப் போக்குவதே அதன் இலட்சியமாகும் என்று தோன்றுகிறது. பற்றின்மை என்று பொருளாதாரத் துறையில் சொல்லப்படும் நீதியை, நடைமுறைப்படுத்துவதே யாகும் இது. இந்த இலட்சியத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளுவார்களேயானால், அல்லது அமைதியாக எடுத்துச் சொல்லி அவர்கள் மனதை இந்தப் பக்கம் திருப்பக்கூடுமானால், இதற்குச் சமமாகச் சொல்லக் கூடியது வேறு எதுவுமே யில்லை. நான் அறிந்தவரை, பலாத்காரத்தை உபயோகிப்

பதைப் பொதுஉடைமை தடைசெய்ய வில்லை. அது மட்டுமா? தனி உடைமையைப் பறிமுதல் செய்வதற்கும் அப்படிப் பறிமுதல் செய்த சொத்தைப் பொதுச் சொத்தாக்கி அரசாங்கத்தை நிர்வகிப்பதற்கும் பொதுஉடைமை பலாத்காரத்தைத் தாராளமாக உபயோகிக்கிறது. இது உண்மையானால், இப்போது இருக்கும் உருவத்தில் பொதுஉடைமை நீண்ட காலம் நிலைத்திருக்காது என்று நான் எண்ணுகிறேன். பலாத்காரத்தினால் நிலைபேறுடையதாய் எதையும் செய்ய முடியாது என்ற உறுதியான நம்பிக்கை உடையவன் நான். ஆனால், ஒரு உண்மையை மட்டும் நம்மால் மறுக்க முடியாது. பொதுஉடைமை என்ற இலட்சியத்தை, எண்ணற்ற ஆண்களும் பெண்களும், உண்மையான தியாகம் செய்து கட்டி இருக்கிறார்கள். சிறந்த மேதாவிகளான லெனின் போன்றாரின் தியாகமும் சேர்ந்து, இதை உறுதிப்படுத்தி இருக்கிறது. எனவே, இந்த இலட்சியம் வீண்போக மாட்டாது. இவர்களது உன்னதமான தியாக வாழ்க்கை எப்போதுமே பிரகாசித்துக் கொண்டிருக்கும். காலம் செல்லச் செல்ல, அந்த இலட்சியத்தைப் புனிதப்படுத்துவதோடு, அவர்கள் செய்த தியாகம் அந்த இலட்சியம் விரைவில் கைகூடவும் செய்யும்.

சுயராஜ்யத்தில்

கேள்வி: எந்த அடிப்படையில், இந்தியாவின் பொருளாதார அமைப்பு பிற்காலத்தில் அமைய வேண்டுமென்று தாங்கள் எண்ணுகிறீர்கள்? சேவிங்ஸ் பாங், இன்சூரன்ஸ் கம்பெனி போன்றவற்றுக்கு உரிய ஸ்தானம் எப்படிப்பட்டதா யிருக்கும்?

பதில்: உணவுக்கும் உடைக்கும் ஒருவருமே திண்டாடாதபடி, பொருளாதார அமைப்பை இந்தியாவிற்கு மட்டுமன்றி உலகம் முழுதுமே மாற்றியமைக்க வேண்டுமென்பதுஎன் அபிப்பிராயம். வேறுவழியாகப் பார்த்தால், இந்த இரண்டு இலட்சியமும் கைகூடிவரும் வகையில் ஒவ்வொருவருக்கும் ஏற்றவாறு வேலை இருக்க வேண்டும். அடிப்படை வாழ்க்கைக்குத் தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்து தரும் சாதனங்கள் பொதுஜன ஆதிக்கத்தின் கீழ் இருந்தால்தான் இது சாத்தியமாகும். சிருஷ்டியில் காற்றும் தண்ணீரும் கிடைப்பதைப்போல், இந்தப் பொருள்களும் எளிதாகவும் தாராளமாகவும் கிடைக்க ஏற்

பாடு செய்ய வேண்டும். அல்லது, கிடைப்பதற்கு ஏற்ற வழிகளைச் செய்ய வேண்டும். மற்றவர்களைச் சுரண்டுவதற்காக, அடிப்படைத் தேவையான பொருள்களை வியாபாரச் சரக்காகச் செய்து விற்றல் கூடாது. ஒரு கூட்டத்தினரையோ, தேசத்தினரையோ, அல்லது சமுதாயத்தையோ தனியுரிமைப்படுத்தி ஆளுவது அநீதமாகும். இந்த எளிய தத்துவத்தைக் கைவிட்டதன் காரணமாகவே, துரதிர்ஷ்டம் பிடித்த இந்த நாட்டிலும், உலகிலுள்ள வேறு பல நாடுகளிலும் வறுமை பிடுங்கித்தின்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்தத் தீமையைப் போக்கும் பொருட்டே, கதர் இயக்கம் தோன்றி இருக்கிறது. நான் குறிப்பிட்டுக் காட்டிய பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஏற்பட்ட பின்னரும், சேவிங்ஸ் பாங்கும் இன்ஷூன்ரஸ் கம்பெனிகளும் இருக்கும். ஆனால், அவற்றின் அமைப்பில் அடிப்படையான மாற்றங்கள் உண்டாகலாம். இந்தியாவில் உள்ள சேவிங்ஸ் பாங்குகள் பயன்தரத் தக்கனவாய் இருந்த போதிலும், மிகவும் ஏழைகளாய் இருப்பவர்களுக்கு இன்று அவை பயன்படுவனவா யில்லை; இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் ஏழைகளுக்கு எந்த விதத்திலும் உபயோகமாய் இல்லை. இலட்சிய முறையில் திருத்தி யமைக்கப்படும் புதிய அமைப்பில், இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின் நிலைமை யாதா யிருக்கு மென்பதை, மேலே சொன்னதைவிட விளக்கமாகச் சொல்லுவதற்கில்லை. ஏழை மக்கள் அரும் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தை சேமித்து வைப்பதற்குத் தகுந்த இடமாயும், அப்படிச் சேமித்ததை, தேச நலத்திற்குப் பயன்படக்கூடிய முறையில் செய்யத் தகுந்த இடமாயும் சேவிங்ஸ் பாங்குகள் இருக்க வேண்டும். நான் முன்பு சொல்லியதுபோல், பெரும்பாலான அரசாங்க நிலையங்களில் எனக்கு நம்பிக்கை இல்லை. சேவிங்ஸ் பாங்குகளைப் பொறுத்தவரை ஓரளவு பரவாயில்லை. துரதிர்ஷ்டவசமாக இன்று அவை கிராமவாசிகளுக்குப் பயன்படுவனவா யில்லை. நகரத்தில் வசிப்பவர்களுக்கே இப்போது அவற்றால் பிரயோஜனமிருந்து வருகிறது. தங்கச் சேமிப்பு இந்தியாவுக்கு வெளியே இருக்கும்வரை, சேவிங்ஸ் பாங்குகளைக் கூட, நம்பத்தக்கதொரு நிலையங்களாக எண்ணக் கூடாது. யுத்த நெருக்கடி ஏற்பட்டுவிட்டால், அரசாங்கத்தார் இவற்

றில் இருந்துவரும் பணங்களை, பணம் போட்டு வைத்திருப்பவர்களின் விருப்பமின்றியே, கையாள முடியும். இதனால் சேவிங்ஸ் பாங்குகள் உபயோகமற்றனவாய் போய் விடுவதோடு, ஜனங்களுக்கே கேடு பயப்பனவாயும் மாறி விடுகின்றன. ஜனங்களால் நடத்தப்படாமலும், ஜனங்களின் ஆதிக்கத்தின்கீழ் இல்லாமலும் இருந்துவருகிற அரசாங்கங்களை, எப்போதுமே நம்ப முடியாது. அவசரமான சந்தர்ப்பங்களில் அப்படிப்பட்ட அரசாங்கங்கள் ஜனங்களின் நலத்தை கவனிக்கும் என்று சொல்லுவதற்கில்லை. எனவே, பொதுஜன ஆதிக்கம் என்ற நிபந்தனை இல்லாது நடைபெறும் சேவிங்ஸ் பாங்குகளால் மனிதர்களை அடிமைப்படுத்தும் சங்கிலி அதிகமாகிறதேயன்றி வேறில்லை. அவை இருப்பதனாலும் குற்றமில்லை. சாதாரணமான இந்த நிலையங்களைப் பொறுத்த அளவிலுங்கூட நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டே இதைச் சொன்னேன்.

அன்னியச் சரக்கும் சுதேசியும்

கேள்வி: துணிகளைத் தவிர்த்து வேறு அன்னியச் சரக்குகளை இந்தியாவில் இறக்குமதி செய்வதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? மறியல் செய்து, விலக்க வேண்டிய அன்னியச் சரக்குகள் ஏதேனும் உண்டா? பிற்காலத்தில் இந்தியாவில் அன்னிய நாட்டு வியாபாரம் எந்த முறையில் இருக்கலாமென்று தாங்கள் எண்ணுகிறீர்கள்?

பதில்: துணியைத் தவிர வேறு அன்னியச் சரக்குகளில் நான் அவ்வளவு அக்கரைகொள்ளுவதில்லை. அன்னியச்சரக்கு என்பதற்காகவே அன்னியச் சரக்குகள் யாவற்றையும் மறியல் செய்ய வேண்டுமென்று நான் எப்போதும் பரிந்து பேசியது கிடையாது. சுதேச நலன்களுக்குப் பாதகமாக இறக்குமதி செய்யப்படும் அன்னியச் சரக்கு எதையும் தடை செய்வதே எனது பொருளாதாரக் கொள்கையாகும். இதனால் அன்னிய நாட்டுச் சரக்கு யாவற்றையுமே நான் தடை செய்கிறேன் என்பதல்ல. நம் நாட்டில் கிடைக்கக் கூடிய சரக்குகளை இறக்குமதி செய்யக் கூடாது என்பதே யாகும். நல்ல ரகமாக இருக்கிறது என்பதற்காக ஆஸ்ட்ரேலியாவிலிருந்து கோதுமை தருவித்தால் அதை பாவம் என்றே சொல்லுவேன். ஆனால், ஓட்ஸ் என்ற தானியத்தை ஸ்காட்லாந்திலிருந்து இறக்குமதி செய்வதை நான் அப்படி எண்ண மாட்டேன். நம் நாட்டில் ஓட்ஸ் பயிர்

செய்யாமலிருந்து, அத்தியாவசியமான தேவை இருக்குமானால், அதை இறக்குமதி செய்வதில் குற்றமில்லை. அது மட்டுமல்ல. வெறுப்பினாலே நான் அன்னியப் பொருள் எதையும் தடை செய்யவில்லை. எதிரிடையான வேறு ஒரு விஷயத்தைக் கவனிப்போம். இந்தியாவில் தோல் போதுமான அளவு கிடைக்கிறது. இங்கு செய்யப்படும் செருப்பு மலிவில்லாமல் விலையுயர்ந்ததாக இருக்கலாம்; அப்படியிருந்தபோதிலும் அன்னிய நாட்டில் செய்யப்படும் செருப்புகளை வாங்குதல் கூடாது. அது போலவே, கருப்பட்டி, சீனி ஆகியவை இந்தியாவில் போதுமான அளவு உற்பத்தியாகும்போது, அன்னிய நாட்டிலிருந்து அவற்றை இறக்குமதி செய்வதை நான் கண்டிக்கிறேன். அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்குகளில் எதெதைத் தடைசெய்ய வேண்டுமென்பது, மேலே சொல்லியவற்றிலிருந்து தெளிவுபட்டிருக்குமென நம்புகிறேன். எனவே ஒவ்வொரு பொருளாகக் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. பொதுப்படையான வழியை நான் குறிப்பிட்டிருக்கிறேன். இன்றுள்ள நிலைமையைப் போல நமது நாட்டின் பொருள் உற்பத்தி இருக்கும்வரை நான் சொன்ன இந்த முறை பொருந்தும்.